தமிழும் மேற்கிந்திய செமிட்டிக் மொழியினரும்



ம.சோ. விக்டர்

தமிழும் மேற்கித்திய
செமிட்டிக் மொழியினமும்

ம. சோ. விக்டர்

யாத்திசைப் பதிப்பகம்

50, அண்ணா நகர்

அரியலூர் – 621 713

அலைபேசி: 98432 73914

தமிழும் மேற்கித்திய செமிட்டிக் மொழியினமும்

Dr. Ma.So. Victor, M.A., Ph.D.,
Cell : 9843273914

© ஆசிரியர்

முதற்பதிப்பு : 2012

பக்கம் : 408
படிகள் : 1200

பதிப்பு :
யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர்
அரியலூர் - 621 713
அலைபேசி: 98432 73914

வடிவமைப்பு :
எஸ். தனசேகர்

விலை : **350. 00**

அச்சிட்டோர்:
ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 044-42664695, 90031 81586

தமிழும் மேற்கித்திய செமிட்டிக் மொழியினமும் என்ற ஆய்வுக் கட்டுரையை நூலாக வெளியிட அனுமதி வழங்கிய, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேரா. முனைவர் **திரு. க. இராமசாமி** அவர்களுக்கும் இயக்குநர் பேரா. முனைவர் பொறி. **திரு. எசு. மோகன்** அவர்களுக்கும் எங்களது நன்றி

செம்மொழிச் சித்தர், முதுமுனைவர், செந்தமிழ் அந்தணர்
இளங்குமரனாரின் சான்றுரை

வெற்றியர் திரு. விக்டர்

இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர் – 620 101.
திருச்சி மாவட்டம்.

தமிழ்த் திருவாளர் ம.சோ. விக்டர் அவர்கள் அரிய தமிழ்ப் பற்றாளர்; ஆழ்ந்த ஆய்வாளர், பாவாணர் கருத்துகளில் பயின்ற தோய்வாளர்; அவர் கண்ட கொள்கைகளைப் பலப்பல நூல்களால் நிறுவி வரும் மொழி நல மீட்பாளர்.

தமிழன் தோன்றிய குமரிக் கண்டம்;

அவன் பேசிய மொழி தமிழ்;

அத்தமிழே உலக மொழிகளின் தாய்மொழி;

தமிழே ஆரியத்துக்கு மூலம்;

திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி ஆவது தமிழே;

என்னும் கொள்கைகளை உலகப் பேரறிவர் சான்றொடும் உள்ளார்ந்த ஆய்வொடும் நிறுவுவதே தமது வாழ்வாக்க் கொண்டு, அசைக் கொணாச் சான்றுகளுடன் நூல்களைப் படைத்தவர் பாவாணர்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள், தம் ஆழிய ஆய்வொடும், கால வளர்ச்சியாலும் தம் உள்ளொளியாலும் மேலும் மேலும் அக்கொள்கைகளை நிறுவ ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துவரும் தமிழ்த் தாயின் தவப்புதல்வர். அவர் தம் நூல்களை இயல்பான ஓட்டத்தில் தடையின்றிக் கற்கவும்

தெளிவுறவும் வாய்ப்பாம் வகையில், வனப்புற ஓர் ஒழுங்கில், நல்ல கட்டமைப்பில் அச்சிட்டு, உலகத் தமிழர்க்குக் கொடையாக வழங்க வல்ல "யாத்திசைப் பதிப்பகமாம்".

திரு. ம.சோ. விக்டர் அவர்கள் பன்மொழிப் புலமையாளர்; நுனிப்புல் மேயாத நுண்ணிய கல்வியர். தொல்காப்பியச் செல்வம், சங்க நூல்வளம், திருக்குறள் தோய்வு, காப்பியக் கவின் யாவும் ஒருங்கே கைவரப் பெற்றவர். புலமையர் வழக்கோடு பொதுமக்கள் வழக்கையும் ஊன்றி அறிந்து, உரிய வகையில் போற்றும் ஆற்றலர். இயல்பான ஆற்றோட்ட நடையில் எழுதவும் வல்லவர். ஆதலால், தம் பெயரை நிறுவுவார் போல், "வெற்றி" மேல் வெற்றிப் படைப்புகளைச் செய்து வருகின்றார்.

"க" என்னும் எழுத்துப் பற்றி விளக்கி ஒரு நூல்,

"எல்-யா" என்னும் இருமை ஒரு சொல் பற்றி ஒரு நூல்,

உலகளாவிய தமிழ், உலக மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள், எபிறேய மொழியில் தமிழின் வேர், தமிழும் சமற்கிருதமும், தமிழும் செமிட்டிக் மொழியும், இந்திய மொழிகளின் தாய் தமிழே, பஃறுளி - யூப்ரடீசு, குமரிக்கண்டம், குமரிக்கண்டமும் ஆப்பிரிக்கக் கண்டமும், தமிழும் ஆரியமும், மேற்கிலும் தமிழ், வாழும் தமிழ், தமிழ் மணம், சேயோன், சேயன், தமிழரின் எண்ணியல், வானியலும் தமிழரும், சிந்துவெளி நாகரிகம், தமிழும் எபிறேயமும், பாபிலோனியர் தமிழ், தமிழ்நாட்டுக் கிறித்துவம், இசுலாம் தமிழர் சமயமே என அடுக்கடுக்காக ஆய்வு நூல்களைப் படைத்து வருபவர்.

பன்முகப் பார்வைப் படைப்பவராம் திரு. ம.சோ. விக்டர், நன்முகத் தோற்றத்தர்; நவில் தோறும் நயமாம் நூல்போல், பழகுந்தொறும் "தேனோடு பால் கலந்த" இனியர். தமிழ்த் தொண்டரை மதிப்பவர். தமிழ்த் தொண்டரொடு தாமும் தொண்டராய் ஊன்றி நிற்பவர். மேலும் மேலும் அவர் படைப்புகள் தமிழ் வளமாய்த் தொடருமாக! இன்பமே மல்குக.

இரா. இளங்குமரன்

ஆசிரியர் உரை

எபிறேய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள உறவுகளை ஆய்வு செய்யும் போது, தெம்பூட்டும் தகவல்கள் வெளிப்படும் வகையில் உள்ளன. ஏற்கனவே எபிறேய மொழி பற்றிய ஆய்வு களைத் தாங்கி, ஆங்கிலத்தில் ஒன்றும், தமிழில் ஒன்றுமாக இரு நூல்கள் என்னால் வெளியிடப்பட்டுள்ள நிலையில், மேலும் பல சொற்களுக்கான விளக்கங்களை இந்நூல் வெளிக்கொணர்ந் துள்ளது. தமிழுக்கும் எபிறேயத்துக்கும் இடையே காணப்படும் நெருக்கமான உறவு பற்றிய செய்திகளை, எவ்வாறு மொழியிய லார் இதுநாள்வரை ஆய்வு செய்யாமல் விடுத்தனர் என்பது, வியப்பாக உள்ளது.

கடந்த இரு நூற்றாண்டுகளில், கால்டுவெல் உள்ளிட்ட சில அறிஞர்கள், இவ்விரு மொழிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளனர். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டு வழக்கிலிருந்த மொழிகளில், இன்றும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வரும் மொழிகள் இவ்விரு மொழி கள் மட்டுமேயென்பதும் கண்கூடு. இன்று உலகில் பேசப்பட்டு வரும் மொழிகள் யாவும் தமிழ் - எபிறேய மொழிகளுக்குக் காலத்தால் மிகவும் பிந்தியவைகளே. கிரேக்கமும் இலத்தீனும் இன்று வழக்கிழந்து போனாலும், இவ்விரு மொழிகளின்றும் கிளைத்த இன்றைய ஐரோப்பிய மொழிகள் அனைத்தும், கிரேக்க - இலத்தீன் மொழிகளின் அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளதைக் காணலாம்.

எபிறேய மொழி பேசிய மக்களை, கி.மு.500 ஆண்டுகளுக் குப் பிறகு யூதர்கள் என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். இம்மக் களை இசுராயேல் என்ற பெயரால் விவிலியம் குறிப்பிடுகின்றது. தொன்மைக்கால யூத மக்களின் நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், சமயக் கொள்கைகள் யாவும், தமிழ்ச் சமயத்தோடு தொடர்புடையனவாக உள்ளன. மோசே என்ற யூதத் தலைவன் கொடுத்த சமய மற்றும் சமுதாயச் சட்டங்களில், தமிழரின் வழக்குகளும் காணப்படுகின்றன.

இந்நூலில், தமிழ் - எபிறேய மொழிகளுக்கிடையே காணப்படும் எழுத்து மற்றும் சொல்லமைவுகள், வாக்கியக் கட்டமைப்புகள், இலக்கண விதிகள் ஆகியவை தொடர்புபடுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. அக்காலத்திய எபிறேய மொழி வழக்கு, வினையை முன்னிறுத்தியே எழுதப்பட்டுள்ளன. இதுவும் கூடத் தமிழ் நடைமுறைகளின் பாற்பட்டதே. புள்ளிகளிட்டு எழுதும்முறை தமிழ் - எபிறேய மொழிகளிடையே காணப்படுவதால், ஒரு சில தமிழறிஞர்கள், இம்முறையை எபிறேய மொழியினின்றே தமிழ் பெற்றுக் கொண்டது என்றாவாறும் கூறினர்.

இவ்விரு மொழிகளுக்கிடையே முறையான ஆய்வுகள் இதுவரை தொடங்கப்படவில்லை. அவ்வாறு தொடங்கப் பெறின், நல்ல முடிவுகளைப் பெற இயலும். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தற்போது இம்முயற்சிக்கான ஊக்கத்தை அளிக்க முன்வந்துள்ளது. இம்முயற்சி வெற்றிபெறும் என்றும், அதன்வழியில் உலகின் பல்வேறு மொழியியலாரையும் தமிழின்பால் திருப்ப இயலும் என்றும் உறுதியாக நம்பலாம். தமிழ்மொழியின் தொன்மையையும், வளத்தையும், அது உலக மொழிகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் இது வரையிலும் எந்த ஆய்வும் விளக்க முன்வரவில்லை. அவ்வாறு விளக்கப் பட்ட ஆய்வுகளும் உலகின் மொழியியலாரைக் கவரும் வகையில் அமையவில்லை. இந்நிலையைப் போக்க, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டுவரும் முயற்சிகள் ஊக்கமளிப்பதாக உள்ளன.

இந்நூலை வடிவமைத்து அச்சிட்டு உதவிய ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ் நிறுவனத்துக்கும் எனது நன்றி.

– ம.சோ.விக்டர்.

பொருளடக்கம்

	முன்னுரை	11
1.	தமிழரின் தாயகம்	17
2.	செமிட்டிக் மொழியினம் – திராவிட மொழியினம்	42
3.	மெசபத்தோமியாவில் தமிழரின் குடியேற்றம்	64
4.	முதல்மொழி	82
5.	குமரிக் கண்டமும் உலகப் படைப்பும்	103
6.	செமிட்டிக் தொன்மக் கதை	108
7.	தமிழும் எபிறேயமும்	126
8.	எபிறேய மொழியின் தோற்றம்	140
9.	எபிறேய மக்கள்	148
10.	தமிழ்மொழி	161
11.	தோரா கூறும்செய்திகள்	188
12.	செமிட்டிக் இலக்கியங்களில் தமிழ்ச் சூழல்கள்	204
13.	தமிழ் செமிட்டிக் – மொழியியல் கண்ணோட்டம்	215
14.	தமிழ் செமிட்டிக் – புவியியல் கண்ணோட்டம்	233
15.	தமிழ் செமிட்டிக் – சமயவியல் கண்ணோட்டம்	263
16.	தமிழ் செமிட்டிக் – வானியல் கண்ணோட்டம்	271
17.	தமிழ் செமிட்டிக் – எண்ணியல் கண்ணோட்டம்	286
18.	தமிழ் செமிட்டிக் – சொற்களும் விளக்கங்களும்	317

முன்னுரை

இந்திய அரசு, மாந்தவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உயர்கல்வித் துறை யின் சென்னைக் கிளையான, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சனவரி ஒன்பதாம் நாள், ஈராயிரத் தொன்பதாம் ஆண்டில், "தமிழும் மேற்கித்திய செமிட்டிக் மொழியினமும்," என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை யொன்றைத் தருமாறு என்னைப் பணித்தது.

இந்த ஆணையை ஏற்று, அதே தலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கித்திய "செமிட்டிக்" என்ற மொழியினம் பற்றிய ஆய்வுகள், கடந்த 250 ஆண்டு களுக்கு முன்புதான் தொடங்கப் பெற்றன. கி.மு. 2000 ஆண்டு களில், நடுத்தரைக் கடலையொட்டிய, குறிப்பாகக் கிழக்குப் பகுதிகளையொட்டிய நாடுகளில், அக்காடியம் (பாபிலோனி யம்), கனானியம், ஃபோனீசியம், அரபு, எபிறேயம் போன்ற மொழிகள் பேசப்பட்டன. இவையாவும் ஓரினத்தின் கிளை களாகப் பிரிந்த மக்கள் பேசிய மொழிகளே என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இவ்வின மக்களோடு தொடர்பில்லாத, முற்றிலும் வெளி நாட்டைச் சார்ந்த மக்கள் இனம் ஒன்று, கி.மு.3000 ஆண்டு களில், இப்பகுதியைக் கைப்பற்றி, 1500 ஆண் டுக்காலம் ஆட்சி செய்து வந்தது. வரலாற்றில் சுமேரிய இனம் என்று அழைக்கப் படும் இவ்வினம், செமிட்டிக் இனத்தைச் சார்ந்ததன்று என ஆய்வாளர்கள் உறுதிசெய்துள்ளனர். சுமேரிய மொழி, உலகின் எந்த பிறநாட்டில் அல்லது நாடுகளில் பேசப்பட்டது என்பதை ஆய்வாளர்களால் அறிய இயலவில்லை.

இருப்பினும் சுமேரிய மொழிக்கும், செமிட்டிக் மொழி யினத்துக்கும் உள்ள தொடர்புகளை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். குறிப்பாக, அக்காடியம் எபிறேயம் போன்ற செமிட்டிக் மொழிகளில், ஏராளமான சுமேரியச் சொற்கள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவ்

வாறான ஒற்றுமை, சுமேரிய செமிட்டிக் மொழிகளிடையே, சுமேரியரின் வருகைக்குப் பின் ஏற்பட்டதா, அல்லது இயல் பாகவே அந்த ஒற்றுமைகள் காணப்பட்டனவா என ஆய்வாளர் களால் உறுதி செய்ய இயலவில்லை. என்றாலும், சுமேரிய-செமிட்டிக் மொழிகளிடையே காணப்பட்ட உறவுகளை, ஆய்வாளர்கள் மறுக்கவில்லை.

மெசபத்தோமியா, பாபிலோன், ஈழம்,கல்தேயம், அசீரியா, கனான் நாடு எனப்பட்ட பாலத்தீனம் ஆகிய நாடுகளில் பேசப் பட்ட மொழிகளும், தென் தீவக்குறை யான அரேபியாவில் பேசப்பட்ட மொழியும், எகிப்துக்குத் தென்கிழக்கே அறியப் பட்ட எத்தியோப்பியா என்ற நாட்டின் மொழியும், செமிட்டிக் மொழியினங்களாக, ஆய்வாளர்களால் பகுக்கப்பட்டுள்ளன.

செமிட்டிக் என்பது, ஒரு மொழியைக் குறித்தசொல் அல்லவென்பதும், ஒரு பகுதியில் பேசப்பட்ட பலமொழிகளின் தொகுப்பை, செமிட்டிக் என்ற தலைப்பில் இணைத்தனர் என்பதும் தெளிவு.மேற்கண்ட நடுத்தரைக் கடல்நாட்டு மொழி களிடையே காணப்பட்ட உறவுகளைக் கருத்தில்கொண்டு, கி.பி.1781 ஆம் ஆண்டில், ஸ்லோசர் என்பாரும் ஈக்கார்ன் என் பாரும் (Scholozer and Eichhorn) இணைந்து, மேற்கண்ட அம் மொழிகளின் குடும்பத்திற்கு "செமிட்டிக்" என்ற சொல்லை அல்லது பெயரை அறிமுகம் செய்தனர்.

இந்த மேற்கித்திய மொழியியல்ஆய்வாளர்கள் இருவரும் கிறித்துவர்களா யிருந்ததாலும், விவிலியத்தில் அவர்களுக்கு நம்பிக்கையிருந்ததாலும், விவிலியச் செய்திகளை அடிப்படை யாகக் கொண்டு, "செமிட்டிக்" என்ற பெயரைச் சூட்டினர். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டு அறியப்பட்ட அம்மொழி களை, கடந்த 250 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த அறிஞர் கள் ஆராய்ந்து சூட்டிய பெயரே செமிட்டிக் என்பதாகும். செமிட்டிக் என்ற சொல்லை, கடந்த கால மொழி இலக் கியங்களில் எங்கும் காணஇயலாது.

செமிட்டிக் இனத்தின் உறுப்பு மொழிகள் ஒவ்வொன்றும் தற்காலத்தில் ஆய்வு களுக்குட்படுத்தப்பட்டுள்ளன. தற்கால ஆய்வுகளில், செமிட்டிக் மொழியினம் பற்றி ஸ்லோசர் மற்றும் ஈக்கார்ன் கொடுத்திருந்த தகவல்கள், மறு ஆய்வுகளுக்குட் பட்டவையென்று தற்கால ஆய்வுகள் சுட்டுகின்றன. இருப் பினும்,பொதுவான மொழிக் கொள்கையொன்றை உருவாக்கி,

அதற்குச் செமிட்டிக் எனப் பெயரிட்ட அவ்விரு ஆய்வாளர் களும் போற்றப்பட வேண்டியவர்களே.

செமிட்டிக் மொழிகளைப் பேசிய அக்காலத்து மக்களின் வரலாறுகள் தெளிவாக இதுவரையிலும்அறியப்படவில்லை. அம்மக்கள் அனைவரும், தமது முன்னோர் வழியில் கிழக்கு நாட்டிலிருந்து மேற்கே குடிபெயர்ந்தவர்களே என விவி லியம் தெளிவுபடுத்தினாலும், அந்தக்கிழக்கு நாடு எதுவென்பதில் ஆய்வாளர்கள் ஒத்த கருத்தை எட்ட இயலவில்லை. அம்மக் களின் குடியேற்றம் எக்காலத்தில் நிகழ்வுற்றது என்பதற்கானச் சான்றுகளும் கிடைக்கவில்லை. இருப்பினும் கி.மு. 7500 ஆண்டுகளில், யூப்ரதீசு-தைகிரீசு ஆற்றங்கரையில், மக்கள் வேளாண் தொழில் செய்து, நிலையான குடியிருப்பை உருவாக்கி, நாட்டுப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழ்ந்து வந்தனர் என்பதை வரலாற்றாய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். பாலத் தீன நாட்டில் அறியப்படும் எரிக்கோ (Yericho -Jericho) என்ற நகரம், கோட்டைக் கொத்தளங்களுடன், கி.மு. 7500 ஆண்டு களில் நிலைபெற்றிருந்ததாக, ஆய்வாளர்கள் உறுதி செய்கின் றனர். எனவே, கிழக்கு நாட்டிலிருந்து சென்ற மக்களின் குடியேற்றம், கி.மு. 10000ஆண்டுகளில் அங்கே நிகழ்வுற்றிருக்க வாய்ப்புகள் உண்டு. விவிலியம் கூறும் மக்கள் குடியேற்றமும் கி.மு. 10000 ஆண்டுகளில் நிகழ்வுற்றிருக்க வேண்டும்.

இன்று தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர் களின் தாயகம்,குமரிக் கண்டமே யென்பதை, தமிழ் இலக்கி யங்கள் கூறுகின்றன. குமரிக்கண்டம் கடல் வெள்ளத்தால் அழிந்து பட்டதற்குப் பிறகு, மாண்டு போன பலஇலக்கக் கணக்கான தமிழர்களில் மீண்டவர்கள் குடியேறிய நிலமாக, இன்றைய தமிழ்நாடு கருதப்படுகின்றது. தமிழ்நாட்டில் அறியப்பட்ட தமிழர்கள், கி.மு. 4000 ஆண்டுகளிலும், அதற்கு முன்பாகவும், வடக்கே காசுமீரம் வரையிலும் சென்று பரவி வாழ்ந்திருந்தனர் என்றும்,கி.மு. 7500 ஆண்டுகளில் அறியப் பட்ட சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிமே என்றும் அறியப் பட்டுள்ளது. எனவே இந்தியத் துணைக்கண்டம் முழுதும் ஒரு காலத்தில் தமிழர்களே வாழ்ந்திருந்து தமிழ்மொழியே பேசப் பட்டதென்பது தெளிவாகின்றது. பிற்காலத்தில், கி.மு. 1800 ஆண்டுகளில், சிந்துவெளி நாகரிகம் இறுதியாக முடிவுற்றதாக அறியப்பட்ட அளவில், தமிழர்கள் தென்னிந்தியப் பகுதிகளில் நிலை கொண்டனர். அந்நிலை மென்மேலும் சுருங்கி, இன்றைய

தமிழ்நாடு என்ற அளவில் முடிவுற்றாலும், தற்போதும் தென்னிந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் அக்காலத் தமிழர்களே என்பதும், அவர்கள் பேசும் மொழிகள் தமிழ் மொழியின் கிளை மொழிகளே என்பதும் அறியப்பட்டுள்ளன.

கிழக்கு நடுத்தரைக் கடல்நாட்டு மக்களை செமிட்டிக் இனத்தவர் என்று அழைத்ததைப் போன்றே, தென்னிந்திய இனமொழிகளை, திராவிட மொழிகள் என பிற்காலத்தில் ஆய்வாளர்கள் அழைத்தனர். திராவிடம் என்பது, சமற்கிருதச் சொல் என்றாலும், அதன் மூலம் தமிழில் உள்ளதைக் காணலாம்.

திராவிட மொழிகளுக்குத் தாயாக தமிழ் உள்ளதென்பதை பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். திராவிட மொழிகளுக்குத் தாயாக தமிழ் அறியப்பட்டது போல்,செமிட்டிக் மொழிகளுக்குத் தாய்மொழி எதுவென்பதை இதுவரையிலும் ஆய்வாளர்களால் அறிய இயலவில்லை. செமிட்டிக் மொழியின் தாய்மொழியை, "ஒரு மொழி" (One language) என்று விவிலியம் கூறினாலும், அந்த ஒருமொழி எதுவென்பதை விவிலியம் விளக்கவில்லை.

கடந்த நூற்றாண்டில், டாக்டர் இலகோவரி (Dr. Lehovary) என்றமொழி ஆய்வாளர், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டு மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்தவர்கள் திராவிடர்களே என்ற கருத்தினை வெளியிட்டார். திராவிடர்களின் தாயகம் மெசபத் தோமியாவே என்றும், அங்கிருந்தே சிந்துவெளியிலும் பின்னர் தமிழ்நாட்டிலும் குடியேறினர் என்றும் கூறினார். இலகோவரி கூறிய கொள்கைக்கான வரலாற்றுப் பின்னணியை அவர் விளக்கவில்லை. மெசபத்தோமியாவினின்றும் சிந்து வெளிக்கு மக்கள் குடியேறியதற்கான கரணியங்களையும் அவர் கூறவில்லை.

திராவிடர்களுக்கும் செமிட்டிக் மக்களுக்கும் இடையே காணப்பட்ட மொழிகள், சமய வழிபாட்டுமுறைகள், கடவுளர்கள், சமூக வழக்குகள், வழக்காறுகள், ஒன்றுபட்டிருப்பதைக் கண்ட இலகோவரி, மேற்கண்டவாறு கூறமுன்வந்தார்.

வெள்ளக் கால அழிவுக்குப் பிறகு, கிழக்குநாட்டில் அறியப்பட்ட "நோவா" என்ற மீகாமன், தனது மரக்கலத்தின் உதவியினால், வெள்ளப் பாழினின்றும் தப்பித்து வந்த செய்தியை விவிலியம் விளக்குகிறது. இதே செய்தியை, விவிலியம்

பதிவு செய்வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மெசபத்தோமிய மற்றும் சுமேரிய இலக்கியங்கள் பதிவு செய்திருந்தன. இவ்விரு இலக்கியங்களினின்றும் எடுக்கப்பட்ட நிகழ்வுகளே, விவிலியத்தில் காணப்படுகின்றன.

கிழக்கேயிருந்த நாட்டில் வாழ்ந்திருந்த நோவா என்பானின் மக்கள், மேற்கே யிருந்த தைகிரீசு என்ற சின்னாற்றாங் கரைக்குக் குடிபெயர்ந்த செய்தியை விவிலியம் விளக்குகின்றது. இம்மக்கள் மூவர் என்றும், அவர்களில் தலைமகன் செம் (Shem) என்றும் சொல்லப்பட்டுள்ளனர். செம் என்பானின் மரபு, பிற்காலத்தில் பல்கிப் பெருகி,மெசபத்தோமியாப் பகுதிகளில் நிறைந்திருந்தனர். மக்கள் பெருக்கம் கரணியமாக அம்மக்கள் பல்வேறு திசைகளில் பிரிந்துசென்றனர். அவ்வாறு பிரிந்து சென்ற மக்கள், தங்கள் முன்னோனின் மரபினர் பேசிய மொழிகளினின்றும் கிளைத்த பல்வேறு மொழிகளைப் பேசினர். அக்கிளை மொழிகள் அக்காடியம், அசீரியம், அறமாயிக், கனானியம், ஃபோனீசியம்,எபிறேயம், அரபு, எத்தியோப்பியம் என அறியப்படுகின்றன.

இம்மொழிகள் யாவும் ஒரு மொழியினின்றே (செம் மரபினர் பேசிய மொழி) கிளைத்தவைகளாகக் கருதப்பட்டு, செம் என்பானின் பெயரால், செமிட்டிக் எனப் பட்டது.

கங்காணியார் கால்டுவெல்லார் தொடங்கி, தேவவேநயப் பாவாணர் வரையிலான வர்களிடையே கடந்த இருநூறு ஆண்டுகளில், செமிட்டிக் -தமிழ் மொழிகளிடையே காணப் பட்ட உறவுகள் பற்றிய சிந்தனைகள் உருவாயின. ஆனால் முறையான ஆய்வுகளை இதுவரையில் எவரும் மேற்கொள்ள வில்லை.

அண்மையில் அறியப்பட்ட புதுப்புது ஆய்வுகளின் முடிவுகள், கி.மு. 11000 ஆண்டுகளில், தமிழர்களின் தாயகமான குமரிக் கண்டம் இறுதியாக அழிந்து போன செய்திகளைத் தெரிவிக்கின்றன. இன்றைய தமிழகம், அன்றைய குமரிக் கண்டத்தின் வடபகுதியாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கானச் சான்றுகளும் கிடைத்துள்ளன.

இரண்டு கோடி ஆண்டுகளுக்கு முன்பு அறியப்பட்ட தீனோசர் என்ற விலங்கினம், தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்ததற் கானச் சான்றுகள் கிடைத்துள்ளன. பல்வேறு கடல்வாழ் உயிரினங்கள், கற்களாக மாறிப்போன நிலையில்,அரியலூர்

மாவட்டத்தில் அவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. நிலம், நீர்ப் பகுதிகளின் விலங்குகள் உயிரினங்கள், கற்பதிவுகளாக (Fossils) இம்மாவட்டமெங்கும் சிதறிக் கிடக்கின்றன. இவையெல்லாம், தமிழகம் பல கோடி ஆண்டுகளாக நிலைபெற்றிருந்த செய்தியை விளக்கும்.

குமரிக்கண்ட அழிவு, தமிழ்மக்களை மேற்கு நோக்கிக் குடிபெயரச் செய்தது என்று கருதுவதில் தவறில்லை. அவ்வா றான குடியேற்றங்கள் பற்றிய செய்திகளும் விவிலியம் உள் ளிட்ட மெசபத்தோமிய, சுமேரிய இலக்கியங்களில் காணப் படுகின்றன. இச்செய்திகளின் அடிப்படையான ஆழத்தைப் புரிந்து கொள்ளாத மேற்கித்திய ஆய்வாளர்கள், செமிட்டிக் திராவிட உறவுகள் பற்றிக் கூறி, அதற்கான வரலாற்றுப் பின்னணிகளை விளக்கத் தவறிவிட்டனர்.

“தமிழும் மேற்கித்திய செமிட்டிக் மொழியினமும்” என்ற தலைப்பினான ஆய்வுக்கட்டுரை,

1. தமிழர்களின் தாயகமான குமரிக்கண்டம் பற்றியும்,
2. அக்கண்டம் ஆழிப் பேரலைகளால் அழிந்துபோனது பற்றியும்,
3. அவ்வழிவினின்றும் தப்பிப் பிழைத்த மக்கள் உலகெங்கும் சென்று குடியேற்றங்கள் கண்டதுபற்றியும்,
4. மெசபத்தோமியாவில் குடியேறியவர்களும் இவர்களில் ஒரு குழுவினரே என்பது பற்றியும்.
5. குடியேற்றங்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடவாமல், கிழக்கிலிருந்தே மேற்கே நோக்கப்பட்டதுபற்றியும்,
6. குடியேற்ற மக்களின் மொழியே, செமிட்டிக் மொழியினங் களாகக் கிளைத்தது பற்றியும்.
7. தமிழ் -செமிட்டிக் உறவுகள் மெய்ப்பிக்கப்பட வாய்ப்புகள் மிகுதியாக உள்ளனவென்பது பற்றியும், விளக்க முற்பட்டுள்ளது.

இவ்வாய்வுக் கட்டுரையை எழுதுவதற்கான ஊக்கத்தையும், உதவித் தொகையினையும் அளிக்க முன்வந்த இந்திய அரசு, மாந்த வளமேம்பாட்டு அமைச்சகத்தின் உயர்கல்வித்துறைக்கும், சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவ னத்தின் பொறுப்பு அலுவலர்முனைவர்க. இராமசாமி அவர்களுக்கும் எனது நன்றி யினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தமிழரின் தாயகம்

திராவிடர் என்ற சொல், தமிழரைக் குறித்த சொல்லன்று என்பதால்,இனி திராவிடர் என்ற சொல்லைவிடுத்து, தமிழர் என்ற சொல்லையே இந்த ஆய்வுக் கட்டுரையில் பயன்படுத் துவது சரியானது. தமிழர் யாவர்? அவர்களது தோற்றநாடு எது? அவர்கள் குடியேறிய நாடுகள் எவை? தமிழ்மொழி எக்காலத்தில் தோன்றி யது? அது இயற்கையான மொழியா அல்லது பிற மொழிகளினின்றும் கிளைத்ததா? தமிழ் மொழிக் கான எழுத்து வடிவங்கள் எக்காலத்தில் அறியப்பட்டன? தமிழரின் நாகரிகத் தோற்ற காலம் எது? பிறநாட்டு நாகரிகங் களுடன் கொண்டுள்ள தொடர்புகள் என்ன? இன்னோ ரென்ன கேள்விகளுக்கெல்லாம் விடை கூற, கடந்த சில நூற் றாண்டுகளில் வாழ்ந்திருந்த அறிஞர் பெருமக்கள் முயன்றுள் ளனர். ஒவ்வொரு வரும் தத்தம் பார்வையில் தமது கருத்து களை வெளியிட்டுள்ளனர். இக்கருத்து களின் மூலத்தைஅறிய, உலகத் தோற்றம் மற்றும் மாந்தத்தோற்றம் பற்றிய செய்தி களையும் அறியவேண்டியுள்ளது.

மாந்தவினத்தின் தோற்றம்: பேரண்டம் தோன்றிப் பின் அண்டம் தோன்றி, கதிரவன் பிளவுபட்டு, கோள்கள் சிதறிக் குளிர்ந்து, ஞாலம் தோன்றிய கொள்கையை வகுத்தவர்கள், ஞாலத்தின் அகவையைக் கணக்கிடுவது கடினமானது எனத் தெரிவித்துள்ளனர் என்றாலும், பலவிலக்க (பில்லியன்) ஆண்டு கட்கு முன்பு நிகழ்வுற்ற ஞாலத்தின் தோற்றமும் தொடர்ந்து அதன் பரப்பில் உருவான உயிரினத் தோற்றமும் ஆய்வாளர் களால் முனைப்புடன் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. உயிரினங் கள் தோன்றவும், பல்கிப் பெருகவும் நிலநடுக் கோட்டை யொட்டிய பகுதிகளே ஏற்புடையனவாய் அமைந்திருந்தன வென்பது புவியியலாரின் முடிபுகளாகும்!

வெப்பமும் குளிரும் மழையும் வறட்சியும் மாறிமாறி உருவான சூழல்கள், உயிரினத்தோற்ற வளர்ச்சிக்கு வாகாய்

அமைந்திருந்தன. ஆறுகளும் கடலும், அடவிகளும் வாவிகளும், குன்றுகளும் மலைகளும் இயற்கையின் மாற்றங்களால் ஒன்றுக் கொன்று கூடி மயங்கி, பல்வேறு நிலங்களாக உருப்பெற்றன. இவைகளே உயிரினத்தோற்ற வளர்ச்சிக்கு உரமிட்டன. உயிரினத் தோற்றவளர்ச்சி, பலவிலக்கம் ஆண்டுகளாகத் தொடர்ந்தது. இயற்கையின் பெருமான வளர்ச்சியில் மாந்த வினம் இறுதி யாகத் தோன்றியது. மாந்தவினத்தின் தோற்றப் பகுதிகள், நடுநிலக் கோட்டையொட்டிய பகுதிகளேவென்பது புவியிய லாரின் கருத்தாகும். கடும் பனியும் குளிரும் நிலவும் வட தென் முனைப் பகுதிகளில், புல் பூண்டுகள் கூட முளைக்காத நிலையில், கடக மகரக் கோடுகளுக்கு வெளியே மாந்தவினம் தோன்றி யிருக்க வாய்ப்புகள் இல்லையென்பது புவியியலாரின் திட்ட வட்டமான முடிபுகள் ஆகும்.

உயிரினங்கள் கடலில் தோன்றி நிலத்தில் நிலைத்தன என்ற கருத்தும் உண்டு. இதனை மறுப்பாரும் உண்டு. விலங்குகள் தோன்றியதே, ஞாலத்தின் அடுத்த கட்ட நிகழ்வாகக் கருதப் படுகின்றது. மிகச்சிறிய ஆமை முதல், தினோசார் என்ற பெரு விலங்கு வரையிலான் விலங்குகளின் தோற்றவளர்ச்சியிலும், நில நடுக்கோட்டுப் பகுதிகளிலேயே அறியப்படுகின்றன. ஓரணு வுயிர் முதல் தினோசார் வரையிலான விலங்குகளின் கற்பதிவுகள் (Fossils) நிலநடுக் கோட்டுப் பகுதிகளிலேயே காணப்படு கின்றன.[2] தினோசார் போன்ற விலங்குகள் வாழ்ந்த காலத்தில், மாந்தவினத் தோற்றம் நிகழ்வுற்றிருக்கவில்லை யென்பர்.

ஞாலம் தோன்றிய காலம் முதல் இன்று வரையிலும், இயற்கை தனக்குள் ஒரு விதியை வகுத்துக் கொண்டு,அதன் படியே செயல்பட்டு வருவதைக் காணலாம். உலகில் தோன்றிய பல வகையான உயிரினங்களும் விலங்குகளும் அவ்விதிகளுக் குட்பட்டே தங்களது இனத்தைப்பெருக்கிக் கொண்டன. இயற்கையின் விதிகளோடு முரண்பட்ட பல உயிரினங்களை, இயற்கையே அழித்துவிட்டது எனப் புவியியலார் கூறுகின் றனர். இதற்கு எடுத்துக்காட்டாக, தினோசார் என்ற இனத்தின் அழிவைக் கூறலாம். தினோசார் வாழ்ந்திருந்த காலங்களில், மிக மிக உயரமான மரங்கள் வளர்ந்திருந்தனவென்றும், அம் மரங்கள் அடர்ந்த காடுகளில் எவரும் நுழையக்கூட இயலாத அளவுக்கு நெருக்கமாக இருந்தனவென்றும் புவியியலார் கருது கின்றனர். இப்பெருங்காடுகள் யாவும் இயற்கையின் விதிகளை

மீறி வளர்ந்தனவென்பதால், இயற்கையின் சீற்றங்கள் இக் காடுகளை அழித்து, மண்ணோடு மண்ணாகப் புதைத்துப் போட்டன. இவ்வாறு புதையுண்டவைகளே, இன்று இயற்கை நமக்களித்திருக்கும் கனிம வளங்களாகும்.

முதல் மாந்தவினம் குரங்கிலிருந்து தோன்றியதே என்று டார்வின் கூறினார். இவர் தம் கொள்கைக்கு ஏற்புகளும் மறுப் புகளும் இருந்தன, இருக்கின்றன. முதல் மாந்தன் முதுகுடன் அறியப்பட்டான் எனவும், அவனது கூன் முதுகு நிமிர பல்லா யிரம் ஆண்டுகள் கழிந்தன எனவும் புவியியலார் கூறுகின்றனர். முதுகு நிமிர்ந்த மாந்தனே இன்றைய மாந்தவினத்தின் முதல்வன் என்று கருதப்படுகின்றான். இவ்வாறான மாந்தனின் எலும்புக் கூடுகள் கடந்தநூற்றாண்டில் கண்டெடுக்கப் பட்டன.

இந்த ஞாலத்தின் அகவை 3 பில்லியன் ஆண்டுகளெனவும், உயிரினத் தோற்றம் 500 மில்லியின் ஆண்டுகளெனவும், மாந்த வினத் தோற்றம் 6,00000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தெனவும் அறிவியலார் கருதுகின்றனர். எல். இலீக்கி (L.Leaky) என்ற ஆய்வாளர், கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதி தான்சானிய (Tanzania) மாந்தனை "செல் லியன் மாந்தன்" (Chellean-men of Olduvai Gorge in Tanzania) என்றழைத்தார்.[3]

டாக்டர் யூஜீன் தூபோ (Dr. Rngene Dubois) என்ற ஆய்வாளர், இந்தோனேசியாவின் சாவாப் பகுதியிலுள்ள சோலோ என்ற ஆற்றங்கரையில் மாந்தனின் மண்டையோட்டையும், இடது தொடை எலும்பையும், இரண்டு பற்களையும், கி.பி. 1884 ஆம் ஆண்டில் கண்டெடுத்தார். அவன் கூன் நிமிர்ந்த மாந்தன் என்னும் பொருளில் Pithecanthropus என்றவாறு சொல்லப் பட்டான். இவனுடைய காலமும் பத்திலக்கம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென அறிவிக்கப்பட்டது.[4] இதற்குப் பிறகு அறியப் பட்ட செய்திகளாவன:[5]

பீஜிங் மாந்தன் = 4,00, 000ஆண்டுகள்

செர்மானிய மாந்தன் = 2,50,000 ஆண்டுகள்

ஐரோப்பிய மாந்தன் = 40, 000 ஆண்டுகள்,

பாலத்தீனிய மாந்தன் = 75,000 ஆண்டுகள்

நாடுகளின் தோற்றம்:

ஞாயிற்றினின்றும் வெடித்துச் சிதறிய நெருப்புத் துண்டங்களே கோள்களாக உருப்பெற்றனவென்பது அறிவியலாரின் கருத்தாகும். இவ்வாறு சிதறிய துண்டுகளில் ஒன்றே ஞால உருண்டையாகும். ஞாலத்தில் நில நடுக்கோட்டுப் பகுதிகள் தண்மையும் வெப்பமும் கலந்திருந்தன. சிதறிய கோள்களில், சரியான வெப்பச் சூழலைக் கொண்டது ஞாலமேயாகும். மற்ற கோள்கள் மிக வெப்பமும் குளிரும் கொண்டவை. நல்ல சூழலைக் கொண்ட ஞாலத்தில் உயிரினங்கள் தோன்றின என்பது கருத்தாகும்.

தொடக்கத்தில் நெருப்புக் குழம்பாய்க் கனன்று கொண்டிருந்த ஞாலம், காலப்போக்கில் மேற்பகுதிகள் குளிர்ந்து, நீரும் நிலமுமாகப் பிரிந்தது. இவ்வாறு பிரிந்த நிலம், ஒரே துண்டாக அல்லது ஒரே கண்டமாக விருந்தது. இக்கண்டம் பிறகு இரண்டாகப் பிரிந்தது என்பர். வடக்குப் பகுதியிலிருந்தது இலாரேசியா (Laurasia) என்றும், தெற்குப் பகுதியிலிருந்தது கோண்டுவானா என்றும் அறியப்பட்டன.[6] இவ்விரு கண்டங்களையும் நீர்ப்பகுதியொன்று பிரித்திருந்தது. நாளடைவில் கோண்டுவானாக் கண்டம் சில நிலப்பகுதிகளாகப் பிரிந்தது. (விளக்கப் படங்களைக் காண்க).

இவ்வாறான பிரிவுகள், ஞாலத்தின் சுழற்சியாலும், ஞாலத்துக்குள்ளிருந்த (இருக்கும்) நெருப்புக்குழம்புகளாலும் உருவானவைகளே. இப்பிரிவுகளை, கண்டப் பெயர்ச்சி (Continental drift) என அறிவியலார் குறிப்பிடுகின்றனர். இக்கண்டப் பெயர்ச்சிகள், ஞாலத்தின் கீழிருக்கும் தட்டுகள் (Plate techtoincs) இடம் மாறுவதால் ஏற்படுகின்றன என்றும் சொல்லப்படுகின்றது. ஆல்ஃபிரட் வெகனர் (Alfred Wegener) என்பவர், 1910 ஆம் ஆண்டில் இக்கொள்கையை வெளியிட்டார். 50 ஆண்டுகால ஆய்வுகளுக்குப் பிறகு, 1960 ஆம் ஆண்டில், இக்கொள்கை அறிவியலாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.[7]

கோண்டுவானா என்ற தென்கண்டம் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, ஆசுத்திரேலியா, ஆப்பிரிக்கா, அண்டார்ட்டிக்கா, தென்ஆப்பிரிக்கா, தென்னிந்தியா ஆகிய பகுதிகளைக் கொண்டிருந்தது என்பர். கோண்டுவானாவினின்றும் முதலில் பிளவுபட்ட நிலப்பகுதிகளாக இலெமூரியா, தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளைக் கூறுகளைக் கூறுவர்.

இலெமூரியா எனப்படும் குமரிக்கண்டம், தென்னாப்பிரிக்கா தொடங்கி இந்தோனேசியர்வரை நீண்டு, ஆசுத்திரேலியாவையும் உள்ளடக்கியிருந்தது என்பர்.[8] இக்குமரிக் கண்டம் நிலை பெற்றிருந்தது பற்றிய செய்திகள், தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அறியக் கிடக்கின்றன. கோண்டுவானா என்ற நிலப்பகுதியில்தான் உயிரினங்கள் தோன்றி வளர்ந்தன என்று புவியியலார் கருதுகின்றனர். கோண்டுவானா எக்காலத்தில் பிளவுபட்டது என்பதற்கானச் சான்றுகள் கிடைக்கவில்லையென்றாலும், மாந்த இனம் கோண்டுவானாவில் தோன்றி யிருக்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகின்றது.

60 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த மாந்த எலும்புக் கூடுகள், தான் சானியாவிலும், சாவாவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், அதற்கு முன்பே அதாவது 100 மில்லியன் ஆண்டுகளில் இலெமூரியா என்ற நிலப்பகுதி உருவாகியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. இந்த நூறு மில்லியன் ஆண்டுகளில், இலெமூரியாக் கண்டத்தின் பரப்பளவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புகளுமுண்டு. தான்சானியவும் சாவாவும் அன்றைய குமரிக் கண்டத் தின் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளாகவிருந்தன. குமரிக் கண்ட அழிவிற்குப் பிறகும், இவ்விரு பகுதிகளும் நிலைத்திருந்தன வென்பதாலும், ஏனைய இடங்கள் கடலால் சூழப்பட்டுள்ளதாலும், கடல் சூழ்ந்த பகுதிகளில், அகழ்வாய்வுகள் மேற்கொள்ள இயலாமற் போயின. எனவே, தான் சானிய -சாவாப் பகுதிகளின் சான்று களைக் குமரிக் கண்டத்தின் சான்றுகளாக ஏற்றுக் கொள்வதில் தவறில்லை எனலாம்.

குமரிக் கண்டம் நிலைபெற்றிருந்த செய்திகளையும், அது கடல்கோள் களின் தடுமாற்றங்களால் ஏற்படுகின்றன என்ற தற்கால அறிவியல் நோக்கு, குமரிக் கண்ட அழிவுக்குச் சான்றுகளாகவும் உள்ளன. குமரிக்கண்ட நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளாதவர்களும் உள்ளனர் என்றாலும், அக்கண்டம் அழிவுற்றதற்கானச் சான்றுகளை, உலகின் பல்வேறு சமய நூல்களும் அளிப்பதால், குமரிக்கண்டக் கொள்கை இன்று மறு ஆய்வுகளுக்குட் படுத்தப்பட்டுள்ளது.

முதல் மாந்தவினத் தோற்றம் நிலநடுக்கோட்டுப் பகுதியில் தான் நிகழ்வுற்றது என்ற அறிவியலாரின் கூற்றுப்படி, குமரிக் கண்டத்திலேயே மாந்தவினத் தோற்றம் நிகழ்ந்தது எனலாம்.

அதற்குச் சான்றாக, தான்சானிய - சாவா எலும்புக் கூடுகளைச் சான்றுகளாகவும் கொள்ளலாம். மாந்தவினம் தொடக்கத்தில் காட்டு மலைப்பகுதிகளில்தான் தோன்றியது என்பதைப் புவியியலார் உறுதி செய்கின்றனர். முதல் மாந்தவினம் கருப்பினமேயென்றும், அக்கருப்பினம் குளிர் நாடுகளுக்குக் குடிபெயர்ந்த போது, நிறம் மாறினர் என்றும் அறிவியலார் கூறுகின்றனர்.[10]

குமரிக் கண்டத்தில்தோன்றிய மாந்த இனம், தமக்கென ஒரு மொழியை உருவாக்கிக் கொண்டது. அம்மொழியும் இயற்கையாய் உருவான மொழியே எனலாம். காலப்போக்கில் அம்மொழி செம்மொழியாக உருவெடுத்தது. செம்மொழிக்கான எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் இலக்கிய இலக்கணங்கள் தோன்றின. இச் செம்மொழியை அனைத்து மக்களும் அறிந்திருந்தனர் எனக் கூறவியலாது. ஆனாலும் அம்மொழி வழியான கொச்சை மொழி வழக்கும் இருந்திருக்க வேண் டும். கி.மு. 20000 ஆண்டுகளில், குமரிக்கண்ட மாந்தர் நாகரிக மாந்தராக விளங்கினர்.[11] நிலையான குடியிருப்புகளும், குடிகளைக் காக்க மன்னராட்சி முறையும், சட்டதிட்டங்களும், கல்விக் கூடங்களும் அமைந்திருந்தன. வெள்ளத்தால் உலகம் அழிவுபட்ட கால அளவாக, கி.மு. 18000 -12000 என்று அறிவியலார் கருதுகின்றனர்.[12]

இப்பேரழிவு, பனி உருகல் என்ற கொள்கையால் உறுதிப் படுத்தப்பட் டுள்ளது. இக்கால அளவுகளில் உலகின் பல்வேறு நாடுகள் அழிவுற்றன. அப்பேரழிவினால் குமரிக்கண்டமும் மறைந்து போனது. என்றாலும் அக்கண்டத்தின் எச்சங்கள் பல நிலப்பகுதிகளாகவேயிருந்தன. இப்பெரு வெள்ளத்தில் இலக்கக்கணக்கானவர்கள் மாண்டுபோயினர். மாண்டவர் போக, மீண்டவர் நல்ல வாழ்விடங்களைத் தேடி குடி பெயர்வாராயினர். இப்பேரழிவினால் ஏற்பட்ட நன்மையென்னவெனில் உலகின் பல நாடுகளுக்கும் அப்பேரழிவு மக்களைக் கொண்டு சென்றதே. குமரிக்கண்டத்தின் அழிவுபடாத பகுதிகளிலும், அதனைத் தாண்டிய பகுதிகளும் மக்களின் குடியேற்றங்கள் நிகழ்வுற்றன. இக்குடியேற்றங்கள் பற்றிய செய்தி களையும் அக்காலத்துப் பல்வேறு நாட்டுஇலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன. இக்குடியேற்றங்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நிகழ்வுற்றனவா அல்லது மேற்கிலிருந்து கிழக்குநோக்கி நடந்தனவா என்பதில் ஆய்வாளர்கள் முரண்படுகின்றனர்.

வெள்ளக்கால அழிவிற்குப் பிறகு உலகில் புதிய நாடு களும், கடல்களும் தோன்றின வென்பதை அறிவியலார் உறுதி செய்கின்றனர். இன்று உலக வரைபடத்தில் அறியப்படும் நாடு கள் கி.மு. 12000 ஆண்டுகளுக்குப் பிறகு உருவானவைகளே. இந்தியப் பெருங்கடலும், அரபிக்கடலும், வங்கக் கடலும் தொட்டு நிற்கும் நாடுகள், குமரிக் கண்டத்தோடு இணைந் திருந்த நாடுகளாக அறியப்படும். இன்றைய தமிழகம்,குமரிக் கண்டத்தின் வடக்குப் பகுதியாக விருந்து, வெள்ளப் பாழி னின்றும் தப்பியதாகவும் அறியப்படும். இலங்கையும் தமிழ் நாடும் இக்கால அளவில்தான் பிரிக்கப்பட்டன என்பதும் அறியக்கிடக்கின்றது. அரபிக்கடலும், வங்கக்கடலும் இக் காலத்தில் தோன்றி யவைகளே.

கி.மு. 10000 ஆண்டுகளில், ஆப்பிரிக்கக் கண்டத்தின் கிழக் குப்பகுதிகளில், எகிப்து, அரேபியா, மெசபத்தோமியா, பார சீகம், இந்தியா ஆகிய நாடுகளில்தான் மக்களினம் பெரிதும் அறியப்பட்டிருந்து. இந்நாடுகளில் வாழ்ந்திருந்த மக்கள், வெள்ளக்காலத்திற்குப் பிறகு, தங்களது பாது காப்பைக் கருதிப் பல்வேறு நாடுகளுக்கும் குடிபெயர்ந்ததாக அறியப்படுகின்றனர். எப்பகுதி மக்கள் எங்கு புலம் பெயர்ந் தனர் என்பதில் ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் நிலவு கின்றன. ஆனாலும் இம்மக்கள் அனைவரும் ஒரு நிலப்பகுதியில் தோன்றி வளர்ந்து, காலப்போக்கில் பல்வேறு நாடுகளில் பரவிச் சென்று வாழ்ந்தனர் என்ற கொள்கையை அறிவியலார் ஏற்றுக்கொள்கின்றனர். அம்மக்கள் பேசிய மொழிகளும் ஒரு மூலமொழியினின்றும் கிளைத்தவைகளே என்பதையும் மொழியியலார் உறுதிபடக் கூறுகின்றனர். புகழ்பெற்ற மொழி யியல் அறிஞர் நோவாம்ஸ்கியும் (Noamski), ஒற்றை மொழியான ஒரு முலமொழியினின்றே உலகமொழிகள் யாவும் கிளைத்தன என்கிறார்.

அந்த மூலமொழியைப் பேசியவர்களின் முன்னோர்கள், மெசபத்தோமியா, பாலத்தீனம், அரேபியா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருந்தவர்களே என்ற கருத்தை மொழியி லாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். கி.மு. 5000 ஆண்டுகளில், மேற்கண்ட நாடுகளின் மக்களோ, அல்லது அம்மக்களின் மரபுகளில் தோன்றியவர்களோதான் உலக வரலாற்றில் அறியப் படுகின்றனர். ஆப்பிரிக்கக் காடுகளில் வாழ்ந்திருந்தவர்களைப்

பற்றியோ, பனிப்படலங்கள் சூழ்ந்திருந்த தென் வடமுனைப் பகுதிகளில் வாழ்ந்திருந்தவர்களைப் பற்றியோ, வரலாற்றில் குறிப்புகள் எவையுமில்லை. மேற்கண்ட நாட்டு மக்கள், கி.மு. 3000 ஆண்டுகளில் வரலாற்றின் பார்வையில் தெளிவாகத் தென்படுகின்றனர். கரட்டுத் தீவில் (Crete island) வாழ்ந்திருந் தோர், கிரேக்கர்களுக்கு முன்பே அறியப்படுகின்றனர். இம் மக்களும், கிரேக்கர்களும் மேற்கிலும் வடக்கிலுமாகச் சென்று குடியேறினர். ஸ்காண்டிநேவிய தீவக்குறையில் கி.மு. 2000 ஆண்டுகளில் வாழ்ந்திருந்தவர்கள், கிரேக்க நாட்டினின்றும் புலம்பெயர்ந்தவர்களே. இது பற்றியே இவ்விரு மக்களின் மொழிகளிலும் ஒற்றுமைக்கூறுகள் தென்படுகின்றன. கி.மு. 1000 ஆண்டுகளில் ஐரோப்பா வெங்கும் மக்கள் பரவி வாழ்ந் திருந்தனர்.

இதே கால அளவுகளில் பாரசீகம், சிந்து சமவெளி, தமிழ்நாடு, சீனம், சப்பான், இந்தோனேசியா ஆசுத்திரேலியா, புதுக்கனித்தீவுகள், சாலமன் தீவுகள் போன்ற தொலைகிழக்கு நாடுகளிலும் மக்கள் அறியப்பட்டிருந்தனர். இருப்பினும் மேற்கு நாட்டவர் தமிழ் நாடு வரையிலும் வந்து, தங்கள் பயணத்தை நிறுத்திக் கொண்டனர். கிழக்கு நாட்டவரும் தங்கள் மேற்கு நோக்கிய பயணத்தைத் தமிழ் நாட்டுடன் நிறுத்திக் கொண்டனர். இந்நிலையில், தமிழ்நாடு குறிப்பாகக் கிழக்கேயிருந்த தொண்டி,மேற்குக் கரையின் முசிறி ஆகிய துறைமுகங்கள், பன்னாட்டவர்கள் கூடும் பெரும் துறைமுக நகரங்களாக விளங்கின. இவ்வாறு தமிழகத்துடனான தொடர் புகளை மேற்கித்தியரும் கிழக்கித்தியரும் வலுப்படுத்திக் கொண்டிருந்தனர். கி.மு. 4000 ஆண்டுகளிலேயே பாபிலோ னுக்கும் தமிழகத்துக்கும், பாபிலோனுக்கும் சிந்துவெளிக்கும் இடையே வணிகத் தொடர்புகள் இருந்தன. இவைகளுக்கான அடிப்படையான கரணியம் வணிக நோக்கம் மட்டுமின்றி, இதரத் தொடர்புகளும் வரலாற்றில் தென்படுகின்றன. குறிப் பாக ஃபோனீசியர்கள் கி.மு. 2000 ஆண்டுகளிலேயே தமிழ் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். ஃபோனீ சியர்களுக்கும் தமிழருக்குமிடையே இன அடிப்படையிலான (Ethnic relations) தொடர்புகள் இருந்ததாக, இன்றைய இலெ பனான் நாட்டுத் தாளிகையாளர், ஆன் ஜுசூபி தெரிவிக் கின்றார். தன்னுடைய இலெபனான் (அன்றைய ஃபோனீசியா) பற்றிய நூலில்,

"Voyages of exploration took the Phoenicians as for south as India (Tamil nadu) where their cultural influene has been identified." என்று Facts About Lebabon (Page 16) இல் மேற்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

ஃபோனீசியர்கள் செமிட்டிக் மரபைச் சார்ந்தவர்கள் என்று ஆய்வாளர்கள் உறுதி செய்வதால், ஃபோனீசிய இனத்துக்கும் தமிழ் இனத்துக்கும் உள்ள தொடர்புகள் வெளிப்படுவதைக் காணலாம்.[13]

ஃபோனீசியர்கள் செமிட்டிக் மரபைச் சார்ந்தவர்கள் என்று ஆய்வாளர்கள் உறுதி செய்வதால், செமிட்டிக் இனத்துக்கும் தமிழ் இனத்துக்கும் உள்ள தொடர்புகள் வெளிப்படுவதைக் காணலாம்.[14]

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில், ஐரோப்பியர்கள் வணிகத்தின் பொருட்டு உலகெங்கும் சுற்றி வந்தனர். இந்தப் பயணங்கள் ஐரோப்பியரின் சிந்தனைகளைத் தூண்டின. கிழக்கு மேற்கு நாடுகளிடையே காணப்பட்ட பழங்கால உறவுகளைப் பற்றி அறிந்து கொண்டனர். இந்த சிந்தனைகள், நாடுகளின் மொழிகளைப் பற்றியும் வரலாறுகளைப் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ள அடிப்படைகளாய் அமைந்தன. அந்த ஆய்வுகள் வியப்புக்குரிய செய்திகளையும் தந்தன. ஸ்பெயின் நாடு தொடங்கி இந்தோனேசியா வரையிலான நாடுகளில் பேசப்பட்ட மொழிகளில் ஒற்றுமைகள் பல காணப்பட்டன. இதன் அடிப்படையில் மக்களினம் தோன்றியது எங்கே என்ற ஆய்வுகளும், அம்மக்களினம் பல்கிப் பெருகிய போது புலம் பெயர்ந்த நாடுகள் எவை என்ற எண்ணங்களும் தோன்றின. அதன் அடிப்படையில், முதல் மாந்தவினம் தோன்றி வளர்ந்தது, புலம் பெயர்ந்தது பற்றிய ஆய்வுகள் வெளிப் பட்டன. குறிப்பாக, இந்தியாவையும் தமிழ்நாட்டையும் மையப்படுத்திய ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின. தமிழர்கள் யாவர்? அவர்களின் தாய்நாடு எது? அவர்களின் முன்னோர்கள் யாவர்? தமிழர்கள் தமிழ்நாட்டின் தொன்மக்குடிகளா அல்லது புலம் பெயர்ந்தவர்களா என்ற நோக்கில் பல ஆய்வாளர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

கங்காணியார் கார்டுவெல்லார் கூறும் சித்திய இன வழிக் கொள்கை:

தமிழ் மொழியை பின்னிய மொழியுடன் கால்டு வெல்லார் ஒப்பிடுகிறார். தமிழ்ச்சொற்களில் 85 ஐப் பொறுக்கியெடுத்து, அவை யாவும் சித்தியன் மொழிச் சொற்களோடு ஒத்திருப்பதை எடுத்துக் காட்டுகிறார். அவ்வாறே 31 செமிட்டிக் மொழியினச் சொற்களையும், 106 மேற்கித்திய இந்திய - ஐரோப்பிய மொழியினச் சொற்களை ஒப்புமைப் படுத்துகிறார். சமற்கிருதத்திலும் கூடத் தமிழ்ச் சொற்கள் பரவிக் கிடப்பதைக் கண்டறிந்தார்.[14]

சித்திய - தமிழ் மொழிகளுக்கிடையே அமைந்துள்ள இலக்கண விதிகள், சொற் பிறப்புகள், ஒலியொற்றுமைகள் ஆகியவைகளை கால்டுவெல்லார் மேற்கோள்களாகக் காட்டினார். அவருடைய கூற்றுப்படி நடு ஆசியாவில் வாழ்ந்திருந்த ஆரியரல்லாத தூரானிய இனத்தவர், வடமேற்கு இமயமலைத் தொடர் வழியே இந்தியாவை அடைந்து சிந்துவெளியில் நிலை கொண்டனர். ஆரியர்களது வருகைக்குப்பிறகு, தெற்கே புலம் பெயர்ந்து தமிழ்நாட்டை அடைந்தனர் என்பது கால்டுவெல்லாரின் கருத்து. இக்கருத்தினைப் பல மேலைநாட்டு ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்ட போதிலும், இரேய்ன் ஹோல்ட் (Reignhold Rost), ஜூலியன் வின்சன் (Julion vinson), கோவர் (C.F. Gover), ஃபரர் (Farrar) போன்ற ஆய்வாளர்கள் மறுக்கின்றனர். மிகச் சிறந்த மொழிவளம் கொண்ட தமிழை சித்திய மொழி போன்ற கிளைமொழிகளுடன் ஒப்பிடுவதை, ஃபரர் கடுமையாக மறுக்கிறார். மிகச் சிறந்த நகரிய நாகரிகம், வானியல், வேளாண் அறிவு, கலை, நெசவு, சட்ட நூல்கள் போன்ற துறைகளில் சிறந்திருந்த தமிழர், எந்தவொரு சிறப்பும் அறியப்படாத சித்தியர் வழிவந்தவர் என்பது அடிப்படையிலேயே தவறான சிந்தனை என்கிறார்.

தமிழர், மங்கோலிய வழியினரே[15]:

திபேத் நாட்டினின்றும் இமய மலையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைந்த மங்கோலிய இனத்தவரே தமிழர்கள் என்ற கருத்தை,மேற்கித்திய ஆய்வாளர்களான மார்சுமேன் (Marshman), அண்டர், (W.W. Hunter), ஃபெர்கூசன் (Fergusson) போன்றோர் உறுதி செய்கின்றனர். மங்கோலிய மொழியில் காணப்படும் ழ, ஞ, ங போன்ற ஒலிகள் தமிழில் இருப்பதை அடிப்படையாகக் கொண்டே இக்கருத்தை வலியுறுத்தினர். இக்கருத்தினை, தமிழறிஞர் வி.கனகசபைப்பிள்ளையும் ஏற்றுக் கொள்கிறார்.

தமிழர், சுமேரியர் வழியினரே:[16]

மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்த சுமேரியர், பாரசீக வளைகுடா வழியில் வெளிவந்து, சிந்துவெளியிலும், தமிழகத்தின் மேற்குக் கடற்கரையிலும் குடியேறினர் என்று டாக்டர் ஒப்பேத் (Dr. Oppette) என்பார் கருதினார். தமிழர் - சுமேரியரின் கடவுள், வழிபாட்டுமுறை, மொழி ஆகியவைகளில் காணப்படும் ஒற்றுமைகள் இக்கருத்துகளுக்கு வலுசேர்த்தன. நோவா என்ற விவிலிய மாந்தனையும் இணைத்து, இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள், மெசபத்தோமியாவிலிருந்து கிழக்கு நோக்கி வந்து இந்தியாவில் குடிபெயர்ந்தனர் என்றவாறு உரைத்தனர். இக்கொள்கையை பண்டித சவரிராயப்பிள்ளை என்ற தமிழகத்தின் அறிஞரும் ஏற்றுக் கொண்டார்.

தமிழர் வெளிநாட்டினரே[17]:

இந்தியப் பேராழியை ஒட்டியிருக்கும் நாடுகளான ஆசுத்திரேலியா, தென்னாப் பிரிக்கா, மடகாசுக்கர், சீனா, அரேபியா போன்ற நாடுகளில் வாழ்ந்திருந்த மக்கள், கடல் வழியே தமிழ் நாட்டை அடைந்து, அங்கு நிலைபெற்றனர் என்ற கொள்கையை, குருக்சு (Crooks), கீன் (Keane), மோரிசு (Morris) போன்ற மேலை நாட்டவர் ஏற்றுக் கொண்டனர். இதன்படி, தமிழரும் வெளிநாட்டினரே என்ற கருத்து உரைக்கப்பட்டது. இக்கருத்தையே ஆரியச் சார்புடைய வரலாற்றாய்வாளர்கள் எஸ். ஆர். இராவ் (S.R. Rao) போன்றவர்கள் வலியுறுத்தினர்.

தமிழர் நடுத்தரைக் கடல்பகுதிகளைச் சார்ந்தவரே[18]:

திராவிடர் எனப்பட்ட தமிழரின் தாயகம் மெசபத்தோமியா, அரேபியா மற்றும் எகிப்து நாடுகளே என்ற கொள்கையொன்றும் சொல்லப்பட்டது. கடல்வழியாகவும், பாரசீக நாடு வழியாகவும் கிழக்கு நோக்கிப் புலம் பெயர்ந்த மக்கள் சிந்துவெளியில் தங்கி, பிற்காலத்தில் தமிழகத்தில் நிலை கொண்டனர் என்ற கருத்தைப் பலரும் முன்வைத்தனர். கரட்டுத்தீவு (Crete island), செப்பறைத் தீவு (Cyprus island), அனதோலியா (ஆசியா மைனர்), பாபிலோன் ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருந்த அக்கால மக்களின் மொழிகளும், சமய நம்பிக்கைகளும் தமிழரிடையே காணப்பட்டன என்ற கருத்தை டாக்டர் சிலேட்டர் (Dr. Slater), ஜேம்சு ஆர்னல் (James Hornell) போன்றோர் எடுத்துரைத்தனர். திராவிடர்களின் தாயகம் மெசபத்

தோமியாவே என வரலாற்றாசிரியரான டாக்டர் சுப்ரமணியமும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டார். வங்களாளத்தின் வரலாற்றாசிரியர் டாக்டர் சாட்டர்ஜியும் கூட (Dr. Chatterjee) இக்கொள்கையை ஏற்றுக்கொண்டவரே.

தமிழரின் தாயகம் ஈழநாடே[19]:

முதல் மாந்தனான ஆதாம், இலங்கையில் தனது காலடித் தடத்தைப் பதித்தான் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. கடவுள் ஆதாமை இடன் தோட்டத்தில் படைத்ததாகவும், அது விண்ணுலகில் இருந்ததாகவும் குர்ஆன் கூறுவதை மேற்கோள் காட்டிச் சிலர் வாதிட்டனர். சாவா நாட்டிலுள்ள பழைய நூல் ஒன்று, ஆதாமின் மரபில் வந்த பிரமா என்பவன், சாவாவிற்குச் சென்று தனது இனத்தைப் பல்கிப் பெருக்கி னான் என்கிறது. இக்கதையோடு, சாவாவில் கிடைத்த எலும்புக் கூட்டை மேற்கோள் காட்டி கே. பாலசிங்கம் என்பார் கருத்துரைத்தார். இதன்படி ஆதாமின் வழி வந்தவன் பிரம்மனே என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு, முதல் மாந்தனின் வழிவந்தவர் ஆரியரே என்ற கொள்கை நிலை நிறுத்தப்பட்டது.

தமிழர் அரபு நாட்டவரே[20]:

இலங்கையிலுள்ள ஆதாமின் மலையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவ்விடத்தைக் கண்டு வணங்க வந்த அராபியர்கள், தமிழகத்தின் மேற்குக் கடற்கரையில் தங்கி விட்டனர் என்றும், தமிழகத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்பதும், அவர்கள் மேலை நாடுகளிலிருந்து குறிப்பாக மெசபத்தோமியாவி னின்றும் குடிபெயர்ந்தவர்களே என்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இக்கருத்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குறிப்பாக, மொழி ஞாயிறு, ஞா. தேவநேயப் பாவாணர், மக்களின் குடியேற்றங்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியிருந்தது என்ற கொள்கையை மறுப்பதோடு, இது ஒரு தலைகீழான கொள்கை எனச் சாடுகிறார். கிழக்கிலிருந்து மேற்கே மக்கள் புலம்பெயர்ந்ததற்கான கரணியங்கள் வலுவாக உள்ளன வென்றும், மேற்கிலிருந்து கிழக்கே நடந்ததாகக் கூறப்படும். செய்திகளுக்கான கரணியங்கள் சொல்லப்படவில்லையென்றும் கூறுகிறார். மெசபத்தோமியர் தமிழரே என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளும் பாவாணர், அவர்கள் தமிழகத்தினின்றும் அங்கே புலம்பெயர்ந்தவர்களே என்று கூறுகிறார். மெசபத்

தோமியரே தமிழகம் வந்தனர் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டால், தமிழ்நாட்டினும் சிறந்த செம்மொழித் தமிழை மெசபத்தோமியா பெற்றிருக்க வேண்டும் என்றும், அவ்வாறில்லாமல், மெசபத்தோமிய செமிட்டிக் மொழி, தமிழினின்றும் திரிபுபட்ட மொழியாகவே காணப்படு கிறதென்றும் விளக்கம் அளிக்கின்றார். சிந்துவெளியில் வாழ்ந்திருந்த தமிழர், குமரிக் கண்ட அழிவிற்குப் பிறகு, வடக்கு நோக்கிச் சென்றவர்களே என்றும் கூறுகிறார். தமிழர்களே மெசபத்தோமியாவிற்குக் குடிபெயர்ந்தனர் என்பதை, விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ள நோவா என்பானது நிகழ்வைச் சுட்டிக் காட்டுகிறார். நோவாவின் மக்கள், கிழக்கிலிருந்த தைகிரீசு ஆற்றங்கரைப் பகுதிகளுக்கு வந்தனர் என்பதை விவிலியம் தெளிவுபடுத்துவதையும் பாவாணர் சுட்டிக் காட்டுகிறார்.

பாவாணரின் கொள்கை:

தமிழரின் தாயகம் குமரிக்கண்டமேயென்றும், குமரிக் கண்ட அழிவிற்குப் பிறகு, தமிழகத்தையே தாயகமாகக் கொண்டு தமிழர் வாழ்ந்திருந்தனர் என்று கூறும் பாவாணர், தம்மைப் போல் தமிழர்களும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களே என்ற பொய்யான செய்திகளைக் கூறி, ஆரியர்களும், ஆரியச் சார்புடையவர்களும், வரலாற்றை மாற்ற முயல்கின்றனர் என்றும் விளக்குகிறார். தமிழர் மேற்கிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்ற கருத்து, தமிழரின் வரலாற்றைத் திசை திருப்புவோர் மேற்கொள்ளும் உத்திகளே என்பது பாவாணரின் கருத்தாகும். இதனையே கொள்கையாகக் கொண்டு, அக்கொள்கைக்குத் தம் வாழ்நாளில் வலுசேர்க்க முயன்றவர் பாவாணர்.

மெசபத்தோமியாவில் குடியேறியவர் தமிழரே என்ற கொள்கையைக் கொண்டவர்கள்[22]:

மெசபத்தோமியர்களே இந்தியாவின் குடியேற்ற மக்கள் என்ற கருத்தினை வலியுறுத்திய அறிஞர் பெருமக்கள் இருந்தாலும், அதனை மறுத்துக் கூறி, மேற்கே குடியேறியவர்கள் தமிழரே என்ற கொள்கையைப் பல மேலைநாட்டு அறிஞர்களும், இந்திய நாட்டு ஆய்வாளர்களும் கொண்டிருந்தனர். அவர்களில் சிலரைப் பற்றிய செய்திகளாவன:

புவியியல் நோக்கில், குமரிக்கண்டமே மாந்தவினத்தின் தோற்றநாடு. அம்மாந்தவினம் தமிழினமே.

- Wallace, Malay Archipelago- Island life and Geographic Distribution of animals, vol.II.

- Nibon Chandra Das, Ancient Geography of India, quoted from Haeckals History of Creations, Vo,.II.

புவியியல் அறிஞர்கள், கோண்டுவானாக் கண்டத்திலிருந்து பிரிந்த குமரிக்கண்டமே மாந்தவினத் தோற்றநாடு என்றும், விலங்கிய லார் உயிர்களும் செடிகொடிகளும், விலங்குகளும் தோன்றியது குமரிக் கண்டத்தில்தான் என்றும் கூறுகின்றனர்.

-Kalidas Naig, India and the Pacific World, P. 222.

தற்போது இந்தியப் பேராழியில் புதையுண்டு கிடக்கும் நிலப்பகுதியே, மாந்தவினம் தோன்றிய நாடென்பதில் ஐயமில்லை.

- Scinence of Man, Monthly Magazine, Australia, December, 1900.

பனிக்காலம் முடிவுற்றபோது, தென்னிந்தியாவில் வாழ்ந் திருந்த தமிழர்களே, பஞ்சாபில் குடியேறி அங்கிருந்து மெச பத்தோமியா சென்றனர்.

-Boulder, History and Culture of Indian people, Vol. I. P.132.

தமிழர்களின் தாயகம் தமிழகமே. ஒவ்வொரு முறையும் கடல்கோ ளால் தமிழகம் அழிக்கப்பட்டபோது,தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்ள, விந்திய மலையைத் தாண்டி இமயமலைப் பகுதிகளில் குடியேறினர். அங்கிருந்து பல குழுக்கள் மெசபத் தோமியா, பாலத்தீனம், எகிப்து, ஸ்காண்டி நேவியத் தீவக்குறை, உருசியா மற்றும் வடமுனைப் பகுதிகளுக்கும் சென்று குடியேற லாயினர்.

-M.S. Puranalingam Pillai, Tamil India, P. 22.

தமிழரின் நாகரிகத்தில் அறியப்பட்ட பல கூறுகளே பிற்காலத்தில் புத்த, பிராமண வழிபாட்டு முறைகளுக்கு அடிப்படைகளாக இருந்தன. தமிழரின் பண்பாட்டுத் தாக்கங்களை பர்மா, இந்தோ னேசியா, சீனா, சப்பான் ஆகிய கிழக்கித்திய நாடுகளிலும் காணலாம். கிழக்கே சென்ற தமிழர் களைப் போலவே, எகிப்து மெசபத்தோமியா அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைகள் வரை, தமிழர்கள் மேற்கு நோக்கியும் குடிபெயர்ந்துள்ளனர்.

-G. Elliot Smith, Ancient Egyptian Civilzation, P. 17.

கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நடுத்தரைக் கடல் சார்ந்த நாடு களின் நாகரிகம் தமிழர்களுடையதே. மரவேலை, நெசவு,

கனிமங்களை உருக்கி வார்த்தல், பானைகள் செய்தல், கட்டிடங் களை உருவாக்குதல் போன்ற நுணுக்கமான தொழில்களை மேற்கே அறிமுகம் செய்தவர்கள் தமிழர்களே. தமிழர் நாகரிகத் தின் மேற்கெல்லையாக நடுத்தரைக் கடல் நாடுகள் இருந்தன.

-Dr. A. Coomaraswamy, Arts and Crafts of India and Ceylon.

தமிழர்கள் இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்தவர்களே என்பதை ஏற்க இயலாது. பிராகி மொழியும் தமிழும் ஒன்று போலுள் ளதைக் காட்டிச் சிலர், தமிழர்கள் பாரசீகத்தினின்றும் இந்தி யாவுக்குள் நுழைந்தவர்களே என்றனர். உண்மையில் தமிழ் மொழி தென்னிந்தியாவில் எக்காலத்தில் தோன்றியது என்பதை அறிய இயலாது. தமிழர்களே பாரசீகம் உள்ளிட்ட மேலை நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றவர்களாவர்.

-P. T.S. Iyengar, Pre-Aryan Tamil Culture, P. 12.

தமிழர்கள் மெசபத்தோமியா நோக்கி மேற்காகவும், பசிபிக் பெருங் கடலை நோக்கிக் கிழக்காகவும் சென்றுள்ளனர். கிழக்கே சென்ற தமிழர்கள், பசிபிக் பெருங்கடலை தாண்டி மெக்சிக் கோவிலும், பெருநாட்டிலும் குடியேறியுள்ளனர். இவ்வாறான குடியேற்றங்கள் கி.மு. 15000 முதல் 10000 ஆண்டுகள் வரை நிகழ்வுற்றன.

-H.G. Wells, The Outline History (New Edition 1951), P. 140.

ஆயிரத்து எண்ணூறு குறிப்புகளை மிகவும் கவனத்துடன் படித்த தற்குப் பிறகு, மொகஞ்சதாரோ, இந்தியத் தொல்லியல் துறை வரலாற்றில் மிகவும் சிறப்பானதொரு இடமாகக் கருதப்பட வேண்டியுள்ளது. தொடக்கத்தில் நான்கூட, நடுத்தரைக் கடல் நாட்டு மக்கள் தான் கிழக்கு நோக்கிப் பயணம் செய்து இந்தி யாவில் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று கருதினேன். மொகஞ்சதாரா அளித்துள்ள செய்திகளின்படி, எதிர்த்திசையிலான பயணமாக, அதாவது கிழக்கிலிருந்தே மேற் கிலுள்ள மெசபத்தோமியாவிற்கு மக்கள் சென்று குடியேறியுள் ளனர் என்ற முடிவுக்கு இப்போது நான் வந்துள்ளேன்.

-Rev. Fr. H. Heras, The Journal of Indian Hostory, 1939.

நடுத்தரைக் கடல் நாட்டு மக்களின் முன்னோர்கள் திராவிடர்களே என்றும், அவர்கள் தமிழகத்தினின்றே மேற்கு நோக்கிச் சென் றுள்ளனர் என்பதும் தெளிவாகின்றது.

-V.R. Ramachandra Dikshitar, Origin and Spread of the Tamils, P. 28.

கார்டிங்டனும் *(Cordington) ஊட்டனும் (Huttion), 1931 இந்திய தக்கள் தொகைக் கணக்கெடுப்பில் கண்டுள்ள குகர்கள் (Guhas) என்ற மரபினரைப் பார்த்து, அவர்களின் முன்னோர் மெசபத் தோமியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ளனர் என்று கருத்து தெரிவித்திருந்தனர். ஆனால் தற்போது கிடைத்துள்ள இனங்கள் பற்றிய செய்திகள் (Enthological knowledge), அவர்கள் கருத்துக்கு மாறான முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. சிந்துவெளி மக்கள் இந்தியர்களே என்பதும், தங்களது நாகரிகத்தை மெசபத்தோமியாவிற்கு கொண்டு சென்றார்கள் என்பதும் தெளிவாகின்றது.

-Boron Omar Rolf Ehrenfels, Mother right in India, P. 173.

தென்னிந்தியாவே மாந்தவினத் தோற்றத் தொட்டிலாக (Cradle of human race) விளங்கியது. இங்கு வாழ்ந்திருந்த மக்களே வட இந்தியாவிலும், மெசபத்தோமியாவிலும் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அங்கிருந்து உலகம் முழுவதும் பல்கிப் பரவிச் சென்றனர்.

-Sir. John Evans, Presidential address of the British Association 1897, Published in the Magazine, "Science of Man" (August) 1901.

தமிழரும் மெசபத்தோமியரும்:

மேற்கண்ட ஆய்வாளர்கள் தரும் செய்திகளின்படி தமிழரின் தாயாகம் மெசபத் தோமியாவே என்றும், தமிழரின் தாயகம் தமிழ்நாடே என்றும், குடியேற்றங்கள் மேற்கிலிருந்தே கிழக்குநோக்கி நிகழ்ந்தன என்றும், கிழக்கிலிருந்தே மேற்கு நோக்கி நிகழ்ந்தன என்றும் பல்வேறு கருத்துரைகளும் கொள்கைகளும் அலசப்பட்டன. இக்கருத்துரைகளின்படி, யாரார் எத்திசை நோக்கிச் சென்றனர் என்ற கண்ணோட்டம் ஒருபுறமிருக்க, இவ்விரு நாட்டு மக்களைப் பற்றிய பல்வேறு செய்திகள், இந்த ஆய்வுகள் வழியே வெளிப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் காணப்படும் ஒற்றுமைகளாவன.

மெசபத்தோமியரும் சிந்துவெளித் தமிழர் மற்றும் தமிழகத்துத் தமிழர் ஆகிய இரு இனங்களும் ஓரினத்தின் கிளைகளே என்பது தெளிவுபடுத் தப்பட்டுள்ளது.[23]

இவ்விரு மக்களினத்தின் மொழிகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக உள்ளன.

இம்மக்களின் கடவுளர், சமயம், வழிபாட்டு முறைகள் யாவும் ஒன்று போலுள்ளன.[24]

நாடுகளின் பெயர்கள் மற்றும் ஆறுகள், மலைகள், நகரங்கள், கடல்கள் போன்ற புவியியல் தொடர்பான பெயர்களும் ஒன்றையொன்றுச் சார்ந்துள்ளன.[25]

வாழ்க்கைமுறை, நாகரிகம், கல்வி போன்ற பண்பாட்டுக் கூறுகளிடையே ஒற்றுமைகள் காணப்படுகின்றன.[26]

நகர அமைப்புகள், கட்டிடங்கள்,வீடுகள், நீர்த்திட்டங்கள், அணைகள், பாலங்கள் ஆகியவற்றிற்கான தொழில்நுட்பக் கூறுகள் ஒன்று போலுள் ளன.[27]

மொகஞ்சதாரோ நகரின் வடிவமைப்பைப் போன்றே ஊர் நகரின் வடிவமைப்பும் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[28]

இறந்தவர்களுக்குச் செய்யப்படும் இறுதிச் சடங்குகள், நீத்தாரைப் புதைத்தல், மாரடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுதல் போன்ற நிகழ்வுகள் இவ்விரு மக்களிடையேயும் காணப்பட்டன.[29]

நகர மேலாண்மை, நாட்டின் மேலாண்மை ஆகியவைகளை நெறிப்படுத்தும் சட்டத் தொகுப்புகள் யாவும் ஒன்றையொன்றுத் தழுவியதாகவே காணப்பட்டன.[30]

மன்னராட்சி முறைகள், மன்னன் கடவுளின் பகராள், நல்லாட்சி, மக்கள் நலன் போன்ற ஆட்சி முறைகள், தமிழகத்தில் அறியப்பட்டவை போன்றே, மெசபத்தோமியாவிலும் அறியப்பட்டிருந்தன.[31]

இவ்விரு நாடுகளுக்குமான வணிக நடைமுறைகளில், ஒரே நாணய முறை, அளவுகள், எடைக் கற்கள் ஆகியவை இரண்டு நாடுகளுக்கும் பொதுவானவைகளாக இருந்தன.[32]

எடைக்கற்களில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துகளும் ஒரு மொழியிலேயே செதுக்கப்பட்டிருந்தன.[33]

ஆடைகள்,[34] அணிகலன்கள் என அறியப்படும் பொருட்களின் வடிவமைப்புகளும் (Style and design) ஒன்றையொன்றைத் தழுவியே காணப்பட்டன. சிறப்பாக பொன்னாலான அணிகலன்கள், முத்துக்கள் போன்ற அணிமணிகள் தமிழ்நாட்டினின்றே மெசபத்தோமியாவிற்கு ஏற்றுமதியாயின.[35]

கடல்வழியாகவும், தரைவழியாகவும் பாதுகாப்பான வணிகம், இரு நாடு களுக்குமிடையே அறியப்பட்டிருந்தன.[36]

தொழில் நுட்பக் கலைஞர்களின் பரிமாற்றங்கள் இரு நாடுகளுக்குமிடையே நிகழ்வுற்றன.[37]

தமிழர்களின் தோற்றம், கரியநிறம், கரிய சுருள்மயிர், மயிரை மழித்துக் கொள்ளாமல் இருத்தல் போன்றவை, மெசபத்தோமியாவிலும் அறியப்பட்டன.[38]

இவையுமின்றி, இன்னும் பல்வேறு ஒப்புமைகளை விரிவு படுத்திப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லுமளவுக்கு தமிழர் - மெசபத்தோமியரின் உறவுகள், ஒற்றுமைகள் இருந்தன.

புலம் பெயர்தல்:

ஓரிடத்திலிருந்த மக்கள், அவ்விடத்தில் வாழ்வதற்கான சூழல்கள் இல்லாதபோது அல்லது வாழ்வுரிமை மறுக்கப் படும்போது, கூட்டம் கூட்டமாக வெளியேறுவதைப் புலம் பெயர்தல் என்று கூறுவர்: இனி மேலும் இங்கு வாழ இயலாது என்ற நிலை தோன்றும்போது மட்டுமே புலம் பெயர்தல் நிகழ் வுறும். தொற்றுநோய், வற்கடம், கொடுங்கோலாட்சி, அச்சம் ஆகிய கரணியங்களால் ஏற்படும் புலப்பெயர்வுகள், அவை முடிவுக்கு வந்தபின்பு, விலக்கிக் கொள்ளப் பட்டு, மீண்டும் அவ்விடங்களுக்குத் திரும்புவது குறுங்காலப் பெயர்வுகள் (Temporary) எனப்படும். பணிகள் தொடர்பாகவும், பயணங்கள் தொடர்பாகவும் வெளியே செல்வது, புலப்பெயர்வாகக் கருதப் படமாட்டாது. ஏனெனில் பயணங்கள் தொடர்பாகவும் வெளியேசெல்வது, புலப் பெயர்வாகக் கருதப்படமாட்டாது. ஏனெனில் பணிகள் முடிந்தவுடன் தங்களது இருப்பிடத்துக்கு மீண்டும் அவர்கள் வந்து விடுவர். இக்குறுங்காலப் பெயர்வு (Migration) தனியாகவோ அல்லது ஒருசிலருடன் சேர்ந்தோ மேற்கொள்ளப்படும். பருவகாலப் பறவைகளின் இடமாற்ற மும் இவ்வாறே சொல்லப்படும்.

ஆனால் கூட்டம் கூட்டமாகத் தங்களால் இயன்ற அளவுக்குத் தங்கள் உடைமைகளையும் எடுத்துச் செல்வதும், மீண்டும் அவ்விடத்துக்கு வர இயலாது என்பதை அறிந்தே செல்வதும் புலம் பெயர்தல் (Exodus) எனப்படும். உலக வரலாற்றில் இந்நிகழ்வுகள் பல அறியப்படுகின்றன. அவற்றுள் எகிப்திலிருந்த இசுராயேல் மக்கள் பத்து இலக்கம் பேர் (One Million), கனான், நாட்டுக்கு, 40 ஆண்டு காலம் பயணம் மேற்கொண்டது சிறப்பான தொன்றாகக் கருதப்படுகின் றது.[39] இவர்கள் கடந்துவந்த வழி 700 கி.மீ. தொலைவே என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவிலிருந்து, நடுத்தரைக் கடல் பகுதிக்கு அக்கா லத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கடந்து சென்றனர் என்ற செய்தி வியப்புக்குரிய தொன்று. ஏறக்குறைய 4000 கி.மீ.

தொலைவை கால்நடையாகக் கடந்து செல்வதென்பது பெரு முயற்சியே. சரியான வழித்தடங்கள் அற்ற காடுகள், மலைகள், பாலைவனங்கள், கடுவெப்பம், கடுங்குளிர் ஆகிய இடுக்கண் களை எதிர் கொண்டு இப்பயணங்கள் மேற்கொள்ளப் பட்டன எனும் போது, இதற்கான பின்னணி வலுவானதாக அமைந்திருத்தல் வேண்டும் என்பது மட்டும் தெளிவாகின்றது.

மெசபத்தோமியாவிலிருந்து இந்தியா வரை:

மேற்கித்திய வரலாற்றறிஞர்கள், திராவிடர் எனப்படும் தமிழர்கள், மெசபத்தோமியாவினின்றே இந்தியாவுக்குப் புலம் பெயர்ந்தனர் என்று கூறுவதற்கான அடிப்படைக் கரணியங்கள் எவை பற்றியும் குறிப்பிடவேயில்லை. மெசபத் தோமிய வரலாற்றைப் பார்க்கின்ற போது, மக்கள் கூட்டமாக (enmass)ப் பெயர்ந்து செல்வதற்கானச் சூழல்கள் எவையும் அவ்வரலாற் றில் தென்படவில்லை. மெசபத் தோமிய மக்கள் தங்களுடைய நாட்டிற்கு மேற்காகவும், வடமேற்காகவும், வடக்காகவும் புலம்பெயர்ந்து சென்றனர் என்ற குறிப்பும் கூட விவிலியத்தின் தொடக்க அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ளனவேயன்றி, வரலாற்றில் அவ்வாறான செய்திகள் இல்லை.

மெசபத்தோமியாவுக்கும் சிந்துவெளிக்கும் இடைப்பட்ட 3000 கி.மீ. தொலைவை அம்மக்கள் கடந்துவந்து சிந்துவெளி யில் குடியேறியதாகச் சொல்லப்படும் நிகழ்வுக்கு எந்த அடிப் படைக் கரணியமும் தெரிவிக்கப்படவில்லையாதலால், இக் கருத்தை மறுக்கும் ஆய்வாளர்களின் கருத்தில் உண்மையிருப் பதாகக் கருத வேண்டியுள்ளது. அவ்வாறு சிந்துவெளியில் வாழ்ந்திருந்த மெசபத்தோமிய திராவிடர்களை, ஆரியர்கள் படையெடுத்து வந்து,போரில் திராவிடர்களை வென்று, தென் னிந்தியப் பக்கம் துரத்திவிட்டனர் என்ற கூற்றுக்கும் அடிப் படை ஏதுமில்லை. ஏனெனில் ஆரியர்கள் போர்ப்படை வைத் திருந்ததாகவோ, போரிட்டதாகவோ, இந்திய வரலாற்றில் எந்தச் செய்தியுமில்லை. மேலும் ஆரியர்கள் இயற்றியதாகச் சொல்லப்படும் வேதங்களில் கூட, ஆரியர்கள் போரிட்டுவென் றதைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. ஆரியர்கள், தங்கள் பகைவர்களை வீழ்த்த வழிதெரியாமல் இந்திரன், வாயு, சோமன், அக்கினி, அசுவினி போன்றவர்களை நாடி, அவர் களிடம் உதவிகள் கேட்டுக் கெஞ்சியதாகவே இரிக்கு வேதம் சொல்கிறது. ஆரியர்கள் போரிட்டு வென்றனர் என்பது

வரலாற்றுப் புரட்டு மட்டுமல்லாமல், தெரிந்தே திணிக்கப் பட்ட பொய்ச் செய்திகளாகும்.

திராவிடர்களைப் பற்றிய இரண்டு செய்திகளுமே, சான்றுகள் இல்லாதவை என்பதோடு, மெசபத்தோமியர் - திராவிடரிடையே காணப்பட்ட ஒற்றுமைக் கூறுகளை அடிப் படையாகக் கொண்டு ஊகங்களின் அடிப்படையில் சொல் லப்பட்டவைகளே மெசபத்தோமியரின் இந்திய வருகை என்பதை அறியலாம். கடந்த நூற்றாண்டுகளில் இச் செய்தி களை அறிவித்த ஆய்வாளர்களுக்குப் பிறகு அதற்கான மறுப் புகள் வெளிவந்த நிலையில், தொடர்ந்து, மெசபத்தோமியரின் இந்திய வருகையைத் தாங்கிப் பிடிக்க எந்த வரலாற்றாய் வாளர்களும் முன்வரவில்லை.

ஆனால், தமிழர்கள் ஏன் மேற்கு நோக்கிப் புலம் பெயர்ந் தனர் என்று கூறுவதற்கானக் கரணியங்கள் பல உள்ளன. அவை இலக்கியங்கள் வாயிலாகவும், உலகின் பல சமய இலக்கியங்கள் வாயிலாகவும், ஆய்வாளர்கள் தரும் தகவல்களாலும், வரலாற்று நிகழ்வுகளாலும், உறுதி செய்யப்பட்டுள்ளன. மெசபத்தோ மியாவில் கண்டெடுக்கப்பட்ட இலக்கியங்களே, இந்திய மக்கள் தாம் மெசபத்தோமியாவில் குடியேறிய மக்கள் என்ற தகவலை யும் தந்துள்ளன. இச்செய்திகளைச் சரியாகப் புரிந்து கொள் ளாத மேலைநாட்டு ஆய்வாளர்கள், பல தவறான முடிவுகளை அறிவித்து விட்டனர்.

இந்தியாவிலிருந்து மெசபத்தோமியாவுக்கு:

இன்று உலக வரைபடத்தில் காணப்படும் நிலப்பகுதிகள் கி.மு. 18000 ஆண்டுகளில் இல்லையென்பது புவியியலாரின் கருத்தாகும். பனி உருகல் காலத்துக்கு முன்பாக, ஸ்பெயின் தொடங்கி, காஸ்பியன் கடலை உள்ளடக்கிய நீர்வழி யொன்று இமய மலைவழியே சீனக் கடல் வரை நீண்டிருந்ததாகப் புவியி யலார் கருதுகின்றனர். இந்நீர் வழிக்குக் கீழே அல்லது தெற்கே யிருந்த நிலப்பகுதிகளான மெசபத்தோமியா, அரேபியா, பாரசீகம், தென்னிந்தியா ஆகிய பகுதிகள் யாவும் இலெமூரியா என்ற பெருங்கண்டத்தின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதி களாயிருந்தன. மெசபத்தோமியா, அரேபியா, பாலத்தீனம், எகிப்து உள்ளிட்ட நாடுகள் உலகைப் பெருவெள்ளம் சூழ்ந்த போது, அழியாமல் தப்பித்தன. கரணியம் யாதெனில் அவை

மேட்டு நிலங்களாயிருந்தன. தமிழ் இலக்கியங்கள் கூறும் ஏழு பின் பாலை நாடென்பது, மேற்கண்ட பகுதிகளே. எனவே, பனி உருகல் காலத்துக்கு முன்பே, மெசபத்தோமியா, அரேபியா; பாலத்தீனம் ஆகிய பகுதிகளில் மக்கள் வாழ்ந்திருந்தனர். அவர்கள் குமரிக்கண்டத்துத் தமிழ்மக்களே.

இமயமலை அக்காலத்தில் கடலாயிருந்ததென்பர். வங்க அரபிக் கடல்களும் அக்காலத்தில் இல்லை. அவை குமரிக் கண்டத்தின் நிலப்பகுதிகளாக இருந்தன. இந்தியப் பேராழி நிலை கொண்டுள்ள இடத்தில் அப்பெரு நிலப்பரப்பு அமைந் திருந்தது. பாலத்தீனத்தின் கார் மலைப் பகுதியில் (Mount Carmel) கி.மு. 75000 ஆண்டுகளில் மக்கள் வாழ்ந்திருந்ததற் கானச் சான்றுகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.[40] கார்மலைப் பகுதியென்பது, ஏறக்குறைய மெசபத்தோமியா வின் தென்பகுதியாகும். ஏற்கனவே கடலாயிருந்த காஸ்பியன் கடல், நான்குபுறமும் நிலத்தால் சூழப்பெற்றதால், அது நீரோட்டமில்லாத பெரும் ஏரியாயிற்று. அதன் வழியில் அதன் உப்புத்தன்மை மிகுந்து, குடிப்பதற்குத் தகுதியில்லாத கசப்பு நீராயிற்று. காஸ்பியன் என்ற சொல்லே, கசப்பு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும்.

காஸ்பியன் கடலுக்கு நேர் மேற்கே, வீராணம் போன்ற தொரு பெரிய ஏரி உள்ளது. அந்த ஏரியின் ஆழம் மிகுதியா யிருந்ததால், வெள்ளப்பாழ் காலத்தில் கடல் நீரோட்டத்தினின் றும் துண்டிக்கப்பட்டு, ஏரியாயிற்று. ஏரிக்கு அயம் என்ற சொல் தமிழில் உண்டு. காஸ்பியன் கடலைப் போல் அல்லாமல், நன்னீராக ஊற்றுகள் பல கொண்டிருந்ததால், அந்த ஏரி ஊறும் அயம் எனப்பட்டு, இன்று ஊர்மியா (Urmea) எனத் திரிந் துள்ளது.

கி.மு. 18000 - 12000 ஆண்டுகளில் பன்முறை கடல் கோள்கள் நிகழ்வுற்றதாகப் புவியியலார் கருதுகின்றனர். இக்கடல்கோள் கள் ஏற்பட்ட ஒவ்வொரு முறையும், குமரிக்கண்டத்தின் எல்லைகள் சுருங்கிக் கொண்டே வந்தன. இதனால் எந்நேர மும் தமது வாழிடங்கள் அழிந்துபோகலாம் என அச்சமுற்ற பலர், மேட்டு நிலம் கண்டவிடுத்து குடிபெயர்வாராயினர். இக்குடியேற்றங்கள் பற்றிய செய்திகள் பலவும் மேலை இலக்கி யங்களில் காணப்படுகின்றன.

மெசபத்தோமியா என்ற சொல்லுக்கே மேட்டு நிலம் என்பதே பொரு ளாகும்.[41] எனவே, எக்காலத்தும் வெள்ளத் தீண்டாத மேட்டுநிலமாகிய மெசபத்தோமியாவில் மக்கள் குடியேறியதில் வியப்பொன்றுமில்லை. ஏற்கனவே அங்கு வாழ்ந் திருந்த மக்களோடு, குடியேற்ற மக்களும் இணைந்ததால், அப்பகுதிகளில் மக்கள் நெருக்கம் தோன்றியது.

மெசபத்தோமியாவில் மக்கள் குடியேற்றங்கள் தோன்ற அடிப்படைக் கரணியமாய் அமைந்த வெள்ளப் பாழ்பற்றிய செய்திகளை, ஏறக்குறைய உலகின் எல்லாச் சமய நூல்களுமே எடுத்துரைக்கின்றன. இச் செய்திகள் அனைத்தும், குடியேற்ற மக்களின் மரபினரால் சொல்லப்பட்டவைகளே எனலாம். தமிழ் இலக்கியங்களும், இச்செய்திகளை வெளியிட்டுள்ளன.

இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரனார் உரைத்த விளக்கவுரை மற்றும் சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள்.[42]

மெசபத்தோமிய இலக்கியங்கள் கூறும் செய்திகள் பல்வேறு தொன்மக் கதைகளாக அறியப்பட்டுள்ளன.[43]

சுமேரிய இலக்கியங்கள் தரும் தகவல்கள்.[44]

மெசபத்தோமிய - சுமேரியக் கதைகளை யொட்டி, விவிலியம் கூறும் செய்திகள்.[45]

எகிப்தியத் தகவல்கள்.[46]

கிரேக்கக் கதைகள்.[47]

உரோமக் கதைகள்.[48]

அவாய்த் தீவில் அறியப்படும் கதைகள்.[49]

செல்டியக் கதைகள்[50]

மகாபாரதம் கூறும் மனு பற்றிய கதை.[51]

மேற்கண்ட பல்வேறு நாடுகளின் கதைகள் வெள்ளப் பாழ்பற்றி விரிவான விளக்கங்களைக் கொடுத்துள்ளன. இக் கதைகளின் கரு ஒன்று போலுள்ளதைக் காணமுடிகின்றது. இக்கதைகள் யாவும் சமய நோக்கில் சொல்லப்பட்டுள்ளதால், அறிவியல் சிந்தனைகள் குறைந்து, நம்பிக்கைகளின் வெளிப் பாடுகளாக அவை அமைந்துள்ளன. இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பேரழிவை, கடவுள் மேல் ஏற்றி, ஒழுக்கக் கேடா

யிருந்த இவ்வுலகை, கடவுள் வெள்ளத்தால் அழித்தார் என்ற மையக் கருவை அவை கொண்டுள்ளன. இக்கதைகள் கூறும் செய்திகளாவன:.

இவ்வுலகின் மக்கள், தங்களைப் படைத்த கடவுளை மறந்துபோயினர். தீய ஒழுக்கங்களால் இவ்வுலகம் கறைபட்டுப் போயிருந்தது. கடவுளின் கடுஞ்சினத்துக்கு ஆட்பட்ட மக்களை, கடவுள் அழிக்க நினைத்தார்.ஆனாலும், அம்மக்களில் ஒருவன் கடவுளின் அன்புக்குரியவனாகவும், ஒழுக்கம் மிகுந்திருந்தவனாகவும் காணப்பட்டான். அவனைக் கடவுள் அழைத்து, உலகை வெள்ளத்தால் அழிக்கப் போகும் செய்தியை முன் கூட்டியே அறிவிக்கின்றார். வெள்ளத்தினின்று அவனைக் காத்தருள எண்ணி, பெரிய மரக்கலம் ஒன்றைக் கட்டிக் கொள்ளுமாறு பணித்தார். மரக்கலப் பணிகள் முடிந்ததும், கடவுள் வெள்ளப் பெருக்கினை உண்டாக்கினார். இதனால் உலக மக்கள் அனைவரும் மாண்டு போயினர். பல நாட்கள் தொடர்ந்து பெருகிய வெள்ளம், கடவுளின் ஆணையால் கட்டுப்பட்டது. மரக்கலம் மலையொன்றில் தரை தட்டியது. மரக்கலத்தினின்றும் வெளியேறிய மாந்தனும் அவனது மனைவி மக்களும், நண்பர்களும் கடவுளுக்கு நன்றி செலுத்தினர். இனியொரு காலத்திலும் வெள்ளத்தால் மக்களை அழிக்கப் போவதில்லையென கடவுள் மாந்தனுக்கு வாக்குறுதி அளித்தார். பின் மாந்த இனம் கடவுள் தொடக்கத்தில் படைத்ததற்குப் பிறகு இரண்டாம் முறையாகப் பல்கிப் பெருகியது. கடவுள் - மாந்தனிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி, வானவில்லையே சான்றாகக் கடவுள் படைத்துக் காட்டினார்.

மேற்கண்ட செய்திகள் தாம் சிற்சில மாற்றங்களுடன் பன்னாட்டுக் கதை களில் காணப்படுகின்றன. இக்கதைகளில் வரும் கடவுளரின் பெயர்கள் மாறுபட் டுள்ளன. காக்கப்பட்ட மாந்தனின் பெயரும் மாறுபட்டுள்ளது. மரக்கலத்தின் அளவுகள் வெவ்வேறு வகைகளில் உள்ளன. வெள்ளக்காலம் கூடிக் குறைந்து காணப்படுகின்றது.

பன்னாட்டு வெள்ளக் கதைகளை ஆய்வு செய்யும் போது,
தமிழ்நாட்டுச் சூழல்களே அக்கதைகளில் காணப்படு கின்றன.[52]
பன்னாட்டுக் கடவுளரின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.[53]
வெள்ளத்தினின்றும் காக்கப்பட்டவனின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.[54]

மரக்கலத்தைக் குறிக்கும் சொற்களும் தமிழ்ச்சொற்களாக உள்ளன.[55]

மரக்கலத்தை உருவாக்கிய தொழில் நுட்பத் திறனும் தமிழர்களுடைய தாகவே காணப்படுகின்றது.[56]

காக்கப்பட்டவனின் மக்கள் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாக உள்ளன.[57]

மரக்கலம் இறங்கியதாகச் சொல்லப்படும் இடங்களின் பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன.[58]

வெள்ளம் வடிந்துவிட்டதா எனக் கண்டறிய பறவைகளை வெளியே அனுப்பிப் பார்க்கும் உத்தியும் தமிழர்களுடையதாக அறியப்படு கின்றது.[59]

வெள்ளத்தால் மாண்டுபோன மக்களுக்கு, அவர்கள் மரபினர் நினைவுநாள் கடைப்பிடித்த செய்திகள் வெளிப்படுகின்றன.[60]

வெள்ளத்தோடு தொடர்புடைய சில தமிழ்ச் சொற்கள், புதிய இடங்களுக்குப் பெயர்களாக அமைந்துள்ளன.[61]

மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில், வெள்ளப் பாழ், தமிழர் வாழ்ந்திருந்த நாட்டை அழித்தது என்பது தெளி வாகின்றது. உலக மக்களில் தமிழர்களே பெரிதும் மாண்டு போனவர்களாகக் கருதப்படுகின்றனர். வெள்ளத்தினின்றும் தனி யொருவனும் அவனது இல்லத்தாரும் நண்பர்களும் காக் கப்பட்டதாகச் செய்திகள் கூறி நிற்பது, சமய நோக்கில் இந் நிகழ்வு பார்க்கப்பட்டது என்பதையே அறிவிக் கின்றது. வெள்ளக் காலத்தில், பலரும் தப்பிப்பிழைத்து வெளியேறினர் என்ற கருத்தும் ஏற்புடையதே. இவ்வாறு பெருங்கூட்டம் அல்லது குழுக்கள், தமிழ்த் தாயகத்தைவிட்டு வெளியேறினர் என்ற கருத்துக்கு வலுவுள்ளது. எனவே, வெள்ளத் தால் எவ் வகையிலும் பாதிக்கப்படாத மெசபத்தோமிய மக்கள், கிழக்கு நோக்கிக் குடிபெயர்ந்தனர் என்ற கருத்து, ஏற்புடையதாக இல்லை. ஆனால், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மக்கள் குடிபெயர்ந்தனர் என்ற கொள்கைக்கான அடிப்படையான கரணியங்கள் தென்படுகின்றன.

மேலும், கிழக்குத் திசையிலிருந்துதான் மக்கள் சின்னாற் றாங்கரைக்கு (the land of simar)க் குடிபெயர்ந்தார் என்று, விவிலியம் தெளிவாகக் கூறுவதை நோக்குக.[62] தற்காலத்திய ஆரியக்கொள்கைச் சார்புடைய சில வரலாற்றாசிரியர் கள், ஆரியர்களைப் போலவே தமிழர்களும் இந்திய நாட்டின் வந்தேறிகளே என்றும், அவர்கள் இந்திய நாட்டின் தொன்மக் குடிகள் அல்லர் என்றும் வெளிப்படுத்துவது உண்மைக்குப்

புறம்பான செய்திகளாகும். குமரிக்கண்டமே தமிழர்களின் தாயகம் என்பதும், அந்நிலப்பரப்பின் வடபகுதியாகவே இன்றைய தமிழகம் இருந்ததென் பதும், கடல்கோள்களினால் குமரிக் கண்டம் அழிவுற்றபோது, இன்றைய தமிழகப் பகுதி, தமிழ்நாடு - ஈழம் எனத் துண்டிக்கப்பட்டது என்பதும், ஈழநாடு தமிழ்நாட்டின் ஒரு பகுதியே என்பதும், அங்கு தமிழர்கள் குடியேறவில்லை. என்பதும், மாறாக இயற்கையின் பேரழிவு, தமிழ்நாட்டைத் துண்டித்துவிட்டது என்பதும் அறியக்கிடக்கின்றன. எனவே ஈழத்தில் வாழும் தமிழர், அந் நாட்டின் தொன்மக் குடியினரே என்க.

2. செமிட்டிக் மொழியினம் – திராவிட மொழியினம்

ஞாலத்தின் மொழிகள் பற்றிய பகுப்பு முறைகள், பல்வேறு மொழியியல் அறிஞர்களால், கடந்த முந்நூறு ஆண்டுகளில் அலசி ஆராயப்பட்டு வகுக்கப்பட்டுள்ளன. அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புகளையும், மாறுபாடுகளையும் கொண்டவைகளாகும். ஒவ்வொரு மொழியறிஞரும் தத்தம் பார்வையில் ஒரு கொள்கையைப் புகுத்தி, அதனையே சரியென்று வாதிடுகின்றனர். இவர் தம் கொள்கையில் மாறுபடுவோர் மறுப்புக் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர். ஞாலத்தின் மொழிகள் பற்றிய கொள்கைகள் இதுவரையிலும் கூட அறுதியிட்டுத் தெளிவாக்கப்படவில்லை என்பதே உண்மை நிலையாகும். பல்வேறு மொழியியலார் தரும் பட்டியல்களும் விளக்கங்களும் குழப்பங்களையே உண்டு பண்ணக்கூடிய வைகளாக உள்ளன. குறிப்பிட்ட இரு மொழிகளுக்கிடையே எவ்வகையான தொடர்புகளும் இல்லையென்று ஒரு கொள்கை கூற, ஏராளமான தொடர்புகள் உள்ளனவென்று அதனை மறுக்கும் கொள்கை கூறுகிறது. இந்த நிலை இன்றும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. கடந்த காலங்களில் மொழியியலார் கூறிய கொள்கைகளையெல்லாம் முடிந்த முடிவுகள் என ஏற்றுக் கொண்டுவிட்டால், மொழிகள் பற்றிய புதிய சிந்தனைகள் தோன்றவும் தொடரவும் வாய்ப்புகள் இல்லா மற் போகும். மொழிகளைப் பொருத்தவரை வளரும் ஆய்வுக ளே உண்மை நிலை களை வெளிக் கொணர வழிகளை வகுக்கும்.

மொழியினம்: ஞாலத்தில் பேசப்பட்ட, இன்றும் பேசப்படுகின்ற மொழி களை, ஒரு தலைப்பின் கீழ் கொண்டு வந்துள்ளனர். அக்கிளை மொழிகள் (daughter languages) பல ஒரு தாயிடமிருந்து (Parent Languages) பிறந்ததாகக் கருதி, அம்மொழிகள் அனைத்தையும் ஓரின மொழியாக (Family of languages) வகுத்துள்ளனர். இவ்வாறு வகுக்கப்பட்ட மொழி

யினங்கள் (Family tree) பல்வேறு அறிஞர்களால் அடையாளங் காணப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, கடந்த நூற்றாண்டில் அறியப்பட்ட மொழியினங்கள்!

இந்திய - ஐரோப்பிய மொழியினம் (Indo - European Languages) *2000* மில்லியன் மக்கள் இம்மொழியினத்தில் அடங்குவர்.

சீன - திபேத்திய மொழியினம் (Sino - Tibetan Languages) *1000* மில்லியன் மக்கள்.

நைசர் - காங்கோ மொழியினம் (Niger- Congo Languages). *260* மில்லியன் மக்கள்.

ஆசுத்திரேலிய - ஆசிய மொழியினம் (Austronesian Language) *200* மில்லியன் மக்கள்.

ஆப்பிரிக்க -ஆசிய மொழியினம் (Afro - Asiatic Languages). *230* மில்லியன் மக்கள்.

இவையன்றி, ஆப்பிரிக்க மொழியினம் (African), ஆசுத்திரேலிய மொழியினம் (Austrialian), அசுதெக்- தனோவன் மொழியினம் (Aztec- Tanoan), திராவிட மொழியினம் (Dravidian), ஓகன் மொழியினம் (Hokan), இந்திய - பசிபிக் மொழியினம் (Indo -Pacifc) ஊராலிய மொழியினம் (Uralic) என விரியும்.

ஒப்பீட்டுக் கொள்கை[2]:

ஒரு கண்டத்தில் பல நாடுகள் இருந்த போதும், அவற்றில் ஒரு சில நாடுகளே பொருளியல் கூறுகளாலும், தொழில் வளத்தாலும், சிறந்த ஆட்சிமுறைகளாலும், வணிக ஈடுபாடுகளாலும் முன்னேற்றங்களைப் பெற்றன. மற்ற நாடுகள் அந்த அளவில் முன்னேற்றம் காணவில்லை என்பதை, வளர்ந்த ஒரு நாட்டின் சம கால அளவில் ஒப்பிட்டுக் கூறுவதை, வரலாற்று ஒப்புமை (Comparative History) என்பர். அதனைப் போல, பல்வேறு மொழிகள், ஒரே கால அளவில், உயர்ந்தும் உயராமலும் இருந்த நிலைகளைக் கண்டறிய மொழிகளை ஒப்புமைப் படுத்திக் (Comparative Linguistics) கண்டறிந்தனர். எடுத்துக் காட்டாக, கடந்த 19ஆம் நூற்றாண்டில், மொழிகள் பற்றிய சிந்தனைகள் வளர்ந்து, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொழிகளிடையே காணப்படும் ஒலிகள் (Sounds), இலக்கண அமைவுகள் (Grammatical Features), சொற்கள் (Words), வாக்கிய அமைப்புகள் (Sentence Formations) ஆகியன பற்றிய ஆய்வுகளில், குறிப்பிட்ட இன மொழிகளுக்கிடையே காணப்பட்ட ஒற்றுமைகள் அறியப்பட்டன.

இந்த வகையில், கிரேக்கம் -இலத்தீன் -செர்மானியம் போன்ற மொழிகளிடையே காணப்பட்ட உறவுகள், ஆய்வுகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. தென்னிந்தியாவில் தமிழ்மொழிக்கும் மற்றைய தீவக்குறை மொழிகளுக்கும் இடையே காணப்பட்ட உறவுகள் அறியப்பட்டன.[3] இந்திய - ஐரோப்பிய மொழிகள் இலத்தீனுக்கும் ஆங்கிலத்துக்கும் உள்ள உறவுகள் பற்றிய ஆய்வுகள் வெளியிடப்பட்டன. எடுத்துக் காட்டாக, Pater என்ற இலத்தீன் சொல், Father என்று ஆங்கிலத்திலும், Piscis என்பது Fish என்றும் மாறுபடுவதை விளக்கினர்.

தமிழினின்றும் கிளைத்த தென்னிந்திய மொழிகளை, திராவிட மொழிகள் என்று குறித்தனர்.

> கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
>
> – பேரா. சுந்தரம்பிள்ளை **(1891)**

எ.கா. ஒன்று (தமிழ்)- ஒன்னு (மலையாளம்) - ஹன்னு (கன்னடம்) - ஒகட்டி (தெலுங்கு) - ஒஞ்சி (துளு).

மொழிக் கொள்கைகள்:

மொழிகள் பற்றிய கொள்கைகள் பலவாக இருந் தாலும், சில கொள்கைகளை ஆய்வாளர்கள் ஆய்வுகளுக்கென ஏற்றுக் கொண்டுள்ளனர். மொழிகள் பற்றிய ஆய்வுகள் கடந்த 18 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே மேற் கொள்ளப்பட்டதால், பழைய மொழி கூறுகளுக்கும் புதிய பெயர்களைச் சூட்டியுள்ளனர்.

ஒரு கொள்கை, துரானிய- ஆரிய செமிட்டிக் (Turanian - Aryan - Senitic) மொழியினங்களை முதன்மையாகக் கொண்டு வகுக்கப் பட்டது.

செமிட்டிக் - ஆமெட்டிக் - இந்திய ஐரோப்பியம் (Semitic- Hametic - Indo - European) என்ற மொழியினங்களும், மேற்கித்திய மொழி யியலாரால் ஆய்வு செய்யப் பட்டன.

துரானியம் (Turanian): நடு ஆசியப் பகுதிகளில் (Entral Asia) பேசப் பட்ட மொழி களைத் துரானிய இனம் என்ற தலைப்பில் ஆய்வாளர்கள் வகுத்தனர். இவை வடக்குத் துரானியம்,தெற்குத் துரானியம் எனவும் பிரிக்கப்பட்டன.

தாங்குசிக் (Tangusic), மங்கோலியம் (Mangolic), துருக்கி (Turkic), சமோயிடிக் (Samoyedic), பின்னியம் (Finnic) என்பன வடக்குத் துரானிய மொழிகளாகும்.

தாயிக் (Taic), மலாய் (Malay), கங்கைவெளி (Gangetic), முண்டு (Mundan), திராவிடம் (Dravidian) என்பன தெற்குத் துரானிய மொழிகளாகும். தாயிக் மொழியை அல்-தாயிக் (Al`-taic) என்றும் கூறுவர்.

தூரான் (Turan) என்பது, பாரசீகச் சொல்லாகும்.[4] இச்சொல் லுக்கு, ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அப்பால் உள்ள பகுதி என்று பொருளாகும். (The region beyond the oxus). தூர் என்ற சமற் கிருதச் சொல்லுக்குத் தொலைவு (Distance) என்பதே பொரு ளாகும்.

தூரம், தொலைவு ஆகிய இரண்டும் ஒரு பொருள் குறித்த இரண்டு சொற்களே. தொலைதூரக் கல்வி (Distance Education) என்று குறிப்பிடுவது தவறான சொல்லாட்சியாகும்.

தூ என்ற தமிழ்ச் சொல்லுக்கு நீட்சி, விரிவு, தொலைவு என்று பொருள் உணரப்படும்.[5] தொலைவில் உள்ள இடம் அல்லது ஊர், தூ + ஊர் எனப்படும். தூ வூர் என்பதே, தூர் என்று சமற்கிருதத்தில் திரிந்தது. தூவூர் = தூர் எனத் தமிழில் சுருங்கிற்று.

தள் என்ற வேர்ச்சொல், தள்- துள் - துல் - தொல் - தொலை- தொலைவு என நீண்டது.

தூ என்பதிலிருந்து தூர் என்ற சொல்லும், தள் என்பதி லிருந்து தொலைவு என்ற சொல்லும் நீண்டன. எனவே, தூரான் - தூரன் என்பது தமிழ்ச் திரிபுச் சொல்லே. இந்திய எல்லையிலிருந்து தொலைவிலிருந்த பகுதியைக் குறிக்க, தூரன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

துரானிய இனத்தில் காணப்படும் மொழிகளின் மூலம், தமிழி லேயே அறியப் படுகின்றன.

தாங்குசிக்: தாங்கு (Tang) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, பிடிப்பு (holding) என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது. கைப்பிடி (Anything is held firmly in the handle) என்றும் பொருள் அறியப்படுகின்றது.[6] துரானிய மொழியினங்களோடு கொண்ட பிடிப்பு அல்லது தொடர்பைக் கொண்டு, இச்சொல் வழங்கப் பட்டிருக்க வேண்டும்.

மங்கோல்: மண்கோல் என்ற தமிழ்ச்சொல்லே, மங்கோ- மங்கோ லியம் எனத்திரிந்தது.

மண் என்பது தரை அல்லது நிலம் என்றும் பொருள்படும். கோல் = உயர்வு அல்லது உயர்ந்த[7]

உயர்ந்த மலைப் பகுதிகளைக் கொண்ட நாடு மண்கோலியம் எனப்பட்டது.

துருக்கி: ஐரோப்பிய நிலப்பகுதியை நோக்கித் துருத்திக் கொண் டிருக்கும் நாடு. துருத்தி[8] (Projection) என்ற தமிழ்ச்சொல்லே, துருக்கி எனத்திரிந்தது.

பின்னியம்: பின் என்பதற்கு முடிவு, கடை என்ற பொருளுண்டு. ஐரோப்பி யாவின் கடைப்பகுதி பின் நாடு எனப்பட்டது.

அல்-தாய்(யிக்), மலையா,திராவிடம் போன்றவைகளும் தமிழ் மூலத்திரிபுச் சொற்களே.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, கூர்க் ஆகியவை செம்மையுற்ற மொழிகளாகவும்,

துடா, கோட்டு, கோண்டு, பிராகி, இராஜ்கமல் ஆகியவை செம்மையுறாத மொழிகளாகவும், திராவிட இனத்தில் அறியப் படுகின்றன.

ஆரிய மொழிகள்: ஆரிய மொழியினம், ஐரோப்பிய (மேற்கு) மற்றும் ஆசிய (கிழக்கு) மொழிகளாக அறியப்படும். கீழ்ச் செர்மானியம், ஸ்காண்டிநேவியன், கொதிக், பிரசியன், டச்சு, பிளமி , மற்றும் ஆங்கிலோ சாக்சன் உள்ளிட்ட இன்றைய ஐரோப்பிய மொழி கள் (பாஸ்க் மொழி நீங்கலாக) மேலை ஆரியம் எனப்படும்.

ஈரானியன், பஃலவி, சமற்கிருதம், இந்தி, உருது போன்றவை கீழை ஆரியத்தில் அடங்கும்.

மேற்கண்ட மொழியினப்பாகுபாடுகள் சரியான ஆய்வு களின் வெளிப்பாடுகளா வென்பது கேள்விக்குறியே. ஆரியம் என்ற சொல், பிற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சொல்லா யிருந்தாலும், கிறித்துப் பிறப்பாண்டுகளில், ஆரியம் என்ற சொல், தமிழ்நாட்டில் வழக்கிலிருந்ததை அறியலாம்.[9] ஆரியன் என்ற சொல், சமற்கிருதத்திலிருந்து எடுக்கப்பட்டதாக மேலை நாட்டு கலைக்களஞ்சியங்களும் (Arkhi) என்ற கிரேக்கச் சொல் லுக்கு, தலைவன் (Chief) என்று பொருள் கூறப்பட்டுள்ளது.[10]

Arch[11]: Denoting a ruler or leader.Arch = Greek Origin
Archos =Ruling: Archeion = to rule.
Archea[12] : Origin from Greek Arkhaios =An (Tamil) Ancient.
Arch -angle:[13] Achangelum (Latin) An angel of high rank.
Arch -Bisho[14]: Cheif Bishop responsible for a large distict.
Arch -Duke[15] : Chief Duke, in particular the son of the Emporer of Austria.

ஆர் என்ற தமிழ் வேர்ச்சொல், உயர்ந்த மற்றும் மேன்மை யான என்ற பொருளைத் தரும் சொற்களாகத் தமிழில் அறியப் படும்.[16] விரிவு மற்றும் நீளம் என்று கருதப்படும்.

ஆர் - ஆரம் = விலையுயர்ந்த முத்து.[17]

ஆரல்: விண்ணில் உயர்ந்த இடத்தில் காணப்படும் மீன் (கார்த்தீக் கூட்டம்).[18]

ஒளி,நெருப்பு, வெப்பம்.

ஆரம் : ஒலி, மிகுந்த ஒலி. ஆரம் +ஆரம் என இரட்டித்துச் சொல்லப்பட்டு, அது ஆரவாரம் எனப்பட்டது.[19]

ஆர் - ஆராய் : உயர்ந்த பொருளைப் பற்றிய ஆய்வு, ஆராய்ச்சி.

ஆரால் : நீளமான மீன்.[20]

ஆர் -ஆரி : மேன்மை, உயர்வு[21] (Excellence / Eminence).

ஆரியம் : மேன்மையான செல்வம்[22] (Wealth or Treasure).

ஆரியம் :அழகு, செம்மை.

ஆரியன்: அறிவுடையோன், புலவன், மேலானவன் (Superior), கதிரவன் என விரியும்.

மேன்மையான இத்தமிழ்ச் சொல், ஆரியரின் செம்மையான தோலைக் கருதி, அவர்களைக் குறித்ததேயன்றி, ஆரியர்கள் தலைவர்கள் என்றோ, உயர்ந்தவ ர்கள் என்றோ கருதப் பட்டு சூட்டப் பெறவில்லை.

சமற்கிருத மொழியின் ஆரியா (Arya)[23], கிரேக்க இலத்தீன் மொழிகளின் ஆர்க் (Arch) போன்ற சொற்களின் வேர், ஆர் என்றவாறு தமிழில் அறியப்படும்.

பொதுவாக தமிழர் கருமை நிறமுடையவர்கள். இந்நிறம் அவர்கள் வாழ்கின்ற வெப்பம் முதலிய புவியியல் கூறுகளால் தோன்றியதே. கி.மு. 10000 ஆண்டுகளில், தமிழர் சிந்துவெளியில், குடியேறி வாழத் தலைப்பட்டனர். அப்பகுதிகளில் பல குளிரும், சில பனிப்பொழிவுகளும் கொண்ட பகுதிகளாகும். பல்லாயிரம் ஆண்டுகள் தலைமுறைகளில் அங்கு வாழ்ந்திருந்த தமிழரும் தங்கள் கருமை நிறத்தை இழந்து வெளுப்பாராயினர். இவ்வாரான வடக்கித்திய தமிழரை, அவர்களது செம்மை நிறம் கருதி, ஆரியர் என்றே தமிழகத்துத் தமிழர்கள் அழைக்கலாயினர். காலப்போக்கில் ஆரியரும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த காலத்தில், அவரையும் ஆரியர் என்றே அழைத்தனர். எனவே, ஆரியர் என்பது ஒரு குறிப்பிட்ட இனத்தாரைக் குறிக்காமல், வடஇந்தியாவில் வாழ்ந்திருந்த அனைவரையும் குறித்த சொல்லாயிற்று. ஆரியர்கள் படைகள் கொண்டு நாட்டை ஆண்டதாக வரலாறு கூறவில்லை. மன்னர்

களை அண்டி வாழ்ந்ததாகவே செய்திகள் கூறுகின்றன. ஆனால் தமிழ் இலக்கியங்கள், வடக்கிந்திய மன்னர்களையும் ஆரியர்கள் என்றே கூறுகின்றன.

"ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்"[24]

என்ற பெயர், வடக்கிந்திய மன்னர்களை வென்றதின் அடிப் படையில் சொல்லப் பட்டதேயன்றி ஆரியப் பிராமணர் களைச் சுட்டிய சொல் அன்று.

"பேரிசை மரபின் ஆரியர் வணக்கி"

"ஆரியர் அலறத் தாக்கி.... அகநானூறு[26]

எனவே, ஆரியர் என்ற சொல்லை, தமிழர்களே பயன்படுத்தி வந்துள்ளனர் என அறியலாம்.

செமிட்டிக் மொழியினம்:

திராவிடம் என்ற சொல், எந்தவொரு குறிப்பிட்ட மொழி யையும் குறிக்கவில்லை என்பது போல், செமிட்டிக் என்ற சொல்லும் குறிப்பிட்ட ஒரு மொழியைக் குறித்துச் சொல்லப் படவில்லை. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூலில் (Old Testament) சொல்லப்பட்டுள்ள செய்தியின் அடிப்படையில்,[27] மேற்கித்திய ஆய்வாளர்கள், செமிட்டிக் (Semitic) என்ற சொல் லைத் தேர்வு செய்துள்ளனர். கி.பி. 1781 ஆம் ஆண்டில், சுக்லோசர் மற்றும் ஈக்கார்ன் (Schlozer and Eichhorn) என்ற இரு ஆய்வா ளர்கள், நடுத்தரைக் கடலைச் சுற்றியிருந்த, குறிப்பாகக் கிழக்கே பேசப்பட்ட மொழிகளுக்கும் பொதுப் பெயராக, செமிட்டிக் என்ற சொல்லை அறிமுகம் செய்தனர்.[28]

நாடுகளின் பட்டியல் (Table of Nations) என்ற தலைப்பில் மேற்கித்திய ஆய்வாளர்கள், செயற்கையாக (artificially), செமிட்டிக் என்ற சொல்லைத் தந்துள்ளனர்.

அவர்கள் தந்த பட்டியலின் படி, செமிட்டிக் மொழியினம் அடியிற்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.[29]

வடகிழக்குச் செமிட்டிக் மொழிகள் (North eastern Semitic):

மெசபத் தோமியாவின் வடகிழக்குப் பகுதிகளான பாபி லோன், அசீரியா ஆகிய நாடுகளில் பேசப்பட்ட அக்காடியன் (Akkadian), அசீரிய மொழிகள்.

வடமேற்குச் செமிட்டிக் மொழிகள் (North Western Semitic): மெசபத் தோமியாவின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளில் பேசப்பட்டவை. மேல் மெசபத்தோமியா (Upper Mesopotamia), சிரியா (Syria), பாலத்தீனம் (Palestine) ஆசிய நாடுகளில் பேசப்பட்ட மொழிகள் இத்தலைப்பில் அடங்கும். அறமாயிக் (Aramaic), கனானியம் (Canaamite), ஃபோனீசியம் (Phoenician), எபிறேயம் (Hebrew) ஆகியவை இப்பட்டியலில் இணைக்கப் பட்டுள்ளன.

தென் செமிட்டிக் (Southern Semitic): அரேபியா மற்றும் எத்தியோப்பி யாவில் (இன்றைய எத்தியோப்பியா அன்று) பேசப்பட்ட அரபு (Arabic), எத்தியோப்பியக் (Ethiopic) ஆகியவை இப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆப்பிரிக் காவின் வடகிழக்குப் பகுதிகளில் பேசப்பட்ட எகிப்தியம் (Egyptian), அமரா (Amhara), பெர்பெர் (Berber), சாதிக் (chadic) ஆகியவை யும் இதில் அடங்கும்.

செமிட்டிக் மொழி பேசிய மக்கள் குறிப்பிட்ட புறத் தோற்றத்தைக் கொண்டு அறியப்படுகின்றனர். மாநிறத்தோடும் (Olive Comoezion), கருத்த தலை மயிரும் தாடியும் கொண்டு, நடுநிலையான உயரத்தோடு அறியப்படுகின்றனர். இம்மக் களைப் பற்றிய சிற்பங்களும் படங்களும் எகிப்தியர்கள் வடித் துள்ள ஓவியங்களால் அறியப்படுகின்றன. இந்த ஓவியங் களால், செமிட்டிக் மக்களையும் செமிட்டிக் இனம் அல்லாத மக்களையும் இனம் பிரித்து அறியமுடிகின்றது. இதன்படி எகிப்தியர், சுமேரியர் (Sumerians), இத்தியர் (Hittites), பாலத் தீனியர் போன்ற இனத்தார், செமிட்டிக் இனத்தைச் சாராத (Non - Semitic) மக்களாக அறியப்படுகின்றனர்.[30] இம்மக்கள், செமிட்டிக் இனத்தார் வாழ்ந்திருந்த பகுதிகளிலேயே நிலைத் திருந்தனர் என்று வரலாறு கூறுகிறது.

செமிட்டிக் இன மக்கள் முதன்முதலில் குடியேறியது தைகிரீசு (Tigris) ஆற்றுப்பகுதிகளிலேயே என விவிலியத்தை மேற்கோள்காட்டிச் சில ஆய்வாளர்கள் கருதினாலும், செமிட் டிக் மக்கள் முதன்முதலில் குடியேறியது அல்லது தொன்மைக் காலம் தொட்டு நிலைத்து வாழ்ந்திருந்தது அரேபியத் தீவக் குறையே (Arabian Peninsula) என்ற கருத்தும் உண்டு.[31] செமிட் டிக் மக்களின் தாயகம் (Mother land) அரேபியாவே என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கிருந்தே வடக்கு

மற்றும் வடமேற்குப் பகுதிகளுக்கு அம்மக்கள் பரவினர் என்றும் கூறுகின்றனர். தொடக்கத்தில் நாடோடி வாழ்க்கையை (Nomadic life) மேற்கொண்டிருந்த செமிட்டிக் மக்கள், பிற்காலத்தில் வேளாண் தொழிலில் ஈடுபட்டதோடு, நிலையான குடியிருப்புகளையும் ஏற்படுத்திக் கொண்டு, நகர்ப்புறங்களில் வாழ்ந்திருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. அரேபியப் பாலைநிலம், குமரிக் கண்டம் (Lemuria) மறைந்து போன பெருநாட்டின் வடமேற்குப் பகுதியாகவும், பின்பாலை நாடென அழைக்கப்பட்டதாகவும் கருத இடமுண்டு. வெள்ளத்தில் அழிந்து போகாத நிலப் பகுதியாகவும் அதனைக் கருதலாம்.

செமிட்டிக் இன மக்களாக ஈழநாட்டவர் (Elamites), அசீரியர்கள் (Assyrians), எபிறேயர் (Hebrews), அறமியர்கள் (Arameons) மற்றும் அரேபியப் பழங்குடியினரை விவிலியம் சுட்டுகிறது (Gn. 10:21-31) ஈழ நாட்டவர் செமிட்டிக் மக்கள் அல்லர் என்றும், இப்பட்டியலிலிருந்து அவர் நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் உண்டு.[32] அரபு நாட்டிலிருந்த சில பழங்குடியினரையும், கனான் நாட்டுக் குழுக்கள் சிலவற்றையும் செமிட்டிக் இனத்தில் சேர்க்கவேண்டும் என்ற கருத்தையும் சில ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர்.

கி.மு. 3000 ஆண்டுகளில், தைகிரீசு ஆறு தொடங்கி, யூப்ரதீசு ஆற்றுப் பகுதிகள், வடமேற்கு மெசபத்தோமியா, வடக்குச் சிரியா, பாலத்தீனம், பரண் பாலைவனம், எகிப்து, நீலாற்றுப் பகுதிகள் எனப் பரந்து விரிந்து, வளமான பிறை நிலா வடிவில் (Fertile Crescent) அமையப் பெற்ற பகுதிகளில் செமிட்டிக் இன மக்கள் வாழ்ந்திருந்ததாகவும் இப்பகுதிகள் ஒரே வகையான நாகரிகப் பண்பாட்டு மையங்களாகத் திகழ்ந்தனவென்றும் கருத்துரைத்துள்ளனர்.[33] எகிப்தியர்கள், செமிட்டிக் இனத்தோடு தொடர்பற்ற மக்களாகக் கருதப்பட்டாலும், செமிட்டிக் மக்களின் பண்பாட்டுத் தாக்கங்கள், எகிப்தியரிடமும் காணப்பட்டன என்பதை மறுப் பதற்கில்லை.

இப்பகுதிகளில், செமிட்டிக் அல்லாத பிற இனத்தாரும் ஆங்காங்கே அறியப்படுகின்றனர். அவர்கள் சிற்சிலப் பகுதிகளில் (isolated areas) வாழ்ந்திருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்க இனத்தவராக இத்தியர் (Hittites), உரியர்கள் (Hurrains), இக்கோசு (Hyksos), பாலத்தீனியர் எனப்படும் பிலித்தியர் (Philistines) மற்றும் சுமேரியர் (Sumerians) அறியப்படுகின்றனர்.

இம்மக்கள், சிரிய மற்றும் அரேபியப் பாலைநிலப் பகுதியை, செமிட்டிக் சதுக்கம் (Semitic quadrilateral) என்று ஏ. பிகுக் (A.B. Cook) கூறுகிறார்.[34] ஈழநாட்டுக்குக் (Elam) கிழக்கேயிருந்த சாக்ரோசு (Zagros) மலைத் தொடர்ப் பகுதிகள், பாரசீக வளை குடாப் பகுதிகள், ஆர்மீனியா (Armenia) அனதோலியா (Anatolia), நடுத்தரைக் கடலின் வடக்குப் பகுதிகள், செங்கடல் பகுதி, அரேபியாவின் தென்கிழக்கு முனையிலிருந்த இந்தியப் பெருங்கடல் பகுதிகள் போன்றவை, பிரெசுடெட் குறிப்பிடும் பிறைநிலாப் பகுதிகளில்தான் வரலாற்றுக் காலத்துக்கு முற் பட்ட அசிரிய, பாபிலோனிய மற்றும் சுமேரிய நாகரிகங்கள் முகிழ்ந்திருந்தன.

மேலே குறிப்பிட்டுள்ள செமிட்டிக் இனங்களில், எபிறேய மொழியைப் பேசி வந்த எபிறேயர் (Hebrews) என்று தொடக் கத்திலும், யூதர்கள் (Jews) என்று பிற்காலத்திலும் அழைக்கப் பட்ட மக்கள், பிறைநிலாப் பகுதியைத் தாயகமாகக் கொண் டவர்கள் அல்லர் என்றும் அவர்கள், தைகிரீசு ஆற்றுக்குக் கிழக்கேயிருந்த ஒரு நாட்டிலிருந்து மேற்கே குடிபெயர்ந்த வர்கள் என்றும் திட்டவட்டமாகக் கருதப்படுவதால்,[35] ஆய்வா ளர்கள் கூறிய செமிட்டிக் இன மக்கள் பற்றிய கொள்கையிலும் முரண்பாடுகள் உள்ளனவென்பதை உணரலாம்.

பெயர்க்கரணியங்கள்: செமிட்டிக் என்ற சொல், பிற்கா லத்தவரால் சூட்டப்பெற்ற பெயராய் அமைந்ததுபோலவே, திராவிடம் என்ற சொல்லும் பிற்காலத்துச் சொல்லே. திராவிடம் என்பது ஒரு தொன்மைக்கால மொழி போலவும் (Proto - language), அம்மொழியினின்றே தமிழ்,தெலுங்கு, மலை யாளம், கன்னடம், துலு போன்ற மொழிகள் கிளைத்ததைப் போலவுமான ஒரு தோற்றத்தை, திராவிடம் என்ற சொல் குறிப்பதாகப் பலரும் மயங்கினர். உண்மையில் தமிழ் என்ற மொ ழியையே திராவிடம் என்ற சொல்லால் குறித்தனர் என்க. தமிழினின்றே மற்ற தென்னிந்திய மொழிகள் கிளைத்தன என்ற கருத்து, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது.

திராவிடம்: தமிழ் இனத்தைத் திராவிடர் என மாற்றிச் சொல்லிய வரலாற்றை இதுவரையிலும் கூட ஆய்வாளர்கள் சரியாக விளக்கிக் கூறவில்லை. திராவிடர் என்ற சொல்லை, தொன்மைக் காலத்தமிழ் மக்கள், தமிழ் இலக்கியங் களோ பயன்படுத்தியதாக அறியமுடியவில்லை. ஆனால் பிற்காலத்தில்

தமிழர் பற்றிச் சொல்லப்பட்ட செய்திகள் யாவும் திராவிடர் என்ற சொல்லை முன்னிறுத்தியே விளக்கப்பட்டன. 'திராவிடர் என்ற சொல், தமிழ்ச் சொல்லா அல்லது சமற்கிருதச் சொல்லா என்பதில் கூட ஆய்வாளர்கள் முரண்படுகின்றனர். சிலர் சமற்கிருதச் சொல்லே என்றும் சிலர் தமிழிலிருந்து திரிந்த சமற்கிருதச் சொல்லே என்றும் கூறிவரும் நிலையில், திராவிடம் - திராவிடர் என்பது தனித்தமிழ்ச் சொல்லன்று என்பது தெளிவாகின்றது.

ஓரினத்தின் அல்லது நாட்டின் மொழியை முன்வைத்தே, அவ்வினம் அழைக்கப்படுவது இயல்பு. ஆங்கில நாட்டின் மொழியை ஆங்கிலே (Angle- இது பிரெஞ்சுக்காரர் அழைத்த பெயர், பிற்காலத்தில் English ஆயிற்று) என்றும், செர்மன் மொழி பேசுபவரைச் செர்மானியர் என்றும் அழைப்பது போல, தமிழ் மொழியைப் பேசியவரைத் தமிழர் என்றே குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால், தமிழரைத் திராவிடர் என வேற்று மொழிச் சொல்லால் அழைத்தனர்.

தமிழனை வேற்று மொழிச் சொல்லால் தமிழனே அழைத்துக் கொள்வது, தமிழை அயன் மொழிச் சொல்லுக்கு அடிமைப்படுத்துவதாக அமையும்.

தமிழ்ப் பேசும் நாடு, தமிழ்நாடு அல்லது தமிழகம் என்றே அழைக்கப்பட்டது.

"வையக வரைப்பில் தமிழகங் கேட்ப" – புறநானூறு.[36]

தமிழர் - தரமிளர் - தரமிடர், திராவிடர் என்று, தமிழர் என்ற சொல் திரிந்த தாகக் கூறப்படுவது, முன்னிருக்கும் மூக்கைப்பிடிக்க, முகத்தைச் சுற்றிக் கையை வளைப்பது போன்றதே. இது வலிந்து சென்று கொடுக்கப்பட்ட விளக்கமாகும்.[37]

முற்காலத்தில் கிரேக்க, உரோம நாட்டவர் தமிழகம் என்ற சொல்லை, டமிரிக்க (Damirica) என்றும், டமெரிக்கே (Damarice) என்றும் எழுதி வைத்துள் ளனர். கி.பி. 15 ம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகம் வந்த கிறித்துவ விடையூழியர்கள் (Missionaries) டமில் (Tamil), டமுல் (Tamoul), டமிலிகுஸ் (Tamilicus) என்றவாறு குறிப்பிட்டனர்.[38] மேற்கித்தியர்கள் குறித்த சொற்களில், தமிழ் என்ற சொல்லின் சாயலாவது தென்படுகின்றது. திராவிடம் என்ற சொல்லில், தமிழ் காணாமலேயே போய்விட்டது.

சந்திரகுப்த மௌரியரின் அமைச்சராக இருந்ததாகச் சொல்லப்படும் சாணக்கியரை த்ர மளாச்சார்யா என அழைத் தனர் என்றும், அவர் காஞ்சியில் பிறந்த வர் என்றும், காஞ்சிப் பல்கலையில் பயின்றவர் என்றும் சொல்கின்றனர். அதுபற்றி யே த்ரமளா என்றவாறு அழைக்கப்பட்டார் என்றும் கூறினர். சாணக்கியரின் குறிப்புகள் எவையிலும் ஒரு தமிழ்ச் சொல்கூட இடம்பெறவில்லை யென்பதை அறிதல் வேண்டும். கி.பி.முதல் நூற்றாண்டைச் சார்ந்த ஆக்திராவிலுள்ள அதி கும்பா கல் வெட்டில், த்ரமிளம் என்ற சொல் இடம் பெற்றிருப்பதாகவும் கூறுவர். த்ரமிளர் என்ற சொல்லுக்கான மூலச்சொல் யாதென இதுவரையிலும் எவரும் விளக்கவில்லை. இவையெல்லாம் தவறான சிந்தனைகளின் அடிப்படையில் சொல்லப்பட்ட உண்மைக்கும்புறம்பான செய்திகளாகும்.

வடநாட்டில் அறியப்பட்ட தொன்மக் கதையான முசு குந்த புராணத்தில், விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள தென்னிந் தியாவின் கடலோரப் பகுதிகளை, த்ர (Dra) என்ற சமற்கிருதச் சொல் குறிக்கின்றது.[39] இது மொழி வழியையோ, இன வழியை யோ குறித்த சொல்லலவென்றும், நிலப்பகுதிகளைக் குறித்த சொல்லே யென்றும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. தமிழ் என்ற சொல்லிலிருந்தே திராவிட என்ற சொல் பிறந்ததாகக் கூறுவது பொருத்தமற்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். திரா விட என்ற சொல்லுக்கான மூலச் சொல், த்ர (Dra) என்பதே எனவும் கூறுகின்றனர்.[40] மாக்சுமுல்லர் என்ற செர்மானிய சமற்கிருத அறிஞர், தமிழ் என்ற சொல்லிலிருந்தே திராவிட என்ற சொல் பிறந்ததாக முதலில் கூறியவர், பிறகு தனது கூற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.[41] மார்க்கண்டேய புராணம், த்ர என்ற சொல்லுக்கு, தென்னிந்தியாவின் கடற் கரையை ஒட்டி வாழ்ந்திருந்த மக்கள் என்றவாறு பொருள் கூறுகின்றது.[42] தென்னிந்தியப் பகுதியை த்ர என்று முசுகுந்த புராணம் சொல்வதும், தென்னாட்டுக் கடற்கரைப் பகுதி களை, த்ர என்று மார்க் கண்டேய புராணம் கூறுவதும், தென் னிந்தியாவை த்ர என்ற சமற்கிருதச் சொல் குறித்தது என்பது தெளிவாகின்றது.

த்ர என்ற சமற்கிருதச் சொல்லுக்கான மூலச் சொல், தரை என்ற தமிழ்ச் சொல்லே.

தரை = நிலப்பகுதி, நாடு, நீரற்ற நிலப்பகுதி, என விரியும்.

தரைவிசும் புகுந்த தண்பரங் குன்றம் - பரிபாடல்[43]

கான மலைத் தரை கொன்று பிளறி - பரிபாடல்,[44]

தா என்ற தமிழ் வேர்ச் சொல்லுக்கு, கொடுத்தல், தருதல், கேளாமலேயே கொடுத்தல் எனப் பொருள் விரியும். ஈ, கொ டு, தா என்ற மூன்று சொற்களும் ஒரு பொருளைத் தருவது போலவே தோன்றினாலும், மூன்றுக்கும் தமிழில் பொருள் வேறுபாடுகள் உண்டு.

ஈ + தன்னைவிட உயர்ந்த வனிடத்தில் கேட்கும் பிச்சை (பிய் + செய் என்பதை, பிச்சையாயிற்று)

கொடு + தன்னை யொத்தவரிடத்தில் கேட்கும் உதவி.

தா = தன்னிலும் கீழானவனிடம் சொல்லும் ஆணை.

இச்சொற்களின் வழியே, தா என்பது உயர்ந்தவன் தாழ்ந்த வனிடம் கேட்டு, அவன் அனுமதியின்றியே எடுத்துக் கொள்ளும் நிலை என்க.

தா - தரு - தரல் - தருதல்.

தா - தார் - தாரை - தாரை வார்த்தல்.

தா - தாரை - தாரம் - மனைவி.

தா - தரு = மரம். கனிகளை அளிக்கும் இயற்கையின் கொடை.

தா - தரு - தருப்பை = பச்சைப்புல், பச்சிளம் புல் "தருப்பையில் கிடத்தி" - மணிமேகலை.23:13

புல்லினமும் மரவினமும் மாந்தர்க்கு நல்லவையே தருவதால் அவை தரு எனப்பட்டன.

தரு வளரும் இடம் தரையெனப்பட்டது.

தரை என்ற தமிழ்ச்சொல், த்ர என்று சமற்கிருதத்திலும்,

தெரா என்று எபிரேய மொழியிலும்,[45]

தெரே என்று ஃபோனீசிய மொழியிலும்,[46]

டெரே என்று கிரேக்க மொழியிலும்[47]

டெரா என்று இலத்தீன் மொழியிலும்[48]

டெர என்று ஆங்கிலத்திலும்49 திரிந்துள்ளதை நோக்குக.

தெரே அல்லது தெரே என்ற ஃபோனீசியச் சொல், அந்நாட்டின் மேற்குக் கடற்கரையிலிருந்த ஒரு தீவக்குறை நகரையும் (இராமேசுவரம் போன்று) குறித்தது. நீரில் அல்லது கடலில் இருந்த தரைப்பகுதிகளை தெர என்ற சொல்லால் அழைத்தனர். இந்நகரில் வாழ்ந்திருந்த கடல் வணிகர்கள், தங்கள் மேலாண்மையை அடுத்துள்ள கடல் பகுதி முழுவதும் செலுத்தியதால், கிரேக்கர்கள், அக்கடலை தெரேனியன் (தெர

நகரத்து வணிகர்களின்) கடல் என அழைத்தனர். அதுவே, Medi - terranean என்றானது.[50]

எனவே, த்ர என்ற சமற்கிருதச் சொல், தென்னிந்தியாவின் நிலப்பகுதி களைக் குறித்த சொல்லேயன்றி, தமிழரை அல்லது தமிழைக் குறித்த சொல் அன்று என்பதை உணர்ந்து தெளிக. தமிழ் என்ற சொல்லிலிருந்து த்ர என்ற சொல்திரிய வில்லை, மாறாக, தரையென்ற சொல்லிலிருந்தே திரிந்தது என அறியப் படுவதால், திராவிடம் என்ற சொல், தமிழை அல்லது தமிழரைக் குறித்த சொல் அன்று என்பது தெளிவு.

கி.பி.600ஆண்டுகளுக்குப் பிறகே திராவிட என்ற சொல் வழக்கிற்கு வந்ததாகக் கருதப்படுகின்றது. கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த ஆதி சங்கரர், திருஞான சம்பந்தரை திராவிட சிசு என்று கூறுகிறார். வடக்கித்திய சமற்கிருத புரா ணங்கள் இக்காலங்களில்தான் எழுதப் பெற்றவை எனக்கருத இடமுண்டு. இவைகளைக் கற்றறிந்த சங்கரர் திராவிட என்ற சொல்லைப் பயன்படுத்தினார் எனலாம். கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வந்துற்ற ஐரேப்பியர்கள் பரவலாக இச் சொல்லைப் பயன்படுத்தினர். தமிழ் என்ற சொல்லை ஒலித்து எழுவதுதைவிட, திராவிட என்ற சொல், அவர்களுக்கு எளிமை யாயிருந்தது. இதன் மூலமும் வேரும் இன்னதென்று அறிய இயலாத தமிழரும், தம்மைத் திராவிடர் என அழைத்துக் கொள்வதில் பெருமை கொண்டனர்.

செமிட்டிக் இனம்: செமிட்டிக் என்ற சொல்லை, கி.பி. 1781 ஆம் ஆண்டில்தான் மேற்கித்திய ஆய்வாளர்கள் அறிமுகம் செய்தனர். ஐரோப்பிய மொழியியலார் கிறித்துவராயிருந்த தாலும், கிறித்துவச் சமய நூலான விவிலியம், மொழிகள் பற்றிய சில குறிப்புகளைத் தந்துள்ளதாலும், அக்குறிப்பு களையே அடிப்படைகளாகக் கொண்டு, மொழிக் கொள்கை யொன்றை அவர்கள் வகுத்தனர்.

பெயர்க்கரணியம்: வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், உலகைப் பெரு வெள்ளத்தால் கடவுள் அழித்தது பற்றிய செய்தியொன்று, விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளது.[51] இது சமய நோக்கில் கதை போன்றே காணப்பட்டாலும், இந்த வெள்ள நிகழ்வை மையமாகக் கொண்டு, உலகின் பல்வேறு சமயங்களும், தத்தம் நோக்கில் பல்வேறு கதைகளைக் கற்பித்துக்

கொண்டன. கதைகளின் போக்கு, வியக்கத்தக்க வகையில் ஒன்று போலவே காணப்படுவதால், வெள்ள நிகழ்வு ஒன்று இவ்வுலகை அழித்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. மெசபத்தோமிய, பாபிலோனிய, சுமேரிய, உகாரிய, ஃபோனீசிய, எகிப்திய, கிரேக்க, உரோமக் கதைகளும், வெள்ளம் ஒன்று உலகை அழித்த செய்தியை விளக்கு கின்றன.[52] சமற்கிருதத்தில் மகாபாரதம் வனபருவம் என்ற தலைப்பில் ஒரு வெள்ள நிகழ்வுக் கதையும் உண்டு.

அனைத்துச் சமயக் கதைகளும், கடவுள்வெள்ளத்தால் உலகை அழித்தார் என்ற கருவை மையமாகக்கொண்டே சொல்லப்பட்டுள்ளன. அக்கதைகளில், கடவுளின் பார்வையில் நல்லவனாகத் தெரிந்த ஒரு மாந்தனையும் அவனது இல்லத்தாரையும், நண்பர்களையும் வெள்ளப்பாழினின்றும் கடவுள் காத்தார் என்ற செய்தி வெளிப்படுகின்றது. வெள்ளத்தினின்றும் காக்கப்பட்ட மாந்தனின் பெயர்தான், கதைக்குக் கதை மாறுபடுகிறதேயன்றி, நிகழ்வுகள் ஏறக்குறையஒன்று போலுள்ளன.

விவிலியக் கதையில் நோவா என்ற மாந்தனைக் கடவுள் காப்பாற்றியதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவன் கற்பனை மாந்தனா அல்லது வரலாற்று நாயகனா என அறிவதற்கானச் சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. நோவா என்பானுக்கு நான்கு மக்கள் இருந்ததாகத் திருக்குர்ஆனும்[53], மூவர் இருந்ததாக விவிலியமும் கூறுகின்றன[54] மூவருடைய பெயர்களும் இவ்விரு சமய நூல்களிலும் ஒன்று போலவே காணப்படுகின்றன.

வெள்ளம் முடிவுற்றபோது, நோவா என்பான் தன்னைக் காத்துக் கொள்ள உருவாக்கப்பட்ட மரக்கலத்திலிருந்து நிலத்தில் இறங்கினான். அப்பகுதியிலேயே வாழ்ந்திருந்தான். அவனுக்குப் பிறகு அவனது மக்கள் மூவரும் மேற்கு நோக்கிச் சென்று, தைகிரீசு ஆற்றுப்பகுதியில் குடியேறினர்.[55] அங்கு தங்களுக்கென ஓரூரை அமைத்துக் கொண்டு, வாழ்ந்திருந்தனர். அம்மக்களில் மூத்தவன் பெயர் செம் (Shem) என்றும், அடுத்தவன் பெயர் அம் அல்லது ஆம் (Ham) என்றும், கடையவன் பெயர் யாப் பெத் (Yaapeth) என்றும் விவிலியம் கூறுகிறது.[56]

இம்மூவரின் மரபு பல்கிப் பெருகியகாலை, தங்களது பண்பாட்டின் நினைவாக ஒரு கோபுரம் கட்ட எண்ணி,

பணிகளைத் தொடர்ந்தனர். கோபுரம் முற்றுப் பெறவிருந்த நிலையில், கடவுள் இவர்களது செயல்களால் சினமுற்று, அம்மக்கள் பேசிவந்த மொழியை பலவாறாக மாற்றிவிட்டார். இதனால் ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாமல் போகவே, கோபுரப் பணிகள் நின்றுபோயின. மூன்று மரபினரும் தம் குழுக்களோடு அவ்விடத்தை விட்டுப் பிரிந்து போயினர்.[57] அவ்வாறு பிரிந்து சென்றபோது, செம் என்பானின் மரபு மெசபத்தோமியாவிலும், ஆம் என்பானின் மரபு அரேபியா, கனான், எகிப்து, எத்தியோப்பிய நாடுகளிலும், யாப்பெத் என்பானின் மரபு கிரேக்க நாட்டிலும் நிலைகொண்டனர்.[58]

இம்மூன்று மரபினர் பேசிய மொழிகளே, நடுத்தரைக் கடலைச் சுற்றி யிருந்த நாடுகளில் பேசப்பட்டன. ஒவ்வொரு மரபினரும் பிற்காலத்தில் மேலும் பல்கிப் பெருகிப் பலவிடங் களில் நிலைகொண்டதால், அம்மூன்று மூலமொழிகளும், பல்வேறு கிளை மொழிகளாகக் கிளைத்திருந்தன. மேலும் சிறியா, ஆசியா, பாபிலோன் பகுதிகளிலும் சிலர் குடியேறினர். செம் என்பானின் மரபினர், மெசபத் தோமியாவெங்கும் பரவி வாழ்ந்திருந்தனர். செம் என்பானின் மரபினர் பேசியதாகப் பல மொழிகள் அறியப்படுகின்றன. இம்மொழிகள் யாவும், அக் குழுக்களின் முதல்வனான செம் என்பான் பெயரில், செமிட்டிக் என்று சொல்லப்பட்டது.

ஆம் என்பான் குழுவினர் பேசியவை ஆமெட்டிக் (Hametic) என்றும், யாப்பெத் என்பான் குழுவினர் கிரேக்கப் பகுதிகளில் பேசிய மொழிகள் இந்திய - ஐரோப்பிய (Indo European) மொழிகள் என்றும் வகுக்கப்பட்டன. இப்பெயர்கள் யாவும் 18 ஆம் நூற்றாண்டில் சூட்டப் பெற்றவைகளாகும். எனவே, செமிட்டிக் என்பது ஒரு மொழியைக் குறித்த சொல் அல்லவென்பதும், அது ஒரு குழுவினர் பேசிய பன்மொழி களை அடக்கியச் சொல் என்பதும் விளங்கும்.

வடகிழக்குச் செமிட்டிக், வடமேற்குச் செமிட்டிக், தென் செமிட்டிக் என மூன்று வகையாக சில மொழிகள் சொல்லப் பட்டு, அவை செமிட்டிக் மொழியினம் என்ற தலைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இம்மொழிகள் சிலவாக இருந்தபோதி லும், இவை ஒவ்வொன்றுக்கும் நெருக்கமான தொடர்புகள் இருந்தன. ஒவ்வொரு மொழியும் மற்ற மொழி பேசுபவரால் புரிந்து கொள்ளும் வகையில் இருந்தன. ஒருசில மாற்றங்

களுடன் பேசப்பட்ட மொழிகளே, செமிட்டிக் இன மொழிகள் ஆகும்.

செமிட்டிக் என்ற சொல் ஓரினத்தைக் குறிக்கும் சொல் லாகவே உள்ளது. அக்காலத்திய மெசபத்தோமியா,சிரியா, பாபிலோன் போன்ற நாடுகள் அடுத்தடுத்து இருந்தனவென்ப தால், இவைகளைப் பல நாடுகள் என்ற கண்ணோட்டத்தில் அணுக இயலாது. எனவே, குறிப்பிட்ட பகுதிக்குள் பேசப் பட்ட மொழியே செமிட்டிக் எனப்பட்டது. செம் என்பானது மரபு எக்காலத்தில் மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்தது என்பதற்கானச் சான்றுகள் தெளிவாக இல்லை. மேலும் அக் காலத்தில் செமிட்டிக் என்ற சொல்லாலும் அம்மொழிகள் அழைக்கப்படவில்லை. செமிட்டிக் இன மக்கள் கி.மு. 10000 ஆண்டுகளில் அப்பகுதிகளில் வாழ்ந்திருக்கலாம் என்ற கருது கோள் உள்ளது.[59] விவிலியச் செய்தியின்படி, மெபசத்தோமி யாவில் குடியேறிய முதல்குழு, செம் என்பானின் மரபில் தோன்றியதே. அவர்களது குடியேற்றக் காலம், கி.மு. 10000 எனக் கொள்ளலாம்.

சுமேரியர் என்ற குழுவினர், செமிட்டிக் இன மக்களோடு தொடர்புகள் அற்றவர்கள் என்றும் அவர்கள் கி.மு. 4000 - 3000 ஆண்டுகளில், பாரசீக வளைகுடா வழியே படையெடுத்து வந்து, தென் மெசபத்தோமியப் பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர் என்றும், பின்னர் அங்கு நிலையான ஆட்சியைத் தோற்றுவித்தனர் என்றும் வரலாறு கூறுவதால்,[60] சுமேரியர் செமிட்டிக் இன மக்கள் அல்லர் என்றும் தெளிவாகிறது.

சுமேரியர்களுக்குப் பிறகு, கி.மு. 2500 - 2000 ஆண்டுகளில், மேலும் ஒரு குழுவினர் கிழக்கிலிருந்த ஒரு நாட்டிலிருந்து புறப்பட்டு வந்து, தைகிரீசு ஆற்றங்கரையில் தங்கினர் என்ற செய்தியையும் விவிலியம் தருகின்றது. தைகிரீசு ஆற்றுக்கு அப்பாலிருந்து வந்த அம்மக்களும், செமிட்டிக் இன மக்கள் அல்லர் எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அம்மக்கள் பேசிய மொழியாகிய எபிறேயம் என்ற மொழிவழி அடிப்படையில், அம்மக்கள் எபிறேயர் என்று அழைக்கப்பட்டனர்.[61] ஆனாலும், எபிறேய மொழியையும் செமிட்டிக் இனத்தோடு ஆய்வாளர்கள் இணைத்துள்ளனர். இது ஒரு முரண்பாடான கண்ணோட் டமாக இருந்தாலும், எபிறேய மொழியை செமிட்டிக் இனத் துடன் ஆய்வாளர்கள் இணைத்ததற்கான கரணியத்தை அவர் கள் விளக்கவில்லை.

எபிறேய மொழிபேசிய மக்களினம், பிற்காலத்தில் அறமாயிக் என்ற மொழியையும் பேசியதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. கி.மு. 300 ஆண்டு களில், எபிறேய மொழியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அறமாயிக் மொழியே பாலத்தீனப் பகுதிகளில் பரவலாகப் பேசப்பட்டது. ஏறக்குறைய எபிறேய மொழி அக்காலம் முதல் வழக்கிழந்துபோயிற்று என்றும் வரலாறு தெரிவிக்கின்றது.[62] ஆனால், எபிறேயம் - அறமாயிக் மொழிகளிடையே நெருங்கிய தொடர்பு இருந்ததை வரலாற்றில் அறியலாம். தமிழில் அறியப்படும் பேச்சு மொழிக்கும், இலக்கிய மொழிக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றே, எபிறேய மொழி இலக்கியத்துக்கும், அறமாயிக் பேச்சு வழக்கிற்கும் பயன்படுத்தப்பட்டது என ஓரளவுக்குக் கருதலாம். எபிறேய மொழிபேசிய தொடக்க கால மக்களினம் (கி.மு.2000) கிறித்துப் பிறப்பாண்டுகளில் அறமாயிக் மொழியைப் பேசி வந்ததாக அறியப்படுகின்றது. இயேசு கிறித்து எபிறேய இனத்தில் பிறந்து, அறமாயிக் மொழி பேசியதாகவே விவிலியம் கூறுகிறது.[63]

சுமேரியர் வருகைக்குப் பின்னர், சுமேரியம் என்ற மொழி பாபிலோனில் அறியப்பட்டது. அவர்களது வருகைக்கு முன்னர், ஏற்கனவே அங்கு பேசப்பட்ட மொழிக்கு என்ன பெயர் அறியப்பட்டிருந்தது எனத் தெரியவில்லை. ஆனாலும், சுமேரியமும் செமிட்டிக் இன மொழியும் கலந்து அக்காடியம் என்ற புதிய மொழி தோன்றியதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.[64] சுமேரிய மொழியை செமிட்டிக் இனத்துடன் இணைக்காத ஆய்வாளர்கள், அக்காடிய மொழியைச் செமிட்டிக் இனத்துடன் இணைத்துள்ளனர்.

கி.மு. 2000 ஆண்டுகளுக்குப் பிறகு அசீரியர் என்ற மரபு, சுமேரியரை வென்று ஆட்சியைப் பிடித்தது. அசீரியர் யாவர்? அவர்கள் மெபசத்தோமியாவின் பழங்குடி மக்களா? வெளி நாட்டிலிருந்து குடியேறிவர்களா? என்பன போன்ற கேள்விகளுக்கு ஆய்வாளர்களால் தெளிவான விடையைக் கூற இயலவில்லை.[65] இருப்பினும் அசீரிய மொழியும், செமிட்டிக் இனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஈழம் (Elam) என்றவொரு சிறிய நாடு, பாபிலோனுக்குக் கிழக்கே இருந்தது. இம்மக்களைப் பற்றிய செய்திகளும் தெளிவு படுத்தப்படவில்லை. இன,மொழி (Ethnically) அடிப்படையில், ஈழ மக்கள், செமிட்டிக் இனத்தோடு தொடர்பற்றவர்கள்

என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.[66] ஈழம் என்ற சொல்லை, எலாம் என்று தமிழ் மொழிபெயர்ப்பு விவிலியம் கூறுகின்றது. இருப்பினும் ஈழமொழியையும் செமிட்டிக் இனத்தோடு ஆய்வாளர்கள் இணைத்துள்ளனர்.

கனானிய மொழியையும் செமிட்டிக் இனத்தோடு இணைத்துள்ளனர். கனான் என்று சொல்லப்படுபவன், ஆம் (Ham) என்பானது, மகனும், நோவா என்பா னின் பெயரனும் (grandson) ஆவான் என விவிலியம் கூறுவதால்,[67] அவன் மரபினர் பேசிய கனானிய மொழியை செமிட்டிக் இனத்தோடு இணைத் ததில் தவறேதும் இல்லையெனலாம்.

செம் என்பானது மரபில் தோன்றிய ஆத் அல்லது ஆதி (Aad) என்பானது மரபினரே அராபியர் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.[68] செம் என்பானது மெசபத் தோமிய வருகைக்கு முன்பே, அராபியாவில் மக்களினம் வாழ்ந்திருந்ததாகவும், அம்மக்களில் சில குழுவினரே வடக்கு நோக்கிச் சென்று மெச பத்தோமியாவில் நிலை கொண்டதாகவும் ஒரு கருத்து உண்டு.[69] இந்த அளவில் அராபிய மொழியும் செமிட்டிக் இனத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

இவர்களின்றி வடக்கு மெசபத்தோமியாவில் வாழ்ந் திருந்த இத்தியர் (Hittites) என்ற இனம், செமிட்டிக் இனத்தோடு தொடர்பற்றது என்ற கருத்து மொழியப்பட்டாலும், கனான் (Ham tradition) என்பானது மரபில் தோன்றிய இத் (Heth) என்பான் வழிவந்தவரே இத்தியர் என்ற கருத்தும் விவிலியத்தில் காணப்படுகின்றது.[70] ஆனாலும் இத்தியர் செமிட்டிக் இனத் தார் அல்லர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எகிப்தியர்கள் (through the Ham tradition) நோவா வழி வந்தவர்கள் என்று கருதப்பட்டாலும்,[71] எகிப்திய மொழி செமிட்டிக் இனத்தோடு இணைக்கப்படவில்லை. இருப்பினும் பல எகிப்தியச் சொற்கள், செமிட்டிக் மொழிகளுடன் தொடர்பு கொண்டவைகளாக உள்ளன.

பாலத்தீனத்தின் மேற்குப் பகுதியில் வாழ்ந்திருந்த பிலித் தியர் என்ற இனம், கிரேக்க நாட்டுக்குத் தெற்கேயிருந்த கரட் டுத் தீவினின்றும் (Crete island) குடிபெயர்ந்தவர்கள் என்று சொல்லப்படுவதால்,[72] இவர்களையும் செமிட்டிக் இனத்தோடு ஆய்வாளர்கள் இணைக்கவில்லை.

எனவே,செமிட்டிக் இன மக்களாகச் சொல்லப்படும் மொழி வழி மக்கள், மெசபத்தோமியாவில் முதன்முதலில் குடியேறிய'வர்களாகக் கருதப்படுகின்றனர். தற்காலத்தில் வெளி வந்துகொண்டிருந்த புதிய தகவல்களின் அடிப்படையில், இம் மக்களின் குடியேற்றம் நிகழ்வுற்ற காலம்,கி.மு. 10000 எனக் கருத இடமுண்டு.

அடுத்து மெசபத்தோமிய வரலாற்றில் அறியப்பட்டவர் களும், அங்கு மிகச்சிறந்த நகரிய நாகரிகத்தை உருவாக்கியவர் களுமான சுமேரியர்களது காலம், கி.மு. 4000- 3000 என்று அறியப்படுகின்றது.

மூன்றாவதாக அறியப்படும் எபிறேயர் என்ற இனம், கி.மு. 2500 - 2000 ஆண்டுகளில் தைகிரீசு ஆற்றங்கரையில் குடியே றியதாகச் செய்திகள் கூறுகின்றன. கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு, எபிறேயர் என்ற இன மக்களைப் பற்றிய செய்திகள் எவையும், மெபசத்தோமிய வரலாற்றில் காணப்படவில்லை.

இம்மூன்று நிகழ்வுகளும், மெசபத்தோமிய வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களன்றி அசீரியர், பிலித்தியர் உள்ளிட்ட பெருங்குழுக்களும், பதிவு செய்யப்படாத சில சிறு குழுக்களும் அப்பகுதியில் குடியேறினர் எனக் கருத இடமுண்டு.

மேற்கண்ட செய்திகளின்படி, செமிட்டிக் இன மொழி களாக அறியப் படும் மொழிகளின் இணைப்புகள் பற்றி முரண்பாடான கருத்துகளும் உள்ளனவென்பதும் தெளிவு. ஆனாலும்,மேற்கண்ட மொழிகளுக்கிடையே காணப்பட்ட உறவுகள், தொடர்புகள், ஒற்றுமைக் கூறுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு,செமிட்டிக் மொழியினம் என்ற கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. எபிறேயமொழி, மற்றெந்த செமிட்டிக் மொழிகளோடு உள்ள தொடர்பைக் காட்டிலும், சுமேரிய மொழியோடு உள்ள உறவு தெளிவாக்கப்பட்டுள்ளது. எபிறேய மொழியில் காணப்படும் பல்வேறு பெயர்ச் சொற்கள், சுமேரிய மொழியிலுள்ளவைகளே என மொழியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

செமிட்டிக் மொழியினம் மேற்காசியப் பகுதியிலும்,துரானிய மொழியினம் நடு ஆசியப் பகுதியிலும் பேசப்பட்டனவாக ஆய்வாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. செமிட்டிக் குடும்பத்து மொழிகளுக்கும், துரானிய குடும்பத்துமொழி

களுக்கும் உள்ள தொடர்புகள் குறைவே என்றும், குறிப்பாக, திராவிட மொழிக் குடும்பத்திற்கும் செமிட்டிக் மொழிக் குடும்பத்திற்கும் எவ்வகையான உறவுகளும் இல்லையென்றும் பதினெட்டாம் நூற்றாண்டில் கருதப்பட்டது. ஆனால், தற்காலத்திய மொழியாய்வுகள், திராவிடக் குடும்பத்தின் முதல் மொழியாகிய தமிழுக்கும், செமிட்டிக் மொழியினத்திற்கு மிடையே வலுவான தொடர்புகள் இருப்பதை வெளிக் கொணர்ந்துள்ளன.

மேற்கித்திய மொழியியல் அறிஞரான முனைவர் இலகோ வரி என்பார், திராவிடர்களின் தாயகம் மெசபத்தோமியாவே என்றும், அங்கிருந்தே அம்மக்கள் சிந்துவெளியிலும், பின்னர் தென்னிந்தியாவிலும் குடியேறினர் என்றும் கூறுகிறார். இலகோ வரியின் கூற்றில் பல முரண்பாடுகள் இருந்த போதிலும், மெச பத்தோமியரும் சிந்துவெளி மக்களும் இனத்தாலும் மொழியா லும் ஒருவரே என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

கங்காணியார் கால்டுவெல், தமிழுக்கும் எபிறேய மொழிக்கும் உள்ள தொடர்பை கோடிட்டுக் காட்டினார். வரலாற்றாசிரியர்களான பி.சி. மசும்தார், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி.டி. எஸ். அய்யங்கார், ஏ. குமாரசாமி, வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், ஆர். எஸ். வைத்தியநாதய்யர், ஆர்.கே. முகர்ஜி, டி.ஆர். சேஷயங்கார், தேவநேயப் பாவாணர் போன்ற இந்தியர்களும்,

ஜி.ஆர். அண்டர் (Hunter), சர். இலெயோர்டு ஊலி (Sir. Leonard Wolly), சர் ஜான் மார்ஷல் (Sir. John Marshall), சி.எம். ஜார்ஜ் பேர்ட்வுட் (George G.M. Birdwood).

ஜி.எலியட் ஸ்மித் (G.Elliot Smith), எச். ஆர். ஆல் (H.R. Hall), எச்.ஜி. வெல்சு (H.G. Wells), திருத்தந்தை எச்.ஈராஸ் (Rev. H.Heras) போன்ற மேலைநாட்ட வரும்,

தமிழ்நாட்டிற்கும் மெசபத்தோமியாவுக்கும் இடையே காணப்பட்ட இன,மொழி, நாகரிக பண்பாட்டுக் கூறுகளை ஒப்புமைப்படுத்தியுள்ளனர்.[73] மேற்கண்டவர்களின் ஒப்புமை கள் பற்றிய செய்திகள், முழுமையான அளவில் நடத்தப்பட வில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லப்பட்ட அச்செய்திகள், முழுமையான ஆய்வுக்குத் தூண்டுகோல்களாக அமைந்துள்ளன.

மேற்கண்ட அறிஞர் பெருமக்கள் தொடங்கி வைத்த ஆய்வுப் பணிகளை, முழுமையான ஆய்வாக மேற்கொள்ளும் வகையில், "தமிழும் மேற்கித்திய செமிட்டிக் மொழியினமும்" தலைப்பில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, நிறுவனத்தின் பொருளுதவியோடு தற்போது, மேற் கொள்ளப்பட்டுள்ளது.

செமிட்டிக் மொழியினத்தில் பல்வேறு மொழிகள் அறியப் பட்டாலும்,இந்த ஆய்வுக் கட்டுரையில் எபிறேயம், ஃபோனீ சியம், அக்காடியம்,அரபி, எகிப்தி யம் ஆகிய மொழிகளை எடுத்துக் கொள்ளலாம். அரபும் எகிப்தியமும் ஆமெடிக் மொழியினத்திலும் கூறப்பட்டுள்ளன. சுமேரியம் என்பது, செமிட்டிக் இனத்தோடு சேர்க்கப்படவில்லையாதலால், மேற் கோள்களுக்காக சுமேரியச் சொற்களையும் ஆங்காங்கே காட் டுவதில் தவறில்லை என்க.

3. மெசபத்தோமியாவில் தமிழரின் குடியேற்றம்

கி.மு. 75000 ஆண்டுகளிலேயே மெசபத்தோமியப் பகுதிகளில் மக்கள் வாழ்ந்திருந்தனர் என்று அறிவியலார் கருதுகின்றனர். அம்மக்கள், ஓம சேப்பியன் (Homo sepian) என்ற இனத்தாராகக் குறிப்பிடப்படுகின்றனர். இச்சொல்லுக்கு, கருமையும் செம்மையுமில்லாத நடுத்தரமான நிறம் என்று (Colour mixed with red, black and white) கூறுகின்றனர். இது மாநிறம் என்று (Olive complexion) அறியப்படும் தமிழரின் உடல் நிறமே. Sepian என்ற சொல்லுக்கு செம்பழுப்பு என்று கிரேக்க மொழி பொருள் கூறுவதால் செப்பு என்ற தமிழ்ச்சொல்லே, செப்பியன் -சேப்பியன் என்று சொல்லப்பட்டது என்க. சேப்பு - சேப்பெருமாள், ஒப்புநோக்குக.

மெசபத்தோமியாவின் வடக்குப் பகுதி கடலாயிருந்ததாகவும், பனி உருகல் காலத்தில் ஏற்பட்ட கடல் கோள்களினால், கடற்பகுதிகள் உள்வாங்கப்பட்டு, நிலமாக மாறியதாகவும் அறிவியலார் கூறுகின்றனர். மறைந்துபோன குமரிக் கண்டத்தை ஏழு பிரிவுகளாகத் தமிழர் பிரித்திருந்தனர் என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றில், அக்கண்டத்தின் வடமேற்குத் திசையிலிருந்த பின்பாலை நிலமே, பிற்காலத்திய மெசபத்தோமியா, பாலத்தீனம், அரேபியா என அறியப்பட்டன எனலாம். பாலை நாடென்பது, நீரற்ற, வறண்ட, மணற்பாங்கான அல்லது கரடுமுரடான நிலப்பகுதிகளைக் கொண்டது என அறியலாம். குமரிக்கண்டத்தில் இருபாலை நிலங்கள் அறியப்பட்டிருந்தன.[2] அவை முன்பாலை நாடென்பதும், பின்பாலை நாடென்றும் அறியப்படும். முன்பாலை நாடென்பது இன்று அரேபியாவுக்குத் தெற்கே அமைந்துள்ள கடல் பகுதியும், அதனையொட்டிய ஆப்பிரிக்க நாட்டின் கிழக்குப் பகுதிகளும் அடங்கும். இயற்கையின் கூறுகள்படி, வட இந்தியாவில் தொடங்கிய பாலைவனப் பகுதி (தார் பாலைவனம்) ஒரு நேர்க்கோட்டில் அரேபியா, எகிப்து, லிபியா போன்ற

நாடுகளை ஊடறுத்துச் செல்வதை நோக்குக. எகிப் துக்கும் லிபியாவுக்கும் இடைப்பட்ட பாலைநிலம், அக்காலத்தில் சிவன் பாலை (Silvan desert) என்றவாறு அழைக்கப்பட்டது.[3] (Des -tare என்ற இலத்தீன்சொல், திசைத்தரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. திசை = நீண்ட அல்லது முடிவில்லாத தரை = நிலம். திசைத்தரையென்பதே Desert என ஆங்கிலத்தில் திரிந்தது என்க.

ஓம சேப்பியன் என்ற சொல்லுக்கு அறிவாந்த மாந்தன் (Wise man) என்ற பொருளும் உண்டு.[4] காட்டுமாந்தனாயிருந்த அறிவற்ற நிலைமாறி, சிந்திக்கின்ற காலத்திலிருந்த மாந்தனை சேப்பியன் என அழைப்பர். சேப்பியன் இன மாந்தனும் நாடோடி வாழ்க்கையையே கொண்டிருந்தான். உலகை அழித்த கடல் கோளுக்கு முன்னதாக, அப்பின் பாலை நாட்டில் (மெச பத்தோமியாவில்) யூப்ரதீசு, தைகிரீசு ஆறுகள் இருந்தனவா என்பது பற்றிய செய்திகள் இல்லை. கடல்கோளுக்குப் பிறகு தோன்றிய இமயமலைப் பகுதிகளினின்றும் சிந்து, கங்கையா றுகள் தோன்றி யதாகவும் ஒரு கருத்துண்டு. யூப்ரதீசு, தைகிரீசு ஆறுகளும் கூட, கடல் கோளுக்குப் பிறகு உருவான புதிய நிலப்பகுதியில்தான் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் இவ்விரு ஆறுகளின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களால் அழைக்கப்படுவதால்,[5] தமிழர்கள் அங்குக்குடியேறிய பிறகே, அப்பெயர்கள் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

வெள்ளக் காலத்துக்கு முந்திய மெசபத்தோமியாவைப் பற்றி வரலாற்றுச் செய்திகள் எதுவும் கிடைக்கவில்லையா யினும், மெசபத்தோமிய மற்றும் சுமேரிய தொன்மக் கதைகள் சில செய்திகளைக் கூறுகின்றன. ஆனால் அவை வரலாற்றுக் கண்ணோட்டங்களில் மாறுபாடுகின்றன.

எடுத்துக்காட்டாக, ஊற்று நாவிப் பித்தனும் அவனது மனைவியும் மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்ததாகவே, கில்கா மேசு என்ற இலக்கியம் கூறுகிறது. பெரு வெள்ளத்தினின்றும் அவர்கள் காப்பாற்றப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் அப்படியொரு அழிவைத் தந்த பெரு வெள்ளம் மெசபத்தோமியாவில் நிகழவேயில்லையென, மண் அடுக்கு களை ஆய்வு செய்த புவியியலார் கூறுகின்றனர்.[6] எங்கோ, எப்போதோ நடந்த அந்தப் பேரழிவை, மெசபத்தோமியாவில் நிகழ்ந்ததுபோலக் கூறும் கில்காமேசு இலக்கியம், வெள்ளக்

5

காலத்துக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் எழுதப்பட்டுள்ளது என்பது ஆய்வாளர்களின் கருத்து. கி.மு.10000 ஆண்டுகளில் நிகழ்வுற்றவை, கி.மு. 3500 ஆண்டுகளில் நிகழ்வுற்றதாகச் சொல்லப்பட்டுள்ளன. மெசபத்தோமிய இலக்கியங்கள் வெள்ளக் காலத்துக்கு முந்திய 10 மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

சுமேரிய இலக்கியமும் மெசபத்தோமிய இலக்கியத்துக்கு ஓராயிரம் ஆண்டுகளாவது பிற்பட்டது என்ற கருத்துண்டு. அக்கதையில் 10 தலைமுறை மன்னர்கள் மெசபத்தோமியாவை ஆண்டிருந்ததாகவும், பத்தாவது தலைமுறையின் மன்னரான சேய் சூத்திரன் என்பவன் காலத்தில்தான் வெள்ளப் பெருக்கு நிகழ்ந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. இந்த 10 தலைமுறை மன்னர்களை, 10 தலை முறைத் தலைவர்களாக விவிலியம் கூறுகிறது. சேய் சூத்திரன் என்ற மன்னனை, வெள்ளத்தினின்று கடவுள் மீட்டதாகச் சுமேரியக் கதை கூறுகிறது. சேய் சூத்திரன் என்ற பெயருக்கு, சூத்திரனின் மகன் (Son of Sudra), என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது.

சூத்திரன் என்ற சொல்லை ஆரியர்களே பயன்படுத்தியதாகவும், அது தமிழரைக் குறித்த சொல்லே என்றும் மனு போன்ற நூல்கள் கூறுகின்றன. சூத்ரா என்பது சமற்கிருதச் சொல்லெனப் பலரும் மயங்கினர். அதனைத் தமிழ்ப்படுத்தி, சூத்திரன் என்றனர். உண்மையில் வல்லின றகரத்தைக் கொண்டு சூத்திறன் என்றே அச்சொல் எழுதப்படவேண்டும். சூழ்+திறன் என்பதே, சூத்திறன்ஆயிற்று என்க. ஆரியச் செய்திகள் சூத்திறனைத் தமிழன் என்பதாலும், சுமேரியர்கள் தமிழர்களே என்பதாலும், சேய்சூத்திரன் தமிழ் மன்னனே எனவும், அவன் ஆண்டிருந்த நாடு மெசபத்தோமியா அல்ல எனவும், அது தமிழ்நாடு அல்லது குமரிக்கண்டம் எனவும் கொள்ளுதல் சரியானது.

விவிலியத்தில் சொல்லப்படும் நோவா என்பான், மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்ததாக, விவிலியச் செய்திகளால் அறிய இயலவில்லை. மேலும் அவன் மரபினர் கிழக்கிலிருந்தே மெசபத்தோமியாவுக்கு வந்ததாகவும் செய்திகள் கூறுவதாலும், வெள்ள நிகழ்வுகள் மெசபத்தோமியாவில் அறியப்படவில்லையென்பதாலும், அக்காலத்தில் மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்தோரும், நிலையான குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டு வாழாத தமிழரே என்றும் கருத இடமுண்டு. மெசபத்தோமியா

விற்குத் தமிழர் குடியேற்றங்கள் பல நிகழ்ந்துள்ளதை வரலாற்றுச் செய்திகள் மெய்ப்பிக்கின்றன.

மெசபத்தோமிய இலக்கியம் கூறும் மன்னர்கள் தலைமுறைகளும், சுமேரிய இலக்கியம் கூறும் பத்து மன்னர்களும் தலைறைகளும், விவிலியம் கூறும் பத்துத் தலைவர்களின் தலைமுறைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. மன்னர்கள் அல்லது தலைவர்களின் பெயர்கள்தான் மாறியிருக்கின்றனவேயன்றி, செய்திகள் ஒன்று போலுள்ளன. ஏழாவது மன்னன் அல்லது தலைமுறைத் தலைவனைப் பற்றிக் கூறும் மூன்று இலக்கியங்களும் ஒன்றுபட்ட செய்திகளையே தெரிவிக்கின்றன. இத்தலைமுறைப்பட்டியல்களில் காணப்படும் பல பெயர்களும் கூடத் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.

விவிலியம் கூறும் பத்துத் தலைமுறைகள்:

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூலின் முதல் அதிகாரம், ஆதிஆகமம் (Genesis) எனப்படுகின்றது. இதில் முதல் பத்து அதிகாரங்களில், ஆதாம் முதல்நோவா வரையிலான பத்துத் தலைமுறையினர் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. ஆதாமைக் கடவுள் படைத்தது, மக்கள் பல்கிப் பெருகியது, கடவுளை மறந்து உலக இன்பங்களில் நாட்டங்கொண்டது, வெள்ளப் பெருக்கு எனப் பல்வேறு செய்திகளை அவை அளிக்கின்றன. இத்துடன் மக்களின் கல்வி, வேளாண்மை, கலை, வானியல், இசை, தொழில், ஆடு, மாடு மேய்த்தல், நகரங்களை உருவாக்குதல், கட்டிடங்களைக் கட்டுதல் போன்ற நாகரிகமாந்தத் தொடர்பான பல்வேறு செய்திகளும் அந்தப் பத்து அதிகாரங்களில் இடம்பெற்றுள்ளன. இந்தப் பத்துத் தலைமுறைத் தலைவர்களும் மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்தனர் என்று கூறப்பட்டாலும், விவிலிய ஆய்வாளர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

பத்துத் தலைமுறைத் தலைவர்களும் அவர்தம் மக்களும் வாழ்ந்திருந்த நாடு எது? அவர்கள் பேசிய மொழியென்ன? அவர்களது சமயம் எது? அவர்களின் கடவுள் யார்? அவர்களின் வழிபாட்டுமுறைகள் எக்கடவுளோடு அவைகளை இணைக்கின்றன? வெள்ளப்பெருக்கு எந்த நாட்டை அழித்தது? அங்கிருந்து தப்பித்த மக்கள் எங்கெல்லாம் சென்று குடியேறினார்கள் என்ற கேள்விகளுக்கான விடைகள், விவிலியத்தின்

முதல் பத்து அதிகாரங்களில் விளக்கமாகக் காணப்பட வில்லையாதலால், விவிலியத்தின் இப்பகுதிகளைமட்டுமே தொன்மக் கதைகளாக (Primitive stories) திருச்சபை (Church) அறிவித்துள்ளது.[8] விவிலியத்தின் ஒவ்வொரு சொல்லும் கடவுளால் அருளப்பட்டது எனக் கருதும் திருச்சபை, எவ்வாறு இந்தப் பகுதிகளைத் தொன்மக் கதைகள் என்றும், அதனை நம்ப வேண்டிய கட்டாயமில்லை யென்றும் அறிவித்தது என்பது வியப்புக்குரியதே.

12 ஆம் அதிகாரம் தொடங்கும் காலம் கி.மு. 2000 (அபிறகாம் என்பானின் வருகை) என அறிவிக்கப்பட்ட நிலையில், முதல் பத்து அதிகார நிகழ்வுகளும் எக்காலத்தில் நடைபெற்றன என்ப!தையும் விவிலியம் விளக்கவில்லை. எனவே, இக்கதைகள் யாவும், கி.மு. 2000க்கும் முன்னதாகப் பல்லாயிரம் ஆண்டுகளில் நிகழ்வுற்றிருக்க வேண்டும் எனக் கருதலாம். விவிலியம் கூறும் இக்கதை ஏற்கனவே மெசபத்தோமிய, சுமேரிய, உகாரிய, ஆசீரியக் கதைகளிலும் காணப்படுகின்றன. எனவே, விவிலியம் கூறும் கதை, தழுவல் கதையேயன்றி மூலக்கதையன்று என்பதும் தெளிவு.[9]

மெசபத்தோமியக் கதையும், சுமேரியக் கதையும், விவிலியக் கதையும் வெள்ள நிகழ்வோடு முடிந்து விடுகின்றன என்பதால், அந்நிகழ்வுகள் உலகை அழித்த வெள்ளகாலத்துக்கு முன்பே நடந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. உலகை அழித்த வெள்ளம்,கி.மு. 18000- 11000 ஆண்டுகளில் நிகழ்வுற்றிருக்கக் கூடும் என்று தற்காலப் புவியியலார் கருதுவதால், இத்தொன்மக் கதைகள் கி.மு.20000 ஆண்டுகளில் நிகழ்வுற்றிருக்க வேண்டும் எனக் கருதுவதில் தவறில்லை.

இந்தப் பத்து அதிகாரங்களும் மிகச்சிறந்த நகரிய நாகரிக வாழ்க்கை முறைகளை விளக்குவதாலும், கி.மு. 20000 ஆண்டுகளில் நகரிய நாகரிகத்தில் சிறந்திருந்த நாடு எதுவெனப் பார்க்கும்போது, ஒன்றுமேயில்லையென்பதாலும், இக்கதைகள் யாவும் தொன்மக் கதைகளே என்றனர். கி.மு.7000 ஆண்டுகளில் கற்காலம், பின்னர் பொற்காலம், செப்புக் காலம், இரும்புக் காலம் (கி.மு.1000) எனப் பகுத்த வரலாற்று ஆய்வாளர்கள், கி.மு. 20000 ஆண்டு காலத்தை எந்தக் கணக்கில் சேர்ப்பது என்று தெரியாமல் திகைத்தனர். எனவேதான் இவைகள் தொன்மக்கதைகள் எனப்பட்டன. விவிலிய ஆய்வாளர்களுக்கு, கி.மு.

10000 ஆண்டுகளிலேயே தமிழ்நாட்டில் ஒரு நகரம் மிகச் சிறந்த நகரிய நாகரிக நகரமாக விளங்கியது பற்றிய செய்திகள் தெரியாது. அதே கால அளவில் சிந்துவெளியில் வாழ்ந்திருந்த மக்களைப் பற்றிய செய்திகளையும் அறிந்திருக்கவில்லை.[10] குமரிக் கண்டம் என்ற மாபெரும் நிலப்பரப்பு வெள்ளத்தால் அழிந்து போன வரலாறும் தெரியாது. எனவே, உலக வரலாறுகளையும் நடப்புகளையும் அறிந்திராத விவிலிய ஆய்வாளர்கள், விவிலியத்தின் முதல் பத்து அதிகாரங்களையும் தொன்மக்கதைகளாக அறிவித்தனர்.

கதைகள் நம்பக் கூடியனவா?: தனியொரு மாந்தனால் செய்ய இயலாததை அவன் தலைவனோ அல்லது கடவுளோ செய்வதாகச் சொல்லப்படும் நிகழ்வுகளே கதைகள் என்பர். மாந்தனின் நிறைவேறாத எண்ணங்களுக்கு வடிகால்களாக வும் அவை அமைகின்றன. உண்மையான சில நிகழ்வுகளும் மிகைப் படுத்திச் சொல்லப்படுவதுண்டு. ஆனாலும் ஏதோவொரு கருத்தை மையமாகக் கொண்டே கதைகள் சொல்லப்பட்டன. கதைகளின் நம்பகத் தன்மை குறைவானதே என்றாலும், கதைகள் பல்வேறு புதிர்களை விடுவிக்கும் சான்றுகளாகவும் உள்ளன. மக்களின் எண்ணங்கள், ஆவல்கள், வாழ்க்கைமுறைகள், போர்கள், இன்னல்கள், வெற்றிகள் என சுற்றிச் சுழலும் கதைகளில், வரலாற்றுச் செய்திகளும் கூட காணப்படுவதுண்டு. அவை, பிற செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படும் போது, ஒன்றுபடு மேயானால், அதனைப் பற்றிச் சிந்திப்பது நல்லது.

இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக, உலகை வெள்ளம் அழித்ததுபற்றிய பல்வேறு சமயங்கள் கூறும் கதைகளைக் கூறலாம். அக்கதைகளில் சொல்லப்படும் நிகழ்வுகள் நம்பகத் தன்மையற்றுக் காணப்பட்டாலும், வெள்ளத்தால் உலகின் பெரும்பகுதிகள்அழிக்கப்பட்டன என்ற மையக்கருத்து ஏற்புடையதே. இந்த மையக் கருத்தைச் சுற்றிச் சுழலும் நிகழ்வுகள் பல்வேறு ஆய்வுகளால் வெளிப்படுகின்றன. குறிப்பாக, ஒரு கதையில் சொல்லப்படும் மாந்தப்பெயர்கள், ஊர்கள், இடங்கள், ஆறுகள், மலைகள், கடல்கள்போன்ற இயற்கையைச் சார்ந்த புவியியல் தொடர்பானவைகளால், அம்மக்களைப் பற்றிய வரலாற்றை அறிய இயலும். அந்த அளவில், வெள்ளக் கதைகளில், விவிலியம் சொல்லும் கதையை ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளலாம். கதைகள் கற்பனையாக இருந்

தாலும், நேற்றைய வரலாறுகள் அக்கதைகளில் ஒளிந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

விவிலியம் சொல்லும் வெள்ளக் கதை: ஏற்கனவே சொல்லப்பட்ட மெசபத்தோமிய, சுமேரிய வெள்ளக்கதைகளைத் தழுவியே, விவிலியக் கதையையும் சொல்லி வைத்தனர். இக்கதையில் ஆசிரியர் யார்? எக்காலத்தில் இவை சொல்லப்பட்டன என்பதை அறிய இயலவில்லையாயினும், வழிவழி வந்த மக்களால் அறியப்பட்ட தலைமுறைப் பரிமாற்றச் செய்திகளே வெள்ளக் கதையாகச் சொல்லப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியங்கள், தமிழர்களின் தாயகமாகக் குமரிக் கண்டம் என்ற பெருநிலப்பரப்பு இருந்ததாகவும், அந்நிலப் பரப்பு, வெள்ளத்தால் அழிந்து, மக்களும் பல்லாயிரம் கணக்கில் மாண்டு போனதாகவும் கூறுகின்றன. இச்செய்திகளை, மேற்கித்திய இலக்கியங்கள் கூறும் செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, வியக்கத்தக்க பல உண்மைகள் வெளிப்படுகின்றன. அண்மையில் அறியப்படும் பல்வேறு சான்றுகளும், இக்கருத்துக்கு வலுசேர்க்கின்றன.

நோவா என்ற மாந்தன்: சமய இலக்கியங்கள் கூறும் வெள்ளக்கால நாயகர்களின் பெயர்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தாலும், அவை தமிழ்மூலச்சொற்களாகவே உள்ளன. அந்த அளவில்,விவிலியம் கூறும் நோவா என்ற மாந்தனும், அவனது வாழ்க்கைச் சூழல்களும், தமிழ்நாட்டுடன் அவனைத் தொடர்புபடுத்துகின்றன. வெள்ளக் கதைகளை ஆய்வு செய்த மேலைநாட்டவர், தமிழ்க் கண்ணோட்டத்தில் அக்கதைகளைக் காணாததால், அவர்களால் சரியான முடிவுகளை எடுக்க இயலாமல் போனது.

ஆதாம் முதல் நோவா வரையில் பத்துத் தலைவர்களை விவிலியம் சுட்டுகிறது. ஒவ்வொரு வரும் 700, 800, 900 ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருந்ததாகக் கூறுகிறது. இது ஒவ்வொரு தலைமுறையின் கீழ் அம்மக்கள் வழி நடத்தப்பட்ட செய்திகளாகவே கருதப்படல்வேண்டும். இவ்வாறு ஏறக்குறைய 8000 ஆண்டுகளில், பத்துத் தலைவர்களைப்பற்றிய செய்திகள் வெளிப்படுகின்றன. இதன் அடிப்படையில் நோவா, இறுதித் தலைவனாகச் சொல்லப்பட்டுள்ளதால், அவனுக்கு முந்திய தலைமுறை, ஆதாம்காலம் வரை நீண்டு, 8000 ஆண்டுகளாக அறியப்படும்.

அண்மையில் உலகை அழித்த வெள்ளப்பெருக்கு, கி.மு. 11000 ஆண்டுகள் வரை, தொடர்ந்து 7000 ஆண்டுக் கால அளவுகளில் நிகழ்வுற்றது எனப் புவியியலார் கருதுகின்றனர். கி.மு. 18000 - 11000 என்ற புவியியலாரின் கால அளவோடு, விவிலியக் கதையை ஒப்பிடும்போது, கி.மு. 18000 ஆண்டுகளில் முதல் தலைமுறையான ஆதாம் தலைமுறை அறியப்படுகின்றது. எனவே, நாடுகள் அழியத் தொடங்கியது அக்கால அளவுகளி லேயே என்ற கருத்தும் வெளிப்படுகின்றது. இக்கதையோடு தொடர்புடைய குமரிக் கண்ட அழிவும், கி.மு. 18000 - 11000 ஆண்டுகளில் நிகழ்வுற்றதே எனக் கொள்ளலாம்.

நோவா என்பவன் எந்த நாட்டில் வாழ்ந்திருந்தான் என்பதை விவிலியம் விளக்கவில்லை. இக்கதையை எழுதிய விவிலிய ஆசிரியர் கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிறகே அறியப்படுவ தால், அந்த ஆசிரியருக்கும் நிகழ்விடம் தெரிந்தி ருக்கவில்லை யெனக் கருத இடமுண்டு. ஆனால் மெசபத்தோமியப் பகுதியில் தான் இவ்வெள்ள நிகழ்வு அறியப்பட்டதாக விவிலிய ஆசிரியர் கூறவில்லை.

நோவா என்ற பெயரை விவிலிய ஆசிரியரே சூட்டியிருக்க வேண்டும். மெசபத்தோமிய சுமேரியக் கதைகளில் அறியப்படும் வெள்ள மாந்தன் வேறு பெயர்களால் அங்கே அறியப்படுகின் றான். நோவா என்ற பெயர்,நாகம் என்ற சொல்லோடு தொடர்புடையது என, எபிறேய மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்விரு சொற்களும் எபிறேய மொழியில் சொல்லப்பட்டிருந்தாலும், அச்சொற்களுக்கான மூலமும் வேரும் அம்மொழியில் காணப்படாததால், விவிலிய ஆசிரியர் இவ்விருபெயர்களையும் எவ்வாறு உணர்ந்து கொண்டிருந் தனர் என்பதை அறிய இயலவில்லை என்பது எபிறேய அறிஞர் களின் கருத்தாகும்.[11]

எனவே, நோவா- நாகம் ஆகிய இரு எபிறேய மொழிச் சொற்களும் ஒரு வேர்ச்சொல்லினின்றும் நீண்டதாகவே எபி றேய மொழியியலார் கருதினாலும், தற்கால ஆய்வாளர்களால் இவ்விரு சொற்களையும் தொடர்புபடுத்த இயலவில்லை.

நோவா - நாகம்: தமிழ்க் கண்ணோட்டத்தில் நோவா - நாகம் என்ற இரு எபிறேய மொழிச் சொற்களையும் விடுவிக்க இயலும். நோவா என்ற சொல், வேறு மேலைநாட்டு மொழி

களில் காணப்படவில்லையாயினும், இச்சொல் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, கிரேக்க மொழி இச்சொல்லைப் பயன்படுத்தியதோடு அதனை மேலும் விரிவு படுத்திவிட்டது. நாகம் என்ற சொல், ஏற்கனவே விவிலியத்தின் இரண்டாம் அதிகாரத்தில் நாகாஸ் (Nahas) என்றும் அறியப்பட்டுள்ளது.

நாகாஸ் (எபிறேயம்) : பாம்பு (Serpant) - வஞ்சகமானது - Cunning
சாரப் (எபிறேயம்) : பாம்பு (Sarap) நஞ்சுள்ளது - Poisionous.

மேற்கண்ட இரண்டு சொற்களும் எபிறேய மொழியில் பாம்பைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளன. இவையிரண்டும் முறையே நாகம், சாரை (ப்பாம்பு) என்ற தமிழ்ச்சொற்களின் திரிபே.

நோவா என்ற சொல்லுக்கான பொருளைத் தெளிவாக அறிய இயலவில்லையென்றும், Console என்றுபொருள் கூறலாம் என்றும் கூறினர். இதற்குத் தெம்பு, ஆறுதல், தெளிவு என்று பொருள் அறியலாம். இவை நோவா என்ற சொல்லோடு தொடர்பற்றவையே எனலாம்.

நா என்ற தமிழின் வேர்ச்சொல்: நா என்ற வேர்ச்சொல், நீளத்தைக் குறித்தது.

நா = நாகம்: நீளமான பாம்பு. நாகம் கருமைநிறமாக விருந்ததால், நாகம் கருமையெனப்பட்டது

நா - நாகம்: கருமை.

நாகல் : கருமைநிறம் கொண்ட பழம்.

நாகர் : கரிய நிறமாந்தர். நாகத்தை வழிபட்டவர் என்ற கருத்தும் உண்டு.

நாகர் + பட்டிணம் = நாகப்பட்டிணம் - நாகப்பட்டிணம்.

நாகர் +ஊர் = நாகரூர் - நாகூர்.

நாகர் +ஈசுவரம் = நாகரீசுவரம் - நாகேசுவரம்.

நாகர் + கோயில் = நாகர்கோயில்

நாகர் + உலகம் = நாகருலகம் - நாக லோகம் (சமற்கிருதம்)

நாகர் என்போர் கரியநிறம் கொண்ட காட்டு மாந்தர் எனவும், கல்வியறிவற்றவர்கள் என்றும் மணிமேகலை கூறுகிறது. அவர்கள் புத்த சமயத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நாகரிக மாந்தராக மாறினர் என்ற கருத்து சமய நோக்கில் கூறப்பட்டது.

நாகர் இலை வளவினை tante - பரிபாடல்.[12]

பூமுடி நாகர் நகர் - பரிபாட்டு திரட்டு.[13]

நாகபுரமிது நன்னகர் ஆள்வோன்- மணிமேகலை[14]

நக்க சாரணர் நாகர் வாழ்மலை - மணிமேகலை.[15]

மடமா நாடு பிணைப் பயிரழைப்பின் - புறநானூறு[17]

கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாடு - குறுந்தொகை[18]

நாகுடி நயந்த முளைக்கோட் டிளங் களிறு - குறுந்தொகை[19]

நாகம்- நாகா என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

நாகர் - நாகோர் என்று எபிறேய மொழியில் திரிந்தது. நாகோர் என்பது பெயர்ச் சொல்லாக உள்ளது. அபிறகாம் என்ற எபிறேய இனத்தின் தந்தையின் பாட்டனாகவும், உடன்பிறந்தானாகவும் சொல்லப்பட்டுள்ளது.[20]

பாட்டனின் பெயரைப் பெயரனுக்கு வைப்பதென்பது தமிழர் மரபு. இங்கு பாட்டனும் பெயரனும் ஒரே பெயரில் அறியப் பட்டுள்ளனர் என்பதை நோக்குக.

நாகோர் (எபிறேயம்): பொருளும், மூலமும் தெரியவில்லையென எபிறேய மொழியியலார் கூறுகின்றனர்.[21]

நாகோர் என்ற எபிறேயச் சொல், நாகர் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. நாகோர் என்பவன் ஒரு பெருங்குழுவின் தலைவனாக (Patriarch)க் கருதப்படுகின்றான். இப் பெயரி லேயே ஒரூரும் வடமேற்கு மெசபத்தோமியாவில் அறியப்பட் டுள்ளது.[22] (ஊர்ப் பெயரைக்கொண்டு மாந்தப் பெயர்களும் சொல்லப்படுவதும் தமிழர் மரபாகும். விருத்தாச்சலம், சிதம் பரம், பழனி,திருப்பதி போன்ற பெயர்களை ஒப்புநோக்குக). அறமியர்கள் என்று அறியப்படும் பல இனக் குழுக்களின் தலைவனாக நாகோர் என்ற பெயரை, அசீரியக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.[23] எனவே,நாகோர் மரபைச் சார்ந்தவர்கள் கரிய நிறம் கொண்டவர்களே என்பதை அறியலாம். நாகோர் என்பானின் பெயரன் ஒருவன் கரிய நிறமாக இல்லாமல், வெள்ளை நிறத்தவனாக இருந்த கரணியம் பற்றி அவனை "வெள்ளையன்" என்றே அழைத்துள்ளனர். வெள்ளையன் என்ற பொருளைத் தரும் இலெபன் (Leban) என்ற பெயர் அவனைக் குறிப்பதாகும்.[24] இலவு என்ற தமிழ்ச் சொல்லுக்கு வெண்மை என்பதே பொருளாகும். இலவன் என்பதே லெபன் என்று எபிறேய மொழயில் திரிந்துள்ளது.

இலவு இதழ் புரையும் இன்மொழித் துவர்வாய் - பொருநராற்றுப்படை.[25]

இனி,நோவா என்ற சொல்லைக் காணலாம். இச்சொல்லுக்கான பொருள் தெரியவில்லை என்று ஒருகுறிப்பும், Console என்ற சொற்பொருளாயிருக்கலாம் என்று ஒரு குறிப்பும் தெரிவிக்கின்றன.[26] நோவா என்ற சொல்லுக்கான வேர்ச்சொல்லை, எபிறேய மொழியியலாளர்களால் அறிய இயலவில்லை.

நா என்ற தமிழின் வேர்ச்சொல், நாவு எனவும் நீண்டது.

நா - நாவு = நீளமான நாக்கு.

நாவல் : நீளமாக அல்லது உயரமாக வளரும் (நாவல்) மரம். ஆற்றங்கரைகளில் இம்மரங்கள் காணப்படும். நாகல் = கருமை; நாவல் = உயரமான,என இரு பொருளாலும் இம்மரம் அறியப்படும்.

நாவல் என்பற்கு நீளமான, விரிவான, வளர்ந்த, உயர்ந்த என்றவாறு இடத்திற் கேற்றவாறு பொருள்விரியும்.

நா + வாய் என்பது வழியெனப்படும். நாவாய் = நீண்ட வழி.

வாய் = வழி. காவிரிப் புதுநீர்க் கழுவரல் வாய்த்தலை - சிலப்பதி காரம்.[27]

நா +அலம் + தீவு = நாவலந்தீவு. நான்கு புறமும் கடல்சூழ்ந்த நீண்ட கரைகளையுடைய நாடு.

நா - நீண்ட : அலம் = நீர் அல்லது கடல்.

அலம் =நீர் ; அலம்புதல் = நீரைக் கலக்குதல்; அலம் வருதல் = நீர் சுழன்று வருதல்.

நாவலந் தண் மொழின் மன்னர் - சிலப்பதிகாரம் 17:3.

நா + அலர் = நாவலர். நீற்றொழுக்கு போல் பேசும் நாவல்லார். நா =பேச்சு.

நாவல்லார் என்பதே நாவலர் எனச் சுருங்கிற்று எனவும் கொள்ளலாம்.

நாவாய் : நீண்ட வழியில் செல்லும் அல்லது கடலில் செல்லும் மரக்கலம்.

நால்வாய் என்பதே, நாவாய் என்றுச் சொல்லப்பட்டதாகவும் கூறுவர்.

நால்வாய் = தொங்குகின்ற வாயையுடைய விலங்கின் முகம்கொண்ட மரக்கலம்.

எப்பொருளாயினும் நாவாய் என்பது மரக்கலமே என்பதில் ஐயமில்லை.

நாவாய், நாவியென்றும் சொல்லப்படும்.

ஓங்குநீர் மாடமொடு நாவாய் இயக்கி - சிலப்பதிகாரம்[28]

வங்க நாவி = இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

பொதுவிதி: தமிழில் நெடிலாகத் தொடங்கும் சொல்லின் முதல் எழுத்துள்ள, எபிறேய மொழியில் ஓகாரமாகத் திரிந்து, தமிழ்ப் பொருளையே தந்துள்ளன.

அதற்கான எடுத்துக்காட்டு : நாவாய். நா என்ற முதல் நெடில் எழுத்து, நோ என்றவாறு திரிந்தது.

மேலும் சில சொற்களாவன:

நாடு - நோடு -(Nod - Country) = நா - நோ ஆயிற்று.[30]

தாமம் - டோம் (Don -Red) = தா - தோ - ஆயிற்று.[31]

யாறு - யோறு (Yor - river) = யா = யோ ஆயிற்று.[32]

காழன் - கோழன் (Gozan-rock) = கா - கோ ஆயிற்று.[33]

தமிழின் வகரம் சமற்கிருதத்தில் பகரம் ஆவதுபோல்,

கிரேக்கத்தில் P என்ற ஒலிப்பு, ஆங்கிலத்தில் F ஆக மாறுவது போல்,

தமிழில் நா வென்ற நெடில், எபிரேய மொழியில் நோ என்ற நெடிலாயிற்று.

நாவாய் என்ற சொல், நோவா எனத் திரிந்தது.

மரக்கலத்தின் உதவியால் வெள்ளத்தினின்றும் காக்கப்பட்ட அம்மாந்தனை, மரக்கலத்தின் பெயராலேயே நாவாய்க்காரன் என அழைத்தனர்.

தமிழில், மரக்கலத்துக்கு ஏராளமான சொற்கள் உள்ளன. தற்போது கண்டறியப்பட்டுள்ளவை 300க்கும் மேற்பட்ட சொற்களாகும். அவைகளில் ஏறக்குறைய 30 சொற்களே இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத வழக்கிலுள்ள சொற்களைப் பதிவு செய்யும் பணிகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, வழியாக நடைபெற்று வருகின்றன. இலக்கியங்களில் காணப்படும் மரக்கலங்கள் பற்றிய சொற்கள் வருமாறு.

அம்பி[34], புணை,[35] திமில்,[36] நாவாய்,[37] வங்கம்,[38] கலம்,[39] தோணி[40], ஒடம்,[41] படகு,[42] மடவை[43], மிதவை,[44] சோங்கு,[45] தெப்பம்,[46] கைப்பரிசு,[47] கப்பல்[48] எனவிரியும்[49].

மேற்கண்ட பெயர்களில் தெப்பம் என்பது இடைக்கால இலக்கியச் சொல்லாகக் கருதப்பட்டாலும், கி.மு. 3000 ஆண்டுக்கால பழமைவாய்ந்த சொல்லாகவே அது கருதப் படுகின்றது.

தள் என்ற தமிழின் வேர்ச் சொல்லானது துள் என விரிந்தது.

தள்-துள் - துள்ளு- துள்ளி = ஒன்றிலிருந்து விடுபட்டு மேலெழுதல். துள்ளல் = குதித்தல்.

தள் - துள் -தெள் - தெளி = மேல் எழுதல் அல்லது மிதத்தல். தெளிவு = நீரில் மிதக்கும் பொருள்.

தெளி : கையிலுள்ள பொருளை அல்லது நீரை வீசியெறிதல்.

தெளி: அல்லனவற்றைத் தனியே அகற்றுதல்.

தெளி: கருத்துக் குழப்பங்களின் முடிவில், சரியானவற்றைத் தேர்வு செய்தல்.

தெளி : பதர்களைப் புடைத்து நீக்குதல்

தெளிதல் : ஐயங்கள் நீங்கி சரியான கருத்தினைப் பெறுதல்.

தெளிதல் என்பது கல்வியென்ற பொருளையும் குறிக்கும்.

தெள் =மேல் எழுதல் அல்லது மிதத்தல்.

பை = அழகு என்றும், கூடையென்றும், கலம் என்றும் பொருள்விரியும்.

கலம் என்பது மரக்கலத்தையும் குறிக்கும்.

தெள் +பை = தெற்பை = மிதக்கும் அழகிய கலம்.

தெப்பை - தெப்பை என்று சொல்லப்படும்.

தெப்பை என்ற சொல்லே, தெப்பம் என்றும் சொல்லப்பட்டது.

தெப்பம்- மிதக்கும் மரக்கலம்.

தெப்பை - தெப்பம் என்ற தமிழ்ச்சொல், தெப்ப (Tebbah) **என்று** எபிறேய மொழியில் திரிந்துள்ளது.

நோவா என்பவன் செய்த மரக்கலத்தை, தெப்ப என்று எபிறேயச் சொல்லால் பதிவு செய்துள்ளனர்.[50]

மெசபத்தோமிய மொழியிலும் தெப்ப என்ற சொல்லே காணப்படுவதால், மேற்கித்திய குடியேற்றத் தமிழர்கள் தெப்பை - அல்லது தெப்பம் என்றசொல்லையே மரக்கலத்திற்குப் பயன் படுத்தினர் என்று தெளிவாகின்றது. இந்நிலையில் நோவா (Noah) என்றசொல், கி.மு. 2000 ஆண்டுகளில் பாலத்தீனத்தில் பேசப்பட்டிருக்க வேண்டும்எனக் கருத இடமுண்டு.

நாவாய் என்ற சொல்லைக் காட்டிலும் தெப்பம் என்பது விரிவான, விளக்கமான, ஆழமான பழந்தமிழ்ச் சொல்லாகும்.

செமிட்டிக் மொழிகளில், எபிறேய மொழியில் மட்டுமே நோவா என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதால், செமிட்டிக் மொழிகளில் மிகவும் இளைய மொழியாக எபிறேயத்தைக் கருதலாம். அக்காடியம், அரபு,கனானியம், எகிப்தியம் ஆகிய செமிட்டிக் இன மொழிகள், எபிறேயத்தினும் மூத்த மொழி களாம்.

எபிறேயம் உள்ளிட்ட செமிட்டிக் மொழிச் சொற்களில் பெரும்பான்மையானவைகளைப் பெற்று வரலாற்றுக் காலத்தில்

உருவான மொழியே கிரேக்கம் கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பிறகே கிரேக்கத்தின் பல்வேறு நகரங்களில் பேசப்பட்டு வந்த இலக்கண மற்ற கொச்சையான மொழியை செம்மைப்படுத்தி, கிரேக்கம் என்ற மொழியை உருவாக்கினர். சமற்கிருதத்தைப் போன்றே (செமிட்டிக் மொழிகளின் இலக்கண அமைவு களாகக் கொண்டு) செம்மைப்படுத்தப்பட்டது தான் கிரேக்க மொழியாகும். இதன் வரி வடிவங்களும் கூட, ஃபோனிசீயர் களிட மிருந்து கடன்பெற்றவைகளே. காட்மஸ் (Cadmus) என்ற ஃபோனீசிய வணிகரே, கிரேக்க நெடுங்கணக்கு முறை உருவாகக் கரணியமாயிருந்தவர் என்று எரடோட்டஸ் கூறுகிறார்.[51]

எபிறேய மொழிக்கும் காலத்தால் பிந்திய மொழியான கிரேக்கம், நோவா என்ற சொல்லை எடுத்துக்கொண்டது. பழைய கிரேக்க மொழிகளில் நோவா என்ற சொல் காணப்பட வில்லை. எபிறேய மொழியில் நோவா என்றசொல் மரக் கலத்தைக் குறித்தே சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்பது, கிரேக்கம் அச்சொல்லுக்குப் பொருள் கூறுவதால் அறிந்து கொள்ளலாம். ஆனால் பிற்காலத்து எபிறேய மொழி அறிஞர் கள், நோவா என்றசொல்லை எம்மொழியோடு தொடர்பு படுத்துவது எனத் தெரியாமல் விட்டுவிட்டனர் எனலாம்.

கிரேக்க மொழியில் நாவிஸ் (Navis) என்ற சொல் மரக் கலத்தைக் குறித்தது. இச்சொல் எம்மொழியிலிருந்து எடுக்கப் பட்டது என்ற விளக்கத்தை பிற்கால மொழியியலார் அறிய வில்லை. நாவிஸ் என்பது மூலச்சொல்லன்று என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. நாவிஸ் என்ற சொல்லுக் கான மூலச்சொல், நோவா என்ற எபிறேயச் சொல்லே[52]

Navis - *(கிரேக்கம்) :* மரக்கலம், கப்பல் எனவிரியும்.[53]

Navalis *(இலத்தீன்) :* நேவிஸ் என்ற சொல்லினின்றும் நீண்டது.

Nafa *(செர்மானியம்)* - சூயகய *(பழைய ஆங்கிலம்).*

Navy *: (ஆங்கிலம்) :* கப்பற் படை.

Origin : Middle English word from Old French Navie, ship from the Popular Latin word Navia, from Navis the Greek word.

Naval : Relating to Navy.

தொடக்கத்தில் கிறித்துவத் தேவாலயங்கள் சிலுவை வடிவில் கட்டப்பெற்றன. வலது இடதுபுறங்கள் நீக்கிய மையப் பகுதி அல்லது பகுதியை, கப்பல் பகுதி என்றே அழைத்தனர்.

அதன் வழியில் அப்பகுதி Nave என்ற சொல் பயன்படுத்தப் பட்டது.

Navis என்ற கிரேக்கச் சொல்லை மூலச் சொல்லாகக் கொண்டு, கப்பல் தொடர்புடைய Naval, Navigable, Navigete, Navigation, Navigaor போன்ற ஆங்கிலச் சொற்கள் பிறந்தன.

செய்தி ஊடகங்கள் இல்லாத அக்காலத்து மக்களுக்கு, புதுப்புதுத் தகவல்களை அளித்துவந்தவர்கள், கப்பலில் உலகம் சுற்றிய பயணிகளே ஆவர். இதனால் கப்பல்காரர்கள் தரும் செய்திகளும் Novus எனப்பட்டன. இது Navis என்ற சொல் லின் நீட்சியே.

Novus (Greek) - Novicus (Latin) : Novice(English).

Novice என்ற சொல் புதியவை என அறியப்பட்டதால், பிற்காலத்தில் துறவற மடங்கள், கல்விச் சாலைகளில் சேரும் புதியவர்களையும் நோவிஸ் என்றே அழைத்தனர். இப்புதியவர் களுக்கான பயிற்சிக் கூடங்கள் Novitiate எனப்பட்டன. இதன் அடிப்படையில் புதியன

நோவா (Nova) என்ற சொல்லால் குறிக்கப்பட்டது.
Nova = New Things.

அக்காலத்தில் சிறுகதைகளே எழுதப்பட்டன. தொடர்கதை எழுதும் வழக்குத் தோன்றிய போது அக்கதைகளைப் புதியவை என்ற பொருளில் Nova- Novel என்றனர்.

Novel : A fictions Prose nerrative of book length. New story.[52]

மேற்கண்ட சொற்களோடு இன்னும் பல சொற்கள் கிரேக்க, இலத்தீன், பிரெஞ்சு செர்மானியம் ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் விரிந்தன.

நாவாய் என்ற தமிழ்ச் சொல் எத்தனை யெத்தனைச் சொற்களை ஐரோப்பிய மொழிகளில் உருவாக்கியுள்ள செய் தியை இன்றும்கூட மேற்கித்திய மொழியியலார் அறிந்திருக்க வில்லை. நாவாய் என்ற சொல், ஒரு வரலாற்றுத் திருப்புமுனை யாக அமைந்த சொல் என்பதில் ஐயமில்லை.

கப்பல் என்ற தமிழ்ச்சொல்லே, Skip - skipian - scipian - scip - ship எனத் திரிந்ததாகப் பாவாணர் விளக்குகிறார்.[52]

கலம் என்ற சொல்லும் மரக்கலத்தையே குறிக்கும் Galea என்ற இலத்தீன் சொல்லும் கலத்தையே குறித்தது.

உலக வரலாற்றில் கடல் மேலாண்மைக் கொண்டிருந்தவன் தமிழன் என்பதற்கு மரக்கலத்திற்குத் தமிழில் அறியப்படும் பெயர்களே சான்றுகளாக அமையும். நான்கு புறமும் கடலால் சூழப்பெற்றிருந்த குமரிக் கண்டத்தின் பண்டைய மன்னர்கள்கூட மீனவர்களாயிருந்திருக்க வேண்டும். அது பற்றியே மீனைத் தனது ஆட்சி முத்திரையாக அம்மன்னர்கள் மரபு தேர்வு செய்தது. உலகின் பழமையான மன்னர் களாக மீன் மரபினரே (Fish Dynasty) அறியப்படுகின்றனர். நோவா என்று அறியப்படும் வெள்ள நாயகன் கூட ஒரு மீனவனாக இருந்ததால், மிகப்பெரிய கப்பல் ஒன்றை, கட்டிக்கொள்ள முடிந்தது. மீனைச் சிறப்பித்தக் குடியேற்றத் தமிழன், மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்த போதும், மீனின் உடலையும், மாந்தத் தலையையும் கொண்ட"யா" என்ற கடவுளையே வழிபட்டதாக, செய்திகள் கூறுகின்றன. இக்கடவுள் பெண் உருவையும் தன்னுள்ளே கொண்டிருந்ததாக அறியப்படுகின்றது. கடவுள் என்பது ஆண்-பெண் இணைந்த ஆற்றலே என்பது அதன் கருத்தாகும். மெசபத்தோமிய மக்களுக்கு வானிலையும், கணக்கியலையும், அறிவியலையும் கற்றுத் தந்தவன், யா என்ற மீன் கடவுளே என்று அந்நாட்டுச் செய்திகள் கூறுகின்றன.

மீனே கடவுள்: மீனைப் பெண்மையோடும், பெண்ணின் விழிகளோடும் ஒப்பிட்டுக் காட்டும் இலக்கிய மரபு தமிழில் உண்டு. கயல்விழி என்ற பெயர் இந்த உருவகத்தை வெளிப்படுத்தும். யா என்ற பெண்ணின் பிறப்புறுப்பாகவே மீன் உருவகப் படுத்தப்பட்டதாகவும் செய்திகள் உண்டு. யா வின் பெண்ணுறுப்பினின்றும் பீறிட்டு வெளிவந்த நீரே, இவ்வுலக மக்களைத் தூய்மைப்படுத்தியதாக ஒரு நம்பிக்கையிருந்தது. யாநீர் ஊற்றெடுத்த இடம், யாநீ என்றே அழைக்கப்பட்டதாகவும் ஒரு கருத்துண்டு. யா நீ என்ற சொல்லே, பிற்காலத்தில் யோனி என்று திரிந்ததாகவும் கொள்ளப்படும். யோனி என்பது சமற்கிருதச் சொல்லென அறியப்பட்டது தவறான சிந்தனையாகும்.

சீன மொழியில் யோனி என்பது, ஈன் என்று சொல்லப் பட்டது. (Yoni turns as yin). இவளைப் பெண் கடவுளாகச் சீனர்கள் போற்றினர். கிரேக்கர்கள் மீன் சின்னத்தைத் தங்களது சமயத்தில் இணைத்துக் கொண்டனர். உலகின் மக்கள் பெருக்கத்துக்கு மீன் கடவுளே கரணிமாகச் சொல்லப்பட்டான். (மீன் வெளிப்படுத்தும் முட்டைகள் இலக்கக்கணக்கானவை என்பதை

நோக்குக). தமிழ் மரபில் குறிஞ்சிக் கடவுளின் மனைவியாக மீனவப் பெண் இணைக்கப்பட்டாள். இவள் மீனாள் என்றும் இவள் ஆளுகை மீனாட்சி என்றும் சொல்லப்பட்டன.

இயேசு கிறித்து பிறந்தபோது தோன்றியதாகக் கூறப்படும் மீன் (Star of Bethlehem) உண்மையில் மீனல்லவென்றும், அது ஒரு வானியல் விந்தையென்றும் வானியலார் கூறுகின்றனர். இயேசு பிறந்த போது, சனியும் குருவும் முதன்முதலாக மீன் ஓரையில் நுழைந்த நிகழ்வே அதுவென வானியலார் கருதுகின்றனர்.[54] (A triple conjunction of saturn and Jupitor in Pisces). உலகில் அதற்கு முன்பு, மீன ஓரையில் இவ்விரு கோள்களும் நுழைந்ததை யாரும் பார்த்ததில்லை என்று சொல்லப்படுகின்றது. மீனத்தில் விந்தையான நிகழ்வோடு பிறந்த இயேசுவை, பிற்காலக் கிறித்துவர், மீனாகவே உருவகம் செய்தனர். கி.பி. 400 ஆண்டுகள் வரையிலும் இயேசுவைக் குறிக்க மீனையே வரைந்து காட்டினர். பிற்காலத்தில்தான் சிலுவை கிறித்துவின் அடையாளமாக்கப்பட்டது. ஒருமீனைப்போன்று, மக்களின் உள்ளங்களை வலைவீசிப் பிடித்த மீனவனாகவே இயேசு சொல்லப்பட்டார். அவருடைய தொண்டர்கள் பன்னிவரும் கூட மீனவர்களே என்பதைநோக்குக. வெர்ஜில் என்ற கவிஞன், இயேசுவின் பிறப்போடு அறியப்பட்ட முக்கூட்டுநிகழ்வே, புதிய பொற்காலம் என்று தனது மடலில் (Fourth Eclogue) குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தின் மீனவ மரபினரே, பிற்காலத்தில் மேலை நாட்டில் அறியப்பட்ட ஃபோனீசியர்கள் என்றும் சொல்லப் படுகின்றது. தங்களுடைய பழைய பண்பாட்டையும் நாகரிகத்தையும், அவர்கள் தமிழகம் வந்தபோது கண்டுவியந்ததாக, ஆனி ஜூசூபி என்ற இலெபனான் நாட்டு வரலாற்று ஆசிரியர் தெரிவிக்கின்றார்.

மின்னுகின்ற பொருளே மீன் எனப்பட்டது. சிந்துவெளியில் அறியப்பட்ட என்ற குறியீட்டை, மின் என்றும், மீன் (Min or Meen) என்றும் படிக்துள்ளனர்.[55] உலக நாகரிகங்களில் மீன் தனது செல்வாக்கைச் செலுத்தியுள்ளதைக் காணலாம். மெசபத்தோமிய யா கடவுள் மீன் உருவத்தைக் கொண்டவனே என்பதும்[56] அவனே வெள்ளக்காலத்தில் மாந்தன் ஒருவனைக் காத்த செய்திகளும் அறியப்படுவதை, ஆரிய வெள்ளக்கதை உறுதிப்படுத்துகின்றது. மனு என்பவனை மீன் ஒன்று

வெள்ளத்தினின்று காத்ததாக, வெள்ளப்பாழ் பற்றிய ஆரியக் கதையை மகாபாரதத் தில் காணலாம்.

குமரிக் கண்டத்துப் பாண்டிய (பண்டைய) மன்னர்கள், மீனின் சிறப்பை யுணர்ந்திருந்தனர் என்பதைத் தமிழ் இலக் கியங்கள் வெளிப்படுத்துகின்றன. தெக்கன் (தக்சன் என சமற் கிருதம் கூறும்) என்ற தெற்கித்தித் தமிழனின் மகளாகவே மீனாள் என்ற பெண் தெய்வம் அறியப்படுகின்றாள்.

நீரின் மின்னியதும், வானில் மின்னியதும் மீன் என்றே சொல்லப்பட்டன. மீனே எல் என்ற கடவுளாக வந்ததாக எபிறேய மொழியில் அறியப்படும். மீன் -எல் என்ற தமிழ்ச் சொற்கள், Manu -El என்று சொல்லப்பட்டுள்ளதை நோக்குக. எம்- மீன் - எல் என்ற தமிழ்ச்சொற்களே இம்மானுவல் (Emmanu-el) எனத் திரிந்துள்ளதை நோக்குக.

உலக மொழிகளில் மீன் என்ற தமிழ்ச்சொல் எவ்வாறு திரிபுபட்டுள்ளன என்பதை அறிக. மீன் (தமிழ்) - மீனஸ் -Mines (கிரேக்கம்) - மீனோஸ்- Minos (கிரீட்தீவு) - மீனெஸ் - Menes (எகிப்து) - மனு (Manu) (எபிறேயம்) - மெனு -Menu (ஆரியம்), மனு - (ஆரியம்).

Menu என்றுஆங்கிலத்தில் அறியப்படும் சொல்லும் மீன் என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம் என்க.

இரிக்கு வேதத்தில் மனு என்ற மீன் கூட்டம் பற்றிச் சொல் லப்பட்டுள்ளது. இது திரிசங்கு எனப்படும் தென்சிலுவை (Crux Aurstralis) என்ற மீன் கூட்டத்துக்கு அருகிலுள்ளது. இதனை நரக துரகம் என்று சமற்கிருதத்தில் அழைப்பர். செண்டாரஸ் (Centaurus) என்று கிரேக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதுவும் கூட செந்தார் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபாகவே உள்ளது. (செந்தார் = சிவந்த ஒளியுடன் மின்னும் மீன் கூட்டம்). செண் டாரசு கூட்டத்திலுள்ள ஏழு மீன்களையும் ஏழு மனுக்களாகக் கூறுவர்.

எனவே, நோவா - மரக்கலம்- கடல் -வெள்ளம்- மீன் போன்ற பல்வேறு சொற்கள், தமிழ் மூலத்தினின்றே எபிறேய மொழியில் திரிந்தன என்க.

4. முதல்மொழி

இவ்வுலகில் இன்று ஆயிரக்கணக்கான மொழிகள் அறியப் பட்டுள்ளன. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டு அறியப்பட்ட மொழிகள் பல வழக்கிழந்து போயின அல்லது சில மொழிகளோடு கலந்து புதிய மொழிகளாயின. ஒரு மொழி, சில காலங்களில் சிறப்புற்று, பின்னர் மறைந்து போவதுமுண்டு. ஆட்சியும் அதிகாரமும் கொண்டிருந்த இனக் குழுக்கள் பேசிய மொழிகள், அவர்களது காலத்தில் சிறந்த மொழிகளாகக் கருதப்பட்டன. பின்னர் வழக்கிழந்து போயின. ஒரு மொழி யின் பரவலுக்கு, அம்மொழியைப் பேசிய இனத்தின் பரவலான குடியேற்றங்களும் கரணியங்களாக அமைந்திருந்தன. தற்காலத்திய ஆங்கில மொழி அதற்கான அண்மை எடுத்துக்காட் டாகும்.

உலகில் முதன்முதலில் ஒரு மொழியே தோன்றியிருக்க வேண்டும் என்றும், அம்மொழியே பிற்காலத்தில் பன்மொழி களாகக் கிளைத்திருக்க வேண்டும் என்றும் நோவாம்ஸ்கி கருதுகின்றார். முதல் மொழியைப் பேசிய இனமே, முதல் இன மாகவும் கருதுப்படல் வேண்டும். இவ்வுலகில் தோன்றிய முதல் இனம் எது, முதன் மொழி எது என்பதை இதுவரையில் எந்த மொழியியல் ஆய்வாளர்களாலும் உறுதி செய்ய இயலவில்லை. ஆனாலும், முதல் இனம் தோன்றியது நிலநடுக்கோட்டுப் பகுதி களில் தான் என்றும் அங்கிருந்தே உலகின் பிற பகுதிகளுக்கு அவ்வினம் பரவிச் சென்றது என்றும் அறிவியலார் கருதுவ தால், ஆப்பிரிக்கா முதல், இந்தோனேசியா வரையிலான ஏதோவொரு பகுதியில் தான் முதல் இனமும் முதல் மொழியும் தோன்றின என அறிவியலார் கருதுகின்றனர்.

நில நடுக்கோட்டுப் பகுதியில் தோன்றிய இனம் கருப்பி னமே என்று கருதப்படுவதால், அவ்வினமே முதன்மொழி யையும் பேசியிருக்க வேண்டும். கிறித்து பிறப்பாண்டுகளில்

ஸ்பெயின் முதல் இந்தோனேசியா வரையிலான நாடுகள் பற்றிய செய்திகள் வரலாற்றில் அறியப்படுகின்றன. அக்காலத்தில் அறியப்பட்டிருந்த மொழிகள் பற்றிய சான்றுகள், பல்வேறு இலக்கியங்களின் வாயிலாக அறியப்பட்டுள்ள நிலையில், அம் மொழிகளைப் பற்றி ஆய்வுகள் மேற்கொண்ட தற்கால மொழி யியலார், அப்பகுதிகளில் அன்று பேசப்பட்ட மொழிகளிடை யே ஒற்றுமைகளும் உறவுகளும் காணப்பட்ட செய்திகளை, விளக்கியுள்ளனர்.

கி.மு. 4000 ஆண்டுகளில், மக்களினம் வாழ்ந்திருந்த நிலப் பரப்பு, எகிப்து முதல் இந்தியா வரையிலேயே அறியப்பட் டிருந்தது. அக்கால அளவுகளில் பேசப்பட்ட அந்நிலப்பரப் பின் எல்லைகளுக்குள் வாழ்ந்திருந்த மொழிகளிடையேயும் ஒரு பொதுமைத்தன்மை கண்டறியப்பட்டுள்ளது. எனவே, ஒரு மூலமொழியினின்றே உலகின் பன்மொழிகளும் கிளைத்தன என்ற கருத்தினை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை எனலாம். அம்மூலமொழி எதுவென்பதில்தான், அறிஞர்களிடையே முரண்பாடுகள் நிலவுகின்றன. அம்மொழியை மூலமொழி யென்றே (Proto language) ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அம் மூலமொழி எதுவென, அக்கால இலக்கியங்களும் விளக்கித் தெளிவுபடுத்தவில்லை.

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மொழிகளில், செமிட் டிக் மொழியினத்தையே ஆய்வாளர்கள் முதன்மைப்படுத்தி னாலும், அந்த செமிட்டிக் மொழியினமும் ஒரு மூலமொழியி னின்றே கிளைத்தன வென்பதையும் அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். செமிட்டிக் மொழியினம், இன்றைக்குக் கிடைத்துள்ள செமிட்டிக் மொழியினத்துக்கும் மூல மொழி யிருந்த செய்தியை, விவிலியம் தெளிவுபடுத்துகின்றது. அம்மூல மொழி எதுவென்ற செய்தி விவிலியத்தில் விளக்கப்படவில்லை. பல்லாயிரம் ஆண்டுகளாகச் விவிலியச் செய்திகள் எழுதப்பட்டன. அவை பல்வேறு கால அளவுகளில் சேர்க்கை நீக்கல்களுக்குட் பட்டசெய்திகளும் அறியப்பட்டு, கி.மு. 300 ஆண்டுகளில், தற்போது அறியப்படும் விவிலியம் தொகுக்கப்பட்டது.

பல்லாயிரம் ஆண்டுகளாகப் பேசப்பட்டு வந்த மொழி களின் மூலமொழி பற்றி, கி.மு. 1250 ஆண்டுகளில் வாழ்ந்திருந்த விவிலிய ஆசிரியர் அல்லது ஆசிரியர்கள் அறிந்திருக்க வாய்ப் பில்லை. என்றாலும், மெசபத்தோமியாவிற்குக் கிழக்கே வாழ்ந்

திருந்த மக்கள் பேசிய மொழியே, செமிட்டிக் இன மொழி களுக்கான மூலமொழியென்பதை உறுதி செய்துள்ளனர். இந்த அளவுக்கான மொழிகள் பற்றிய செய்திகள், விவிலியத்திற்கு முன்பே, கி.மு. 3000 ஆண்டுகளில் அறியப்பட்டிருந்த மெசபத் தோமிய, எகிப்திய, சுமேரிய இலக்கியங்களில் காணப்பட வில்லை.

ஓரினத்தின் வரலாறு அறியப்பட்டாலொழிய அவ்வினம் பேசிய மொழி பற்றிய செய்திகளை அறிய வாய்ப்பில்லையென் பதால், செமிட்டிக் மொழிகள் பேசிய மக்களின் வரலாற்றை அறியவேண்டிய நிலையில், அம்மக்களின் வரலாறுகளும் ஆய்வு செய்யப்பட்டன. அவையும் கூட, உறுதியான கொள் கையொன்றை எட்டுவதற்கானத் தகவல்களை அளிக்கவில்லை. இன்றைய சூழலில், உலகின் முதன்மொழி எதுவென அறிவ தற்கு மெசபத்தோமிய, எகிப்திய, சுமேரிய, எபிறேய மொழி யிலக்கியங்களே பெரிதும் பயன்படும் என்ற அளவில், அவை களில் சொல்லப்பட்டுள்ள தகவல்களை அடிப்படைகளாகக் கொண்டே ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்கண்ட இலக்கியங்கள் எழுதப்பட்ட கால அளவுகளுக்கு இணையான இலக்கியங்கள் எவையும், இந்தியாவிலோ மற்றக் கிழக்கு நாடுகளிலோ அறியப்படவில்லை.

இந்தியநாட்டின் வரலாறு, மெசபத்தோமிய வரலாற்றுக்கும் முற்பட்டது என்றாலும், அதனை நிறுவுவதற்கானச் சான்றுகள் இந்தியாவில் கிடைக்கவில்லை. தமிழில் அறியப்பட்டுள்ள தொல்காப்பியம் என்ற நூலும், இரிக்கு முதலிய வேத நூல் களும் வரலாற்றுக் காலத்தில் தொகுக்கப்பட்டவைகளாகவே கருதப்படுகின்றன. இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு செய்திகள், அக்கால மக்களின் வாழ்க்கை முறை களை வெளிக்கொணர்வனவாக உள்ளன. அவையாவும், கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்வுற்றவைகளாகவே, பிற செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்த்து உறுதி செய்யப்பட்டுள்ளன. மொழியைப் பற்றிய செய்திகள் எவற்றையும் இரிக்கு வேதம் தெளிவுபடுத்தவில்லை.

தொல்காப்பியம் முழுக்க முழுக்க மொழியையும் அதன் இயல்புகளையும் அடிப்படைகளாகக் கொண்டு எழுதப்பட் டுள்ளது. இந்நூலில் சொல்லப்பட்டுள்ளவை, எழுதப்படுவதற்கு முன்பிருந்த அறிஞர்களின் கூற்றுகளிலிருந்தே பெற்று அதனைத்

திருப்பிச் சொல்வதாக, தொல்காப்பியர் என்ற அந்நூலின் ஆசிரியர் பல்வேறு இடங்களில் தெளிவுபடுத்துகிறார். அந் நூல் தெளிவுபடுத்தும் கால அளவு, கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டும் நீண்டிருக்கலாம் எனக் கருத இட முண்டு. ஆனால், ஒரு மொழியின் எழுத்து, சொல், வாக்கிய அமைப்பு, அதன் அறிவியல் சார்ந்த இலக்கண அமைவுகள் பற்றிய மிக விரிவான தாகவும், இன்றைய பயன்பாட்டில் உள்ளதாகவும் அறியப் படும் வகையில், மிகவும் பழமையானதுமான தொல்காப்பியம், கிழக்கித்திய மொழியான தமிழ்மொழி பற்றிய விளக்கமான செய்திகளைத் தருகின்றது. இந்நூலில் காணப்படும் செய்திகள் பலவும், ஏற்கனவே அறியப்பட்டிருந்த பல்வேறு நூல்களி லிருந்து எடுக்கப்பட்டவைகளே என்பதை, அந்நூலின் ஆசிரி யரே தெளிவுபடுத்துகிறார். ஆனால் அந்த மேற்கோள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும் கி.மு. 5000ஆண்டுகளில், தமிழ்மொழியில் பல்வேறு இலக்கியங்கள் இயற்றப்பட்டி ருந்தன என்பதை தொல் காப்பியம் உறுதி செய்கின்றது.

தொல்காப்பியம் குறிப்பிடும் மேற்கோள் நூல்கள் அறியப் பட்டிருந்த காலத்தில்தான் மெசபத்தோமிய, சுமேரிய இலக்கி யங்களும்அறியப்பட்டுள்ளன.[1] ஆனால் அவை, மொழிகள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடவில்லை. எபிறேய மொழி இலக்கியமான விவிலியம் மட்டுமே, மொழிகள் தொடர்பான சில செய்திகளைத் தருகின்றது. அச்செய்திகளை அடிப்படை யாகக் கொண்டே, மொழிகள் பற்றிய ஆய்வுகளைத் தொடர மேற்கித்திய மொழியியலார் முயன்றனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த வெற்றியினை அவர்களால் எட்ட இயலவில்லை. இந்நிலையை ஒளிவு மறைவில்லாமல் அவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். பல்வேறு கண்ணோட்டங்களில் முயன்று வெற்றி இலக்கை அடையமுடியாத மேற்கித்திய ஆய்வாளர் களின் பார்வையினின்றும் மாறுபட்டு, புதியதோர் கண் ணோட்டத்தில் அம்மேற்கித்திய இலக்கியங்களை ஆய்வு செய் யும் முயற்சி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கித்திய இலக்கியங்கள் யாவும், கிழக்கித்திய மக்களின் மரபினரால் தொகுக்கப்பட்டவைகளே என்பதால், கிழக்கித்திய மக்களின் வரலாற்றை அறியாமல் அவ்விலக்கியங்களை ஆய்வு செய்வதில் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. உலக வரலாற்றை ஆய்வு செய்தவர்களும் தொகுத்தவர்களும், இடையில்

எங்கோவோரிடத்தில் நுழைந்து வரலாற்றைத் தொடங்கி னர். அதனாலேயே பல்வேறு வரலாறுகள் தொடர்பற்று, சங்கிலித்துண்டுகள் போல், ஆங்காங்கே சிதறிக் கிடக்கி. செமிட்டிக் மொழிகளைப் பேசிய மக்களின் முன்னோர் கிழக் கேயிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களே என்பதை விவிலியம் தெளிவாகக் கூறுகிறது. ஆனால், அக்கிழக்கு நாட்டின் வரலாற்றை அறிய முற்படாமல், மேற்கித்திய ஆய்வாளர்கள், தைகிரீசு ஆற்றங்கரையிலிருந்தே தங்களது மொழி ஆய்வுகளைத் தொடர் கியுள்ளனர். அதற்கான கரணியம் யாதெனில், கிழக்கித்திய வரலாறு அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை யென்பதுதான். அதைத்தெரிந்து கொள்வதற்கான முயற்சிகள் எவற்றையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. ஆனாலும் மெசபத்தோமிய மொழிகளைப் பற்றி வியத்தகு ஆய்வு முடிவுகளை அவர்கள் கண்டறிந்துள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. பல்வேறு கமுக்கமான செய்திகளையும், அச்செய்திகளின் முடிச்சுகளை யும் அவர்கள் அவிழ்த்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக, நான்கு பெரிய தூண்களைப் போன்ற கால்களையும், முறம்போன்ற இரண்டு காதுகளையும், முகத்தில் ஒரு கையையும் கொண்டு உருவத்தில் மிகவும் பெரியதாக அறியப்படும் விலங்கைப் பற்றிய குறிப்புகள் அனைத்தையும் சரியாகத் தந்துள்ள மேற்கித்திய ஆய்வாளர்கள், அந்த விலங்கை யானைதான் என்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டனர். செமிட் டிக் மொழியினம் பற்றிய கிழக்கித்தியக் கண்ணோட்டத்தி லான ஆய்வுகளுக்கு, மேற்கித்திய ஆய்வாளர்கள் பெரிதும் முயன்று, இறுதியில் சொல்லாமல், விட்ட பல செய்திகளை, இப்புதிய கண்ணோட்டத்தில் விளக்குவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

செமிட்டிக் மொழியினத்தில் இன்றும் படித்தறியக் கூடிய இலக்கியங்கள் அக்காடியம், ஃபோனீசியம், எபிறேயம், அசீரி யம்போன்ற மொழிகளிலுள்ளன. இம்மொழிகளுக்கெல்லாம் மூத்தமொழியாகச் சொல்லப்படும் முதன்மொழி பற்றி விவிலி யம் கூறும் செய்திகளைக் காணலாம்.

"இந்த உலக மக்கள் அனைவரும் அதேமொழியைப் பேசி, அம்மொழியின் சொற்களையே பயன்படுத்தினர்." - ஆதியாகமம், 11 ஆம் அதிகாரம், முதல் வாக்கியம்[2]

வெள்ளம் முடிவுற்றபோது, நோவா என்பானின் மரக்கலம், ஆற்றூர் என்னும் ஊரில் அல்லது இடத்தில் தரைதட்டியது. அங்குத் தரையிறங்கிய நோவாவும் அவனது மக்களும் அவ் விடத்திலேயே தங்கினர். காலப்போக்கில் நோவா, இறந்துபட, மிகவும் பல்கிப் பெருகிய அக்குடும்பத்தினர், மேற்கு நோக்கிப் பயணமாயினர்.

ஊர்ஆற்று (Ur- aartu) என்று சொல்லப்படும். இடம், ஆற்று ஊர் என்று சொல்லப்பட்டு, சொற்கள் முன்பின்னாக மாறியுள்ளதைக் காணலாம். இவ்விடம் வடக்கு மெசபத் தோமியாவில் உள்ளதெனவும்,[3] தற்காலத்திய ஆர்மீனியப் பகுதி (Armenia) எனவும் விவிலிய ஆய்வாளர்கள் கருதினர். வடக்கு மெசபத்தோமியாவி னின்றும் அம்மக்கள் தைகிரீசு ஆற்றங்கரைக்கு வந்திருந்தால், விவிலியம் கூறும் கிழக்குத்திசை என்பது பொருளற்றதாகிவிடும்.

"கிழக்கிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வந்துகொண் டிருந்த போது, அவர்கள் சின்னாற்றங்கரையிலிருந்த பள்ளத் தாக்கான நிலப்பகுதிக்கு வந்துற்று, அங்கேயே குடியமர்ந் தனர்.[4] -ஆதி. 11:2.

முதல் செய்தி, அவர்கள் அனைவரும் உலகில் அப்போது பேசப்பட்டு வந்த ஒரே மொழியைப் பேசினர் என்றும், அடுத்த செய்தி, அவர்கள் கிழக்குத் திசையிலிருந்து வந்தார்கள் என்றும், விவிலியம் தெளிவுபடுத்துகிறது.

இந்தக் குடியேற்றம் எக்காலத்தில் நிகழ்வுற்றது என்பதை விவிலியம் தெளிவுபடுத்தவில்லையாயினும், தற்காலத்திய சான்றுகளைக் கொண்டு, கி.மு. 10000 ஆண்டுகள் என்று கருதலாம். அக்காலத்தில் உலகம் என்பது, விவிலியத் தின் நோக்கில் மெசபத்தோமியாமுதல் இந்தியா வரையிலான நிலப் பகுதிகளே. "உலகிலுள்ள மக்கள்" என்ற சொற்களை விவிலியம் (The Whole world) பயன்படுத்துகிறது. எபிறேய மொழியில் ஓலம் (Olam) என்று சொல்லப்பட்டுள்ளது. உலகம் என்பதே ஓலம் எனத்திரிந்துள்ளது என்க.

மேற்கண்ட இரு வாக்கியங்களைத் திரும்பவும் படித்துப் பார்க்கும் போது, உலகம் என்ற தமிழ்ச்சொல் ஓலம் எனத் திரிந்துள்ளதையும், சின்னாறு என்ற தமிழ்ச்சொல், சினார் (Sinar) எனத் திரிந்துள்ளதையும் காணலாம்.

இது போன்ற மற்றொரு குடியேற்றம் பற்றிய செய்தியை விவிலியம் விளக்குகிறது. இக்குடியேற்றம் கி.மு. 3000 ஆண்டுகளில் நிகழ்வுற்றிருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்குடியேற்ற மக்களும், தைகிரீசு ஆற்றுக்கு (சின்னாற்றுக்கு)க் கிழக்கிலிருந்துவந்தவர்கள் என்பதைச் சுட்டி, சின்னாற்றுக்கு அப்பாலிருந்து (beyond the river sinar) வந்தவர்கள் என்ற பொருளில், அப்புறத்து மக்கள் என்று குறிப்பிடுகின்றனர். அப்புற (Appura) என்ற தமிழ்ச் சொல், அப்பிறு (Appiru or Apiru) எனத்திரிந்துள்ளது. Apiru என்ற சொல்லுக்கு, ஆற்றுக்கு அப்புறம் என்று ஆய்வாளர்கள் பொருள் கூறுகின்றனர். அப்பிறு என்ற சொல்லே, ஈப்று (Hebrew) என்று பிற்காலத்தில் சொல்லப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.[5]

இரண்டுமுறை சொல்லப்பட்ட செய்திகளிலும் ஆற்றுக்குக் கிழக்கே என்றவாறு, மக்கள் வந்த திசை குறிக்கப்பட்டுள்ளதால், தைகிரீசு ஆற்றுக்குக் கிழக்கே எந்தநாடு அக்காலத்தில் இருந்தது என்ற கேள்வி எழுகின்றது.

முதல் குடியேற்றக் காலத்தில், மெசபத்தோமியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாரசீகம் என்ற நாடு அறியப்படவில்லையாதலால், விவிலியம் குறிப்பிடும் கிழக்குத்திசை இந்திய நாட்டையே குறித்தது என்க.6 விவிலியம் குறித்த நாடு இந்திய நாட்டைத் தவிர்த்து வேறெதுவும் இருக்க வாய்ப்பில்லை.

ஆனால் இந்தியாவிலிருந்துதான் மக்கள் மெசபத்தோமியாவில் குடியேறினார்கள் என்று சொல்ல, விவிலிய ஆய்வாளர்கள் தயங்கினார்கள் என்பதை அறியலாம். ஏனெனில் இந்த ஆய்வுகள் நடைபெற்றக் காலத்தில், இந்தியாவின் தொன்மக் குடிகள் ஆரியரே என்ற கருத்து ஆய்வாளர்களிடையே இருந்தது. மிகவும் புனிதமானவர்களாகக் கருதப்பட்ட விவிலியமாந்தர்களை ஆரிய இனத்துடன் இணைக்க விவிலிய ஆய்வாளர்கள் ஒப்பவில்லை என்பதால், முதல் குடியேற்ற மக்கள், வடக்கு மெசபத்தோமியாவிலிருந்து வந்தனர் என்று பொருந்தாத விளக்கத்தை அளித்தனர் என்க.

கிழக்கிலிருந்து வந்த மக்கள், உலகெங்கும்பேசப்பட்ட அந்த ஒரு மொழியையே பேசினார்கள் என்ற செய்தியின் அடிப்படையில், அப்போது உலகில் வாழ்ந்திருந்த மக்கள் ஓரினத்தைச்

சார்ந்தவரே என்பதும், அதனாலேயே அவர்கள் ஒரு மொழி யையே பேசினார்கள் என்பதும் தெளிவாகின்றது. உலகின் முதல் மொழியான அம்மொழி, கிழக்கிலிருந்து வந்த மக்க ளால் பேசப்பட்டது என்றால், கிழக்கித்திய நாடான இந்தியா வில் பேசப்பட்டுவந்த மொழியையே அம்மக்கள் பேசினர் என்ற கருத்தை விவிலியம் ஏற்றுக் கொள்கிறது.

வெள்ள நிகழ்வுக்குப் பின், கிழக்கே பேசப்பட்ட மொழி எது என்பதை ஆய்வு செய்தால், அது தமிழ்மொழியே என்பது தெரியவரும். வெள்ளக் காலத்துக்கு முன்பிருந்த மக்கள், மெச பத்தோமியாவின் கிழக்குப் பகுதியான நாட்டில் தான் வாழ்ந் திருந்தனர் என்ற செய்தியும், விவிலியத்தில் சொல்லப்பட் டுள்ளது. வெள்ள நாயகனான நோவா என்பானுக்கு முன்னர் வாழ்ந்திருந்த ஒன்பது தலைமுறைகளும், அந்தக் கிழக்கு நாட்டில் வாழ்ந்திருந்தவர்களே என்பதையும் விவிலியம் உறுதி செய்கின்றது.[7]

விவிலியத்தின் ஆதியாகமத்தில் ஒன்றுமுதல் பத்துவரையி லான அதிகாரங்கள், நோவாவும், அவனது முன்னோர்களும் வாழ்ந்திருந்த நாட்டைப் பற்றிய செய்திகளையே கொடுத்துள் ளன. ஏற்கனவே குறிப்பிட்ட யானை விலங்கின் எடுத்துக் காட்டைப் போல, தமிழ்நாடு, தமிழ்மொழி என்று குறிப்பிட் டுக் கூறாமல், தமிழ்நாட்டைப் பற்றியும் தமிழ்மொழி பற்றிய செய்திகளையுமே அந்தப் பத்து அதிகாரங்களும் விளக்குகின்றன.

இந்தப் பத்து அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள அனைத்து செய்திகளுமே, தமிழ்நாட்டைச் சுற்றியே வலம் வருகின்றன. வெள்ளக் காலத்துக்கு முந்திய தமிழ்நாடு குமரிக் கண்டம் (Lemuriam Continent) என்றே தமிழ் இலக்கியங்களால் சுட்டப்பெறுவதால், ஆதாம் முதல் நோவா வரையிலான பத்துத் தலைமுறைகள் வாழ்ந்திருந்த நாடு குமரிக்கண்டமே எனக் கொள்க. இந்தப்பத்து அதிகாரங்களில் சொல்லப் பட்டுள்ள செய்திகள், கட்டுரைகளின் உள்ளே சொல்லப்படும் தனித்தனியான தலைப்புகளில் விளக்கப்படவுள்ளன.

மேற்கித்திய ஆய்வாளர்களும், விவிலிய ஆய்வாளர்களும், குடியேற்ற மக்கள்பேசியதாக அறியப்படும் "அந்த ஒரு மொழியை" முதன்மையாகக் கொண்டே, பிற்காலத்திய (கி.பி. 18ஆம் நூற்றாண்டில் தொடங்கிய) மொழிக்கொள்கைகளை வகுத்துள்ளனர்.[8]

கிழக்கிலிருந்து சின்னாற்றங்கரையில் குடியேறிய மக்கள் பேசிய "அந்த ஒரு மொழி" யினின்றே பல மொழிகள் கிளைத் தனவென்ற கொள்கையை மேற்கித்திய ஆய்வாளர்கள் வகுத் துள்ளனர். "அந்த ஒரு மொழி" எப்போது பன்மொழி களாகக் கிளைத்தது என்பதற்கான ஒரு கதையும் விவிலியத்தில் காணப் படுகின்றது.

சின்னாற்றங்கரையில் குடியமர்ந்த மக்கள் பிற்காலத்தில் பல்கிப் பெருகினர். அங்கு மிகச்சிறந்த நகரிய நாகரிகத்தை உருவாக்கினர் (Urban civilza-tion) இச்செய்தியால் அவர்கள் ஏற்கனவே நகரிய நாகரிக மாந்தர்களே என்ற கருத்து அறியப் படுகின்றது. கடவுளின் உதவியில்லாமலேயே இவ்வுலகில் நாகரிக மாந்த ராய் வாழலாம் எனக்கருதினர். அவ்விடத்தில் ஒரு பெரிய நகரை உருவாக்கியிருந்த அம்மக்கள், மேலும் பல குடியிருப்புகளுக்கு இடம் பற்றாக்குறையேற்பட்டதால், அந் நகரிலிருந்து நாலா திசைகளிலும் பிரிந்து சென்று, ஆங்காங்கு புதிய நகரங்களை உருவாக்கிக் கொண்டு வாழ எண்ணினர். அதற்கு முன்னதாக, தாங்கள் வாழ்ந்திருந்த ஊரில், ஒரு நினைவுக் கோபுரம் கட்டவும், அதனையே தங்களின் பிரிதலுக் கான நினைவுச் சின்னமாகக் கொள்ளவும் எண்ணி, ஒரு பெருங்கோபுரம் கட்டுவதென முடிவுசெய்தனர்.

இனி,விவிலியக் கூற்றுப்படி,[9]

"வாருங்கள், பச்சை மண்ணைக்கொண்டு செங்கற்களை வார்த்து, அவைகளைச் சூளைகளில் சுடுவோம். மிகப்பெரிய கோபுரம் ஒன்றையும், அதனைச் சுற்றி நகர் ஒன்றையும் உருவாக்குவோம். அக்கோபுரம் விண்ணைத் தொடுவதாக அமையட்டும். நாம் இங்கு வாழ்ந்திருந்ததை நினைவிற்கொள் ளவும், நமது கட்டிடக் கலைபற்றி எதிர்காலத்தவர் தெரிந்து கொள்ளவும் இது உதவட்டும். நாம் இவ் விடத்தை விட்டுப் பிரிந்துபோகுமுன் இப்பணிகளைச் செய்து முடிப்போம்" ஆதி. *11:3-4*

விவிலிய ஆய்வாளர்கள் மேற்கண்ட செய்திகளுக்கு அளிக்கும் விளக்கமாவது:

அம்மக்களுக்கு முன்பு கருங்கற்களால் கட்டிடங்கள் கட்டப்பெற்றன வென்றும், இம்மக்களே களிமண்ணைக் குழைத்து, செங்கற்களை வார்த்து, சூளையில் சுட்டெடுத்தனர்

என்றும் விளக்குகின்றனர். (சுட்ட செங்கற்களைப் பயன்படுத்தியவர்கள் பழங்காலத்துத் தமிழர்களே என்று வரலாறு கூறுகின்றது). மேலும் சாந்துப் பொருள் ஒன்றையும் (Cement) செங்கற்களை ஒட்டிப் பிணைக்கப் பயன்படுத்தினர் என்றும் குறிப்பிடுகின்றனர். அதனை "விடுமண்" என்று குறிப்பிட்டுள்ளனர். எபிறேய மொழியில், Bitumen என்று திரிந்துள்ளது. செங்கற்களிடையே இடும் மண் - விடும் மண் - விடுமண் எனப்பட்டது என்க.

(காய் தரையினின்றும் எடுக்கப்பட்டு குழைக்கப்பட்ட சாந்துப் பொருளே பிற்காலத்திய சிமெண்ட் எனப்படுவதாகும். காய்தரை என்பது கெட்டிப்பாறை அல்லது சுண்ணாம்புப் பாறையெனப்படும். மேலைநாடுகளில் கல்சுண்ணாம்பே சிமெண்டாகப் பயன்படுத்தப்பட்டது. காய் தரை என்ற தமிழ்ச் சொல், Kae dere அல்லது Cae dere என்றும் இலத்தீன் மொழியில் சொல்லப்பட்டு, Cimen tere - Ciment -Cement என்றானது)

விவிலியச் செய்தியை மேலும் தொடர்வோம்:[10]

"இப்போது இவர்கள் ஓரினமாய் இருப்பதாலும், ஒரே மொழியையே பேசுவதாலும், இப்பணியைத் தொடங்கியுள்ளனர். இப்போது இப்பணியைத் தடுத்து நிறுத்தாவிட்டாலும், ஒருவராலும் இப்பணியை நிறுத்த இயலாது. தாங்கள் எண்ணியபடி இப்பணியை முடித்தும் விடுவார்கள். ஆதலால் (நாம்) இவ்வுலகிற்கு இறங்கிச் செல்வோம்; அவர்களது ஒரே மொழியை பன்மொழிகளாக மாற்றி, ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாமல் போக வழிசெய்துவிடுவோம்" - ஆதி.11:6-7.

இயற்கையாய் ஒரு மொழியினின்றும் பல மொழிகள் கிளைப்பதற்குப் பல்வேறு கரணியங்கள் மொழியியலாரால் சொல்லப்படுகின்றன. ஒரு மொழி பேசப்படும் நாட்டின் எல்லைகள் மேலும் மேலும் விரிவடைதல், புதிய நாடுகளுக்குக் குடியேறுதல், மக்களிடையே தொடர்புகள் அற்றுப் போதல் போன்ற கரணியங்களும், பல்வேறு அறிஞர்கள் சேர்ந்து ஒரு மொழியை உருவாக்குதல் எனவும் அமையும். செயற்கையாய் உருவாக்கப்பட்ட மொழியில், அந்த நாட்டிலும், அண்டை நாடுகளிலும் பேசப்பட்ட மொழிகளின் தாக்கங்கள் இருக்கும். செயற்கையாக அறிஞர்கள் உருவாக்கிய மொழியே கிரேக்கமும், சமற்கிருதமும் ஆகும்.

கிரேக்க நகரங்களில் பேசப்பட்ட இலக்கணமற்ற கொச்சை மொழிகளோடு, செமிட்டிக் இன மொழியைக் கலந்து, ஃபோனீசியர்களின் எழுத்துக்களைப் பெற்றுக் கொண்டு, கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பின் உருவாக்கப்பட்டதே கிரேக்க மொழியாகும்.[11] கிரேக்க மொழியின் பெரும்பாலான சொற்களுக்கான மூலச்சொற்கள், செமிட்டிக் இனத்திலேயே காணப்படுகின்றன. கி.மு. 300 ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் மற்றும் ஆளுமை உயர்வு, கிரேக்க மொழிக்கு சிறப்புத் தன்மையை அளித்ததோடு, கிரேக்கர்கள் சென்ற நாடுகளிலெல்லாம், அம்மொழியும் எடுத்துச் செல்லப்பட்டது. இந்தியாவிலும் அதன் தாக்கங்கள் கிறித்துப் பிறப்பாண்டுகளில் அறியப்பட்டன.

கிரேக்க மொழிக்குப் பிறகு உருவாக்கப்பட்டதே சமற்கிருதம் ஆகும். வட இந்தியாவில் கல்விப் பணிகளில் ஈடுபட்டிருந்த தமிழ் அறிஞர்கள், தங்களுடைய பயன்பாட்டிற்காக உருவாக்கிக் கொண்ட மொழியே சமற்கிருதமாகும். இது தமிழ் மொழியின் வேரினையும் மூலத்தையும் கொண்டு உருவாக்கப்பட்டது. இவ்வாறான அறிஞர்களின் மொழி (Scribal language) பாபிலோன் நாட்டில் கூட அறியப்பட்டுள்ளது.

மெசபத்தோமியக் குடியேற்ற மக்களின் "அந்த ஒரு மொழி"யை, உலகின் பல மொழிகளாக இறைவன் கிளைக்கச் செய்தார் என்றும், கோபுரம் கட்டப் பெற்ற அந்த இடத்திலிருந்துதான் உலக மொழிகள் தோன்றின என்றும், அதன் பிறகு அம்மக்கள் அவ்விடத்திலின்றும் பல்வேறு நாடுகளுக்குப் பிரிந்து போயினர் என்றும் விவிலியம் கூறுகிறது. இக்கருத்தின்படி, ஒரே நாளில், ஒரு மொழியிலிருந்து, பல்வேறு மொழிகளை இறைவன் கிளைக்கச் செய்தார் என்ற கருத்து, சமய நம்பிக்கையின் அடிப்படையில் சொல்லப்பட்டது. அறிவியல் இந் நிகழ்வை வரலாறாக ஏற்றுக் கொள்ளாது. இந்நிகழ்வின் வழியாகச் சொல்லப்பட்ட செய்தியாதெனில், குடியேற்ற மக்களின் "அந்த ஒரு மொழி'யிலிருந்து பல மொழிகள் கிளைத்தனவென்பதே. இவ்வாறு மொழிகள் கிளைக்கப் பல ஆயிரம் ஆண்டுகள் கூட கடந்திருக்கலாம். இவ்வாறு கிளைத்த மொழிகளே செமிட்டிக் மொழியினமாக, கி.பி. 18ஆம் நூற்றாண்டில் பெயர் சூட்டப்பெற்றது. உண்மையில் அக்காலத்தில் அம்மொழியினத்துக்கு, செமிட்டிக் என்ற பெயர் அறியப்படவில்லை.

நோவாவின் முதல் மகனான செம் (Shem) என்பானின் மரபினர் பேசிவந்த மொழியே, செம் என்ற பெயரின் அடிப் படையில் செமிட்டிக் எனப்பட்டது. செம் என்ற சொல், செம்மை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகவே உள்ளது. எபிறேய மொழியில் செம் (Sem) என்று அறியப்பட்ட இச்சொல்லுக் கான பொருளும், மூலமும் யாதெனத் தெரியவில்லையென மொழியறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.[12] இருந்தாலும், செம் என்ற சொல்லோடு தொடர்புடைய, செம்-யா (Sem -yaa), செம் - அய்யா[13] (Sem- aiyaa), செம் - அய்யாகு (Sem- auyaahu) போன்ற பெயர்கள், இறைவனோடு தொடர்புடைய பெயர்களாக எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ளன. கனானிய மன்னன் ஒருவனின் பெயராக, செம் - ஈபர் (Sem -eber) என்ற பெயர் சொல் லப்பட்டுள்ளது.[14] சமர் (Semer) என்பவனால் உருவாக்கப்பட்ட நகரமாக, சமாரியா (Samaria) என்ற இசுராயேல் நாட்டில் பிற்காலத் தலைநகரம் அறியப்படுகின்றது.[15]

எனவே, செம் என்ற பெயர்ச் சொல், எபிறேய மொழியில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனாலும் செம் என்ற சொல்லுக் கான மூலமும் பொருளும் தெரியவில்லை என்பதை ஆய்வாளர்கள் தெளிவுபடுத்துகின் றனர். மேற்கித்திய ஆய்வாளர்களால் விடுவிக்க இயலாத செம் என்ற சொல்லின் மூலத்தை, தமிழ்க் கண்ணோட்டத்தில் விடுவிக்க இயலும்.

செம்மை என்ற நேர்மை (Strightness), குறைகளில்லாமை அல்லது செப்பம் (Correctness), ஒழுக்கம் (Honesty), அழகு (el- egance), சிவப்பு நிறம் (Redness) உயர்வு (Classical) என்றவாறெல் லாம் பொருள் விரியும். தமிழில் மிகவும் பரவலாகப் பயன் படுத்தப்படும் சொல், செம்மை என்பதாகும்.

இறைவன் நேர்மையானவன், குறைகளில்லாதவன், அழகானவன், சிவந்த நிறம் கொண்டவன், உயர்ந்தவன் என்ற வாறு சொல்லப்படுவதால், செம்மை என்ற சொல் இறைவ னோடும் தொடர்புபடுத்தப்பட்டது.

செம்மை என்ற சொல், மற்றொரு சொல்லோடு இணைந்து முன்னொட்டுச் சொல்லாக வரும்போது, அது சிவந்த நிறத்தைக் குறித்தது.

செம்மை +கடல் = இதனை, செம்மைக் கடல் எனக் குறித்தல் இலக்கண மரபு.

செம்மை + கடல், செம்(மை) கடல் எனப்பட்டது. செம் கடல், செங்கடல் எனப்பட்டது. "செங்" என்ற முன்னொட்டுச் சொல், செம் என்ற தமிழ்ச்சொல்லே. செம், புணர்ச்சி விதிகளின் படி, சொல் எனப்பட்டது. ம +க = ங.

செம் கடல் = செங்கடல்

செம் கட்டி =செங்கட்டி

செம் கண்ணி = செங்கண்ணி

செம் கதிர் = செங்கதிர்

செம் கரும்பு = செங்கரும்பு

செம் கல் = செங்கல்

செம் களம் = செங்களம்

செம் காந்தள் = செங்காந்தள்

செம் காய் = செங்காய்

செம் கீரை = செங்கீரை.

செம் குவளை = செங்குவளை

செம் குன்றம் = செங்குன்றம்

செம் கை = செங்கை

செம் கோல் = செங்கோல்

மகரமும் டகரமும் இணைந்து ஞகரம் தோன்றும்.

செம் சடை = செஞ்சடை

செம் சுடர்= செஞ்சுடர்

செம் சோறு = செஞ்சோறு

மகரமும் தகரமும் இணைந்து நகரமாகும்.

செம் தணல் = செந்தணல்

செம் தமிழ் = செந்தமிழ்

செம் தாது = செந்தாது

செம் தாழை = செந்தாழை

செம் தீ = செந் தீ

செம்துறை = செந்துறை

செம் தூக்கு = செந்தூக்கு

செம் நாய் = செந்நாய்

செம் நெல் = செந் நெல்

எனவே, செம் - செம்மை என்ற தமிழ்ச்சொல், தமிழில் சிறப்புக்குரிய சொல்லாகும்.

சள் என்ற வேர்ச்சொல்லே செம்மையைக் குறித்ததாகும்.

சள்- சுள் = செந்நிறம், சுருக்கம். ஒரு பொருள் சுருங்கும்போது செந்நிற மாகிறது.

சுள் = சுருக்கம் சுள்ளி =சுருங்கிய கொம்பு.

சுள் - சூர் - கூர்மை, சுடுதல். சூரிக்கத்தி.

சுள்ளெனவும், சுருக்கெனவும் சுடும் வெய்யில்.

சுள் - சூர் - சூர்த்தம் - சூர்த்து = சுருங்கி விரியும் தன்மை கொண்ட உறுப்பு.

சுள் - சள் - சள்ளை = செஞ்சோறு, செம் முன்.

சள் -சுள் - செள் - செம் - செம்மை = சிவந்த, உயர்ந்த, குறையில்லாத

செம் - செம்பு= சிவப்பு கனிமம்.

செம்பு - செப்பு = செம்பு.

செம் - செம்பு - செப்பு - செப்பம் :குறைகளற்ற.

செம் - செம்மல் : குற்றமற்ற தலைவன்.

செம்மற்று அம்ம நின் வெம்முனை இருக்கை - புறம்.16 33:15

சேந்துவரல் அறியாது செம்மல் தேரே - குறுந்தொகை17 242 :6

குடைநிழல் தோன்றும் நின் செம்மலைக் காண் - கலித்தொகை 18 கலித் தொகை 84:11

செம் - செம் மீன் : செம்மீன் இமைக்கும் மாக விசும்பின் - புறம்19 60: 2

செம் - செம்மை : ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி - மதுரைக் காஞ்சி,[20] 491

செம்- செம்மையோர் : சால்பு எதிர் கொண்ட செம்மையோரும்- நற்றிணை[21] 345 :7

செம் - செம்மொழி அல்லது மெய்ம்மொழி:

தெரிகோல் அன்ன, செயிர்தீர் செம்மொழி -அகம்[22] 349 : 4

செம்மை என்ற தமிழ்ச்சொல்லின் ஈற்றெழுத்து மறைந்து செம் என்று சொல்லப்பட்டது.

செம்மை + அய்யா = செம் மையா அல்லது செம் அய்யா என்ற தமிழ்ச்சால், திரிபுபடாமல் செம் அய்யா (Sem - aiyaa) என்றே எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ளதை நோக்குக. மேற்கித்திய ஆய்வாளர்களால் அறிய இயலாத செம் என்ற சொல், தமிழில் உள்ளதை அறிவிப்பதோடு, செம் என்பவன் தமிழ்நாட்டைச் சார்ந்தவனே என்ற கருத்துக்கும் நல்ல பின்புலம் உள்ளதை நோக்குக.

செம் என்பான் தமிழ்நாட்டைச் சார்ந்தவனே என்பதால், அவனும் அவனது மரபும் பேசிய மொழி தமிழ் என்றே சொல்

லப்பட்டிருக்க வேண்டும். தமிழ் மொழியையே "அந்த ஒரு மொழி" யென்று எபிறேயத்தின் விவிலியம் சுட்டுகிறது. எனவே, தமிழினின்றும் கிளைத்த மொழிகளே செமிட்டிக் இனம் என்று பிற்காலத்தில் அறியப்பட்டது என்க. தமிழ்க் கண்ணோட்டத்தில் செம் என்ற சொல்லை அணுகாத மேல்நாட்டு ஆய்வாளர்களால், இச்சொல்லுக்கான பொருளையும் வேரையும் காண இயலவில்லை எனலாம்.

செம் என்பானின் குடியேற்றம், கி.மு. 10000 எனக் கொண்டால், அவனது தலைமுறையினரே, யூப்ரதீசு - தைகிரீசு சமவெளிகளில் பரவி வாழ்ந்திருந்தனர் என்றும், அவர்களே சுமேரியர்கள் அங்கு படையெடுத்துவரும் வரையிலும் ஆட்சி செய்தனர் என்றும் கொள்ளலாம்.[23]

செம் என்பானின் வழித் தோன்றல்கள்:

1.அறப்பா **(Arrapha)***:* இது அக்காடிய மொழிப் பெயராகும்.[24] இவனே செம்மின் தலைமகனாவான். இவனை அறப்ப சாது (Arphasad) என்று எபிறேய மொழி குறிப்பிடுகின்றது. இச்சொல்லுக்கான பொருள் தெரியவில்லையென்றாலும், இது மரபுப் பெயராகவோ (Genetilic) அல்லது புவியியல் தொடர்பான பெயராவோ (Geographical) இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[25] அறம் என்பது தமிழ்ச்சொல்லே. அறத்தின் தந்தை, அறப்பா எனப்படுகிறான். இவனுடைய மக்களே ஈழம் (Elam), அசூர் (Assur), உலூது (Lud), அறம் (Aram) எனப்பட்டனர்[26] (ஆதி.10:22)

ஈழம் என்ற பகுதி இவனது முன்னோர்கள் வாழ்ந்திருந்த பகுதியாகக் கருதப்படுகின்றது. இச்சொல்லை எலாம் (Ela,) என்று தவறாக ஒலித்தனர். இவனது மரபினர் வாழ்ந்திருந்த நாடும் ஈழம் என்றே அழைக்கப்பட்டது.[27]

ஈழம் : ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் - பட்டினப்பாலை,[28]

அசூர் என்பானது மரபினரே அசீரியர் எனப்பட்டனர். இவர்களும் மன்னர் மரபினரே.

சூர் - சூரன் என்ற மலைவாழ் மக்களினம் தமிழகத்தில் இருந்ததாகவும், அவ்வினத்தலைவனான சூரன் என்பானை முருகன் வென்றதாகவும், அப்போர் கடலில் நிகழ்வுற்றதாகவும் தமிழ்த் தொன்மங்கள் கூறுகின்றன. தமிழ்நாட்டினின்றும் கடல் கடந்து வந்த செய்தி இதன் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

அசூர்[30] **(Assur):** இச்சொல்லுக்கான பொருள் தெரியவில்லையென்பது ஆய்வாளர்களின் கருத்து. சூர் என்பது ஒரு கடவுள் என்றும் அக்கடவுள் பெயராலேயே அந்நகரமும் அழைக்கப்பட்டதாகவும் விவிலியக் குறிப்புகள் கூறுகின்றன.

உலூது (Lud): இப்பெயருக்கான பொருளும் தெரியவில்லை. உல் +ஊது = உல்லூது அல்லது உலூது என்ற தமிழ்ச்சொல்லாயிருக்கலாம். Lud எனப்பட்ட எபிறேயச் சொல்லை, Lydia என்று கிரேக்க மொழி கூறுகிறது.

அறம்[31] **(Aram):** சரியான தமிழ்ச்சொல். இச்சொல்லின் பொருளும் மூலமும் தெரியவில்லை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அறம் நகரம்[32]**:** இதுவும் தமிழ்ப் பெயர்களே.இதனை Aram Naharain என்று எபிறேய மொழி கூறுகிறது. இந்நகரில் தான் அபிறகாம் என்பவன் வாழ்ந் திருந்தான். நகரம் என்ற தமிழ்ச்சொல், நகரினா (Naharina) என்று எகிப்து நாட்டின் அமர்ணா குறிப்புகளில் (Amarna tablets) காணப்படுகின்றது.[33]

படன் அறம்: அறம் நகரம் நிலைபெற்றிருந்த பகுதிக்கு அதாவது வடமேற்கு மெபசத்தோமியாவிற்கு, படன்அறம் என்ற பெயர் (Paddan Aram) வழக்கில் இருந்தது.[34] இதற்குப் பரந்து விரிந் திருந்த அறம் பகுதி என்றும்,இது ஒரு புவியியல் தொடர்பான பெயர் என்றும் (Geographical name) விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அறம் என்பவனின் (செம் மரபினன்) மரபினர் வாழ்ந் திருந்த பகுதியே படன் அறம் எனப்பட்டது. அறம் நகரில் தான், அபிறகாம் என்பவனின் பாட்டன் நாகோர் (Nahor) என்பவன் வாழ்ந்திருந்தான் (ஆதி.11:22-25)

அறமாயிக்: அறம்பகுதியில் வாழ்ந்திருந்த அறம் என்பானின் மரபினர் பேசிய மொழியே அறம் வாய்[35] என்ற தமிழ்ச் சொல்லின் திரிபுச் சொல்லாக, அறமாய் என்று சொல்லப்பட்டுள்ளது. இம்மொழி எபிறேய மொழிக்கும் முன்னதாக அறியப் படுகின்றது. அறமாய் - எபிறேயம் ஆகிய இரண்டு மொழிகளுக்கிடையே பெரும் வேறுபாடுகள் இல்லை. இன்றைக்கு அறியப்படும் உருது - இந்தி போன்றவைகளே என்க. இவ்விரண்டு மொழிகளுக்குமான ஒலி வடிவம் ஒன்றாயினும், எழுத்து வடிவம் மாறுபட்டுள்ளதை நோக்குக.

மேலும் நோவாவின் இரண்டாவது மகன் ஆம் (Ham), அவனது மரபினர் மற்றும் மூன்றாவது மகன் யாப்பெத், அவனது

மரபினர் பெயர்களையெல்லாம் ஆய்வு செய்யுங்கால், பெரும்பாலான பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன. யாப்பெத் (Yaapet) என்பவனின் மகன் யாவன் (Yaavan) என்றே எபிறேய மொழி குறிப்பிடுகின்றது.[36] இவன்தான் கிரேக்க நாட்டில் குடியேறியவன் ஆவான். இது பற்றியே கிரேக்கர்களை யாவனர்கள் என்ற சொல்லால் அழைத்தனர். இச்சொல்லின் பொருளை அறியாத தமிழர்கள், அவர்கள் தமிழ்ச் சொல்லையே பெயராகக் கொண்டுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ளாத தமிழர்கள், அவர்களை யவனர்கள் எனக் குறிப்பிட்டனர். அயோன் (Ion) என்பது கிரேக்கர்களைக் குறித்த சொல்லாகவும், அதனின்றே யாவன் என்ற சொல் பிறந்ததாகவும் சொல்லப்படுவதும் தவறாகும்.[37] யாவன் என்பதே மூலச்சொல்லாகும். இச்சொல்லின் கிரேக்கத் திரிபே அயோன் என்பதாகும். தற்காலத் தமிழறிஞர்களுக்கே இக்குழப்பம் உண்டு.

எனவே நோவா என்பானின் மக்களான செம், ஆம், யாபெத் ஆகியோருடைய பெயர்களும், அவர்களது மரபினர் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளனவென்பதை மெய்ப்பிக்க இயலும். செம் என்பான் மரபினர் பேசிய செமிட்டிக் மொழியினம், விவிலியம் குறிப்பிடும் "அந்த ஒரு மொழி" யாகிய தமிழ் மொழியின் கிளை மொழிகளே என்பதை அறியலாம். மேலும் இக்கொள்கையை நிறுவப் பல்வேறு சான்றுகளையும் இக்கட்டுரையில் காணலாம்.

நோவாவின் இரண்டாம் மகனான ஆம் என்ற பெயர், ஓம் என்ற தமிழ்ச் சொல்லோடு தொடர்புடையதே. ஆம்-ஓம் இரண்டும் தமிழ்ச் சொற்களே. பிற்காலத்தில் எபிறேய மொழியில் அறியப்பட்ட "ஆமென்" (Amen) என்ற சொல்லும், ஆம் (Ham) என்றசொல்லின் நீட்சியே எனக் கருத இடமுண்டு.

யா-பெத் என்பது இரண்டு சொற்களாகும். யா என்பதற்குத் தெற்கு (South) எனவும்[38], பெத் என்பதற்கு ஊர், நாடு, நகரம், வீடு எனவும் எபிறேயத்தில் பொருளுண்டு.[39] பட்டி (Patti) என்ற தமிழ்ச்சொல்லே,[40] பெத் (Peth) பாத் (Bad), என்றவாறு திரிந்தன. தமிழில் பட்டி என்ற சொல், பெயருக்குப் பின்பு சொல்லப்பட்டது.

எ.கா. மேட்டுப்பட்டி, கூளம்பட்டி, பள்ளப்பட்டி, வாடிப்பட்டி என விரியும்.

எபிறேய அரபுமொழிகளில் பெயருக்கு முன்னால் சொல்லப்பட்டன.

எபிறேயம் : பெத் -லெகம், பெத் - சா, பெத்- ஆனியா - பெத்-சூர் எனவிரியும்.

அரபு: இசுலாமா -பாத், அய்தரா -பாத், வாலா சா -பாத் எனவிரியும்.

ஏற்கனவே விவிலியம், சுமேரிய மற்றும் மெசபத்தோமிய இலக்கியங்கள் கூறும் பத்துத்தலை முறைகள் போன்றதொரு தலைமுறைப் பட்டியல், செம்என் பானுக்குப் பிறகு சொல்லப்பட்டுள்ளது.

செம் (500) ஆண்டுகள் - அறப்பா (403 ஆண்டுகள்) - இலை (403 ஆண்டுகள்)

- ஈவர் (430 ஆண்டுகள்) - பிளவு (290ஆண்டுகள்) - உரு (207 ஆண்டுகள்) செரூக் (200ஆண்டுகள்) - நாகோர் (119ஆண்டுகள்)- தெரா (205 ஆண்டுகள்).

தெரா

அப்றகாம்

நாகோர்

அரண்

மேற்சொல்லப்பட்ட பத்துத் தலைமுறைப்பட்டியல் செம் தொடங்கி அபிறகாம் என்பான் வரை சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் எந்த அளவுக்கு வரலாற்றுத் தொடர்புடையது எனத் தெரியவில்லை.

செம் என்பான் வெள்ளக் காலத்துக்குப் பிறகு மெபசத்தோமியாவில் குடியேறிய கிழக்கு நாட்டைச் சேர்ந்தவன் என்ற விவிலியச்செய்திக்கும், அபிறகாமின் முன்னோர்கள் கால்நடையாக தைகிரீசு ஆற்றங்கரைக்கு வந்து, பின்னர் ஊர் மற்றும் படன் அறம் பகுதியில் குடியேறினர் என்ற செய்திகளுக்கும் முரண்டுபாடுகள் உள்ளன.

செம் என்பான் காலத்தில், ஊர் என்ற நகரம் அறியப்படவில்லை.[41]

சுமேரியர் காலத்துக்குப் பிறகே,அவர்களால் ஊர் நகரம் உருவாக்கப்பட்டது.[42]

ஊர் நகரத்தில் அபிறகாமின் தந்தை தெரா என்பான் வாழ்ந்திருந்ததாக விவிலியமும் குர்ஆனும் தெரிவிக்கின்றன.[43] எனவே, அபிறகாமின் முன்னோரான தெராவும் நாகோரும் அபிறகாமின் முன்னோர்களான எபிறேய இன மக்களும் மெசபத்தோமியாவில் அறியப்படுகின்றனர்.

செம் என்பானின் மரபினர் கி.மு. 10000 ஆண்டுகளுக்குப் பிறகு அறியப் படுகின்றனர். இவர்களே மெசபத்தோமியாவில் குடியேறிய முதல் கிழக் கித்திய குழுவினர் என்றும்,

சுமேரியர் எனப்படுவோர் கி.மு. 3000 ஆண்டுகளில் குடியேறிய இரண்டாம் கிழக்கித்தியக் குழுவினர் என்றும்,

கி.மு. 2500 ஆண்டுகளில் தைகிரீசு ஆற்றங்கரையில் குடியேறிய எபிறேயர்கள் மூன்றாம் கிழக்கித்தியக் குழுவினர் என்றும்,

விவிலியம் மற்றும் சுமேரிய - மெசபத்தோமிய இலக்கி யங்கள் வாயிலாக அறியலாம்.

சுமேரியரை எவ்வாறு செமிட்டிக் இனத்தோடு தொடர்பு படுத்தாமல் விட்டுவிட்டார்களோ, அவர்களைப்போன்றே எபிறேயர்களையும் அப்பட்டியலில் இணைத்திருக்கக்கூடாது என்பதை, விவிலியம் தரும் விளக்கங்களே அளிக்கின்றன. ஆனாலும் எபிறேய மக்களை, செமிட்டிக் இனத்தோடு கலந்தது, அபிறகாம் மரபில் இயேசு கிறித்து தோன்றினார் என்ற பிற்கால நிகழ்வை, செம் வழியில் நோவா மற்றும் ஆதாம் என்ற முதல் மாந்தனோடு இணைக்கும் முயற்சியே. இது செயற்கையாக வலிந்து கூறப்பட்ட மரபுப் பட்டியலாகவே அறியமுடிகின்றது.

மேற்சொல்லப்பட்ட மூன்று குழுக்களும் வெவ்வேறு கால அளவுகளில் மெசபத்தோமியாவை அடைந்தனர் என்பதும், இம்மூன்று குழுக்கள் அல்லாத மேலும் பல்வேறு குழுக்கள் கிழக்கிலிருந்து மேற்குநோக்கிக் குடிபெயர்ந்துள்ளனர் என்பதும் அறியக்கிடக்கின்றன.

செம் என்பானின் முதல் மகனான அறப்பா என்ற பெய ரும், சிந்துவெளியில் இறுதியாக அழிந்த நகரான அறப்பா எனும் ஊரும் எந்த அளவில் தொடர்புடையன என்று தெரிய வில்லை. இருப்பினும் இரு பெயர்களும் கிழக்குப் பகுதியைச் சார்ந்தவைகளே என்பதை உணரலாம்.

சிந்துவெளியில் அறியப்பட்ட அறப்பா (Harappa) என்ற நகருக்கான பெயர்க்கரணியத்தை இதுவரையில் எவரும் சரியான கண்ணோட்டத்தில் தெளிவு படுத்தவில்லை. அறப்பா, அறம், படன் அறம், அறம் நகரம், போன்ற மேற்கித்திய மெச பத்தோமியச் சொற்கள், தமிழ்ச் சொற்களே என்பதை மேலை நாட்டு ஆய்வாளர்கள் அறிந்திருக்கவில்லை.

செம் என்பானது மரபினரான செமிட்டிக் என்ற இனத்துக்கும், தமிழினத்துக்குமான தொடர்பை கடந்த காலத்தில் ஆய்வாளர்கள் அறிந்திருக்கவில்லை. எனவேதான், துரானிய மொழிக் குடும்பத்தோடு திராவிட மொழிக் குடும்பத்தை இணைத்துவிட்டனர். அத்துடன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறியப்பட்ட தமிழ்மொழியை, கிளைமொழியாகக் காட்டி அதன் மூலமொழி தூரனிய மொழிக் குடும்பமே என அறிவித்தனர்.

கடந்த காலத்து மொழிக் கொள்கை, வெள்ளையர் கருப்பர் இனவேற்றுமைகள், ஐரோப்பியர் ஆசியர் பாகுபாடுகள், கிறித்துவ மற்ற சமயங்களிடையே காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே எனலாம். மொழிக் கொள்கைக்கு விவிலியத்தைச் சான்றாக எடுத்தவர்கள், அதற்கு முந்திய இலக்கியங்களை விட்டுவிட்டனர். கிறித்துவ சமயத்தோடு தொடர்புபட்டுவரும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே, நாடுகளின் பட்டியல் (The Table of Nations) என்ற மொழிக் கொள்கையை உருவாக்கினர் என்க.[45]

தமிழும் மேற்கித்திய செமிட்டிக் மொழியினமும்: வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மூத்த மொழியான முதன் மொழியுடன் கொண்டுள்ள தொடர்புகள், இவ்விரு மொழிகளுக்குமான ஒற்றுமைகளாலும், சமயத்தின் வெளிப்பாடுகளாலும் மெய்ப்பிக்க இயலும். மேலும் இவ்விரு மக்களிடையே காணப்பட்ட வாழ்க்கை முறை, நாகரிகப் பண்பாட்டுத் தன்மைகள், கல்வி சார்ந்த அறிவியல், கணக்கியல் போன்ற கலைகளின் வளர்ச்சி, வணிகம் தொழில் நுட்பக் கலைஞர்களின் பரிமாற்றங்கள், குடியேற்றங்கள் என்ற நிலைகளில் ஒற்றுமைப்படுத்த இயலும்.

மெசபத்தோமிய வரலாற்றை ஆய்வு செய்யும்போது, ஒவ்வொரு நிகழ்வுக்கான பின்புலமும் கிழக்கித்திய நாட்டுக்குரியதாக அறியப்படுகின்றது. வணக்கமுறைகள், வழிபாட்டு முறைகள், கடவுள், சமயம், சமயக்கோட்பாடுகள், பல கடவுளர்கள், பெண் கடவுளர் என்றவாறு அறியப்படும் சமயம் சார்ந்த நிலைகளில், கிழக்கித்திய தாக்கங்கள் நிறையவே உள்ளன. சுடரியம் (Astrology) விளக்கும்நாள்-கோள்களின் நன்மை தீமைகள், நம்பிக்கையின் அடிப்படையிலான மூடநம்பிக்கை

கள் (Superstitions), குறிசொல்லுதல் கேட்டல் என்றவாறு கிழக்கித்திய நடைமுறைகள் மெபசத்தோமியாவிலும் காணப்படுகின்றன.

வானியல் ஓர் அறிவியல் கலையாகவே அறியப்பட்டுள்ளது. எண்களைப் பற்றிய தெளிவான அறிவு, பல்வேறு நகரிய நாகரிக வளர்ச்சிகளுக்குத் துணை செய்துள்ளன. வானுயர்ந்த கோபுரங்களும், வடிவமைக்கப்பட்ட குடியிருப்புகளும், செயற்கையான கால்வாய்களும், அணைகளும் நீர் மேலாண்மைத் திட்டங்களும் மெசபத்தோமியாவில் அறியப்பட்டுள்ளன. கிழக்கித்திய நாட்டின் அறிவியில் கண்ணோட்டங்கள் அத்தனையும் மேற்கே வெளிப்பட்டுள்ளன.

வளமான மொழியும், மொழிக்கான எழுத்துகளும், இலக்கியங்களும், இலக்கண விதிகளும் கிழக்கே அறியப்பட்டிருந்ததைப் போலவே,மெசபத்தோமி யாவிலும் மொழி வளர்ச்சியும், இலக்கியங்களும் காணப்பட்டிருந்தன. தங்களது முன்னோர்களின் வரலாறுகளை, கதைகள்போன்ற உருவகங்களில் இரு நாடுகளுமே வெளிப்படுத்தியுள்ளன. இவைகளில் பல்வேறு நிலைகளிலும் பொதுமைத் தன்மைகள் காணப்படுகின்றன.

மொழி,சமயம், வாழ்க்கைமுறை, இறப்பு அறிவியல், நம்பிக்கைகள்,தொழில் நுட்பங்கள் எனப் பல்வேறு தலைப்புகளில் தமிழுக்கும் மேற்கித்திய செமிட்டிக் மொழியினத்துக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமென்பதால், அடுத்து மேற்கண்ட நிலைகளில் காணப்படும் ஒருமைப்பாடுகளைக் காணலாம்.

5. குமரிக் கண்டமும் உலகப் படைப்பும்

புவியியலாரின் கூற்றுப்படி கோண்டுவானா என்றழைக் கப்பட்ட தென்பகுதிக் கண்டம், பிற்காலத்தில் மேலும் உடைந்து பல்வேறு நிலப்பகுதிகளாக மாறியது என்பர். தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசுதிரேலியா போன்ற நிலப்பகுதிகள், குமரிக்கண்டம் என்ற பெருநிலப் பரப்பினின்றும் விலகிப் போயின என்பர். கோண்டு வானா உடைந்தபோது உருவான நிலப்பகுதிகளை, வடிவம் காட்ட இயலாது. தற்போது நிலப் பகுதிகளைக் காட்டும் உலக வரைப்படம், உலகை அழித்துப் புதுநிலப்பகுதிகள் தோன்றக் கரணியமாயிருந்த வெள்ளக் காலத்துக்குப் பிறகு உருவானதே என்பர்.[1]

குமரிக்கண்டம் என்று தமிழ் இலக்கியங்களும், இலெமூரியா என்று மேலைநாட்டவரும் அழைக்கும் பெருநிலப்பரப்பு இருந்தது பற்றி முரண்பாடான கருத்துகள் அறிஞர்களிடையே இன்றும் காணப்படுகின்றன. இதுவோர் கற்பனைக் கண்ட மென்றும், தமிழர்கள் தங்கள் பெருமைகளை நிலைநாட்ட மேற்கொள்ளும் குறுக்குவழியிலான விளம்பரக் கொள்கை யென்றும் கூறுவர். தமிழ் இலக்கியங்கள் தவிர்த்து, வேறெந்தச் சான்றுகளும் இல்லாத இக்கொள்கையை ஏற்க இயலாது எனவும் வாதிட்டு வந்துள்ளனர். மறுப்புக் கொள்கையைக் கொண்டவர்களும், மறுப்பதற்கான தெளிவானச் சான்றுகளைத் தராமல், கதைகளாகச் சொல்லப்பட்ட செய்திகளை எவ்வாறு வரலாற்று உண்மைகளாகக் கொள்வது என்று வாதிடுகின்ற னர். கடந்த காலங்களில் குமரிக்கண்டக் கொள்கையை ஏற் போரும் மறுப்போரும் தெளிவானச் சான்றுகள் எவைகளையும் தராமல் சொற்போர் நடத்திக் கொண்டிருந்தனர்.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் தொன்மையான மொழி சமற்கிருதமே என்றும், பழங்குடி யினர் ஆரியரே என்றும் சொல்லப்பட்ட நிலை, சிந்துவெளி அகழ் வாய்வுகளால் மாற்றம் கண்டது. ஆரியச் சார்புடையோருக்கு

சிந்துவெளிச் செய்திகள் அதிர்ச்சியைக் கொடுத்தன. ஆரிய எதிர்ப்பாளர்களுக்கு ஊக்கமும், தமிழே இந்தியாவின் தொன்மையான மொழி என வாதிடவும் வழிகள் தோன்றின. இக்கால அளவுகளில் பேசப்பட்ட குமரிக்கண்டக் கொள்கை, அதன் உண்மை நிலையை விடுத்து, ஆரிய-திராவிட கொள்கைப் போராயிற்று. ஆரியச் சார்புடையவர்கள், குமரிக் கண்டம் பற்றி எதுவும் தெரிந்திராத நிலையிலும், அக் கொள்கையைச் கடுமையாக எதிர்த்தனர். எனவே, சமூகப் பிளவுகளின் வெளிப் பாடாகவே குமரிக் கண்டக் கொள்கை பார்க்கப்பட்டது, இன்றும் கூடப் பார்க்கப்படுகின்றது.

குமரிக் கண்டம் இருந்ததாகக் கருதப்படும் இந்தியப் பேராழி நிலைகொண் டுள்ள சில இடங்களில் அகழாய்வுகள் செய்து, இதன் உண்மைத் தன்மையைக் கண்டுபிடிக்க வேண்டு மென கடந்த காலங்களில் பலராலும் சொல்லப்பட்டது. அதே போன்று குசராத் பகுதியில் துவாரகை என்ற நகரம், கண்ண னால் உருவாக்கப்பட்டது என்றும், அதுதற்போது அரபிக் கடல் பகுதியில் மூழ்கிக் கிடக்கின்றது என்றும், துவராகையை அகழ்வாய்வு செய்தால், இந்தியாவின் தொன்மக்குடிகள் ஆரியர் களே என்ற கருத்து வெளிப்படும் என்று பேசியும் எழுதியும் வந்தனர். மைய அரசும் துவாரகையை அகழ்வாய்வு செய்ய பெருந்தொகையொன்றை அளித்தது. அகழ்வாய்வுகளின் முடிவில், எதிர்பார்த்த எந்தச் செய்தியும் கிடைக்கவில்லையென்பதால் ஏமாற்றமடைந்தனர்.[2]

இந்நிலையில், இந்தியப் பேராழியில் குமரிக்கண்டம் நிலைபெற்றிருந்ததை அகழ்ந்து பார்க்க விடுவிக்கப்பட்ட கோரிக்கைகள் இன்றுவரை ஏற்கப்படவில்லை. அகழ்வாய் வுகளின் போது, குமரிக் கண்டம் இருந்ததற்கானச் சான்றுகள் கிடைத்துவிட்டால், இதுவரையில் சொல்லிக்கொண்டிருந்த இந்திய வரலாறு பொய்யாகிப் போகுமே என்ற அச்ச உணர்வு பலரிடம் காணப்படுகின்றது. இது பற்றியே இம்முயற்சிகளுக் கான அனைத்துப் பணிகளும் பொறுப்பிலுள்ளவர்களால் முடக்கப்பெற்று வருகின்றன.

இந்தியப் புவியியல் பகுதிகளில் ஆர்வம் கொண்ட இங்கி லாந்து நாட்டுக் குழுவொன்று கடந்த 2002 ஆம் ஆண்டில், இன்றைய பூம்புகார் நகருக்குக் கிழக்கே, வங்கக் கடலில் சிறிய ஆய்வொன்றினை, சின்னாட்களுக்கு நடத்தியது. மூன்று கல்

அளவில் குறுக்கும் நெடுக்குமாக ஒரு நகரம் கடலின் ஆழத்தில் புதையுண்டு கிடப்பதை அக்குழு கண்டறிந்தது. அங்கு எடுக்கப்பட்ட பொருட்களை ஆய்வு செய்த அக்குழுவினர், அந்நகரம் இன்றைக்குப் பதினோராயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும், உலகை அழித்த பெருவெள்ளக் காலத்தில் இந்நகரும் அழிந்து போயிருக்க வேண்டுமென்றும், உலகின் முதல் நாகரிக நகராக தற்போது இதனை அறிவிக்கலாம் எனவும் கருதினர்.[3]

சிந்துவெளியைத் தொடர்ந்து, கடல் அகழ்வாய்வுகள், தமிழ்நாட்டின் மூப்புத்தன்மையை நிலை நிறுத்தும் வகையில் வெளிவந்தன. தற்காலத்தில் புவியியல் ஆய்வுகள் மேலும் பல சான்றுகளை அளித்து வருகின்றன. உலகின் நிலப் பரப்பானது, காலங்கள் தோறும் மாறுதல்களுக்குள்ளாகி வந்துள்ள செய்தி களை, புவியியலார் தெளிவுபடுத்துகின்றனர். இன்றிருக்கும் நிலப்பரப்புகள் எதிர்காலத்தில் எவ்வாறு மாறிப்போகும் என்று எவராலும் கூற இயலாது. குமரிக் கண்ட நிலைப்பாட் டிற்கு, தமிழ் இலக்கியங்கள் தம் செய்திகளோடு, மேலை நாட்டு இலக்கியங்கள் தரும் செய்திகளும் வலுவூட்டுவனவாக உள்ளன.[4] குமரிக்கண்டக் கொள்கையை எதிர்ப்பவர்கள், மேற்கித்திய வரலாறுகளைப் படித்துப் பார்த்து பின்னர் ஒரு முடிவுக்கு வருவது நல்லது..

உலக வரலாற்றை எழுத முற்படுபவர்கள் யாவராயினும், உலகை அழித்த வெள்ளக் காலத்துக்கு முந்திய வரலாற்றைத் தொடாமல் எழுத இயலாது. அவ்வாறு எழுதப்பட்டாலும் அது முழுமையானதாயிருக்காது. மொழியியல், புவியியல், அறிவியல் தொடர்பாகவும், வரலாற்று நிகழ்வுகள் தொடர் பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது, வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நிகழ்வுகளை இணைத்துப் பார்க்காத ஆய்வுகளும் முழுமையானவைகளாக இருக்க வியலாது.

தமிழ் இலக்கியங்கள் குமரிக் கண்டம் பற்றிய ஒரு தோற்றத்தைத் தெளிவுபடுத்துகின்றன. பஃறுளி, குமரி என்ற ஆறுகள் குமரிக்கண்டத்தில் பாய்ந்து அதனை வளப்படுத்திய தென்பர். 700 காத அளவில் (7000 கல் எனக் கருதலாம்) நீண்டி ருந்த அப்பெருநிலப் பரப்பு,[5] இன்றைய கண்ணோட்டத்தில் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதைக் காண்க.

ஏழ் தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ் பின்பாலை நாடு.

ஏழ் குன்ற நாடு, ஏழ்குணகரை நாடு, ஏழ் குறும்பனை நாடு என்ற அளவில் ஆள்பவரின் பகுதிகளாக அறியப்பட்டிருந்தன.

மேற்கண்ட ஏழு நாடுகளும் பெரிய மாநிலங்கள் (Privinces) என்ற அளவில் இருந்தன. ஒவ்வொரு மாநிலமும் மேலும் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன.[6] இன்றைய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிலப்பிரிவுகளைப் போன்றிருந்ததை ஒப்பு நோக்குக. இந்த ஏழு மாநிலங்களும், ஒரே பேரரசின் கட்டுப் பாட்டில் இருந்தன. பாண்டியன் என்ற மன்னர் மரபைத் தவிர்த்து வேறெந்த மன்னர்களும் சொல்லப்படவில்லை. மிகவும் தொன்மைவாய்ந்த மரபு என்ற பொருளிலேயே பண்டை மரபு, பாண்டிய மரபெனச் சொல்லப்பட்டதாகவும் கூறுவர்.

குமரிக் கண்டத்தில் முதல் இடைத் தமிழ்க் கழகங்கள் செயல்பட்டிருந்தனவென்று சொல்லப்பட்டுள்ள செய்திகளில், பல நம்பகத் தன்மையற்றவைகளா யிருப்பினும், தமிழ் வளர்க்கப்பட்டதென்பது அறியப்பட்டுள்ளது. முதல் சங்கத்தில் அகத்தியர் உள்ளிட்ட பலரும், இரண்டாம் சங்கத்தில் தொல்காப்பியர் தலைமையில் பலரும் இருந்து தமிழ் இலக்கியங்களைப் படைத்தனர் என்று சொல்லப்பட்டாலும், அவ்விலக்கியங்கள் எவையும் கிடைக்கவில்லை. வெள்ளக் காலத்தில் அவை அழிந்து போயிருக்க வேண்டும்.

இறுதியில், குமரிக் கண்டத்தைக் கொடுங்கடல் கொண்ட செய்தி, சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது.[7] இந்த அளவில் தமிழ் இலக்கியங்கள் தரும் செய்திகளைக் கொண்டே, கடந்த காலத்தில் குமரிக் கண்டக் கொள்கை வகுக்கப்பட்டது. ஆனால் இன்று அக்கொள்கை மேலை நாட்டு இலக்கியங்கள் வாயிலாகவும் நிறுவப்படும் நிலையிலுள்ளது. மெசபத்தோமிய, சுமேரிய, விவிலியச் செய்திகள், குமரிக்கண்டத்தின் பல்வேறு நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டு கின்றன. அவை குமரிக் கண்டத்தையே சுட்டுகின்றன. என்பதைப் புரிந்து கொள்ளாத மேலைநாட்டவர் அச்செய்திகள் அனைத்தும் கற்பனைக்கதைகளே என எண்ணினர்.[8]

குமரிக்கண்டம் நிலைபெற்றிருந்ததைச் சான்றுகளுடன் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமன்று. இருப்பினும் குமரிக்கண்ட நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கானத் தரவுகள் இன்று பெருகி வருவதால், அக்கண்ணோட்டத்தில், இலக்கியச் சான்றுகளையும் இணைத்துக் கொள்வதில் தவறில்லை எனலாம். குமரிக்கண்டம் விடுத்த உலக வரலாறு முழுமையான தாயிருக்காது என்பதும் அறிஞர்களின் கருத்தாகும்.

தமிழர்களின் தாயகம் குமரிக்கண்டமே என மேலை நாட்டு இலக்கியங்களும் விளக்கி நிற்கின்றன. இந்த அளவில் குமரிக் கண்டத்திற்கும், பிற்கால மேலை இலக்கியங்களுக்கு மான தொடர்புகளை விளக்கும்போது, தமிழுக்கும் செமிட்டிக் மொழியினத்துக்குமான தொடர்புகள் வெளிவரும். (விளக்கப் படங்களைக் காண்க.)

6. செமிட்டிக் தொன்மக் கதை

இவ்வுலகம் இறைவனால் படைக்கப்பட்டது என நம்பிக் கையாளர்களும், இயற்கையாகத் தோன்றியது என மறுப் பாளர்களும் கூடிறிவருகின்றனர். இக்கருத்து முரண்பாடு, கடவுள் அறியப்பட்ட காலத்திலேயே எழுந்தது. எனினும் நம்பிக்கையாளர்கள் தோற்றுவித்த பழங்கால இலக்கியங்கள் கடவுள் உண்டென்ற கொள்கையைச் சார்ந்துநிற்கின்றன. இவ்வுலகைப் படைத்தவன் இறைவனே என்பதைப் பல்வேறு உலகச் சமயங்களும் தத்தம் பார்வையில் விளக்கிக் கூறுகின் றன. அவை செமிட்டிக் மொழியினம் சார்ந்த பாபிலோனியக் கதை, உகாரியக் கதை, கனானியக் கதை, விவிலியக் கதையென விரியும். செமிட்டிக் இனமாக அறியப்படாத மேற்கில் குடி பெயர்ந்த சுமேரியர்களும் படைப்புக் கதையொன்றைக் கூறினர். இந்தியாவில் அறியப்பட்ட ஆரியர்களும்கூட படைப்புக் கதை யொன்றைக் கொண்டிருந்தனர். ஆனால் குமரிக் கண்டத்தில் வாழ்ந்திருந்த தமிழர்களுக்கான படைப்புக் கதை எதுவென்த் தெரியவில்லை.

தமிழர்களிடையே அவ்வாறான கதை இருந்ததா என்பதும் அறியப்படவில்லை. உலக சமயங்கள் எல்லாம் உலகம் தோன்றிய கதையைக் கூறும்போது, தமிழ் மக்களும் அவ்வாறான கதை யொன்றைக் கொண்டிருக்க வேண்டும் எனலாம். ஆனால், குமரிக்கண்டத்து இலக்கியங்கள் வெள்ளக் காலத்தில் அழிந்து போனது போல், இக்கதையும் அழிந்து போயிருக்க வேண்டும். தமிழில் அறியப்படும் தொன்மை இலக்கியமான தொல்காப் பியம், இறைவனைச் சார்ந்த கொள்கையைக் கொண்டிருப்ப தால், தமிழிலும் படைப்புக் கதையொன்று இருந்தது எனலாம்.

செமிட்டிக் இனப் படைப்புக்கதை: மெசபத்தோமி யாவில் அறியப்படும் தொன்மக் கதையே, படைப்பு பற்றி கிடைத்துள்ள கதைகளில் மிகவும் பழமையானதாகக் கருதப் படுகின்றது.[1] ஏறக்குறைய இக்கதையைத் தழுவியே உகாரிய

(Ugaritic), கனானிய (Canaanife) ஃபோனீசியக் கதைகளும் உள்ளன என்பதால், செமிட்டிக் இன மக்கள் படைப்புக் கதையொன் றைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

செமிட்டிக் படைப்புக் கதையைக் கூறும் ஈனும் - மா - எல்-இசு (Enum -a- El- ish) படைப்புக் கதையை விளக்குகிறது. இச்சொற்கள் மெசபத்தோமிய மொழிச் சொற்களாயிருந்த போதும், இதற்கு இவ்வுலகைப் படைத்த இறைவனின் கதை என்ற தமிழ்ப் பொருளே விஞ்சி நிற்கின்றன.

ஈன் (தமிழ்): கொடுத்தல், பெற்றெடுத்தல், உண்டாக்குதல், உருவாக் குதல், படைத்தல் என விரியும்.[2]

ஈன்ற பொழுது, ஈனாப் பசு என்ற சொற்களை ஒப்புநோக்கு.[3]

ஈனும் என்ற செமிட்டிக் சொல், தமிழ்ச்சொல்லே.

ஈ என்ற தமிழ் வேர்ச் சொல்லின் நீட்சியே மேற்கண்ட சொற்களாகும்.

மா -எல்: எல் என்பது கதிரவன்,[4] ஒளி,[5] பகல்,[6] வெளிச்சம்[7] ஆகிய பொருளில் தமிழில் அறியப்படும் எல் என்பதே தொல்தமிழரின் கடவுளாகும்.

எல்லன், எல்லோன் என்றும் அறியப்படும்.

எல் என்ற கடவுள், நடுத்தரைக் கடல் நாடுகளில் பரவலாக வணங்கப் பட்டக் கடவுளாவான்.[8] எல் என்ற செமிட்டிக் மொழியினச் சொல் பற்றிய விளக்கங்கள் எவையும் செமிட்டிக் மொழிகளில் காணப்படவில்லை.[9]

மா -எல் என்பது, பெரியகடவுள் என்றும், கடவுள் பெரியவர் (God is great) என்றும் தமிழ் - செமிட்டிக் மொழிகளில் ஒரு பொருளையே குறித்தது.

இவ்வுலகையும், உயிரினங்களையும், மாந்த இனத்தையும் எல் என்ற கடவுளே படைத்ததாக மெசபத்தோமிய இலக்கியங்கள் கூறுகின்றன.

இசு: இசை என்ற தமிழ்ச்சொல்லின் திரிபு. இசை = பொருந்துதல், இணைதல்,[10]

இசைவு = விருப்பம், இணக்கம்,[11] இசை : புகழ்[12]

இசு (Ish) என்ற மெசபத்தோமியச் சொல்லுக்கு, பெண்மை என்ற பொருளும் அறியப்படும் என்பதை, இச (Issa) என்ற எபி ரேயச் சொல்லால் அறியலாம். பெண்ணையும், மகளையும், தாயையும் இச என்ற எபிரேயச் சொல் குறிக்கின்றது.[13]

கடவுள் ஆணும் பெண்ணுமாக இருந்து இவ்வுலகைப் படைத்தார் என்பது தமிழரின் நம்பிக்கையாகும். இசை என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஆற்றல் (Power) என்ற பொருளும் அறியப் படும். அதனையே சக்தி என்று ஆரிய இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன.

ஈனும் மா எல் இசைவு (Enum -Ma-el -ish) என்ற சொற் களுக்கு, "தான் இசைந்தவாறு இவ்வுலகைப் படைத்த பெரிய கடவுள்" என்ற பொருளே விஞ்சி நிற்கின்றது.

க என்ற கடவுள்: க என்ற தமிழின் முதல் உயிர் மெய் எழுத்து, கடவுளைக் குறித்தே சொல்லப்பட்டது. இதனை விளக்கச் சான்றுகள் தமிழில் கிடைக்கவில்லை யென்றாலும், சிந்துவெளித் தமிழ் க (Ka) என்ற ஓரெழுத்துச் சொல் கடவுள் என்ற பொரு ளையே தருகின்றது.

க: கடவுள், முழு முதற்கடவுள், காப்போன், காவலன் என்றவாறு பொருள் அறியப்பட்டுள்ளது.[14] (Ka =god, guardian, chieftain protector, king).

க: எழுத்துருவில் அறியப்படும் எண் ஒன்றுக்கான (number one) தமிழின் வடிவம். (Ka denotes number one in Tamil).

க: முதற்கடவுள், முழுமுதற்கடவுள் (Primary god, cheif god).

க என்ற (சிந்துவெளித்)தமிழின் இரண்டு பொருளும் (God and number one) ஏக (Eka) என்று சமற்கிருதத்தில் திரிந்துள்ளது.

ஏக = (Eka) : எண்ணியலில் எண் ஒன்று (Number one in Sanskrit)[16]

எனவே, க என்ற தமிழ்ச்சொல், கடவுளைக் குறித்ததே என்பது தெளிவாகின்றது.

க என்ற கடவுள், அண்டவெளியும் உலகமும் படைக்கப்படு முன்பே வாழ்ந் திருந்தவர் என்பது எல்லாச்சமயங்களும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையாகும்.

தமிழில் ஓம் என்ற சொல்லுக்கு இசைதல் அல்லது ஏற்றுக் கொள்ளுதல் என்பதே பொருளாகும். ஓம் என்பது ஆம் என்றும் அறியப்படும். இன்றும் தமிழர்கள் இதே பொருளில் ஆம் (Yes) என்றும், ஈழத் தமிழர்கள் ஓம் (Yes) என்றும் வழங்கி வருகின்றனர்.

ஓம் என்பதும், ஓ என்பதும் இறைவனிடமிருந்து வெளிப் படும் தொடர் ஒலியாக தமிழர்கள் கருதினர். இதனையே

பிரணவ மந்திரம் என ஆரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஓம் என்பது தமிழ்ச்சொல்லே. இச்சொல்லை Symbol III என்ற சிந்துவெளிக் குறியீடு விளக்குவதாக ஆய்வாளர்கள் கருதுகின் றனர்.[17]

இந்த குறியீட்டில், தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு சுழற்சி (Cycle movement) நிகழ்வதாக ஆய்வாளர்கள் சொல்கின் றனர். சுழற்சியைக் குறிக்க தமிழன் பயன்படுத்திய குறியீடே ஸ்வத்திக் (Swastic) என்று சமற்கிருதத்தில் சொல்லப்பட்டது. சுத்துக் குறி அல்லது சுற்றுக்குறி என்ற தமிழ்ச் சொல்லே,சுத்திக் சொஸ்திக் - ஸ்வஸ்திக் எனத்திரிந்தது.[18]

இக்குறி பாலத்தீனத்தின் சாக் கடல் (Dend sea) அருகிலுள்ள கம்ரான் குகைகளில் (Caves of Qumran) ஓரடி உயரத்தில் செதுக்கப்பட்டுள்ளதாகவும், அக்குகைகள் கி.மு. 1000 ஆண்டு களில் குடியிருப்புகளாக இருந்ததாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[19] இக்குறியீடு ஓம் என்றே அறியப்பட்டது.

க என்பது கடவுள், ஓம் என்பது ஒலி என அறியப்படும். இச்சொற்கள் க-ஒஸ் (Ka-Os) என்று செமிட்டிக் மொழிகளில் காணப்படு கின்றன.

முய- Os; உருவமற்ற கடவுள். உலகப் படைப்புக்கு முன்பு அறியப் பட்டவர்.

Ka - os: A formaless matter, said to have existed before the creation of the universe.[20]

Ka - os என்ற செமிட்டிக் சொல், Chaos என்று ஆங்கிலத்தில் திரிந்தது.

இறைவன் தன்னிலே அசைவாடிக் கொண்டிருந்தார் என்று விவிலியம் கூறுகிறது.

இதே கருத்தை,

"உருவறி வாரா வொன்றன் றூழியும்"

என்று பரிபாடல் விளக்குகின்றது.[27]

க என்ற கடவுள், உருவமின்றிக் காணப்பட்டதாகக் கருதப் படும் தமிழரின் மெய்யியல் கருத்து செமிட்டிக் சமயத்திலும், விவிலியத்திலும் காணப்படு வதை ஒப்பு நோக்குக.

செமிட்டிக் படைப்புக் கதை, க-ஒஸ் என்ற அசைவாடிக் கொண்டிருந்த கடவுளிடமிருந்து தொடங்குகிறது. இந்த உருவ

மற்ற கடவுள், இரண்டு உருக்களாக (Rua என்று எபிறேய மொழி கூறுகிறது.[22] இது உரு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே) அறியப்பட்டனர். இவை ஆண்-பெண் என்ற உருவகமே. தொடக்ககாலக் கடவுள் நம்பிக்கைகளில், ஆண்- பெண் கடவுளர்களே அனைத்துச் சமயங்களிலும் காணப்படுகின்றனர்.

செமிட்டிக் கதையின் ஆண் கடவுள் அப்-சு (Ap -su) எனப்பட்டான். அப்சு என்ற சொல்லுக்கான வேரும் மூலமும் பொருளும் செமிட்டிக் மொழியில் காணப்படவில்லை. பொதுவாக அப்பா, அம்மா என்ற தந்தை தாயைக் குறித்த தமிழ்ச் சொற்களே, உலக மொழிகளில் சிற்சில ஒலி மாற்றங்களுடன் காணப்படுகின்றன. அப்பா (Appa) என்றே செமிட்டிக் மொழியில் சொல்லப்பட்டுள்ளது. கடவுள் படைத்த முதல் மாந்தன் செமிட்டிக் மொழிகளில் ஆதப்பா (Adapa) என்றே சொல்லப்பட்டிருக்கின்றான்.[23]

அப்பா (Appa) என்ற தமிழ்ச்சொல், சற்று அழுத்தம் குறைக்கப்பட்டு அப்பா (Abba) என்று எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ளது. இதனைச் சுருக்கி, அப் (ab) என்றனர். அப்றகாம் (Abraham) என்ற பெயரின் முன்னொட்டுச் சொல், Ab என்ற அப்பாவைக் குறித்ததே.

செமிட்டிக் மொழியில் அப்பா என்பது அப் என்றும் அபி (Abi) என்றும் வழங்கி வருவதைக் காணலாம்.[24] அது இப் (Ib) எனவும் சில இடங்களில் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, மெசபத்தோமியச் சொல்லான அப்-சு என்பது தந்தையைக் குறித்ததே. சு என்ற அடுத்த சொல், மகனைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கலாம் என்பர். இதுவும் கூட, சே - சேய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

சேய் என்ற தமிழ்ச்சொல், சேஸ் (Ses) என்று எகிப்திய மொழியிலும்,[25] (Sey) சே என்று எபிறேய மொழியிலும்,[26] சேய் (Sei) என்று சுமேரிய மொழியிலும்[27] காணப்படுகின்றன.

அப்சுவின் மனைவி (தீயவள் என்ற பொருளில்) தீயமத் (Tiamat) எனப்பட்டாள். இது, தீய மதி என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. இவ்விணை, யா (Yaa) என்ற மகனை ஈன்றெடுத்தது.

யா என்பதும் தமிழ்ச்சொல்லே என்றும்,[28] பிற்கால எபிறேயர்களின் கடவுளும் யா என்றே சொல்லப்பட்டார் என்பதும்

நோக்கத்தக்கது.[29] அப்சு - தீயமத் இணை ஏராளமான கடவுளர்களைப் பெற்றெடுத்தது. இக்கடவுளர்கள் (Heavenly beings) தமது தந்தை தாயுடன் முரண்பட்டு, அவர்களை எதிர்த்தனர். இப்போரில் யா என்ற கடவுள், தனது தந்தையாகிய அப்சுவைக் கொன்றுபோட்டான்.

கணவனைக் கொன்ற தன் மகனான யா என்பானைக் கொல்ல, தீயமத் தனது கருப்பையின் முட்டைகளிலிருந்து ஏராளமான அரக்கர்களைப் பெற்றெடுத்தாள். தாயின் துணை கொண்டு யா வை அரக்கர்கள் எதிர்த்தனர். ஏற்கனவே படைக் கப்பட்டிருந்த வானவர்களை யா துணைக் கழைத்தான். தீயமத்தை எதிர்க்கத் துணிவில்லாத வானவர்கள், யாவின் கோரிக்கையைப் புறந்தள்ளினர். இறுதியில் யா, தனது மகனான மருது-க (Mardu-K) என்பானைத் தனது பாட்டிக்கு எதிராகப் போரிடப் பணித்தான். மருது-க தனது பாட்டியையும் அரக்கர்களையும் கொன்றொழித்தான். (இவனை தமிழ்நாட்டு முருகனோடு இலகோவரி என்ற மேலைநாட்டு ஆய்வாளர் ஒப்புமைப் படுத்துகிறார்.)

இறுதியில் தனது தந்தையாகிய யாவின் கட்டளைப்படி, மருது-க இப் பேரண்டத்தையும் இவ்வுலகையும் படைத்தான். சக்கரமாகிய படுக்கையின் (Disk) மீதமர்ந்து கடலில் ஓய்வெடுத் தான். இச்சக்கரம் அவனது போர்க் கருவியுமாக விருந்தது. வளைவான வானத்தையும் விண்மீன்களையும் அதற்குக் கீழே மழையையும் காற்றையும் படைத்தான். மெசபத்தோமியா வானவர்கள் வாழும் நாடாக மாறியது. வானத்தில் ஒரு மாளிகையை அமைத்துக்கொண்ட மருது- க (திரி சங்கு சொர்க்கம் போல), மெசபத்தோமியாவில் தங்கியிருக்க ஈ சாகில் (Esagil) என்ற கோயிலை அமைத்துக் கொண்டான்.[20]

மற்றொரு மெசபத்தோமியக் கதையில் மேற்கண்ட செய்திகளும் போர் களும் நடைபெறவில்லை. அமைதியான சூழ்நிலையில் எவ்வகையான இடையூறுகளுமின்றி, யா கடவுள் இவ்வுலகைப் படைத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது கதைதான் விவிலியத்தில் சில மாற்றங்களுடன் சொல்லப்பட்டுள்ளது.

தீயமத் (Tiamat) பல அரக்கர்களைப் பெற்றெடுத்தாள். தீயமதி கொண்ட தாயின் மக்களும் தீயமனம் கொண்டவர்

களாயிருந்தனர். தீயமனம் கொண்ட அவர்களை Deomen (தியா மென்) என்று கிரேக்க மொழி குறிப்பிடுகின்றது. Deomen - Demon என்று ஆங்கிலத்தில் திரிந்தது.

மேற்கண்ட மெசபத்தோமியக் கதை போன்ற செய்தியைப் பரிபாடல் தருகின்றது.

“நீ ஏந்தியுள்ள சக்கரப் போர்க்கருவி, அவுணர்களையும் (Demons) கொன்று, அவர் தம் தலைகளைப் பனங்காலைப் போலச் சீவி உருளச்செய்தது. உன் சக்கரம் (Disk) அவுணர் களை அழிக்க வல்லதாயிருந்தது”

ஓடியா உள்ளமொடு உருத்து ஒழுங்கு உடன் இயைந்து
இடிஎதிர் கழறும் கால்உறழ்வு எழுந்தவர்
கொடிஅறுபு இறுபு செவிசெவிடு படுபு
முடிகள் அதிர படிநிலை தளர
நனிமுரல் வளை முடிஅழிபு இழிபு
தலை இறுபு தாரொடு புரள
நிலை தொலைவு வேர் தூர் மடல்
குருகு பறியா நீள்இரும் பனை மிசைப்
பலபதி னாயிரம் குலைதரை உதிர்வ போல் – பரிபாடல்31

பல பதினாயிரம் அவுணர்களை (Demons) பனங்குலை களைச் சீவுவது போல் கொன்றொழித்ததாக, பரிமேலழகரின் உரை கூறுகிறது. தீயமத்தின் தீயமக்களை அவுணர்கள் என்று பரிபாடல் கூறுவதை நோக்குக. இவ்வுலகப் படைப்பு பற்றிய கதையொன்று தமிழர்களிடையே பழங்காலந்தொட்டு இருந் ததைப் பரிபாடல் விளக்குகிறது. இக்கதையே மெசபத்தோ மியக் கதையிலும் சொல்லப்பட் டுள்ளதை நோக்குக.

சங்கு, சக்கரம் ஆகியவை திருமாலின் போர்க்கருவி களாகும். தொடக்கத் தில் குறிஞ்சி நிலக் கடவுளுக்குரியனவாய் இருந்திருக்கவேண்டும். மெசபத்தோமியக் கதையின் சங்கு கடலைக்குறித்தது. சக்கரம் நிலத்தைக் குறித்தும் சொல்லப் பட்ட உருவகங்களாகும். வட்டமான கதிரவனைக் குறித்ததே சக்கரம் ஆகும். எல் என்ற கடவுளே கதிரவனின் உருவகமாத லால், சக்கரம் எல் கடவுளையே குறித்தது. பிற்காலத்தில் முல்லை நிலக்கடவுளோடு சக்கரம் தொடர்புபடுத்தப்பட்டது. தமிழ்த் தொன்மம் கூறும் கதையில், திருமால்நீருக்கும் நிலத் துக்கும் தலைவன் என்பதையே உருவகமாகச் சுட்டுகின்றன என்க.

ஈசாகில் -Ezag -il: மருது- க குடியிருந்த கோயிலே ஈசாகில் எனப் பட்டது. இதுவும் தமிழ்ச்சொல்லே, க, யா, எல் போன்றவை கடவுளைக் குறித்த சொற்களானது போல், ஈ என்ற சொல்லும் கடவுளைக் குறித்ததே. ஈனுதல் கடவுளின் தொழிலானதால், அச்சொல்லுக்கான வேர்ச் சொல்லாகிய ஈ, கடவுளையே குறித்தது.

ஈ = ஈதல், ஈகை, ஈனல், ஈசன் என விரியும்.

ஈசன் = ஈ பவன்அல்லது இடையறாது கொடுப்பவன் ஈசன் எனப் பட்டான்.

ஈசன் - ஈஸ் வ என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

எபிறேய மொழியில், ஈசா எனப்பட்டது. ஈசா என்ற சொல்லே, இயேசு எனத் திரிந்தது.

ஈசன் (தமிழ்) ஈஸ்வ (சம.) - ஈசா (எபி. மற்றும் அரபு) - ஈசு (கிரேக்.)- ஜேசு (இலத்தீன்)- ஜுசஸ் - Jesus (ஆங்கிலம்).

ஈ+ சாகை +இல் என்ற தமிழ்ச் சொற்கள், ஈசாகில் எனத்திரிந்தன.

சாகை : சாய்கை அல்லது சாய்வான விட்டங்களைக் கொண்டு கட்டப் பட்ட வீடு சாகை வீடு என்ற சொல்வழக்கு, இன்றும் தமிழகத்தின் நாட்டுப்புறங் களில் சொல்லப்படுகின்றது.

சாகை, ஜாகா (Jaka) என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

இல் = இல்லம் அல்லதுவீடு.

வாய் + இல் - இல்லத்திற்கான வழி அல்லது திறப்பு. வாயில் -வாசல் எனப் பட்டது.

வாயில் (gate keeper) வந்து கோயில் (King) காட்ட - சிலப்பதிகாரம்.

மருது - க- ஆயசனர - மு : மருது என்பது, மருத நிலத்தோடு தொடர் புடைய தமிழ்ச் சொல்லாகும். க என்பது கடவுளைக் குறித்தது. ஆய்வாளர் இலகோவரி என்பார். மருதுக என்ற மெசபத் தோமியக் கடவுள் முருகனே என்று கூறுகிறார். முருகன், குறிஞ்சி மருத நிலங்களை இணைக்கும் பிற்காலக் கடவுளே என்பது ஆய்வாளர் களின் கருத்தாகும்.

யா = தந்தையாகிய கடவுள்

மருது -க =அவன் மகனாகிய கடவுள்.

இந்த உறவு முறையை, சிவனோடும் முருகனோடும் இல கோவரி ஒப்பிடுகிறார். அவர் கருத்துப்படி, முருக வணக்கம் மெசபத்தோமியாவினின்றே தமிழ் நாட்டுக்குச் சென்றது என்க மருது என்ற மெசபத்தோமியச் சொல்லுக்கான மூலமும் வேரும் அம்மொழிகளில் காணப்படவில்லை. மேலும் க என்ற (Ka),

எகிப்தியச் சமயத்தில் ஒரு கடவுளாகச் சொல்லப்பட்டுள்ளது. அக்கடவுளை, மெசபத்தோமியக் கடவுளுடன் தொடர்பு படுத்த இயலவில்லை.

யா என்ற தந்தைக் கடவுள் பற்றிய விளக்கம் தமிழ் இலக் கியங்களில் காணப் படாவிட்டாலும்,

யா என்பதுதமிழ்ச் சொல்லே என்பதை, எபிறேய மொழி உறுதிப்படுத்துகின்றது. இச்சொல் பற்றிய விளக்கத்தை விவிலி யக் கதையில் காணலாம்.

மெசபத்தோமியா (Meso - Mia): இச்சொல்லுக்கான விளக்கம் ஏற்கனவே தரப்பட்டுள்ளது. Meso =மிசை அல்லது மேடு = படர் அல்லது படன்

Mia = மியா, ஈற்றசைச் சொல்.

மெசபத்தோமியக் கதை கி.மு. 4000 - 3000 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருது கின்றனர். இக்காலத்தில் தான், மெசபத்தோமியாவிலிருந்து மக்கள் தமிழ்நாட்டுக்குக் குடிபெயர்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்த எந்தச் சான்றுகளும் அங்கே இல்லை. எனவே இக்கதை மெசபத் தோமியாவினின்றே தமிழகத்திற்கு அறிமுக மானது என்பது ஏற்கக் கூடியதுமன்று. தமிழ் இலக்கியங்கள், மெசபத்தோமியக் கதைபோன்று, இவ்வுலகத்தோற்றம் பற்றிய கதைகளைக்கொண்டிருந்தன என்பதையும், அவை காலத் தாலும் வெள்ளத்தாலும் அழிந்துபட்டன என்பதையும் அறிதல் வேண்டும். பரிபாடல் கூறும் உலகப் படைப்பு பற்றிய செய்தி, வழிவழியாகச் சொல்லப்பட்ட தமிழ்க் கதையின் புதிய வடிவமே எனக் கொள்க. மேலும் சங்க இலக்கியங்களில், பரிபாடலைத் தவிர்த்த மற்ற இலக்கியங்கள் எவையும் உலகப் படைப்பு பற்றிய செய்திகளைக் கூற வில்லை. தங்களுடைய இலக்கியச் செய்திகளின் போக்கிற்கு இக்கதை தேவைப்பட வில்லையென்பதால், விடுத்திருக்க வேண்டும். மெசபத்தோ மியக் கதையைத் தழுவியே, பரிபாடல் செய்தி சொல்லப்பட் டது என்பதை ஏற்பதற்கில்லை. மேற்சொல்லப்பட்ட மெசபத் தோமியக் கதையையே, கனானியக் கதையும் வழி மொழிகின்றது.

உகாரியக் கதை (Ugaritic story): உகார் (Ugar) என்ற சொல்லுக்கான பொருள் விளக்கப்படவில்லை. உகாரிட் என்ற சிரியாவின் மேற்கரையிலிருந்து ஒரு துறைமுக நகராகும்.

தற்போது இது ராஸ் சர்மா (Ras Sharma) என்று அழைக்கப் படுகிறது.

ஊ + கார் + இடம் என்ற சொற்களே, உகாரிட் எனத் திரிபு பட்டிருக்க வேண்டும் கார் என்பது, கரை (Shore) என்ற சொல்லின் திரிபாகவும் இருக்கலாம். உகாரிய நகரத்துமக்கள் கனானியர்களே. இம்மக்களும் செமிட்டிக் இனமக்களாகவே அறியப்படுகின்றனர். கி.பி.1928ஆம் ஆண்டில் இந்நகரில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கு கிடைத்த இலக்கி யங்களின் வாயிலாகப் பல்வேறு பயனுள்ள செய்திகள் கிடைத்தன.

கனானியரும், உகாரியரும் ஏறக்குறைய ஒரே சமயக்கோட் பாடுகளையே பின்பற்றிவந்துள்ளனர். இவ்விருவருக்கும் எல் என்ற கடவுளே முழுமுதற்கடவுளாகும். இக்கடவுள், சேய் போன் (Sapon) என்ற மலைமீது (Mythological Mountain) வாழ்ந் திருந்தான். எல் கடவுளை, காளையாகவும் கருதினர் (El the Bull). இவனுடைய மக்களில் பால் (Ball) என்பவனே சிறப்புக் குரியவன் ஆவான். இவனை "ஆழியன் பால்" (Aaleyan Ball) என்றும் அழைத்தனர். பால் என்ற சொல்லுக்கு, கடவுள், தலைவன், உரிமையாளன் (Lord, Master, Owner) என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது.[32]

ஆழியன் என்ற சொல்லுக்கு நீருடன் தொடர்புடைய முகில், கடல் (Yam), ஆறு (Nahar) என்றவாறு டபிள்யூ, எஃப் ஆல்பிரைட் (WF. Albright) பொருள் கூறுகின்றார்.[33] இவனே புயலுக்கும் மழைக்கும் கரணியமானவன். உயிர்களைப் பிறப் பிக்கவும், மடியச் செய்வதும் இவனே இறப்புக்குக் கரணிய மான இவனை மோட் (Mot) என்றும் அழைத்தனர். எல் கடவுள் தனது மகனாகிய பால் கடவுளுக்கு ஒரு மாளிகையைக் கட்டிக் கொடுத்தான். ஆறு நாட்களில் கட்டப்பட்டு, ஏழாம் நாளில் அது முடிவுற்றது. பால் கடவுள், மெசபத்தோமிய க-ஒஸ் (Ka -os) போன்று இவ்வுலகைப் படைத்த கதை விளக்கப் பட்டுள்ளது. ஏராளமான தொன்மக்கதைகள் எல்-பால் கடவுளரோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன.

மெசபத்தோமியக் கதைசொல்லும் யா-மருது போன்று, உகாரியக் கதை எல் -பால் கடவுளரைக் குறிப்பிடுகின்றது.

பால் (Baal) : இவனை ஆற்றலின் கடவுளாக (Mighty god) உகாரியச் சமயம் விளக்குகின்றது. பால் என்பது, வால் (Vall) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க.

வல் என்ற தமிழின் வேர் நீண்டு, வலம் என்றானது . வலம் = ஆற்றல்.

வல் -வல -வலம் =ஆற்றல்[34] அது பலம் என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

வல் -வல -வலி-வலிமை = வல்லமை (Strength, Power).

வல் -வல - வலி = வலு = வன்மையான

வல் -வல்ல -வல்லமை - வல்லாண்மை - வல்லாளன்- வல்லான் என விரியும்.

வல் -வால் = இளமை,இளமையின் பாற்பட்ட ஆற்றல், மேன்மை, உயர்வு என விரியும்.

வல் -வால் -வாலன் = இளைஞன், ஆற்றலின் இருப்பிடமான வன்.

வல்- வால் -வாலி = ஆற்றலுள்ளவன்.

வல் - வால் : இறைவன், தலைவன், உயர்ந்தவன்.

திருவள்ளுவர் கூறும் வால் அறிவன், ஆற்றலுள்ள அறிவன் அல்லது கடவுள் என்ற பொருளைத் தருவதே. வலம் என்ற சொல், வலது பக்கத்தையும் (right) குறிப்பதால், அது ஆற்றலின் பக்கமாகிறது. தந்தையொருவனுக்கு உதவியாய் இருப்பவனை "வலது மகன்", (righteous son) என்று எபிறேய மொழி குறிப்பிடு கின்றது.[35] இந்த வலது என்ற சொல்லால், வால் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க.

வலம் -பலம் என்று சமற்கிருதத்தில் திரிந்ததுபோல், வால் -பால் என செமிட்டிக் மொழியில் திரிந்தது என்க.

ஆழியன் (Aaliyan): ஆழி என்ற தமிழ்ச்சொல், கடலைக் குறித்தது.[37] இதே கருத்தை ஆல்பிரைட் விளக்குகிறார். கடல், யம் (Yam) என்ற சொல்லால் செமிட்டிக் மற்றும் எகிப்திய மொழிகளில் சொல்லப்பட்டுள்ளது.[38] யம் என்ற சொல்லுக்கான வேர்ச்சொல் லாக, யா (Yaa) என்ற சொல்லைக் காட்டுகின்றனர்.

யா: மெசபத்தோமிய நீர்க்கடவுள்[39] (god of the sea).

யா-யம் என நீண்டது.

தமிழில், யா என்ற சொல், நீரைக் குறித்தே சொல்லப்பட்டது. இன்று அச்சொல் வழக்கில் இல்லை.

தமிழில்அயம் என்றசொல், நீரைக் குறித்ததே.[40]

தமிழில் சொல்லப்பட்ட யா, யா என்றே செமிட்டிக் மொழி யிலும் அயம், யம் என்று செமிட்டிக் - எகிப்திய மொழிகளிலும் திரிந்துள்ளன என்க.

ஆழியன் என்பதற்கு, கடலைச் சார்ந்தவன் அல்லது கடலோடு தொடர்பு கொண்டவன் என்பதே பொருளாகும்.

கிரேக்க மொழியும் ஆழியன் என்ற சொல்லைப் பயன் படுத்துகிறது.

கிரேக்க சமயம் கூறும் வெள்ளக் கதையில் தெக்காழியன் (Decaulian) என்ற ஒருவனை (விவிலிய நோவா போன்று), கடவுள் வெள்ளத்திலின்று காத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது.[41]

தெற்கு ஆழியன் -தெக்காழியன் தெக்காலியன் எனத் திரிந்துள் ளதை நோக்குக.

எனவே, ஆழியன் பால் (Aaleyan Ball) என்ற உகாரியக் கடவுள், ஆழியன் வால் என்ற தமிழ்க் கடவுளே என்க. ஆற்ற லுள்ள கடலின் கடவுளாக, வாரணன் தமிழில் சொல்லப்படு கின்றான்.

எல் -காளை: உகாரியக் கடவுளான எல், காளையாகவும் உருவகப் படுத்தப்பட்டுள்ளது காளை. உகாரிய மக்களின் வணக்கத்துக் குரிய கடவுளாகவும், குறிப்பாக மலைக் கடவுளாகவும் (Moutain gols) அறியப்படுகின்றது. குறிஞ்சி நிலக்கடவுளான சிவன், மலைக் கடவுளாகவும், அவனது ஊர்தியாகக் காளையும் தமிழர் களின் வணக்கத்துக்குரிய முழுமுதற் கடவுளாகச் சொல்லப்பட் டுள்ளதை நோக்குக.

மோட் (Mot) கடவுள்: இறத்தலுக்குக்கரணியமான மோட் கடவுள், பால் கடவுளின் மற்றொரு உருவகமாகும். மோட் என்ற சொல், மடி (Madi) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகவே உள்ளது. மடிதல் : இறத்தல் அல்லது மாண்டு போதல்.

படைப்புத் தொழில் பற்றிய செய்திகள், மெசபத்தோ மியக் கதையின் தழுவல் களாகவே உள்ளன. பொதுவாக, ஆறு நாளில் படைக்கப்பட்டு ஏழாம் நாளில் நிறைவு பெற்ற செய்திகளையே எல்லாச் சமய நூல்களும் கூறுகின்றன.

விவிலியப் படைப்புக் கதை: விவிலியம் என்ற கிறித்து வர்களின் சமய நூல், பழைய - புதிய ஏற்பாடுகள் என இரு பிரிவுகளாக உள்ளன. பழைய ஏற்பாடு என்பது உலகப் படைப்பு தொடங்கி, இயேசு கிறித்துப் பிறப்புக்கு முன்பு அறியப்படும் நிகழ்வுகளைக் கெண்டது. இந்நூல் உண்மையில் எபிறேய (யூத) மக்களுக் குரியதே. இதனை, தோரா (Tora) என்று யூதர்கள் குறிப்பிடுகின்றனர். தோரா என்ற நூல், கி.மு.

1250 ஆண்டுகளுக்குப் பிறகே தொகுக்கப்பட்டது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யூத இனத் தலைவன் அபிறகாம் என்பானது காலம் கி.மு. 2000 என்று கருதப்படுகின்றது. அவனுக்கு முந்திய நிகழ்வுகள் பற்றிய காலம் எது வென்பதை விவிலியம் விளக்கவில்லை. அக்கால நிகழ்வுகளை தோராவின் முதல் பத்து அதிகாரங்கள் விளக்குகின்றன. இவை, மாந்தன் படைக்கப்பட்டது முதல் ஊழிப் பெருவெள்ளம் தோன்றிய காலம் வரையிலான செய்திகளைத் தருகின்றன.

உலகப் படைப்பு பற்றிய செய்திகள், உண்மையில் செமிட்டிக் மொழி களிலிருந்து எடுக்கப்பட்டு, யூத சமயத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப திருத்திக் கொள்ளப்பட்டவைகளே. மெசபத்தோமியச் சமயத்தில் காணப்படும் நிகழ்வுகள், தோரா நூலில் சிற்சில மாற்றங்களுடன் சொல்லப்பட்டுள்ளன என்பதால், தோரா (விவிலியம்) கூறும் படைப்புக் கதை, கடன் பெற்றக் கதையே அன்றி மூலக் கதையன்று. இருந்தாலும் மெச பத்தோமியக் கதையைக் காட்டிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளதோடு, இன்றும் அவை இலக்கிய வடிவில் அறியப்பட்டுள்ளன. மெசபத்தோமியப் படைப்புக் கதை, துண்டு துண்டாகத் தொடர்பின்றி அறியப்பட்டுள்ளன. எனவே, படைப்புப்பற்றிய பழங்கால மக்களின் நம்பிக்கையை முழுவதுமாக விவிலிய நூல் விளக்குவதால், அது மெசபத்தோமியக் கதையிலும் நிறைவான செய்திகளைத் தருவதாகக் கொள்ளலாம்.

இந்தப் பத்து அதிகாரங்களில் சொல்லப்பட்டவை நிகழ்வுற்ற நாடு எது, அந்நாட்டின் மக்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள், அவர்கள் பேசிய மொழி யாது என்பன போன்ற கேள்விகளுக்கு, இரண்டு நூல்களிலும் தெளிவான விளக்கங்கள் இல்லையென்பதால், விவிலியஆய்வாளர்கள், இப்படைப்புக் கதையைத் தொன்மக் கதையாகவே கருதுகின்றனர். மெபத்தோமிய,உகாரியக் கதைகளில், கடவுள் இவ்வுலகைப் படைக்குமுன்னதாக, பல கடவுளர்களிடம் போரிட வேண்டியிருந்தது. இறுதியில் வெற்றி பெற்ற கடவுளே உலகைப் படைத்தார் என்று விளக்கப்பட்டுள்ளது.

எபிறேய மக்கள், பல கடவுளர் நம்பிக்கையை மறுத்து, ஒரு கடவுள் கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்ததால், எவ்வகையான போராட்டமும் இன்றி, அமைதியான சூழலில்

கடவுள் இவ்வுலகைப் படைத்ததாக விவிலியம் கூறுகிறது. மற்ற கதைகளில் சொல்லப்பட்டதுபோல், பெண் கடவுளர் விவிலியத்தில் காணப்படவில்லை. பெண் கடவுள் பற்றிய நம்பிக்கை, யூதர்களிடையே காணப்படவில்லை. இம்முரண் பாடுகள் படைப்புக் கதைகளில் காணப்பட்டாலும், ஒரு பொதுத் தன்மை எல்லாக் கதைகளிலும் இழையோடுவதைக் காணலாம்.

க-ஒஸ் (Ka-os) என்ற உருவமற்ற கடவுள் மெசபத்தோ மியக் கதையில் சொல்லப்பட்டது. போல், ஆழியின் பரப்பில் இறைவன் அசைவாடிக் கொண்டிருந்ததாக விவிலியம் கூறு கிறது.

ஆறுநாளில் பேரண்டத்தையும், அண்டத்தையம், இவ் வுலகையும், இவ்வுலகின் உயிரினங்களையும், இறுதியில் மாந்தனையும்கடவுள் படைத்தார் என்றும், ஏழாம் நாளில் அவர் ஓய்வை மேற்கொண்டார் என்றும் விவிலியம் கூறுகிறது. ஒரு வாரத்துக்கு ஏழுநாள் கணக்கு இக்கதையில் வெளிப்படு கின்றது. இந்த ஏழுநாள் பற்றிய காலக்கணக்கை முதன்முதலில் அறிமுகம் செய்தவர் யார் என்பதற்குச் சான்றுகள் மேலை இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் நாள், மாதம், ஆண்டு போன்ற கால அளவுகளைக் கணக்கிடப் பயன்படுத் தப்பட்ட பெயர்களும் சொற்களும் மேலை இலக்கியங்கள் கூறுவனபோல், அதன் மூலச் சொற்களை அம்மொழிகள் பெற்றிருக்க வில்லை.

அக்காலத்தில் நாள், வாரம், மாதம், ஆண்டு ஆகிய கணக் கீடுகள், நிலவின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்பட்டன.

நாள்: மலை தொடங்கி இரவில் தொடர்ந்து, பகல் இணைந்து அடுத்த மாலையில் முடிந்தது பொழுது[42] தற்போ துள்ளதைப் போன்று இரவு 12 மணிக்கு அக்காலத்தில் நாள் தொடங்கப்படவில்லை. பிற்காலத்தில் காலை -பகல் - மாலை- இரவு எனக்கணக்கிடப்பட்டது.

தமிழ்நாட்டிலும் மாலையில்தான் நாள் தொடங்கப் பட்டது. ஒரு நாளை 60 நாழிகளாகத் தமிழர் வகுத்தனர். முதல் நாழி அந்தியில் தொடங்கி கதிரவன் தோன்றும் வரையிலான காலம் 30 நாழி எனப்பட்டது. 31 ஆவது நாழி காலையில்

தொடங்கி 60 ஆம் நாழி அந்தியில் முடிவுற்றது. நடுஇரவை, 15 நாழி என்று அழைக்கும் வழக்கு, இன்றும் தமிழகத்தின் நாட்டுப் புறங்களில் காணப்படுகின்றது.[43]

தமிழர் கொண்டிருந்த அந்தி தொடங்கிய நாள் கணக்கையே, விவிலியமும் கொண்டிருந்தது.

எபிறேய மொழியில் ஒவ்வொரு நாள் படைப்பையும், யோம் (Yom) என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளனர். யோம் என்பதற்கு நாள், வாரம், மாதம், ஆண்டு, ஊழி என்றவாறு பொருள் சொல்லப்பட்டுள்ளது. இச்சொல்லை கிரேக்கத்தில் மொழி பெயர்த்தவர்கள் நாள் (day) என்று குறிப்பிட்டனர். எபிறேய மொழியின் கருத்துப்படி, ஒரு நாள் பணியென்பது, ஊழி என்ற கண்ணோட்டத்திலும் அறியப் படும் என்பது, விவிலிய ஆய்வாளர்களின் கருத்தாகும்.

யோம் என்ற சொல் கணப்பொழுது முதல் யுகங்கள் வரையிலான நாள், மாதம், வருடம், பருவங்கள் எதனையும் குறிக்கும் என, தோரா நூலைத் தமிழ்ப்படுத்திய விவிலிய அறிஞர் மெ. சு. செயராசன் கூறுகிறார்.[44]

யோம் (Yom) என்ற சொல், உகம் (யுகம்) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாக உள்ளது. உகம் (யுக) என்ற சொல்லுக்கு நாள் என்ற பொருளை சமற் கிருதம் தருகின்றது. உகம் தமிழ்ச் சொல்லே.

நாளென்பது, நிலவு ஒரு மீன் கூட்டத்தில் தங்கிச் செல்லும் கால அளவென்று தமிழரின் வானியல் கூறுகிறது. தோராவும் விவிலியமும் கூறும் நாள், தமிழரின் பொழுதுக் கணக்கே என்க. னுயல என்ற ஆங்கிலச் சொல், தீ என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

நாள் என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஒரு பகலும் ஒரு இரவும் கொண்ட பொழுது என்பது பொருளன்று. நா + அள் = நாளா யிற்று. நா =நீண்ட,நெடிய அள் = அளவு அல்லது பொழுது.

நாள் =நீண்ட அளவைக் கொண்டது என்பதே நேரிடை யான பொருளாகும்.

வாரம்: ஏழு நாள் கொண்டது ஒரு வாரம். இதுவும் நிலவின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டதே. இந்த ஏழு

நாளுக்கும் வைக்கப்பட்ட பெயர்கள் கோள்களை முன்னிறுத்துபவையே. இவற்றில் கதிரவனே அனைத்துக்கும் முதலாயிருப்பதால், கதிரவன் கோள் அல்ல வென்றாலும்,வாரத்தின் முதல் நாளுக்கு கதிரவனின் பெயரே சூட்டப் பெற்றது.

திங்கள், செங்கோள், அறிவன், வியாழன், வெள்ளி, காரியென ஆறு கோள்களின் பெயர்கள் அறியப்பட்டன. இவையே தொடக்கத்தில் தமிழரால் கண்டறியப்பட்டிருந்த கோள்களாகும். உலகமொழிகளில் காணப்படும் இக்கோள்களின் பெயர்கள் யாவும் தமிழ்மூலச் சொற்களைக்கொண்டவைகளே. சிற்சில திரிபுச் சொற்களாக அவை அறியப்படுகின்றன.

எ.கா. ஞாயிறு, செமஸ் (Shemes) என்று செமிட்டிக் மொழியில் சொல்லப்பட்டுள்ளது. இது, செம்மை சிவப்பு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே.

சுள் -சுன் - சுர் எனவிரியும் தமிழ்ச்செற்கள், வெப்பத்தையும் சுட்டெரிப்பதையும், சுருக்கென வெயில்குத்துவதையும் விளக்கும் சொற்களாகும்.

சுன் என்ற தமிழ்ச் சொல்லே, Sun என்றானது.

சூர் என்ற தமிழ்ச்சொல்லே, சூர்யா ஆனது.

இவ்வாறே வார ் ‍ தின்மற்ற பெயர்களும் ஒப்புமை காட்ட இயலும். வாரம் என்பது சமற்கிருதச் சொல்லெனவும், தமிழில் கிழமை எனவும் சொல்வதும் கூட தவறான சிந்தனையாகும்.

வாரம் என்பதும் தமிழ்ச்சொல்லே.

வர்-வார்-வாரம் என நீண்டது. வாரம் என்பதே நீளத்தைக் குறிப்பதாகும்.

வர் -வரு- வருதல்: ஒரு தொலைவைக் கடத்தல், கடந்து வருதல்.

வார்-வாரை- வாரடை: பனை மரத்தின் நீண்ட கம்பி.

வாராடை : நீண்ட சட்டை அல்லது அங்கி.

வாரம் : நீண்ட காலக் குத்தகை: ஏழு நாள் கொண்ட ஒரு கணக்கீடு.

வாரி : நீண்டஓடை, நீர், கடல் என விரியும்.

வார் -வாரிசு (பாரசீகச் சொல்): நீண்ட தந்தை வழி உறவு.

வார்த்தை = தைக்கப்பட்ட அல்லது கோர்க்கப்பட்ட நீண்ட சொல்.

எனவே, வாரம் என்பது தமிழ்ச்சொல்லே என்க.

Week என்ற ஆங்கிலச் சொல்லுக்கு உரிய வேர்ச்சொல், விக்க (Wice) என்ற செர்மானியச் சொல்லாகும் என்பர்.[44] இதற்கு வளர்ச்சி, நீட்சி, தொடர்ச்சி என்பதே பொருளாகும். வீக்கம் என்ற தமிழ்ச் சொல்லை இங்கு ஒப்பு நோக்குக.

படைப்பதிகாரத்தில் விவிலியம் கூறும் நாள் (ஊழி), மாலை போய் காலை வந்தது என்ற சொற்றொடர் வாரத்துக்கு ஏழுநாள் கணக்கு ஆகியவை, தமிழரின் வானியல் துறைசார்ந்த விளக்கங்களாகவே உள்ளன. ஆறு நாளையும், ஆறு ஊழி அல்லது உகம் என்றும் கொள்ளலாம் என்ற விவிலிய ஆய்வாளர்களின் விளக்கம், தமிழ் வழக்காறுகளை நினைவுபடுத்துகின்றது.

படைப்புத் தொழில்பற்றிய பரிபாடல் கூறும் விளக்கமும், விவிலியச் செய்தியும் ஒன்றோடொன்றுதொடர்புடையன.

விவிலியம் தரும் செய்தி[45]

முதல் உகம் (நாள்): *வெளிச்சமும் இருளும் பிரிக்கப்பட்டன.* (Light and darkness)

இரண்டாம் உகம்: *மழையும் கடலும்தோற்றுவிக்கப்பட்டன.* (Upper and Lower waters)

மூன்றாம் உகம்: *நீரும் நிலமும் பிரிக்கப்பட்டன* (Land and sea)

நிலத்தில் பயிர் வகைகள் படைக்கப்பட்டன (Vegetation)

நான்காம் உகம்: *கதிரவன், நிலவு, விண்மீன்கள் படைக்கப்பட்டன* (Sun, Moon and stars)

ஐந்தாம் உகம்: *நிலத்தில் பறவைகளும், நீரில் மீன்களும் தோன்றின.* (Birds and Fish)

ஆறாம் உகம்: *விலங்குகளும் இறுதியாக மாந்தனும் தோற்றுவிக்கப் பட்டான்.*

ஏழாம் உகம்: *ஓய்வு.*

படைப்புப் பற்றிய பரிபாடல் தரும் செய்தி:[46]

பசம் பொன்னுலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழூழ் செல்ல
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருஅறி வாரா ஒன்றன் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும், பனியொடு
தண்பெயர் தலைஇய ஊழியும் அவையிற்று.

முதல் ஊழி = வானம் (space)

இண்டாம் ஊழி = காற்று (Air)
மூன்றாம் ஊழி = செந்தீ - (Sum Moon and stars)
நான்காம் ஊழி = நீர் (Rain, sea) அதனுட்பட்ட நீர்சார்ந்த உயிரினங்கள்.
ஐந்தாம் ஊழி = நிலம் (Land) அதனுட்பட்ட பறவைகள் விலங்குகள்.
ஆறாம் ஊழி = மாந்தன் (Man)

விவிலியம் தரும் படைப்புச் செய்தியைக் காட்டிலும், பரிபாடல் தரும்செய்தி, இன்றைய புவியியலாரும் அறிவியலாரும் கூறும் உண்மைகளோடு ஒற்றுமைப்படுகின்றன. மேற்கண்ட செய்திகளின்படி ஆறு நாளில் பேரண்டம், அண்டம், உலகம், உயிரினங்கள், மாந்தன் என படைப்புத் தொழில் விளக்கப்பட் டுள்ளன. ஆறுநாளில் அல்லது ஆறு ஊழிகளில் படைப்புக் காலங்கள் நீண்டிருந்தன வென்பது தமிழர் தம் நம்பிக்கையாயிருந்ததை பரிபாடல் விளக்குகிறது. இவ்விரு ஒருமைப்பாடுகளும் தன்னிச்சையாகச் சொல்லப்பட்டன எனக் கூற இயலாது.

ஒரு கடவுளே இவ்வுலகைப் படைத்தார் என்ற கொள்கை தமிழருடையது. இக்கொள்கை குமரிக் கண்டத்துத் தமிழரால் ஏற்கப்பட்டிருந்தது. குமரிக்கண்டம் அழிவுற்றபோது, பல்வேறு நாடுகளில் குடியேறி வாழ்ந்திருந்த தமிழர், அந்தந்த நாட்டுச் சூழல்களில், தாம் குமரிக் கண்டத்தினின்றும் எடுத்துச் சென்ற படைப்புக் கதையை மேலும் மேலும் திருத்திக் கொண்டனர் எனலாம். யூத சமயத்தைச் சார்ந்த எபிறேய மக்கள் கி.மு. 2500 ஆண்டுகளில் மெசபத்தோமியாவிற்குக் குடியேறிய தமிழர் களே என்ற கருத்து தற்போது உறுதிப்பட்டு வருகின்றது. தமிழரால் குமரிக் கண்டத்தில் சொல்லப்பட்ட படைப்புக் கதையை, அதே ஆறு ஊழி என்ற காலஅளவில், தமிழ்ச் சூழலைக்கொண்டு, மெசபத்தோமியக் சமய நூலிலும், விவிலியத்திலும் பதிவு செய்துள்ளனர் எனக் கருத வேண்டியுள்ளது.

மேலும், மாதக் கணக்கு ஆண்டுக் கணக்கு ஆகியவை, மெசபத் தோமிய, யூத மக்களால் அறிமுகப்படுத்தப்படவில்லையென்பதை அவற்றை விளக்கும் கலைச் சொற்களைக் கொண்டே அறியலாம். அக்கலைச்சொற்கள் அனைத்தும் தமிழ் மூலத்தைக்கொண்டவைகளாகவே உள்ளன என்பதை ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. மேலும் விளக்கங்கள் வானியல் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

7. தமிழும் எபிரேயமும்

தமிழ் மொழிக்கும் எபிரேயமொழிக்கும் உள்ள தொடர்புகள் பற்றி கங்காணியார் கால்டு வெல்லார்தான் முதன்முதலில் அறிவித்தார். எபிரேய மொழி யென்பது, செமிட்டிக் இன மொழிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இம்மொழி பற்றிய எந்தச் செய்திகளும் கி.மு. 2500 ஆண்டு களுக்கு முன்பாக அறியப்பட வில்லை. எபிரேயம் என்பது, ஈப்று (Hebrew) என்ற சொல்லின் தமிழ்த் திரிபாகும். தமிழை, Tamil என்று குறித்ததுபோல், இப்றி மொழியை ஈப்று என அழைத்தனர். இப்றி என்ற சொல்லுக்கான வேர்ச்சொல், மூலச்சொல் யாது என்பதில் ஆய்வாளர்களிடையே முரண் பாடுகள் உள்ளன.

இப்றி என்ற சொல்லே உண்மைச் சொல்லாக (Original) அறியப்பட் டாலும், இதற்கு முன்னதாக எந்தப் பதிவுகளிலும் இச்சொல் காணப்படவில்லை. விவிலிய ஆய்வாளர்கள் இச் சொல்லுக்கு குடிபெயர்ந்தவர்கள் (immigrants) என்ற பொ ருளைத் தருகின்றனர். இச்சொல், அபிறகாமின் இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லாதவர் இட்ட பெயரே என்றும் ஆய்வா ளர்கள் கருதுகின்றனர்.[1] அடுத்ததாக அபிறகாமின் பெயரன் யாக்கோபு என்பானின் மகன் யோசேப்பு என்பானை, ஈப்று என்று, எகிப்திய பெண்ணொருத்தி கூறுவதாக விளக்கப்பட் டுள்ளது.[2] எனவே, அபிறகாமின் மரபினரை ஈப்று என்ற சொல் குறிப்பதைக் காணலாம். பின்னர் எகிப்தில் அடிமைப்பட்டுக் கிடந்த அபிறகாமின் மரபுப் பெண்களை ஈப்றுப் பெண்கள் (Hebrew women) என்றும், அவர்கள் இனத்து மருத்துவச்சிகள் இருவரையும் (Hebrew midwives) ஈப்று மருத்துவச்சிகள் என்றும் குறிப்புகள் கூறுகின்றன.[3] சவுல் மன்னனுடைய இசுராயேல் நாட்டில் ஒரு ஈப்று கருமானும் (Smith) இல்லையென்ற செய்தி அறியப்படுகின்றது.[4]

மேற்கண்ட செய்திகளால், அபிறகாமுக்கு முன்பு அறியப் படும் இலக்கியங்கள் எவையும் ஈப்று என்ற பெயரைச் சுட்ட வில்லையென்பதும், அபிறகாமையும் அவன் மரபினரையுமே இச்சொல் சுட்டுகிறதென்பதையும் அறியலாம். இம்மரபினரை குடியேற்றக்காரர்கள் என மற்ற இனத்தவர் கருதுவதால், இம் மக்கள் மெபசத் தோமிய, கனானிய, எகிப்துப் பகுதிகளைச் சார்ந்தவர்கள் அல்லர் என்பதும் உறுதி யாகின்றது. ஆனால் தற்காலத்தில் அகழ்வாய்வுகள் போன்ற புதிய கண்டுபிடிப்பு களால், ஈப்று மக்களை மூடியிருந்த திரை சற்று விலகியுள்ளது. இம்மக்களை அபிறு, அப்பிறு (Habiru), (apiru) என்றவாறு பல குறிப்புகளில் கண்டெடுத்துள்ளனர்.[5]

ஊர் மற்றும் இலார்சா பகுதியில், கி.மு. 2000 ஆண்டுக் காலப் பதிவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அப்பதிவுகள் இம்மக்களை அப்பிறு (Aabiru, Apiru) என்ற சொல்லால் குறிப் பிடுகின்றன.

அசீரிய வணிக நகரமான கப்படோசியாவில் கி.மு. 2000 - 1800 ஆண்டுக் காலக் குறிப்புகள் கிடைக்கின்றன.

மாரிக் குறிப்புகளும் (Mari Texts) இம்மக்களை அப்பிறு என்றே குறிப்பி டுகின்றன.

அசீரிய நாட்டின் நூசுக் குறிப்புகளும் (Nuzu documents), (கி.மு.1500),

எகிப்து நாட்டின் அபர்ணா குறிப்புகளும் (கி.பி. 1887 இல் கிடைத்தவை), கி.மு. 1500 - 1200 ஆண்டுக்காலத்தவைகளாகக் கருதப்படுகின்றன. அவைகளில் அப்பிறு என்ற சொல் காணப் படுகின்றன.

அப்பிறு என்ற சொல்லுக்கான பொருள் யாது என்பதை ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். இப்றி (Ibri) என்ற சொல் லுக்கு குடியேற்றக்காரர்கள் என்றவாறு பொருள் சொன்ன ஆய்வாளர்கள், அப்பிறு என்ற சொல்லினின்றே இப்றி என்ற சொல் பிறந்ததாகக் கருதுகின்றனர். வெளிநாட்டில் குடியேறிய எந்தவொரு இனமும் தங்களை வெளிநாட்டுக்காரர்கள் என்று கூறிக் கொள்வதில்லையாதலால், அதே பொருளைத் தரும் அப்பிறு, இப்றி போன்ற சொற்களைத்தாங்களே தங்கள் இனத்துக்குச் சூட்டிக்கொண்டிருக்க இயலாது.

அப்பிறு (Apiru) என்ற சொல்லுக்கு அந்தப்பக்கம் (That side) என்றும், அப்பால் (beyond) என்றும், ஆற்றுக்கு அப்பால்

(Beyond the river) என்றும் ஆய்வாளர்கள் பொருள் கூறுகின் றனர். இதன்அடிப்படையில், தற்கால ஆய்வாளர்கள், தைகிரீசு ஆற்றுக்கு அப்பால் (Beyond the Tigri River) என்று பொருள் கூறுகின் றனர்.[6]

தைகிரீசு ஆற்றுக்கு அப்பால் உள்ளபகுதி, மெசபத்தோமி யாவின் கிழக்குப் பகுதியாகும். எனவே, மெசபத்தோமியா வுக்குக் கிழக்கேயிருந்த ஒரு நாட்டினின்றும் வந்தவர்கள் என்ற பொருளை விளக்கும் சொல்லாகவே அப்பிறு என்ற சொல் பயன்படுத்தப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுவதால், அப்பிறு என்பது செமிட்டிக் சொல் அல்ல வென்று கூறி, சுமேரியச் சொல்லாக இருக்கலாம் என்ற கருத்தையும் முன்வைத்துள் ளனர். இக்குழப்பங்கள் எல்லாம், கிழக்கித்தியமொழி பற்றிய தெளிவில்லாத ஆய்வாளர்களால் தோற்றுவிக்கப்பட்டவை களே.

உண்மையில், அப்புற-அப்புறம் (That side) என்ற தமிழ்ச் சொல்லே, அப்பிறு எனத் திரிந்துள்ளது அல்லது தவறாகப் படிக்கப்பட்டுள்ளது என்க. தைகிரிசு ஆற்றை அப்புறத்து ஆறு எனவும் அழைத்திருக்க வேண்டும். அது பற்றியே இப்புறத்தில் (எதிர்ப் பக்கத்தில் அல்லது இடது பக்கத்தில்) ஓடிய ஆற்றை "இப்புறத்து" என்ற சொல்லால் குறித்தனர் என்க. இப்புறத்து என்ற சொல்லே, யூப்ரதிசு எனத்திரிந்துள்ளது என்பது ஏற்கன வே விளக்கப்பட்டுள்ளது. எனவே,

அப்புற - அப்பிறு -என்றும் - அப்பிறு இப்றி என்றும் - இப்றி அல்லது அப்பிறு - ஈப்று என்றும் திரிந்தது என்க.

ஈப்று (Hebrew) என்ற சொல்லின் மூலச் சொல் தமிழே என்பதை மேற்கண்ட விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன.

செம் என்பானின் பெயரன் வழியில் ஈபர் (Eber) என்பான் ஒருவன் இருந்தது பற்றி விவிலியம் குறிப்பிடுகின்றது. ஈபர் என்ற சொல்லினின்றே இப்றி (Eber - Ibri) என்ற சொல் பிறந்த தாகக் கருதினர். ஈபர் என்ற சொல்லுக்கான விளக்கத்தை ஆய்வாளர்களால் தர இயலவில்லை என்பதோடு, அப்பிறு மக்களைப் பற்றிய செய்திகள் எவையும் ஈபர் என்பவனோடு தொடர்புடையனவாக இல்லை என்க. அப்பிறு மக்களைப் பற்றி சுமேரியச் செய்தி மாறுபட்டு உள்ளது. சா காஸ் (Sa Gaz) என்ற சொல் அப்பிறு மக்களைக்குறித்து, ஊர் நகர அகழ்வாய்

வில் கிடைத்த ஆவணங்களால் அறியப்பட்டுள்ளது.[7] கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட பதிவுகளில் காணப் படும் எழுத்துக்களைக் காட்டி, தற்போதுள்ள மொழியியலார் எவ்வாறு படித்துப் புரிந்து கொண்டனர் என்பது ஒரு ஐயப் பாடான வினாவே.

மெபசத்தோமிய, உகாரிய, ஸபோனீசிய, கனானிய மொழி களில் பதிவு செய்யப்பட்டு களிமண் தட்டுகளில் அறியப்பட்ட செய்திகள்.

பாப்பிரஸ் தாளில் எழுதப்பட்டு சுருள்களாகப் பாதுகாக் கப்பட்ட எகிப்திய ஆவணங்கள்.

களிமண் தட்டுகளில் எழுதப்பட்ட சுமேரியக்குறிப்புகள்.

மேற்கண்ட ஆவணங்களில் காணப்படும் எழுத்துக் களைக் கூட்டிப்படித்து எவ்வாறு பொருள் கொண்டனர் என்பதில் ஆய்வளர்களிடையே முரண்பாடுகள் உள்ளன. சிந்து வெளியில் அறியப்பட்ட சொற்களையும் அவ்வாறே ஆய்வா ளர்கள் படித்துப் பொருள் கொண்டனர். இதனைப் படித்த வர்கள் அனைவரும் அண்மைக்கால ஆய்வாளர்களாவர். இவர்கள் சில முறைகளைப் பின்பற்றி அக்குறிப்புகளைப் படித் தனர்.

கி.மு. 2000 ஆண்டுகளில் அறியப்பட்டிருந்த பல்வேறு மொழிகளின் எழுத் துக்களை ஒற்றுமைப் படுத்தியும்,

சொற்களின் ஒலிப்புகளில் உள்ள வேறுபாடுகளை அறிந் தும்,

ஒரு மொழியில்அறியப்பட்ட ஒரு சொல், மற்ற மொழி களில் எவ்வாறு ஒலிக்கப்பட்டது என்பதைக் கண்டறிந்தும்

அச்சொற்கள் தற்காலத்திலும் வழக்கில் உள்ளனவா என்பதை ஆராய்ந்தும்,

குறிப்பிட்ட ஒரு சொல்லின் மூலமும்வேரும் அம்மொழி யிலேயே உள்ளதா அல்லது வேறுமொழிகளில் காணப்படு கின்றனவா எனக் கண்டறிந்தும்,

அம்மொழிகள் பேசிய மக்களின் இனம், பண்பாடு, நாகரிகம், ஆகிய பின்புலங்களை அலசியும்,

ஆய்வாளரின் மொழிகள் பற்றிய அறிவு, திறமை ஆகிய கூறுகளை அடிப் படை களாகக் கொண்டும்,

அக்கால ஆவணங்கள் படிக்கப்பட்டு பொருள் கொள் ளப்பட்டன. இவ்வாறு படிக்கப்பட்ட சொற்களும், சொற்கள் தந்தசெய்திகளும் நூற்றுக்கு நூறு சரியா னவை என்பதற்கான உறுதிப்பாடு எவையும் அளிக்கப்படவில்லை. தத்தம் நோக் கில் காணப்பட்டவைகளையே உறுதி செய்தனர். மெசபத் தோமியப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட குறிப்புகளை, மேற்கித்திய மொழியியலார் மட்டுமே படித்துக் காட்டினர். கிழக்கித்திய ஆய்வாளர்கள் எவரும் இதுவரை அம்முயற்சியில் ஈடுபட வில்லை.

தொடக்கத்தில் மெசபத்தோமிய மக்கள், அப்பகுதியின் பழங்குடியினரே என்ற கருத்து இருந்தது. அண்மைக் காலத்தில், அவர்கள் கிழக்கிலிருந்து குடியேறிய மக்களே என்ற கருத்து உருவானது. அக்கருத்து உண்மையெனப் பலராலும் உறுதி செய்யப்பட்ட நிலையில், கி.மு. 3000 ஆண்டுகளில் கிழக்கு நாடுகளில் பேசப்பட்ட மொழி அல்லது மொழிகளைப் பற்றிய சிந்தனைகள் இல்லாமல், மேற்கித்தியநோக்கிலேயே அக்குறிப்புகளைப் படித்தனர். இதனால் பல நூறுசொற் களுக்கான பொருளும், மூலமும் அறிய இயலாமற் போனது. ஆனாலும், அவ்வாறு பொருள் அறிய இயலாமற் போன சொற்களையும் மேற்கித்திய ஆய்வாளர்கள் பட்டியலிட்டுள் ளர். அப்பட்டியலை, கிழக்கித்தியமொழிகளின் கண்ணோட் டத்தில் தற்போது ஆய்வு செய்யும் போது, அவை பழங்காலத் திலும், தற்காலத்திலும் கூடப் பயன்பாட்டில் உள்ள தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. எனவே, தமிழோடு அக்காலத் திலே மேற்கித்திய செமிட்டிக் இன மொழிகள் கொண்டிருந்த உறவை, ஆய்வாளர்கள் கருத்தில் கொள்ளாமல் விட்டுவிட்டனர். இதனால் தங்களது முயற்சியில் முழு வெற்றியையும் அவர்களால் ஈட்ட இயலவில்லை.

தமிழுக்கே உரிய சிறப்பு ஒலிப்பான "ழகரம்", செமிட்டிக் மொழிகளிலும் அறியப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ழகர ஒலிப்பை முற்றிலும் அறியாத ஆய்வாளர்கள், அப்படியொரு ஒலி அம்மொழிகளில் இருந்ததைப் பதிவு செய்யாமல், ழ கரம் (Zh) வரும் சொற்களையெல்லாம், சகரமாக (Z)ப் பதிவு செய்துவிட்டனர். இதனால், அச்சொல்லின் மூலம் அறிய

இயலாமல், அடுத்து ஆய்வு செய்தவர்கள் தடுமாறினர். இவ்வாறான பல சொற்கள் செமிட்டிக் மொழிகளில் அறியப்பட்டுள்ளன.

தமிழ் என்ற சொல் - Tammuz என்றும்,[8]

அழர் என்ற சொல் - Azar என்றும்[9]

அழை என்ற சொல் - Aza என்றும்[10]

அழி என்ற சொல் - Azha என்றும்[11]

அழகு என்ற சொல் - Azeka என்றும்[12]

நுழை என்ற சொல் - Nuzu என்றும்[13]

உவழ் என்ற சொல்- Upaz என்றும்[14]

ஊழ் என்ற சொல் - Uz என்றும்[15]

காழ் என்ற சொல் - Kaz என்றும்[16]

மாற்றி ஒலிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட பட்டியலில் காணப்படும் Kaz (காழ்) என்ற சொல்லால், அப்பிறு மக்களை சுமேரிய இலக்கியம் குறிப்பிடுகின்றது. இச்சொல்லுக்கான பொருளை இதுவரையிலும் கூட, ஆய்வாளர்களால் அறிய இயலவில்லை. இச் சொல் எவ்வாறு அப்பிறு மக்களோடு தொடர்புடையது என்பதை, அடுத்து சொல்லப்படும் செய்திகளுக்குப் பிறகு ஆய்வு செய்யலாம்.

கல் என்ற தமிழ்ச்சொல், கெட்டித்தன்மையைக் குறிக்கும்.

கல் - கால்- காழ் என விரிந்தது. காழ்[17] = கெட்டித்தன்மை என்ற பொதுப் பொருளைத் தந்தாலும் விதை,[18] பூமாலை,[19] காம்பு,[20] மேகலை,[21] குத்துக்கோல்,[22] தண்டு,[23] கட்டுத் தளி,[24] கம்பி,[25] கழி,[26] மரம்,[27] முத்து,[28] முதிர்ச்சி,[29] வலியை,[30] சட்டக்கால்,[31] கட்டை,[32] தூண்,[33] கருமை,[34] கால்,[35] மிகுதி,[36] விட்டம்,[37] விட்டம்,[38] வரகரிசி,[38] பிணிப்பு,[39] தடி,[40] கண்ணி,[41] கைம்மரம்[42] எனவிரியும்.

காழகம்= ஆடை[43] கருநிற அல்லது நீல நிறப்புடவை,[44] கடாரத்தீவு,[45] என விரியும்.

காழாரம்[46] =முத்துமாலை.

காழியர்[47] = வண்ணார்.

காழோர்[48]= யானைப் பாகர்.

மேற்சொன்னவாறு காழ் என்ற சொல், தமிழில் பரவலாக அறியப்பட்ட சொல்லாகும்.

சுமேரியர் தமிழரே என்ற கருத்து தற்கால ஆய்வுகளில் மேலோங்கி நிற்பதால், காழ் என்ற தமிழ்ச் சொல்லால் அப்பிறு மக்களைஅழைத்தது,[49] ஒன்று அப்பிறு மக்கள் தமிழ் மக்களாயிருந்திருக்க வேண்டும் மற்றொன்று காழ் என்ற சொற் பொருளோடு அவர்கள் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

அப்பிறு என்ற எபிறேய மக்களைப் பற்றிய குறிப்புகள்:[50]

அப்பிறு என்ற சொல்லுக்கு, ஆற்றுக்கு அப்புறத்திலிருந்து வந்தமக்கள் என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

அப்பிறு மக்கள் போர் மறவர்கள் என்றும், மன்னர்கள் உள்ளிட்ட எவருக்கும் தங்கள் படை உதவியைத்தந்துள்ளனர் என்றும், இவ்வாறான படையெடுப்புகள் பற்றிய பல்வேறு குறிப்புகள் கிடைத்துள்ளனவென்றும் ஆய்வாளர்கள் கருது கின்றனர்.

ஆய்வாளர் எம்.கிரீன்பெர்க், இம்மக்கள் நாடோடி இனத்தவர் அல்லர் என்றும், இவர்கள் நகரிய நாகரித்தோடு தொடர்பு கொண்டவர்கள் என்றும் கூறுகிறார்.

எபிறேய மக்கள் கி.மு. 2000- 15000 ஆண்டுகளில், ஊர் நகரிலிருந்து வடக்கு சிரியாவை நோக்கிச் சென்றனர்.

கி.மு. 1500 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் அலலக் என்ற வடக்கு சிரியாவில் காணப்பட்ட ஆவணங்களில், எபிறேய மக்கள் படை வீரர்கள் என்றும், முறையான பயிற்சி பெற்ற படைக்குழுவினர் என்றும், சட்டங் களையும் மீறிப் படையெடுத்துள்ளனர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ள செய்திகளைக் காணலாம்.

தங்களுக்குப் பாதுகாவலராக இருக்க விரும்பிய குழுக் களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு, படை உதவிகள் செய்து வந்ததாக, நூசுக் குறிப்புகள் கூறுகின்றன.

நூசுக் குறிப்புகளில் காணப்படும் அப்பிறு இனத்தாரின் பெயர்களில், பல அக்காடிய மொழிப் பெயர்களாகவே உள்ளன.

எகிப்திய அமர்ணா குறிப்புகளின்படி, அப்பிறு மக்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

கனானிய நாட்டு மன்னர்களான அபிதி அசிர்ட்டா அவனதுமகன் அசிரு ஆகியோரிடம் நெருக்கமாக அப்பிறு மக்கள் இருந்துள்ளனர். ஆனால் கனானிய மன்னர்களும் இவர் களும் ஓரினமாகக் கருதப்பட இயலவில்லை.

கனானிய மன்னர்களின் ஆணைப்படி, எகிப்திய மன்னருக் கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். எகிப்திய நகரங்கள் சிலவற்றையும் கைப்பற்றிக் கொண்டனர். நகரங்களில் வாழ்ந் திருந்த மக்களிடம், எகிப்திய ஆளுமையைப் புறக்கணிக்கு மாறும் தூண்டினர். கண்மூடித்தனமாக, எவ்விதிகளுக்கும் கட்டுப்படாமல் எகிப்து நாட்டைத் தாக்கியுள்ளனர்.

சில எகிப்தியக் குறிப்புகளின்படி, அப்பிறு மக்கள்,கி. மு. 1500 - 1200 ஆண்டுகளில், எகிப்தில் அடிமைகளாகப் பிடிக்கப் பட்டு, கைதிகளைப் போல் நடத்தப்பட்டனர் என்று அறியப் படுகின்றது.

அப்பிறு மக்களை, செல்வநிலையிலிருந்து வறுமை நிலைக் குத் தள்ளப்பட்டவர்கள் என, எம். கிரீன்பெர்க் கருதுகிறார். தங்களது வாழ்க்கைத் தேவைகளுக்காக, ஊதியத்துக்குப் பணி யாற்றும் படைக்குழுவினராக மாறினர் என்றும் கூறுகிறார்.

மேற்கண்ட குறிப்புகளைப் போன்றே மேலும் ஏராள மான குறிப்புகள் எபிறேய மக்களைப் பற்றிய பதிவுகளில் கிடைத்துள்ளன.[51] இப்பதிவுகளின் வழியே ஆய்வாளர்கள்,

அப்பிறு மக்கள் வெளிநாட்டவர் என்றும்,

உள் நாட்டவரேஎன்றும்,

அவர் எந்நாட்டவர் என அறிய இயலவில்லையென்றும்,

தைகிரிசு ஆற்றுக்குக் கிழக்கேயிருந்த நாட்டிலிருந்து வந்தவர் என்றும்,

பல்வேறு நிலைகளில் விளக்கமளித்துள்ளனர். இவ்விளக் கங்கள் அனைத்தும் கிழக்கித்தியக் கண்ணோட்டத்தில் அணுகப் படவில்லை என்பதால், சரியான முடிவு களை அவரால் பெற இயலவில்லை.

கிழக்கித்திய கண்ணோட்டத்தில் எபிறேய மக்கள்:

ஈபர் (Eber) என்ற விவிலிய மாந்தனின் மரபினரே எபிறேயர் என்ற கூற்று, Eber -Hebrew என்ற பெயர் ஒற்றுமமையால்

சொல்லப்பட்டது. அதனை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. அமோரியர் (Amorites) என்ற இனத்தாரோடு தொடர்பு படுத்தப்பட்ட செய்தியும் புறந்தள்ளப்பட்டது. கனானிய மரபில் வந்தவர்களே என்ற கருத்தையும் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியாக தைகிரீசு ஆற்றுக்கு அப்புறத்தி லிருந்து வந்தவர்கள் என்ற கருத்து பலராலும் ஏற்றுக் கொள் ளப்பட்டாலும், அவ்வருகைக்கான பின் வரலாறு என்னவென் பதை எவராலும் கூற இயலவில்லை. மேற்கித்திய ஆய்வாளர் களின் பார்வையில், எபிறேய மக்களின் முன்னோர், அவர்கள் வாழ்ந்திருந்த நாடு, அவர்கள் பேசிய மொழி ஆகியவற்றுக் கான அடிப்படை உண்மைகள், இதுவரையிலும் தென்படவே யில்லை. எபிறேயர் பற்றிய வரலாற்றுப் புதிர்களை, மேற்கித்திய கண்ணோட்டம் விடுவிக்கவேயில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட 12 குறிப்புகளைக் கொண்டு எபிறேய மக்களை இனம்காண முயற்சிக்கலாம். அக்குறிப்புகள் அனைத்தும் மேற்கித்திய ஆய்வாளர் களால் சொல்லப்பட்ட வைகளே என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எண் 1: Apiru என்ற மூலச்சொல், Hebrew -Ibri என்றானது என்ற கருத்து ஏற்கக்கூடியதே. Apiru எம்மொழிச் சொல்லென அறியப்படவில்லையென்றாலும் அக்காடிய- சுமேரியச் சொற் களை ஒப்புமைப்படுத்தி, அப்புறம் (Beyond) என்ற பொருளில் அச்சொல் ஆய்வாளர்களால் அறியப்பட்டுள்ளது.

அப்புறம் என்ற தமிழ்ச்சொல்லே, அப்பிறு எனத் திரிந் தது என்க.

எண் 2: போர் மறவர்களாக எபிறேய மக்களை ஆய்வாளர் சுட்டுகின்றனர். மெசபத்தோமிய இனத்தில் எக்குழுவுடனும் தொடர்பில்லாத இப்போர்க் குழு, அப்புறத்திலிருந்து வந்த வர்கள் என்ற கருத்தின்படி, சிந்துவெளியினின்றும் மேற்கே சென்ற மறவர் குழுவாகவே இவர்களைக் கருதவேண்டும். சிந்து வெளியில் மிகச் சிறந்த அரசும், ஆட்சி முறைகளும் சட்டங் களும் அறியப்பட்டிருந்தன. எனவே இப்போர்க்குழு சிந்து வெளிக்குழுவே.

எண் 3: இம்மக்கள் நகரிகய நாகரிகத்தோடு தொடர் புடையவர்கள் என ஆய்வாளர்கள் கருதுவதால், கி.மு. 2500 ஆண்டுகளில் ஊர் நகர நாகரிகத்தைத் தவிர்த்து வேறு நகர

நாகரிக மக்கள் வாழ்ந்திருந்து சிந்துவெளியில்தான் என்பதை, கிரீன் பெர்க்கின் கருத்து உறுதிப்படுத்துகின்றது. ஊர் நகரத்து மக்களும், எபிறேய மக்களும் கடந்த நூற்றாண்டின் கருத்துப் படி, வெவ்வேறு இனத்தவராகவே கருதப் பட்டனர். எபிறேய மக்கள், சிந்துவெளி மக்கள் என்பதை கிரீன் பெர்க்கின் கருத்து உறுதிப்படுத்துகின்றது.

எண் 4: தைகிரீசு ஆற்றுக்கு அப்புறத்திலிருந்து வந்த எபிறேய மக்கள், ஆற்றுக்குத் தெற்கேயிருந்த ஊர் நகரில் வாழ்ந்திருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. அக்காலத்தில் சுமேரியர் என்ற செமிட்டிக் அல்லாத ஓரினம் ஊர் நகரை உருவாக்கி அங்கு ஆட்சியையும் கைக் கொண்டிருந்தது. சுமேரியர் தமிழரே என்ற கருத்து இன்று வலுப்பெற்று வருவதைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது, சிந்துவெளி மக்களாகிய எபிறேயர் தங்கள் இனத்தார் வாழ்ந்திருந்த ஊர் நகரைத் தங்களுடைய இருப்பிடமாகத் தேர்வு செய்தது, தங்கள் பாதுகாப்புக் கான சரியான தேர்வே எனக் கருதலாம். தங்களுடைய மொழியாலும் இனத்தாலும் ஒன்றுபட்ட சுமேரிய மக்களோடு எபிறேயர் வாழத்தலைப்பட்டது இயற்கை யானதே என்க.

எண் 5: எபிறேய மக்கள் சிந்துவெளியினின்றும் வெளி யேறியதற்கான அடிப்படையான கரணியம், இந்திய வரலாற் றில் காணப்படுகின்றது. கி.மு. 2500 - 1800 ஆண்டுகளில் சிந்து வெளி நாகரிகம் முடிவுற்றதாக ஆய்வாளர்கள் கருதுகின் றனர். வரலாற்றாய்வாளர் பாசம் (Basham), வெள்ளப் பெருக்கினால், சிந்துவெளி நாகரிகம் அழிவுற்றது என்கிறார். ஐயாறுகள் பாய்ந்திருந்த சிந்துவெளியில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அந்நாகரிகம் அழிந்தது என்பர். இதனை உறுதிப் படுத்தும் வகையில், அங்கு காணப்பட்ட மண்மேடுகள், பல அடுக்குகளாக (Layers) காணப்பட்டதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அவ்வாறு இயற்கையின் சீற்றத்தால் தங்களது உடமைகளை இழந்த சிந்துவெளி மக்களில் சிலர் ஒரு குழுவாக மேற்கு நோக்கிச் சென்றனர் எனக் கருதுவதற் கான அடிப்படையான கரணியங்கள் உள்ளன எனலாம்.

எண் 6: சிந்துவெளியில் வேளாண்மை, கைத்தொழில்கள் என அறியப்பட்டிருந்த வருவாயைத் தரும் துறைகளோடு, அம் மக்கள் போர்ப் பயிற்சியும் பெற்றிருந்தனர். மேற்கே குடியேறிய

நாட்டில் தமக்கு உரிமையில்லாத நிலங்களில் பயிரிட்டு வேளாண் தொழில் செய்ய இயலாத நிலையில், தமக்கு கை வரப் பெற்றிருந்த போர்க்கலையையே முதலீடாகக் கொண்டு தங்கள் வாழ்க்கைக் கான தேவைகளைப் பெற்றனர் என்ற சிந்தனை ஏற்கக் கூடியதே.

எண் 7: எபிறேய மக்களின் பெயர்கள், அக்காடிய மொழிப் பெயர்களாக இருந்தவனவென்ற செய்தி அறியப்படு கின்றது. அக்காடிய மொழியென்பது, செமிட்டிக் மொழியும் சுமேரிய மொழியும் கலந்து உருவான புதிய மொழியே என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். செமிட்டிக் என்ற தமிழ்த்திரிபு மொழியும், சுமேரியம் என்ற தமிழ்மொழியும் இணைந்து உருவான அக்காடிய மொழியும் ஒரு தமிழ்த்திரிபு மொழியே எனலாம். அந்தவகையில், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த எபிறேய மக்களின் பெயர்கள், அக்காடிய மொழியிலும் காணப்பட்டன என்பது வியப்பான செய்தி யுமன்று. மேலும், பல நூறு சுமேரியச் சொற்கள் எபிறேய மொழியில் காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் உறுதி செய் துள்ளனர்.

சுமர் என்ற சொல், சமர் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்க. தமிழ்நாட்டிலிருந்து பாரசீக வளைகுடா வழியே படையெடுத்துவந்து, தெற்கு மெசபத்தோமி யரைப் போரில் வென்று பாபிலோன் நாட்டில் ஆட்சியை நிறுவிய அம்மக் களை சமரியர் என்றே தமிழில் அழைத்தனர். சமர் = போர்; சமரியர் = போரிட்டு வென்றவர்கள். மேலைநாட்டு ஆய்வா ளர்கள், சுமேரியர் என்ற சொல்லுக்கான மூலத்தையும் பொரு ளையும் இன்றும் கூட அறிந்திருக்கவில்லை என்க. சுமர் என்ற சொல், எம்மொழிச் சொல், அச்சொல் வாழுகின்ற அல்லது இறந்த மொழிகளின் சொல்லா, உலகின் எம்மொழியோடு அச்சொல் தொடர்புடையது என அறிய இயலவில்லை யென்பது மேற்கித்திய ஆய்வாளர்களின் கூற்றாகும்.

எண் 8: எகிப்தியக் குறிப்புகளில் எபிறேய மக்களின் முன் வரலாறு சொல்லப்படவில்லை. எகிப்தியர்களுக்கு எபிறேயர் களின் இனம் மொழி பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. அண்டை நாட்டவராயிருந்தால், அது பற்றிய குறிப்பு, எகிப் தியப் பதிவுகளில் இடம் பெற்றிருக்கும். கி.மு. 1400 ஆண்டு களில் இக்குறிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கு

ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எபிறேயர் ஊர் நகரிலிருந்தனர் என்பதற்கானச் சான்றுகளும் உள்ளன.

எண் 9: கனானிய மன்னனுக்காக எகிப்தின்மேல் படையெடுத்துச் சென்ற எபிறேய மக்கள் கனானியருடன் இனவழியில் தொடர்பு கொண்டவர்கள் அல்லர் என்று ஆய்வாளர்கள் உறுதிசெய்துள்ளனர். பின்னர் அம்மக்கள் யாவர் என ஆய்வாளர்களால் இனம் காண இயலவில்லையென்பதால், எபிறேய மக்கள் செமிட்டிக் இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்ற ஊகம் உறுதிப்படுகின்றது.

எண் 10: எபிறேயர்கள் எகிப்து நாட்டில் பெருங்குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்று செய்திகள் கூறுவதால், எகிப்திய ஆட்சியாளர்களின் சினத்துக்கு அவர்கள் ஆட்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இம்மக்களை எகிப்தியர்கள் போரில் புறங்கண்டார்களா என்பது பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. எகிப்தியக் குறிப்புகள், எபிறேய மக்களை வெளிநாட்டினர் என்றே சுட்டுகின்றன.

எண் 11: கி.மு.1400 - 1200 ஆண்டுகளில், எபிறேயர் எகிப்து நாட்டில் அடிமைகளாயிருந்தனர் என்ற செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறு அவர்கள் அடிமைகளாக்கப்பட்டனர், எந்தப்போரில் அவர்கள் வீழ்த்தப்பட்டனர் என்ற தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.கி.மு. 1650 ஆண்டுகளில், இக்கோஸ் (Hyksos) என்ற வடக்கு மெசபத்தோமிய முரட்டுக் கூட்டத்தார், கனான் உள்ளிட்ட தென்பகுதி நாடுகளைத் துடைத்தெறிந்து, எகிப்தையும் கைப்பற்றிக் கொண்டனர். இவர்களுடைய எழுச்சி, சூறாவளியைப் போல் தென்பகுதியைச் சூறையாடியதால், இப் படையெடுப்பாளர்களுக்கு அஞ்சிய, கனான் நாட்டில் குடியிருந்த (அபிறகாமின் மரபினர்) எகிப்து நாட்டை நோக்கிச்சென்று புகலிடம் தேடினர் என்பதை அறியமுடிகின்றது. 150 ஆண்டுக்காலம் (கி.மு. 1500 வரை) இக்கோஸ் மரபினர் எகிப்தை ஆண்டனர். இவர்களே எபிறேயப் படையினரைப் வென்றெடுத்து, எகிப்தில் அடிமைகளாக வைத்திருந்தனர் எனலாம்.

விவிலியம் பல செய்திகளை மறைத்துவிட்டது என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். விவிலியச் செய்தியின்படி அபிறகாம் என்பவன் மரபு மட்டுமே கனான் நாட்டில் குடியிருந்

ததாக விளக்கப்பட்டுள்ளது. ஆனால் எபிறேய இனத்தின் பல குழுக்கள் கனான் நாட்டில் குடியிருந்ததாகவும், அக்குழுக் களும் எகிப்தில் அடிமைப்பட்டிருந்தனர் என்றும் ஆய்வா ளர்கள் கருதுகின்றனர். கி.மு. 1250 ஆண்டுகளில், மோசே தலைமையில் எபிறேய மக்கள் எகிப்தைவிட்டு வெளியேறிய போது, எபிறேய போர்ப்படையைச் சார்ந்தவர்களும் மோசே யுடன் வெளியேறினர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எபிறேய மக்களின் தோல்விகளையும், சில விரும்பத்தகாத நிகழ்வுகளையும் கூட, மோசே பதிவு செய்து வைத்திருந்த தாகவும், கி.மு. 300 ஆண்டுகளில் தோரா என்ற சமய நூல் (விவிலியம்தான்) தொகுக்கப்பட்டபோது, பல்வேறு செய்திகள் விடப்பட்டன என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவ்வாறு விடுக்கப்பட்ட செய்திகளின் ஆவணங்களும், அலெக்சாந்தி ரியா நூல்நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தாகவும், கி.பி. 400 ஆண்டுகளில், கிறித்துவ சமயத்தின் வன் முறையாளர்கள், விவிலியம் தவிர்த்த மற்ற நூல்கள் யாவும் சாத்தானால் எழுதப் பெற்றவைகளே என்ற எண்ணத்தில், அலெக் சாந்திரிய நூல் நிலையத்தைத் தீக்கிரையாக்கிவிட்டனர் என்றும் செய்திகள் கூறுகின்றன. இதனால் பல செய்திகளுக் கானச் சான்றுகள் பலவும்அழிக்கப்பட்டன என்று வரலாறு கூறுகின்றது.

எண் 12: கிரீன் பெர்க்கின் கருத்துப்படி, பணத்துக்காகப் போரிட்ட எபிறேய மறவர் கூட்டம், ஒரு காலத்தில்செல்வச் செழிப்புடன் வாழ்ந்திருந்தவர்கள் என்றும், அவர்களது செல் வநிலை அழிந்து, ஏதிலிகளாக அலைந்தனர் என்றும் அறிய லாம். சிந்துவெளியில் நகரிய நாகரிக மக்களாக வாழ்ந்திருந்த செய்தியையே கிரீன் பெர்க் விளக்குகிறார் எனலாம்.

எனவே, அப்பிறு என அழைக்கப்பட்ட மக்கள், சிந்து வெளியில் வாழ்ந்திருந்த தமிழர்களே என்றும், இயற்கையின் சீற்றங்களால் நாடு நகரங்கள் அழிந்து போன நிலையில், தங் களது உடைமைகளை இழந்து நாடோடிகளாக மெசபத் தோமியாவில் குடியேறினர் என்றும் கருதுவதற்கான கருது கோள்கள் வலுவாக உள்ளன. தமிழ்க் கண்ணோட்டத்தில், மேலைநாட்டு ஆய்வாளர்களால் விளக்கிக் கூற இயலாமல் விடுபட்டுள்ள நிகழ்வுகளையும், அம்மக்களின் மொழிகள், சொற்கள், சொற்களுக்கான பொருள் ஆகியவனவற்றை விடுவிக்க

இயலும். மேற்சொல்லப்பட்ட விளக்கங்களை மட்டும் அடிப்படைகளாகக் கொண்டு அப்பிறு இன மக்கள், சிந்துவெளித் தமிழர்களே என்ற முடிவுக்கு வராமல், மென்மேலும் பல்வேறு சான்றுகளைக் காட்டி, எபிறேயர்களின் வரலாற்றில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்ச இயலும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்க முற்பட்டுள்ளது.

8 எபிறேய மொழியின் தோற்றம்

அப்பிறு (எபிறேய) மக்கள், தைகிரீசு ஆற்றுக்கு அப்புறத்திலிருந்து வந்தவர்கள் என்றும், அவர்கள் வெளிநாட்டினரே என்றும், ஊர் நகரிலேயே முதன்முதலாக அவர்கள் குடியேறினர் என்றும் அறியப்பட்டாலும், குடியேற்றக் காலத்தில் அவர்கள் பேசிய மொழி பற்றிய எந்தச் செய்தியும் தெளிவாக்கப்படவில்லை. எபிறேய மக்களின் குடியேற்றம் கி.மு. 2500 ஆண்டுகளில் நிகழ்வுற்றிருந்தபோதும், எபிறேயர் என்ற சொல், கி.மு. 2000 ஆண்டிற்குப் பிறகுதான், அம்மக்களோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. எபிறேயர் என்பது இனமா அல்லது மொழியா என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை. கனான் நாட்டில் அபிறகாம் என்ற எபிறேயன் குடியேறிய போது, (Gn. 11: 27), அவன் வழிபட்ட கடவுளுக்கும், மற்ற மெசபத்தோமிய, கனானிய, ஊகாரிய கடவுள்களுக்கும் எந்தத் தொடர்பையும் அறிய இயலவில்லை. அபிறகாமின் கடவுள் ஆண் கடவுளாகவும், தனித்தும் அறியப்படுவதோடு, அவனது கடவுளின் பெயர் எல்-சடை (El - Shaddai) என்று விளக்கப் பட்டுள்ளது. மற்ற இனக் குழுக்களில் பெண் கடவுளர்கள் இருந்துள்ளனர். எனவே, அபிறகாம் அப்பகுதியைச் சார்ந்தி ராதவன் என்பதும் தெளிவாகின்றது.[1] அக்கடவுளை, அபிற காமின் கடவுளோடு இணைக்க இயலவில்லை என சொல்லப் பட்டுள்ளது.[2]

எனவே, அபிறகாமின் இனமும், மொழியும் சமயமும் அங்கிருந்த மெசபத் தோமியக் குழுக்களோடு தொடர்பில் லாதது எனத் தெளிவாகின்றது. குடும்பக் கடவுள் முறை (தமிழ கத்தில் அறியப்படும் குடிசாமி) அபிறகாமின் வழிவந்தவர் களாலும் அறியப்படுகின்றது. அபிறகாமின் உறவினரான இலெபன் (Laban) என்பவனின் மகளை, அபிறகாமின் பெயரன் யாக்கோபு மணமுடித்தான். இந்த இலெபன் என்பவன் மண் பொம்மை ஒன்றை வைத்து வழிபட்டு வந்ததாக விவிலியம்

கூறுகிறது. அந்தமண் பொம்மையே இலெபனின் குடும்பக் கடவுளாகும். அப்பொம்மை அவனது மகள் இராக்கேல், மறைத்து எடுத்துச்சென்றுவிட்டதாக விவிலியம் கூறுகிறது.[3]

அபிறகாம் தனி இனத்தவன் என்பதையும், அவ்வினத்தார் பேசிய மொழி, அப்பகுதிகளில் பேசப்படாத தனிமொழியே என்பதையும்,விவிலியச் செய்திகள் விளக்குகின்றன. ஆனாலும், எபிறேய மொழியை வடமேற்கு செமிட்டிக் மொழி யென ஆய்வாளர்கள் கூறுவது, முரண்பாடாகவே உள்ளது. அத்துடன் கனானிய, அறமாயிக் மொழிகளோடும் எபிறேய மொழியை இணைத்துக் கூறுகின்றனர். கனானிய மொழி கி.மு. 2000 ஆண்டுகளில் சிரியா மற்றும் பாலத்தீனப் பகுதிகள் எங்கும் பேசப்பட்டதாக, உகாரிய, ஃபோனீசிய,எபிறேய மொழிகளின் இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் அபிறகாம் காலத்தில் எபிறேய மொழி எங்கெல்லாம் பேசப்பட்டது என்பதற்கானக் குறிப்புகள் இல்லை.

பல்வேறு நிகழ்வுகளைப் பார்க்கும்போது, அபிறகாமின் முன்னோர் தைகிரீசு ஆற்றங்கரையில் குடியேறிய போது பேசிய மொழி தமிழே என்றும், ஊர்நகரில் அவ்வினத்தார் குடியேறிய போது, தமிழும் அந்த வட்டார மொழியாகிய சுமேரியம், அக்காடியம் போன்றவைகளுடன் கலந்து புதிய மொழியாக எபிறேயம் தோன்றி யிருக்க வேண்டும் என்ற கருதுகோள் வலுவாக உள்ளது. சுமேரியர்களின் தாய் மொழி தமிழே என்றாலும், தமிழகத்தைவிட்டு பல்லாயிரம் கல்தொலைவில் சென்ற அம்மக்களின் தாய்நாட்டுத் தொடர்புகள் அறுந்து போனமையாலும், அப்பகுதியின் வட்டாரமொழிக் கலப்பினாலும், சுமேரியமும் திரிபு மொழியாயிற்று எனலாம்.

செம் என்பானின் முன்னோர்பேசிய தமிழ்மொழி, காலப் போக்கில் திரிபு பட்டு செமிட்டிக் மொழியாயிற்று. அம்மொழியின் மூலம் தமிழிலேயே இருந்தது.

சுமேரியர் தமிழும் செமிட்டிக் திரிபு மொழிகளுடன் கலந்து, தமிழினின்றும் விலகிப்போனது. ஆனாலும் அம்மொழியிலும் தமிழின் வேர்ச்சொற்கள் இருந்தன.

சுமேரியமும் செமிட்டிக் இனமும் கலந்து, அக்காடிய மொழி உருவாயிற்று. அம்மொழியிலும் தமிழின் தாக்கங்கள் இருந்தன.

எபிறேய மக்களின் தமிழ்மொழியும், மேற்கண்ட மொழி களுடன் கலந்து, எபிறேயம் என்ற புதுமொழி தோன்றியது. இதன் கால அளவு கி.மு. 2500 - 2000 ஆண்டுகளில் குறிப்பிட லாம்.

எனவே, கனானியம், ஃபோனீசியம், அறமாயிக், அக்கா டியம், சுமேரியம், எபிறேயம் ஆகிய மொழிகளை ஆய்வு செய்யுங்கால், அனைத்துமொழிகளிலும் தமிழின் தாக்கங்கள் உள்ளதை மறுப்பதற்கில்லை. ஆனால் அம்மொழிகள் பேசிய மக்களின் வரலாறு தெளிவு படுத்தப்படாமல் உள்ளதால், உறுதியான ஒரு மொழிக் கொள்கையை ஆய்வாளர்களால் எடுக்க இயலவில்லை.

காலப்போக்கில், பன்மொழிகளாகக் கிளைத்த தமிழ், அந்தந்த வட்டாரப் பெயர்களையே தாங்கி மொழிப் பெயர் களாக உருவாயின. இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, எந்த ஆய்வாளரும் இம்மொழிகள் பற்றிய ஆய்வு களை மேற்கொள்ளலாம்.

இதுநாள் வரையிலும், மேற்கண்ட மொழிகளுக்கான மூலமொழி, அதாவது விவிலியம் குறிப்பிடும் "அந்த ஒரு மொழி' யை, Proto language என்ற பெயரால், மேற்கித்திய ஆய்வா ளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த Proto language தமிழே என்பதை நிறுவ, பல்லாற்றானும் சான்றுகளைத் தர இயலும். அந்த அளவில், எபிறேயம் என்பது, இயல்பில் தமிழாய் இருந்து மெசபத்தோமிய வட்டார மொழிகளுடன் கலந்த ஒரு தமிழ்த் திரிபு மொழியே என்பதை உறுதிப்படுத்த இவ்வாய்வுக் கட்டுரை முயன்றுள்ளது.

தமிழுக்கு எழுத்துவடிவம், கி.மு. 10000 ஆண்டுகளிலேயே அறியப்பட்டுள்ளது என்பதால், குடியேறிய எபிறேய மக்கள் பேசிய தமிழ்மொழிக்கு எழுத்து வடிவம் இருந்தது என்பதும் தெளிவு. அத்தமிழ் திரிபுமொழியான போது, தமிழ் எழுத்து களும் கைவிடப்பட்டன அல்லது மறைந்துபோயின. கி.மு. 2000ஆண்டில் அபிறகாம் பேசிய எபிறேய, மொழி தமிழா யில்லாமல், தமிழின் திரிபுமொழியாக வேயிருந்தது என்பதை, அபிறகாமின் முன்னோர், அவனது மக்கள், உறவினர் ஆகி யோரின் தமிழ்ப் பெயர்களால் அறியலாம். அன்றியும் அபிறகா முடன் தொடர்புடைய நிகழ்வுகள், சமயம், கடவுள் ஆகிய

வற்றோடு தொடர்புடைய சொற்களும் தமிழ்ச் சொற்களாக வே உள்ளன. இதன் விளக்கம் அபிறகாம் என்ற தனித்தலைப் பில் காணலாம்.

எபிறேய மொழியின் மக்களை பிரித்துஅறியாத நிலையில், அம்மக்களையும் மொழியையும்செமிட்டிக் இனத்தோடு தொடர்புபடுத்தினர். இத் தொடர்புகளுக்கும் வலுவான கரணி யங்கள்

இருந்தன. என்றாலும், அவற்றை ஆய்வாளர்களால் காண இயலவில்லை. தமிழ்க் கண்ணோட்டத்தால் மட்டுமே, செமிட்டிக் இன மொழிகள் பற்றிய புதிர்களை விடுவிக்க இயலும் என அறிக.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகம் வந்த ஐரோப் பியக் கிறித்துவ விடையூழியர்கள், ஆங்கிலம் அல்லது இலத்தீன் வழியில் கல்விபயின்றவர்கள் என்பதாலும், எபிறேய மொழியை அவர்கள் கற்றிருக்கவில்லை யென்பதாலும், தமிழ்-செமிட்டிக் இனத்தொடர்புகளைப் பற்றி அவர்களால் அறிய இயலவில்லை. கால்டுவெல்லார் மட்டுமே இவ்வொற்றுமையைக் கண்டு சொன்னார். அவரும் முறையான ஆய்வாகச் செய்து அதனை அறிவிக்கவில்லை. மேலெழுந்தவாரியாகக் காணப்பட்ட ஒற்றுமைகளையே அவர்சுட்டிக் காட்டினார். தமிழுக்குத் தொண்டாற்றிய வீரமாமுனிவர், போப்பையர், போன்றோரும் எபிறேய - தமிழ் மொழிகளிடையே காணப்பட்ட ஒற்றுமை களை அறிந்திருக்கவில்லை.

எனவே, எபிறேயர் வரலாறு தொடங்கிய கி.மு. 2500 ஆண்டுகளுக்குப் பிறகே, எபிறேய மொழியும் தோன்றியது எனக் கருதுவதில் தவறில்லை. எபிறேய மொழி மெசபத் தோமியப் பகுதியில் பேச்சு வழக்கிலிருந்த போது, சுமேரிய மொழிக்கான எழுத்துகளும் வரி வடிவங்களும் அறியப்பட்டி ருந்தன.[4] ஆப்பு எழுத்துகள் என அறியப்படும் குறியீடுகளை, சுமேரியர் கி.மு. 3000 ஆண்டுகளில் பயன்படுத்தி யுள்ளனர். அக்காலத்தில் எபிறேய மொழியோ, அதன் எழுத்து வடிவங் களோ அறியப்படவில்லை. எபிறேயம் என்பது தமிழ் மொழி யின் மூலக் கூறுகளைக் கொண்டு, மற்ற வட்டார மொழி களோடு கலந்து உருவான மேற்கித்திய செமிட்டிக் மொழி யாகக் கருதப்படுகின்றது. அக்காடியம், கனானியம் போன்றே

எபிறேயம் கருதப்பட்டாலும், எபிறேய மொழிபேசிய மக்களில் தோன்றிய தலைவர்களால், அம்மொழி சிறப்பைப் பெற்றுவிட்டது.

மேலை நாடுகளில் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்திய அபிறகாம், அவன் வழி வந்த மக்கள், அம்மரபில் தோன்றிய மோசே, தொடர்ந்து அறியப் படும் தாவூது - சாலமன் மன்னர்கள், எரேமியா, இசையா போன்ற இறைவாக்கினார், இறுதியாக இயேசு கிறித்து என அப்பட்டியல் நீள்கிறது. மேற்கித்திய நாடுகளில் ஒரு கடவுள் கொள்கையை முதன்முதல் அறிமுகம்செய்த அபிறகாமும் மோசேயும் எபிறேய இனத்தின் மிகப்பெரும் தலைவர்களாக இன்றும் உலக மக்களால் போற்றப்படுவதும், எபிறேய மொழியின் சிறப்புக்கொரு கரணியமாகும்.

எபிறேய மொழி, மெசபத்தோமியப் பகுதிகளில் கிளைத்த மொழிகளில் காலத்தால் பிந்தியதாகும். செமிட்டிக் மொழியினத்தில் அறியப்படும் மொழிகளில்,

வடகிழக்குச் செமிட்டிக் மொழிகளான மெசபத்தோமியம் = கி.மு. 10000 ஆண்டுகள்,

வட மேற்குக் செமிட்டிக் மொழிகளான கனானியம், அறமாயிக் = கி.மு. 10000 ஆண்டுகள்,

தென் செமிட்டிக் மொழிகளானஅரபு, எத்தியோப்பியம் = கி.மு. 10000 ஆண்டுகள்,

என, கணக்கிடப் படலாம்.

அக்காடிய மொழி, சுமேரியத்துடன் கலந்து கி.மு. 3000 - 2500 ஆண்டுகளிலும், எபிறேயம், செமிட்டிக் மொழிகளுடன் கலந்து கி.மு. 2500 -2000 ஆண்டுகளிலும் தோன்றின எனக் கருத இடமுண்டு.

மேற்கண்ட தொன்மையான செமிட்டிக் மொழிகளுக்கான வரி வடிவங்கள் தெளிவாக அறியப்படாத நிலையில், சுமேரியர்களே மேற்கில் முதன்முதலாக எழுத்து வடிவத்தினை அறிமுகம் செய்தனர் என்று வரலாறு கூறுகிறது.[4] அவ்வரி வடிவத்தையொட்டியே கனானிய, அக்காடிய வரி வடிவங்கள் எழுதப்பெற்றன. கி.மு. 1500 ஆண்டுகளில் ஃபோனீசியர்கள் ஒரு புதிய வரிவடிவத்தினை உருவாக்கினர்.[5] அதனை ஏற்றுக்

கொண்ட எபிறேய மொழியும், ஃபோனீசிய வரி வடிவத்தி லேயே எழுதப்பட்டது என்பர். ஃபோனீசியர்கள் முதன்மைக் குடிகளான கனானியர் வழிவந்தவர்கள் என்றும், எபிறேய மக்களில் ஒரு கிளையினரே என்றும் முரண் பாடான கருத் துகள் வெளியிடப்படுகின்றன. எபிறேய மக்களும் ஃபோனீ சியர்கள் முதன்மைக் குடிகளான கனானியர் வழிவந்தவர்கள் என்றும், எபிறேய மக்களில் ஒரு கிளையினரே என்றும் முரண் பாடான கருத்துகள் வெளியிடப்படுகின்றன. எபிறேய மக்களும் ஃபோனீசியரும் ஓரினமே என்றும், அபிறகாம்- மோசே வழியில் ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் எபிறேயர் என்றும், பல கடவுளர்களை வழிபட்டு வந்த பழைய கொள்கையை மாற்றிக் கொள்ளாமல் இருந்தவர்கள் ஃபோனீ சியர்கள் என்றும் கருதப்படுகின்றது. ஆனாலும், இவ்விரு மக்களிடையே காணப்பட்ட உறவு சிறப்புக்குரியதாகவே இருந் தது. சாலமன் - அகிராம் மன்னர்கள் உறவை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

தொண்டையிலும் (gutteral) அதற்கு வெளியேயும் ஒலிக்கப் படும் எழுத்துகள், வலிந்து ஒலிக்கப்படும் (Emphatic) எழுத் துகள் என எபிறேய மொழியில் அறியப்படுகின்றன. இவை தமிழில் அறியப்படும் மெல்லினம், வல்லினம் என்ற ஒலிகளைப் போன்றவையே. எழுத்து, வேர், மூலம் (triliternal) ஆகியவையே ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுபவைகளாகும். இது உலக மொழிகள் அனைத்துக்கும் பொதுவான விதியு மாகும். சொல்லுக்கு முன்னும் (Pre-fix) பின்னும் (Suffix) சேர்க் கப்படும் எழுத்துகள் அல்லது சொற்கள், மூலச் சொல்லின் பொருளை மாற்றி அறியவும் பயன்படுகின்றன.

எபிறேய மொழியில் உயிரெழுத்து முறை தொடக்கத்தில் காணப்படவில்லை. உயிர் மெய் (Consonants) முறையே அறியப் பட்டது. இதனால், பல குழப்பங்கள் தோன்றின. பிற்காலத்தி லேயே உயிரெழுத்தைச் சுட்டும் (Vowels) குறியீடுகள் கொடுக் கப்பட்டன. தொடக்க காலத்தில் எழுதப்பட்ட விவிலியத்தில் உயிரெழுத்துமுறை பின்பற்றப்படவில்லை. கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே, உயிரெழுத்து ஒலியை குறியீடுகள் வழியே எபிறேய எழுத்துகளில் இணைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. எபிறேய மொழி அறிஞர்கள் (Scribes), எழுத்துகளின் மேலே, கீழே, பக்கவாட்டில் புள்ளிகளிட்டு உயிரொலியைப் பிரித்துக் காட்டினர். இந்த அறிஞர்கள்

மசோரியர் (Massoretes) எனப்பட்டனர். இவர்களின் முறையில் எழுதப்பட்ட புதிய நூல்கள் Massoretic Texts எனப்பட்டன.[6]

எபிறேய மொழியில் 22 எழுத்துகளே உள்ளன. இவை ஃபோனீசியர்கள் அறிமுகம் செய்த புதிய முறையக் கொண்டதாகும். அ, இ, ஐ, உ, என்ற மரபு வழி உயிரொலிகள், நிக்குட் (சூமைனே) என்றொரு முறையாலும் எபிறேய மொழியில் அறியப்பட்டன.[7] தற்காலத்திய எபிறேய மொழி, விவிலிய எபிறேயத்தினின்றும் மாறுபட்டதாகும். தற்காலத்திய எபிறேய மொழியில் மேற்கித்திய இந்திய - ஐரோப்பிய முறைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

எழுத்துகளில் புள்ளியிட்டு எழுதும் முறை எபிறேய மொழியில் அறியப்பட்ட பிறகே, தமிழில் புள்ளியிட்டு எழுதும் முறை தோன்றியதாகவும் அரங்கசாமி போன்ற தமிழறிஞர்கள் கருதினர். இந்தக் கருதுகோள் தவறானது மட்டுமல்லாது, மெய்ப்பிக்கச் சான்றுகளும் இல்லாதது. உயிரொலிகள் இல்லாமல் உயிர்மெய் இல்லையென்பது மொழிகளுக்கான பொதுவான விதியாகும்.

தன்னிலே இயங்கக் கூடிய ஆற்றலுடையது. அந்த உயிரினால் இயக்கப்படுவதே மெய்யாகும். உயிரும் மெய்யும் இயக்கத்திற்கான அடிப்படைகள் ஆகும். இவ்விதி மாந்தனுக்கு மட்டுமல்லாது மொழிக்கும் பொருந்தும். இயற்கையின் பாற்பட்ட இயக்கத்தை, தமிழுக்கு ஏற்றி உருவகமாகச் சொன்னவர்கள் தமிழர்கள். தமிழில் அ முதல் ஔ வரையிலான பன்னிரு எழுத்தும் தனித்தியங்கும் ஆற்றலுடையவை. க முதல் ன வரையிலான பதினெட்டு எழுத்துகளும் தன்னிலே இயங்க வியலாதவை. அவை உயிர்களால் இயக்கப் படுபவை. அதனால் அவை மெய் யெனப்பட்டன. உயிர் வழியில் இயங்கும் உடலைப் போன்று, மெய்யெழுத்துகளும் தம்மோடு இணைந்த உயிரெழுத்தின் ஒலி அளவுகளை (மாத்திரை) உள்ளடக்கியவைகளாகும்.

எபிறேய மொழியில் உயிர் ஒலி இல்லை எனக் கூற இயலாது. அவ்வொலியை வேறுபடுத்திக் காட்ட சரியான வரிவடிவம் கொடுக்கப்படவில்லை எனலாம். தொடக்க காலத்திய மொழிகள், தமிழ் உட்பட, பல்வேறு குழப்பங்களைக் கொண்டு, பொதுமக்களால் படிக்க இயலாத நிலைமையைக் கொண்டிருந்தன. தற்காலத் தமிழிலும் படிக்க இயலாதவாறு சில சொற்கள் இருந்தனவென்று பேராசிரியர் சூ. இன்னாசி குறிப்பிடுகிறார்.[8] சதுரகராதியைப் பதிப்பித்த ஆசிரியர், தமது பதிப்புரையில்,

"பொருளதிகாரத்தில் குதிரைக் கல்லணைக்குரிய பொருள் களுள் "மாக கருவி" எனப் போடப்பட்டுள்ளது. இதனை மாக கருவி எனக் கொள்வதா? இரண்டாம் எழுத்தாக உள்ள முதல் க கரத்தை மெய்யாகக் கொண்டு மாகக்கருவி என்பதா? என் றெல்லாம் சிந்திக்க இடமிருப்பினும் மாகாரத்தில் உள்ள ஆகாரக் குறியீட்டை ரகரமாகவும், முதற் ககரத்தை மெய்யாக வும் கொண்டு "மரக் கருவி" என்பதே பொருந்தும் எனக் கொள்ளப்பட்டது."

என்றவாறு மெய்யெழுத்தில் புள்ளியிடாமல் எழுதப்பட் டதால் வந்த குழப்பங்களை விளக்குகிறார்.

எபிறேய மொழியின் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் எழுதப் பட்ட (கிறித்துப் பிறப்பாண்டுகளுக்குப் பின்னர்) விவிலியத்தில் உயிரொலிகளைக் குறிக்கும் குறியீடுகள் இணைக்கப்பட்டன. தொடக்க காலத்து எபிறேய மொழிச் சொற்கள் (கி.மு. 2000), வாக்கியங்களாக இல்லாமல், ஒருசில சொற்களாக, பானை ஓடுகளில் காணப்பட்டன. (நெசர் என்ற ஊரில்) சமாரிய (Samaria) என்ற பாலத்தீனத் தின் வடபகுதியில், உயிரொலி களைப் பிரிக்காத எபிறேயக் குறிப்புகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

எபிறேய மொழி பற்றிய கவனத்துக்குரிய செய்தி என்ன வென்றால், எபிறேயம் ஒரு மொழியென்ற குறிப்பு விவிலியத் தில் ஓரிடத்தில் கூடக் காணப்படவில்லை. எபிறேய மொழியை கனானியம் அல்லது யூதேயம் (Canaanite or Judhaite) என்றே விவி லியம் குறிப்பிடுவதால்,கனானியத்துக்கும் எபிறேயத்துக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் இருந்திருக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது.[9] யூதே யம் என்ற மொழி எருசலேம் நகரில் பேசப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் மிகக் குறுகிய வட்டப் பகுதிகளுக்குள் இருந்த நாட்டுப்புறங்கள் (Villages) தங்களுக்குள் சிற்சில வேறுபாடுகள் கொண்ட மொழிகளையே பேசி வந்துள்ளனர் என ஆய்வாளர்கள் கூறு கின்றனர். பிற்காலத்தில் தளிமடல் எனப்படும் தால்மட் (Tal- mud) குறிப்புகளில், எபிறேயம் ஒரு செம்மொழியாகவும் அறிவார்ந்தவர்களின் மொழியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[10] தற்கால எபிறேயம் விவிலியச் சொற்களைக் கொண்டு, மேலை நாட்டு இலக்கணமுறைகளில் உருவாக்கப்பட்டதாகும்.

9. எபிறேய மக்கள்

இதற்கு முன்பு விளக்கப்பட்டுள்ள செய்திகளின் வழியே, எபிறேய மக்கள் தைகிரீசு ஆற்றுக்குக் கிழக்கேயிருந்து புலம் பெயர்ந்து சென்ற மக்களே என்பது அறியப் படுகின்றது. சிந்து வெளியில் சிதைவுற்ற நாகரிகம், பல்வேறு கரணியங்களால் நிறுவப்பட்டாலும், அழிந்துபட்ட நாட்டின் மக்கள், நிலை யான மற்றும் வளமான குடியிருப்பை வேண்டி மேற்கு நோக் கிப் பயணமாயினர் என்பது தெளிவாகின்றது. அவ்வாறு மேற்கு நோக்கிச் சென்ற மக்களின் எண்ணிக்கை பற்றிய செய்திகள் எந்தப் பதிவுகளிலிருந்தும் கிடைக்கவில்லையென்றாலும், ஒரு பெருங்கூட்டம், சிந்துவெளியினின்றும் வெளியேறியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. எவ்வாறெனில், மெசபத் தோமியாவில் குடியேறிய அக்கூட்டம், பெரும் எண்ணிக் கையில் போர் மறவர்களைக் கொண்டிருந்ததாக மேற்கித்திய குறிப்புகள் தெரிவிப்பதால், நூறாயிரம் மக்கள் மேற்கு நோக் கிப் புலம் பெயர்ந்தனர் எனக் கொள்ளலாம். இக்குழுவில் பல குடும்பங்கள் இருந்திருந்தாலும், மொழியாலும் இனத்தாலும் பண்பாட்டு நாகரிகத்தாலும் அம்மக்கள் ஒன்றுபட்டிருந்தனர் என்பதும் தெளிவு.

சின்னாற்றங்கரையில் குடியேறிய அம்மக்கள், அப்பகுதியின் வளமான ஊர்களில் பரவி வாழ்ந்திருந்தனர். அக்காலத்திய பாபிலோன் நாட்டுப் பகுதிகளான சிப்பார் (Sippar) பாபி லோன் (Babylon), போர்சிப்பா, நிப்பூர், உம்மா (Umma), இலா காசு (Lagash), ஊருக் (Uruk), ஊர் (Ur), ஈரிடு (Eridu) போன்ற நகரங்களில் வாழ்ந்திருந்தனர் என அறியலாம். இவ்வூர்களில் நகர நாகரிகத்தில் சிறப்புற்றிருந்த ஊர் நகரம் (Ur city) அப் பகுதியின் முதல் நகரமாகவும், தலைநகரமாகவும் இருந்தது. மேற்கண்ட ஊர்கள் யாவும் சுமேரியர் காலத்தில் பொலிவுற்றி ருந்தவைகளாகும்.[1] எபிறேய இனமக்கள் மெசபத்தோமியாவில் நுழைந்த காலம் (கி.மு. 3000 -2500) அப்பகுதியைச் சுமேரியர்

ஆண்டு கொண்டிருந்த காலமாகும். சுமேரியர் தமிழரே என்பதாலும், குடியேறியவரும் தமிழரே என்பதாலும், குடியேறியவர்களுக்கு வரவேற்பிருந்ததேயன்றி இடையூறுகள் இருந்திருக்க வாய்ப்பில்லை.

இவ்வாறு குடியேறியவர்களில் நாகோர் (Nahor) என்பவனைப் பற்றிய செய்தியைத் தொடக்கமாகக் கொண்டே விவிலிய நூல் பேசுகின்றது. நாகோர் என்ற சொல்லுக்குப்பொருள் தெரியவில்லை என்று கூறப்பட்டாலும், அது நாகர் (Nahar) என்ற தமிழ்ப்பெயரே எனக்கொள்வதில் தவறில்லை. நாகோர் என்பவனின் காலம், அபிறகாமின் காலத்தைக் கணக்கில் கொண்டால், கி.மு. 2200 என்று கருதலாம். ஏனெனில் அபிறகாமின் பாட்டனே நாகோர் எனப்பட்டான். அவன் ஊர் நகரில் வாழ்ந்திருந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. நாகோர் தனியொரு குடும்பத்தலைவனேயன்றி, ஒட்டுமொத்தமான எபிறேய இனத் தலைவானாக இருந்திருக்க வாய்ப்பில்லை. மற்ற எபிறேய மக்களைப் பற்றி விவிலியம் பேசவில்லை. சமய நோக்கில் நாகோர் மட்டுமே விவிலியத்தில் பேசப்படுகிறான். மற்ற எபிறேய மக்கள், மேற் சொல்லப்பட்ட ஊர்களில்பரவி வாழ்ந்திருந்தனர் எனலாம். நாகோர் என்பவனின் மகனாக தெரா (Tera) என்பான் சொல்லப்பட்டுள்ளான். வேறு செய்திகள் எவற்றையும் நாகோரைப் பற்றி விவிலியம் விளக்கவில்லை.

நாகோரின் மகன் தெரா என்பவனும் ஊர் நகரில் வாழ்ந்திருந்தவனே. தெரா என்ற சொல்லுக்கான பொருள் தெரியவில்லையென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நாகோர் - தெரா பற்றிய சொற்களின் விளக்கங்கள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன. தெரா என்பவனைப் பற்றி, விவிலியம் தரும் செய்தியை விட, குர்ஆன் விரிவான செய்திகளைத் தருகின்றது.

குர்ஆன் தெராவை (Azar) என்ற பெயரால் குறிப்பிடுகின்றது.[2] எனவே தெரா - ஆசர் ஆகிய இரண்டு பெயர்களும் இயற்பெயர்கள் அல்லவென்றும், அவன் செய்து வந்த தொழில் அல்லது வணிகம் தொடர்பாக இவ்விரு பெயர்களும் சொல்லப்பட்டுள்ளன என்றும் கருதலாம். தமிழில் சொல்லப்படும் ழ கரம், செமிட்டிக் மொழிகளில் ண என்ற ஒலிப்புடன் சொல்லப்பட்டுள்ளது. எனவே, ஆழர் அல்லது அழர் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபாகவே ஆசர் என்ற சொல்லைக் கருதலாம்.

தெரா என்ற சொல்லுக்கான பொருள் மண் என்று ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. மண்ணோடு அவன் எதற்காகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளான் என்பதை நோக்கும் போது, ஊர்நகரில் ஏராளமான மண் கடவுளர் உருவங்களைப் பொம்மைகளாகச்செய்து தெரா விற்றுவந்தான் என்ற செய்தியை குர்ஆன் விளக்குகிறது. இம்மண் பொம்மைகளை விரும்பி வாங்கி, அக்கடவுளர்களை அம்மக்கள் வழிபட்டனர் எனக் கருதலாம். ஏராளமான மண் பொம்மைகளை விற்றதினால், பெருஞ்செல்வத்தைத் தெரா ஈட்டினான். புதுப்புது தெய்வங்களை உருவாக்கியதோடு, அத்தெய்வங்களின் ஓவியங்களையும் விற்று வந்தான். குர்ஆன் இவனை மிகச்சிறந்த சிற்பக் கலைஞனாகச் சுட்டுகிறது. அவனது சிற்பம் சார்ந்த தொழில் எல்லோராலும் மதிக்கத் தக்க அளவில் இருந்தது. இதனால் நகரத்தின் சிறப்புகுரியவனாக (Lord)க் கருதப்பட்டான்.[3]

தனதுதொழிலை விரிவுபடுத்தும் பொருட்டே ஊர் நகரிலிருந்து மெசபத்தோமியாவின் வடமேற்கேயிருந்தஅரண் (Haran -derived from the Tamil word Aran / meanning Castle.) நகருக்குத் தன் குடியிருப்பை மாற்றினான். அங்குச் சில காலம் தனது தொழிலை செய்துமுடித்துக்கொண்டு, கனான் நாட்டுச் செல்வதாகக் கருதியிருந்தான். ஆனால், அரண் நகரிலேயே அவன் இறந்துபட்டான். தெராவைப் பற்றிய குறிப்புகள், ஆப்பெழுத்துப் பதிவுகளாக, தில் -துராக்கி (Til Turakhi) என்ற நகரில் கிடைத்துள்ளன. அரண்,நாகோர் போன்று தெரா என்பதும் ஒரு பெயரே எனவும், அவனது இயற்பெயர் அல்லது கரணியப்பெயர் என்பதைவிட, குழுவின் (Clan's name) பெயராகவே தெரா என்ற பெயர் கருதப்படுவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தெரா சிற்பக் கலைஞனாகத் தொழில் செய்து வந்த போது, அவனது மகன் அபிறகாம் என்ன தொழில் செய்து வநதான் என்பது பற்றிய செய்திகள் இல்லையாயினும், ஒரு போர்க்குழுவின் தலைவனாக இருந்தான் என்ற செய்திக்குச் சான்றுகள் விவிலியத்திலேயே காணப்படுகின்றன. பணம் கொடுப்பவருக்காகப் போரிடும் ஒரு படையை அபிறகாம் வைத்திருந்தான் என்பதற்கு பிற்காலத்தில் தனது உடன்பிறந்தான் மகன் உலோத்து (Lot) என்பவனை மீட்க நடத்திய படையெடுப்பு நிகழ்வுசான்றாக உள்ளது. அவன் இனத்தலைவனாக

(Patriarch) அறியப்படு முன்பே, போர்த்தலைவனாக (War sheik) வே அறியப்பட்டான். ஊர் நகரிலிருந்து அரண் நகருக்கு அபிற காமும் சென்றான் என்ற செய்தியால், அந்நகரத்து ஆட்சியாளன், அபிறகாமை அழைத்திருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு.

தெரா என்பவன் சமயத் தலைவனாகவும் இருந்தான் என்றும், தவறான கொள்கைகளை மக்களிடையே பரப்பினான் என்றும், அவனது மகனாகிய அபிறகாம் என்பவனே தந்தையைக் கண்டித்தான் என்றும் குர்ஆன் - கூறுகிறது. அபிறகாம் பல கடவுளர் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை, தந்தையிடம் காட்டிய எதிர்ப்பால் அறியலாம். ஒரு கடவுள் சிந்தனை அபிறகாமுக்கு இயற்கையிலேயே வந்ததா, அல்லது அவன் வணங்கிய கடவுளே அதனை அபிற காமுக்கு அறிவித் தாரா என்பது பற்றிய செய்திகள் எங்கும் காணப்படவில்லை. எப்படியிருப்பினும் மேற்கே ஒரு கடவுள் சிந்தனையைத் தோற்றுவித்தவன் அபிறகாமே என்பது தெளிவு.

தெற்குநோக்கி: அரண் நகரிலிருந்து கனான் நாட்டுக்கு அபிறகாமும் அவனது குழுவினரும் செல்கின்றனர். எதற்காக தெற்கு நோக்கிச் சென்றான் என்பதற்கான கரணியம் விளக்கப் படவில்லை. கடவுள் அவனை அழைத்ததாக விவிலியம் கூறுகிறது. இச்செய்தியின் வழியே தென்பகுதிகளிலும், எகிப்து வரையிலும் கூட, எபிறேய மக்கள் பரவி வாழ்ந்திருந்தனர் எனலாம். விவிலியமும், குர்-ஆனும் அபிறகாமின் இரண்டு மகன்கள், அவர்கள் வழி வந்தவர்கள் பற்றிய செய்திகளை மட்டும் அளித்து, மற்ற எபிறேய மக்களைப் பற்றிய செய்திகளை விடுத்தன. கி.மு. 1250 ஆண்டுகளில், எகிப்தில் அடிமைகளாக இருந்தவர்களின் எண்ணிக்கை பத்து இலக்கம் அல்லது ஒரு மில்லியனைத் தாண்டியிருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின் றனர். இக்கருத்தை விவிலியமும் உறுதி செய்கின்றது.[4] இவர் களன்றி மெசபத்தோமியா, கனான் பகுதிகளிலும் எபிறேய மக்கள் வாழ்ந்திருந்தனர். கி.மு. 1000 ஆண்டுகளில், ஒரு சிறிய நாட்டின் மக்கள்தொகையளவிற்கு எபிறேய மக்கள் பல்கிப் பெருகியிருந்தனர் எனக் கருத இடமுண்டு.

கி.மு.1250 களில், மோசே என்பான் தொடங்கிய சமயத்தில் ஏற்கனவே மக்கள் அனைவரும் இணைந்திருந்தனர் என்ற கருத்தை ஆய்வாளர்கள் ஏற்கவில்லை. மோசேயின் புதிய கொள்கையை ஏற்காதவர்கள், தங்களது பழைய சமய நம்பிக்

கைகளிலே தொடர்ந்தனர். இவ்வாறான எபிறேயக் குழுக்களாக ஃபோனீசி யர்கள் மற்றும் உகாரியர்களைக் கருதலாம் என்பர். கி.மு. 1000 ஆண்டுகளில் எபிறேய மக்கள் தங்களுக்கென இசுராயேல் என்ற நாட்டை உருவாக்கிக் கொண்டு, தெற்கே செங்கடல் முதல் வடக்கே யூப்ரதீசு வரையிலான பகுதிகளை ஆட்சி செய்தனர். புகழ்பெற்ற தாவூது, சாலமன் மன்னர்கள் எபிறேய மரபினரே என்க. கி.மு. 550 வரையில் தான் அவர்களால் அப்பகுதியை ஆளமுடிந்தது. இக்கால, அளவில், பாபிலோனியர் இசுராயேல் நாட்டை வென்றெடுத்து, அம்மக்களில் பெரும்பாலோரை அடிமைகளாக அழைத்துச் சென்றனர்.

திசைப்புறம் நோக்கி: தியஸ்பொற (Diaspora) என்ற கிரேக்கச் சொல்லுக்கு, திசையெங்கும் பிரிந்து செல்லுதல் (Dis) என்பதே பொருளாகும். கி.மு. 8,7, நூற்றாண்டுகளிலேயே, எபிறேய மக்கள், அசீரிய மற்றும் பாபிலோனியப் படையெடுப்புகளால், பாலத்தீனத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர்.[5] கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாபிலோனில் இம்மக்கள் தங்கி வாழ்ந்தனர். அக்காலத்தில் எபிறேய மக்களை, யூதர்கள் என்று பாபிலோனியர் அழைத்தனர். அதன்பிறகு அப்பெயரே இன்று வரையிலும்அவர்களோடு நிலைத்துவிட்டது.

கி.மு.1000 ஆண்டுகளில்: அசீரிய பாபிலோனியப் பகுதிகளில் குடியேறினர். இதற்கு அரசியல் தாக்கங்களே கரணியங்கள் ஆகும். அடுத்த ஆயிரம் ஆண்டுகளில், அப்பகுதியின் செல்வாக்கு மிக்க செல்வர்களாக மாறிப் போயினர்.

கி.மு. 1000 ஆண்டுகளில்: இதேகால அளவில் எகிப்திலும் குடியேறினர். கி.மு. 525இல் நிகழ்வுற்ற பாரசீகப் படையெடுப்பின்போது, எகிப்தின் பல இடங்களில் யூதமக்கள் வாழ்ந்திருந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. தாலமி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், யூத மக்களிக் குடியேற்றம் எகிப்தில் சீராகவும், விரும்பியும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிறித்துப் பிறப்பாண்டுகளில், அலெக்சாந்திரியா நகரத்தின் நான்கில் ஒரு பகுதி மக்களாக யூதர்கள் வாழ்ந்திருந்தன ”. பாலத் தீனத்துக்கு வெளியே, முதன்முதலில் பரவலாக அறியப்பட்ட குடியிருப்புகள் எகிப்தில்தான் தோன்றின. அலெக்சாந்திரிய நகரின் ஒரு பகுதியை (Municipality) அவர்களே ஆண்டிருந்தனர்.

கிறித்துப் பிறப்பாண்டுகளில்: கி.பி. முதல் நூற்றாண்டில் சிரியா, ஆசியா மைனர், பாரசீகம், கிரேக்கம், இத்தாலி, சைப்ரஸ் தீவு உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட இடங்களில், யூதக் குடியிருப்புகள் அறியப்பட்டுள்ளன. இவையாவும் அக்காலத்திய உரோமப் பேரரசின் எல்லைகளுக்குள்ளும் வெளியேயும் இருந்தன. உரோமப் பேரரசில் பலவிலக்க அளவில் (Some millions) யூதமக்கள் வாழ்ந்திருந் தனர். சில ஆய்வாளர்கள், உரோமப் பேரரசின் மக்கள் தொலையில், நூற்றுக்குப் பத்துபேர் யூதர்களாயிருந்தனர் என்று கூறுகின்றனர். கி.பி.முதல் நூற்றாண்டில், யூதர்களுக்கான தேவாலயம் எருசலேம் நகரில் மட்டுமேயிருந்தது. உலகெங்கும் பரவிச் சென்ற மக்கள் அத்தேவாலயத்துக்குப் புனிதப் பயணம் மேற்கொண்டிருந்தனர். பார்த்தீயர்கள் (Parthians), மேட்டுக் குடியினர் (Medes), ஈழத்தவர் (Elannites), மற்றும் மெசபத்தோமியர்களான கப்படோசியா (Cappadocia), போந்துஸ் (Pontus), ஆசியா (Asia), பிரிசியா (Phrygia), பம்பிலியா (Pamphylia) நகரத்தைச் சார்ந்தவர்களும், உரோமை எகிப்து, கிரேக்கம், கீரிட் தீவு, அரேபியா போன்ற நாடுகளிலிருந்தும் எருசலேமுக்கு யூத மக்கள் வருகை தந்தனர் என உரோமக் குறிப்புகள் கூறுகின்றன.

பல இடங்களில் யூத தேவாலயங்கள் (Synagogues) அறியப்பட்டிருந்தன. கி.பி. முதல் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டிலும் யூதக் குடியிருப்புகள் இருந்ததால், பால் என்ற இயேசுவின் சமயத்தொண்டர் (இவரும் யூதரே என்பதால்), ஸ்பெயின் நாட்டுக்குச்செல்ல விரும்பியதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியாவில் யூதர்கள்: தியஸ் பொற என்ற குடியேற்றக் காலத்துக்கு முன்பே, கி.மு. 1000 ஆண்டுகளில், யூதர்கள் தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்ததோடு, தமிழகத்திலேயே தங்கியிருந்தனர் எனக்கருதலாம். போனீசியரும் யூதரும் ஓரின மக்களே என்ற கருத்தின் அடிப்படையில் இவ்விரு மக்களுமே தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்தனர். இசுராயேல் நாட்டின் கட்டுமானப் பணிகளுக்கான பொருட்களும், தொழில் நுட்பக் கலைஞர்களும், சேரநாட்டினின்றும் பெறப் பட்டன. யூதர்களுக்குப் பிறகே, கிரேக்கர்கள் தமிழகம் வந்தனர். கிரேக்கர்களைத் தமிழகத்தில் அறிமுகம் செய்ததே யூதர்கள்தான் என அறியலாம். கிரேக்கர்களை யாவனர் என்றவாறு தமிழகத்தில் அறிமுகம்செய்தனர். சங்க காலத்திலும், இடைக்காலச் சோழர்கள்

ஆட்சியிலும் யூத வணிகர்களின் செல்வாக்கு தமிழகத்தில் உயர்ந்து காணப்பட்டது.[6] கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் சீன வழவழப்புக் கற்களைத் தரையில் பரவிய யூத தேவாலயம் ஒன்றினை, கொச்சியில் கட்டினர். தமிழகத்தில் சோனகர் எனப் பட்டவர் உண்மையில், எகிப்தினின்றும் வந்த யூதரே என்க.[7]

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுகளில்: சிரிய நாட்டின் அந்தியோக் (Antioch), அலெக்சாந்திரியா, உரோமை நகரங் களில் செல்வாக்கு மிக்க வணிகர்களாகவும், தொழில் நுட்பக் கலைஞர்களாகவும் யூதர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங் கப்பட்டன. இவ்விரு பேரரசுகளின் எல்லைகளுக்குட்பட்ட நகரங்களில் குடிமக்களாக யூதர்கள் ஏற்றுக் கொள்ளப்படா விட்டாலும், உலகளாவிய வணிகம் சார்ந்த தொழிலும், எல் லோரிடமும் பணிந்து ஒற்றுப் போகும் தன்மையும், குடிகளுக்கு வழங்கப் பெற்ற சலுகைகளை இவர்களும் பெற வாய்ப்பு களாயின. உரோமக் குடியரசில், குடி மக்களிடம் கட்டாயப் படுத்தப்பட்ட போர்ச் சேவை (Military Service) யூதர்கள் மேல் திணிக்கப்படவில்லை. ஜுலியஸ் சீசர் காலத்தில் (Julius Caesar, +44 B.C), உரோமக் குடியுரிமை யூதர்களில் பலருக்கு வழங்கப் பட்டது. கிறித்துவத்தொண்டர் பால், இக்குடியுரிமையைப் பெற்றிருந்தார்.

குடிபெயர்ந்த நகரங்களில் வாழ்ந்திருந்த மக்களிடையே யூதர்களுக்கு நல்லுறவு இருந்ததாகவும் கூற இயலாது. யூதர்கள் செல்வமிக்க வணிகர்களாயும், அவர்களின் ஊர்க்காரர்கள் (Neighbours) ஏழைகளாகவுமிருந்ததால், ஒரு வகையான பொ றாமைக் கண்களுடன் யூதர்கள் நோக்கப்பட்டனர்.யூதர்கள் தங்கள் சமயத்தின்பால் கொண்டிருந்த வெறியும், பிற சமயக் கடவுளர்கள் பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களும், பல நேரங்களில் பகைமையைக் கூடத் தோற்றுவித்தன. கிறித்துப் பிறப்பாண்டுகளில் அறியப்படும் சில அறிஞர்களும் கவிஞர் களும் யூதர்களுக்கு எதிரான எண்ணங்களைக் கொண்டிருந் தவராவர். அலெக்சாந்திரியாவில் யூதர்களுக்கான சமயச் சலுகைகள் மறுக்கப்பட்டபோது, யூதர்களுக்கும் உரோமர் களுக்கும் இடையே போராட்டங்களும் நடைபெற்றன.

இந்தியாவில் யூத வணிகர்கள்: அந்தியோக் நகரில் தங்கி யிருந்த யூதர்கள் உலகளாவிய வணிகத் தொடர்புடையவரா யிருந்தனர். கி.பி. 350 ஆண்டு களில் இவ்வணிகர்களில் சிலர்

கிறித்துவ சமயத்தை ஏற்றனர். கிறித்துவ சமயம் அக்காலத்தில் புரட்சியாளர்களின் குழுக்களாக (Terrorists) உரோமப் பேரர சால் தடைசெய்யப்பட்டிருந்தது. அந்தியோக் நகரமும் அவர் களின் ஆட்சிக்குட்பட்ட நகரமே. இதனால் கானா தோமா (Thoma of Caana) என்பான் தலைமையில் 72 குடும்பங்கள் (400 பேர்) அந்தியோக் நகரைவிட்டு நீங்கி, சேர நாட்டின் முசிறித் துறைமுகம் வந்து சேர்ந்தனர். தோமா ஏற்கனவே சேரமன்னர் களுக்கு வணிகத் தொடர்பால் அறிமுகமானவனாதலால், இக் குழுவை, சேர மன்னன் வரவேற்றுப் பாதுகாப்பளித்தான்.[8] இவர்கள், தோமையாருக்குப் பிறகு (கி.பி. 52-73) வந்த கிறித் துவர்கள் ஆவர்.

தோமா, சேரமன்னனுக்கு ஏராளமான பரிசுப் பொருட் களை வழங்கினான். சேரநாட்டின் கடல்கடந்த வணிகத்துக் கும், தோமாவைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த சேர மன்னன், வணிகம் தொடர்பான அனைத்து சலுகைகளையும் தோமாவுக்கு வழங்கினான். தோமாவுக்கும் அவனது குழுவின ருக்கும் 72 வகையான சிறப்புச் சலுகைகள்அளிக்கப்பட்டன (காணை தொம்மன் செப்பேடு.) தோமா என்ற பெயரைத் தமிழ்ப் படுத்தி தொம்மன் என்று அச் செப்பேடுகள் குறிப்பிடு கின்றன. பெருஞ்செட்டி என்ற விருதுதோமாவுக்கு வழங்கப் பட்டது. தோமாவின் மரபினருக்குப் பிற்காலத்தில், “இரவிக் கொற்றன்” என்ற விருது வழங்கப்பட்டது.[9]

தோமா, கடல் வழிப் பயணம் செல்லும்போது தனது பாதுகாப்பிற்கென தனிப் போர்ப்படை யொன்றையும் வைத் திருந்தான். இப்போர்ப்படையிலும் மேலும் பல அந்தியோக் நகரத்து இளைஞர்களைப் பிற்காலத்தில் தோமா இணைத்துக் கொண்டான். மன்னனின் படைக்கு நிகரானதோர் படையை தோமா பெற்றிருந்தான். மன்னனுக்குத் தேவைப்பட்ட காலங் களில், இப்படை மன்னனுக்காகவும் போரிட்டது.

தோமா மரபினரே இன்றைய கேரளத்தின் சிரியன் கிறித் துவச் சபையாக அறியப்படுகின்றனர். இந்தியப் போர்ப்படை களுக்கான தற்கால அமைச்சர் திரு. ஏ.கே. அந்தோணி என்பார், இந்தச் சிரியன் மரபைச் சார்ந்தவரே. வாழையடி வாழையாக வணிகத் தொழிலைக் கைக் கொண்டிருந்த அம்மக்கள் இன்றும் வணிக உலகின் முடிசூடா மன்னர்களாகவே வலம் வருகின்றனர். கேரளத்தின் மிகப்பெரும் நகை வணிகக் குழுவான அலுக்காஸ்

(Alukkas), கேரளா ஜூவல்லரி போன்ற வணிக நிறுவனங்கள், சிரியன் மரபைச் சார்ந்தவருடையவைகளே.

உலகெங்கும் யூத இனம்: தியஸ்பொற என்று அழைக்கப்படும் யூத இனத்தின் வெளிநாட்டுக் குடியேற்றங்கள் கி.பி. 200 முதல் உலகெங்கும் அறியப்பட்டன. யூதர்கள் இல்லாத நாடுகளே இல்லை என்ற அளவுக்கு அம்மக்கள் பரவி வாழ்ந்திருந்தனர். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் அறியப்பட்டிருந்தனர். மிகச் சிறந்த அறிவாளிகளாகவும், அரச தந்திரர்களாகவும், வணிக மன்னர்களாகவும் அறியப்பட்டிருந்த இவ்வினம், அவர்கள் குடியேறிய நாடுகளிலெல்லாம் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப்பிறகு, காலிபாக்களின் ஆட்சியிலிருந்த அரபு நாட்டிலும்கூட, செல்வாக்கு மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். அத்துடன் மற்ற இனத்தாரின் பகைமைக் கும் ஆளாயினர்.

ஆங்கிலேய நாடக ஆசிரியரான சேக்ஸ்பியர், தான் வடித்த நாடக மொன்றில், யூத வணிகன் ஒருவனை வட்டிக்கு விட்டுப் பிழைக்கும் மிகக்கொடிய வனாகக் காட்டி, தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார்.[10] இங்கிலாந்தின் பிற்கால தலைமை அமைச்சரும், விக்டோரியப் பேரரசியின் நம்பிக்கைக்கு உரியவருமாயிருந்த பெஞ்சமின் டிஸ்ரேலி ஒரு யூதரே.[11]

தங்கள் சமயத்தை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருந்த யூதர்கள், ஈராயிரம் ஆண்டுகளாக உலகெங்கும் பரவி வாழ்ந்ததால், தங்கள் சமய நூலைத் தத்தம் நாட்டு மொழிகளோடு கலந்து, எழுதிக் கொண்டனர். எபிறேயம் அவர்களது தாய்மொழியாயிருந்த போதிலும், அது காலத்தால் பலவாறு திரிபுபட்டுப் போயிற்று. ஸ்பெயினில் இருந்த யூதர் பேசிய எபிறேய மொழி, செர்மனியில் இருந்த தயூதருக்குப்புரியவில்லை.

இந்நிலைமைகளை அறிந்திருந்த யூத அறிஞர்கள் சிலர், எபிறேய மொழியைக் காக்கப் பலவாறும் முயற்சிகளை மேற்கொண்டனர். பென் - எகுதா (Ben- Yehuda) என்பவர், தனது வாழ்நாள் முழுதும் இப்பணிக்காகவே செலவிட்டார். இவர், விவிலியத்தில் அறியப்பட்ட மொழிச் சொற்களைக் கொண்டு, ஆயிரக் கணக்கான புதுச்சொற்களை உருவாக்கினார். எபிறேய மூலத்தினின்றும் உருவாக்கப்பட்ட இச்சொற்களை யூதர் பலரும் வரவேற்றனர்.[12]

யூதர்களின் வளர்ச்சிகளால் அவர்கள் மீது பகைமை கொண்ட அடால்ப் இட்லர், அவ்வினத்தையே படுகொலை செய்து அழிக்க முயன்றார். அக்காலத்தில் பல்லாயிரம் யூதர் கள் செர்மனியிலிருந்து தப்பி அமெரிக்கா முதலிய நாடுகளில் குடியேறினர். இர்ண்டாம் உலகப் போரில் இட்லரின் வீழ்ச்சி, யூதர்களுக்கு நிம்மதிப் பெருமூச்சை வரவழைத்தது.

அமெரிக்காவில் குடியேறி வாழ்ந்திருந்த பேரறிஞரும், அறிவியலில் ஒப்புமைத் தத்துவத்தை உலகுக்கு அளித்தவரும், அமெரிக்க விண்வெளிப் பயணத் தந்தையெனப் போற்றப் படும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அறிவியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (1879-1955) செர்மனியில் பிறந்து, அமெரிக்காவில் குடியேறிய யூதரே.

1970களில் அமெரிக்காவின் பொருளியல் மேதையாக அறியப்பட்ட ஆல்பர்ட் என்றி கிஸ்ஸிங்கர் (Albert Henry Kissin-ger,1923) ஒரு யூதரே.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், நாடெங்கிலும் பரவி வாழ்ந்திருந்த யூதர்களுக்கு, அவர்களுடைய தாய் மண்ணை மீண்டும் ஏற்படுத்தி அளிக்க ஐ.நா. அவை முன் வந்தது. அதன் படி 1948 ஆம் ஆண்டு, புதிய இசுரேல் நாடு மலர்ந்தது. உல கெங்கும் வாழ்ந்திருந்த யூதர்களைத் தம் நாட்டுக்கு வரும்படி இசுரேல் அரசு அழைப்பு விடுத்தது.

இந்தியாவினின்றும் பல குடும்பங்கள் அவ் வழைப்பை ஏற்று இசுரேலில் குடியேறின. உலகெங்கும் வாழ்ந்திருந்த யூதர்கள், இசுரேலில் குடியேறினர். அவர்களுக்கான இடம், வீடு, நிலம் ஆகியவற்றை இசுரேலிய அரசு இலவசமாக அமைத்துக் கொடுத்தது.

2000 ஆண்டுகளாக வழக்கிழந்து போன எபிறேய மொழியை, இசுரேல் நாட்டின் ஆட்சி மற்றும் அலுவலக மொழியாக அரசு அறிவித்தது. அக்காலத்தில் குடியேறியிருந்த யூத மக்க ளில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கினருக்கு, எபிறேய மொழி யே தெரியவில்லை. அம்மொழியில் அவர்களால் பேசவும் எழுதவும் இயலவில்லை. அரசு பெரும் முயற்சிகளை மேற் கொண்டு, எபிறேய மொழியை மக்கள் கற்க ஏற்பாடு செய்தது. விவிலியத்தின் எபிறேய மொழியை மீண்டும் மக்க ளிடையே அரசு அறிமுகப்படுத்தியது. அரசின் அறிவிப்புகள், செய்தி

ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி உள்ளிட்ட அனைத்து வழிகளிலும் எபிறேய மொழி முதன்மைப் படுத்தப்பட்டது. அரசு சார்பிலும் தனியார் சார்பிலும், எபிறேய மொழியைக் கற்பிக்க, பயிற்சிக் கூடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.[13]

இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கிழந்து போன எபிறேய மொழியை, கி.பி. 2000 ஆண்டுகளில், அதாவது 50 ஆண்டுகளில், மீண்டும் மக்கள் மொழியாக இசுரேல் அரசு மாற்றிக் காட்டியது உலக வரலாற்றில் அறியப்படாத ஒரு நிகழ்வாகும். அரசின் முயற்சிக்கும் மக்கள் ஒத்துழைத்ததுடன் தங்களது முன்னோரின் மொழியைக் கற்க வேண்டுமென்ற தணியாத மக்களின் ஆர்வமே இத்தகைய வெற்றிக்குக் கரணியமாகும். இன்று 60 இலக்கம் மக்கள் இசுரேலிலும், 40 இலக்கம் மக்கள் வெளிநாடுகளிலும், வாழ்வதாக அறியப்படுகின்றது. ஏறக்குறைய எல்லா யூதருமே இன்று எபிறேய மொழியைப் பேசுகின்றனர்.

விவிலிய எபிறேய மூலத்தில், தற்கால மேற்கித்திய மொழிகளின் அடிப்படையில், எபிறேய மொழி புதுப்பிக்கப்பட்டுள்ளது. அறிவியல், தொழில் நுட்பம், கல்வி சார்ந்த நூல்கள் அனைத்திலும், புதுப்புது கலைச் சொற்கள் உருவாக் கப்பட்டு, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எபிறேய மொழியிலேயே கல்வி கற்பிக்கப்படுகின்றது. எபிறேய மொழிக்காகவே ஒரு பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டுள்ளது.

இன்றுள்ள இசுரேல் நாட்டில் 80 பங்கு யூதர் எபிறேய மொழியையும், 10 பங்கு இசுலாமியச் அரபு மொழியையும், மற்றவர் பிற மொழிகளையும் பேசுபவர்களாக உள்ளனர். பெரும்பாலான யூதர்கள் ஆங்கிலம் உள்ளிட்ட உலக மொழிகள் அனைத்தையும் பேச வல்லவராயுள்ளனர். தாங்கள் ஏற்கனவே வாழ்ந்திருந்த நாடுகளின் மொழிகளும் அவர்களால் அறியப்பட்டவையே என்பதால், உலகின் எந்த நாட்டவரும், இசுரேல் நாட்டிற்கு வரும்போது, அவர்கள் மொழியில் பேசக்கூடிய யூதர்களை அங்கே காணலாம்.

பிற மொழிகளின் கலப்பால், ஒருமொழி அழிந்து சிதைந்து விடும் என்பதற்கு எபிறேய மொழி எடுத்துக்காட்டாக உள்ளது. இன்றைய தமிழ்நாட்டில், தமிழ்மொழி ஆங்கிலப் பிடியில் சிக்கித் தவித்து வருகின்றது. இந்நிலை மேலும் நீடித்தால்,

தமிழ்மொழியின் தனித்தன்மைக்கு கேடு விளையும் என, தமிழ றிஞர்கள் அஞ்சுகின்றனர். இறந்துபட்ட எபிறேய மொழியை 50 ஆண்டுகளில் உயிர்ப்பித்து மீண்டும் பேச்சு வழக்கிற்குக் கொண்டு வந்த எபிறேய மக்களின் வெற்றி, தமிழ் போன்ற செம்மொழியை பிறமொழிக் கலப்பினின்றும் விடுவிக்கலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய இசுரேல் நாடு, பல சிக்கல்களுக்கு ஆட்பட்டிருந்தாலும், உலக நாடு களைத் தன் பக்கம் திருப்பும் அளவுக்கு பலதுறைகளிலும் முன்னேறியுள்ளது.

இன்றும் கூட, எபிறேய மக்கள் யாவர், அவர்களின் தாய்நாடு எது, அவர்களின் முன்னோர் யாவர், அவர்கள் பேசிய மூலமொழியென்ன என்பதில், எபிறேய மொழி பேசும் யூத மக்களுக்கே ஒரு தெளிவு பிறக்கவில்லை. தங்களுடைய முன்னோர்கள் பேசிய எபிறேய மொழியை மீட்டெடுத்த அம்மக்களால், தங்களுடைய தொன்மையான வரலாற்றை அவர்களால் இன்றும் கூட மீட்டெடுக்க இயலவில்லை.

அபிறகாமிடம் அவன் கடவுள், எபிறேய இனத்தை வானத்து விண்மீன்களைப் போலவும், ஆற்றின் மணலைப் போலவும், பல்கிப் பெருகச் செய்வேன் என உறுதியளித்ததாக, விவிலியம் கூறுகிறது.[14] அக்கூற்று உண்மையல்ல என்றும், உலகின் மிகக் குறுகிய இனக்குழுவான யூதஇனத்தை எவ்வாறு பேரினமாக்குவதாகக் கடவுள் வாக்களித்தார் என்ற கேள்வியை, பலரும் எழுப்புகின்றனர்.[15] விவிலியம் கூறும் சமய விளக்கம் ஒரு புறமிருந்தாலும், வரலாறு தெரிவிக்கும் செய்திகள், கடவுள் சொன்ன செய்திக்கு அடிப்படை இருப்பதாகவே இன்று தோன்றுகிறது.

அபிறகாமின் முன்னோர் இந்தியாவினின்றும் புலம் பெயர்ந்த உலகின் தொன்மக் குடியான தமிழர்களே என்பதும், அபிறகாமும் அம்மரபில் தோன்றியவனே என்பதும் இன்றைய ஆய்வுகள் வழியே அறியமுடிகின்றது. இன்று உலகில் அறியப் படும் யூத, கிறித்துவ, இசுலாம் சமயங்களே, உலக மக்களில் பெரும்பான்மையோரால் பின்பற்றப்பட்டு வருகின்றன. உலக மக்களில் பெரும்பான்மையோரால் ஏற்கப்பட்டு, போற்றப் பட்டு வரும் தலைவனாக இன்று அபிறகாம் மதிக்கப்படுகிறான்.

அபிறகாமின் வரலாற்றை நீக்கி, இன்று உலக வரலாறு எழுதப்பட இயலாது என அறியலாம். உலக வரலாற்றில் ஒரு

திருப்பத்தை ஏற்படுத்திய அபிறகாமை, கடவுள் பல நாடு களுக்கும் தந்தையாக (Father of all nations) உயர்த்தியதாகச் சொல்லப்படும் செய்திகளில் உண்மையிருப்பதாகவே தோன் றுகிறது.

எபிறேய மக்கள் தமிழினத்தைச் சார்ந்தவர்களே என்ப தும், அவர்களது முன்னோர்கள் சிந்துவெளியினின்றும் மேற்கு நோக்கிப்புலம் பெயர்ந்தவர்களே என்பதும், இன்று மேற் கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் வழியே வெளிப்படுவதால், தமிழ்க் கண்ணோட்டத்தில் எபிறேய மக்களின் வரலாறு முறை யாக ஆய்வு செய்யப்படும் போது, தமிழ் - எபிறேய மக்களின் உறவுகள் வெளிப்படும் என நம்பலாம்.

10. தமிழ்மொழி

இன்றைய மொழியியலார், உலகில் பேசப்பட்ட வரலாற்றுக்காலத்துக்கு முற்பட்ட மொழிகள் பற்றியும், தற்காலத்தில் பேசப்பட்டு வருகின்ற மொழிகள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொண்டு, ஒவ்வொரு மொழியின் தோற்றக் காலத்தை ஓரளவுக்குக் கணித்துள்ளனர்.

கி.மு. 10000 ஆண்டுகளில், மெசபத்தோமியாவில் பேசப்பட்ட மொழியை, "உலக மொழி"யென்றும், அவ்வொரு மொழியே உலகமக்களால் பேசப்பட்டது என்றும் கூறுகின்றனர். அம்மொழி யாதென்ற விளக்கத்தை அவர்களால் தர இயலவில்லை.

அம்மொழியினின்றும் பிரிந்தவைகளாக, செமிட்டிக் மொழியினத்தை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே, கி.மு. 10000 ஆண்டுகளுக்குப் பிறகு கிளைத்த மொழிகளாக மெசபத்தோமியா உள்ளிட்ட நடுத்தரைக் கடல்நாட்டு மொழிகளைக் கூறுகின்றனர். இவைகளில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மொழி எபிறேயம் மட்டுமே.

அரபு மொழி மேற்சொல்லப்பட்ட காலத்தில், அந்த ஒரு மொழியினின்றும் கிளைத்தது என்றாலும், தொடக்கத்தில் பேசப்பட்ட அரபு மொழி, கிறித்துப் பிறப்பாண்டுகளுக்குப் பின் நடுத்தரைக் கடல் நாட்டு மொழிகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு, புதிய அரபு மொழியாக உருவெடுத்தது. அரபுமொழி, எபிறேயத்துக்கும் காலத்தால் முந்தியது எனலாம். இன்றைய அரபு மொழி, தொடக்ககால அரபினின்றும் மாறுபட்டது என்க.

கிரேக்க மொழி, கி.மு. 1000 ஆண்டுகளில், யாவனக் கடற்பகுதிகளில் பேசப்பட்டு வந்தஇலக்கண மற்ற மொழிகளின் கூட்டாகும். செமிட்டிக் மொழிகளுடன் கிரேக்க நாட்டுப்புற மொழிகள் இணைந்து, கி.மு. 1000 ஆண்டுகளில், கிரேக்கம்

என்ற மொழி உருவாயிற்று. இதனை உருவாக்கியதில் அறிஞர் களில் முயற்சிகளே பெரிதும் துணைநின்றன.

இலத்தீன் மொழியென்பது, கிறித்துப் பிறப்பாண்டுகளில் உரோமப் பகுதியில் பேசப்பட்டு வந்த கொச்சை மொழியாகும். உரோமப் பேரரசு காலத்தில் (கி.மு.400 -கி.பி.300) உரோமானிய மொழி, கிரேக்க - செமிட்டிக் மொழிக் கலப்பால் புதுப்பிக்கப் பட்டது. பின்னர் அம்மொழி இலத்தீன் எனப்பட்டது.

கிரேக்க - இலத்தீன் மொழிகளினின்றே, செர்மானியம் - ஆங்கிலோ\சாக்சன் போன்ற மொழிகள் தோன்றின. இன்றைய ஐரோப்பிய மொழிகள் அனைத்தும் கிரேக்க -இலத்தீன் - செமிட்டிக் மொழிகளின் கூட்டக் கலவை மொழிகளே.

சீன நாடென்பது, பிற்காலக் குடியேற்ற நாடென்பதால், கி.மு. 3000 ஆண்டுகளில், சீனத்தின் மொழிகள் கிளைத்திருக் கலாம் என்பர். சீன மொழியும், கிழக்கித்திய மொழியொன்றி லிருந்து கிளைத்ததே என்பர்.

ஆப்பிரிக்க மொழிகளின் தோற்ற காலத்தை ஆய்வாளர் களால் கணக்கிட இயலவில்லை. ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியிலேயே மாந்த இனத் தோற்றம் நிகழ்வுற்றதாகக் கருதப் படுவதால், மற்ற மொழிகளைக் காட்டிலும் ஆப்பிரிக்கப் பழங்குடியினர் பேசி வந்தமொழி மூப்புடையதாகும்.

சமற்கிருதம் என்பது, கி.மு.1000 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆரியர்களின் நாடோடி மொழியும் சிந்துவெளியில் பேசப் பட்ட தமிழும் இணைந்து, அறிஞர்களால் உருவாக்கப்பட்ட செயற்கை மொழியாகும். இலத்தீன் மொழி தோன்றிய காலத்திலேயே, சமற்கிருதமும் தோன்றியதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கிரேக்கத்துக்கும் பிற்பட்ட காலத்தில் தோன்றியதே சமற்கிருதம் ஆகும்.

மொழியியலார், உலக மொழிகளைப் பிரித்துக் கொடுத்த பட்டியலில், இந்திய மொழியைக் கருத்தில் கொள்ளாது, துரானிய மொழிக் குடும்பத்தில் இணைத்தனர். இதற்குக் கரணியம் யாதெனில், இந்திய மொழியைப் பற்றிய தெளிவான சிந்தனையில்லாததே.

ஒவ்வொரு மொழியின் தோற்ற காலத்தைக் கணித்த ஆய்வாளர்களின் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட மொழி

யாகத் தமிழ்மொழி விளங்குகிறது. தமிழ் மொழி எக்காலத்தில் தோன்றியது என்பதை எவரும் அறுதியிட்டுக் கூறத் துணிய வில்லை. ஏறக்குறைய ஆப்பிரிக்க மொழியினம் தோன்றிய காலத்தோடு தமிழ் மொழிக் காலத்தை இணைக்கலாம் என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆப்பிரிக்கப் பழங்குடி யினர் பேசும் மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை, தற்காலத்திய மொழியியலார் விளக்குகின்றனர்.

கி.மு. 20000 ஆண்டுகளிலேயே தமிழ்மொழி, செம்மொழி யாக உருப் பெற்றுவிட்டதெனப் பாவாணர் கருதுகிறார். பாவாணருடைய கருத்துக்கு வலுசேர்க்கும் செய்திகள், மேலை இலக்கியங்களிலும் காணப்படுகின்ற செய்திகளை அடுத்து வரும் தலைப்புகளில் காணலாம். தமிழ்மொழியின் தோற்ற காலம், மக்களினத் தோற்ற காலமே எனலாம்.

ஞாலத்தில் முதலில் தோன்றிய மாந்தவினம், ஆப்பிரிக்க - சாவாத் தீவுகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதிகளில் தோன்றி யதே என்பதை அறிவியலார் முடிவு செய்துள்ளனர். அந்நிலப் பகுதி, அன்று குமரிக்கண்டம் என்ற பெயரால் அழைக்கப் பட்டு, இன்று இந்தியப் பேராழியாக மாறிப்போனது. அக்கண்டத்து மக்களே முதல் இனம் என்பதால், அவர்கள் பேசிய மொழியே முதன்மொழியாயிற்று. அம்முதன் மொழி தமிழே என்பதை ஏற்றுக்கொள்ளஇயலாத சிலர், தமிழுக்கும் முதன்மொழியொன்று இருந்தது என்பர். அம்மொழி யாதென அவர்களால் விளக்கிக் கூற இயலவில்லை.

விவிலியம் கூறும் முதல் மாந்தனாகிய ஆதாம் பற்றிய செய்திகளும், மெசபத்தோமிய இலக்கியம் கூறும் முதல் மாந்தனாகிய ஆதப்பா பற்றிய செய்திகளும், குமரிக் கண்டத் தின் சூழ்நிலையை விளக்குவனவாக உள்ளன. ஆதாம் இலங்கையில் தான் வாழ்ந்திருந்தான் என்று குர்ஆன் கூறுகிறது ஆதாம் பேசிய மொழி தமிழே என்பதை, விவிலியச் செய்தி களைக் கொண்டே விளக்கலாம்.

தமிழ்மொழி தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூற இயலாது. ஆனாலும், கி.மு. 50000 ஆண்டுகளிலேயே சொல் வளம் கண்டுபொலிவுற்று விளங்கியதாகப் பாவாணர் கருது கிறார். முதல் தமிழ்க் கழகமாகிய முதல் தமிழ்ச் சங்கம், கி.மு. 50000 - 30000 ஆண்டுகளில் நிலைபெற்றிருந்தது என்பார்.

தமிழ்மொழி இயல்பாகத் தோன்றிய இயற்கை மொழியாத லால், தமிழைப் பிறமொழிகள் போல், அறிஞர்களோ மற்றவர் களோ தோற்றுவிக்கவில்லை யெனலாம்.

தொடக்கத்தில் பறவைகள், விலங்குகள் எழுப்பிய ஒலி களுக்கும், மாந் தன் எழுப்பிய ஒலிகளுக்கும்வேறுபாடுகள் இருந்ததில்லை. பின்னர் மாந்தனின் ஒலிகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒலிகளாக மாறின. இடுக்கண், இன்பம், அழைப்பு, நீக்கல், தூண்டல், துரத்தல், ஒட்டுதல், ஓட்டுதல் போன்ற உணர்வுகளின் அடிப்படையில் ஒலிகள் வரையறுக் கப்பட்டன. நீட்டல் ஒலிகளான ஆ, ஈ,ஊ,ஓ போன்றவைகள் தாம் முதலில்தோன்றிய தமிழுக்கு மூல ஒலிகளாக அமைந்தன. தன் இனத்தின் ஒருவனையோ, தன்னால் பழக்கப்பட்ட விலங் குகளையோ அழைக்க ஏ, ஏய் போன்ற ஒலிகள் தோன்றின. இவை கூப்பிடு ஒலிகளாகும். ஒரு நிகழ்வு தரும் ஒலியும், விலங்கு தரும் ஒலியும் கூட, அதனை எழுப்பிய விலங்கிற் கான பெயராய் அமைந்தன.

கூ கூ என்று கூவிய கூகை,
கா கா எனக் கத்திய காக்கை,
குர் குர் என ஒலித்த குரங்கு,
யா யா என ஒலித்த யாடு,
மா மா வென அழைத்த மாடு,
சல சல வென ஓடிய சலம்,
தட தட வென இடித்த இடி,
கர கர வென ஒலித்த கரடி,
சர சர வென ஓடிய சாரை,
புர் புர் என உயர்ந்த புற்று

என விரியும். இவ்வாறான இயற்கையின் ஒலிகளோடு இணைந்த சொற்களை உலகின் பிற மொழிகளில் காணவியலாது. ஒலி யோடு ஒத்திருந்த இவ்வொலிகள், ஒத்தொலிகள் எனப்பட்டன. ஒரு விலங்கை அழைக்கவோ அல்லது விரட்டவோ சில ஒலி களை மாந்தன் பயன்படுத்தினான். கொல்ல வந்த விலங்கை, ஓ ஓ என ஓலமிட்டு விரட்டினான். இவ்வொலிகளே பிற்காலத் தில் போ,. போ என்றாயின. வீட்டு விலங்குகளை, பா பா என்றழைத்தான். அதுவே, வாவா என்றாயின. இன்றும் கூடத்

தமிழ்நாட்டின் நாட்டுப்புறங்களில், நாய்பூனை போன்ற வீட்டு விலங்குகளை அழைக்க ஒரு வகையான ஒலிக் குறிப்புகளையே மக்கள் பயன்படுத்துகின்றனர். எதிர்பாராத நேரத்தில் இடுக்கண் வந்துற்றபோது, ஆ ஓ என அலறிய ஒலிகள், அய் ஓ, அய்யோ- அய்யோ என்றானது. ஏற்புடைய கருத்தை ம் என்று கூறியது ஆம் என்றானது. வெறுப்படைந்த கருத்தை ச் ஒலியால் உணர்த்த, அது சீச்சீ என்றானது. சீழ்க்கை அடிப்பதும் ஒருவகையிலான செய்திப் பரிமாற்றமே. இவை, குறிப்பினை உணர்த்தும் ஒலிகளாயின. உடல் உறுப்புகளை அசைத்துக் காட்டி நீர் குடிக்க, உணவுண்ண, படுத்துறங்க, ஓட, மறைய, நிற்க, உட்கார மாந்தன் வெளிப்படுத்தும் செய்கைகளும் மொழியின் செய்திப் பரிமாற்றங்களே.

ஒலிகளின் தோற்ற வளர்ச்சிக் காலங்களுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக் குப் பிறகு, அவ்வொலிகளினின்றும் தமிழ்ச் சொற்கள் தோன்றின. சொற்களின் அமைவுகளுக்கு மூலமான எழுத்துகள் இனம் காணப்பட்டன. அவ்வெழுத்துகள் சொற்களைப் பொருள் கொள்ள உதவின. சொற்கள் சொற்றொடர்களை உருவாக்கின. தொடர்ந்து சொல்லப்பட்ட சொற்றொடர்கள், ஏதேனும் ஒரு நிகழ்வையோ, வேண்டுதலையோ, விளக்கத்தையோ அளிப்பனவாக இருந்தன. நிகழ்வுகளைச் சுவையுடன் சொல்லச் சிலரே ஆற்றல் பெற்றிருந்தனர். அவர்கள் வெளிப்படுத்திய செய்திகளே இலக்கியங்களாயின. இலக்கியங்கள் இன்னின்ன செய்திகளைத் தான் சொல்ல வேண்டுமென்ற விதிகளையும் வகுத்துக் கொண்டன.

இவ்வாறு சொல்லப்பட்ட செய்திகள், அடுத்த தலைமுறையினருக்கும் சென்றடைய பதிவுகள் தேவைப்பட்டன. இச்சூழலில் கண்டுபிடிக்கப்பட்டவைகளே எழுத்துகள் ஆகும். எழுத்துகள் தமிழ்மொழியின் பிற்காலக் கண்டுபிடிப்பே எனலாம். எழுத்தைக் கண்டுபிடித்து எவரும் மொழியைக் கண்டுபிடிப்பதில்லை. சமற்கிருதம் என்ற மொழிகூட, பேச்சு வழக்கில் சொல்லப்பட்டு, கி.பி. 200 ஆண்டுகளிலல்தான் எழுத்துகளைப் பெற்றது. இந்த எழுத்தும், சொல்லும், சொற்றொடரும் கலந்த தமிழ்மொழி, ஒவ்வொன்றுக்கும் விதிகளை வகுத்தது. அவ்விதிகளே, தமிழைச் சரியாகப் பேசவும், எழுதவும் உதவின. அவ்விதிகளையே இலக்கணம் என்பர். தமிழில் இலக்கியங்கள் தோன்றிய பிறகே இலக்கணம் வகுக்கப்பட்டதாகப் பாவாணர் கருதுகிறார்.

தமிழைப் போன்று இயற்கையாய் தோன்றிய மொழியென்று எவற்றையும் காட்ட இன்றைய உலகமொழிகளின் வரலாறு இடந்தரவில்லை. தமிழ்மொழியின் அனைத்துச் சொற்களுக்கும் பொருளுண்டு என்ற மொழிநிலை, உலகின் வேறெந்த மொழிகளிலும் காணப்படவில்லை. தமிழ்மொழியில் அறியப்படும் சொற்களுக்கான வேர்ச்சொற்களும் தமிழ் மொழியிலேயே உள்ளன வென்பதே, தமிழின் தனிச்சிறப்பாகும். உலக மொழிகளில் பெரும்பான்மையான மொழிகளின் வேர்ச்சொற்கள் அம்மொழிகளில் இல்லையென்பதை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வேர்ச்சொல் அறியப்படாத, மூலச்சொல் தெரியாத, பொருள் புரியாத பல எபிறேயச் சொற்களுக்கான வேரும் மூலமும்தமிழில் உள்ளதை ஆய்வுகள் மெய்ப் பிக்கின்றன. எபிறேயத்துக்கும் முன்மொழிகளான அக்காடியம் போன்ற மொழிச் சொற்களின் வேர்களும் கூடத் தமிழ்மொழியில் காணப்படுகின்றன. இன்றுள்ள உலக மொழிகளில், எங்கள் மொழியே முதன்மொழியென்று உரிமை கொண்டாட எந்த மொழியும் முன்வரவில்லை என்பதே, தமிழின் முதன்மையையும் தொன்மையையும் விளக்கும்.

தமிழ்மொழியின் பரவல்: தமிழ்மொழி தனது வளர்ச்சிக்குப் பின்னரும் காலந்தோறும் வளர்ந்து கொண்டே வருவது, அது செம்மொழித் தன்மையைப் பெற்றுள்ளதை விளக்கும். மக்கள் பெருக்கமும், மாந்தவினத் தேவைகளும், தேவைக்கேற்ற புதிய கண்டு பிடிப்புகளும், புதுப்புது இயற்கைச் சூழல்களும், பல்வேறு புதிய சொற்கள் தமிழில் உருவாகக் கரணியங்கள் ஆயின. இயற்கையின் சீற்றக் காலங்களில், தமிழினம் பல்வேறு நாடுகளில் சென்று குடியமர்ந்த காலங்களில் தாய்த்தமிழ் நாட்டுன் கொண்டிருந்த உறவுகள் துண்டிக்கப்பட்டன. குடியேற்ற நாடுகளின் புதிய சூழல்கள், புதிய கண்டு பிடிப்புகள் வழியில் புதிய சொற்கள் உருவாயின. இச்சொற்களும் தமிழின் வேர்ச்சொற்களையே கொண்டிருந்தாலும், அச்சொற்களைத் தமிழர் அறிந்திருக்க வாய்ப்பில்லாமல் போய் விட்டது. தமிழகத்தில் உருவான புதியசொற்கள், குடியேற்ற நாடுகளில் அறியப்படவில்லை. குடியேற்ற நாடுகளில் பேசப்பட்ட தமிழ், காலப்போக்கில் கொடுந்தமிழாகி, தமிழ் மூலத்தைக் கொண்ட புது மொழிகளாயின. இவையாவும் தமிழின் கிளைமொழிகளே எனலாம்.

நடுத்தரைக் கடல்நாட்டுப் பகுதிகளில் கி.மு.2000 ஆண்டுகளில் பேசப்பட்ட மொழிகள் யாவும் தமிழின் கிளைமொழிகளே. அக்காடியம், கனானியம், ஃபோனீசியம், எபிறேயம் போன்ற மொழிகள் தமிழ் வேரினை அடிப்படையாகக் கொண்டு கிளைத்தவைகளே. செமிட்டிக் மொழியினின்றும் பிறந்த கிரேக்கமும், கிரேக்கத்தினின்றும் கிளைத்த இன்றைய ஐரோப்பிய மொழிகளும், வரலாற்றுக் காலத்தில் பிறந்த மொழிகளே. எனவே, மேற்கண்ட மொழிகளிலெல்லாம் தமிழ் மொழியின் தாக்கங்கள் உள்ளனவென்பதை அறியலாம்.

கி.மு. 2000 ஆண்டுகளில் இந்தியாவெங்கும் தமிழே பேசப்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை. இன்று இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தும் கி.மு. 1500 (சிந்து வெளி அழிவுக்குப் பிறகு) ஆண்டுகளில், தமிழினின்றும் கிளைத்தவைகளே. இன்றைய இந்திய மொழி ஒவ்வொன்றிலும் தமிழின் வேரும் மூலமும் உள்ளன. திராவிடமொழிகளே, தமிழினின்றும் கிளைத்தன என்ற கருத்தும் தவறானதாகும். இந்திய மொழிகள் அனைத்தையும் ஆய்வு செய்யாதவர்கள் இவ்வாறு கூறிவைத்தனர்.

வட இந்தியாவில் பேசப்பட்ட பாலி மொழியும் தமிழின் கிளை மொழியே. பாலிக்குப் பிறகே சமற்கிருதம் உருவாக்கப் பட்டது. சமற்கிருத மொழி மத்திய ஆசியாவில் பேசப்பட்டது போலவும், அங்கிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது போலவும் ஒரு சிந்தனையைச் செயற்கையாக உதிர்த்து, அதனை மேலை ஆரியம், கீழை ஆரியம் என்று கூறினர். எந்த ஆரியமானாலும், அதில் தமிழின் தாக்கம் இருந்ததை அறியலாம்.

குமரிக் கண்டம் அழிவுற்றபோது, இறுதியாக அறியப்பட்ட கடல் கோள், கி.மு. 11000 ஆண்டுகளில் நிகழ்வுற்றிருக்கலாம் என்பது, புவியியலாரின் கூற்று. அக்கால அளவில், இன்றைய பூம்புகார் நகருக்கு அருகே கடலுள் மூழ்கிப் போன ஒரு நகரை, அண்மையில் கண்டுபிடித்துள்ளனர், என்பது இதற்கான சான்றாகும். இந்நகரைப் போன்று பல நகரங்கள் வங்க அரபு, இந்தியப் பெருங் கடல்களில் மூழ்கியுள்ளன என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டாலும், அதற்கான முறையான கடல் அகழ்வாய்வுகள் இன்றும் தொடங்கப்படவில்லை.

இக்கால அளவில், குமரிக் கண்டத்துத் தமிழர்கள் மேற்கிலும், வட மேற்கிலும், கிழக்கிலும், வட கிழக்கிலும் பிரிந்து சென்று புதிய குடியேற்றங் களைக் கண்டனர். இப்பகுதிகளில் பேசப்பட்ட தமிழும் காலப்போக்கில் திரிந்து போயிற்று. மங்கோலியம், சீனம், பர்மிய மொழிகள் தமிழி னின்றும் கிளைத்தவைகளே. சேணியம் அல்லது சேணம் என்ப தற்குத் தொலைவு என்றும், தொலைவிலுள்ள நாடு என்றும் பொருளாகும். சேணம் என்ற தமிழ்ச் சொல்லே, சீனம் எனப் பட்டது. வார்மா (வாரைபோல் நீண்ட) என்பதே, வர்மா - பர்மா எனத்திரிந்தது. யாகோன் (Yaakon) என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட நகரம், யாங்கோன் - இரங்கோன் எனத் திரிந்தது. மான்தலை என்ற நகரம் இன்றும் மாண்டலே எனப் படுகின்றது. கொரிய சப்பானிய மொழிகளின் மூலம் தமிழ் மொழியிலுள்ள தமிழ்ச் சொற்களைக் கொண்டுள்ளவை பற்றிய ஆய்வுகள் வெளியிடப்பட்டுள்ளன. கிழக்கே தொலை வில் உள்ள சாலமன் தீவுகளிலும், சிந்துவெளிக் குறியீடுகள் அண்மையில் அறியப்பட்டுள்ளன.

மொழி மரம்

1. தமிழ்மொழி

(குமரிக் கண்டத்துமொழி - கி.மு.50000)

1. சிந்துவெளித் தமிழ்
(கி.மு. 10.000)

தமிழகத்துத் தமிழ் மெபசத்தோமியத்தமிழ் (கி.மு. 10000) துரானிய மொழிகள் (கி.மு. 10000) தாங்குசிக் மங்கோலியம் திபெத்திய சீன மொழிகளில் (கி.மு. 10000) கந்தோனியம், மாண்டரின் பர்மிய தென்கிழக்கு ஆகிய மொழி கள் அல்தாயிக் கொரிய, சப்பானிய, உருசிய மொழிகள்.

2. செமிட்டிக் மொழியினம்
(கி.மு.7000)

அக்காடியம், கனானியம்,
அறமாயிக், எபிறேயம், ஈழம்,
கல்தேயம், அரபு (கி.மு.4000 –2000)

3. ஆமெட்டிக் மொழியினம்
(கி.மு. 7000)

எத்தியோப்பியம், எகிப்தியம்
வடஆப்பிரிக்க மொழிகள்.
(கி.மு.4000 –2000)

4. இந்திய – ஐரோப்பிய மொழியினம்
(கி.மு. 7000)

கிரேக்கம் (கி.மு. 1000)
இலத்தீன் (கி.மு. 500)
செர்மானியம், ஆங்கிலோ
சாக்சன் (கி.பி.500)

குறிப்பு: தமிழ் இலக்கியங்கள், மேற்கித்திய இலக்கியங்களான விவிலியம், மெசபத்தோமிய மற்றும் சுமேரியம் தந்துள்ள தகவல்களை அடிப்படைகளாகக் கொண்டது.

தமிழின் சிறப்பு: தமிழ் எழுத்துகள் உயிர் 12, மெய் 18, ஆய்தம் ஒன்று என்ற அளவில் சொல்லப்பட்டுள்ளன. குற்றியலுகரம், குற்றியலிகரம் என்ற குறியீடுகள் இல்லாத ஒலிகளும் இணைந்து, 33 என்ற எண்ணிக்கையில் அடங்கும். தற்காலத்தில் எழுத்துக்ளைக் குறைத்து, 37 எழுத்துகளில் தமிழ் மொழியின் அனைத்து ஒலிகளையும் வெளிப்படுத்த இயலும் என்பதை அறிஞர்கள் உறுதி செய்துள்ளனர். இம்முறை வழக்கிற்கு வந்தால், மிக விரைவாகத் தமிழைப் படிக்கவும் எழுதவும் இயலும். கணினி போன்றவைகளில் எளிமையாகக் கையாளவும் இயலும்.

33 என்ற தமிழைத் தாங்கிப் பிடிக்கும் எண்ணிக்கையை, 33 கடவுளர்களாக பிற்காலத்தில் உருவகம் செய்து கொண்டனர். மெசபத்தோமியக் கடவுளர்கள் 33 பேர் என அந்நாட்டுச் சமய இலக்கியம் கூறுகிறது. பிற்காலத்தில் அக்கடவுளர்களை 3300 என சமற்கிருதத்தில் குறித்தனர். ஆரியத்தொன்மக் கதைகள் 33 கோடித் தேவர்கள் எனக் குறிப்பிடுகின்றன். இவையெல்லாம் தமிழ்மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும் உருவகங்களே.

தமிழுக்கே உரிய சிறப்பான ஒலிப்பும் எழுத்தும் ழகரமாகும். தமிழர் குடியேறிய நாடுகளில், ழகரம் ஒலிக்கப்பட்டிருக்க வேண்டும். நாளடைவில் அவ்வொலி மறைந்து போயிற்று எனலாம். கிரேக்கர்களும், ஐரோப்பியர்களும், ழகர ஒலிப்பை ஒலிக்க இயலாமல், ச-ஷ போன்ற ஒலிப்புகளைக் கொண்டனர். தமிழ் என்ற சொல்லைத் தங்கள் மொழியில் சொன்னவர்கள், ல் (டு) என்ற எழுத்தையே பயன்படுத்தி, Tamil - Tamilus -Tamiliens - Tamilae போன்றவாறு எழுதி வைத்தனர். பிற்காலப் பிரெஞ்சு மொழியில் ழகரம் பயன்படுத்தப்பட்டது. இதனைக்கூட ஒலிக்க இயலாத பிற ஐரோப்பியர் ஜ (து) போன்ற ஒலிப்புகளைத் தங்கள் மொழியில் புகுத்திக் கொண்டனர். தமிழ் என்ற சொல்லை Tamil என்றவாறு பிரெஞ்சில் எழுதினால், அச்சொல், தமிழ் என்றே ஒலிக்கப்படும் என்க. சமற்கிருதத்தில் ழகரத்தை, ஷ கர மாக்கிக் கொண்டனர். தமிழ்நாட்டில் உள்ள தற்காலத் தமிழ் அறிஞர்களே கூட, ழ

என்ற ஒலிப்பைச் சரியாக ஒலிப்பதில்லை. அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தைச் சார்ந்த படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்கள் கூட, ழ கர ஒலிப்பைச் சரியாக ஒலிக்கின்றனர் என்பது பெருமைப் படக் கூடிய செய்தியாகும்.

ழ கரத்தையே தமிழ்மொழி தனது செல்வமாக் கொண்டுள்ளது என்பது மிகையன்று. உலக மக்கள் உரிமை கொண்டாட இயலாத, ழ கரத்தை, தம் ழகரமாகத் தமிழர் பயன்படுத்தியதால்,தம் மொழிக்கும் "தம்ழ" என பெயர் சூட்டிக் கொண்டனர் எனலாம். தம்-ழ, தம்மின் ழ என அறியப்படும். அதுவே தமிழ் என அழைக்கப்பட்டது என்ற கருத்தும் உண்டு. தமிழ் என்ற சொல் எவ்வாறு தோன்றியது என்பதற்கு, பல்வேறு அறிஞர்களும் பல்வேறு மூலங்களைக் காட்டுகின்றனர். பாரதிதாசன், அமிழ்து என்ற சொல்லிலிருந்தே தமிழ் என்ற சொல் பிறந்தது என்கிறார். அம்மா தரும் பாலுணவே அம்மு எனப்படும். அமிழ்து என்ற சொல்லுக்கான மூலச்சொல் அம்மா என்பதே. அம்மா தரும் பாலுணவைப் போல் வேறுணவு எங்கும் கிடைக்காது என்பதால், இயற்கையின் ஆற்றலையும் விஞ்சிய கடவுளர்கள் உண்ணும் உணவையும் அமிழ்து என்றனர். சுருக்கமாக அமுது எனப் பட்டது. அமிழ்து - அமிர்த என சமற்கிருதத்தில் திரிந்தது. தமிழ் என்ற சொல்லே திராவிட எனத்திரிந்தது என்று கூறப் படும் செய்தி, பொருந்தாவொன்று என ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளது. தாய் தரும் பால் அமிழ்து எனப்பட்டது போல், தம் நிலம் தந்தமொழியைத் தாயாகக் கருதி, தமிழ் எனப் பெயரிட்டனர் என்பதும் ஒரு கருத்து.

தமிழ் மக்கள்: கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றியவர் தமிழர் என்பர். இதற்கு கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பே, தமிழ்மக்கள் தோன்றியிருந்தனர் என்றும் பொருள்கொள்ளக்கூடாது. கல் என்பது குறிஞ்சி நிலத்தைக் குறித்தது. குறிஞ்சியில் மாந்தன் வாழ்ந்தது கற்காலம் எனக் கூறுவதை நோக்குக. மண் என்பது வேளாண்மைத் தொழிலில் மாந்தன் ஈடுபட்ட மருத நிலத்தைக் குறித்தது. குறிஞ்சி நிலம் தோன்றி மருதநிலம் மாற்றம் பெற்ற காலம்தான் மக்கள் தோன்றிய காலம் என்ற பொருளில் கொள்க.

தமிழர்கள் தங்கள் நாட்டை, நானிலங்களாக வகுத்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

பாலைநிலம் பிற்காலச் சேர்க்கை யாகும். மாந்தனின் அறிவு, மொழி, கல்வி, தொழில், நாகரிக வளர்ச்சியில் குறிஞ்சி யில் தோன்றி மருதத்தில் மலர்ந்தது. குறிஞ்சியில் காட்டுமாந்தனா யிருந்த தமிழன், மருதத்தில் நகரிய நாகரிக மாந்தனாக உயர்ந் தான். ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய மக்கள் வாழ்க்கையை, சமய நம்பிக்கைகளை, தொழில்களைப் பற்றி விளக்கமாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாறான நானிலப் பகுப்பு, தமிழர் வாழ்ந்திருந்த நாட்டின் புவியியல் அமைவுகளை அடிப் படைகளாகக் கொண்டிருந்தது. உலக வரலாற்றில், நிலப் பகுப்பு முறை பற்றிய செய்திகள், வேறெங்கும் காணப்பட வில்லை.

குறிஞ்சி: மலையும் மலையைச் சார்ந்த நிலமான குறிஞ்சியில், பெரு மளவில் காணப்பட்ட குறிஞ்சி என்ற மலரைப் பெயராகக் கொண்டு அந்நிலம் அழைக்கப்பட்டது. கானவன்,குறவன், புனவன் என்று ஆடவரையும், குறத்தி மற்றும் கொடிச்சியர் என்று பெண்டிரையும் அழைப்பர். சிறிய அளவில் பயிர்த் தொழிலும், பெருமளவில் வேட்டைத் தொழி லும் அந்நிலத்தில் அறியப்படும். தினை, ஐவனம், மொச்சை, பருத்தி ஆகியவை பயிரிடப்பட்டன. தினைப் புனத்தைக் காத் தவன் சேணோன் என்றும் சேயோன் என்றும் சொல்லப்பட் டான்.

சேண்: தொலைவு. (சீனமும் தான் சானியாவும், சேண் என்ற சொல்லின் திரிபுப் பெயர்களே.)

சேய்: தொலைவு. (சேய் அரன், சேரன் எனப்பட்டான்.)

சே என்ற ஓரெழுத்துச்சொல்,தொலைவைக் குறித்ததே. ஆற்றையும் நெடுந் தொலைவு ஓடுவதால், சே என்றே அழைத்தனர். ஆற்றில் வாழ்ந்திருந்த மீன் சேல் எனப்பட்டது.

ஒரு தந்தையின் உறவுமகன்வழியே நீண்டு மரபுகள் தோன்ற வழி வகுப்பதால், சேய் என்றழைத்தனர். எனவே, சேய் என்ற சொல்லுக்கு மகன், தொலைவு என இருபொருள் உண்டு.

மலைச் சாரலில் காணப்படும் தேனை எடுக்க, ஒற்றை மூங்கிலைப் பயன்படுத்துவர். அது கண்ணேணி எனப்படும். முடிச்சுகள் உள்ள மூங்கில் ஏணியாகப் பயன்பட்டது. (இந்தோ னேசியச் காடுகளில் தேனை எடுக்க இன்றும் இந்த கண்ணேணி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.)

தாங்கள் உண்ணுமுன் தங்கள் கடவுளான சேயோனுக்கு அவ்வுணவைப் படைத்தனர். அக்கடவுள் "கடியுண் கடவுள்" எனப்பட்டான். குறிஞ்சி நிலத்தூர்கள் குடி என்றும், பாக்கம் என்றும் சொல்லப்பட்டன. (மெசபத்தோமியாவில் சிறுப் பாக்கம் (Shiruppak) என்ற ஊர் இருந்ததாக, அந்நாட்டு இலக் கியங்கள் கூறுகின்றன. அவ்வூரை, சேய்சூத்திரன் என்ற மன்னன் ஆண்டுவந்தான்.)

குறிஞ்சி நிலமே, தமிழர் வரலாற்றின் தொன்மையை விளக்கும் நிலப் பகுதியாகும். குறிஞ்சி நிலமக்கள் வழிபட்ட மலைக்கடவுளே, உலக வரலாற்றில் முதற்கடவுளாவான். மக்களின் குமுகாய வளர்ச்சியில், பல்வேறு நம்பிக்கைகள் பிற்காலத்தில் தோன்றிய போதும், மலைக்கடவுளையே முழு முதற்கடவுளாகத் தமிழர் வழிபட்டனர். இம்மலைக் கடவுள், தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளிலும் வணங்கப்பட்டான்.

முல்லைநிலம்: மலையை அடுத்த காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லைநிலம் எனப்பட்டது. இது செம்மண் நிறைந்த பகுதியாயிருந்ததால், செம்புலம் என்றனர். புவியியல் அறிஞர்களின் கருத்துப்படி, மலைகள் தவிர்த்த நிலங்கள் யாவும் செம்மண் நிலங்களாகவே தொடக்கத்தில் இருந்தன என்று சொல்லப்படுகின்றது. முல்லை நிலத்துமக்களை ஆயர் - ஆய்ச்சியர் என்பர். இம் மக்கள் புல் கண்ட விடத்து தங்கள் ஆடு மாடுகளை மேய்த்து வந்ததால், நிலையான குடியிருப்பை இவர்கள் பெற்றிருக்கவில்லை.

தங்கள் கால் நடைகளுக்குத்தேவையான புல் முதலியவை வளர, மழையையே நம்பியிருந்தனர். ஆதலால் முகிலை இம் மக்கள் வரவேற்று வணங்கினர். கார்முகில் இவர்களது வணக் கத்துக்குரிய கடவுளாகும். ஆனைந்துப் பொருட்கள் ஆயர் களின் அன்றாட வருவாயைத்தந்தன.

ஆயன் -ஆயா என்ற தமிழ்ச்சொற்கள், பழந்தமிழ்ச் சொற்களாகும். இச்சொற்களின் வேரும் ஆழமும் தமிழரின் வரலாற்றை மீட்டெடுக்கப் பயன்படும் அளவில் உள்ளன. உலக வரலாற்றில் ஆயன் - ஆயா சொற்கள் பரவலாகக் காணப் படுகின்றன.

இடையன் என்று ஆடவரையும், இடைச்சி என்று பெண்டிரையும் குறித்த சொற்கள் பிற்காலத்துச்சொற்களாகும்.

குறிஞ்சிக்கும் மருதத்துக்கும் இடையேயிருந்த மக்களை இடையர் என்றனர்.

மருத நிலம்: எங்கும் மண் பரப்பிக் காணப்பட்ட சம நிலப்பகுதியாகும். வேளாண் தொழில் இங்கே வளர்ந்ததால், நிலையான குடியிருப்புகள் தோன்றின. உலகின் முதல் நகரிய நாகரிகம் தோன்றிய இடம் மருத நிலமே. மருதம் என்ற மரம் பெருமளவில் அறியப்பட்டதால், மருதநிலம் என இப்பகுதி அழைக்கப்பட்டது. மருத நிலத்தூர் மருதூர் எனப்பட்டது. பல ஊர்களை இணைத்து ஒரு பேரூர் இருந்தது. பல சிற்றூர் களைத் தன்னகத்தே இணைத்திருந்த அல்லது தைத்திருந்த பேரூர் மருதை எனப்பட்டது. மருதை பிற்காலத்தில் மதுரை எனப்பட்டது. (இன்றும் மக்களில் பலர் மருதையென்றே கூறுவதை நோக்குக. மதுரை என்ற சொல் தரும் பொருளை விட, மருதை என்றசொல் தரும்பொருள் சிறப்பானது என்க.)

நெய்தல் நிலம்: குமரிக்கண்டம் என்ற தமிழரின் பழம் பெரும்நாடு, ஏழு கடல் பகுதிகளையும் நீண்ட கடற்கரைப் பகுதிகளையும் கொண்டிருந்ததால், கடலோடு தமிழன் கொண்டிருந்த பிணைப்பு தெளிவாகும். பழந் தமிழ்நாட்டின் தொன்மக்குடிகள், நெய்தல் நிலத் தலைவனையே தங்கள் நாட்டுக்கும் தலைவனாகத் தேர்ந்து கொண்டனர் என்பர். மீனைக் கொடியாகக் கொண்ட பாண்டியன் நெய்தல் நிலத்தைச் சார்ந்த பரவனே என்ற கருத்தும் உண்டு.

தமிழன் கொண்டிருந்த மீன் சின்னம், உலக வரலாறு களில் ஆற்றலின் சின்னமாகக் கருதப்படுகின்றது. மீனை முதன்மைப் படுத்திப் பேசாத சமய இலக் கியங்களை, உலக சமயங்களில் காண இயலாது.

கடல் மேலாண்மையில், தமிழனே தலைசிறந்து விளங்கி னான் என்பதை மெய்ப்பிக்கப் பல்வேறு சான்றுகள் உள்ளன. கடல் சார்ந்தஆய்வுகளில், இன்றைய ஆய்வாளர்களும் அறிந்தி ராத கடலைப் பற்றிய நுணுக்கமான செய்திகளையும், தென் தமிழ்நாட்டு மீனவர் அறிந்துள்ளனர் என்பதால், கடல் பற்றிய பல்வேறு ஐயங்களை அறிந்துகொள்ள, உலக கடலாய்வாளர் கள், தமிழ் மீனவர்களையே நாடி வருகின்றனர் என்க. இந்த அறிவு, மரபுதந்த அறிவே எனலாம்.

நெய்தல் என்ற மலரால், அந்நிலம் அறியப்பட்டது. நெய்தல் நிலப் பகுதிகளைப் பற்றிச் சரியாக அறிந்திராத ஆரியர்

(ஆரியருக்குக் கடலைப் பார்ப்பதே அச்சத்தைக் கொடுத்தது என்க), அந்நிலத்தில் நெய் விளைவதாகத் (Ghee) தவறாகக் கருதிக்கொண்டு, நெய் நிலம் (Ghee land) என்ற பொருளில், க்ஷீர பூமி (Ksheera Bhoomi) என்றனர். கடல்,மீன், மரக்கலம், கடற்பயணம் ஆகியவை பற்றிச் சமற்கிருதத்தில் சொல்லப் பட்டுள்ள செய்திகள் சொற்கள் யாவும் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே.

உலகளாவிய கடல் வாணிகத்தை, தொன்மைக் காலம் தொட்டே, தமிழர்கள் கைக்கொண்டிருந்தனர். உலகை அழித்த வெள்ளப் பெருக்கினின்றும் தப்பிப் பிழைத்ததாகக் கூறப்படும் மாந்தர்கள் பற்றிய கதைகள், மெசபத்தோமிய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. விவிலிய, கிரேக்க ஆரியக் கதைகள் கூறும் அம்மாந்தர்கள் தமிழ் மீனவர்களே என்பதை, அக்கதைகளின் வாயிலாகவே நிறுவலாம்.

பாலைநிலம்: குமரிக் கண்டத்தில் பாலை நிலங்கள் அறியப்பட்டிருந்தன. தற்போதுள்ள தமிழகத்தில் அவை அறியப்படவில்லை. ஆனாலும் பாலை நிலத்தை ஐந்தாவது நிலமாகத் தமிழர் கருதினர். முதல் நான்கு நிலங்களும் மக்களின் வாழ்க்கை, தொழில், வருவாய், வளமை போன்றவைகளை அடிப்படைகளாகக் கொண்டவை. பாலைநிலம் இவைகளுக் குப் பொருந்தாவொன்றாகும். குமரிக் கண்டத்தின் மேற்கு மற்றும் வடமேற்குப் பகுதிகள், முன்பாலை மற்றும் பின்பாலை நாடுகள் என அறியப்பட்டிருந்தன. அவை, அரபிக் கடல் உள்ள பகுதி முன்பாலை நாடெனவும், அரேபிய நிலப்பகுதி பின்பாலை நாடெனவும் அறியப்படும். குமரிக் கண்டத்தின் அழிவுபடாத நிலப்பகுதியாக அரேபிய நாட்டைக் கருதலாம்.

குறிஞ்சியும் முல்லையும் வேனில் காலத்தில் வெப்பத்தால் தம் இயல்பான தன்மையினின்றும் மாறுபடுவதால் பாலை நிலம் தோன்றும் என்பர்.

“வேனில் குன்றத்து வெவ்வெரைக் கவா அன்” பாலை என்று கருதப்பட்டது.

அறந்தலைப்பட்ட நெல்லி மரமும், ஆங்காங்கே முட் புதர்களுமாய் பாலைநிலம் காட்சியளிக்கும்.

ஆறலைக் கள்வரும் எயினரும் பாலைநிலத்தில் கொள் ளையிட்டுச் செல்வர்.

ஷகொற்றவையைப் பாலைநிலத்தின் தலைவியாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. கொற்றவை வணக்கம் குமரிக் கண்டத்திலும் வழக்கிலிருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. ஆனால் அதற்கானச் சான்றுகள் தெளிவாக இல்லை.

பிற்காலத்தில் மருதநிலத்துப் பேரூர்கள் பட்டணம் என்றும், நெய்தல் நிலத்துத் துறைமுக நகரங்கள் பட்டிணம் என்றும் அழைக்கப்பட்டன. (மதுரைப் பட்டணம், காவிரிப் பூம்பட்டிணம் என்க).

பள் - படு - படி என்றவாறு நீண்ட சொற்கள் இணைதல் அல்லது பொருந்துதல் என்ற பொருளைத் தருவன. படி என்ற சொல்லே, பட்டி என்றாகி, அது சிற்றூரைக் குறித்தது.

பட்டி -பட்டிணம் - பட்டணம் என்றும் விரிந்தது.

பட்டி என்ற தமிழ்ச்சொல், குடியேற்றத் தமிழர்கள் வாழ்ந்திருந்த நாடுகளிலும் அறியப்படுகின்றது.

பட்டி என்ற தமிழ்ச்சொல், குடியேற்றத் தமிழர்கள் வாழ்ந் திருந்த நாடுகளிலும் அறியப்படுகின்றது. பாத் (Bad) என்று அரபு மொழியிலும், பெத் (Beth) என்று எபிறேய மொழியிலும் திரிந்துள்ளது. பட்டணம் என்ற சொல், மெசபத்தோமிய நகர் ஒன்றையும் குறித்தது (எக்பட்டணா - Ecpattana) இது எக்கல் பட்டணம் என்ற தமிழ்ச்சொல்லே. இதற்கு மேட்டு நகரம் என்று பொருள். பாக்கம் என்ற தமிழ்ப்பெயர், சிறுப்பாக்கம் (Shiruppak) என்று பாபிலோனுக்கு அருகில் அறியப்பட்டிருந்தது.

ஊர் என்பதும், மருதநிலத்துக் குடியிருப்பபைக் குறித்த சொல்லாகும். இப்பெயரிலேயே பாபிலோனில் ஒரு நகரம் அறியப்பட்டிருந்தது. அங்கு நகரமாக அது விளங்கியது. இச்சொல்லை அடிப்படையாகக் கொண்டே ஊர்பன் (Urban) என்ற நகரத்தைக் குறித்த ஆங்கிலச் சொல் பிறந்தது.

உலக இலக்கியங்களில் காணப்படும் பெரும்பாலான ஊர்கள், நகரங்கள் ஆகியவைகளின் பெயர்கள் தமிழ் மூலச் சொற்களைக் கொண்டவைகளே.

தமிழ் மக்களின் ஊர், சிற்றூர், பேரூர், நகர வாழ்க்கை முறைகளை தமிழ் இலக்கியங்கள் தெளிவாக விளக்குகின்றன. தமிழ்மொழி பற்றியும் சொல்லப்பட்ட செய்திகள், வெள்ளத்

தால் அழிந்து போன குமரிக் கண்டத்துத் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருந்தனவென்றாலும், அவை காலத்தால் அழிந்து போயின. இருப்பினும் கி.மு. 700 ஆண்டுகளில் தொகுக்கப்பட்ட தொல்காப்பியம், தமிழ் மொழி - தமிழர் பற்றிய பழங்காலச் செய்திகளை விளக்கிக் கூறுகிறது.

தொல்காப்பியம் கூறும் தமிழ்-தமிழர்

ஒரு மொழியைப் பதிவு செய்ய எழுத்தே மூல அலகாக உள்ளது. எழுத்தென்பது அதனை வெளிப்படும் ஒலியாகும். ஒரு மொழியில் பேச எழுதப் பயன்படும் ஒலிகள் வாய்வழியாகவும், எழுதப் பயன்படுபவை எழுத்துகள் வழியாகவும் அறியப்படுகின்றன. ஒரு மொழியின் பேச்சு எழுத்து வடிவங்கள், அம்மொழியில் அறியப்படும் எழுத்துகளால் பெறப்படுகின்றன. தமிழ்மொழியும் இதற்கு விலக்கன்று.

"அகரமுதல் னகர இறுவாய் முப்பஃறு என்ப"

என, தொல்காப்பியம் கூறுகிறது. அகரம் முதல் னகரம் ஈறாக முப்பது எழுத்துகள் என்க. ஆய்தம் ஓரெழுத்தும், குற்றியலுகரம் மற்றும் குற்றியலிகரம் என்ற ஒலிக் குறிப்புகளும் சேர்ந்து முப்பத்து மூன்றாக உள்ளன.

மாந்தனையும் விலங்குகளையும் வேறுபடுத்திக் காட்ட வல்லதே மொழியாகும். விலங்குகளின் ஒலிகளும் ஒருவகையான பேச்சே என்றாலும், அப்பேச்சில் வளர்ச்சியோ முன்னேற்றமோ இல்லை. அறியப்பட்ட நாளிலிருந்து விலங்குகள் ஒரு வகையான ஒலிகளையே தத்தம் இனத்தில் எழுப்பி வருகின்றன.

மாந்தன் பேசும் மொழி வளர்ச்சியுடையது. பல்வேறு எண்ணங்களையும் பிறருக்கு அறிவிக்க உதவுவது. உலகம் தோன்றியது முதல் பல நாடுகளிலும் பல மொழிகள் பேசப்பட்டன. அவைகளில் பல இறந்துபட்டன. சில திரிபுபட்டன. பழமையான மொழிகளில் தொடர்ந்து வாழ்ந்து வளர்ந்து கொண்டிருப்பது தமிழ் மொழி மட்டுமே. இதற்கு அடுத்த நிலையில், 5000 ஆண்டுகளுகக்கு முன்பு தோன்றி, இன்றும் பத்துமில்லியன் மக்களால் பேசப்பட்டு வருவது எபிறேய மொழியாகும். தமிழும் எபிறேயமும் இன்றைய உலகின் பழம் பெரும் மொழிகளாகும். மற்றவை பல்வேறாகத் திரிபுபட்ட மொழிகளே.

எழுத்து:

பேச்சு மொழியென்பது,பேசப்படும் அப்பொழுதுக்கு மட்டுமே பயன்படும். இருவருக்கிடையே நிகழ்வுற்ற உரையாடலை மற்றவர் அறிய இயலாது. ஆனால் அப்பேச்சு எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டால், அடுத்து வரும் பல தலைமுறைகள் அப்பேச்சினை அறிய இயலும். எழுத்துகள் பற்றிய வரலாற்றில், கி.மு. 10000 ஆண்டுகளில் தமிழுக்கு எழுத்துகள் இருந்தது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இக்கால அளவில் உலகின் வேறு நாடுகளில் அறியப்பட்டிருந்த அல்லது தற்போது இறந்துபட்டதாகக் கருதப்படும் எம்மொழிக்கும் எழுத்துகள் இருந்ததாகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

தமிழ்மொழியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும். எழுத்துகளை ஒலியுடன் இணைத்து ஒழுங்கு படுத்தியவர்கள் அறிஞர்களே. அவ்வொழுங்கு முறை, பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்துள்ளதை அறியலாம். ஒவ்வொரு எழுத்தும் குறில் நெடில் எனக் பிரிக்கப்பட்டு, குறில் ஒரு மாத்திரை அளவிலும், நெடில் இருமாத்திரைகள் அளவிலும் ஒலிக்கப்படல் வேண்டும் என்று விதிக்கப்பட்டன. மூன்று மாத்திரைகள் அளவில் தமிழில் எழுத்துகள் இல்லை.

தொல்காப்பியம் கூறும் எழுத்துகள் பற்றிய செய்திகள்:

ஒரு மாத்திரை அளவு என்பது, கண் இமைாக்கும் பொழுது அல்லது விரலால் நொடித்தலுக்கு உள்ள கால அளவாகும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என 12 உயிரெழுத்துகள்.

ககரம் முதல் னகரம் வரையிலான 18 மெய்யெழுத்துகள்.

மெய்யெழுத்து அரை மாத்திரையளவில் ஒலிக்கப்படல் வேண்டும்.

சார்பு எழுத்துகளான இகரம், உகரம், ஆய்தம் ஆகியனவும் அரை மாத்திரை அளவைக் கொண்டனவே.

மெய்யெழுத்துகள் புள்ளிகளோடு அமையும்.

எ, ஒ என்ற உயிர்க்குறில் எழுத்துகளும் புள்ளிகளுடன் இருக்கும்.

தமிழில் எழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என அமையும்.

அ, இ, உ ஆகியவை சுட்டெழுத்துகள்.

ஆ, ஏ, ஓ ஆகியவை வினாவெழுத்துகள்.

தமிழில் ஓரெழுத்துச் சொற்கள் பல உள்ளன.

ஐ என்ற எழுத்தை அய் என்றும் எழுதலாம்.

உயிரெழுத்துகள் மொழிக்கு முதலில் வரும்
உயிர்மெய் அல்லாது தனிமெய் மொழிக்கு முதலில் வாராது.
யகரம், யா என்றவாறே மொழிக்கு இறுதியிலும் வரும்.

ஒவ்வொரு தமிழ் எழுத்தும் தொண்டை, மூக்கு, அண்ணம், வாயைச் சற்றே திறந்து காற்றை வெளியேற்றுவது போன்றவாறு பிறக்கின்றன வென்பதைத் தெளிவாக விளக்குகின்றது.

சொல்லிற்கு முதலில் வரும் 22 எழுத்துகள், இறுதியில் வரும் 24 எழுத்துகள் பற்றிய விளக்கம்.

எழுத்துபற்றிய அதிகாரத்தில் நூல்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல் தொகை மரபு, உருபியல், உயிர் மயங் கியல், புள்ளி மயங்கியல், புள்ளி மயங்கியல்,குற்றியலுகரப் புணரியல் என ஒன்பது தலைப்புகளில் தமிழ் எழுத்துகள் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

குற்றியலுகரம், குற்றியலிகரம் என்ற புணர்ச்சி, உலக மொழிகளில் தமிழில் மட்டுமே காணப்படுகின்றது.

எழுத்துக்களைப் பற்றி இவ்வளவு விரிவாகவும் விளக்க மாகவும் விதிகளை வகுத்தவர் தமிழரே என்பதில் ஐயமில்லை. தமிழ் எழுத்துகளைப் பற்றிய செய்திகள் இன்றும்கூட மேலை மொழியியலாருக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை.

சொல்லதிகாரம்: எழுத்துகள் சேர்ந்து சொல்லாகின்றன. சொல்லென்பது ஒரு குறிப்பிட்ட பொருளை, பெயரை, விலங்கை, இடத்தை விளக்கி நிற்பது. தமிழ் மொழியில் எல்லாச் சொற்களுக்குமே பொருளுண்டு. சொல்லின் முதல் எழுத்து, ஈற்றெழுத்து எவ்வாறு அமைய வேண்டும் என்ற விதி களும் உண்டு. சொல்லை எவ்வாறு ஆக்குவது, பேசுவது, எழுது வது, புரிந்துகொள்வது என்பதைக் கிளவியாக்கம் என்பர்.

இவ்வுலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் 'உயர்திணை, அஃறிணை எனத் தமிழர் வகுத்தனர் மக்களும் கடவுளும் உயர் திணையென்றும், ஏனைய உயிர்கள் அஃறிணை யென்றும் கருதப்படும். உலகமொழிகளில், திணை இலக்கணம் வேறு மொழிகளில் காணப்படவில்லை. ஒவ்வொரு திணைக்கும் ஏற்ற சொற்கள் என தனித்தனியே உள்ளன.

பெயர்கள் உருபு ஏற்றுப்பொருள் வேற்றுமைப் படுத்தும் முறை தமிழில் மட்டுமே உண்டு. இந்தவேற்றுமைகளை ஏழாகப் பிரித்துள்ளனர். இதன் மூலம் சொல்லின் சரியான பொருளை அறிய இயலும்.

வேற்றுமை உருபுகளும் பொருளும் தம்முள் மயங்கி நின்றுபொருள் உணர்த்தும். அவற்றைப் புரிந்துகொள்ளுவ தெப்படி யென்பதை வேற்றுமை மயங்கியல் என்ற பகுதி விளக் குகின்றது.

பெயரோடு தெளிவாகத் தோன்றும் இயல்பினை விளி மரபு விளக்குகின்றது.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதால், சொல்லின் தன்மையையும் பொருளையும் விளக்கும் பகுதி பெயரியல் எனப்படுகின்றது.

ஒரு சொற்றொடரின் நிகழ்வை விளக்குவது அதில் காணப்படும் வினைச்சொல்லே. அவ்வினைச்சொற்கள் மூன்று காலங்களை உணர்த்தும். வினையைப் பற்றி விளக்கம் அளிக் கும் பகுதியே வினையியல் எனப்படும்.

பெயரோடும் வினையோடும் சேர்ந்துவரும் இடைச்சொற் கள், ஒரு சொற்றொடரின் முழுப்பொருளை வெளிப்படுத்தும். ஆனாலும் அவ்விடைச் சொற்கள் தனியாக அறியப்படும் போது அவை முழுமை பெருவதில்லை. இடையியல் என்ற பகுதியில் இதற்கான விளக்கத்தைக் காணலாம்.

ஒரு மரத்தைத்தாங்கி நிற்கும் வேர்போல, ஒரு சொல்லை யும் அச்சொல்லின் வேர்ச்சொல்லே தாங்கி நிற்கின்றது. தமிழில் அறியப்படும் அனைத்துச் சொற்களுக்கான வேர்ச்சொற்களும் தமிழிலேயே உள்ளனவென்பது அதன் சிறப்புத் தகுதியாகும். இவ்வாறான நிலை உலகில் எம்மொழிக்கும் இல்லையென லாம். வேர்ச் சொற்களைப் பற்றி விளக்கும் பகுதி உரியியல் என்ற தலைப்பில் காணப்படுகின்றது.

ஓரிலக்கியத்தை ஆக்குவதற்கான சொற்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதை எச்சவியல் என்றபகுதி விளக்குகின்றது. தமிழே முதன் மொழி யென்பதால், தமிழில் ஆக்கப்படும் செய்யுள் போன்ற இலக்கியங்களும், தமிழ்ச் சொற்களாலேயே ஆக்கப்பட வேண்டும் என்பது நோக்கமாகும்.

இருப்பினும் தமிழினின்றும் திரிந்துபோன அல்லது கிளைத்த மொழிகளிலிருந்தும் சில சொற்களை எடுத்துக் கொள்ளலாம் என இப்பகுதி விளக்குகிறது. ஆனாலும் அத்திரிபுச் சொற் களை தமிழ்மொழியின் விதிப் படியே பயன்படுத்தவேண்டும் எனத்தெளிவு படுத்துகின்றது. அச்சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்லென நான்காகப் பிரித் துள்ளனர்.

இந்த சொல்விளக்கம், தமிழ்நாட்டை மையமாகக் கொண்டே சொல்லப்பட்டுள்ளது.

இயற்சொல்: தமிழ்நாட்டில் வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்கள்.

திரிசொல்: தமிழில் உள்ள ஒரு சொல்லுக்குப் பல் பொருள் உள்ளன. ஆறு என்பதற்கான பொருள் எண் ஆறு, நீரோடும் வழி, அமைதி பெறுதல், தன்மையாதல் அல்லது குளிர்தல் என்றவாறு விரியும். இவ்வாறு பல சொற்கள் ஒரு பொருளையும், ஒரு சொல் பல்பொருளையும் விளக்கும் நிலையைத் திரிசொல் என்பர்.

திசைச்சொல்: தமிழ்நாட்டினின்றும் தொலைவிலுள்ள நாடுகளில் தமிழே பேசப்பட்டாலும், அவை தமிழ்நாட்டின் தமிழோடு மாறுபட்டவை. ஆனாலும் அச்சொற்களும் தமிழ் வேரினையும் மூலத்தையும் கொண்டவைகளே. அம்மாவை அம்மே என்பதும், தந்தையை அச்சன் என்பதும் போல் கொள்க.

வடசொல்: உரையாசிரியர்கள் ஒருபெரும் தவற்றைச் செய்துவிட்டனர். வடசொல் என்பதை சமற்கிருதம் என்றவாறு கருதிவிட்டனர். தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் சமற்கிருதம் என்ற மொழி உருவாக்கப்படவில்லை என அறிதல் வேண்டும். தமிழ்நாடு 12 பகுதிகளாக அக்காலத்தில் அறியப் பட்டிருந்தது. அந்தப் பன்னிரு நிலத்துக்கும் வடக்கே, அதாவது வடமலைக்கு வடக்கே, தமிழினின்றும் கிளைத்த சில மொழி களையே தொல்காப்பியம் வடசொல் என்கிறது. இதனைப் பிற் காலத்தவர் வடமொழி என்றும் குறித்தனர். வடக்கே பேசப் பட்ட மொழிகள் அனைத்தும் வடமொழியே. பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட சமற்கிருதம், பாலியும் இதில் அடங்கும்.

தொல்காப்பியம் கூறும் சொல்லதிகாரம் போன்றதொரு இலக்கண விதிகள், உலகின் எம்மொழிகளிலும் காணப்பட

வில்லை. தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்டு சமற்கிருதத்தில் தொகுக்கப்பட்ட "எட்டு அத்தியாயம்" என்ற பாணினியின் நூல், தொல்காப்பியத்திற்கும் காலத்தால் பிந்தியது. அதற்கு உரையெழுதிய பதஞ்சலி கி.மு. 150 ஆம் ஆண்டில் வாழ்ந்தவரென்பர்.

கி.பி. 250 ஆண்டுகளில்தான் சமற்கிருதத்துக்கு எழுத்துகள் அறிமுகமாயின என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே, பாணினி இயற்றிய இலக்கண நூல், எழுதப்பட்டதா அல்லது சொல்லப்பட்டதா எனத் தெரியவில்லை. பாணினி சொன்னதாக, கி.பி. 200 ஆண்டுகளுக்குப் பிறகு ஓராசிரியர் அதனை எழுத்து வடிவில் பதிவு செய்திருக்க வேண்டும் எனவும் கருதலாம்.

கி.மு. 1000 - 700 ஆண்டுகளில் தொகுக்கப்பட்ட தொல்காப்பியத்திற்கு, கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக்குப்பிறகு எழுதப்பட்ட உரைகள், உரையாசிரியர்களில் காலத்தையும், வழக்குகளையும், சமய நம்பிக்கைகளையும், சமற்கிருத ஊடுருவலையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்டவைகளாகும்.

மேற்கித்திய வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட இலக்கியங்களில், மொழி பற்றியும் அதன் இலக்கண விதிகள் பற்றியும் எந்தநூலும் இதுநாள் வரை அறியப் படவில்லை. தொல்காப்பியரும் தனக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு வாழ்ந்திருந்த அறிஞர் பெருமக்கள் கூறிய செய்திகளையே தொகுத்து வழங்கியுள்ளார் என்பதால், மொழி தொடர்பான முதல் இலக்கண நூல் தமிழிலேயே அறியப்பட்டிருந்தது என்பது தெளிவு.

பொருளதிகாரம்: பல்லாயிரம் ஆண்டுகள் தொடங்கி கி.மு.1000 ஆண்டுகள் வரையிலான தமிழர்களின் வரலாற்றைத் தொகுத்துக் கூறும் இலக்கிய மற்றும் வரலாற்றுச் சான்றாக, தொல்காப்பியம் பொருளதிகாரம் உள்ளது. மேலை நாட்டு இலக்கியங்கள் போல் தொன்மக் கதைகளோ, கடவுளர் செய்திகளோ, நம்ப இயலாத நிகழ்வுகளோ தொல்காப்பியத்தில் காணப்படவில்லை யென்பதால், தொல்காப்பியம் ஒரு வரலாற்று ஆவணமாகவே கருதப்படுகின்றது. நடவாத நிகழ்வுகளோ, ஊகத்தின் அடிப்படையில் சொல்லப்பட்ட செய்திகளோ தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. தொல்காப்பியம் கடவுள் நம்பிக்கை கொண்ட ஒருவரால் எழுதப்பட்டிருந்

தாலும், அறிவுக்குப்புறம்பான செய்திகள் தொல்காப்பியத்தில் காணப்பட வில்லை.

பொருளதிகாரம் என்ற பகுதி மறைக்கப்பட்டிருந்தால், தமிழரின் பழமையான வரலாறு மறுக்கப்பட்டு, அது ஈரா யிரம் ஆண்டுகளுக்குட்பட்டதே என்றும் அறிவிக்கப்பட்டிருக் கும். இவ்வளவு சிறப்பான இந்நூலை இன்னும்கூட, மேற்கித் திய மொழியியலாரில் பலர் அறிந்திருக்கவில்லை அல்லது அவர்கள் அறிய தமிழர்கள் எந்தமுயற்சியையும் மேற்கொள்ள வில்லை. இடைக் காலத்துக்குப் பிறகு வந்த ஐரோப்பியர்கள், ஆரிய வேதங்களையும் புராணங்களையும் வடக்கே சென்று கற்று ஆய்வுகள் மேற்கொண்டது போல், தமிழகத்தின் பால் அவர்கள் அக்கரை காட்டவில்லை. கால்டுவெல், போப் போன்றவர்கள், இலக்கணம் பற்றிய விளக்கங்களை அளிக்க வில்லை. வீரமாமுனிவர் மட்டுமே தமிழ் இலக்கணத்தில் தமது சிந்தனைகளை வெளிப்படுத்தினார்.* தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூல், தமிழுக்குக் கிடைத்த இலக்கிய நூல் களுள் ஒன்று. தொல்காப்பியத்துக்கு விளக்கமாகவும், நன்னூ லுக்கு உரையாகவும், தொன்னூல் விளக்கம் அமைந்துள்ளது.

பொருள் என்பதை, காட்சிப்பொருள் கருத்துப்பொரு ளென தொல்காப்பியம் பிரித்து, அவற்றை முதல், கரு, உரியென மூன்றாக உணர்த்தி, தமிழ் மக்களின் வாழ்க்கையை வகுத்துரைத்தது. நிலமும் காலமும் முதற்பொருளாகவும், புல் முதல்மாந்தன் வரையிலான உயிரினங்கள் கருப்பொருளாக வும் கொள்ளப்படும், அறத்தின் பாற்பட்டவை உரிப்பொரு ளாகும்.

திணைகள்	:	அகத்திணை, புறத்திணை.
அகத்திணை	:	கைக்கிளை முதல் பெருந்திணை வரையில் ஏழு.
புறத்திணை	:	வெட்சி முதல் பாடாண் வரையில் ஏழு.
நிலம்	:	குறிஞ்சி,முல்லை, மருதம்,நெய்தல்.
செய்யுள்	:	ஆசிரியம், வஞ்சி, வெண்பா,கலி, பரிபாடல், மருட்பா என ஆறு
காலம்	:	சிறு பொழுதுஆறு; பெரும் பொழுது ஆறு; ஆக பன்னிரெண்டு.

வழு : அகத்திணை வழு ஏழு; புறத்திணை வழு ஏழு, ஆக பதினானகு.

வழக்கு : நாடக வழக்கு, உலகியல் வழக்கு

இவையன்றி, திணைப்பெயர், திணை நிலைப்பெயர், இருவகைக் கைகோள், பன்னிருவகைக் கூற்று, பத்துவகைக் கேட்போர், எட்டு வகை மெய்ப் பாடு, நான்குவகை உவமம், ஐவகை மரபு ஆகியன பற்றியும் தொல்காப்பியம் பேசுகின்றது.

ஒருமித்த காதலால் ஒருவனும் ஒருத்தியும் கூடி நின்ற காலத்தில் பிறந்த இன்பம், எப்போதும் உள்ளத்தால் உணர்ந்து நுகர்ந்து மகிழ்வுறுவது ஒரு பொருளாக அமைந்து, அது அகம் எனப்பட்டது. அகத்தே நிகழும் இன்பத்திற்கு அகம் என்றே பெயரிட்டது, ஆகு பெயர் என்க.

மறம் பற்றிய புறநிகழ்வுகள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு வகையாகச் சொல் லப்படும். அமரர் என்னும் சொல், அமர் என்ற சொல்லின் நீட்சியாகும். அமர் என்பார், போர் செய்தலைத் தம் தொழி லாகக் கொண்ட வாழும் மறவரைக் குறிக்கும். அமர் என்பது சமர் என்றும் சொல்லப்பட்டது. (சமர் என்ற போரைக் குறித்த சொல்லே சுமர் என்று பாபிலோனில் அறியப்பட்டது) போர் மறவருடைய ஊத்திண்மையை பலரும் அறிய விளக்கும் சிறப் புடையது புறத்திணை இயல் ஆகும்.

களவியல்: இல்லற வாழ்க்கை பற்றிக் கூறும் தொல் காப்பியம் களவியல், கற்பியல் எனப்பிரித்து விளக்குகின்றது. அன்பு, அருள், அறிவு, அழகு, குடிப்பிறப்பு ஆகியவற்றால் ஒத்துவிளங்கும் தலைவனும் தலைவியும், நல்லூழின் வழியால் சந்தித்து, உள்ளத்தால் ஒன்றாகி, உலகத்தார் அறியாமல் மறைந்து ஒழுகுதல் களவியல் எனப்படும்.

கற்பியல்: அன்புரிமைகொண்ட தலைவனுக்கு, அவன் அன்பிற்குரிய தலைவியை பெற்றோர் பலர் முன்னிலையில் மணவிழா நடத்தி, தலைவனும் தலைவியும் இணைந்து வாழ உறுதியளிக்கப்படும் இல்லற வாழ்க்கையே கற்பியல் எனப் படும். திருமணத்தைப் பெருவிழாவாகவே தமிழர் கொண்டாடி னர். இதனைக் "கரணம்" என்று தொல்காப்பியர் கூறுகின்றார். நன்மக்களைப் பெறுவதே இல்லறத்தின் நோக்கமாகும்.

பொருளியல்: மக்களின் வாழ்க்கையில் அகப்பொருள், புறப்பொருள் தவிர்த்து எஞ்சியிருக்கும் செய்திகள், பொருளியல் என்ற தலைப்பில் சொல்லப்பட்டுள்ளன. ஒப்பு, ஒரு, வெறுப்பு, கற்பு, ஏர்,எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை,நுகர்வு என விளக்கப்படும் சொற்கள், பொருளியல் நிலைகளைக் குறிப்பன.

மெய்ப்பாட்டியல்: மக்களுடைய உள்ளக் கிளர்ச்சிகளான கண்ணீர் அரும்பல், மெய் மயிர் சிலிர்த்தல், வியர்த்தல், நடுக்கம் முதலிய புறக் குறிகளால் காண்பவருக்குப் புலனாகும் தன்மை, மெய்ப்பாட்டியலில் விளக்கப்பட்டுள்ளன. மெய்யின் கண் தோன்றுவதால் மெய்ப்பாடு எனவும், உண்மையை அடிப்படையாகக் கொண்டிருத்தலால் மெய்ப்பாடு எனவும் சொல்லப்பட்டதாகவும் கூறுவர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம்,வெகுளி, உவகை எனப்பட்ட எட்டும் மெய்ப்பாடு எனவும் விளக்கப்பட்டுள்ளன. இவையன்றி முப்பத்திரண்டு மெய்ப்பாடுகள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன.

உவமயியல்: ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்புமையாகக் கூறி, அப்பொருளின் வண்ணம் வடிவு தொழில் முதலிய இயல்புகளை வெளிக்காட்டுவது உவமம் எனப்படும். தொல்காப்பியம் கூறும் உவமப் பகுதி ஆழமான நுட்பத்தை விளக்கி நிற்கின்றது.

செய்யுளியல்: அகம், புறம், பொருண்மை ஆகியவைகளை எடுத்துரைக்கும் செய்யுளின் நான்கு உறுப்புகளைப் பற்றித் தொல்காப்பியம் விளக்குகின்றது.

மரபியல்: காலம் காலமாய் சொல்லப்பட்டு வழங்கி வரும் உலக வழக்கும், செய்யுள் வழக்கும் உணர்த்தும் செய்திகள், மரபியல் என்றவாறு அறியப்படும். இன்ன சொல்லை, இப்படித்தான் கூற வேண்டும் அல்லது எழுத வேண்டும் என்பன பற்றிய விளக்கங்கள் இத்தலைப்பில் உள்ளன.

தொல்காப்பிய நூலின் சிறப்பு: தமிழ்மக்களின் பேரறிவுப் பெட்டமாகத் தொல்காப்பியம் என்னும் நூல் விளங்குகின்றது. கி.மு.700 ஆண்டுகளில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியம், அக்கால வரலாற்றை மட்டும் கூறாது, அக்காலத்துக்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின்

வரலாற்றை இந்நூல் விளக்குகின்றது. தமிழ்மொழி, தமிழ் மக்கள் ஆகிய தொன்மைக் கால மொழி பற்றியும், அதனைப் பேசிவந்த மக்கள் பற்றியும், தற்கால மக்களுக்கு அறிவிக்கும் வரலாற்று ஆவணமாகத் தொல்காப்பியம் திகழ்கின்றது. இந் நூலில் கூறப்பட்டுள்ள பல செய்திகள், தொல்காப்பியர் காலத் துக்கு முன்பே அறியப்பட்டிருந்தனவென்பதை, தொல்காப்பி யரே விளக்குகின்றார். 250க்கும் மேற்பட்ட இடங்களில், எமது முன்னோர் இவ்வாறு கூறி வைத்துள்ளனர்., எழுதி வைத்துள் ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

மொழியைப் பற்றியும் அதன் இலக்கணவிதிகள் பற்றியும் தாம் எவையும் புதியனவாகச் சொல்லவில்லையென்றும், தமக்கு முன்பே அவ்வாறு சொல்லப் பட்டிருந்தன என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். இதன் மூலம் தொல்காப்பிய நூலுக்கு முன்பே, பல நூல்கள் தமிழில் அறியப்பட்டிருந்தன வென்பதைத் தெரிந்து கொள்ளலாம். தமிழ்மொழியில் கி.பி. 10000 ஆண்டுகளிலேயே எழுத்துகள் அறியப்பட்டிருந்தன என்பதைத் தற்கால ஆய்வுகள் மெய்ப்பிப்பதால், அக்கால அளவிலேயே, தமிழில் இலக்கிய இலக்கண நூல்கள் இருந்தன வென்று உறுதிப்படுத்தப்படுகின்றது. அவை நீடித்திருக்கக் கூடிய எழுதுபொருட்களில் பதிவு செய்யப்படாமையால், அழிந்துபட்டன எனக் கருத இடமுண்டு. எகிப்தியர்கள் பயன் படுத்திய பாப்பிரஸ் தாள், தமிழகத்தில் அறியப்படவில்லை. பனை ஓலைகளின் வாழ்நாள், 200 ஆண்டுகளுக்கு மேல் தாக்குப் பிடிக்காது என்பதால், அவை மீண்டும் மீண்டும் படியெடுக்கப்பட்டிருந்தால், நிலைத்திருந்திருக்கும். இன்னும் அறியப்படாத பல கரணியங்களாலும், அப்பழந்தமிழ் நூல் கள் யாவும் அழிந்துபட்டன.

மேற்கித்திய செமிட்டிக் இலக்கியங்கள், தொல்காப்பியத் திற்கும் காலத்தால் முந்தியவை என்றாலும், அவை யாவும் அறிவியல் கண்ணோட்டமில்லாத, சமயம் சார்ந்த, தொன்மக் கதைகளை கொண்ட இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. கி.மு. 4000-2000 ஆண்டுகளில் எழுதப்பட்ட செமிட்டிக் இலக் கியங்களில் பல, சென்ற நூற்றாண்டுகளில் அகழ்வாய்வுகள் வழியே கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று கூட, மொழி பற்றியோ அதன் இலக்கண விதிகள் பற்றியோ விளக் கிச் சொல்லும் நூல்களாக இல்லை. அந்த அளவில், செமிட் டிக் மொழி இலக்கியங்களைக் காட்டிலும் மூப்புடன் தமிழ்

இலக்கியங்கள், மொழி பற்றிய செய்திகளைக் கொண்டிருந்தன வென்பதை, தொல்காப்பிம் விளக்குகின்றது. இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களில், தொல்காப்பிம் மிகவும் பழமையான நூல் எனக் கொள்ளலாமேயன்றி, தொல்காப்பியமே தொன்மையான நூல் எனக் கருத இயல வில்லை.

இன்றைக்கும் கூட, ஒரு மொழி அறிஞரால் தொகுக்கப் படமுடியாத அளவில், பல செய்திகளைத் தொல்காப்பியம் கொண்டுள்ளது. ஒருவர் தன் வாழ் நாளிலும் கற்றுத் தெளிய இயலாத அறிவுப் பெட்டமாகத் தொல்காப்பியம் திகழ்கின்றது. இத்தனைச் செய்திகளையும், இலக்கண விதிகளையும், மரபு வழக்குகளையும் வழக்காறுகளையும் தொகுத்துக் கொடுத்த தொல்காப்பியருக்கு இணையான ஒரு பேரறிஞரை உலக வரலாற்றில் காண இயலவில்லை.

தொல்காப்பியம், காலவோட்டத்தில் இயற்கையின் இடர்பாடுகளுக்கும், தமிழ்ப் பகைவர்களின் சூழ்ச்சிகளுக்கும் தாக்குப் பிடித்து இன்றும் நிலைத்திருப்பது, இறைவனின் திருவருளால் நிகழ்ந்ததே என பாவாணர் உருகிக் கூறுகின்றார். பல்லாயிரம் ஆண்டுக்கால தமிழ்மொழியின் வரலாற்றை விளக்கிக் கூறும் தொல்காப்பியம், பல்வேறு உண்மைகளையும் சான்றுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தபோதும், தமிழ் மொழியின் வரலாறு 1500 ஆண்டுகளுக்குட்பட்டதே எனக் கூறும் சிலரும் உள்ளனர்.

தொல்காப்பியம் எழுதப்பட்டு, ஏறக்குறைய 1300 ஆண்டுகள் கழித்து, கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக்களுக்குப் பிறகே, உரைகள் எழுதப்பெற்றன. அதற்கு முன்பு எழுதப்பெற்ற உரைகள் எவையும் கிடைக்கவில்லை. அதனால், பிற்கால உரையாசிரியர்கள், தாங்கள் வாழ்ந்திருந்த காலத்தின் அரசியல் சூழல்கள், சமய நம்பிக்கைகள், ஆரியக் கலப்புகள், தொல்காப்பியத்தின் உண்மைப் பொருளை அறியாத, அறிந்துகொள்ள இயலாத சூழல்களால், தங்களுடைய எண்ணங்களையும் கொள்கைளையும் தொல்காப்பியத்தின் மீது திணித்து, மாறுபாடுடைய கருத்துக்களைக் கொண்ட உரைகளை எழுதிவிட்டனர். இவ்வாறு எழுதப்பெற்ற உரைகள் சரியானவைதாமா என ஆய்ந்தறிய தமிழர்களும் முயற்சிகளை மேற்கொள்ளாது, கிளிப்பிள்ளைகள் போல் படித்து வந்தனர்.

தற்கால மொழியறிஞர்கள் தொல்காப்பியத்தின் உண்மைப் பொருளைக் காண முற்பட்டுள்ளனர். இதற்கான நல்ல சூழலை, பாவாணர் சென்ற நூற்றாண்டில் தொடங்கி வைத்தார். இன்று, தொல்காப்பியம் கூறும் உண்மைப் பொருளைக் கண்டுணர்ந்து, தவறான உரைச் செய்திகளை விலக்கி, ஆய்வுகள் தொடரப் பட்டு வரும்காலை, தொல்காப்பிய நூலின் சிறப்புமேலும் உயர்ந்து நிற்கின்றது.

ஆரியருடைய வருகை தமிழ்நாட்டில் அறியப்பட்ட காலத்துக்கும் தொல்காப்பியர் காலத்துக்கும் தொடர்பே இல்லாத நிலையில், தொல்காப்பியரை ஆரியர் என்றும், தொல்காப்பியத்தில் சமற்கிருதச் சொற்கள் உள்ளனவென்றும் தமிழறிஞர்களே கூறி வந்துள்ளனர். ஒரு தமிழ் நூலை, தமிழ்க் கண்ணோட்டத்தில் நோக்காது, ஆரியக் கண்ணோட்டத்தில் நோக்கியதே, தொல்காப்பியத்தின் பெருமைகளைச் சிறுமைப் படுத்துவனவாக அமைந்தன.

தொல்காப்பியரும் சில பிழைகளைச் செய்திருப்பதாக, பாவாணர் சுட்டிக் காட்டினார். அவை இயற்கையாய் எவரும் இழைக்கும் மாந்தத்தவறுகள் (human errors) எனலாம். சமய நோக்கில் கூறுவதென்றால், கடவுள் ஒருவரே தவறுகள் இல்லாத இலக்கியங்களை எழுத இயலும். அவ்வாறான இலக்கியங்கள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, எந்த நூலாசிரியரும் தம் நூலில் சில தவறான கருத்துகளை வெளிப்படுத்துவது இயற்கையே. ஆனாலும் தொல்காப்பியர் மிகவும் குறைந்த அளவிலேயே சில பிழைகளைச் செய்திருப்பதாகச் கூறும் பாவாணர், தொல்காப்பியத்தின் பெருமைகளையும் தாங்கிப் படித்துள்ளார். தொல்காப்பியம் என்ற நூல் தமிழுக்குக் கிடைக்காமல் போயிருந்தால், தமிழ் வரலாறும், தமிழர் வரலாறும் முற்றிலுமாக மறைக்கப்பட்டிருக்கும் என்பதும் பாவாணருடைய கருத்தாகும்.

இவ்வளவு சிறப்பு மிக்க தமிழரின் செல்வமாகிய தொல் காப்பியத்தை, உலக அரங்கிலுள்ள மொழியறிஞர்களுக்குக் காட்ட நாம் தவறிவிட்டோம். இப்போதும் கூடக் காலம் கடந்துவிடவில்லை. தொல்காப்பிய நூலை, உலகின் பன்மொழி களிலும் மொழிமாற்றம் செய்யவும், அதற்கான பண உதவி களை மைய, மாநில அரசுகள் கொடுக்கவும், தமிழார்வலர் களும், தமிழறிஞர்களும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

11. தோரா கூறும்செய்திகள்

தமிழுக்குத் திருக்குறள் போல், ஆரியருக்கு வேதங்கள் போல், சீக்கியருக்குக் கிரந்தம்போல், பார்சீகளுக்கு அகுத மாஸ்தா போல், இசுலாமியருக்கு குர்ஆன்போல், கிறித்துவர் களுக்கு விவிலியம் போல், எபிறேய மக்களாகிய யூதர் களுக்கு தோரா என்பதே சமய நூலாகும். ஒரே சமய நூலே,தோரா - விவிலியம் எனப்படுவதாகும். எபிறேய மக்களின் சமயத் தலைவர்களால் படைப்புக்காலம் தொட்டு ஆதாம்,நோவா, அபிறகாம், மோசே, இசையா என்றவாறு அறியப்படும் தலைவர் களைப் பற்றியும், அவர்களோடு தொடர்புகொண்ட எபிறேய மக்கள் பற்றியும் விளக்கும் நூலே தோரா எனப் படும். தோராவின் செய்திகள் நிகழ்வுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் விவிலியம், இயேசு பிறப்புக்குப் பிறகு, தோ ராவினின்றும் விலகிப் போயிற்று. தோராவை விவிலியத்தின் பழைய ஏற்பாடு (Old Testament) என்றும், இயேசுவின் பிறப்பு, அறிவுரைகள், இறப்பு, உயிர்ப்பு ஆகிய நிகழ்வுகளைக் கொண்ட நூலை புதிய ஏற்பாடு (New Tesament) என்றும் பிரித்துக் கொண்டனர்.

எபிறேய இனத்தின் தோற்றம், அவர்களின் தாய்நாடு, மொழி, சமய நம்பிக்கைகள் பற்றிய பழங்காலச் செய்திகள் எவையும் தெளிவுபடுத்தப்படவில்லை யாதலால், தோரா நூலை எழுதியவர் அல்லது எழுதியவர்கள், படைப்புக்காலம் முதல் அபிறகாம் காலத்திற்கு முந்திய நிகழ்வுகள் வரை, மெச பத்தோமியச் சமயச் செய்திகளையே சிற்சில மாற்றங்களுடன் எடுத்துக்கொண்டு, அச்செய்திகளை ஆதி யாகமம் என்ற தலைப்பில், பத்து அதிகாரங்களில் சுருக்கிக் கொண்டனர். உண்மையில் தோரா அல்லது விவிலியம் என்ற நூல் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும்.

படைப்புக் காலம் முதல் அபிரகாமுக்கு முந்திய காலம் வரையில், அதாவது ஆண்டுத் தெரியாத காலம்முதல் கி.மு.

2000 வரையிலும் முதல் பகுதி யெனப்படும். இதனைத் தொன்மக் கதையாக (Mythical Stories) விவிலிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அபிறகாம்காலம் முதல் (கி.மு. 2000) நிகழ்வுற்றவை யாவும் வரலாற்றின் அடிப்படையிலும், தேவனுடைய ஏவுதலாலும் சொல்லப்பட்டு எழுதப் பெற்றவைகள் என்ற நம்பிக்கையில், இப்பகுதியை நம்பி ஏற்றுக்கொள்வதென்பது, கிறித்துவர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. எனவே, இக்காலத்திய நிகழ்வுகளைப்பற்றி எதிர்க் கேள்விகள் கேட்பதை, விவிலியத்தை ஏற்றுக் கொண்ட திருச்சபை தடை செய்துள்ளது.

மேற்கண்ட பிரிவுகளின் அடிப்படையில், தொன்மக் கதைப்பகுதி மரபுகளின் செவி வழிச் செய்திகளாக அறியப்பட்டுத் தொகுக்கப்பட்டவை.

அபிறகாமுக்குப் பிறகு, எபிறேய மக்கள் எகிப்து நாட்டிலிருந்து மீண்டது வரையிலான நிகழ்வுகளை (கி.மு. 2000- 1250) மோசே என்ற யூத சமயத் தலைவன் எழுதித் தொகுத்ததாக நம்பப்படுகின்றது. மோசே காலத்துக்குப்பிறகு (கி.மு. 1200) நடந்த நிகழ்வுகளை, பல்வேறு ஆசிரியர்கள், கடவுளின் ஏவுதலால் உந்தப் பட்டு எழுதியதாகவும் நம்பப்படுகின்றது. தோராஅல்லது விவிலியத்தின் சிறப்பான பகுதிகள்ஆதியாகமம் (Genesis), பயணம் (Exodus), இலெவியர் ஆகமம் (Leviticus), எண்கள் (Numbers), துணைஆகமம் (Deuteronomy) என்ற ஐந்து தலைப்புகளில் அடங்கும். இவைகள் அனைத்தும் மோசே என்பவனால் எழுதப்பட்டதாகக் கூறப்படு கின்றது.

தோரா என்ற எபிறேயச் சொல்லுக்கு, சட்டங்கள் (Laws) என்று பொது வாகப் பொருள் கூறப்பட்டாலும், ஆய்வாளர்கள், "அறிவுரைகள்" (Instrucions) என்றே பொருள் கூறுகின்றனர். இந்த அறிவுரைகள் யூத மக்களுக்கு மட்டுமின்றி உலக மக்களுக்கும், தேவனால் வழங்கப்பட்டதாக அறியப்படுகின்றது. (Thora Or Tora was the People way of life revealed by god not only to his but also for all the nations.)

Tora = Instruction.[1]

தோரா என்ற எபிறேயச் சொல்லுக்கான மூலச்சொல், அம்மொழிகளில் காணப்படவில்லை என்பர். ஆனால் யாரா (Yaaraah) என்ற சொல்லையே, தோரா என்ற சொல்லுக்கான

மூலச்சொல்லாகப் பலர் சுட்டுகின்றனர்.[2] யாரா என்ற சொல், இறைவனோடு தொடர்புடைய சொல் என்பது, இறைவன் சட்டங்களை மக்களுக்கு அளித்ததாலும், நீண்ட நெடிய தொகுப்புகளாக அவை உள்ளதாலும், யா -ஆரா என்ற சொற்களோடு யாரா இணைக்கப்படுகின்றது.

யா என்பது எபிறேய மக்களின் கடவுளுக்குரிய சொல் லாகும். ஆரா என்பது தொடர்ச்சி என்ற பொருளைத் தருவ தாகக் கூறுகின்றனர். தொடர்ந்து அருளப்பட்ட இறைவனின் அறிவுரைகள் "யாரா" எனப்பட்டன. யாரா = தொலைவில் எறிதல் (to throw) எனவும் பொருள் கூறுவர்.[3]

யா என்பான், தமிழரின் குறிஞ்சி நிலக்கடவுளே. அரா என்ற சொல், நீண்ட நெடிய என்ற பொருளால் தமிழில் அறியப்படும். அரா = நீண்ட உடலைக்கொண்ட பாம்பு. ஆரல் =- நீண்ட மீன்.

அராஅனைர் கயந்தலை - பரிபாடல்[4]

பூக்கதூஉம் இனவாளை, துண் ஆரல் - புறம்[5]

ஆரம் = நீண்டமாலை; நீண்ட அம்பு. ஆராய் தொடர்ச்சியான சிந்தனை.

ஆரால்= ஆரல்மீன். ஆராரோ ஆரிராரோ : நெடிய நீண்ட பாடலைக் குறிக்கும் சொற்கள்.

எனவே, யாரா என்ற எபிறேயச்சொல், தமிழ் மூலத்தைக் கொண்டதே என்க.

தோரா என்பது சட்டம் என்றவாறு சொல்லப்படுகின்றது. (Tora became to most general word in Judaism) தோராவின் சட்டங்கள், இறைவனால் கொடுக்கப்பட்ட தாகச் சொல்லப் பட்டாலும், அவை அதற்கு முன்பிருந்த சட்டங்களைப் பின் பற்றியும், வழக்காறுகளைக் கொண்டும் அறியப்படுகின்றன. தோராவுக்கு முன்பு அறியப்படும் சட்டத் தொகுப்புகள்.[6]

அமுராபியின் தொகுப்பு (Code of Hamnurabi - 1728 - 1686 B.C.)

கி.பி. 1902 ஆம்ஆண்டின் அகழ்வாய்வில் சுசா (Susa) நகரில் கண்டெடுக்கப்பட்டன.

சுமேரியச் சட்டங்கள் (Collection of Lipit - Ishtar) கி.பி. 1947 ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டன.

அசீரியச் சட்டங்கள் (The code of Bilalama of Eshnunna, 70 years earlier than Lipit - Ishtar) கி.பி. 1948 இல் கண்டெடுக்கப் பட்டன.

ஊர் நம்முவின் சட்டத் தொகுப்புகள் (Codes of Ur - namme) கி.மு. 2050; சுமேரியத் தொகுப்பு.

இத்தியர் சட்டங்கள் (Hittie law codes) கி.மு. 1600; இவை கி.பி. 1906 இல் துருக்கியில் போகாஸ்கோய் (Boghaskoy) நகரில் கண்டெடுக்கப்பட்டன.

புதிய பாபிலோனியச் சட்டங்கள் (Neo Babylonian law code) - இவை யூத சட்டங்களுக்கும் காலத்தால் பிந்தியவை.

தோராவின் சட்டத்தொகுப்பு கி.மு. 1250 ஆண்டுகளில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருது கின்றனர்.[7] மேற்சொல்லப்பட்ட ஒன்று முதல் ஐந்துவரையி லான எண்களைக் கொண்ட சட்டத்தொகுப்புகளின் சாயலும் நிழலும் யூதச் சட்டங்களில் படிந்துள்ளன என்பது ஆய்வா ளர்களின் முடிபுகளாகும். மேற்கண்ட சட்டங்களும் கூட மன்னர்களால் இயற்றப்பெற்றவை என்றே கூறப்பட் டுள்ளன.[8] தோராவைத் தவிர மற்ற இலக்கியங்கள் யாவும் மண்ணிற்குள் புதைந்திருந்த களிமண் தட்டுக்களாக, சென்ற நூற்றாண்டில் தான் கண்டெடுக்கப்பட்டன. தோராவின் பதிவுகள் பாதுகாக் கப்பட்டிருந்தன.

மேற்கண்ட அனைத்துச் சட்டத்தொகுப்புகளும், தமிழில் கி.மு. 1000 -700 ஆண்டுகளில் தொகுக்கப்பட்டதாகக் கருதப் படும் தொல்காப்பியம் என்ற தமிழ் நூலில் காணப்படுகின்றன. தொல்காப்பியம், தனது காலத்துக்கு முன்பு பல்லாயிரம் ஆண்டு களாக வழக்கிலிருந்த சட்டங்களைத் தொகுத்த நூலாகவே கருதப்படுவதால், மேற்கித்திய சட்டத் தொகுப்புகளுக்கும் காலத்தால் முந்தியவைகளாகத் தமிழ்ச் சட்டங்கள் இருந்ததாக அறியலாம். குறிப்பாக,

குடும்பம், ஆண் -பெண் உறவு, காதல் வாழ்க்கை, களவு நெறி, திருமணம், ஆகியவை பற்றிய செய்திகளும்[9]

பொதுக்கல்வி, தொழில் கல்வி, வேண்டிய கல்வி, ஓதல், கற்றல் பற்றிய அறிவு சார்ந்தவைகளும்,[10]

நகர, நாட்டுக் காவல் சட்டங்களும்,[11] (Civil and miltary)
ஆட்சியாளர்களுக்கான தூதர் பணிகளும்[12] (Ambassadors)
மன்னருக்கான சிறப்புப் பணிகளும்[13] (Commissimed Services)
எழுத்து சொல் முதலான மொழியியல் தொடர்பான செய்திகளும்[14]
குற்றம், ஒறுப்பு பற்றிய சட்டங்களும்[15]
கடவுள், உயிர்கள், ஒழுக்கப் போன்ற சமயம் சார்ந்த செய்திகளும்[16]
தொல்காப்பியத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

மேலைநாட்டுச் சட்டத் தொகுப்புக்களை ஆய்வு செய்யுங் கால், அவை தமிழ்ச் சட்டங்களை முன்னெடுத்தே இயற்றப் பெற்றுள்ளன என்பது புலனாகும். தமிழ்ச் சட்டங்களின் தாக்கங்கள், தோரா உள்ளிட்ட மேலைச் சட்டங்களில் எவ்வாறு நிழலாடுகின்றன என்ற தலைப்பில் விரிவான ஆய்வு களை மேற்கொள்ளும் அளவிற்கு இவ்விரு நாட்டுச் சட்டங் களிடையே ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக ஒரு வீட்டில் திருமண அகவையில் இரண்டு பெண்கள் இருந்தால், மூத்தவளை மணமுடித்துக் கொடுத்தபிறகே இளையவளுக்குத் திருமணம் செய்வித்தல் யூதர்களின் சட்டங்களில் காணப்படுகின்றது.[17] மணமகள், மணமகளுக்கு வாழ்க்கைப் பணம் கொடுத்தே மணமுடிக்க வேண்டும் என்ற சட்டமும் தோராவில் (மகர் எனப்படும்) காணப்படுகின்றது. பணம் கொடுக்க இயலாதவர்கள், மாமனார் வீட்டில் சில காலம் உடலுழைப்பைத் தரவேண்டு மென்பதும் விதியா யிருந்தது.[18]

இந்த நடைமுறை தமிழகத்திலிருந்ததை இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். சென்ற நூற்றாண்டின் இடைக் காலத் தில் கூட, மணமகன், மணமகள் வீட்டில் திருமணத்துக்கு முன்பு சென்று பணியாற்றிய நிகழ்வுகள் உண்டு. வரதட் சிணை என்பது ஆரியர் மரபு என்பதையும், யூத - தமிழர் விதிகளில் அக்கொடுமை எங்கும் காணப்படவில்லை என்க.

தோரா தொகுக்கப்பட்ட காலம்: தோராவில் அறியப் படும் சட்டங்களை மோசேயின் சட்டங்கள் என்றும் (Law of Moses) கூறுவாருண்டு. சட்டங்களோடு தோராவில் சொல்லப் பட்டுள்ள தொன்மக்கதைகள், பாடல்கள், வருங்காலமுரைத்தல், சொல் விளக்கங்கள், மரபுக் கதைகள், செவி வழிச் செய்திகள், மற்ற இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டவையென பல்வேறு

பொருளை அடக்கியவாறு அது காணப்படுகின்றது. இவை களையெல்லாம் ஒருவரே எழுதியிருக்க இயலாது என்பதும் தெளிவு. எபிறேய மக்களின் வாழ்க்கைமுறைகளையும், சமய நடைமுறைகளையும் பல்வேறு அறிஞர்கள் தத்தம் பார்வை யில் பதிவு செய்திருந்தனர். அவர்களில் நான்கு குழுவினர் பற்றிய செய்திகள் சிறப்பாகச் சொல்லப்பட்டன.[19]

யாகோவா மரபினர் (Yahwist Ttadition): இவர்களே எபிறேய இன வரலாற்றை முதலில் தொகுத்தவராவர். இவர் களுடைய பதிவுகளில் வரலாற்று நிகழ்வுகளைவிட நம்பிக் கையின் பாற்பட்ட செய்திகளே காணப்படுகின்றன.

எல் கடவுளர் மரபினர் (Elohist Traddition): உலகப் படைப்பு பற்றி இவர்கள் எவையும் கூறவில்லை. அபிறகாம் காலத்திலிருந்தே இவர்களுடைய குறிப்புகள் தொகுக்கப்பட் டுள்ளன.

ஆகம மரபினர் (Deuteronmic Tradition): இசுராயேலின் வடக்குப் பகுதி யில் அறியப்பட்டவர்கள்.

குருமார்களின் மரபு (Priestly Tradition): இலெவியர் என்பார் பதிவு செய்திருந்த நிகழ்வுகளின் தொகுப்பு.

இந்நான்கு மரபினரிடமும், எபிறேய மக்கள் பற்றிய சமயச் சிந்தனைகள், வரலாற்று நிகழ்வுகள், தொன்மக்கதைகள், வழக்காறுகள், அறிவுரைகள் ஆகியவை பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இருந்தன. இவை, ஒன்றுக்கொன்று பல இடங் களில் ஒற்றுமைப்பட்டும், முரண்பட்டும்,தனித்தனிச் செய்திகள் கொண்டவையுமாக இருந்தன. விவிலியம் அல்லது தோரா என்பது, இந்த நான்கு மரபினர் வைத்திருந்த பதிவுகளின்றும் தொகுக்கப்பட்டவைகளே. இவைகளின் மூல ஆசிரியர் மோசே என்பானே. இத்தொகுப்புகளை பெந்த தியூக் (Penta teuk) என்ற கிரேக்கச் சொல்லால் குறிப்பிடுகின்றனர்.[20]

பெந்த (Penta) என்பது, ஐந்து எனப்படும். ஐந்து என்பதே, பைந்து- பெந்து - பெந்த என்று கிரேக்கத்தில் திரிந்தது.

கையையும் கையின் ஐந்து விரல்களையும் கருத்தில்கொண்டு, கைந்து என்ற சொல்லே தொடக்கத்தில் இருந்ததாகப் பாவாணர் கருதுகிறார்.[21] கைந்து -ஐந்தாயிற் றென்பார்.

ஐந்து - அஞ்சு என்றும் சொல்லப்பட்டது. அஞ்சு - பஞ்சு - பஞ்ச என்று சமற் கிருதத்தில் திரிந்தது.

ஐந்து -பெந்த என்று கிரேக்கத்தில் திரிந்தது. பெந்த என்ற சொல்லே, Five என்று ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது.

கைந்து - ஐந்து - அஞ்சு - பஞ்ச - பெந்த - பைவ் என்றவாறு அறிக.

தூக்கு என்ற தமிழ்ச்சொல்லுக்கு, கட்டு (Bundle) அல்லது மூடை என்பது பொருளாகும்.

ஒரு அதிகாரம் அல்லது ஒரு பகுதியை விளக்கும் ஓலைச்சுவடிகளை ஒரு கூட்டாகக் கட்டிவைப்பர். இக்கட்டு,தூக்கு என்று தமிழில் சொல்லப்பட்டது. தூக்குத் தூக்கி = மூடைத் தூக்குபவன் (Bundle carrier) ஒரு இலக்கியத் தொகுப்பில், பல தூக்குகள் இருந்தன.

இந்தத் தூக்கு என்ற தமிழ்ச்சொல்லே, தியூக் (Deuk) என்று கிரேக்க மொழியில் திரிந்தது.

ஐந்து = Penta, தூக்கு = Deuk எனப்பட்டன.

ஐந்து தூக்கு = Pentadeuk எனப்பட்டது. ஐந்து தூக்குகள், தோராவின் முதல் ஐந்து அதிகாரங்களாகும்.

எண்களைக் கொத்துக் கொத்தாக எண்ணும் வழக்குத் தமிழர்களிடையே இருந்தது. ஒவ்வொரு பத்தையும் (Tens) ஒரு கொத்து என்பர்.[22] ஐந்துகொத்துகள் ஐம்பது ஆகும். கொத்து என்ற தமிழ்ச்சொல், கொத்தே (Kothe) என்று கிரேக்கத்தில் திரிந்தது. யூத சமயத்தில் ஐம்பதுநாள் கணக்கீட்டில் ஒருவிழா (Passover) நடை பெற்றது. இறுதி நாளான ஐம்பதாம் நாளை, ஐந்தாம் கொத்து நாள் என்று அழைத்தனர். ஐந்து கொத்து, பெந்தே கொத்தே எனப்பட்டது. பெந்தே கொஸ்தே என்ற சொற்களின் மூலம் தமிழில் உள்ளதைக் காண்க.

Pente Coste: The fiftieth day.[23]

தோரா என்ற நூலும் அதற்குப் பின்னர் எழுதப்பட்ட நூல்களும், தாவீது மன்னன் காலத்தில்,மேற்சொல்லப்பட்ட நான்கு மரபினரிடமிருந்தும் பெறப்பட்டது. அவைகளை அறிஞர் குழுவொன்று தொகுத்து வெளியிட்டது. அத்தொகுப்பில் பல செய்திகள் விடுவிக்கப்பட்டன.

நான்கு மரபுச் செய்திகளில் மூன்று மரபு ஒருமித்துச் சொன்ன செய்திகள் ஏற்கப்பட்டன.

ஒரு கடவுள் கொள்கைக்குப் புறம்பான செய்திகள் நீக்கப்பட்டன.

யூத சமயம் சாராத செய்திகள் விடுவிக்கப்பட்டன.

நம்பத்தகாத நிகழ்வுகளும், தொன்மக் கதைகளும் நீக்கப் பட்டன.

அரசியல், பொருளியல், வணிகம், வெளிநாட்டுத் தொடர் புகள் போன்ற செய்திகள், சமயம் சாராதவை எனக் கருதப் பட்டு, அவையெல்லாம் விடுவிக்கப்பட்டன.

இவ்வாறு நீக்கப்பட்ட பகுதிகள், மூன்றில் இரண்டு பங்கு இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனா லேயே, விவிலியத்தில் வரலாற்றுத் தொடர்பான செய்திகள் குறைந்து காணப்படுகின்றன. நீக்கப்பட்ட செய்திகளைக் கொண்டிருந்த பதிவுகளை எவரும் பயன்படுத்தக்கூடாது எனவும் தடை விதிக்கப்பட்டது. அப்பதிவுகள் எகிப்திலுள்ள அலெக்சாந்திரியா நூல்நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. கி.பி. 415 ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்ட விலைமதிப்பற்ற நூல்கள் இருந்த அலெக் நாந்திரிய நூல் நிலையத்தினுள் புகுந்த கிறித்துவ சமய வன் முறையாளர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.[24] வரலாற் றுக் காலத்துக்கு முற்பட்ட ஆவணங்கள் கூட அழிக்கப் பட்டன. இந்நிகழ்வுகளுக்குப் பின்னணியில் இருந்த துறவி கிரில் (Kyril) என்பார், அந்நூல் நிலைய நூல்கள் யாவும் சாத்தானால் எழுதப்பட்டவைகள் என்று சொன்னார். அக் காலத்திய வானியல் மற்றும் கணக்கியல் அறிஞரான இப்பாட் டியா (Hypatiah) என்ற பெண்மணியை உயிரோடு தீ வைத்துக் கொளுத்தினர்.[25] இவையாவும் சமயத்தின் பேரால் நிகழ்த்தப் பட்ட வன்முறைகளாகும். இந்த அழிவினால், விவிலிய நூலில் விடுவிக்கப்பட்ட பல செய்திகளும் அழிந்துபோயின. தமிழ் நாட்டுக்கும் இசுராயேல் நாட்டுக்கும் இருந்த தொடர்புகள், குறிப்பாகச் சாலமன் மன்னனின் ஆவணங்கள் யாவும், அழிக் கப்பட்டன.

இது போன்றதொரு நிகழ்வு தமிழ்நாட்டிலும் அறியப்படு கின்றது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் அறியப்படும் இடைக் காலச் சோழர்கள், மதுரையை வென்று, அந்நகரைத் தீக்கிரை யாக்கினர். எண்ணற்ற இலக்கியச் சுவடிகள் அப்போது அழிந்து போயின. இதற்குப் பகை நீக்கம் செய்ய கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில், பாண்டியர்கள் சோழத் தலைநகரை

அழித்து தீயிட்டுக் கொளுத்தி, அங்கு ஏர்பூட்டி உழுதனர்.[26] இக்கால அளவுகளில் தான் தமிழகத்தின் இலக்கியங்கள் பலவும் அழிந்துபோயின. இந்நிகழ்வுகளுக்குத்தப்பிப் பிழைத்த ஓலைச் சுவடிகளையும், ஆற்றிலிடுமாறு ஆரியப் பிராமணர்கள் மக்களைத் தூண்டினர். எஞ்சி நின்ற சிலவற்றையே தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் ஒன்று சேர்த்துப் பதிப்பித்தார் என்க.

தோரா கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டது: தோரா என்ற ஐந்து அதிகாரங்களும், அதற்குப் பின் எழுதப்பட்ட செய்திகளும் கி.மு.250 ஆம் ஆண்டில், கிரேக்க மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டன. ஃபிலெடல் புஸ் தாலமி என்ற யூத சமய அறிஞர், எகிப்திலிருந்த அலெக்சாந்திரியா நூல் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த யூத சமய நூலை, கிரேக்கத்தில் மொழி பெயர்க்க விரும்பினார். மூல எபிறேய மொழியினின்றும் முதன்முறையாக கிரேக்கத்திற்கு மாற்றப்பட்டது.

யூத மக்களின் 12 மரபினரில், மரபுக்கு அறுவராக, 72 பேரை எகிப்துக்கு அனுப்பி வைக்குமாறு, எருசலேம் நகரத்து யூத சமய குருவைக் கேட்டுக்கொண்டார். அதன்படி,அவர்கள் எகிப்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 72 நாளில் மொழி மாற்றப் பணியை அக்குழுவினர் செய்து முடித்தனர்.[27] அம் மொழி மாற்ற நூலுக்கு Septuagint என்று கிரேக்கத்தில் பெயரிடப்பட்டது. Sept என்ற சொல்லுக்கு ஏழு என்றும், எழுபது என்றும் பொருளாகும். எழுபது பேர், எழுபது நாட்களில் இப்பணியை முடித்ததால் இவ்வாறு என்று சொல்லப்பட்டது. (செப்த் என்பது சாத்து என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. விளக்கம் எண்கள் தலைப்பில் சொல்லப்பட்டுள்ளது).

எபிறேய மூலத்தினின்றும் செய்யப்பட்ட இம்மொழி முதல் மாற்றம், பல இடங்களில் சரியாக அமையவில்லை யென்றும், முரண்பாடானபொருள் உணரப்பட்டுள்ளதென்றும், சில இடங்களில் மூலத்துக்கு மாறான செய்திகள் காணப் படுகின்றன என்றும், தற்கால ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இத்தகைய தவறான மொழி மாற்றத்தால் உருவான கிரேக்க மொழி பெயர்ப்பை மூலமாகக் கொண்டே இலத்தீனில் மொழி பெயர்த்தனர். இம்மொழி பெயர்ப்பிலும் தவறுகள் நேர்ந்தன. ஆங்கிலம் உள்ளிட்ட இன்றைய ஐரோப்பிய மொழிகளில்

பெயர்ப்பிலும் அறியப்படும்விவிலிய மொழி பெயர்ப்பு நூல்கள் இலத்தீன் மொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்டவை களே. தமிழில் அறியப்படும் விவிலியம் ஆங்கிலத்தி லிருந்து மொழி மாற்றம் செய்யப்பட்டது. மூலத்தின் எபிறேய மொழி விவிலியத்துக்கும் தமிழாக்க விவிலியத்துக்கும் இடையே வேறு பாடுகள் நிறைய உள்ளன வென்பதை, தமிழ்நாட்டு விவிலிய அறிஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். இதன் அடிப்படையி லேயே, இந்த ஆய்வுக் கட்டுரை, எபிறேய மொழி மூலத்தைப் பற்றி நின்று எழுதப்பட்டுள்ளது.

எபிறேய மூலத்தில் ஜ, ஜா, ஜெ, ஜே போன்ற ஒலிப்பு களைக்கொண்ட சொற்களோ, பெயர்களே இல்லை. இதற் கான எழுத்தும் எபிறேய மொழியில் இல்லை. ஆனால் மொழி மாற்றம் செய்த ஐரோப்பியர்கள், எபிறேய மொழியில் யகரத் தில் தொடங்கும் சொற்களையும் பெயர்களையும் ஜ (து) ஒலிப் பில் மாற்றி விட்டனர். தமிழைப் போலவே, யகரக் குறில், எபி றேய மொழியிலும் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. யகர நெடிலே தமிழைப்போலவே சொல்லுக்கு முதலாய்ப் பயன் படுத்தப்பட்டுள்ளது என்பதை, எபிறேய மூலத்தை ஆய்வு செய்யுங்கால் அறிந்துகொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக யா என்ற நெடிலில் தொடங்கும் பெயர்களாவன:

யாசன்யா - Yaasamyah[28] - Jazmya
யாவால் - Yaabal[29] - Jabal
யாநோக்கு - Yaabbok[30] - Jabal
யாவின் - Yaabin[31]- Jabbok
யாக்கூன் - Yaakoon[32] - Jabin
யா எல் - Yaa el[33] - Jael
யா யீர் -34 - Yaair[34] - Jair
யா பெத் - Yaa[35] - Japeth
யாவன் - Yaavan[36] - Javan. *(தமிழில் தவறாக அறியப்பட்ட யவனர்)*

இனி இ என்ற எழுத்தில் தொடங்கும் சில சொற்களைக் காணலாம்.

இயாசோன் - Iyason[37] - Jason
இப்படா - Iypatah[38] - Jephtah
இரேமியா - Iramia[39] - Jeremiah

இயோவு - Iyyob[40] - Job

எ என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களாவன:

ஏகு - Yehu[41] - Jehu
எரிக்கோ - Yeniko[42] - Jericho
எருசலேம் - Yerusale[43]- Jerusalem
ஏசுவா - Yesua[44] - Jesus

ஓ என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களாவன:

ஓவாப் - Yoab[45]- Joab
ஓயல் - Yoel[46]- Joel
ஓணா - Yonaa[47] -Jonnah
ஓர்தான் - Yordaan[48] - Jordan
ஒ செப்பு - Yosep[49] - Joseph

என்றவாறு மென்மேலும் விரியும்.

எபிறேய மக்களின் கடவுளான யாகோ ஆ (Yahoah) என்ற சொல்லும் கூட யா என்ற எழுத்தில் தொடங்கியதே. இதனை Jehoah என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர்.

எடுத்துக்காட்டுகள்:

ஆங்கில மொழி பெயர்ப்பின் வழியில் தமிழில் திரிந்த சொற்கள்:

ஆயா (எபி.) - ஈவ் (ஆங்) - ஏவாள் (தமிழ்)
இடன் (எபி.) - ஈடன் (ஆங்.,)- ஏதேன் (தமிழ்)
சென்னாறு (எபி)- ஷினார் (ஆங்) - சினேயோர் (தமிழ்)
மோசே (எபி)- மோசஸ் (ஆங்) - மோயீசன் (தமிழ்)
மறி (எபி) - மேரி (ஆங்.) - மரி (தமிழ்)
ஏசுவா அல்லாது ஈசா (எபி.) - ஜீசஸ் (ஆங்.) - இயேசு (தமிழ்)

எடுத்துக்காட்டாக, ஆயா என்ற தனித்தமிழ்ச் சொல்லே எபிறேய மொழியில் காணப்படுகின்றது. அதனை ஈவ் என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, எப்பொருளும் தராத ஏவாள் என்ற சொல்லால் தமிழில் அழைக்கின்றனர்.

மொழி மாற்றங்கள், அடிப்படையிலேயே அமைந்துள்ள பொருளையும் மாற்றி விடுகின்றன என்பதற்கு விவிலியம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

விவிலியம் என்ற தமிழ்ச்சொல்லுக்கு எந்தப் பொருளும் இல்லை.

பைப்புல்லி யோன் (Bibilyon) என்ற கிரேக்கச் சொல்,[50] புல்லினத்தைச் சார்ந்த கோரை (reeds) வகையைக் குறித்ததாகும். எகிப்தில் விளைந்த கோரைகளைக் கொண்டே, தாள் (Papyrus) வகைகள் செய்யப்பட்டன.

இப்புற்கோரைகளைக் கிரேக்கர்கள், ஃபோனீசியத் துறை முகம் ஒன்றிற்குக் கப்பலேற்றிக் கொண்டுவந்தனர். அப்புல்லின் பெயரால், பை -புல் -ஓஸ் (By -ble - os) என்று அத்துறைமுகம் அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் அது Byblos எனப்பட்டது.

கோரைகளின் தாளைக்கொண்டு உருவாக்கப்பட்ட நூலும் பைப்புல் (Bible) என்றே சொல்லப்பட்டது. Bible என்ற கிரேக்கச் சொல்லுக்கு, பல பக்கங்களைக் கொண்ட நூல் என்பதே பொருளாகும். முதல்நூல் யூச சமய நூலாகக் கருதப்பட்ட தால், கிரேக்கர்கள் அதனை Bible என்றனர்.

தமிழில் கோரையினம் புல்லினமாகவே கருதப்படும். பச்சைக் கோரையின் உள்ளே காணப்படும் சதைப் பகுதி களைப் பிரித்தெடுத்துக் காய்ச்சி, அதனின்றும் உருவாக்கப் பட்டதே பாப்பிரஸ் தாளாகும். பை என்பதற்குத் தமிழில் பசுமை அல்லது பச்சை என்றே பொருளாகும்.

பைப்புல் = பச்சைப்புல் அல்லது பசும்புல். பைங்கிளி, பைந்தமிழ், பைந்தளிர் என்ற சொற்களை ஒப்பு நோக்குக.

பைப்புல்லினின்றும் உருவாக்கப்பட்ட நூலையும் பைப் புல் என்ற தமிழ்ச் சொல்லாலேயே கிரேக்கர்கள் அழைத்தனர். அதனை பைபில் என்று ஆங்கிலேயர் சொல்ல, பைபிளை விவிலியம் என்று தமிழில் மொழிபெயர்த்தனர். பைப்புல்லி யோன் (Bibilyon) என்று நூலுக்கான கிரேக்கச் சொல்லின் ஒலி மாற்றமே விவிலியம் என்ற பொருளற்ற தமிழ்ச் சொல் என்க.

பாப்பிரஸ் என்பது கிரேக்கச்சொல்லாகும். இதுவும் பை +பிரம்பு = பைப்பிரப்பு அல்லது பைப்பிரப்பு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. பிரம்பு = கோரை. பிரப்பங் கட்டை, பிரப்பங்கழி என்ற வழக்குச்சொற்களை நோக்குக.

எகிப்திய மொழியில் கோரையை, கொம்பு என்ற தமிழ்ச் சொல்லாலேயே[51] அழைத்தனர். இச்சொல் எபிறேயமொழியில் கோம்ம (Gome) எனத் திரிந்துள்ளது.[52]

கொம்பு: நீண்ட கழி அல்லது மரத்தின் கிளை.

கொம்மை என்ற தமிழ்ச்சொல்லும், திரண்டு அடர்ந்து வளர்ந்திருக்கும் கோரைகளைக் குறித்த தமிழ்ச்சொல்லும், திரண்டு அடர்ந்து வளர்ந்திருக்கும் கோரைகளைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும்.

கன் - கொன் - கொல்- கோல் = நீண்ட கழி.

கன் - கொன் - கொம்- கொம்பு = நீண்ட கிளை.

கன் -கொன் -கொம் - கொம்மை = திரட்சி.

கொழுங்கொம்பு கொழுதி மென்தளிர் நீர்தனை மேவர - மதுரைக் காஞ்சி.[53]

கொம்மைப்புரேந்தைக் குடுமி வெண்தொட்டு[54] - குறுந்தொகை.

எடுத்துக்காட்டு: கடவுள் மாந்தனைப் படைத்தது பற்றிய விவிலியச் செய்தியில் காணப்படும் நிகழ்வு ஓர் உருவகமேயன்றி, உண்மையன்று. "மண்ணிலிருந்து மாந்தனை உருவாக்கி, அவனது நாசியில் உயிரை ஊதினார். மாந்தனும் ஓர் உயிரானான்" எபிறேய மூலத்திலிருந்து அண்மையில் மொழி பெயர்க்கப்பட்ட் ஆங்கில வரிகளாவன:

The Lord God formed man out of the clayof the ground and blew into his nostrils "the breath of life", and so man became a living being[54]

தமிழகத்துக்கு வந்த ஆங்கிலேயர்களுக்கு, விவிலியத்தை மொழி பெயர்க்க பிராமணர்களே உதவியதாகக் கூறப்படுகின்றது. அவர்கள் மொழிபெயர்த்துத் தந்தவிவிலியத்தில் Breath of life என்பதை, ஜீவாத்மா என்று குறிப்பிட்டுள்ளனர். ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா போன்ற சொற்கள், இடைக்கால ஆரியப் பிராமணர்கள் தமிழ்ச் சமயத்தில் திணித்த சொற்களாகும். அதனையே விவிலியத்திலும் திணித்து விட்டனர். ஆத்மாவைப் பற்றி யூதர்களின் சமயநூலில் எந்தக் குறிப்பும் இல்லை. எபிறேய மொழியில் "உயிர்" என்ற சொல்லே காணப்படுகிறது.

எடுத்துக்காட்டு: எல் என்ற தமிழ்ச் சொல்லே, எபிறேய மொழியிலும் காணப்பட்டு, அம்மக்களின் கடவுளாகச் சொல்லப்பட்டுள்ளது. தமிழில் இச்சொல்லின் பொருளே மாற்றப் பட்டுள்ளது.

இசுர-எல் என்ற சொற்கள், இஸ்ரவேல் என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எல் என்பதும் வேல் என்பதும் தமிழ்ச்

சொற்களே. பொருள் மாறுபாடுகளை மொழிபெயர்ப்பாளர்கள் அறியவில்லை என்பதையே மேற்கண்ட சொல் எடுத்துக் காட்டுகிறது.

உரைநடையில் உள்ள வேறுபாடுகள்: தமிழில் உரை நடையில்லை எனக்கூறுவர். அதுவும் தவறான சிந்தனையே. மக்கள் பேசும் வழக்கனைத்தும் உரைநடையே. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என எளிய இலக்கண அமைவு களைக் கொண்டது தமிழ்ச்சொற்றொடர். இத்துடன் இணையும் பல சொற்கள், பல்வேறு பெயர்களால் இலக்கணப் பார்வையில் சொல்லப்பட்டுள்ளன.

கோலால் அடித்தான், நாய் செத்துப்போயிற்று. - இது எளிய தமிழ்நடை. இந்நடையை எபிறேய மொழி,

அடித்தான் கோலால், செத்துப் போயிற்று நாய், என்றவாறு உரைக்கின்றது.

வினையை முன்னிறுத்தும் மரபு எபிறேய மொழியில் காணப்படுகின்றது.

இது தமிழுக்கும் புதியதன்று. தமிழில் இவ்வகையான சொற்றொடர்கள் ஏராள மாக உள்ளன.

"கண்ட டெனன் கற்பினுக்கு அணியைக்கண்களால்"

என்ற கம்பரின் கவிநயத்தை ஒப்பு நோக்குக.

விவிலியத்திலிருந்து ஒரு எடுத்துக்காட்டு:

"God saw how good the light was. God then seperated the light from the darkness. God called the light "day"and the darkness He called "night" Thus evening came and morning follwed -the first day"[56]

படைப்புப் பற்றிய இச்செய்தியின் தமிழாக்கம்:

"கடவுள் ஒளியை நல்லதென்று கண்டார். பிறகு கடவுள் ஒளியையும் இருளையும் பிரித்தார். ஒளியைப் "பகல்" என்றும், இருளை "இரவு" என்றும் அழைத்தார்.

மாலை கடந்து காலை தொடர்ந்தது - முதல்நாள் முடிந்தது.

மேற்கண்ட செய்தி எபிறேய மொழியில் எழுதப்பட்டுள்ள வாறு:

"காண்கிறார் கடவுள் ஒளியை: கண்டு அது நல்லதென்று, பிரிக்கிறார் கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாக; அழைக்கிறார் ஒளியைப் பகல் என்றும், இருளை இரவென்றும் தனித்தனியாக; சென்றது மாலை, தொடர்ந்தது காலை - முடிந்தது முதல்நாள்"

ஆங்கில தமிழ் மொழி பெயர்ப்புகளுக்கும், எபிறேய மூலத்துக்கும் உள்ள வினைச்சொல் வேறுபாட்டை நோக்குக.

கண்டார் - காண்கிறார்.

பிரித்தார்- பிரிக்கிறார்.

Called - அழைத்தார் - அழைக்கிறார்.

இதற்கு விவிலிய ஆய்வாளர்கள் அளிக்கும் விளக்கம் யாதெனில், நடந்து முடிந்தவை கடவுளுக்கென்று எதுவுமில்லையென்றும், அவர் காலங்களைக் கடந்தவர் என்றும் பொருள் கூறப்படுகின்றது.

இந்த வழக்கு தமிழிலும் கையாளப்படுவதைக் காணலாம்.

"தமிழே முதன்மொழி என்று பாவாணர் கூறுகிறார்."

"தமிழுணர்வு கொள்ளுமாறு தமிழர்களைப் பாவாணர் அழைக்கிறார்."

"தமிழை பிறமொழிகளுக்கு அடிமையாக்க முயல்பவர்களைக் கடுமையாகச் சாடுகிறார்"

பாவாணர் இறந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டாலும், இன்றும் நிகழ்காலத்திலேயே அவருடைய செய்திகள் சொல்லப்படுகின்றன. உண்மையென அறியப்பட்ட எவையும் (கடவுள் சொன்னது உள்பட) நிகழ்காலத்தில் சொல்வதும் தமிழ் மரபே. எபிறேயம் தமிழ் வழக்கையே கொண்டுள்ளது என்க.

எதிர்காலத்தைக் கடந்த காலத்தில் சொல்லும் மரபும் எபிறேயமொழியில் காணப்படுகின்றது. இயேசுவின் வருகையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இறை வாக்கினர் உரைத்ததாக, கிறித்துவர்கள் நம்புகின்றனர். பாடல் (Psalms) பகுதியில் ஒரு முன்னறிவிப்பு:[57]

"Indeed many days surrounded me
a pach of evildoers closes in upon me;

They have pierced my hands and feet." - Psalms, 22:17

தமிழ்மொழிபெயர்ப்பு:

"உண்மையில் பல நாய்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன

கொடியவர்களின் கூட்டம் என்னைச் சுற்றி வளைத்தது;

எனது கைகளிலும் கால்களிலும் (ஆணிகளால்) துளையிட்டனர்"

எபிறேய மூலத்தில்:

சூழ்ந்து கொண்டன உண்மையில் என்னைப் பல நாய்கள்

சுற்றி வளைத்தது கொடியவர்களின் கூட்டம் என்னை;

துளையிட்டனர் எனது கைகளிலும் கால்களிலும்

இந்தக் குறிப்பு எதிர்காலத்தில் நடக்கவிருந்த இயேசுவின் குறுக்கப் பாடுகள் குறித்தும், கொடியவர்கள் இயேசுவின் கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அறையப் போவது குறித்தும் முன்னறிவிக்கப்பட்ட செய்தியாகும். ஆனால் அவை இறந்த காலத்தில் சொல்லப்பட்டுள்ளன.

செத்தான் தேவனுடைய ஆணையை மீறியவன் -இறந்தகாலம்.

தேவனுடைய ஆணையை மீறியவன் சாகவேசாவான் - எதிர்காலம்.

இறந்தகாலத்தில் சொல்லப்பட்டநிகழ்வு, மொழி மாற்றத்தில் எதிர்காலமாகச் சொல்லப் பட்டுள்ளது.

தமிழில் இதற்கான சில எடுத்துக்காட்டுகள்:

உப்பைத் தின்றவன் தண்ணீர்குடித்தான்- குடிப்பான்.

தீயைத் தொட்டவன் சூடு படுவான்- பட்டான்

வாளை எடுத்தவன் வாளாலேயே செத்தான்- சாவான்.

காலம் மாற்றிச் சொல்லப்படும் இந்த சொற்றொடர்களை, காலவழுவமைதி என்று தமிழ் இலக்கணம் கூறுகிறது. இதே வழக்கு எபிறேய மொழியிலும் காணப்படுவதை நோக்குக.

12. செமிட்டிக் இலக்கியங்களில் தமிழ்ச் சூழல்கள்

தமிழ் மொழிக்கும், மேற்கித்திய செமிட்டிக் மொழியினத் துக்குமிடையே உள்ள உறவுகள், மொழி-வரலாறு- வழக்குகள் மற்றும் வழக்காறுகள் - வானியல்- எண்ணியல் - சமயவியல் ஆகிய தலைப்புகளில் வெளிப்படுகின்றன. இத்தலைப்புகளை ஆய்வு செய்யுங்களால், தமிழ்மொழிக்கும் செமிட்டிக் மொழி யினத்துக்கும் உள்ள உறவுகளும் தொடர்புகளும் வெளிப்படு வனவாய் அமையும். இத்தலைப்புகளில் ஏற்கனவே இவ்விரு மொழிகள் பேசிய இனங்களுக்கிடையே காணப்பட்ட வரலாற்றுத் தொடர்புகள் விளக்கப்பட்டுள்ளன.

ஒரு மொழியே உலகில் முதன்முதலில் தோன்றியதாகவும், அம்மொழி யினின்றே இன்றைய மொழிகள் யாவும் கிளைத் திருக்க வேண்டும் என தற்காலத்திலய தலைசிறந்த மொழி யியல் அறிஞர் நோவாம்ஸ்கி கூறுகிறார். அந்த ஒரு மொழி எதுவென்பதில் தான் மொழியியல் அறிஞர்கள் முரண்படு கின்றனர். இந்த"ஒரே மொழி" என்ற கொள்கை, எபிறேய இலக் கியமான விவிலியத்தில் தெளிவுபடுத்தப் பட்டிருந்தாலும், அந்த ஒரு மொழி எதுவென அடையாளம் காட்டப்பட வில்லை. அந்த ஒரு மொழியைக் காணும் முயற்சி வெற்றி பெற வேண்டுமானால், தொன்மைக் காலத்தில், அதாவது வரலாற் றுக் காலத்துக்குமுற்பட்ட, இலக்கியங்கள் வடிவில் பதிவு செய் யப்பட்டிருந்த மொழிகளை ஆய்வு செய்ய வேண்டியது அடிப் படையான ஒன்று.

செமிட்டிக் மொழியினம் என்ற குடும்பத்தில், கில்காமேசு (Gilhmesh) என்ற மெசபத்தோமிய இலக்கியமும், எபிறேய மொழி இலக்கியமான தோராவும் முதன்மையாக உள்ளன. இவ்விரு இலக்கியங்களும் செமிட்டிக் இன மொழிகளில் அடங்கியவையென ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர். இவையின்றி பல்வேறு தகவல்களை, கனானிய மற்றும்

இத்தியர் (Canaanite and Hittite) குறிப்புகளும் வெளிப்படுத்து கின்றன. செமிட்டிக் மொழியினத்தைச் சாராத சுமேரியக் குறிப்புகளும், பழங்காலத்தில் மொழிகள் பற்றி அறிந்து கொள்ள ஏராளமான குறிப்புகளை அளித்துள்ளன. சிறுப்பாக் கத்தை ஆண்டிருந்த மன்னனாகக் கருதப்படும் சேய் சூத்திரன் என்ற சுமேரிய மன்னனைப் பற்றிய குறிப்புகளும் உதவுகின்றன. அக்காடியம் என்ற பாபிலோனிய மொழி, மெசபத்தோமியச் செமிட்டிக் மொழியினரும் சுமேரியரும் கலந்து பிறந்ததே என ஆய்வாளர்கள் கருதுவதால், சுமேரிய மொழியையும் இந்த ஆய்வில் இணைத்துக் கொள்வதில் தவறேதும் இல்லை எனலாம்.

கில்காமேசு·(Gilgames): உலக இலக்கிய வரிசையில், மிகவும் பழமையானதாக அறியப்படும் செமிட்டிக் இலக்கியம் இதுதான்,[1] இதுவரையிலும் அறியப்பட்ட அல்லது அகழ்வாய் வுகளில் கண்டெடுக்கப்பட்ட இலக்கியங்களில் மிகவும் தொன்மையானது இவ்விலக்கியமே. இதன் காலம் கி.மு. 4000 ஆண்டுகள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கில்காமேசு என்ற சொல்லுக்கான பொருளை இதுவரை எவரும் விளக்கிக் கூறவில்லை. ஏறக்குறைய கவிதை வடிவில் காணப்படும் இவ் விலக்கியத்தின் சாயல்களும் நிழல்களும் இதற்குப்பின் எழுதப் பட்ட செமிட்டிக் மொழியின இலக்கியங்களிலும் காணப்படு கின்றன. Gil -ga-mesh என்ற பெயர், இடமிருந்து வலமாகப் படிக்கப்பட்டதா அல்லது வலமிருந்து இடமாகப் படிக்கப் பட்டதா என்பதில் முரண்பாடுகள் உள்ளன. இதே சொல், இதே குறியீடுகளுடன் சிந்துவெளியில் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.[2] மேற்கே, கில்காமேசு என்று படிக்கப்பட்டதால், சிந்துவெளிச் சொல்லையும் ஆய்வா ளர்கள் அவ்வாறே படித்துள்ளனர். இச்சொல்லுக்கான சரியான பொருளை ஆய்வாளர்களால் அறிய இயலவில்லையென் றாலும், இச்சொல் சிந்துவெளியிலும் காணப்படுவதால், இவ்விரு நாட்டு மக்களும் அறிந்திருந்த மன்னன் அல்லது இவ்விரு நாடுகளுக்கும் இடையே தொடர்பு கொண்டிருந்த மன்னனாக இவனைக் கருதலாம். கில்காமேசு இலக்கியம், சிந்துவெளிக் காலத்துக்குப்பிறகு அல்லது சிந்துவெளியில் அறியப்பட்டிருந்த இலக்கியத்துக்குப் பிறகு எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவும் கருத இடமுண்டு. சிந்துவெளியில் இலக்கிய அளவில் இதுவரையிலும் எந்தத் தொகுப்பும் கண்டெடுக் கப்படவில்லை. ஆனால் இவ்விரு நாகரிகங்களில், சிந்து

வெளியே முதன்மை நாகரிகம் என்பதால், கில்காமேசு என்ற சொல் முதன் முதலில் சிந்துவெளியில்தான் அறியப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருதலாம்.

கில்காமேசு என்ற சொல்லை, வலமிருந்து இடமாகப் படிக்கும்போது Shema என்று வருவதால், அக்காடியக் கடவுளான Shemesh என்ற பெயரோடு இச்சொல் தொடர்புபடுவதைக் காணமுடிகின்றது. இதே சொல் எபிறேயம் உள்ளிட்ட பிற செமிட்டிக் மொழியிலும் அறியப்பட்டுள்ளது. இது கதிரவனைக் குறித்த சொல்லாகும். செம் - செம்மை என்ற தமிழ்ச்சொல், சிவப்பு நிறத்தையே குறிப்பதாகும். Shemesh என்ற செமிட்டிக் சொல், செம்மை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்பதில் கருத்து வேறுபாடில்லை.

கில்காமேசு, மூன்றில் இரண்டு பங்கு கடவுள் தன்மையும் (Divine nature), ஒரு பங்கு மாந்தத் தன்மையும் (human nature) கொண்டிருந்ததாக அவ்விலக்கியம் கூறுகிறது.[3] இவன் பாபிலோனிய நாட்டின் ஊருக் (Uruk) என்ற நகரை ஆண்டு வந்த மன்னன் என அறியப்படுகின்றான்.[4] ஊர் என்ற பெயரில் ஏற்கனவே ஒரு நகரம் அங்கு அறியப்பட்டிருந்தாலும், ஊர் நகரினும் மூப்புடைய நகரமாக ஊருக் கருதப்படுகின்றது. இச்சொல்லின் முன்னொட்டுச் சொல்லாக ஊர் என்ற சொல் உள்ளதால், இச்சொல்லும் தமிழ்ச்சொல்லே என்க. உக் (Uk) என்ற பின்னொட்டுச் சொல்லுக்கான பொருள் விளக்கப்படவில்லை. ஊர் என்ற சொல்லே எம்மொழிச் சொல் என அறியாத மேலை நாட்டு ஆய்வாளர்களால், ஊருக் என்ற சொல்லுக்கான பொருளும் அறியப்படவில்லையென்பது இயல்பானதே. ருக (உக்) என்ற பின்னொட்டுச் சொல், 20 அகம் என்ற தமிழ்ச் சொல்லாக அமைந்து, ஊரகம் என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும். ஒரு தமிழ்ப் பெயரைக் கொண்ட ஓரூரின் மன்னன், தமிழோடு தொடர்பு கொண்டவனாகவே இருந்திருக்க வேண்டும்.

மெசபத்தோமியக் கடவுள்: மெசபத்தோமியச் சமயத்தில் இருபெயர்கள், கடவுளைக் குறித்துச்சொல்லப்பட்டுள்ளன. உலக படைப்புக் கதையில் யா (Yaa) என்ற கடவுளும், கில்காமேசு கதையில் ஆருரு (Ar-uru) என்ற கடவுளும் சொல்லப்பட்டுள்ளனர்.[6] இவ்விரு கடவுளரும் ஒருவரா அல்லது வெவ்வேறானவர்களா என்பது தெரியவில்லை. ஆனாலும் யா- ஆருரு

ஆகிய இரண்டு சொற்களும் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. ஆர் உரு என்ற தமிழ்ச்சொல்லுக்கு, உயர்ந்த உருவம் கொண்டவன் என்றவாறு பொருள் அறியலாம். கடவுளை, உரு (uru) என்ற சொல் லால், உயர்ந்த உருவம் கொண்டவன் என்றவாறு பொருள் அறியலாம். கடவுளை, (Rua) என்றசொல்லால் அழைத்ததற்கானச் சான்றுகள் வேறு இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. உரு என்ற தமிழ்ச் சொல், எபிறேய மொழியில் ருவ (Rua) என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட உரு-ருவ ஆகிய சொற்கள் தரும்பின்னணியில், கடவுள் உருவமற்றவன் என்ற பொருளே அவ்விரு மொழிகளிலும் விஞ்சி நிற்கின் றன. ருவ என்ற எபிறேயச் சொல்லுக்கு ஈடான ஆங்கிலச் சொல் அம்மொழியில் இல்லையென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆவி, காற்று, நிழல் போன்ற சொற்கள், ஓரளவிற்கு ருவ என்ற எபிறேயச் சொல்லுக்கானப் பொருளைத் தந்தாலும், முழுமையான பொருளன்று என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும்.

கில்காமேசு தொன்மக்கதை: பாபிலோன் நகரம், கி.பி. *1899 -1917* ஆண்டுகளில், ஆய்வாளர் கோல்டுவீ (Koldewey) என்பார் தலைமையில் அகழ்வாய்வு செய்யப்பட்டது. அப்போது கண்டெடுக்கப்பட்ட பலவற்றில், கில்காமேசின் கதையை விளக்கும் *12* களிமண் தட்டுகள்ள (Clay plates) வெளிப்பட்டன.[7] அவை பன்னிரெண்டு தட்டுகளில் காணப்பட்டன. அத்தட்டுகளை வரிசைப்படுத்தி ஒரு கதையைக் கண்டறிந்தனர். அவை தொடர்பற்று இருந்தாலும் (சில தட்டுகள் கிடைக்கவில்லை) அவை ஒரு கதையளவில் உணரப்பட்டன. எவ்வகையான இலக்கிய வளமும் இல்லாத ஒரு கட்டுக்கதையாகவே அறியப்பட்டது. எல்லாத் தொன்மங்களும் விளக்கும் ஒரு பாட்டிக் கதைபோன்றே அக்கதை உள்ளது. அக்கதையின் சுருக்கம், தட்டுகளில் உள்ளவாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.[8]

தட்டு *1:* ஊருக் என்ற நகரின் மன்னனாக கில்காமேசு இருந்தான். அக்குடிமக்கள் ஒன்றுசேர்ந்து ஆருரு (Ar-uru) என்ற கடவுளிடம், மன்னனின் கொடுங்கோன்மை பற்றி விண்ணப்பம் அளித்து, அவற்றைத் தடுத்து நிறுத்துமாறு வேண்டினர். ஆருருக் கடவுள் கில்காமேசு மன்னனுக்கு எதிராக எண்கிடு (Enkidu) என்பவனைப் படைத்து, அவனை விலங்குத் தன்மையுடைய முரடனாக காட்டில் வாழவைத்தான். இதனைக் கேள்விப்பட்ட கில்காமேசு, அவனைத் தன் வயப்படுத்த எண்ணி,

பரத்தை ஒருவளை அனுப்பி, என்கிடுவை மயக்க வைத்தான். பரத்தையின் மையலில் மயங்கிய என்கிடு, தனது முரட்டுத் தனத்தை விட்டொழித்து, அப்பரத்தையுடன் நாட்டுக்குள் நுழைந்து, ஊருக் நகரில் குடியமர்ந்தான். இதனை எதிர்பார்த் துக்கொண்டிருந்த கில்காமேசு, கடவுளைப் பழிவாங்கும் நட வடிக்கையாக, என்கிடுவுடன் தோழமை கொண்டான். இரு வரும் நண்பர்களாயினர்.

(என்கிடு என்றசொல்லுக்கான பொருள் சரியாக விளக் கப்படவில்லை. முனை என்ற எபிறேயச் சொல்லுக்கு, அம் மொழியில் இளங்கன்று அல்லது குட்டி என்று பொருள் கூறப் பட்டுள்ளது. குட்டி என்பதே, முனை என்று எபிறேய மொழி யிலும், Kith என்று செர்மானிய மொழியிலும் முனை என்று ஆங்கிலத்திலும் திரிந்துள்ளது. Kid= yoimg person இளங்குட்டி என்ற தமிழ்ச்சொல்லே, நுமேனை எனத் திரிந்துள்ளது என்க. பரத்தையர் தமிழ்நாட்டில் அறியப்பட்டிருந்ததைப் போலவே பாபி லோனிலும் இருந்தனர்.)

தட்டு 2: இத்தட்டின் ஒருபகுதி உடைந்து போயிருந்த தால் சில செய்திகள் விடுபட்டுள்ளன. கில்காமேசு என்கிடு இடையே பகைமை வளர்ந்து போரிட்டுக் கொண்டவை. (என்ன கரணியம் பற்றிப் போரிட்டனர் என்ற பகுதி சிதைந்து விட்டதால் அறிய இயலவில்லை.) ஆனால் உடனே தனது தவற்றையுணர்ந்த கில்காமேசு, தனது செய்கைக்கு வருத்தம் தெரிவித்து என்கிடுவிடம் நட்பை வளர்த்துக் கொண்டான்.

தட்டு 3: இவ்விருவருக்கும் பொதுவான பகைவன் ஒருவன் காடார் (Ceder) மலையில் வாழ்ந்து வந்தான். அவன் பேய் உருவைக் கொண்டவன். அவனது பெயர் உவாவா (Huwawa) என்பதாகும். கில்காமேசு உவாவானவக் கொன்றுபோட எண்ணி னான்.

(உவா என்பது வெண்மையைக் குறித்த தமிழ்ச் சொல் லாகும். உவாவா என்ற சொல்லுக்கான பொருள் விளக்கப் படவில்லை. உயர்ந்த மரங்களைக்கொண்ட காடு, காடாய் (காடு + ஆர்) எனப்படும். இச்சொல்லே Keder - Cedar எனத் திரிந் துள்ளது. உவாவாவை கொல்வதற்கான கரணியம் தெரிய வில்லை.)

தட்டு 4: என்கிடுவும் கில்காமேசும் காடார்ப்பகுதியை அடைந்தனர்.

தட்டு 5: அங்கு உறங்கிய போது, கில்காமேசு நற்குறிகள் தோன்றியதொரு கனவைக் கண்டான். எங்கிடு தீய கனவைக் கண்டான். (இந்தத் தட்டு உடைந்து போய் படிக்க இயலாத வாறு உள்ளது.) இறுதியில் உவாவா கொல்லப்பட்டான்.

தட்டு 6: இதனிடையே இசுதார் (Ishtar) என்ற பெண் தெய்வம் கில்காமேசை விரும்பினாள். கில்காமேசு அவள் காதலை ஏற்றுக்கொள்ளாமல், ஏற்கனவே இசுதார் காதலித்த வர்கள் எல்லோரும் மாண்டுபோன நிகழ்வுகளைப் பட்டிய லிட்டான்.

(இசுதார் என்ற செமிட்டிக் சொல்லுக்கான விண்மீன் என்பதே பொருளாகும். இச (Iisa) என்ற எபிறேயச் சொல்லுக்கு, பெண் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. தார் என்ற தமிழ்ச் சொல், விண்மீனைக் குறித்ததே. அது தாரகை என்றும் அறியப் படும். சமற்கிருதத்தில் தாரா எனப்பட்டது.

இசைதார் (தமிழ்) - தாரா (சமற்கிருதம்) - அசுதார் - ஹளாவயச (மெசபத்தேர்மியம்) - இசுதார் (அக்காடியம்) - எசுதேர் (எபிறேயம்) ஸ்டார் (ஆங்கிலம்).

இசுதார் தமிழ் (Tammuz) என்ற தெய்வ மாந்தனைக் காதலித்த கதையும் பாபிலோனியக் கதையில் காணப்படுகின்றது. தமிழ் என்ற தெய்வ மாந்தனை, தமுழ் என்று பாபிலோனிய இலக்கியம் சுட்டுகிறது. இவன் இறந்த கதையைத்தான் கில்கா மேசு, அசுதாரியிடம் கூறினான்.

தன் காதலை மறுத்த கில்காமேசையும் என்கிடுவையும் கொல்லுமாறு அசுதார் தனது தந்தையாகிய அனு (Anu) என்பா னிடம் வேண்டினாள். அனு தேவருலகில் இருந்த காளை யொன்றை அனுப்பி, மேற்கண்ட இருவரையும் கொல்லுமாறு ஏவினான். காளை, எதிர்ப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றது. ஆனால், என்கிடு-கில் காமேசு ஆகியோர் காளை யைக் கொன்றனர்.

அனு (Anu) என்பதுசுமேரியச் சொல்லென்றும், அது வானத்தைக் குறித்தது என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வானக் கடவுளாக (Sky god) அனு சொல்லப்படுகின்றான். சமய வரலாற்றில் அனு -யா என்லில் (நிழல்) என்ற மூவருமே, முதன்முதலில் மூவொரு கடவுளாகச் சொல்லப்பட்டுள்ளர் (Trinity). இக்கடவுளரின் பெயர்கள் மூன்றும் சுமேரியச்

சொற்களே என்று ஆய்வாளர்கள் கருதுவதால், இச்சொற்கள் தமிழ்ச் சொற்களே என்க. நிழல் (Shadow) என்ற சொல், வில் (Lil) எனப்பட்டது. (மூவொரு கடவுள் கொள்கை, தமிழர் கொள்கையே என்பதும் இதன் மூலம் வெளிப்படுவதைக் காணலாம்.)

தட்டு 7: தேவர்கள், கில்காமேசு மற்றும் என்கிடு ஆகிய இருவரும் சாவுக்குரியவர்களாகக் கருதப்பட்டாலும், என்கிடு வையும் அவனை காட்டிலிருந்து வெளியே கொண்டு வந்தவர் களையும், முதலில் வீழ்த்தினர். ஆனாலும் என்கிடு கீழுலகில் சேர்க்கப்பட்டான்.

(கீழுலகம் (nether world) என்ற ஒன்று இருந்த நம்பிக்கை, தமிழரிடையேயும், செமிட்டிக் இனத்தாரிடையேயும் காணப் பட்டது என்க.)

தட்டு 8: என்கிடுவின் சாவுக்கு, கில்காமேசு இரங்கல் தெரிவித்தான்.

தட்டு 9: என்கிடுவைப் போல் தானும் கொல்லப்படலாம் என அஞ்சிய கில்காமேசு, வெள்ளத்தினின்றும் காக்கப்பட்ட வனாகிய உத்நாபிசுத்தன் (Utnapish-tim) என்பானைத் துணை கொள்ள நினைத்தான். எனவே,அவனைக் காண பயணப்பட் டான்., வழியில் ஒரு மலையிலிருந்த "தேள் மாந்தன்" (scorpion - man) இடையூறுகள் நிறைந்த பயணத்தைத் தொடர வேண் டாம் என கில்காமேசை எச்சரித்தான்.

(தேள் மாந்தனைப் பற்றிய விளக்கமில்லையாயினும், அவன் ஒரு கொடியவன் என்ற பொருளில் சொல்லப்பட் டிருக்க வேண்டும்.)

தட்டு 10: பயணத்தில் சிதுரி (Siduri) என்ற கடல் மாந்தனின் மனைவியை (ale -wife) சந்தித்தான். அவளும் பயணத்தை மேற் கொள்ள வேண்டா மென்றும், சாவினின்றும் எவரும் தப்பிக்க இயலாது என்றும் அறிவுரை கூறினாள். சாவுக் கடலில் (Waters of death) தள்ளப்பட்ட கில்காமேசு, அங்கு ஊர்சா நபி (Ursha-nabi) என்ற ஓடக்காரனைச் சந்தித்தான். அவன், கடலைத் தாண்டிச் செல்லும் வழியைக் கூறி, உத்நாபிசுத்தன் இருக்கும் இடத்தையும் அறிவித்தான்.

(இந்நிகழ்வில் கடலில் கில்காமேசு பயணமான செய்தி விளக்கப்பட்டுள்ளது. சிதுரி என்றபெயர், சிதர் என்ற நீரோடு

தொடர்புடைய தமிழ்ச் சொல்லாகும். Ale -wife என்ற சொல்லில் காணப்படும் Ale என்ற செமிட்டிக் சொல்லுக்கு, கடல் என்பதேபொருளாகும். ஆழி என்ற தமிழ்ச் சொல்லே, ஆலி எனத் திரிந்துள்ளது. நகரும் தன்மைகொண்ட ஊர்தல் (Movement) என்ற சொல், நாவி (boat) என்ற தமிழ்ச் சொல்லோடு இணைந்து, ஊர்சா நாவி எனப்பட்டது. இதற்கு நகர்ந்து செல்லும் மரக் கலம் என்பதே பொருளாகும்.)

தட்டு 11: *கில்காமேசு இறுதியில் உத்நா பிசுத்தனைச் சந்தித்தான். தான் எவ்வாறு வெள்ளத்திலிருந்து மீட்டெடுக்கப் பட்டேன் என்ற நிகழ்வை, கில்காமேசுக்கு விளக்கினான். உயிரைத் தாங்கி நிற்கும் செடியை (plant of life), கில்காமேசுக் குக் காட்டினான். மகிழ்ந்து போன கில்காமேசு, குளித்துத் தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ள விரும்பி, நீராடச் சென்ற போது, ஒரு நாகம் (serpant) அச்செடியைத் திருடிக் கொண்டு போய்விட்டது.*

(வெள்ளம் பற்றிய முதல் கதை இங்குதான் வெளிப்படு கின்றது. இக்கதையைத் தழுவியே விவிலியக் கதையும், மற்ற சமயக்கதையும் சொல்லப்பட்டுள்ளன. பருவ காலங்களில் மழைய பெய்வதால் பயிர்ப்பச்சைகள் தோன்றுவதும், கோடை யில் மடிவதுமான இயற்கையின் நிகழ்வை, பிறத்தல் - இறத்தல் என்ற நிகழ்வோடு, இக்கதை தொடர்புபடுத்துகின்றது. இங்கு சொல்லப்படுப்பாம்பு, நாகம் (Naha) என்ற தமிழ்ச் சொல் லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.)

தட்டு 12: *கில்காமேசு கீழுலகிற்கு வந்துவிட்டான். அவனி டமிருந்து தொலைந்துபோன "புக்கு - மிக்கு" என்ற பொருட் களை மீண்டும் பெற முயன்றான். என்கிடுவின் ஆவி அல்லது நிழல் அங்கே தோன்றி, கீழுலகம்பற்றிய உண்மை களைத் தெரி வித்தது. "இந்தக் கீழுலகைப் பற்றிய உண்மைகளை நான் விளக் கினால், நீ மிகவும் வருந்துவாய்", என அந்த ஆவி, கில்காமே சிடம் கூறியது.*

மேற்கண்ட கதையில், கதைக்குரிய ஒழுங்கோ, தொடர்பு களோ இல்லாமல் பாட்டி கதைபோன்று அறியப்பட்டாலும், பல சொற்களைப் பற்றிய தகவல்களும், வெள்ளம்பற்றிய செய்திகளும் உள்ளன. இக்கதையில் அறியப்படும் பெயர்கள் அனைத்தும் தமிழினின்றும் திரிந்த சொற்களாகவே காணப்

படுகின்றன. புக்கு-மிக்கு என்ற சொற்கள், தமிழ்ச் சொற்களாக வே உள்ளன. இச்சொற்கள் பற்றிய விளக்கம் கூறப்படவில்லையாயினும், இதுபோன்ற இரட்டைச் சொற்கள், புலக்குவர் - துலக்குவர் (Pulakkuvar - Thulakkuvar) என்றவாறு, புற்றில் காணப்பட்ட இரு நாகப் பாம்புகளைப் பற்றிய செய்தி, சிந்து வெளியில் காணப்படுகின்றது.[9] மேற்கண்ட மெசபத்தோமியக் கதை, சிந்துவெளி மக்களால் சொல்லப்பட்டு, மேற்கே புலம் பெயர்ந்தவர்களால், செமிட்டிக் மொழியில் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

மேற்கண்ட 12 தட்டுகளுடன் ஏராளமான தட்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை, அசீரிய நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தவை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அசூர் - பனி - பால் (Ashur - bani -Pal) என்ற அசீரிய மன்னன் (கி.மு. 668 - 626) இந்நூல் நிலையத்தை நிறுவினான். மேற்கண்ட தட்டுகள், பாபிலோனில் முதல் செமிட்டிக் தலைமுறையினரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் (கி.மு. 1830- 1550) என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[10] மேற்கண்ட செமிட்டிக் மொழித் தட்டுகளின் செய்திகளை, அக்காடிய மொழிக் குறிப்புகள் பெயர்த்தெழுதியதாலும் அறியப்படுகின்றன. இத்தட்டுகளின் செய்திகள், இந்திய மொழியிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தட்டுகளில் காணப்படும் செய்திகளின் மூலம், சுமேரியக் குறிப்புகளில் காணப்படுவதாக, ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வரலாற்றாய்வாளர் எஸ்.என். கிரேமர் (SN. Kramer), மேற்கண்ட கில்காமேசுக் கதையை, ஐந்து தொகுதிகளாக (Episodes)ப் பிரித்துள்ளார்.[11]

1. கில்காமேசும் அவன் வாழ்ந்திருந்த நாடும் (தட்டுகள் 3-5),

2. கில்காமேசும் வானுலகக் காளையும் (தட்டுகள் 6),

3. உலகப் பெருவெள்ளம் (தட்டு11.)

4. கில்காமேசின் இறப்பு (தெளிவாக இல்லை)

5. கில்காமேசு - என்கிடு - கீழுலகம் (அக்காடிய மொழி பெயர்ப்பு, சுமேரிய மூலத்தைக் கொண்டது - The Akkadian text is a translation of the sumerian original.)

கில் காமேசுக் கதையின் சிறப்புகள்:

இன்றும் படிக்கத்தக்க அளவில் கிடைத்துள்ள, உலகின் முதல் இலக்கியம்., இக்கதையின் நிகழ்வுகள், எழுதப்பட்ட காலத்துக்கும் பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை.

ஆய்வாளர்கள், இக்கதை கி.மு. 3000ஆண்டுகளுக்கு முன்பே வழக்கிலிருந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

இக்கதையில் காணப்படும் சூழல்கள், மெசத்தோமியச் சூழலோடுத் தொடர்புகொண்டிருக்கவில்லை யாதலால், இது மெசபத்தோமியாவுக்கு வெளியே சொல்லப்பட்டு, வெளியிலிருந்து வந்து குடியேறிய மக்களால் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.[12] அந்த வெளிநாட்டுமக்கள் யாவர் என்பதை ஆய்வாளர்களால் இனம் காண இயலவில்லை.

கி.மு. 3000ஆண்டுகளுக்கு முன்பு அறியப்பட்டிருந்த பல நிகழ்வுகளை, கதை போன்று பதிவு செய்துள்ளனர். குறிப்பாக, உலகை அழித்த பெருவெள்ளம் பற்றிய முதல் செய்தியைத் தருவது கில்காமேசு இலக்கியமே எனலாம்.

வெள்ளக் கதை, மெபத்தோமியச் சூழல்களுக்கு முற்றிலும் தொடர்பில்லாதது.

இக்கதையின் மூலம், சுமேரியப் பதிவுகளிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுவதால் *(சுமேரியர்கள் செமிட்டிக் மக்கள் அல்லர்),இக்கதையின் கரு, சுமேரியரின் முன்னோர்களிடமிருந்து சுமேரியர் வழி யாக, மெசபத்தோமியாவில் அறியப்பட்டது என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.[13] (சுமேரியர் யார் என்பதை இதுவரையிலும் வரலாற்றாய்வாளர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை.)

இக்கதை மாந்தனின் பிறப்பு, காதல்வாழ்க்கை, ஆற்றல் மிக்கச் செயல்பாடுகள், இறப்பு ஆகிய மாந்தவாழ்வின் அடிப்படைகளை விளக்கும் உருவகங்களாகச் சொல்லப்பட்டுள்ளன.

பயிர் பச்சைகள் தோன்றுவது, வேளாண் தொழில், அறுவடைக் காலம், ஆகிய செய்திகள் உயிர்கள் பிறப்பது மடிவது போன்ற கதைகளாகப் பின்னப் பட்டுள்ளன.

மாந்த வாழ்க்கையில் தொடர்ந்து நடைபெறும் தேடலும் (Searching) தேடலுக்கு அடிப்படையான நம்பிக்கையும் (hopes) கதைகளாக்கப்பட்டுள்ளன.

இக்கதையின் மறு ஆக்கங்கள் அல்லது மொழி பெயர்ப்புகள் அக்காடிய, இத்திய மொழிகளிலும் காணப்படுகின்றன.

விவிலியமும் தன் பங்குக்குப் பல செய்திகளை, இக்கதையினின்றும் எடுத்துக் கொண்டுள்ளது. குறிப்பாக, விவிலியம் கூறும் படைப்புக் கதையும், வெள்ளக்கதையும், கில்காமேசு இலக்கியத்தினின்றும் எடுக்கப்பட்டவைகளே. விவிலியக் கதை, அந்த சமயக் கண்ணோட்டத்தில் மாற்றி எழுதப்பட்டுள்ளது.

கில்காமேசுக் கதை போன்றே, விவிலியக் கதைகளும் தமிழ்ப் பெயர்களையும் தமிழ்ச் சூழல்களையுமே கொண்டுள்ளன.

சுமேரியக் கதையில் அறியப்படும் சேய்சூத்திரன், தில்மண் (Dilmun) என்ற நாட்டில் வாழ்ந்திருந்ததாகவும், அந்நாடு (கிழக்கேயிருந்த கதிரவன் உதிக்கும் நாடு எனவும் சொல்லப்பட்டுள்ளது. தலை மண் என்பது முதல் நாடு (first country which witness the sun rise) என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. இச்சொல் இந்திய நாட்டைக் குறிப்பதே. பாபிலோனுக்குத் தெற்கே, பாரசீக வளைகுடாவில், தில்மன் என்ற பெயரில் ஒரு நகரம் இருந்ததாகச் சொல்லப்பட்டாலும், இது தெற்கே அறியப்படுவதால், கிழக்கே உள்ளதாகக் கருதப்படும் தில்மண் என்பது தமிழத்தைக் குறித்ததே எனலாம்.)

13. தமிழ் செமிட்டிக் - மொழியியல் கண்ணோட்டம்

செமிட்டிக் இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள படைப் புக் கதைகளின் பின்புலங்களும், அக்கதைகளில் காணப்படும் படைப்புக் கடவுளர்களின் பெயர்களும் தமிழகச் சூழல்களை யும், தமிழ்ச்சொற்களையுமே கொண்டுள்ளன வென்ற செய் திகள் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளன.[1] இதன் வழியில் கடவுள் படைத்த முதல் மாந்தன் பற்றிய குறிப்புகளில், மெசபத்தோ மிய இலக்கியமான ஈனும்-மால்-எல்-இசு (Enu-ma-el-ish) என்னும் தலைப்பு தமிழ்ச்சொற்களால் ஆனவை என்பதும் விளக்கப்பட்டுள்ளது. இக்கதையில், படைக்கப்பட்ட முதல் மாந்தனின் பெயர் ஆதப்பா (Adappa) என்று சொல்லப்பட் டுள்ளது.[2]

ஆதப்பா என்ற சொல்லுக்கான பொருள் யாதென மேற் கித்திய ஆய்வாளர்களால் அறியப்படவில்லை. அச்சொல்லுக் கான மூலச்சொல்லும் வேர்ச்சொல்லும் கூட அவர்களால் கண்டறியப்படவில்லை. ஆதப்பா என்ற பெயர்,பிற்காலத்தில் மெசபத்தோமிய படைப்புக் கதையைத்தழுவி எழுதப்பட்ட விவிலியத்தில் ஆதாம் என்று சொல்லப்பட்டுள்ளதால், ஆதப் பா - ஆதாம்ஆகிய இரு பெயர்களும் ஒரே பொருளை விளக்கு வனவாகவே அறியப்படுகின்றன எனலாம்.

ஆதாம் +அப்பா என்ற இரு சொற்களே, ஆதப்பா என்று சொல்லப்பட்டது என்க. ஆதாம் என்பது பெயராகவும், அவனே உலக மக்களில் முதல்மாந்தன் எனப்பட்டதால், அப்பா என அறியப்பட்டதாகவும் கருத வேண்டும். ஆதாம் ஆகிய அப்பா என்ற விளக்கம், அவ்விரு சொற்களுமே தமிழ்ச் சொற்களாக அறியப்படும் போது தெளிவுபெறும். ஆதாம் என்ற விவிலியச்சொல்லைக் காட்டிலும் ஆதாம் +அப்பா என்கிற மெசபத்தோமியச் சொல், மிகவும் தெளிவான தமிழ்ச் சொல்லாகவே உள்ளதை நோக்குக. தமிழில் அறியப்படும்

அப்பா என்ற தந்தையைக் குறித்த சொல்லே, இன்று உலக மொழிகளில், சிற்சில மாற்றங்களுடன் அறியப்படுவதைக் காண லாம்.

அப்பா, அப்பன், அய்யன், அய்யா, தந்தை, தாதை போன்ற தமிழ்ச் சொற்களால், தந்தை என்பவன் அறியப்படுகின்றான். அப்பு என்ற சொல்லுக்குப் பற்றி நிற்றல் (Caught hold) என்பதே பொருளாகும். தனது தலைவியையும், மக்களையும் தன் அரவணைப்பில் பற்றி நிற்பவன்,அப்பி நிற்பவன் அப்பன் எனப்பட்டான்.

முகத்தில் ஏதோவொரு சாந்தை அவன் அப்பிக் கொண் டிருக்கிறான்.

இவ்வுலகை நீர் அப்பிக் கொண்டிருக்கின்றது.

காலில் அப்பியிருக்கும் சேற்றை வழித்தெடுத்தான்.

மேற்கண்ட வாக்கியங்களில் காணப்படும் அப்பி என்ற சொல், பற்றியிருந்தவை பற்றி விளக்குவனவாக உள்ளன.

இவ்வுலகை அப்பியிருக்கும் கடலை, அப்பு என்றே அழைத்தனர்.

அப்பு அணை கிடந்தோன்[3] - கடல் மீது பள்ளிகொண்டுள்ள திருமால்.

அப்பு =பற்றியிருத்தல்; அப்பால் = விலகிச் செல்லுதல். எதிர்மறைச் சொல்.

அள் +பூ = அள்பூ - அப்பு என்றானது.

அள்-அள-அளி= கொடுத்தல்.

பூ என்ற சொல்லுக்கு விரிதல், பெருத்தல் என்பதே பொருளாகும்.

மொட்டாயிருந்தது, விரிந்து பெருத்தலால், அது மலர் எனப்பட்டது. ஏராளமான உயிரினங்களையும், மரம்செடி கொடிகளையும், நிலப்பரப்பையும் கொண்ட விரிந்து பரந்த இவ்வுலகம்,பூ எனப்பட்டது.

அள் -அளி = கொடுத்தல்.

அள் -அண் = அணி -அணை= பற்றியிருத்தல்.

அள் + பூ = மனைவி மக்கள் என விரிந்த தனது இல்லத்தாரை அணைத்திருப்பதாலும், பற்றியிருப்பதாலும்,தந்தையானவன் அள்பூ எனப்பட்டான்.

அள் +பூ = அப்பு என்றானது.

உள் +பூ = நீரின் உள்ளிருந்து மலர்ந்த ஒரு பொருள். உள் + பூ =உப்பூ- உப்பு.

மால் +பூ =கருமையாகத் திரண்டு மலர்ந்த மேகம். மால் + பூ =மாப்பூ - மப்பு

போத்து என்ற தமிழ்மூலச்சொல்லே, பிதா என சமற்கிருதத்தில் திரிந்தது என்க.

போத்து- பாத்து -பாத்தர் என கிரேக்க மொழியில் திரிந்தது.

பாத்தர் -ஃபாதர் என ஆங்கிலத்தில் மேலும் திரிந்தது.[6]

பாத்ரே என்ற சொல், போர்த்துக்கீசியச் சொல்லும், பாத்தர் என்ற சொல்லின் நீட்சியே.

என அறியப்பட்டது.[7] தமிழகம் வந்த போர்த்துக்கீசியர், பாத்ரே என்ற சொல்லை இங்கு அறிமுகம் செய்தனர். அதுவே, பாதிரி-பாதிரியார் எனப்பட்டது என்க. பெறுதல் என்ற சொல்லின் திரிபே பெறர் என்ற இலத்தீன் சொல்லாகும்.

அப்பா என்று அறியப்பட்ட தமிழ்ச்சொல், அப்பா என்றே செமிட்டிக் மொழியிலும் சொல்லப்பட்டுள்ளது. அப்பா -அப்சு என்றும் திரிந்து தந்தையையே குறித்தது. அப்பா -அப்பா என ஒலியின் அழுத்தம் குறைந்து, எபிறேய மொழியில் அறியப்பட்டது. அதன் சுருக்கமாக அப் (ஹெ) என்றும் சொல்லப்பட்டுள்ளது.

அப்பா (தமிழ்) – (இலத்தீன்) –(ஆங்கிலம்.)[8]

அப்பா என்ற தனித்தமிழ்ச் சொல்லால் அறியப்பட்ட, செமிட்டிக் இனத்தின் படைப்புக் கதை, தொல்தமிழரால் தமிழகத்தில் (குமரிக்கண்டத்தில்) சொல்லப்பட்டு, குடிறேிய தமிழராலும் சொல்லப்பட்டுள்ளதை நோக்கும்போது, செமிட்டிக் கதையின் மூலம் தமிழிலேயே இருந்துள்ளது எனக் கருதலாம். இச்சொல்லின் முன்னொட்டுச் சொல்லாக உள்ள ஆதாம் என்ற சொல்லை, எபிறேய மொழி எடுத்துக் கொண்டுள்ளது.

ஆதாம் என்ற சொல்லின் பொருள் யாது?

செமிட்டிக் மொழியில் ஆதாம் (Adam) என்பது மாந்தனையும், ஆதாம் (Aadaama) என்பது செம்மண்ணையும் குறித்த சொற்களாகும். ஒரு சிறிய ஈற்றுச் சொல் வேறுபட்டால், மாந்தனும் மண்ணும் வேறுபடுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இவ்விரு சொற்களும் மண்ணையும் மாந்தனையும் குறித்தன எனலாம். மண்ணிலிருந்தே மாந்தன் படைக்கப்பட்டான் என்பது செமிட்டிக் இலக்கியங்கள்.

செல் + பூ = வாயினின்று; விரிந்து விழும் சொற்கள். செல் +பூ = செம்பூ-செப்பு.

அள்+ பூ என்ற இரு தமிழ்ச்சொற்களின் கூட்டே, அப்பு என்ற சொல்லாகும்.

அப்பு என்ற தந்தையை விளிக்கும் வழக்கு இன்று தமிழகத்தில் உள்ளதை நோக்குக.

சின்ன அப்பு = சித்தப்பு, தந்தையின் தம்பி.

அப்பு என்ற முதற்சொல்லே, அப்பன் - அப்பா என்றவாறும் சொல்லப்பட்டன.

தன் மனைவியின் வழியே மக்களைத் தந்தவன் - தந்தை எனப்பட்டான்.

தா என்ற வேர்ச்சொல், கொடுத்தல் என்றானது பொருள் கொள்ளப்படும். தாவெனக் கேட்ட மனைவிக்கு,மக்களைத் தந்தவன், தாதை எனப்பட்டான்.

தாதை என்ற தமிழ்ச்சொல்லே, டாடி (Daddi) என்றவாறு ஆங்கிலத்தில் திரிந்தது. போத்து என்ற பழந்தமிழ்ச்சொல், ஆணையும் ஆண்வழியில் தந்தையையும் குறித்ததாகும். பொல் என்ற சொல்லுக்கு, இணைதல்அல்லது கூடுதல் என்பதே பொருளாகும். ஆண் - பெண் உறவை"பொல்" என்ற தமிழ் மூலச்சொல் விளக்கும்.

பொல்-பொலி-பொலிதல் : பொலியும் காளை, பொலிகாளை.

Pol - Polination

பொல் என்பது, ஆண் குறியைக் குறித்து -(இலிங்கம்) என கிரேக்க மொழியில் திரிந்தது.[4]

பொல் என்பது, ஆண்குறியைக் குறித்த கிரேக்கச் சொல்லானது. பொல்லக்சு =ஆண்குறியைக் குறித்த ஆடவை (மிதுன)யின் மீன் கூட்டம்.[5]

பொல் +து - பொத்து - போத்து என்று தமிழில் சொல்லப்பட்டது. பழங் காலத்தில் ஆணையும், ஆண்குறியையும், அதன்வழியில் தந்தையையும் குறித்த போத்து என்ற சொல், தற்காலத்தில் கழி அல்லது கம்பு (ஆண்குறியின் உருவகமே) என்று பொருள் அறியப்படுகின்றது.

விளக்கத்தினை, கேள்விக்குறியுடன் சிலர் குறிப்பிடுகின்றனர். (Ruddy?)[10]

Ruddy என்பது, Red என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளைத் தருவதே. Red என்பது, அரத்து என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்ப. அரத்து-ரத்து-ரெட் என்றானது. அரத்தம் =சிவப்பு, செம்மை எனத்தமிழில் விரியும்.

எகிப்திய இலக்கியத்தில் மாந்தன் களிமண்ணிலிருந்து படைக்கப்பட்ட தாகவும், கடவுள் ஒரு குயவனைப்போலவும் (Poter) தனது உருளையினின்றும் மாந்தனை உருவாக்கியதாக வும் சொல்லப்பட்டுள்ளது.[11] *(களி மண் என்ற தமிழ்ச்சொல்லே, clay என ஆங்கிலத்தில் திரிந்தது என்க.)

எம்மொழிச் சொல் என அறியப்படாத ஆதாம் என்ற சொல்லை, தமிழ்க் கண்ணோட்டத்தில் விடுவிக்கலாம். ஆ+தாமம் என்ற இரு தமிழ்ச்சொற்களே, ஆதா(ம)ம் என்று, செமிட்டிக் மொழியில் சொல்லப்பட்டுள்ளது.

ஆ என்ற தமிழ்ச்சொல்லுக்குத் தொடக்கம், முதன்மை யான, முதலில் வருகின்ற, முந்திநின்ற என்றவாறு பொருள் விரியும். செமிட்டிக் இலக்கியங்களைக் காணும்போது, கடவுள் மாந்தனைப் படைத்து அவனுக்கு ஆதாம் என்று பெயரிட்ட தாக, ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. கடவுள் "மாந் தனை"ப் படைத்ததாகவே அவ்விலக்கியங்கள் கூறுகின்றன. மாந்தன் (Man) என்ற சொல்லை, ஆதாம் என்ற பெயரால், அவ்விலக்கியத்தை எழுதிய ஆசிரியர் தாம் சூட்டியிருக்கின்றார் என்பது தெளிவாகின்றது. அவ்விலக்கிய ஆசிரியர் ஆதாம் என்ற தமிழ்ச் சொல்லை அவனுக்குச் சூட்டியிருப்பதால்,அந்த ஆசிரியர் குறிப்பிடும் மாந்தன் ஆதாம், தமிழனே என்று எண்ணத் தோன்றுகிறது.

பிறைதோன்றிய முதல்நாள் தொடங்கி, நாடோறும் அப்பிறை வளர்ந்து வருதலை,

"ஆ நானிறைமதி யலர்தரு பக்கம்போல்", என்று

பரிபாடல் கூறுவதை நோக்குக.[12] ஆ நாள் = முதல் நாள்.

ஆதீ =ஆ +தீ. முதன்மையான அல்லது தொடக்கத்தில் அறியப்பட்ட நெருப்பு.

அதாவது கதிரவன் கோள்களுக்கு முதல்வனாகக் கருதப் படுவதால், ஆதி என்ற சொல், கதிரவனையே குறித்தது. சொற் களின் வழக்கு பலவாறு மாறுபடுவதைக் காணலாம். அவ் வழியில் ஆதீ என்ற சொற்களே ஆதி என்று ஒரு சொல்லாகி, முதன்மையையும் பழமையையும் குறித்தது என்க. ஆதி பகவன்- தொடக்கத்தில் இருந்த கடவுள்.

பகு என்ற மூலச்சொல், பக என்ற வேரினின்றும் விரிந்தது. உயிரினங்களைப் பகுத்துப் பாதுகாப்பவன் பகவன். ஆதி பகவன் தமிழ்ச்சொற்களே.

ஆகாயம் : காயம் =கரிய அல்லது நீலநிறவானம்.ஆகாயம் = இவ் வுலகம் தோன்றுமுன்னரே அறியப்பட்ட வெளி.

ஆவணி : ஆ+அணி; அணி =வரிசை. மாதங்களின் அணிவகுப்பு. ஆண்டின் தொடக்க மாதம் ஆ அணி எனப்பட்டது. ஆஅணி =ஆவணியானது.

ஆவணியிலும் ஆண்டுத் தொடக்கம் இருந்தது. இக்காலம், கதிரவன் மகரக் கோட்டை அடையும் காலமாகும். சிற்றரை (சித்திரை), ஆவணி,கார்த்தீ, தை ஆகிய மாதங்களில் ஆண்டுத் தொடக்கங்கள் தமிழகத்தில் வழக்கிலிருந்ததற்கானச் சான்றுகள் உள்ளன.

எனவே, ஆ என்ற ஓரெழுத்துச்சொல்,தொடக்கம் அல்லது முதன்மை என்ற பொருளில் அறியப்பட்டது எனலாம்.

தாமம் என்பது சிவப்பைக் குறித்த தமிழ்ச்சொல்லாகும். தாள் என்பது, பச்சை நீங்கி செம்மை நிறத்துக்குமாறும் இலையைக் குறித்த சொல்லாகும்.

தாள் = Stubble. பழுப்பு அல்லது சிவப்பு நிறமாக மாறிய இலை.

தாள் = மாந்தனின் பாதம். உலகில் எந்த நிறத்தைப் பெற்றவனின் பாதமும் சிவந்தே காணப்படும்.

தாள் +ம் -தாமம் எனப்பட்டது.

உலகம் தோன்றிய போது, கதிரவனின்றும் வீசியெறியப் பட்ட நெருப்புத் துண்டம் குளிர்ந்து பாறைகளாகவும், பின்னர் மண்ணாகவும் மாறியபோது, இவ்வுலகம் செம்மண் ணால் நிறைந்து செந்தரையாகவே விளங்கியது. இயற்கையின் இடற்பாடுகள், மாற்றங்களால், சில இடங்கள் கருமணல் சூழ்ந்தவையாக மாறின என்றாலும், நிலத்தின் மூல நிறம் சிவப்பே என்க. ஆதலால்,

மண்ணையும் தாமம் என்றனர். தாம மண் =சிவந்த மண்.

ஆதாம மண் = தொடக்கத்தில் செந்நிறமாயிருந்த மண் அல்லது நிலம்.

தாமம் என்னும் பெயர் தாரும் பூவும் - வடமலை நிகண்டு.[13]

அலங்கு வெயிற் பொதிந்த தாமரை – குறுந்தொகை,[14]

தாமந் தலைபுனை போநீர் வையை – பரிபாடல்[15]

முத்துத் தாம முறையொடு நாற்றுமின் – மணிமேகலை,[16]

தாமரை : தாமம்=சிவப்பு; அரை =கொடி[17] சிவந்த மலரைக் கொண்டுள்ள செடி. தாமரை என்ற சொல்லில், சிவந்த நிறம் என்பதும் அடக்கம். பாரதி கூறிய வெள்ளைத் தாமரை என்ற மலர், பொருட்குற்றம் கொண்டது. வெள்ளைநிறமாக அறியப் படும்மலர், வெள்ளரை என்றே சொல்லப்படல்வேண்டும். வெள்ளரை என்ற சொல், சரியான பொருளைத் தரும் சொல் லாயினும், அது வழக்கில் இல்லை.

தாமிரம் : அரம் என்பது பொடி அல்லது துகள் என்றவாறு பொருள் படும். சிவப்புப் பொடிகள், மண்ணோடு கலந்து ஆற்றுநீரால் அடித்துவரப்படும். அப்பொடிகளைச் சுமந்துவரும் ஆறு, தாமிரவருணி எனப்பட்டது.

ஆண்டுக்காண்டு வரும் அடைமழை (வடகிழக்குப் பருவ மழை), வரும் அடை எனப்பட்டது. சுருக்கமாக வருடை என்றனர். கார் காலத்தில் ஆண்டுத் தொடக்கம் தமிழகத்தில் அறியப்பட்டிருந்தது. கார்காலம் தொடங்கி அடுத்த கார்காலம் வரையிலான காலம் ஓராண்டு எனப்பட்டது. இதன்வழியில் ஆண்டை வருடை என அழைத்தனர். வருடை, வருஷ என்று சமற்கிருதத்தில் திரிந்தது. இவ்வாறு வருடைக் காலத்தில் மட்டும் வரும் ஆற்றுநீர், வருநீர் எனப்பட்டது. வருநீர் பிற்காலத்தில் வருணி எனப்பட்டது.

தாமம் + அரம் +வருணி =தாமிரவருணி என்று சொல்லப்பட்டது.

தாம்பரம் என்பதும், தாமிரம் +அரம் என்ற சொற்களைக் கொண்டதே.

தாம்பூலம் : வெற்றிலை, பாக்கு, சுண்ணம் ஆகிய பொருட்களின் கலப் பினால், சிவப்பு என்ற நிறம் வெளிப்படும். ஆனால் அந்நிறம் வெளியே காணப்படா மல், உள்ளே மறைந்துள்ளது. தாமம் +அல்லம் =தாம்லம் என்க. அல்லம் என்பதற்கு கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருப்பது என்பது பொருளாகும். மண்ணுக் குள் மறைந்திருக்கும் இஞ்சியை, அல்லம் என்பர். இது, அல் என்ற மூலச்சொல்லினின்றும் விரிந்தது.

தாமம் +அல்லம் என்ற சொற்களே பிற்காலத்தில் தாம்பூலம் என மருவிற்று.

தாம்பாளம் : அளம் என்பது விரிந்த அல்லது அகன்ற எனும் பொருளைத் தருவதாகும். உப்பளம் என்ற சொல்லை நோக்குக. தாமிரம் என்ற கனிமத்தால் செய்யப்பட்ட அகன்ற தட்டு, தாம்பளம் எனப்பட்டு, தாம்பாளம் என வழக்கில் உள்ளது.

எனவே, தாமம் என்பது தனித்தமிழ்ச்சொல்லே என்பதும், அது செமிட்டிக் மொழிகளில் தாம் என்று மாந்தனையும், தாமா என்று மண்ணையும் குறித்தன. ஆ என்பது தொடக்கம் என்ற பொருளைத் தரும் தனிச்சொல்லாகும்.

ஆதாம் = முதல் மாந்தன்.

ஆதாமா =தொடக்கத்தில் அறியப்பட்ட செம்மண்.

தள் என்ற தமிழ் வேர்ச்சொல், தாள் என நீண்டது.

தள் -தாள் -தாம் -தாமம் :சிவப்பு.

தாம் =தும்-தும்பு-துப்பு: சிவப்பு, செம்பவழம்.

தாம் -தும்-தும்பு- தோம்பு : சிவப்பு.

தாம்பு -தாம்பரம் =-செம்பு.

சிவப்பு அல்லது செம்பு என்ற தமிழ்ச்சொற்கள், செம் (Shem) என்றும்,[18] செமஸ் (Shemesy) என்றும்,[19] செமிட்டிக் மொழிகளில் திரிந்துள்ளதைக் காணலாம்.

செம அல்லது செமஸ் = சிவந்த நிறம்கொண்ட கதிரவன் அல்லது கடவுள்.

செம என்பது,செமிட்டிக் மக்களின் கடவுளர் பெயர்களில் ஒன்றாக அறியப்படும்.

செம்மை நிறமான கனிமம்,செம்பு என்றே தமிழில் சொல்லப்பட்டது.

செப்பு என்ற சொல்லினின்றே, Cyprus (சைப்ரஸ்) என்ற சொல் உருவானது.

முதல்பெண் ஏவாள்: ஏவாள் என்பதற்கு, ஏவாதவள் என்று தமிழில் பொருள் கொள்ளப்படும். கடவுளால் விலக்கப்பட்ட கனியை உண்ணுமாறு தனது தலைவனை ஏவியவளை, ஏவாள் என அழைப்பது உண்மையில் எதிர்மறைப் பொருளைத் தருவதாகும். ஏவாள் என்பது ஈவ் (Eve) என்ற ஆங்கில சொல்லின் தமிழ்மொழிபெயர்ப்பு ஆகும்., இது ஒலியைக்கொண்டு மாற்றம் பெற்றதேயன்றி, பொருள் அடிப்படையில் மாற்றப்படவில்லை.

செமிட்டிக் மொழியில், (Ayaa) என்ற சொல்லே, முதல் பெண்ணைக் குறித்துக் காணப்படுகின்றது.[20] பிற்காலப் பதிவுகளில், அவ்வா (Avvaa) என்ற சொல்லும் அறியப்படுகின்றது. அவ்வா என்ற சொல், ஈவ் என ஆங்கிலத்தில் திரிந்துள்ளது. ஈவ் என்ற சொல்லையே முதற்சொல்லாகக் கொண்டு, ஏவாள் என்று தமிழ்ப்படுத்தினர். ஆயா, அவ்வா அல்லது அவ்வை ஆகிய இவ்விரண்டும் தமிழ்ச் சொற்களே. செமிட்டிக் மொழியில்

இச்சொற்களுக்கு, நீண்ட காலம் வாழ்ந்திருப்பவள் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இச்சொற்களுக்கான வேர்ச்சொல், யா (Yaa) என்பதே, என செமிட்டிக் மொழியியலார் கூறுகின் றனர்.[21] யா என்ற வேர்ச்சொல்லுக்கு என்றும் வாழ்கின்ற (to be) என்றும் பொருள் கூறுகின்றனர் நூறாண்டோ அதற்கு மேலும் பல்லாண்டுகளோ வாழ்ந்த, வாழ்ந்துவரும் மூதாட்டி களை, யா என்ற சொல்லால் விளக்குகின்றனர். கடவுளின் தோற்றமும் முடிவும் அறிய இயலாது, என்றும் அவர் வாழ்ந்து கொண்டிருப்பதால், கடவுளையும் யா என்ற சொல்லால் விளக்கினர்.

கடவுளுக்குத் தோற்ற காலம் இல்லையென்பதால், கடவுள் யா எனப்பட்டார்.

முதல் பெண்ணுக்குத்தோற்றகாலம் ஒன்றிருந்ததால், அவள் ஆ-யா எனப்பட்டாள்.

கடவுளையும், முதல்பெண்ணையும் குறித்த செமிட்டிக் சொற்கள், யா என்ற வேர்ச்சொல்லின் நீட்சிகளே என்க.

யா[22] = மெசபத்தோமியக் கடவுள். இவரே உலகைப் படைத்தவர்; வெள்ளத்தால் உலகை அழித்தவர்.

யா[23] =எபிறேய இன மக்களின் கடவுள், பத்துக்கட்டளை மோசே என்பானுக்கு அளித்தவர்.

ஆயா -தமிழ்ச்சொல்லே: செமிட்டிக் மொழியில் ஆயா என்ற சொல் லுக்கான வேர்ச்சொல், யா என்பதே என மொழியியலார் கூறுகின்றனர். யா என்ற எபிறேய மூலச்சொல்லுக்குப் பல் பொருளையும் அவர்கள் கூறுகின்றனர். அவை வருமாறு:

1. யா [24] = வலம் (Vigour)

2. யா [25]= வலம் (right)

3. யா[26]=- உதவி (Heep)

4. யா[27]= தெற்கு (South)

5. யா[28] =நீர் (Mesopotanian word)

6. யா[29] = வாழ்ந்து கொண்டிருக்கின்ற அல்லது வயதான (Aged)

7. யா[30] = முக்காலமும் கடந்த (tobe) கடவுள்.

மேற்கண்ட ஏழு பொருளுடன் யா என்ற சொல் அறியப் பட்டுள்ளது. யா என்பது தமிழ்ச்சொல்லே யென்றாலும், இவை போன்ற விரிவான பொருளை, தமிழ் இலக்கியங்களில் காண இயலவில்லை. யா என்பது தொல்தமிழ்ச் சொல்லாயிருந்து,

கடைக்கழக இலக்கியங்களில் ஒரு சில இடங்களில் அறியப் பட்டுப் பின்னர் வழக்கிழந்து போயிற்று எனலாம்.

யா என்ற தமிழ்ச்சொல், நீரென்றும்,தெற்கென்றும், வயதான மூதாட்டியென்றும் அறிந்து கொள்வதற்கானச் சான்றுகள் தமிழில் உள்ளன. தமிழினும் விரிவான பொருளை மேலை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

யா = வலம். வலம் என்ற தமிழ்ச் சொல், பலம் (strength) என்று சமற்கிருதத்தில் திரிந்துள்ளது. வல் என்ற வேர்ச்சொல் நீண்டு வலம் என்றாயிற்று. வல் என்ற வேரினின்றும் வல்ல, வல்லவன், வல்லமை, வல்லாண்மை, வல்லார், வல்லாளன், வல்லரையன், வல்லினம் போன்ற மேலும் பல சொற்கள் விரிந்தன. இதே பொருளை, செமிட்டிக் மொழியும் விளக்குவதைக் காணலாம். ஆனால், யா என்ற சொல்லுக்கு வலம் என்ற நேரிடையான பொருள் தமிழில் கிடைக்கவில்லை. அளவற்ற ஆற்றலுடைய யாமன் என்ற மன்னன் பற்றிய செய்தியே தமிழில் காணப்படும். யாமன் என்பது ஆற்றலைக் குறித்த சொல்லே எனலாம்.

யா =வலம் அல்லது வலப்புறம். இதற்கும் நேரிடையான பொருள் தமிழில் இல்லை. என்றாலும், வலது புறம் ஆற்றலின் பக்கமாக வும், இடதுபுறம் ஆற்றல் குறைந்தும் சொல்லப்பட்டுள்ள செய் திகள் தமிழில் உண்டு. இரு கைகளில் வலக்கையே ஆற்றலுள் ளதும், இடக்கை வலுவிழந்ததாகவும் கருதப்படுகின்றது. ஆண் ஆற்றலின் உருவம் என்பதாலும், பெண் மென்மை யானவள் என்பதாலும் கடவுளின் வலப்பக்கத்தை ஆணாகவும்,இடப்பக் கத்தைப் பெண்ணாகவும் தமிழர்கள் கருதினர்.

யா =உதவி. எபிரேய மொழியில் சொல்லப்பட்டுள்ள இப்பொருளை, தமிழில் காண இயலவில்லை.

யா=தெற்கு. யாமன் என்ற மன்னனை, தமிழ்க்கடவுள் தென் திசைக் குரியவனாகப் பணித்தசெய்திகள் தமிழில் உள்ளன. எபிரேய மொழியில் யா என்பதற்குத் தென் திசையென்றும் சொல்லப் பட்ட கருத்து, யாமன் என்ற தமிழ்ச் சொல்லால் அறியப்படும்.

தென்திசைக் கொரு வேந்தனாம் -திருமந்திரம்.[31]

யா =நீர் அல்லது கடல். மெசபத்தோமியக் கடவுள் யா என்பவன் கடல் தெய்வமாகவே கருதப்படுகின்றான். வெள்ளத்தால் இவ் வுலகை அழித்தவனும் அவனே. தமிழ் இலக்கியங்கள் யா மரம் என்றவொரு பாலை நில மரம் பற்றிக் கூறுகின்றன. குறுந்தொகை யில் இம்மரம் பற்றியச் செய்திகள் காணப்படுகின்றன.[32] யா மரத்தின் பட்டைகளில் மிகுந்த நீர் தேங்கியிருக்கு மென்றும், யானை அம்மரப்பட்டையை உரித்துத் தன் பிடிக்கு, அதன்

உள்ளிருக்கும் நீரை அளிக்குமென்றும், குறுந்தொகை கூறுகின்றது. இதன் படி, யா மரம் என்பது, நீர் மரமே என்று அறியலாம்.

தொல்காப்பிய பாயிரத்தில் தமிழகத்தின் எல்லைகளைக் கூற வந்த பனம் பாரனார்,

"வடவேங்கடம் தென்குமரி
யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்"

என்று கூறினார். இவ்வரிகளைத் தவறாகப் புரிந்துகொண்ட உரையாசிரியர்கள், தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கெல்லைகளை மட்டுமே கூறி, கிழக்கு மேற்கு எல்லைகளைக் கூறாமல் விடுத்தார் என்றனர். ஆயிடை - யாயிடை என்ற சொல்லுக்கு "ஆகியவை" என்றவாறு பொருள் கொண்டனர். யாயிடை என்ற சொல்லை, ஆயிடை எனக் கருதினர். "யா யிடை" என்பது கடலுக்கு அல்லது கடல்களுக்கு இடையே எனப் பொருள் கொண்டதாகும். வடக்கே வேங்கடம், தெற்கே குமரி, கிழக்கிலும் மேற் கிலும் கடல்கள் என்பதே அதன் பொருளாகும். எனவே, மேலை இலக்கியங்கள் கூறும் யா என்பது கடலே என்பதைத் தமிழ் இலக்கியங்களும் உறுதி செய்கின்றன எனலாம்.

யா=நெடுநாள் வாழ்கின்றவள் என்ற பொருளில், ஆயா (Aayaa) என்ற செமிட்டிக் சொல் விளக்கப்பட்டுள்ளது. இதே பொருளைத் தாங்கியிருக்கும் தமிழ்ச் சொல்லும் ஆயா என்றே சொல்லப்பட்டு, இன்றும் கூட வழக்கில் அச்சொல் உள்ளது என்பதை நோக்குக. ஆயா என்ற சொல்லுக்கான மூலம் தமிழில் உள்ளதால், மேற்கித்தியச் சொல், தமிழினின்றும் கொள்ளப் பட்டதே எனலாம். முல்லைநிலத்துப் பெண்டிரையும், தாய் மற்றும் பாட்டியையும் ஆயா என்ற சொல்லால் தமிழ் இலக் கியங்கள் சுட்டுகின்றன.

ஆய், ஆய்குடி, ஆய்ச்சி,ஆய்மகள், ஆயம், ஆயர், போன்ற சொற்கள் முல்லை நிலத்தோடு தொடர்புடையன.

யா =கடவுள். மெசபத்தோமிய மற்றும் எபிறேய இலக் கியங்கள், யா என்ற சொல்லை, கடவுளோடு தொடர்புபடுத்து கின்றன. மெசபத்தோமியக் கடவுளாக யா அறியப்படுகின் றான். இவனே அப்பகுதியின் முழுமுதற் கடவுளா வான். எபிறேய மொழியில் யா-கோ-ஆ (Yaa-ho-ah) என்ற மலைக்கடவுள் பற்றிய செய்தி காணப்படுகின்றது. இச்சொல், யா என்ற வேர்ச்

சொல்லின் நீட்சியே என எபிறேய மொழியியலார் கருதுவ தோடு, இச்சொல்லுக்கு "முக்காலமும் கடந்த" (to be) என்றவாறும் பொருள் கூறுகின்றனர். தமிழ் இலக்கியங்கள் கூறும் யாமன் என்ற கடவுள், கடலோடும், தென் திசையோ டும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளானே யன்றி, மேற்கித்திய இலக்கியங்கள் கூறும் பொருளில் சொல்லப்படவில்லை.

மேற்கித்திய இலக்கியங்கள் சொல்லாமல் விடுத்த யா என்ற சொல்லுக்கு, தமிழில் மேலும் சில விளக்கங்கள் காணப் படுகின்றன.

யா = இணைத்தல், கட்டுதல், சேர்த்தல் (to bind) என விரியும்.

யா -யாத்தல் என்பதற்கு இணைத்தல் என்பதே பொருளாகும்.

யா -யாக்கை : நரம்புகளாலும் எலும்புகளாலும் இணைக்கப்பட் டுள்ள மாந்த உடல்.

யாக்கை, ஆக்கை என்றும் சொல்லப்படும். இதற்கு நார், கயிறு போன்ற இணைப்புப் பொருள்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மரங்களை இணைக்கும் தைச்சர் (தச்சர்) யாணர் என்றே அழைக்கப்படுகின்றனர்.

யா என்பது காலத்தைக் கடந்த என்ற பொருளில் மேலை இலக் கியங்கள் கூறும் செய்திகளை, யாண்டு என்ற தமிழ்ச்சொல் தொடர்பு படுத்துகின்றது.

யா =காலம்; யாண்டு =காலத்தை அளக்கும் ஒரு கால அளவு.

யாத்திரை: இது சமற்கிருதச் சொல்லெனப் பலரும் மயங்கினர். உண்மையில் இது சரியான தமிழ்ச்சொல்லே. வடக்கிருந்த தமிழர், குமரிமுனைக்கு வந்து நீராடிச் செல்வது, தமது முன்னோர் கடலால் அழிந்துபோன நினைவைக் கொள்வதற்காகவே மேற் கொள்ளப்பட்டது. குமரிமுனை தென்திசையில், யாத்திசை யில் இருந்ததால், அப்பயணத்தை யாத்திரை என்றனர். திரையென் பது கடல் எனப்படும். யாத்திரை என்பது தென்கடல், தென் கடலுக்குச் செல்லும் பயணம் என்றவாறு அறியப்படும். யாத் திரை - யாத்ரா என்று சமற்கிருதத்தில் திரிந்து, அது எங்கும் மேற்கொள்ளும் பயணத்தையே பிற்காலத்தில் குறித்தது.

யாத்திரை = வழிபாட்டு இடங்களுக்குச் செல்லுதல் (Pilgrimage to sa-cred places) என்றவாறு பிற்காலத்தில் சொல்லப்பட்டது என்க.

யாத்தரையென்பது, தென்னாடு எனவும், யாத்திரை என்பது தென் கடல் எனவும் கொள்க.

யாப்பு: கட்டுதல் (to bind) சொற்களைக் கட்டிப் பாடல் இயற்றுதல். யாப்பிலக்கணம், யாப்பருங்கலம் என்ற சொற்களை ஒப்புநோக்கு.

யாமன் : தென் திசைக் கடவுள் அல்லது தென்கடற் கடவுள் என்க.

யாமம்: யாமன் நடுநிசியில் வந்து உயிர்களைக் கவர்ந்து செல்வான் என்ற நம்பிக்கையில், யாமன் வரும் நடுநிசிப் பொழுது, யாமம் எனப்பட்டது.

யாமிகன் : யாமம் என்பது நடுஇரவு என்ற பொருளில், இரவு நேரக் காவல்காரன் யாமிகன் எனப்பட்டான்.

யா-அகம்-யாவகம்: தெற்கில் உள்ள நாடு. தற்போது ஜாவா எனத் திரிந்துள்ளது.

ஆயா -வேர்ச்சொல்யாது? ஆயா என்பவள் நெடுங்காலம் வாழ்பவள் என்ற பொருளில், யா என்ற சொல்லே மூலச்சொல்லாயிற்று. தமிழ் ஒலிப்புகளில், ஆ,ஈ, ஊ, ஏ,ஓ என்ற நெடில்களே முதலில் தோன்றியவைகளாக, அறிஞர்கள் கருதுகின்றனர்.

யா+ஆ =யா எனப்பட்டது. ஆ என்ற சொல்லுக்குப் பிறகே யா என்ற சொல் தோன்றியதால், ஆ என்பதே, யா வின் வேர்ச்சொல் லாகும். பல இடங்களில் ஆ-யா ஆகிய இவ்விரு எழுத்துகளும் ஒரு பொருளைக் குறித்தே எழுதப்பட்டன.

ஆடு - யாடு; ஆண்டு-யாண்டு; ஆனை-யானை; ஆக்கை -யாக்கை என விரியும். இதனைப் பிற்கால வழக்காகவே கருதவேண்டும்.

ஆவரும் இடத்தில் யாவையும் பயன்படுத்தலாம் என்ற நிலையில், ஆ-யா என்ற இரு சொற்களும் இணையும்போது, அவை ஒரு பொருளைக் குறித்து சொல்லப்பட் டிருக்க வாய்ப்பில்லை எனலாம்.

யா என்ற சொல், நீண்ட நாள் வாழ்கின்ற பெண்ணையும், ஆ என்ற சொல், அப்பெண் முதன்முதலில் தோன்றியவள் என்ற பொருளையும் தருகின்றன எனலாம். யா என்ற பெயர்ச்சொல் லை விவரிக்கும் அல்லது விளக்கும் சொல்லாகவே (Adjective) ஆ என்ற சொல் உள்ளதால், ஆயா என்பது இரு சொற்கள் இணைந்து பின்னர் ஒரே சொல்லாகக் கருதப்பட்டது எனலாம்.

யா-ஆயா என்ற சொற்களுக்கான வேர்ச்சொற்களைப் பற்றிய விளக் கங்களில், தமிழறிஞர்கள் முரண்படுகின்றனர். ஏற்கனவே சொல் லப்பட்ட விளக்கங்களில், மேலை இலக்கியங்களில் காணப் பட்ட யா என்ற சொல் பற்றி எந்தத் தமிழறிஞரும் கருத்தில் கொள்ளவில்லை.

தென்பகுதியைச் சார்ந்தவன் என்ற பொருளைத் தரும் யாவன் (Yaavan) என்ற எபிரேயச் சொல், முனை முறியாத

தமிழ்ச்சொல்லாகும்.[33] அதனை, யவன் என்றும் யவனர் என்றும், யகர ஒற்றை முன்னிறுத்தி எழுதியதோடு, அதற்குப் பொருந் தாத விளக்கங்களையும் கூறினர்.

மேற்கித்திய மொழிகளில் அறியப்படும் பல சொற்களுக்கு (ஆயா, யா, யாவன் யா-கோ-ஆ போன்றவை) யா என்பதே, வேர்ச்சொல் என்று சொல்லப்பட்டாலும், யாவுக்குரிய வேர், தமிழ் மொழியில் உள்ளதை, மேற்கித்திய மொழியியலார் அறிந் திருக்கவில்லை என்க.

அவ்வை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, அ+ஆய் அல்லது அய்+ஆய் என்ற என்ற இரு சொற்களின் கூட்டே என்க. அவ்வாய்-அவ்வை எனப்பட்டது. இன்றும் தெலுங்கு மொழி யில் அவ்வா என்ற சொல், பாட்டியைக் குறிப்பதே என்க. முதல் மாந்தனும் அவனது மனைவியும் தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருந்தவர்களே. அவர்கள் எந்நாட்டில் குடியிருந்தனர் என்பதை விவிலியம் கோடிட்டுக் காட்டுகிறது. ஆனால் அதன் உட்பொருளையும், தமிழ்மொழியையும் அறிந்திராத மேலை நாட்டவர், ஆதாம்-ஆயா வாழ்ந்திருந்த நாடு, மெசபத்தோ மியாவே என்று கருதினர். அவர்களது கருத்துக்கு விவிலியத் திலேயே மறுப்புள்ளதை அவர்கள் அறிந்திருக்க வில்லை.

பிற்காலத்தில் எழுதப்பட்ட (அருளப்பட்ட) சமய இலக் கியமான குர்-ஆன், ஆதாம் இலங்கை என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட ஈழத்தில் வாழ்ந்திருந்ததாகக் கூறுகிறது.[34] ஆதாமுக்கு முதல் நபி என்ற தகுதியை குர்ஆன் வழங்குகிறது. அவனுக்கு பத்துப் பகுதிகளை அல்லா ஓதியதாகவும் கருதப் படுகின்றது. இந்தப் பகுதிகளைக் "கேட்டறிந்தவன்" என்றும், இலக்கிய நடையில் "செவியுள்ளவன்" என்றும் சொல்லப் பட்டுள்ளது. செவியுள்ளவன் என்ற தமிழ்ச்சொல்லே "சபி யுல்லா" என்று திரிந்திருக்க வேண்டும். இசுலாமிய அறிஞர்கள், இச்சொல்லுக்குத் தேர்வு செய்யப்பட்டவன் என்று பொருள் கூறுகின்றனர்.

"ஆதாம், ஏழாவது மாநிலத்தில் (Seventh heavan) வாழ்ந் திருந்தான். (குமரிக் கண்டம் ஏழு மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டிருந்ததை நோக்குக.) அங்கு தான் ஆயாவும் படைக்கப் பட்டாள். இருவரும் அல்லாவின் (இதுவும் தமிழ்ச் சொல்லே) கட்டளையை மீறியதால், ஆதாம் இலங்கையிலும் (குமரிக்

கண்டத்தின் ஏழ் தெங்க நாடு என்க),ஆயா அரேபியாவின் (ஏழ் பின்பாலை நாடென்க) மா கா (ஆயமமயா) விலும் வாழும்படியாகப் பிரிக்கப்பட்டனர். பின்னர் கா-பிரி-எல் (எல் கடவுளின் தூதன்) என்பான்,இருவரையும்இணைத்து வைக்க, இருவரும் சரண்தீவு (Sarandip) என்ற ஈழத்தில் வாழ்ந்திருந்தனர். = சுரா II, 39.

மேற்கண்ட செய்தியின்படி,ஆதாம் படைக்கப்பட்ட நாடு, ஏழ் தெங்க நாடென்பதும், "இடன்" (Eden) தோட்டமே, அவ்விருவரின்முதல் குடியிருப்புப் பகுதியென்றும் அறியக் கிடக்கின்றது. இசுலாமிய அறிஞர்கள், இத்தோட்டம் இருந்த பகுதியை, "யா நாடு" (Jannatu) என்றே அழைக்கின்றனர்.[35] இத்தோட்டம் நான்காம் மாநிலத்தில் (Fourth heaven) இருந்ததென்பர். இப்பகுதியில் இரண்டு பேராறுகள் பாய்ந்திருந்ததாக, முகமது தாயிர் என்பார் கருதுகிறார்.[36] (குமரிக் கண்டத்தில் பஃறுளி, குமரி என்ற பேராறுகள் பாய்ந்தோடியதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.) விவிலியம், சிந்து ஆறு உள்ளிட்ட நான்கு ஆறுகள் (சிந்து, நைல், தைகிரிஸ்) பாய்ந்திருந்ததாகக் கூறுகிறது.[37] நான்காறுகளின் ஓட்டவிடம் வெவ் வேறு நாடுகளில் அறியப்பட்டிருந்தாலும், அக்காலத்திய விவிலிய ஆசிரியருக்கு இந்த நான்கு ஆறுகளே தெரிந்திருந்தன எனக் கருதலாம். இக்கருத்தை, தாயீர் வேறொரு இடத்தில் கூறுகிறார் (மேலது, ப. 169) குமரி, பஃறுளி என்ற குமரிக்கண்டத்து ஆறுகளை, யாகூன் (Jahun) என்றும், யாகான் (Jahaan) என்றும் அரேபியக் குறிப்புகள் கூறுவதாகக்கொள்ளலாம்.

இலங்கையில் இன்று அறியப்படும் ஆதாம் மலை (Adam's peak), ஆாமின் காலடிச் சுவடுகள் (Foot Prints), ஆதாம் பாலம் (Adam's bridge) ஆகியவை, நம்பிக்கையின் அடிப்படையில் சொல்லப்பட்டாலும், ஏதோவொரு வகையில், ஆதாமை இப்பகுதியோடு இணைப்பதை மறுப்பதற்கில்லை.

ஆதாம்-ஆயா வாழ்ந்திருந்த பகுதியை "இடன்" (Eden) என்று செமிட்டிக் மொழியில் கூறுகின்றனர். இடன் என்ற சொல்லுக்கு, விரிந்துபரந்த இடம் என்றே (spacious land) பொருள் கூறப்பட்டுள்ளது.[38] இடன் என்பது, இடினு (Edinu) என்று செமிட்டிக் இனத்தின் அக்காடிய மொழியில் சொல்லப்பட்டுள்ளது. இப்பகுதியைப் பற்றி எழுதிய மேற்கித்திய விவிலிய ஆசிரியர், இடன்தோட்டம் கிழக்குத் திசையில் இருந்ததாகக்

கூறுகிறார். (Gn.2:8) கிழக்குத் திசையென்பது, பாலத்தீனத்துக்குக் கிழக்கேயிருந்த நாடு எனப் பொருள் வேண்டும். இடன் என்பது சுமேரியச் சொல்லென்பது ஆய்வாளர்களின் கருத்து.[39]

ஆதாம்-ஆயாவைப் பற்றிக் கூறப்படும் அனைத்துச் செய்திகளும், மேற்கித்திய நாடுகளுடன் தொடர்பற்று இருப்பதையே காட்டுகின்றன. கிழக்குத் திசையெனக் குறிப்பிடுவதும், இரு ஆறுகளைப் பற்றிய குறிப்புகளும், இலங்கை பற்றிய செய்திகளும், நான்காம் மாநிலம் மற்றும் ஏழாம் மாநிலம் பற்றிய தகவல்களும், கடலால் அழிந்துபோன குமரிக் கண்டத்தையே சுட்டுகின்றன எனலாம். உலகை அழித்த கடல் கோள் பற்றிய செய்திகளையும் பிற்பகுதிகளாக அம்மேலை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

இடன் என்ற சொல்லை, ஐரோப்பியர்கள் ஈடன் என்றவாறு, தவறாக ஒலித்து விட்டனர். இடன் என்பது சரியான தமிழ்ச்சொல்லாகும். இடம் என்பதே, இடன் என்று சொல்லப்பட்டு, ஈற்றுப் போலியானது. இடன் என்ற சொல்லை, தமிழ் இலக்கியங்கள் பெருவாரியாகப் பயன்படுத்துகின்றன.[40] எனவே, ஆதாம்-ஆயா வாழ்ந்திருந்த நாடு, மேலை இலக்கியங்கள் கூறும் செய்திகளின்படி, கொடுங்கடல் கொண்ட குமரிக்கண்டமே எனக் கொள்வதற்கானச் சான்றுகள் பெருமளவில் உள்ளன.

ஆதாம் -ஆயா பேசிய மொழியாது? ஆதாமின் வழித் தோன்றலான நோவா என்பவன் (ஆதாமுக்குப் பிறகு 10000 ஆண்டுகளில் வாழ்ந்திருந்தவன் எனக் கருதலாம்) காலத்தில், உலகில் ஒரு மொழியே பேசப்பட்டது என்றும், வேறு மொழிகள் அறியப்படவில்லையென்றும், மேலை இலக்கியங்கள் தெளிவுபடுத்துவதால், ஆதாம் முதல் நோவா வரையிலான காலத்தில், அம்மக்கள் இனம் ஒரு மொழியையே பேசியதாகக் கொள்ளலாம். ஆனால் அம்மொழி யாதென விளக்கப்படவில்லை. இருப்பினும் ஆதாம்முதல் நோவா வரையிலான தலைமுறையினர் வாழ்ந்திருந்தது குமரிக் கண்டமே என்ற கருத்தை வலியுறுத்தும் சான்றுகளின் அடிப்படையில், குமரிக் கண்டத்தில் பேசப்பட்ட மொழியே, அந்த ஒரு மொழி எனக் கொள்வதில் தவறில்லை. குமரிக் கண்டம் தமிழர்களின் தாயகம் என்பதும், அங்கு தமிழ் மொழியே பேசப்பட்டது என்பதும் கிழக்கித்திய இலக்கியங்களின் வாயிலாக உறுதிப் படுத்த இயலும்.

ஆதாமின் கதையில், கடவுள் ஆதாமை அழைத்து, தான் படைத்த அனைத்திற்கும் பெயர்களைச் சூட்டுமாறு கேட்டுக் கொண்டதாக விவிலியம் கூறுகிறது.[41] வானத்துப் பறவைகளுக்கும், காட்டு விலங்கினங்களுக்கும், நாட்டின் நிலப்பகுதிகளுக்கும், கடல்களுக்கும் ஆறுகளுக்கும், மலைகளுக்கும் இன்னோரன்ன படைப்புகளுக்கும் ஆதாம் பெயர்களைச் சூட்டினான் என்று விவிலியம் கூறுகிறது. அப்பெயர்கள் அனைத்தும் சரியாக விருந்தனவென்று கடவுளே ஒப்புதல் கொடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. அப்பெயர்கள் அனைத்தும் எம்மொழிச் சொற்கள் என விளக்கப்படவில்லை. இச்செய்தியின் வழியே, உலகப் பொருள்களுக்கு ஆதாம் பெயர் சூட்டியபோது, கடவுளும்அவனுக்கு உதவியதாக இருந்தார் என்பது குறிப்பு.

ஆதாம் சூட்டிய பல பெயர்களை எடுத்துஆய்வு செய்யுங்கால், அவை தமிழ்ச் சொற்களாகவே உள்ளன என்பதைக் காணலாம்.

ஆதாம் -ஆயா என்பன தமிழ்ச் சொற்களே.

அரபு இலக்கியம் குறிப்பிடும் ஏழு நாடுகள் (குறிப்பாக நான்கும் ஏழும்), குமரிக் கண்டத்தின் ஏழு மாநிலப் பிரிவுகளே.[42]

இடன் என்ற சொல்லும் தமிழ்ச்சொல்லே

இடன் தோட்டத்தில் பாய்ந்திருந்ததாகக் கருதப்படும் ஆறுகளும் தமிழ்ப் பெயர்களைக் கொண்டவைகளே.

ஆதாம் -ஆயாவை ஏமாற்றிய பாம்பு, நாகம் (Nahas) என்ற தமிழ்ச் சொல்லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாம் இலங்கையில் வாழ்ந்திருந்ததாக, குர்ஆன் தெரிவிக்கின்றது. இலங்கை அக்காலத்தில் குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியே என்க.

ஆதாம்-ஆயாவின் இரண்டு மக்களின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாக வே உள்ளன. (காயன், அப்பா-எல்).

ஆதாமைப் படைத்த கடவுள், எல் என்ற தமிழ்ச்சொல்லால் அறியப் படுகிறார்.

ஆதாம் முதல் நோவா வரையிலான தலைமுறையினர் குறித்த பெயர்களில் பெரும்பாலானவை தமிழ்ச்சொற்களாகவே உள்ளன. (யாநோக்கு, சிலை, ஆடை, துவள், காயன், நாவாயன் என்ற நோவா என விரியும்).

மேற்கித்திய செமிட்டிக் மொழி இலக்கியங்கள் தரும் குறிப்புகளின் படி, நடுத்தரைக் கடலுக்கு அருகே அமைந்திருந்த நாடுகளின் புவியியல் தொடர்பான மலைகள், கடல்கள்,

ஆறுகள், சமவெளிகள், ஊர்கள், நகரங்கள், மாந்தப் பெயர்கள், அவர்களது கடவுளர்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர்களாக வோ, தமிழினின்றும் திரிந்த சொற்களாகவோ உள்ளனவென் பதை ஆய்வுகள் வழியே மெய்ப்பிக்க இயலும்.

மேற்கண்ட செய்திகளின்படி, தமிழ் மொழிக்கும் மேற்கித் தியசெமிட்டிக் மொழியினத்துக்கும் இடையே காணப்படும் உறவுகள், இவ்விரு மொழிகளைப் பேசிய மக்களின் முன்னோர் கள் ஓரினத்தைச் சார்ந்தவர்களே என்பதை மெய்ப்பிக்கும்.

ஆதாம்-ஆயா தொடர்புடைய தமிழ்-செமிட்டிக் சொற்களாவன:

Serpant: *சூயாயள - நாகம்*[43]

Serap - Snake - *சாரைப்பாம்பு.*[44]

சாரைப் பாம்பு (தமிழ்) - சர்ப்ப (சமற்கிருதம்) - செரப் (எபிறேயம்)
செர்ப்பா (கிரேக்கம்) -செர்ப்பன்ட் (Serpant) *ஆங்கிலம்.*

Can - *காயன்* (Son of Adam), *காய்த்தல்* (to yield).[45]

Ab-El (Son of Adam) *அப் என்பது அப்பா* (Abba) *என்ற எபிறேயச் சொல்லின் சுருக்கம். எல் -கடவுள். ஆப் -எல் =தந்தையாகிய எல் கடவுள்.*

Nod =Country. *நாடு என்ற சொல்லின் திரிபு.*[46]

யா நோக்கு: கடவுளைச் சேர்ந்தவன் அல்லது நோக்கியவன்.[47]

சிலை என்ற சொல்லின் திரிபு.[48]

ஆடை[49].

துவள் காயன். துவள் = கனிமங்களைத் துவட்டுதல்.[50]

கன்னன் =கரியவன்.[51]

14. தமிழ் செமிட்டிக் – புவியியல் கண்ணோட்டம்

செமிட்டிக் இனமாகக் கருதப்படும் மக்கள் வாழ்ந்த நாடுகளான மெசபத்தோமியா, பாபிலோன், ஈழம், கல்தேயம், ஃபோனீசியம், கனான், அரபு ஆகிய நாடுகள், கி.மு. 3000 ஆண்டுகளில், மிகச்சிறந்த நகரிய நாகரிக வளர்ச்சியில் திளைத்திருந்ததாக வரலாற்றுச் செய்திகள் வாயிலாகவும், அந்நாடுகளின் இலக்கியங்கள் வாயிலாகவும் அறியலாம். இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள், தங்களது ஊர், நகரம், நாடுகள், மலைகள், கடல்கள், சமவெளிகள் வளைகுடாக்கள் என இன்னோரன்ன புவியியல் தொடர்பானவைகளுக்கு இட்ட, அழைத்திருந்த பெயர்கள், அம்மக்களின் மொழிகள் மற்றும் புவியியல் அறிவினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. அந்நாடுகளில் அறியப்பட்ட பெயர்களுக்கும், தமிழ்ச்சொற் களுக்குமான தொடர்புகள் தெளிவாக உள்ளன. அவை பற்றிய விளக்கங்களை அடியிற்காணலாம்.

மெசபத்தோமியா: ஆய்வாளர்கள், மெசோ-படா-மியா என்றவாறு இப்பெயரைப் பிரிக்கின்றனர். இதற்கு மேட்டு நிலம் அல்லது இரட்டையாறுகளுக் கிடையே அறியப்படும் வளமான நிலம் என்பதே பொருளாகும். வடக்கே வண் (Van) ஏரியும், வடகிழக்கே காஸ்பியன் கடலும், மேற்கே நடுத்தரைக் கடலும், தெற்கே அரேபியாவும், தென்கிழக்கே பாரசீக வளை குடாவும், கிழக்கே ஈழநாடும், மெசபத்தோமியாவின் எல்லை களாக அமைந்திருந்தன. இன்றைய ஈரான், ஈராக், சிரியா, துருக்கியின் தென்பகுதி என அவை அறியப்படும். மெசபத் தோமியா என்ற சொல், மிசை +படன் +மியா என்று தமிழில் அறியலாம்.

மிசை = மேடு, உயரம், மேலே, உயர்ந்த என்றவாறு பொருள்விரியும்.

படன் =படர் அல்லது படர்ந்த சமவெளியைக் குறிக்கும்.

மியா = மேய் அல்லது மேயம் என்று, வளமையைக் குறிக்கும்.

வளமான, உயர்ந்த,சமவெளி என்றவாறு மெசபத்டோமியா என்ற சொல்லுக்கான பொருள் விளக்கப்பட்டுள்ளதால், தமிழில் அமைந்துள்ள பொருளும் அவ்வாறே எனலாம்.

படன் அறம்: அறம் என்பது சிறப்புமிக்க தமிழ்ச்சொல்லே எனலாம். அறம் என்ற சொல்லுக்கு பலவாறு பொருள் கொள்ளலாம். பிறருக்கும், தமக்கும் தம்மைச் சார்ந்த இனத்துக்கும், நாட்டுக்கும் நன்மையைத் தரும் செயல்கள் அறம் என்றவாறு பொருள் கொள்ளப்படும். தீமைகளை விலக்கும் செயல்கள் அறச் செயல்களாகக் கருதப்படும். வெள்ளத்தினின்றும் மீண்ட நோவா என்பானின் மகன் செம் என்ற தலைமகனின் ஐந்து மகன்களில், அறம் என்பான் கடைமகன் ஆவான். அறம் (Aram) என்ற சொல்லுக்கான வேரினையும் பொருளையும் கண்டறிய இயலாத மேற்கித்திய மொழியியலார், அச்சொல் பற்றி விளக்கம் எதனையும் அளிக்காமல், சொல்லின் மூலம் தெரியவில்லையென கையை விரித்துவிட்டனர். இதன்மூலம் அறியாத அவர்கள், அறம் என்ற சொல்லை, அறாம் என்றும் தவறாக ஒலித்தனர்.

பிற்காலத்தில் அறம் என்பானின் மரபினர் பல்கிப் பெருகி, யூப்ரதீசு -தைகிரீஸ் ஆறுகளுக்கு இடைப்பட்ட வளமான சமவெளிப் பகுதியில் குடியமர்ந்தனர். அப்பகுதி விரிந்து

படர்ந்திருந்ததால், படன் என்றவாறு சொல்லப்பட்டது.

பள் என்ற வேர்ச்சொல், படு,படி, படன்,படல்,படர், படை என்றவாறு விரிந்தது.[3]

படன் அறம் என்ற சொல், திரிபுபடாத தமிழ்ச் சொல்லாகும். அறம் என்பானின் மரபினர் படர்ந்து வாழ்ந்திருந்த பகுதியே படன் அறம் எனப்பட்டது.

மக்கள் வெள்ள காலத்துக்குப் பிறகு கிழக்கிலிருந்து மேற்கே சென்று குடியேறியபோது, ஒரு மொழியே உலகெங்கும் பேசப்பட்டது. பிற்காலத்தில் அந்த ஒரு மொழி பன்மொழிகளாகக் கிளைத்தது. அம்மொழிகளே செமிட்டிக் மொழிகள் எனப்பட்டன. அம்மொழிகளில் ஒன்றாக, அறமாயிக் என்ற மொழியும் கருதப்படுகின்றது.

வாய் என்பது முகத்திலுள்ள ஒருருப்பு என்று பொருள் கொள்ளப்பட்டாலும், இலக்கியப் பார்வையில், அது மொழியென்றும் சொல்லப்பட்டது. அதனாலேயே, வாய்மொழி

என்றும் சொல்லப்பட்டது. வாயால் பேசப்படும் மொழியை, வாய் என்றே அழைத்தனர். அறம் வாய் என்பது, அறம் என்ற மரபினர் பேசிய மொழியெனக் கொள்க. அறம் வாய் என்ற தமிழ்ச்சொல், அறமாய் -அறமாயிக் எனத் திரிந்தது.

படன் அறம் பகுதியில் பிற்காலத்தில் (கி.மு.3000) குடியேறிய எபிறேய மக்கள் தங்கள் கிழக்கித்திய மொழியுடன் அறமாயிக் மொழியையும் கலந்து பேசினர். எனவே, படன் அறம் பகுதியில் எபிறேயம் - அறமாயிக் ஆகிய இரு மொழிகளும் ஒன்றையொன்று தழுவி நின்றன. பிற்காலத்தில் இலக்கிய வடிவில் எபிறேயமும், பேச்சு வழக்கில் அறமாயிக் மொழியும், படன் அறம் பகுதியில் வாழ்ந்திருந்த மக்களால் பேசப்பட்டது. எபிறேயம் -அறமாயிக் என்பது, தமிழ்க் கண்ணோட்டத்தில் கூறுவதென்றால், தமிழில் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் உள்ள இடைவெளியைப் போன்றதே என்க.

யூப்ரதீஸ்[4] - தைகிரீஸ் 45 ஆறுகள்: மேற்கித்திய நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கியது இந்த ஆற்றங்கரையின் நாகரிகமே. புறத்து என்றும், இபுறத்து (Purattu - Epurathu) என்றும் அக்காடிய மொழியில் இவ்வாறு அழைக்கப்பட்டது. வடக்கே ஆர்மீனிய மேட்டுநிலத்தில் தோன்றி, மேற்குமுகமாக வளைந்து, பின்னர் தெற்கு நோக்கி ஓடிவந்து, பாரசீக வளைகுடாவில் கலக்கும் இவ்வாறு, 700 கல் தொலைவில் தனது பயணத்தை மேற்கொண்டுள்ளது. யூப்ரதீசுக்கு இணையாக வலப்புறத்தே ஓடிவந்து, பாரசீக வளைகுடாவிற்கு சற்று வடக்கே யூப்ரதீசுடன் இணைந்து விடுகிறது.கி.மு. 3000 ஆண்டுகளில், இவ்விரு ஆறுகளும் தனித்தனியே கடலில் கலந்தன வென்றும், இவை அடிக்கடி தமதுபோக்கை மாற்றிக் கொண்டிருந்தன என்றும் செய்திகள் கூறுகின்றன.

யூப்ரதீசு ஆறு, புறத்து ஆறு அல்லது இப்புறத்து ஆறு என்றும், தைகிரீசு ஆறு அப்புறத்து ஆறு[6] என்றும் சொல்லப்பட்டுள்ளன. இப்புறத்து ஆறு (Shis side) என்று அறியப்படும் யூப்ரதீசின் வேறு சிலபெயர்களும், சில குறிப்புகளில் காணப்படுகின்றன. இந்த இரட்டை ஆறுகளில், யூப்ரதீசு ஆறே நீளமானது என்பதால், அது பேராறு எனப்பட்டது. பேராறு எனப்பட்ட தமிழ்ச்சொல், பேராட் (0) என்று எபிறேய மொழியில் திரிந்துள்ளது. யூப்ரதீசு பேராறு என்றால், தைகிரீசு சின்னாறு என அழைக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா?

அப்படியே அது சின்னாறு என்றே அழைக்கப்பட்டது. சின்னாறு என்ற தமிழ்ச் சொல், சினார் (Shinar),செனார் (Shenar), சின்னார் (Sennar) என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் இடிக்காலத் (Idikaalat) என்றும் இடக்கலாத் (Hidekkalat) என்றும் தைகிரீசு ஆறு அழைக்கப்பட்டுள்ளது. இச்சொற்களுக்கான பொருள் அறியப்படவில்லை. மூலமும் அறியப்படவில்லை. இவை, இடிக்கலுழி என்ற தமிழ்ச்சொல் லே எனத் தெளிக. கலுழி என்பது, கலங்கலான நீரைக் கொண்டுள்ள ஆறு எனவும், இடி என்பது விரைந்து நீரை தள்ளிக் கொண்டு ஓடிவரும் ஆறு எனவும் கருதப்படும். இடிக் கலுழி என்பதே, இடிக்கலாத்து எனப்பட்டது. யூப்ரதீசு ஆற்றைக் காட்டிலும் விரைவான நீரோட்டமும், நிறைந்த நீர்கொள்ளளவும் கொண்டது இடிக்கலாத்து ஆறு என்பது வரலாற்றுக் குறிப்பு.

சுமேரிய மொழியில் "இடிஞ்ச" ஆறு எனப்பட்டது. இடிஞ்ச (Idigna) என்ற சொல்லுக்கு, விரைந்த நீரோட்டம் (fast flowing) என்று பொருள் கூறப்பட்டுள்ளதால், இடி -இடித்தல் - இடித்துத் தள்ளுதல் என்ற தமிழ்ப் பொருளைத் தரும் சொல் லாகவே, வழக்குச் சொல்லாக இன்றும் தமிழ்நாட்டில் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. இடிஞ்ச என்ற சொல்லையொத்த, இடிக்கலாத்து என்ற அக்காடியச் சொல்லை ஒப்பிடுக.

எனவே, யூப்ரதீசு -தைகிரீசு ஆறுகளுக்கு அக்காலத்தில் குறிக்கப்பட்ட பல்வேறு பெயர்களும் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே என்பதும் தெளிவு. தைகிரீசு என்பது பிற் காலக் கிரேக்கச் சொல்லாகும்.

யோர்தான்: தான் ஆறு (Yordon) என்ற பெயரே, யோர் தான் எனத் திரிந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யோர் தான் செமிட்டிக் மொழியில் கூறுகின்றனர்.[7] உலகிலேயே மிகவும் தாழ்வான, அதாவது கடல் மட்டத்துக்குக் கீழே 696 அடி முதல் 1286 அடிவரையிலும் பள்ளமான இடத்தில் இவ்வாறு ஓடிவருகிறது. ஏறுமன் (Hermon) என்ற மலையில் தொடங்கி, கலிலீ கடலில் (ஏரி)கலந்து, பின்னர் தொடர்ந்து, சாக் கடலில் (ஏரி) கலக்கின்றது.

யோர்தான் என்ற சொல்லின் பின்னொட்டுச் சொல்லான தான் என்பது, யாக்கோபு என்பவனின் மகன்களில் ஒருவன்

பெயராகும்.[8] கி.மு. 1250 ஆண்டுகளில், எபிறேய மக்கள் கனான் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டபோது, தான் என்பனின் மரபினருக்காக, வடக்கேயிருந்த ஏறுமண் பகுதி ஒதுக்கப்பட்டு, வரலாற்றில் அப்பகுதி "தான்" என்றே அழைக்கப்பட்டது. அறம் என்பவனின் பெயரில் ஒரு பகுதியிருந்ததை நினைவில் கொள்க. தான் என்ற பகுதியில் தோன்றிய ஆறு, தான் யாறு எனப்பட்டது. எபிறேய மொழியில் ஆற்றின் பெயர் முடிவிலும் ஆறு என்ற சொல் முதலிலும் வைத்துச் சொல்லப் படுவது அம்மொழியின் மரபு. (தமிழில் பெயர் முதலிலும், ஆறு முடிவிலும் சொல்லப்படும். எகா. காவிரி ஆறு, வைகை ஆறு.)

மற்றொரு ஆறு, யார்தான் ஆற்றுடன் இடையில் கலக்கிறது. முந்தி வரும் அவ்வாறை முக் (Muk) என்ற பெயரால் அழைத்தனர். முக்கு, மூக்கு அல்லது முகம் என்ற பொருளில் அவ்வாறு சொல்லப்பட்டது. முந்தி வரும் ஆறு என்பதே அதன் பொருளாகும். அவ்வாற்றை யார் முக் (Yaa muk) என்றனர்.[9] இப்பெயரிலும் யார் என்ற சொல் முன்னிற்பதை நோக்குக. யார் எனச் சொல்லப்பட்டது, யாறு என்ற ஆறே என்பதும், தான்-முக் போன்றவை பெயர்களே என்பதும் தெளிவாகின்றன. இதனைத் தமிழ் வழக்கில் கூறுவதாயின் தான் ஆறு (Dan Yaar) என்றும், முக ஆறு (Muk -yaar) என்றும் கூறலாம். யார் முக் என்ற சொல், ஆறுமுகம் என்ற தமிழ்ப்பெயரோடு இணைவதை நோக்குக. ஆறு என்பது எண்ணையும் ஆற்றையும் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகும்.

கனான் நாட்டின் நடுப்பகுதியில் தோன்றி, நடுத்தரைக் கடலில் கலக்கும் ஓராற்றின் பெயர் யார்கோன் (Yaarkon) என்பதாகும்.[10] கோன் என்பது மன்னனைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும் கோனாறு என்றவாறு தமிழ் வழக்கில் அதனைக் கூறலாம்.

தானாறு என்பது யார்தான் எனவும் (ஜோர்டான் என்பது ஆங்கிலத் திரிபு).

முகவாறு என்பது யார்முக் எனவும்,

கோனாறு என்பது யார்கோன் எனவும்,

சொல்லப்பட்டுள்ள நிலையில், ஆறு என்ற தமிழ்ச்சொல்லே அங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

சிற்றாறுகள் வடி (Wadi) எனப்பட்டன: வடகிழக்கு எகிப்துக்கும், தென்மேற்கு பாலத்தீனத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் சில சிற்றாறுகள் ஓடுகின்றன. அவை மழைக் காலத்தில் மட்டும் வெள்ளப் பெருக்கைக் கொண்டிருக்கும். கோடையில் வறண்டு போகும். வறண்ட அச்சிற்றோடைகள், வணிகர்களின் வழித் தடங்களாகப் பயன்பட்டன என்று குறிப்புகள் கூறுகின்றன. அச்சிற்றோடைகளை "வடி" என்ற சொல்லால் அழைத்தனர்.

வடி துமிலத் (Wadi Tumilat) என்ற சிற்றாற்றைக் கடந்து, எபிறேய மக்கள், எகிப்தினின்றும் மீண்டபோது, கனான் நாட்டில் (பாலத்தீனத்தில்) நுழைந்ததாக, விவிலயத்தின் பயணம் (Exodus) என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது. துமி (Tumi) என்ற தமிழ்ச் சொல்லும் நீரைக் குறித்துச் சொல்லப்பட்டதே. துமி அற்று (Without water) என்ற தமிழ்ச் சொல்லே, துமிலத்து எனத் திரிந்துள்ளது.துமிலத்து வடி அல்லது துமிலற்ற வடி என்ற தமிழ்ச் சொற்களே, வடி துமிலத் எனப்பட்டது.

வள் -வடி-வடிதல் = பள்ளத்தை நோக்கிச்செல்லுதல்.

வள் - வடி -வடு =தொடர்ந்து செல்வதால் ஏற்படும் தடம் அல்லது குறி.

வடு என்ற தமிழ்ச் சொல்லுக்கு, நீளுதல்அல்லது விரிதல் என்பதே பொருளாகும்.

வடு என்ற திசையே வடுகு எனப்பட்டு, பின்னர் வடக்கு என்றானது. வடுகர், வடக்கே வாழ்பவர். வடக்கிலிருந்து வீசும் காற்று வாடை எனப்பட்டது.

நடுவில் வடுஅல்லது ஓட்டையுள்ள உணவுப் பண்டம், வடை எனப்பட்டது.

நகர் என்ற சொல்லும் ஆற்றையே குறித்தது: இன்றைய இலெபனான் (முற்காலத்து ஃபோனீசியா) நாட்டின் பீகா பள்ளத்தாக்கில், நகர் ஆசி (Nahar Aasi) என்ற ஆறு, தற்காலத்தில் நகர்-அல்-ஆசி என்று அழைக்கப்படுகின்றது.[12] ஃபோனீசிய மொழியில் நகர் என்ற சொல், ஆற்றைக் குறித்தது.

இன்றைய பெய்ரூட் நகரத்துக்கு (நீருற்று என்ற தமிழ்ச் சொல்லே, பீரூட் -பெய் ரூட் எனத் திரிந்தது) அருகில் ஓடும் ஓராற்றின் பெயர், நகர் அல் கால்ப் (Nahar -al kalb) என்பதாகும். கால்ப் என்ற சொல்லுக்கு ஓநாய் (Wolf) என்பதே பொருளாகும். அந்த ஆற்றல் கரையில், அக்காலத்தில் ஓநாய்

சிலையொன்று வைக்கப்பட்டிருந்ததாகவும், பகைவர்கள் அந்நகரை நெருங்கும் காலத்தில், அச்சிலை ஓலமிடும் என்றும் ஒரு கதை சொல்லப்படுவதால், அவ்வாற்றை, ஓநாய் ஆறு என அழைத்தாகச் சொல்வர். ஓநாயின் கூச்சல், காதைப் பிளக்கும். காள் காள் எனக் கத்துவதாகத் தமிழில் பேச்சு வழக்குண்டு. காள் என்ற தமிழ்ச்சொல்லே, காள்ப் (Kalb) எனத் திரிந்தது என்க.

அரபு மொழியிலும் ஆற்றை நகர் என்ற சொல்லால் குறித்துள்ளனர்.

நகர் என்பது தமிழ்ச் சொல்லாக உள்ளதால், அக்காலத்தில் தமிழர்களும் ஆற்றை நகர் என்ற சொல்லால் அழைத்திருக்க வேண்டும். நகர் என்ற சொல்லுக்கு, நீளூல் - விரிதல்-நகர்தல் (to move) என்றவாற தமிழில் பொருள் அறியப்படும். ஆற்றை நகர் என்று அழைத்ததால், ஆற்றங்கரையில் இருந்த ஊரும் நகர் (town) என்றே அழைக்கப்பட்டது. ஆற்றங்கரையின் நகரம் அனைத்து வளங்களயும் கொண்டிருந்ததால், மக்களிடையே பண்பாட்டுச் சமூகவியல் வளர்ச்சிகள் தோன்றின. நகர்ப் புறத்தில் தோன்றிய இவ்வளர்ச்சியை, நகரிகம் என்றனர். நகரிகம் பிற்காலத்தில் நாகரிகம் எனப்பட்டது.

இந்தியாவிலும் நகர் என்ற சொல் ஆற்றையே குறித்தது என்பதை, காசுமீரத்து மொழி உறுதிப்படுத்துகின்றது. காசுமீரத்தின் ஆற்றங்கரையிலிருந்த ஊர்களில் (நகர்களில்), பண்டிதர்கள் என்ற பிராமணர்கள், பெருமளவில் வாழ்ந்திருந்தனர். அப்பண்டிதர்களை, ஆற்றின் பெயராலேயே நகர் என்றே அழைத்தனர். நகர் என்ற தமிழ்ச்சொல் நெகர் (Nehr) என்று திரிந்தது. காசுமீரத்துப் பண்டிதர்கள் நெகர் என்றே சொல்லப்பட்டனர். இச்சொல் குடும்பப் பெயராகவும்மாறியது. இந்தியாவின் முதல் தலைமையமைச்சரின் பெயரான நேரு (Nehru) என்பது, நகர் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்க.

எனவே, மேற்கே குடியேறிய கிழக்கித்திய மக்கள்,தங்கள் பகுதியில் பாய்ந்தோடிய ஆறுகளுக்கு, தமிழ்ச் சொற்களாலேயே பெயர்களைச் சூட்டினர் என்பது தெளிவாகின்றது. யாறு, வடி, நகர்போன்ற தமிழ்ச் சொற்களாலேயே அப்பகுதியின் ஆறுகள் அழைக்கப்பட்டனவென்பது மேற்கண்ட விளக்கங்களால் அறியப்படும்.

ஏரிகள் மற்றும் பெரிய நீர்நிலைகள்: மெசபத்தோமியாவின் வடக்குப் பகுதியிலும், பாலத்தீனத்திலும் பெரிய மற்றும் சிறிய அளவில் பல நீர் நிலைகள் உள்ளன. இவை, கடல்கள் என அழைக்கப்பட்டாலும் உண்மையில் அவை ஏரிகளே. இந்த ஏரிகள் இயற்கையின் சீற்றங்களாலும், நில அதிர்வுகளாலும், புவி வெடிப்புகளாலும் தோன்றியவைகளே என, புவியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அவைகளில் சிறப் பான சிலவற்றைக் காண்போம்.

காஸ்பியன் கடல் - Marecs : மெசபத்தோமியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இடம்,3,71,1000 ச.கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. உலகின் மிகப்பெரிய ஏரி இதுதான். கடல் மட்டத்திலிருந்து 90 அடி தாழ்வானது. 3215 அடிகள் வரையிலும் இதன் ஆழம் உள்ளது. உப்புத்தன்மை கொண்டது. இந்த ஏரிக்கு வரத்தோ, நீர் வெளியேற்றமோ இல்லை.[14]

மாரே காஸ்பியம் என்பது கிரேக்கச் சொல்லாகும். மாரே என்ற சொல் நீண்டு மரைன் (Marine) எனத் திரிந்தது.[15] மாரே என்ற சொல், மா+ஏரி என்ற சொல்லினின்றும் திரிபு பட்டிருக்க வேண்டும். மாரைன் என்ற சொல்,மூலச்சொல் அன்று. எனவே, வாரணம் என்ற சொல்லினின்றே மரைன் என்ற சொல் பிறந்தது என்பது சரியான கண்ணோட்டமாகாது. மாரே-மரைன் ஆனதால், மாரே என்பதையே மூலச் சொல் லாகக் கொள்ளல் வேண்டும்.

கசப்பு என்பது கைப்பு என்ற சொல்லின் நீட்சியாகும். கை நிறைய உப்பைக் கொண்டு அதனைச் சுவைத்தால் தோன்றும் உணர்வு, கை +உப்பு -கையுப்பு -கைப்பு என்றானது. கைப்பு கசப்பு என்றும் நீண்டது. அருந்துவதற்குத் தகுதியில்லாத நீரைக் கொண்ட கசப்பு மாவேரி, மாரே காஸ்பியம் எனத் திரிந்தது என்க. இச்சொற்களின் மூலம் தமிழில் உள்ளதை நோக்குக.

வண் ஏரி (Lake Van): இதன் முற்காலப்பெயர் வண் கொளு (Van Golu) என்பதாகும். மெசபத்தோமியாவின் வடக்கே, கிழக்கு அனதோலிய மலைப்பகுதியில் இந்த ஏரி அமைந் துள்ளது. 75 கல் நீளமும் 50 கல் அகலமும் (120 கி.மீ. ஒ 80 கி.மீ) கொண்ட இந்த ஏரி ஆர்மீனிய நாகரிகத்தின் தோற்றப் பகுதி யாகும்.[16]

வண் என்ற தமிழ்ச்சொல்லுக்கு வளைவு என்பதே பொருளாகும். வண்ணம் என்றால் வளைவு என்றே பொருள்படும். வளைவான வானவில், வண்ணம் என்றே அழைக்கப்பட்டது. அவ்வானவில்லில் காணப்படும் நிறங்களும், பிற்காலத் தில் வண்ணம் என்றே சொல்லப்பட்டன. கொளு (Golu) என்ற சொல்,[17] குளம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. வளைவான அல்லது வட்டமான குளம், வண்குளம் என்று சொல்லப்பட்டு, வண் கொளு எனத் திரிந்துள்ளது.

ஊர்மியா ஏரி (Lake Urmia): தைகிரீசு ஆறு தோன்றும் பகுதிக்குக் கிழக்கே அமைந்துள்ள ஏரியைப் போன்றது. இந்த ஏரிக்குத் தெற்கிலிருந்து வரும் ஆற்றின் வழியில் நீர்வரத்து உண்டு.

இந்த ஏரி, நீருற்றுகளால் நீரைப் பெறுகின்றது. ஊர் என்ற வினைச் சொல்லுக்கு, வளர்தல், நீளுதல் என்பதே பொருளாகும். விரிந்த குடியிருப்பு ஊர் எனப்பட்டது போலவே, தொடர்ந்து ஊரும் நீரை, ஊற்று என்பர். யா என்ற வேர்ச் சொல், நீரையும் குறித்து, யா -யம் என்றவாறு கிரேக்க மொழியில் கடலை அல்லது ஏரியைக்குறித்தது. யம் (Yam) செப் (Sep) என்பது செங்கடலைக் குறித்த எகிப்தியச் சொல்லாகும். இது அயம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. யா-யாம்-அயம் என விரிந்தது.

ஊரும் அயம் என்பது, நீருற்றுகள் கொண்ட ஏரி என்ற தமிழ்ச் சொற் களால் அழைக்கப்பட்டு, ஊர்மியா எனத் திரிந்தது என்க.[18]

உலை ஏரி (Lake Uleh): இலெபனான் குன்றுகளில் தோன்றும் யோர்தான் ஆறு, தெற்கு நோக்கிப் பாய்ந்து, உலை ஏரியில் விழுகின்றது. இது நமது வீராணம் ஏரியைப் போன்றது. இந்த ஏரியின் பள்ளம், எரிமலை வெடிப்பினாலும், புவியதிர்வினாலும் தோன்றி, மிகப்பெரிய மடுவைத் தோற்று வித்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதற்கானச் சான்று களும் அந்த ஏரியில் இன்றும் காணப்படுகின்றன.[19]

உலை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, நெருப்புப் பள்ளம் அல்லது தீக்குழி என்பதே பொருளாகும். கொல்லன் வளர்க் கும் தீக்குழியும் உலை என்றே சொல்லப்படும்.[20] உலை என்ற தமிழ்ச் சொல்லால், அந்த ஏரி அழைக்கப்படுவதை நோக்குக.

கலிலேயக் கடல் (Sea of Galilee): இதுவும் ஒரு பெரிய ஏரியே. இயேசு கிறித்து தனது தொண்டர்களை, இக்கடற்பகுதியில்தான் கண்டெடுத்தார். இக் கடலின் அலைகள் மீது இயேசு நடந்துவந்ததாக, விவிலியம் கூறுகிறது. உருண்டையான கூழாங்கற்களால் நிறைந்த இந்த ஏரி கல் ஏரியென்றே அழைக்கப்பட்டது. இன்றும் இந்த ஏரியின் கரையோரங்களில் ஏராளமான கூழாங்கற்களைக் காணலாம். கல் (Gal) என்ற எபிறேயச் சொல்லுக்கு கல் (Stone) என்பதே பொருளாகும். பன்னிரெண்டு கற்றூண்களை நட்ட ஓரிடத்தை கில்கல் (Gil gal) என்று விவிலியம் கூறுகிறது.[21] இது கல்கால் என்ற தமிழ்ச் சொற்களை நினைவுபடுத்தும்.

கல்இல், கற்கள்நிறைந்த இடம் அல்லது ஏரி என்ற பொருளில் கலிலி எனப்பட்டது. கிரேக்க மொழியில் இந்த ஏரி சின்னீரத்து (Chinneerath) எனப்பட்டது.[22] சின்ன நீர் என்பது ஏரியையும், பெரிய நீர் என்பது கடலையும் குறித்திருக்க வேண்டும். சின்ன நீருற்று என்ற தமிழ்ச் சொல்லே, சின்னீரத்து எனத் திரிந்தது என்க.

சாக்கடல் (Dead sea): உலகின் வியப்புக்குரிய இடங்களில், சாக்கடலும் ஒன்று. இதுவும் ஓரேரியே. செங்கடல், சாக்கடல் வரை நீண்டிருந்ததாகவும் (Gulf of Aqaba) கி.மு. 2000ஆண்டுகளில் ஏற்பட்ட புவியதிர்வினால், தனிநீர் நிலையாகப் பிரிந்து போனதாகவும் கூறுவர். இதற்கு விவிலிய நிகழ்வொன்றினையும் எடுத்துக் காட்டுவர். கடல்நீரைவிட 6 மடங்கு உப்புத்தன்மை, சாக்கடல் நீரிலுள்ளதால், எந்த உயிரினமும் அங்கு வாழ இயலாது.

இக்கடல், யம் அம்மளா (yam Hammelah) என்றும், அயம் (Hayyam) என்றும், அக்கட்மொனி (Hakked moni) என்றும் செமிட்டிக் மொழியில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் அரபாக் கடல் (Sea of Araba), கிழக்கித்தியக் கடல் (the eastern sea) என்றும் அழைக்கப்படுகின்றது.

யம் அம்மளா = உமண் என்பது உப்பைக் குறித் தமிழ்ச் சொல்லாகும். அளம் என்பது உப்பு விளையும் இடமாகும். உமண் அளம் என்பதே, அம்மளா எனத் திரிந்துள்ளது. யம் என்பது கடலாகும். உமண் அளக்கடல் என்ற தமிழ்ச்சொற்களை மூலமாகக் கொண்டதே, யம் அம்பளா என்பதாகும்.

அயம்: நீர் நிலையைக் குறித்த தமிழ்ச்சொல்.

அக்கட்மொனி: இச்சொல்லுக்கு, கிழக்கு முனையிலுள்ள (பாலத்தீனத்துக்கு) கடல் என்பதே பொருளாகும். கிழக்கு முனை என்பதே, அக்கட்மொனி எனத் திரிந்துள்ளது.

எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ள, சாக்கடல் குறித்த அனைத்துச் சொற்களும், தமிழ் மூலத்தைக் கொண்டவை களே. இக்கடலுக்கு அருகே,இயற்கையாக அமைந்திருந்த மலைக்குகைகள் பல இருந்தன. இவை, கொம்பரான் (Qumran) என அழைக்கப்படுகின்றன.[24] கொம்மை என்பதற்கு, வட்ட மான என்று தமிழில் பொருளுண்டு. இயற்கையிலேயே வட்ட மான வாய்களை (நுழைவாயில்கள்) க் கொண்டுள்ள நீண்ட மலைத்தொடர் குகைகளை, கொம்மரண் என்று அழைத் திருக்க வேண்டும். கொம்மரண் என்பதே, கொம்ரான் எனத் திரிந்தது. இக்குகைகளில் ஒன்றில், ஓம் என்ற (சுவஸ்திக்) தமிழின் வரிவடிவம் காணப்படுகின்றது என்பதை ஏற்கனவே விளக்கி யுள்ளோம்.

மலைகள் (Mountains)*:* சமயநம்பிக்கைகளின் அடிப் படையில், மலைகள் வழிபாட்டுக்குரிய சிறப்பிடங்களாக அறியப்பட்டுள்ளன. மேரு என்ற மலையின் மீது தமிழர்களின் கடவுள் வீற்றிருந்ததாகவும், அவனைக் குறிஞ்சி நிலக்கடவுள் என்றும், அவனது பெயர் சேயோன் என்றும் தமிழ் இலக்கி யங்கள் கூறுகின்றன. ஆரியச் சமயம், சிவன் அல்லது சிவா என்ற கடவுள், கைலாயம் என்ற மலையில் குடியிருந்ததாகக் கூறுகிறது. மேற்கித்திய சமய நம்பிக்கைகளும், மலைகளைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளன. உலகின் முதல் கடவுள், குறிஞ்சி நிலமக்களால் வணங்கப்பட்டவனே. மலைக்கடவுளைப் பற்றிய முதல் குறிப்பு, தமிழிலேயே காணப்படுகின்றன. தமிழ்க்கடவுள் வாழ்ந்திருந்த மலையும், மலைகளும் தமிழ்ச் சொற்களாலேயே அழைக்கப்பட்டன. கடவுள் உயர்ந்தவன் என்பதாலும், வானத் தில் உறைவதாகக் கருதப்பட்டதாலும், உலகின் மிக உயர்ந்த மலைமுகட்டை, கடவுளின் வாழிடமாகத் தமிழர் கருதினர். மேல் உரு எனப்பட்ட சொல், கடவுளைக் குறித்ததே. உரு (சுரய) என்ற சொல், செமிட்டிக் இலக்கியங்களில், வானத்தில் ஊடாடும் இறைவனைக் குறித்தே சொல்லப்பட்டுள்ளது. தனது உருவையே (Image) தான் படைத்த மாந்தனுக்கும் அளித்ததாக, எபிறேய மொழி இலக்கியம் தெளிவுபடுத்துகிறது.

மேல் உரு (super spirit) என்ற சொற்களே மேரு என்று தமிழில் அறியப்பட்டு, அது குமரிக் கண்டத்தின் குறுக்கே உயர்ந்திருந்த மலையையும் குறித்தது.

சீயோன் மலை (Mt. Zion): தொன்மைக் கால நகரங்களுள் சிறப்புக் குரியதாக எருசலேம் (Jerusalem) கருதப்படுகின்றது. இந்நகரமே எபிறேய மக்களின் சமய வழிபாட்டின் தலைமையிடமாகக் கருதப்பட்டது. இந்நகரம் கடல் மட்டத்திலிருந்து 2400 முதல் 2255 அடிகள் வரை உயரம் கொண்டது. இங்குதான் எபிறேய மக்களின் கடவுள் வாழ்ந்திருந்ததாகவும், தன் மக்களுடைய அரசும் இம்மலையிலேயே தலைமையிடமாகக் கொண்டு அமைய வேண்டும் என விரும்பியதாகவும், தனக்கான ஆலயத்தையும் இம்மலையிலேயே அமைக்க வேண்டுமெனத் தனது அடியார்களுக்கு ஆணையிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. கி.பி. 70 ஆம் ஆண்டு வரையிலும், எபிறேய மக்களின் ஒரே ஆலயம், உலகெங்கும் இருந்த அம்மக்களின் வழிபாட்டிடம், எருசலேம் நகரில் மட்டுமே இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. எருசலேம் நகரத்து மலையே, சீயோன் மலை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.[25]

> கடவுள் சீயோன் மலையையே தனது இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்தார்.
>
> தனது மக்களின் மன்னனும் தனது அரண்மனையை அமைத்துக் கொள்ள ஆணையிட்டார்.
>
> உலகிலேயே சீயோன் மலையே சிறப்புக்குரியதாகக் கருதப்பட்டது.
>
> தன்னுடைய மக்கள், சீயோன் மலைக்கு வந்தே தன்னை வழிபட வேண்டுமென கடவுள் விரும்பினார்.

சீயோன் என்ற சொல்லுக்கான பொருளையும், அச்சொல்லின் மூலத்தையும், செமிட்டிக் மொழி ஆய்வாளர்களால் காட்ட இயலவில்லை. யா என்ற சொல்லை வேர்ச்சொல்லாகக் கொண்ட பெயரையுடைய யா-கோ-ஆ என்ற னகடவுளின் தலைமைக் குடியிருப்பு இடமாக சீயோன் மலையைக் குறிப்பிடுகின்றனர். யா-கோ-ஆ என்றசொற்கள், தமிழ் மூலத்தைக் கொண்ட தமிழ்ச் சொற்களே என விளக்க இயலும்.

மலைகளின் முதன்மலை மேரு மலையே என்றும், அங்கு சேயோன் என்ற தமிழ்க் கடவுள் வாழ்ந்திருந்ததாகவும் தமிழ்

இலக்கியங்கள் கூறுகின்றன. சேயோன் என்பது தமிழ்ச்சொல்லே. அதற்குத் தொலைவில் உறைபவன் என்பதே பொருளாகம்.[26] தொலைவு என்பது மலையைக் குறித்ததால் சேயோன் மலைக் கடவுளாகவே அறியப்பட்டான். சேய் அல்லது சேய்மை என்ப தற்குத் தொலை என்பதே பொருளாகும். சேயோன் குடியி ருந்த மலை சேயோன் மலையெனப்பட்டது.

சேயோன் என்றசொல்லே, சீயோன் (Zion) என எபிறேய மொழியில் திரிந்துள்ளது என்க. எனவே, சீயோன் மலையில் குடியிருந்த யா-கோ-ஆ என்ற கடவுள், தமிழோடும், தமிழ் மக்களின் சமய நம்பிக்கைகளோடும் தொடர்பு கொண்டி ருப்பதை அறியலாம். தமிழர் சமயம் பற்றிய செய்திகளை அறிந்திராத மேலை நாட்டு ஆய்வாளர்களால், சீயோன் என்ற சொல்லுக்கான மூலத்தினையும் வேரினையும் கண்டுபிடிக்க இயலவில்லை எனலாம். சேயோன் மலை என்பதே சீயோன் மலை எனத் திரிபுபட்டுள்ளது என்க. சீயோன் மலையையும், அங்கு வாழும் கடவுளையும் புகழ்ந்து ஏராளமான பாடல் களும், செய்திகளும் மேற்கித்திய செமிட்டிக் இலக்கியங்களில் காணப் படுகின்றன.

சினை மலை (Mt. Sinai) : சினை அல்லது சினாய் என்ற சொல்லுக்கான பொருள் யாதெனத் தெரியவில்லை என்பது ஆய்வாளர்களின் கருத்து. இச்சொல்லை, மேற்கித்திய மொழி கள் எவையிலும் காண இயலாததால், இச்சொல் பற்றிய விளக்கத்தினை எவராலும் அளிக்க இயவில்லை. எகிப்துக்கும் பாலத்தீனத்துக்கும் இடையே அறியப்படும் ஒரு தீவக்குறைப் பகுதியே சினைப் பகுதியாகும்.[27] இதன் புவியியல் அமைப்பு, ஏறக்குறைய தென்னிந்தியாவின் புவியியல் அமைப்பைப் போன்றதே. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே எல்லோ ராலும் அறியப்பட்ட இப்பகுதி, இன்றும் பல்வேறு செய்தி களால் எல்லோராலும் அறியப்பட்டுள்ள இடமே. தற்காலத் திய ஆசிய, ஐரோப்பிய, ஆப்பிரிக்கக் கண்டங்களை இணைக் கும் பகுதிகளாக இது உள்ளது. புகழ்மிக்க சூயெஸ் கால்வாய் இப்பகுதியில்தான் உள்ளது.

இத்தீவக்குறையின் மலைத்தொடரில் மிக உயர்ந்த பகுதி களே சினை முகடு எனப்படுகின்றது. சீயோன்மலையில் எபி றேய மக்களின் கடவுள் அறியப்படு முன்பே, சினைமலையில் தான் அவர் வாழ்ந்திருந்தார் என்று குறிப்புகள் கூறுகின்றன.

எபிறேய மக்கள் தலைவன் மோசே அம்மலையை தம் மக்கள் தொடக்கூட அனுமதிக்கவில்லை.

சினாய் என்று ஐரோப்பிய மொழிகளும், சீனாய் என்று தமிழ்மொழி பெயர்ப்பும் அறிவிக்கும் இவ்விடத்தின் சரியான சொல்லும் பெயரும்சினை என்பதே. இது ஒரு முனைமுறியாத தமிழ்ச் சொல்லாகும். அக்காலத்து மக்கள், இப்பகுதியின் புவியியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டே, குறிப்பாக அதன்நீண்ட பகுதியை கருத்தில் கொண்டே சினை என்ற பெயரைச் சூட்டியுள்ளனர். மூன்று பக்கம் கடலும், ஒரு பக்கம் நிலமும் கொண்ட நிலப்பகுதியை தீவக்கரு என்றே தமிழர் அழைத்தனர். தீவு என்ற சொல், தீர்வு என்றசொல்லின் சுருக்க மே என்று பாவாணர் கருதுகிறார். நீரினின்றும் தீர்க்கப்பட்ட நிலம் என்பதே அதன் பொருளாகும். நாவலந் தீவு என்று தமிழில் அறியப்படுவதை நோக்குக. தீவக் கரு என்பதை, தீபக் கர்ப்ப என்று சமற்கிருதம் திரித்துக் கொண்டது. கரு-கர்ப்ப என்றானது. கரு, சினை, சூல் ஆகிய சொற்கள், தாயின் வயிற் றில் தோன்றும் ஓரியிர் பற்றிய செய்திகளைத் தரும் சொற் களே. இவை ஒரு பொருளைத் தரும் சொற்கள் போல் தோன் றினாலும், இவை களுக்கிடையே சில பொருள் வேறுபாடுகள் உண்டு.

சினை என்பதே மூலமானது. அவற்றில் ஒன்றே கருவா கின்றது. கருவின் தொடக்க காலவளர்ச்சி சூல் எனப்படுவது எனவே, சினையென்பது உயிரினத் தோற்றத்தின் முதல்நிலை யாகும். இம்மூன்று சொற்களும் பெண்ணின் வயிற்றோடு தொடர்புடையன. இவற்றின் வளர்ச்சிக்கேற்றவாறு,பெண்ணின் வயிறும் வளர்ந்து பெருக்கும். ஒரு சூல்கொண்ட பெண்ணின் வயிறு முன்பக்கம் நீண்டிருப்பதைப் போன்ற தோற்றத்தை, ஒருநிலப்பகுதி கொண்டிருப்பின் அப்பகுதி தீவக்கரு எனப் பட்டது. கரு-கர்ப்பம் ஆகிய சொற்கள் இப்பகுதியின் உருவகங்களாகக் சொல்லப்பட்டுள்ளன. கிரேக்க மொழி சூல் என்ற சொல்லை எடுத்துக் கொண்டுள்ளது.

மூன்று பக்கம் கடலும் ஒரு பக்கம் நிலமும் கொண்ட பகுதியை,
தமிழ்மொழி - தீவக்கரு என்றும்,
சமற்கிருதம் - தீப சர்ப்பம் என்றும்,
எபிறேய மொழி - சினை என்றும்,
கிரேக்கமொழி -சூல் என்றும்,

குறிப்பிடுகின்றன. Peninsulos என்ற கிரேக்கச் சொற்களில் உள்ள Penin என்பதற்கு ஏறக்குறைய (almost) என்றும், Sulos என்பதற்குத் தீவு என்றும் பொருள் கூறுகின்றனர். Sula என்ற சொல்,சூல் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

எனவே, உலக மொழிகளில் தீவக் கரு என்ற நிலப்பகுதியை விளக்கும் அனைத்துச் சொற்களும் தமிழ்ச்சொற்களாகவே உள்ளதை நோக்குக.

Peninsula: A Land, narrow piece of land projecting out into a sea or lake. Paene = almost; insula =island.

கார்மலை (Dt. Carmel): பாலத்தீனத்தில் அறியப்படும் மலை. கார்மல் என்கிற சொல்லுக்கு, தோட்டம் (Garden) என்று பொருள் கூறுகின்றனர். இம்மலையடிவாரத்தில் பழத்தோட்டங்கள் நிறைந்து காணப்பட்டதால், அதன் அருகிலிருந்த மலைக்கும் இச்சொல் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.[28] Orchard என்ற சொல்லும், கார்மல் என்ற சொல்லுக்கான விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

Orchard: A Piece of enclosed land planted with fruit trees.

Hortus என்ற இலத்தீன் சொல்லுக்கு, தோட்டம் என்பதே பொருளாகும். இதன்வழியில் உருவான சொல்லே, Horticulture என்பதாகும். ஓட்டுஸ் என்பது, ஓட்டம் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. ஓட்டம் = தொடர்ச்சி. தொடு என்ற மூலச் சொல், தொட்டுக் கொண்டிருக்கும் மரங்களை (தொடர்ச்சியாக)க் கருத்தில் கொண்டு, ஓட்டம் - தோட்டம் எனப்பட்டது.

Carmel என்ற சொல்,தோட்டம் என்ற பொருளுக்கு உரியதாகத் தெரியவில்லை. மலைக்கு அருகிலுள்ள தோட்டத்தைக் கருத்தில் கொண்டு, மலைக்கு எவரும் பெயர் சூட்டமாட்டார்.

காய்-காயம் என்ற சொல்லுக்கு, கருமை என்பதே பொருளாகும். காயம்பூ = கருநிறப் பூ.

காயம்-காசம் என்றும் சொல்லப்பட்டது. காயம் -காச என்றும் காஷ என்றும் சமற்கிருதத்தில் திரிந்தது.இதற்குக் கருமை அல்லது கார் என்பதே பொருளாகும்.

மேரு என்பது தமிழர்கள் கண்ட பெருமலையாகும். காயமேரு = கரியநிறங் கொண்ட மலை.

காயமேரு -காசுமேரு -காசுமீர் எனத் திரிந்துள்ளதை நோக்குக.

காசுமீர் :கரு மலைகளைக் கொண்ட நாடு.

கார்மல் என்றசொல், கார்மலை என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. மல் என்ற எபிறேயச் சொல், ஆயட என்றே கிரேக்க மொழியில் திரிந்து, கருமை யைக் குறித்தது. பிற்காலத்தில் தீமையை அல்லது குற்றத்தையும் குறித்தது.

அல் என்பதும் கருமையைக் குறித்த தமிழ்ச்சொல்லே. அது இரவையும் சுட்டி யது. மா+அல் என்பது கருங்கருமையை (utter black)க் குறித்தது. மால் என்ற சொல்லின் சுருக்கமே மல் என்றும், மல் +ஐ =மலை என்றும் சொல்லப்பட்டது.

மல் +ஐ =அழகான கருமைநிறம். ஐ =அழகு இதுவே மாலை (evening) என்றானது.

எனவே, கார்மலை என்பது தமிழ்ச் சொல்லேயென்றும், அது கார்மல் என செமிட்டிக் மொழியில் திரிந்தது என்றும் கொள்க.

சேயுஸ் மலை[29]. (Mt. Zeus or Mt. Gerizim): இது ஒரு கிரேக்கச் சொல்லாகும். சீயோன் என்ற சொல்லை மூலமாகக் கொண்டு, கிரேக்க மொழி திரித்துக் கொண்ட சொல்லே சேயுஸ் என்பதாகும். சேயுஸ் என்பவன் கிரேக்கக் கடவுளாவான். அவன் கெரிசெம் (Gerizim) என்ற மலையில் வாழ்ந்திருந்தான். கரி என்பதே Geri எனத் திரிந்துள்ளது. செம்-செம்மை என்பதே Zim என்றான. இதற்குச் செம்மையான கரியமலை என்பது பொருளன்று. செம்மை என்ற சொல், வரவேற்பு அல்லது இணக்கம் என்ற பொருளில் (welcome or hospitality) கிரேக்க மொழியில் சொல்லப்பட்ட, சேயுஸ் கடவுளை இவ்வாறு அச்சொல் குறிப்பிடுகின்றது.

சேயோன் என்ற தமிழ்ப் பெயர், சீயோன் என்று எபிறேய மொழியிலும், சேயுஸ் என்று கிரேக்க மொழியிலும் திரிந்தது.

ஒளிவமலை[30] (Mt.Olive): எருசலேம் நகருக்குக் கிழக்கே யுள்ள மலையை ஒளிவ மலை என அழைத்தனர். இங்கு ஒளிமரங்கள் மிகுந்து வளர்ந்திருந்ததால், அம்மலைக்கு ஒளிவ மலை என்று பெயர் சூட்டப்பெற்றது. ஒளிவ விதைகளிலிருந்து எடுக்கப்பட்ட நெய், அக்காலத்திய தேவைப்பட்ட வணிகப் பொருட்களுள் ஒன்றாக இருந்தது. விளக்கெரிக்கவும், உணவுத் தேவைக்கும் ஒளிவ நெய்யே பயன்பட்டது.

எல் என்ற செமிட்டிக் மொழிச் சொல்லுக்கு, கடவுள் என்ற பொருளோடு, கதிரவன் மற்றும் ஒளி பற்றியதாகவும் இருந்தது. ஒளியைத் தர அல்லது விளக்கெரிக்கப் பயன்பட்ட நெய், எல் நெய் எனப்பட்டது. எல் -நெய், எல் -அய் (யோன்) எனத்திரிந்தது. எல்-அய்,எல்- அய்யா என்று கிரேக்க மொழியில் சொல்லப்பட்டது. எல் -அய்யா, ஒளி வா என இலத்தீன் மொழியில் திரிந்தது. பழைய பிரெஞ்சு மொழியும் ஒளிவா என்ற சொல்லையே பயன்படுத்தியது.ஆங்கிலம், ஒளிவ என்று ஈற்று எழுத்தான வகரத்தைச் சுருக்கிக் கொண்டது.

El-aion (Semetic) -El-aia (Greek)- Lliva (Latin) - Oliva (Old French) -Olive (English).

ஒளிவ மரத்தின் இலை, கரும்பச்சையாக இருப்பதால், வெண்மையும் கருமையும் இல்லாத இடைநிறத்தையுடைய மக்களை (தமிழர்களை) மாநிறத்தவர் என்பர். இந்த மாநிறம், Olive comoexion என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும்.

எல் என்ற செமிட்டிக் சொல்லே, கிரேக்க மற்றும் இலத்தீன் மொழிச் சொற்களுக்கு மூலமாக அறியப்பட்டுள்ளது. உண்மையில் எல் என்பது தமிழ்ச் சொல்லே என்பதை அறியலாம். எல் என்ற வேர்ச்சொல்லினின்றே,ஒளி என்ற சொல்லும் பிறந்தது.

எல்-ஒல்-ஒள்-ஒளி என விரிந்தது.

எல் என்ற தமிழ்ச்சொல்லுக்கு கதிரவன், பகல், ஒளி, வெளிச்சம் என்றவாறு தமிழில் பொருள்விரியும்,இதேநிலையில், செமிட்டிக் மொழியினின்றும் எடுத்துக் கொள்ளப்பட்ட எல் என்ற சொல்லை, மேற்கித்திய மொழிகளும் உருவாக் கிக் கொண்டன. எல் என்ற சொல், தமிழில் உள்ளதை அறிந்திராத மேற்கித்திய ஆய்வாளர்கள்,அது செமிட்டிக் மூலத்தில் இருந்ததாகக் கருதினர். பிற்காலத்தில் செமிட்டிக் எல், Gel என்றவாறு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

Gelio(கிரேக்கம்): கதிரவன்.

முழுகதிரவக் குடும்பம் அடைத்துக் கொண்டுள்ள வான்வெளி.

Hell : கீழுலகம் அல்லது நரகம். எப்போதும் நெருப்பைக் கொண்டிருப்பது.

Helemium: விரிந்து காணப்படும் ஓர் செம்மலர்.

Geliacal: கதிரவன் தோன்றும் அதே வேளையில் தோன்றும் கோள் அல்லது விண்மீன்.

Ge படர்ந்த இறகசை (Geleni என்ற விரிந்த மலரைப் போன்று)யைக் கொண்டு, செங்குத்தாக விண்ணில் எழும் ஊர்தி.

இறக்கை. இது கிரேக்கச் சொல்லாகும்.

படர் என்றும், விரிந்த என்றும் பொருள் கொண்ட தமிழ்ச் சொல்லின் திரிபு.

Gelmet: வெப்பத்தினின்றும் காக்கும் தலைக் குப்பி.

Gello: தொலைபேசியில் உரையாடலைத் தொடங்கும்போது, பேசுபவர் கூறும் முதல் சொல். தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்ட போது, பேசுபவர் கேட்பவரிடம் தன் குரலை வெளிப்படுத்த ஒரு சுருக்கமான சொல் தேவைப்பட்டது. உலகின் எந்தக் கண்டு பிடிப்பு அறியப்பட்டாலும், அதற்கான பெயரை கிரேக்க மொழியில் வைப்பதென்பது ஒரு மரபாகக் கருதப்பட்டது. அதன் அடிப்படையில் Gello என்ற சொல் அறிமுகப்படுத்தப் பட்டது. Gello என்பது கதிரவனோடு தொடர்புடைய சொல் லாக இருந்தாலும், அது உண்மையில் கடவுளைக் குறித்த சொல்லே. ஓர் உரையாடலைத் தொடங்கும்போது, கடவுளை வாழ்த்திப் பிறகு உரையாடலைத் தொடங்குவது ஐரோப்பிய மரபாகக் கருதப்பட்டதால், கடவுளையும் நினைவுபடுத்தும் சொல்லாக, Gello அறிமுகப்படுத்தப்பட்டது. கடவுள் நம்பிக்கை யில்லாதவர்களும் (அச்சொல்லின் பொருள் தெரியாமலேயே) Gello என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர் என்க.

எல் என்ற தமிழ்ச் சொல்லின்றும் பிறந்த Oilve என்ற சொல்லின் அடிப்படையில், ஒளிவ மரங்கள் நிறைந்த மலைப் பகுதி ஒளிம்பஸ் (Olimpus), கிரேக்க நாட்டில் உள்ளது. அங்கு தொடங்கிய விளையாட்டு விழா, இன்று உல கெங்கும் அறியப் பட்டுள்ளது. Olympus என்ற சொல்லின் வேரும் மூலமும் தமிழில் உள்ளதை நோக்குக.

கடல்கள்: செமிட்டிக் மொழிகளில் ஆறுகளும், மலை களும், சமவெளிகளும் தமிழ் மூலத்தைக்கொண்டிருப்பதைக் போலவே, கடல் தொடர்பான சொற்களும் தமிழின் வேரி னின்றும் விரிந்தவைகளாகவே உள்ளன. கடல்,ஆழி, பேராழி என்றவாறு தமிழில் அறியப்படும் சொற்கள், யா-யாம்- யம்- ஆழி-திரை என்றவாறு மேற்கித்திய மொழிகளில் காணப் படுகின்றன.

செங்கடல் (Yan-sup) Red sea என்று பொதுவாகச் சொல் லப்படும் கடல், உண்மையில், Reed-Sea என்றே அழைக்கப் பட்டுள்ளது. கோரைகள், கடற்கழி முகங்களில் பெருமளவில்

காணப்பட்டதால், அவை Reed sea என அழைக்கப்பட்ட தென்பர்.[31] Reed என்ற சொல்லுக்கு, சம்பங்கோரை என்று தமிழிலும்,பாப்பிரஸ் கோரையென கிரேக்கத்திலும் பொருள் அறியப்படுகின்றது. Reed என்ற சொல்லுக்கான மூலச்சொல் அறியப்படவில்லை. உருட்டு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபாக இருக்கலாம். Red என்ற சொல், அர் -அர-அரத்து என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. செங்கடலை, யாம்-சப் (Yam-சப்) என்று செமிட்டிக் மொழிகூறுகிறது. சப் என்பது, சம்பு அல்லது சம்பங்கோரை என்ற சொல்லின் திரிபே. சம்பு என்பதும் ஏறக்குறைய செந்நிறமாகக் காணப்படுவதே.

எரித்திரியன் கடல் (Erithrian sea): இது ஒரு கிரேக்கச் சொல்லாகும். செங்கடல் வழியாகவே, கிழக்கித்திய கடல் களுக்கு வழி நீள்வதால், கிழக்கித்திய கடல்களையும் எரித்திரி யன் கடல் என்றே அழைத்தனர். எரி என்ற தமிழ்ச்சொல்லுக்கு, தீயென்றும் நெருப்பென்றும் பொருள் அறியப்பட்ட சொற் களோடு தொடர்பான பொருள் அறியப்படும். எரியும் தீ செந்நிறமாக இருப்பதால், எரி என்ற கிரேக்கச் சொல்லுக்கு செந்நிறம் (Red) என்பதே பொருளாகும். இச்சொல், திரை என்ற தமிழ்ச்சொல்லோடு இணைந்து, எரித்திரை எனப்பட்டது. திரையென்பது கடலைக் குறித்த தமிழ்ச் சொல்லே. எரித்திரை என்ற தமிழ்ச்சொல், Erithros என கிரேக்க மொழியில் திரிந் துள்ளது.

ஆழி (Aali) : ஆழி என்பது கடலைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். உகாரியம் என்ற செமிட்டிக் மொழிக் குடும்பத் தில், ஆழியன் (Aaliyan) என்பவன் கடற்கடவுளாகச் சொல் லப்பட்டுள்ளான். இவனை ஆழியன் பால் (Aaliyam Baal) என்ற னர். ஆழியன் என்ற செமிட்டிக் சொல், சரியான தமிழ்ச் சொல்லே என்க.

குடா (Gulf): வளைகுடா என்றும் சொல்லப்படும். பாரசீக வளைகுடா எனப்படும் குறுங்கடல் பகுதி, வரலாற்றுக் காலத் துக்கு முற்பட்டே புகழ்பெற்றது. கிரேக்க மொழியில் கொள் போஸ் (Kolpos) எனப்பட்டது. நிலப்பகுதியில் நீண்டு செல்லும் கடல்வழியை கொள்போஸ் என்றனர். (A deep inlet of the sea almost surrounded by land with a narrow mouth). கிரேக்கர்கள், இந்நீர்ப் பகுதியை, மாட்டுக் குளம்பின் வெடிப்போடு உருவகப் படுத்தியுள்ளனர். இரு குளம்புகளையும் நிலமாகவும், நீண்ட

ஒட்டையைக் கடலாகவும் கருதி அதற்குக் கொள்யோஸ் எனப் பெயரிட்டனர். இது குளம்பு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்க. Kulmbu *(தமிழ்)* -Kolpos *(கிரேக்கம்)*- Golfo *(இத்தாலியம்)* - Golfe *(பிரெஞ்ச்)* - Gulf *(ஆங்கிலம்)*.

நாடுகள் (Nations): மக்கள் தங்களுக்கு வேண்டிய பல்வேறு நலன்களை நாடிச் சென்று குடியமரும் இடங்களே, நாடு எனப்படும். நடுத்தரைக் கடலுக்குக் கிழக்கே, தெற்கே வடக்கே, வடமேற்கே உள்ள நாடுகளில், அக்காலத்தில் மக்கள், நெருக்கம் காணப்படவில்லை. கிழக்குத் திசையினின்றும் சென்று அங்கு குடியேறிய மக்களால் அந்நாடுகள் நிறைந்தன. நாடு என்ற தமிழ்ச்சொல், நோடு (Nad) என்று எபிறேய மொழியில் திரிந்துள்ளது. கிரேக்க மொழியில் நாட் (Nat) என்றும், இலத்தீன் மொழியில் நாடியோ (Natio) என்றும், ஆங்கிலத்தில் நேஷன் (Nations) என்றும் திரிந்துள்ளது.

Nadu *(தமிழ்)*- Nat - *(கிரேக்கம்)* - Nation *(இலத்தீன்)* - Nation *(ஆங்கிலம்)*.

நாட்டைக் குறித்த மற்றொரு சொல், தேயம் என்பதாகும். இச்சொல்லுக்கு, அழகான வளமை அல்லது இனிமைதரும் நாடு என்பதே பொருளாகும். தே+அம் எனப் பிரியும். தேயம் என்ற தமிழ்ச்சொல், தேஷ் என்று சமற்கிருதத்திலும், தியா என பாரசீக மற்றும் செமிட்டிக் மொழிகளிலும் திரிந்தது.

Deyam *(தமிழ்)* - Desh *(சமற்கிருதம்)*- Deya *(பாரசீகம் மற்றும் செமிட்டிக்)*.

மெசபத்தோமியா: இப்பெயருக்கான விளக்கம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது.

பாபிலோன் (Babylon) : பாப்-எல் (Bab-el) என்ற எபிறேயச் சொல்லுக்கு, எல் கடவுள் குடியிருந்த கோயிலின் வாயில் (Gate of El god) என்றுபொருள் கூறப் பட்டுள்ளது.[32] அக்காடிய மொழியில், பாப்-இலு (Bab-ilu) என்றும், அரபுமொழியில் பாப்-இலா (Bab-ela) என்றும் சொல்லப்பட்டுள்ளன. பாப் என்ற முன்னொட்டுச் சொல், வாய் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபாகும். வாய்-பாய்-பாப் என்றானது. பாப் எல் என்பது தொடக்கத்தில் ஒரு நகரமாகவே அறியப்பட்டது. இங்குதான் வானுயர்ந்த கோபுரம் ஒன்றை (Babel Tower)க் கட்டியதாகவும், அக்கட்டிடம் முற்றுப் பெறுமுன்பே, அம் மக்களின் மொழிகள் மாற்றப்பட்டதாகவும், அதனால் அப்பணிகள் இடை

யிலேயே நின்று போனதாகவும் விவிலியம் கூறுகிறது. மொழி மாற்றத்தால் ஏற்பட்ட குழப்பம் காரணமாக, பாபெல் என்ற சொல்லுக்கே "குழப்பம்" (Confusion) என்ற பொருளும் பிற் காலத்தில் உணரப்பட்டது. கி.மு. 2350 -2294 ஆண்டுகளில், அக்காடு மன்னன் சார்கோன் என்பவன், இந்நகரைத் தலை நகராகக் கொண்டு, அதன் சுற்றுப் பகுதிகளை ஆண்டான். அப்பகுதிகள் பாபிலோன் என்ற பெயரால் ஒரு நாடாக அறியப் பட்டது.

உலகின் முதல் நாகரிகத் தொட்டிலாக (Cradle of Civilization) அறியப்படும் பாபிலோன் பல்வேறு நிலைகளில், தமிழ் மொழியோடும், தமிழர் நாகரிகத்தோடும் கொண்டுள்ள தொடர்புகள் இன்றைய ஆய்வுகள் மூலம் வெளிப்பட்டு வருகின்றன.

ஈழம் (Elam)[33]: இச்சொல்லுக்கான பொருளை, மேற் கித்திய ஆய்வாளர்களால் இது வரையிலும் கூட அறிய இயல வில்லை, எலாம் என்று தவறாகக் கூறி வந்துள்ளனர். தைகிரீஸ் ஆற்றின் கிழக்குப் பகுதியில் இந்நாடு அமைந்திருந்தது. இங்கு வாழ்ந்திருந்த மக்களை "அஞ்சான்" என மற்றவர்கள் அழைத் தனர். இச்சொல், Anshan என்று தவறாக ஒலிக்கப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கான பொருளும் அறியப்படவில்லை. அஞ்சான் என்பது தமிழ்ச்சொல்லேயென அவர்கள் அறிந்திருக்கவில்லை.

கி.மு. 2700 ஆண்டுகளில், ஈழம் என்ற நாடு அறியப்பட் டிருந்ததற்கானச் சான்றுகள் உள்ளன. இவர்கள் அறமியர்கள் (அறம் என்பான் வழிவந்த மக்கள்) என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அறம் என்பவனின் பாட்டன்தான், வெள்ளத்தி னின்றும் தப்பித்து வந்தவனாவான். அவன் கிழக்குத் திசையி னின்றும் வந்தவன் என்று செய்திகள் கூறுவதால், ஈழம் என்று இன்றும் அழைக்கப்படும் இலங்கையிலிருந்து அம்மக்கள் புலம்பெயர்ந்திருக்க வேண்டும் எனக் கருதலாம். தாங்கள் வாழ்ந்திருந்த நாட்டை நினைவு கூறும் வகையில், குடியேறிய புதிய நாட்டுக்கும் பழைய பெயர்களைச்சூட்டும் வழக்கு உலக வரலாற்றில் காணப்படுகின்றன. கி.பி. 16 ஆம் நூற்றாண்டு களில் அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயர்கள், தங்கள் நாட்டின் பகுதிகளின் பெயர்களையும் (ஆர்லியன்ஸ் - நியூ ஆர்லியன்ஸ்; சவுத்வேல் நியூ சவுத் வேல்ஸ்) நகரங்களின் பெயர் களையும் (யார்க் - நியூ யார்க்) சூட்டியுள்ளதை ஒப்புநோக்குக.

ஈழம் என்ற சொல், தமிழ்ச்சொல்லே என்பதும், ஈழ மக்கள் தமிழ் மக்களே என்பதும் வரலாற்றுச் செய்திகளாகும்.

கல்தேயம் (Kaldeya or chaldeya): கி.மு. 1000ஆண்டுகளில், கல்து (Kaldu) என்ற செமிட்டிக் மக்களினம், பாபிலோன் மீது படையெடுத்ததாகக் குறிப்புகள் கூறுகின்றனர். இவர்கள், ஈழநாட்டவர்போன்றே, அறமியர்களின் மரபினர் என்பது செய்தி,[34] கல்து என்ற சொல்லினின்றே, கல்தேயா என்ற பெயர் தோன்றியது. ஆனாலும் கல்து என்ற சொல்லிற்கான பொருள் அறியப்படவில்லை. கல்து என்பது மக்களினமா அல்லது நாடா என்பது பற்றிய விளக்கங்கள் கிடைக்கவில்லை. கல்து என்ற சொல், மற்ற செமிட்டிக் இலக்கியங்களில் எங்கும் காணப்படவில்லை. கல்து என்ற சொல், கல்தேயா என கிரேக்கத்தில் திரிந்துள்ளதைக் கொண்டு, அச்சொல் நாட்டையே குறித்தது எனலாம். மருதூக் பல்லாதன் (Marduk Baladan) என்ற மன்னனின் பெயர் பிற்காலக் குறிப்புகளில் காணப்படுகின்றது.[35] பல்லாதன் என்பது தமிழ்ப் பெயராகவே உள்ளது. ஆதன், பல்லாதன் என விரிந்துள்ளது. கரடுமுரடான மேட்டுநிலங்களைக் கொண்ட நாடு என்பதால் கல்தேயம் (Stoney land) என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

ஃபோனீசியா (பணி- பண்ணியம் - பயணம் ஆகிய வணிகத் தொடர்பான தமிழ்ச்சொற்கள், கிரேக்க மொழியில் பொயணீசியா -பொணீசியா என்று திரிந்தது பற்றிய விளக்கம் ஏற்கனவே சொல்லப்பட்டடுள்ளது.

கனான் (Canaan): பாலத்தீனத்தின் மற்றொரு பெயர் கனான் நாடு என்பதாகும்.

கன் -கன்னுதல்-கருத்தல் என்ற பொருளில் கருமை என்ற சொற்பொருளைக் கொண்ட,கன்னன் என்ற தமிழ்ப் பெயரே, கனான் எனத் திரிந்துள்ளது.

சிரியா (Syria): யூப்ரதீசு ஆற்றுக்கு மேற்கே அமைந்திருந்த நாடு அசீரியா. இதுவே சுருக்கமாக, சிரிய எனப்பட்டது. அசூர் *(Assur) என்ற இனத்தவர் வாழ்ந்திருந்த நாடு என்பது செய்தி.[36] சூர்-அசூர் என்ற சொற்களுக்கான பொருள் விளக்கப்படவில்லை. என்றாலும் சூர் என்பது தமிழ்ச் சொல்லே என்பது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

எகிப்து (Egypt) க+படை என்ற தமிழ் சொற்களே, இந் நாட்டுப் பெயருக்கு மூலமாக உள்ளன. க என்பது மெம்பிஸ் (Memphis) நகரிலிருந்த கடவுளின்பெயர்[37] க என்ற ஓரெழுத்துச் சொல், கடவுளைக் குறித்தே தமிழில் சொல்லப்பட்டுள்ளது. இவ்விரண்டு பொருளும் எகிப்தியச் சொல்லான படை (படா - patah) என்ற சொல்லிலும் காணப்படுகின்றது. க என்பது கடவுள்; படையென்பது அக்கடவுளை வணங்கும் கூட்டத்தின் சமய மற்றும் ஆட்சித் தலைவன் என்று பொருளாகும். படை என்ற தமிழ்ச்சொல்தரும் இவ்விரு பொருளையும், செமிட்டிக் மொழி, படாசி (Patesi) என்று கூறுகிறது.[38]

படை =- தமிழ்; படாசி = செமிட்டிக்; படா = எகிப்திய மொழி.

க + படா கப்படா எனப்பட்டது. முய'வயா என்ற சொல், Kypto என்று முன்னொட்டுத் சொல் இணைக்கப்பட்டு, Aigyptos என்றானது. இச்சொல்லே ஆங்கிலத்தி Egypt எனத்திரிந்தது. இப்பெயருக்கான மூலச் சொற்கள், க+படை என்ற தமிழ்ச் சொற்களே. எபிறேய மொழியில் மிசராயிம் (Misraim) என்ற சொல், எகிப்து நாட்டைக் குறிக்கின்றது. இச் சொல்லுக்கான விளக்கம் தெரியவில்லை என்பது ஆய்வாளர் களின் கருத்து.

மிசை +ஆரா + அயம் என்ற மூன்று தமிழ்ச்சொற்களின் திரிபாக, மிசராயிம் என்ற சொல் அமைந்திருக்க வேண்டும் எனக் கருதலாம். இது நீளாற்றின் (River Nile) விளக்கப்பெயராக இருக்கலாம். மேட்டில் (மிசை) தோன்றும் அரா (ஆறு) எப்போதும் நீர் வெள்ளத்தை (அயம்) கொண்டிருத்தலால், மிசராயிம் என்ற சொல்லாக அக்கருத்து விளக்கப்பட்டிருக்க லாம்.

ஓடு (Hoddu or Oddu): இந்திய நாட்டிற்கு எந்த இந்தியரும் பெயர் சூட்டியதாகத் தெரியவில்லை. கி.மு.3000 ஆண்டுகளில் குமரிமுனை முதல் காசுமீரம் வரையிலான இந்திய நாட்டில் தமிழ்மொழி மட்டுமே பேசப்பட்டு, தமிழர்களே வாழ்ந்திருந் தனர். தெற்கே தமிழரசுகளும், வடக்கே சிந்துவெளியில் ஒரு பேரரசும் இருந்திருந்தன. தமிழ்நாட்டைப் பற்றிய நேரிடை யான குறிப்புகள், மேற்கித்திய இலக்கியங்களில் காணப்பட வில்லை. எபிறேய இலக்கியமான தோரா (Tora) என்ற நூலில்

பெரும்பகுதி கி.மு. 700-300ஆண்டுகளில் நீக்கப்பட்டன. அந்த நீக்கப்பட் சமயம் சாராத செய்திகளில், தமிழ்நாட்டைப் பற்றிய குறிப்புகளும் இருந்திருக்க வேண்டும். அக்குறிப்புகளும் கி.பி. 4ஆம் நூற்றாண்டில், அலெக்சாந்திரிய நூல் நிலையம் அழிக்கப்பட்டபோது (தீயிடப்பட்ட போது) அழிந்து போயிருக்க வேண்டும்.

கி.மு. 600 ஆண்டுகளில் எழுதப்பட்ட விவிலியத்தின் எஸ்தேர் என்ற ஆகமத்தில் பாரசீகத்தை அசுரன் என்ற மன்னன் ஆண்டுவந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. அசுரன் என்ற தமிழ்ச்சொல்லை, கிரேக்க மொழியில் Ahasurus என்ற குழப்பமான மொழி பெயர்ப்பாகக் குறித்துள்ளனர். இவனுடைய ஆளுகையின் மேற்கெல்லையாக பாபிலோனும், கிழக்கெல்லையாக சிந்துவெளியும் குறிக்கப்பட்டுள்ளன. சிந்துவெளியை “ஓடு” என்ற எபிறேயச் சொல்லாகப் பதிவு செய்துள்ளனர்.[39] இச் சொல்லுக்கான பொருளை எவரும் விளக்கமுன்வரவில்லை. இச்சொல்லின் வழியே,சிந்துவெளியை மேற்கித்திய நாட்டினர் ஓடு என்ற பெயராலேயே அழைத்தனர் என்பது தெளிவாகின்றது.

ஓடு என்பதற்கு, விரைந்து செல்லுதல் (Fast movement or running) என்பதே தமிழில் பொதுப் பொருளாகும். விரைந்து செல்லும் ஆற்றையும் ஓடு என்ற சொல் குறித்தது. ஏற்கனவே, யாறு -வடி-யம்-நகர் போன்ற தமிழ்ச்சொற்களால், மேற் கித்திய ஆறுகள் அறியப்பட்டுள்ள செய்தி விளக்கப்பட் டுள்ளது. சிந்து மற்றும் அதன் கிளை ஆறுகளையும் குறிக்க, ஓடு என்ற சொல்லை, எபிறேய மொழி பயன்படுத்தியுள்ளது.

இன்றைய இசுரேல் அரசு, இந்தியாவைக் குறித்த ஆவணங்களில், India என்ற பெயரைப் பயன்படுத்துவதில்லை. மாறாக ஓடு -Oddu என்ற சொல்லையே பயன்படுத்துகிறது.[40] இந்தியாவுக்கு ஓடு என்றொரு பெயர் இருப்பது, பெரும்பா லான இந்தியர்களுக்கே தெரியாது. இந்து என்ற சொல்லே, Hi-in-du -is என்றவாறு பாரசீக மொழியில் பதிவு செய்யப்பட் டுள்ளது. இந்து என்ற சொல்லை அறிமுகம் செய்தவர்கள் பாரசீகர்களே என்பது பலரும் அறிந்திராத செய்தியுமாகும். இந்து என்பது, சிந்து என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க.

பாரசீக மன்னர்கள் இடைக்காலத்தில் இந்தியாவை ஆண்டபோது, இந்துஸ்தான் என்ற சொல்லைத் தங்களது

ஆவணங்களில் பதிவு செய்துள்ளனர். வரலாற்றுக் காலத் தொடக்கத்திலிருந்து, ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்ட காலம்வரை, இந்தியா என்ற ஒரு நாடு இருந்ததில்லை. இந்தியாவில் 56 நாடுகள் இருந்ததாகவும், அவை தனித்தனி மேலாண்மையுடன், தனித்தனி அரசுகளாகவே இருந்தன என்றும், வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

நகரங்கள் (Cities andTowns): நாகரிகம் என அறியப்படும் மாந்தவினத்தின் சமூகவியல் வளர்ச்சிகள் அனைத்தும் நகரங்களில் உருவானவைகளே. உலகின் முதல் நகரம் எதுவென்பதை உறுதியாகக் கூற இயலாது என்பதால், மேற்கித்திய ஆய்வுகளின் முடிவுகளின்படி, கி.மு. 6800 ஆண்டுகளில் பொலிவுற்றிருந்த எரிக்கோ (Jericho) நகரம் முதல் இடத்தைப் பெறுகின்றது.[41] இதன் பின்னர் பல்வேறு காலங்களில் உருவாக்கப்பட்ட நகரங்கள் பற்றிய செய்திகள் மேற்கித்திய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அவைகளில் பெரும்பாலானவை, தமிழ்ப் பெயர்களாகவும், தமிழ் மூலப் பெயர்களாகவும், தமிழினின்றும் திரிபுபட்ட பெயர்களாகவுமே உள்ளன. பல ஊர்களுக்கான பெயர்களின் மூலமும்பொருளும் இன்றும் கூட அறிய இயலாமல் உள்ளன. அவைகளில் சிலவற்றை அடியிற் காணலாம்.

எரிகோ (Yeriko)[41]: எருசலேம் நகருக்கு 22 கல் தொலைவில், 22 50 அடி உயரத்தில் அமைந்திருந்த கோட்டை நகரமே எரிகோ என அழைக்கப்பட்டது. கி.பி.1951 -57 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள், இந்நகரின் பழம்பெருமைகளை உணர்த்துகின்றன. எரி+கோ என்ற இரு சொற்களால் அறியப்படும் அந்நகரம், நிலவுக் கடவுளின் (Moongod) பெயரால் உருவாக்கப்பட்டதென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எரி என்ற சொல், நிலவைக் குறித்ததென்றால், அது தமிழ்ச் சொல்லே என்க. கோ என்ற சொல், தலைவனையும் கடவுளையும் குறித்தது. யா -கோ-ஆ என்ற பிற்கால கடவுளின் பெயரில் இடையேயுள்ள கோ என்ற சொல்லை ஒப்புநோக்குக.

எருசலேம் (Yerusalem)[42]: கி.மு. 4000 ஆண்டுகளில் அறியப்பட்ட நகரம். இன்றும் கூட அந்நகர் தனது பழம்பெருமைகளை நினைவூட்டி வருகின்றது. அசீரியக்குறிப்புகளில், ஊருசலிம்மு என்றும், எபிறேயக் குறிப்புகளில் ஏறுசலாம் என்றும், அமர்ணா குறிப்புகளில் ஊருசாலம் என்றும் குறிப்பிட்டுள்

ளனர். ஊர் என்ற மூலச்சொல்லை அடிப்படையாகக் கொண்டே, சலிம்-சாலம்-சலிம்மு என்ற பின்னொட்டுச் சொற்களுடன் இப்பெயர் அறியப்படுகின்றது. சாலம் (Shalom) என்ற எபிறேயச் சொல்லுக்கு, அமைதி (peace) என்பதே பொருளாகும்.[43] இச்சொல்லை மூலமாகக் கொண்ட சாலமன் (Solomon) என்ற பெயர் அறியப்படுகின்றது. இதற்கு அமைதி யின் மன்னன் (King of peace) என்று பொருள் கூறப்பட் டுள்ளது. சால் என்ற மூலச்சொல், தமிழில் பல்வேறு சொற் களைத் தந்துள்ளது. சால்-சால்பு-சாலம் போன்ற சொற்கள் அமைதியைக் குறித்தனவே. எனவே, ஊரு சாலம் அல்லது ஊர் சாலம் என்ற பெயருக்கு, அமைதியான ஊர் (The city of peace) என்றேபொருள் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில், ஐரோப்பி யர்கள் ஜெருசலேம் (Jerusalem) என்றவாறு அப்பெயரைத் திரிபுபடுத்திவிட்டனர். தாவீது, அவனது மகன் சாலமன் போன்ற மன்னர்கள் உருவாக்கிய தேவாலயம், அக்காலத்தில் எல்லோராலும் போற்றப்பட்ட கலையழகு நிறைந்த கட்டிட மாக இருந்ததென்பர். இக்கட்டிடத்துக்கான செப்புப் பாளங் களும், தேக்கு மரங்களும் சேர நாட்டினின்றும் வரவழைக்கப் பட்டன என்பது செவி வழிச் செய்திகளாகும். உவரி என்ற தமிழகத்தின் துறைமுக நகரைப் போலவே, செங்கடலில் ஒரு துறைமுக நகரை (North Points of the gulf of Aqaba) உருவாக்கி, அதற்கு உவரி என்றே சாலமன் பெயரிட்டதாகவும் கூறுவர். அவ்வூர் ஓபிர் (ophir) என்று குறிப்புகளில் காணப்படுகின்றது.

பெத் என்ற பட்டி:

பட்டி என்ற தமிழ்ச்சொல்லுக்கு, குடியிருப்பு என்றும், சிற்றூர் என்றும் தமிழில் பொருள் கொள்ளப்படும். இச்சொல் அரபு -பாரசீக மொழிகளில் பாத் என்றும், எபிறேய மொழியில் பெத் என்றும் திரிபுபட்டுள்ளது. இன்றும் அறியப்படும் அய்த ராபாம், இசுலாமா பாத் போன்ற நகரங்களின் பின்னொட்டுச் சொல், பட்டி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

பெத் (Beth) என்ற சொல்லில் முடியும் ஊர்கள், பாலத் தீனத்தில் பல அறியப்பட்டுள்ளன. பெத் என்ற சொல், குடியிருப் பையும் (வீடு) சிற்றூரையும் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. பட்டி என்ற சொல், தமிழ் வழக்கில் ஈற்றுச்சொல்லாக உள்ளது. புஞ்சைப் பட்டி, புளியம் பட்டி, மஞ்சம் பட்டி, மறவப்பட்டி என்ற பெயர்களை நோக்குக. எபிறேய மற்றும்

செமிட்டிக் மொழிகளில் பெத் என்ற தமிழ்த் திரிபுச் சொல், முன்னொட்டுச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எ.கா. பெத்-எல் (Beth-el) பெத்-அனி (Veth -any),பெத் - செய்தா (Beth Seida),பெத் -ஓரன் (Beth -Horon), பெத்-லெகம் (Beth -lehem),பெத் -பாக் (Beth-page), பெத்-கான் (Beth -san), பெத் -செமஸ் (Beth -shemesh), பெத் -எல் (Beth -el), பெத்-ஊலியா (Beth -ulia), பெத்-சூர் (Beth -Zur) என்றவாறு விரியும்.[44]

மேற்கண்ட ஊர்களின் பெயர்களும் கூட தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. அவை சற்றே திரிபுபட்டுக் காணப்படுகின்றன. சில எடுத்துக்காட்டுகள்:

பெத்-லெகம் (Beth -Lehem): இயேசு கிறித்து பிறந்த ஊர். லெகம் என்ற சொல்லுக்கு உணவு என்று பொருள் கூறப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் உணவு என்ற சொல்லை, bread என்றே குறிப்பிடுவர். அதனால் அவர்கள் அளித்துள்ள விளக்கப்படி இவ்வூர், House of bread (உணவின் வீடு), village of bread (உணவின் ஊர்) என்றவாறு அறியப்படும்.

லெகம் =உணவு[45] தமிழில் அலகு என்ற சொல்லுக்கு நெல் அல்லது உணவு என்பதே பொருளாகும். பெத்லெகம் என்ற ஊரை தமிழ் வழக்கில் கூறுவதென்றால், உணவுப்பட்டி என்றே கூறவேண்டும்.

பெத்சேய்டா (Beth - Saida): கலிலீ கடற்கரை நகரமாகும். இயேசுவின் தொண்டர்ளகான பேதுரு ஆந்திரேயா (Mndrew) ஆகியோர் இவ்வூரைச் சார்ந்தவர்கள். இவ்வூர் ஒரு மீன்பிடித் தொழில் செய்யும் ஊராகச் சொல்லப்பட்டுள்ளது.

சே என்ற தமிழ்ச் சொல், மீனைக் குறித்தது. இச்சொல் சிந்துவெளியிலும் காணப் படுகின்றது.

சே - சேல் எனவும் சொல்லப்படும். சேய்டா என்பது,சே +இடம் என்றவாறு விரியும்.

பெத் சேய்டா என்பது, மீன்பிடிக்கும் இடம் என விளங்கும். இதுபோன்ற விளக்கங்களை மேற்குறிப்பிட்ட ஊர்களுக்கும், தமிழ்க் கண்ணோட்டத்தில் அளிக்க இயலும்.

பீர்சிபா (Beer -Sheba)[48]: பீர் என்ற சொல்லுக்கு கிணறு என்றும், நீருற்று என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. நீருற்று பீறிட்டு வெளிவருவதால் பீர் என்று சொல்லப்பட்டதா அல்லது

நீர் என்ற சொல்லே, பீர் எனத் திரிந்ததா என அறிய இயல வில்லை. பாலத்தீனத்தின் தென்மேற்கே அமைந்திருந்த இவ் வூரில், ஏழு கிணறுகள் வெட்டியதாக ஒருகதை சொல்லப்படு கின்றது. சிபா என்ற சொல், ஏழு எண்ணுடன் தொடர்புடை யதாகக் கூறப்படுகின்றது. சில ஆய்வாளர்கள், சிபா என்ற சொல்லுக்கு சிவப்பு என்ற பொருளைத் தந்து, அக்கிணறு செந்நீர்க்கிணறு என்று கூறுகின்றனர்.

ஊர் (Ur):[49] தைகிரீஸ் ஆற்றங்கரையில், சுமேரியர் உருவாக்கிய நகரம். சில ஆய்வாளர்கள், உலகின் முதல் நகரிய நாகரிக இவ்வூரைக் குறிப்பிடுகின்றனர். ஊர் என்ற பெயருக் கான பொருள் தெரியவில்லையென மேற்கித்திய ஆய்வா ளர்கள் கூறுவது, எந்த அளவில் அவர்கள் தமிழ்மொழி பற்றி அறிந்திருந்தனர் என்பதை விளக்குவதாக உள்ளது. ஊர் என்ற சொல்லோடு தொடர்புடைய ஊரிடு (Uridu), உருக் (uruk) போன்ற நகரங்களும் அறியப்படுகின்றது.

சுருப்பாக்கம் (Shr)[50]: சுமேரிய இலக்கியம் கூறும் செய்தி யின்படி,சேய் சூத்திரன் (Sei sudra) என்ற பத்தாவது தலைமுறை மன்னன் காலத்தில்தான், உலகை அழித்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாகவும், அப்பெருக்கினின்றும் யா என்ற கடவுள், சேய்சூத்திரனைக் காப்பாற்றியதாகவும் அறியலாம். இவனுடைய தலை நகரமே சுருப்பாக்கம் என்பதாகும். சிறுப்பாக்கம் அல்லது சுருப்பாக்கம் என்ற பெயரே, சுருப்பாக் என மாறியுள்ளது. பாக்கம் என்ற தமிழ்ச்சொல் பாக் (Pak) என்று செமிட்டிக் மொழிகளிலும், பாக் (Bagh) என்று பாரசீக அரபுமொழி களிலும் காணப்படுகின்றது. பெங்களூரிலுள்ள லால்பாக் (Lal Bagh) என்ற இடத்தை ஒப்புநோக்குக.

அறப்பாக்கம் (Arrap)[51]: அசூர் நகருக்குக் கிழக்கே யிருந்த நகரம். அறப்பாக்கம் என்றே அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

எக் (கல்) பட்டணம் (Ecbatana)[52]: மேட்டுநிலப் பகுதியில் அமைந்திருந்த நகரம். எரிக்கோ நகரம்போல் மலைமேல் இருந்தது. பட்டணம் என்ற சொல்லும், செமிட்டிக்மொழியில் அறியப்பட்டிருந்தது.

நினிவே (Nineveh)[53]: சென்னகெரிப் (Senna cherib) என்ற மன்னன் உருவாக்கிய நகரம். தனது தந்தையின் நினைவால்

உருவாக்கப்பட்ட நகரம் நினைவு (Mororial) நகரமாகவே அறியப்படுகின்றது. சின்னக் கருப்பு என்ற சொல்லே, சென்ன செரிப் எனத் திரிபுபட்டிருக்கவேண்டும்.

மேலும், மாரி (Mari), திருக்கை அரண் (Haran), நிப்பூர் சேய்ப்பார் அறவளம் (Arbela), போன்ற நகரங்களும் மெச பத்தோமியாவில் அறியப்பட் டுள்ளன.[54]

மேற்கித்திய நகரங்கள்: நகரங்கள் நாகரிகத்தின் நாற் றங்கால்களாக விளங்கின. கி.மு. 6800 ஆண்டுகளில்,சுற்றிலும் மதில்சுவர்களால் பாதுகாக்கப்பட்ட நகராக, எரிக்கோ விளங் கியது. மெசபத்தோமியாவில், கி.மு. 4000 -3500 ஆண்டு களில் நகரங்கள் தோன்றின. மெசபத்தோமியாவில் முதன்முதலில் உருக்காக்கப்பட்டது ஊர் நகரமே யென்பது ஆய்வாளர்களின் கருத்து. ஊர் நகரின் அமைப்பு, கட்டிடங்கள், கலைப்பொருட் கள், வணிகப்பொருட்கள் போன்ற பல கூறுகள்,சிந்துவெளி நகரமான மொகஞ்சோதாரோவுடன் தொடர்புடையனவாக உள்ளன. ஊர் நகரில் சிந்துவெளி வணிகர்களின் குடியிருப்பும் அறியப்பட்டிருந்தது.

ஒவ்வொரு இனக்குழுவும் ஒரு நகரைத் தோற்றுவித்துக் கொண்டு, தங்களுக்குள் ஒரு தலைவனைத் தேர்வு செய்து கொண்டு, தனி அரசுப்போன்றே செயல்பட்டன. கனான் நாட்டில், 118 ஊர்கள்அல்லது நகரங்கள், தனித்தன்மையுடன் செயல்பட்டன. எகிப்தியக் குறிப்புகளின் வாயிலாக, சிரியா நாட்டில் 58 கோட்டை நகரங்கள் அறியப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகள் மிகச்சிறிய அளவிலும் (6 முதல் 20 ஏக்கர் பரப் பளவுள்ளவை), இரண்டு கல் அளவுக்கு குறுக்கும் நெடுக்கு மான நகரங்களாகவும் (ஊர் போன்றவை), அமைந்திருந்தன. ஒரு ஏக்கர் பரப்பளவில் 50 பேராவது குடியிருந்தனர் என்றும், இது மிகவும் நெருக்கமான (thick density) குடியிருப்பாகக் கருதப்பட்டது என்றும் குறிப்புகள் கூறுகின்றன.

ஆனால் எகிப்தில் இவ்வாறான நகரஅரசுகள் காணப்பட வில்லை. சிற்றூர்களையும் நகரங்களையும் ஒருங்கிணைத்து ஒரு நாடாகவே எகிப்து விளங்கியது. நீளாறு (Nile) பகுதிகளை மெனஸ் (Menes) என்ற மன்னன் இணைத்து, மெம்பிஸ் நகரைத் தலைநகராக்கிக் கொண்டான். அலெக்சாந்திரியா போன்ற கிரேக்கப் பகுதிகளில் பிற்காலத்தில் தோன்றியவைகளாகும்.

இராம்சேஸ் (Romses) மன்னர்களின் காலத்தில் ஒன்றுபட்ட, வலுவான அரசியல் ஆளுமைகொண்ட எகிப்திய நாடு பொலி வுற்றிருந்தது.

மெசபத்தோமியாவில் ஊர்நகரம், தலைநகரமாகவும் மற்றவை சிறு நகரங்களாகவும் விளங்கின. நிப்பூர், நினிவே, கப்படோசியா, அரண் போன்றவை நகரங்களாயிருந்தன. கிறித்துப் பிறப்பாண்டுகளில் பெத்தனி, பெத் பாக்,பெத் கலகம், எம்மாவூஸ் போன்றவை சிற்றூர்களாகவும், எருசலேம், நாச ரேத், கப்பர்நாவும் போன்றவை நகரங்களாகவும் பாலத்தீனத் தில் விளங்கின. கிரேக்கக் குடியிருப்புகளும் பொலிஸ் என்ற பெயரால் அறியப்பட்டிருந்தன.

அண்மையில் வெளியிடப்பட்ட சான்றுகளின் அடிப் படையில், கி.மு. 7500 ஆண்டுகளுக்கு முன்பே மோகஞ்சதா ரோ, அரப்பா, உலோத்தல்போன்ற நகரங்கள் சிந்துவெளியில் பொலிவுற்றிருந்தன. கி.மு. 10000 ஆண்டுகளுக்கு முன்பே நகரிய நாகரிகத்தில் சிறந்து விளங்கிய ஓரூரை அண்மையில் காவிரிப் பூம்பட்டினத்துக்கு அருகில் கண்டுபிடித்துள்ளனர். மேற் கித்திய நகரங்களைக் காட்டிலும், பல்லாயிரம் ஆண்டுகள் மூப்புடைய நகரங்களாக, கிழக்கித்திய நாட்டு நகரங்கள் விளங்கின.

15. தமிழ் செமிட்டிக் - சமயவியல் கண்ணோட்டம்

உலகில் இன்று அறியப்பட்டுள்ள பல்வேறு மொழிகளும், ஒரு மூலமொழி யினின்றே கிளைத்ததைப் போன்றே, உலக சமயங்கள் யாவும் ஒருமூலச் சமயத்தி னின்றும் கிளைத்தவைகளே. இயற்கையாய்த் தோன்றிய அம்முதல் சமயத்தின் கொள்கைகளை தத்தம் நோக்கில் விரிவுபடுத்தி விளக்கம் காண மாறுபட்டுள்ளனவேயன்றி, கொள்கையளவில் ஒன்றுபட்டே நிற்கின்றன. இவைகளில் தமிழர் சமயம் எனப்படும் தொன்மைக்காலத் தமிழ் மக்களின் சமயம், எக்காலத்தில் தோன்றியது எனக் கூற இயலாது. வரலாற்றுக்காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழரின் சமயம் பற்றிய வரலாறும் மறைந்து போயிற்று.

அக்காலத்தில் தமிழ் மக்களின் சமயத்துக்கு என்ன பெயர் சூட்டப் பெற்றிருந்தது என அறிய இயலவில்லையாயினும், தமிழர் சமயம் என்ற புதுப்பெயரால் அதனை அழைப்பதில் தவறில்லை எனக் கொள்ளலாம். தமிழர் சமயம், தமிழ் மக்களுக்காகத் தோன்றிய சமயம் அன்று. தமிழகத்தில் தோன்றினாலும், அது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. தமிழர் சமயத்தின் கொள்கைகள் தனியொரு இனம், மொழி, நாடு என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது. உலக மக்கள் அனைவரும் எம்மக்களே, உலகின் எந்த ஊரும் எம் ஊரே என்ற உலகளாவிய கொள்கையைக் கொண்டிருந்தது தமிழர் சமயமாகும்.

ஒன்றே குலம் என்றும் ஒருவனே கடவுள் என்றும் தமிழர் சமயக் கொள்கைக்கு விளக்கம் தந்தார் திருமூலர். கணியன் பூங்குன்றன் என்ற மெய்யியல் மேதை, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கூறினார். மேற்கண்ட இருவரின் மெய்யியல் கோட்பாடுகள், தமிழரின் சமயம் தொடர்பான மேல் வரிச் சட்டங்களாகும். தமிழர் சமயக் கொள்கைகளை, திருவள்ளுவர்

மேலும் விளக்கிக் கூறுகிறார். யூத சமயத்துக்குத் தோராவும், கிறித்துவ சமயத்துக்கு விவிலியமும் இசுலாத்துக்குக் குர்ஆன், ஆரியருக்கு வேதங்களும் போன்று, தமிழர்சமயத்துக்கு சிவனியமும் மாலியமும் இரு கண்களாக விளங்கின.

சமயத்தோற்றம்: மாந்தன் தோன்றிய காலந்தொட்டு, தன்னை விஞ்சிய ஆற்றல் இயற்கைக்கு இருந்ததை அறிந்திருந்தான். இந்த ஆற்றலை மாந்தனால் கட்டுப்படுத்த இயலவில்லை. இயற்கையில் பொதிந்துகிடந்த ஆற்றலை இனம் கண்டு தெளிந்து கொள்ளவும் அவனால் இயலவில்லை. இவ்வாற்றலைக் கண்டு அஞ்சிய மாந்தன், அவ்வாற்றலை எவ்வகையிலாவது அமைதிப்படுத்தித் தன்பக்கம் ஈர்க்கமுயன்றான். அவ்வாறான முயற்சிகளே அவ்வாற்றல் மீதான நம்பிக்கைகளாக உருப்பெற்றன. சில நம்பிக்கைகள் பொய்த்தும், சில மெய்ப்பட்டும்விளங்கிய நிலையில், மெய்யெனப்பட்டதை நம்பினான். மாந்தனை விஞ்சிய பேராற்றல் ஒன்று இருக்கின்றது என்பதே சமயத்தின் முதல் படியாகும்.

நம்பிய பேராற்றலைத் தன் பக்கம் ஈர்க்கவும், தனக்குத் துணையாகக் கொள்ளவும் மாந்தன் முயன்றான். அப்பேராற்றல் எவ்வாறு இருக்கும் என சிந்தித்த மாந்தன், அது தன்னைப் போலவே உயிரும் உடலுமாக விருந்தாலும், மறைந்திருப்பதாகக் கருதினான். பல்லாயிரம் ஆண்டுகள் பெயரிடப் படாத ஆற்றலையே மாந்தர் தனக்கு இணக்கமாக்கிக் கொண்டனர். மாந்தன் விரும்பியுண்ட உணவும், உடையும், இருப்பிடமும் தனக்கு மகிழ்வளித்த அனைத்யையும் அவ்வாற்றலுக்கும் கொடுக்க விரும்பினான்; கொடுத்தான். விரும்பினதைக் கொடுத்த போதே, தனது தேவைகளின் விண்ணப்பங்களையும் அளித்தான். தேவைகள் கிடைத்தவுடன், மகிழ்ந்தான். மறுமுறை படைக்கும்போது, தனது நன்றியையும் வெளிப்படுத்தினான். இந்நிகழ்வுகளே வழிபாட்டுமுறையின் தொடக்க நிலைகளாகும்.

இந்த நம்பிக்கைகளும், வழிபாட்டுமுறைகளும் நாளடைவில் மென்மேலும் மெருகூட்டப் பெற்றன. வழிபாட்டு முறைகளில் சில ஒழுங்குகள் தோன்றின. அவ்வொழுங்குகளே பிற்காலத்தில் விதிகளாயின. அவ்வாற்றலுக்குப் பிடித்தவை எவையென்றும், அவ்வாற்றல் வெறுத்தவை எவையென்றும் பட்டியலிட்டான். அவ் விதிகளின் தொகுப்பே, சமயத்திற்கான முன்நிலையாகும்.

மாந்தவினம் பெருகி, நகரிய நாகரிகக் காலத்தில் வாழ்ந் திருந்தபோது, சமயம் பற்றிய சிந்தனைகளும், சிந்தனைகள் வழியில் சில கட்டுப்பாடுகளும் தோன்றின. தன்னுடைய தேவை களை நிறைவுசெய்த ஆற்றலை, கடவுள் என்றும், இறைவன் என்றும் சொல்லிவழிபட்டனர். கடவுளைப் பற்றிய சிந்தனை விரிவடைந்து, உலகைப் படைத்துக் காத்துவரும் பரம்பொருள் கடவுளே என முடிவு செய்தான். அக்கடவுளை வழிபடுவதற் கான நெறிமுறைகள் வகுக்கப்பட்டன. அச்சவுணர்வும், தேவை நிலையும், விண்ணப்பங்களும், நன்றியுணர்வும், வளர்ந்து விரிந்த சிந்தனைகளும், அதன் வழிதோன்றிய ஒழுங்குமுறைகளும், முதல் சமயத்தின் நாற்றங்காலாய் அமைந்தன.

உலகில் தோன்றிய முதல் இனத்திலேயே முதல்சமயமும் தோன்றியது என்பதால், முதல் இனத்தின் மொழி, பண்பாடு, நாகரிகம், வழக்குகள்,வழக்காறுகள் அனைத்தும், அவ்வினத் தின் கடவுளிடமும், அக்கடவுளின் சமயத்தின் மேலும் சாயல் களாகப் படிந்தன. முதல்சமயத்தின் கூறுகளை அஆய்வு செய் யுங்கால், அதன்முடிவு கள், அம்முதல் இனத்தை அடையாளம் காட்டுவனவாகவும் அமையும் என்பது திண்ணம்.

இவ்வாறு தோன்றிய சமயம், நம்பியவர்களின் சிந்தனை களில் புதுப்புது மாற்றங்களைப் பெற்றது. கடவுளை வணங்க வும், அடையவும் மாற்ற வழிகளும் கூடச் சிந்திக்கப்பெற்றன. சமயம் சமூகத்தோடு கலந்துவிட்ட நிலையில், சமூகத் தேவை, பாதுகாப்பு, தொழில்கள், வணிகம், வருமானம் போன்ற பல் வேறு நிலைகளில், கடவுள் தொடர்பான புதிய கொள்கை களும் தோன்றின. ஒவ்வொரு துறையில் ஈடுபட்டிருந்தோரும், தத்தம் பார்வையில் கடவுளை வழிபட்டனர். கொள்கை களையும் வகுத்துக்கொண்டனர்.

இவை, நாளடைவில் புதுப்புது சமயங்களைத் தோற்று வித்தன. புதிய சமயத்திற்கான வழிபாட்டுமுறைகளும் சட்டங் களும் வகுக்கப்பெற்றன. நாடெங்கும் சிந்தனையாளர்களின் எண்ணிக்கை பெருகவே, கருத்து மோதல்களும் முரண்பாடு களும் தோன்றின. உலகெங்கும் பரவி வாழத் தலைப்பட்ட மக்களினம், தாங்கள் வாழ்ந்திருந்த நாடு,மொழி, பண்பாடு ஆகிய கூறுகளின் அடிப்படையில், பல்வேறு சமயங்களைத் தோற்றுவித்துக் கொண்டனர்.

தொடக்கத்தில் ஒரு கடவுளாகவும், பின்னர் இனத்துக்கொரு கடவுளாகவும், இனத்துக்குள்ளேயே தொழிலுக்கு ஒரு கடவுளாகவும், காலப்போக்கில் ஒவ்வொரு தேவைக்கும் ஒரு கடவுள் எனவும், நம்பிக்கைகளின் எல்லைகள் விரிந்து கொண்டே சென்றன. மாந்தன் தன்னைப்போலவே உருவகம் செய்து கொண்ட தன் கடவுளுக்கு, தன்னைப் போலவே மனைவி மக்கள், சுற்றம், பணியாளர்கள், கால்நடைகள், ஊர்திகள், பொழுதுபோக்குகள் எனப் பல்வேறு நிலைகளை உருவாக்கிக் கொண்டான். கடவுளின் ஆற்றலை விளக்க, பல்வேறு கதைகள் கற்பிக்கப்பட்டன. அதனடிப்படையில்,

1. ஒரு கடவுள் கொள்கை,
2. பல கடவுளர் கொள்கை,
3. பெண்கடவுளர் கொள்கை,
4. கடவுளரின் ஊர்திகளாகிய விலங்குகள் பற்றிய கொள்கை
5. ஒரு கடவுள் மூன்று பணிகளைச் செய்யும் கொள்கை
6. சிறு கடவுளர் கொள்கை

என சமயங்களின் நம்பிக்கைகள் விரிந்தன. மேற்கண்ட எவையுமே உண்மையன்று எனக் கூறிய பகுத்தறிவுக் கடவுள் மறுப்புக் கொள்கையும் நிலவியது. கடவுள் மறுப்பை வெளியிடும் சமயங்கள் கூட தோன்றின.

மேற்கண்ட கடவுளர் கொள்கைகளெல்லாம் தொல் தமிழரிடையே காணப்பட்டன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்ற போது இவையெல்லாம் நகைப்பிற்கிடமாகக் கருதப் பட்டாலும், பல கோணங்களில் கடவுள் பற்றிய சிந்தனைகள் தொல் தமிழகத்தில் வெடித்த நிகழ்வுகளையே காட்டுகின்றன எனலாம். இறுதியில் கடவுளை நம்பும் மேற்கண்ட கொள்கைகளும், கடவுளை மறுக்கும் எதிர் கொள்கையுமே நிலைத்தன.

தொல்தமிழரின் தாயகமாக குறிஞ்சி நிலத்தையே குறிப்பிடுவர். நிலையான குடியிருப்பைக் கொண்டிராத குறிஞ்சி நில மக்களின் கடவுளாகக் கதிரவனே வணங்கப்பட்டான். அம் மலைக் கடவுள் சேயோன் எனப்பட்டான். சேயோன் என்ற பெயரை, பிற்காலத்தில் மருத நிலத்தில் குடியேறிய குறிஞ்சி நில மக்களே சூட்டியிருக்க வேண்டும். தொலைவிலுள்ள தங்கள்

கடவுளை சேயோன் என அழைத்ததும் பொருத்தமானதே. சேயோனே முதற் கடவுளாவான்.

குறிஞ்சியினின்றும் கீழிறங்கி, மலையடிவாரங்கள் கால் நடைகளை மேய்க்கத் தொடங்கிய மக்கள், தங்களது கால் நடைகளுக்குத் தேவையான நீர்,முகிலிடத்தே முடங்கியுள் ளதைக்கண்டு, முகிலையே மேலும் ஒரு தெய்வமாக்கிக் கொண்டனர். சேயோனோடுமாலும் சேர்ந்து கொண்டான்.

மருத நிலத்துமக்கள் நிலையான குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்டு, வேளாண் தொழிலையும் நகரிய நாகரிகத்தையும் வளர்த்தவர்கள். நீரை நம்பியே வேளாண் தொழில் நடைபெற்றதால், மழையை இந்திரனாகக் கொண் டனர். ஆண்டு தோறும் கோடையில் இந்திரனுக்கு விழா எடுத்தனர்.

நெய்தல் நிலத்துக்கு வாரணன் கடவுளாவான். வாரணம் என்பது கடலைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும்.

இவ்வாறு நான்கு நிலத்துக்கும் நான்கு கடவுளர்கள் அறியப்பட்டிருந்தாலும்,[1] முல்லை மருதம் நெய்தல் நிலங்களில் வாழ்ந்திருந்த மக்கள், ஒரு காலத்தில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந் திருந்த மக்களின் வழி வந்தவரே என்பதால், மலைக் கடவுளை முதல் கடவுளாகவும், தங்கள் நிலக்கடவுளை காவல் கடவு ளாகவும் கொண்டிருந்தனர். காலப்போக்கில் மலைக்கடவு ளான சேயோன் முழுமுதற் கடவுளாகப் போற்றப்பட்டான். நிலக்கடவுளர்கள், முதல் கடவுளின் உருவகங்களாகச் சொல் லப்பட்டனர். நான்கு நிலத்துக்குரிய வழிபாட்டுமுறைகள் வேறு பட்டிருந்தன. தங்கள் தங்களது கடவுளருக்குப் படைக்கும் பொருட்களும் வேறுபட்டிருந்தன. இருப்பினும் கடவுளரிடை யே முரண்பாடுகள்அறியப்படவில்லை. இந்தநான்கு நிலத்துக் குரிய வழிபாட்டுமுறைகள், நான்மறைகள் என அறியப் பட்டன.[2] சமய நெறிகளைக் கற்றவர்கள், இந்த நான்கு நெறிகளையும் கற்றறிந்தவராகவே இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. நான்கு நிலங்களிலும் இந்நான்மறை கற்றவருக்குச் சிறப்புகள் செய்யப்பட்டன. நானிலச் சமய விழாக்களில் இந்தநான் மறை கற்றவர்களே முன்னிலைப்படுத் தப்பட்டனர்.

நிலங்களின் அடிப்படையில் குறிஞ்சியும் முல்லையும் அடுத்தடுத்து காணப்பட்டதால், இவ்விரு மக்களும் நெருங்கிய

தொடர்பு கொண்டிருந்தனர். இதனால் சேயோனும் மாலும் இணைத்தே கூறப்பட்டனர். மருதமும் நெய்தலும் ஒன்றையொன்று சார்ந்து நின்றன. மருதநிலத்து வணிகம் கடல் சார்ந்தே காணப்பட்டதால், இந்திரனும் வாரணனும் இணைத்தே கூறப்பட்டனர். இவர்களை இணைத்துக் கூறும் தொன்மக் கதைகளும் உருவாயின.[3]

முருகன் என்று அறியப்படும் கடவுள் பற்றி ஆய்வாளர்களிடையே முரண் பாடுகள் உள்ளன.[4] நிலத்துக்கொரு கடவுள் என்ற விதிக்குப் புறம்பாக முருகனை குறிஞ்சி நிலத்தோடு தொடர்பு படுத்தி, சேயோனின் மகனாக முருகனை உருவகப் படுத்தினர். தொல்காப்பியம் கூறும் சேயோன், முருகனே என்று பிற்கால உரையாசிரியர்கள் தவறாக எழுதி வைத்தனர். தந்தையின்றித் தயைன் தலைவனாயிருக்க இயலாது.

முருகனுடைய பண்புகளை ஆய்வுசெய்யுங்கால், குறிஞ்சி நிலத்துக்கும் மருதநிலத்துக்கும் ஓரிணைப்புப் பாலமாக, முருகன் அறியப்படுகின்றான். இவ்விரு நிலத்தின் கூறுகளும் முருகனிடம் அறியப்படுவதால், இந்நான்கு கடவுளர் அறியப் பட்ட பிறகு, முருக வணக்கம் தோன்றியது எனக் கருதலாம். பிற்கால ஆட்சி முறைகளுக்கும், போர் நடவடிக்கைகளுக்கும் ஏற்ற இளமையான கடவுளாக முருகனை அறியலாம். முருகன் என்றால் அழகு என்று கூறப்பட்டது பிற்கால நிகழ்வாகும்.

மர் என்ற வேர்ச்சொல், மர-முர-முரடு என விரிந்தது. முரடு =வன்மை.

மர்-மர -மரம்: கெட்டித்தன்மை கொண்டது.

மர்-முர்-முர - முரண்= ஒத்துப் போகாத தன்மை.

முரண் - முரடு = இளமைத் துடிப்பு. எதற்கும் அஞ்சுந் தன்மை.

மர்-மர-மரி =போர்போன்ற நிகழ்வுகளால் உயிரை இழத்தல்.

மர்-முர் -முருகு: வல்லாற்றல் கொண்ட

முருகன் =தோல்வியைத் தழுவாதவன், வெற்றி வீரன்.

பொதுவாக விலங்குகளுக்கு மாந்தனைவிட உடல்வலி மிகுந்திருந்தாலும், அவை மாந்தனின் அறிவார்ந்த செயல் களுக்குக் கட்டுப்படுபவை. விலங்குகள் சிந்திப்பதில்லையாதலால், வல்லாற்றலால் மட்டுமே அவை அறியப்படும்.

மர் -மரு-மருள் : அச்சப்படத் தக்க விலங்குகள் அச்சம் தருபவை.

மரு என்ற தமிழ்ச் சொல், ம்ரு (Mru) என்று சமற்கிருதத்தில் திரிந்து, தமிழ் பொருளையே அளித்தது. ம்ரு=விலங்கு. இதன்வழியில் தமிழில் சொல்லப்பட்டதே மிருகம் என்பதாகும்.

எனவே, முருகன் என்ற கடவுள் வல்லாண்மையும் ஆற்றலும் போர்த் திறமும் கொண்ட கடவுளாகப் பிற்காலத்தில் அறியப் பட்டான்.

இவர்களின்றி குறிஞ்சி நிலச் சேயோனுக்கு மனைவியாக கொற்றவை என்ற பெண் கடவுள் சொல்லப்பட்டாள்.[5] கொல் +அவ்வை, கொற்றவையானாள். தீயவர் களையும் தீமை களையும் வென்றெடுப்பவளாகவும், வெற்றித் திருமகளாகவும் கொற்றவை அறியப்பட்டாள். சேயோன் கொற்றவையின் இணையாக அறியப்பட்டு, அவ்விணைக்கும் பிறந்தவனே முருகன் எனவும் கூறப்பட்டான். காலம் காலமாக வளர்ந்த சமயநம்பிக்கைகள், முல்லைக் கடவுளான மாலை, கொற் றவையின் அண்ணனாக மாற்றிக்கொண்டது.[6] மாந்தரிடையே காணப்பட்ட குடும்ப உறவுகள்,கடவுளர் பாலும் ஏற்றிச் சொல்லப்பட்டன.

பிற்காலத்தில், கடவுளர் மேலுலகத்தில் வாழ்ந்திருப்ப தாகவும், அவ்வுலகம் இவ்வுலகைப் போல் இல்லாமல், அனைத்து வளங்களும் நிறையப்பெற்றது என்றும் கருதப்பட்டநிலையில், அந்த விண்ணுலகின் தலைவனாக இந்திரன் கருதப்பட்டான்.[7] வாரணன் பிற்காலத்தில் மழைக் கடவுளாக மாறினான்.

ஏராளமான தொன்மக்கடவுளர், தமிழர்சமயத்தில் அறியப்பட்டனர். வானியல் பற்றிய ஆய்வுகள் அறியப்பட்ட போது, இக்கடவுளர்களை வானில் காணப்படும் விண்மீன் களோடு தொடர்புபடுத்தி, புதிய கதைகளும் அறியப்பட்டன.

விலங்குகளோடு மாந்தன் நட்பை ஏற்படுத்திக் கொண்டது குறிஞ்சி நிலத்தில்தான் எனலாம். அங்கு,காளை மாந்தனின் நட்பு விலங்காயிற்று. வேட்டையாடிய பொருட்களைச் சுமந்து வர, காளை பயன்பட்டது. முல்லைநிலத்தில் ஆடு மாடுகளும், மருதநிலத்தில் நாய், பூனை போன்றவைகளும் மாந்தனின் நட்பைப் பெற்றன. தனது நட்புக்குரிய விலங்குகளை, தன் னுடைய தெய்வத்துக்கும் நட்பாக்கிய மாந்தன், பிற்காலத்தில் அவ்விலங்குகளையே, தமது கடவுளருக்கு ஊர்திகளாக்கினர்.

சேயோன் - காளை: மால் -கலுழன்; முருகன்-மயில் என அவை விரியும். இவையின்றி அச்சமூட்டும் விலங்குகளான யானை,குரங்கு, பாம்பு போன்றவையும் ஏதோவொரு வகையில் கடவுளோடு இணைக்கப்பட்டன. பிற்காலத்தில் புவியியல் தொடர்பான மலைகள், ஆறுகள், கடல்கள், கோள்கள் (Planets) போன்றவைகளும் கடவுளோடு தொடர்பு படுத்தப்பட்டன.

ஆரியரின் தமிழக வருகை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் உறுதிப்பட்டது. சமய மறுமலர்ச்சி என்ற பெயரால் தமிழர் சமயம் முற்றிலுமாக ஆரியமாக்கப்பட்டது. தமிழகத்தில் சமயம் தொடர்பாகச் சொல்லப்பட்ட தொன்ம, வானியல் உருவகக் கதைகள், மென்மேலும் மெருகூட்டப் பெற்று, பிராமணர்களை முன்னிறுத்திச் சொல்லப்பட்டன. ஆரியச் சாயம் பூசப்பட்ட தமிழ்ச் சமயம், பிராமண சமயமாயிற்று. சிவனியமும் மாலியமும், வர்ணாசிரம தர்மம் என்ற சாதிப் பாகுபாடுகள் திணிக்கப்பட்ட சமயங்களாயின. கடவுளே பிராமணனை முதல் சாதியாகப் படைத்து, தமிழர்களை அவர்களுக்குப் பணிவிடை செய்யும் கடை சாதியாகப் படைத்தார் என்ற மாந்தநேயமற்ற கொள்கை புகுத்தப்பட்டது. தமிழர்களின் தொன்மைக்கால மெய்யியல் கோட்பாடுகளும் கொள்கைகளும் நம்பிக்கைகளும், துவைதம் - அத்துவைதம் -விசிட்டாத் வைதம் என்ற பிராமணக் கொள்கைகளாக மாற்றம் செய்யப் பெற்றன. தமிழ் மக்களுக்கு முற்றிலும் தொடர்பில்லாத பல்வேறு கொள்கைகள் சமயத்தின் பேரால் தமிழர்களிடையே திணிக்கப்பட்டன. ஆரிய - பிராமணச் சமயமாக உருமாற்றம்பெற்ற தமிழர் சமயத்துக்கு, இந்து சமயம் என்ற பெயரை, பிற்காலத்தில் (கி.பி. 1773) சர் வில்லியம் ஜோன்ஸ் என்ற ஆங்கிலேயே ஆட்சியாளர் சூட்டினார்.

16. தமிழ் செமிட்டிக் - வானியல் கண்ணோட்டம்

வானியலைக் கண்டுபிடித்தது ஆரியர்களே என்றும், அதனை மேலைநாடுகளில் வெளிப்படுத்தியவர்கள் கிரேக்கர் களே என்றும் ஆங்கில மொழிக் கலைக்களஞ்சியங்கள் அறிவிக்கின்றன.[1] வானியல் தொடர்பான கலைச்சொற்கள் யாவும் மேற்கே கிரேக்கத்திலும், கிழக்கே சமற்கிருதத்திலும் உள்ளனவென்பது ஆய்வாளர்களின் கருத்து. வானியலின் தந்தையெனப்படும் தாலமிதான் முதன்முதலில் 1022 விண்மீன் களுக்குப் பெயரிட்டார் என்று சொல்லப்படுகின்றது.[2] அப்பட் டியலில் ஞாயிற்றுக் குடும்பம், அக்குடும்பத்தின் உறுப்பினர் களாகிய கோள்களும் அடங்கும். அவையின்றி பல விண்மீன் கூட்டங்களுக்கும் அவர் பெயரிட்டார். தாலமியின் வானவியல் தொடர்பான செய்திகளை, அவர் எழுதிய "அல் மாகஸ்ட்" என்ற நூல் விளக்குகின்றது.

ஆரிய வேதங்கள் மற்றும் புராணங்கள், வானியல் தொடர் பான செய்திகளைக் கூறுகின்றன. ஞாயிற்றுக் குடும்பத்தின் கோள்களுக்கும்,விண்மீன் கூட்டங்களுக்கும் உரிய பெயர்கள் பலவும் சமற்கிருத மொழியில் காணப்படுகின்றன. பன்னிரு ஓரைகள், அவைகளின் நகர்வுகள் யாவும் வேத புராணங்களில் சொல்லப்பட்டுள்ளன. எனவே வானியலின் தோற்றம் வேதங் களில் தான் காணப்படுவதாகவும், வேதங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டவை அல்லது சொல்லப் பட்டவை என்பதால், ஆரியர்களே வானியலைக் கண்டுபிடித் தவர்கள் என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவுகிறது.[3]

பாபிலோனியர் வானியலைப் பற்றி அறிந்திருந்தனர் என்றும், அது பற்றிய செய்திகளைத் தங்களது இலக்கியங்களில் பதிவு செய்திருந்தனர் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவை பற்றிய முழுமையான செய்திகள் எவையும் தற்போது கிடைக்க வில்லையென்பதால், ஓரளவிற்கே பாபிலோனியரின் வானியல்

பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது. குறிப்பாக, சால்தியர்கள் (Chaldens) எனப்படும் கல் தேயத்தார் வானவியல் அறிவில் சிறந்து விளங்கியதாகக் குறிப்புகளில் காணக்கிடக்கின்றன.[4]

தமிழருடைய வானியல் பற்றிய செய்திகளை, கடைக்கழக இலக்கியங்கள் சிலவிடங்களில் சுட்டுகின்றனவென்றாலும், அவைகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது, ஓரளவிற்கு தமிழர் அறிந்திருந்த வானவியல் பற்றிய செய்திகளை அறிய இயலும். கடைக்கழக இலக்கியங்களில் சில தாலமியின் காலத்துக்கு முன்பும், பல அவர் காலத்துக்குப் பின்பும் எழுதப்பெற்றிருந்தாலும், தாலமி குறிப்பிடாத பல செய்திகள், தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. தமிழருடைய தொன்மைக்கால நூலான வியாழ மாலை என்ற நூல் பற்றிய செய்திகள் கிடைத்தனவேயன்றி, அந்நூல் கிடைக்கவில்லை. இயற்கையின் இடர்ப்பாடுகளாலும், தமிழ்ப் பகைவர்களின் செயல்களாலும் அந்நூல் அழிந்து பட்டது அல்லது அழிக்கப்பட்டது எனக் கருதலாம். வியாழனை முன்னிறுத்தி எழுதப்பட்ட அந்நூல் அழியாமல் காக்கப் பட்டிருந்தால், பல்வேறு வானியல் செய்திகள் வெளிப்பட்டிருக்கும். கோள்களில் பெரியதான வியாழனைப் பற்றிய அந்நூல், வியாழன் என்ற கோளால், தமிழர் வானியல் எவ்வாறு கவரப்பட்டிருந்தது எனக் கருதலாம்.

தமிழரின் வானியலை முதன்மைப்படுத்த கடைக்கழக இலக்கியங்கள் துணைபுரிந்தாலும், சொல்லாய்வுகளும் அப்பணியை ஈடுசெய்கின்றன. தமிழரின் வானியல் தொன்மையானது என நிறுவ, சொல்லாய்வுகள் மட்டுமே இன்று துணைசெய்கின்றன என்பதை மறப்பதற்கில்லை. ஊழிப்பெருவெள்ளத்திற்குப் பிறகு உலகெங்கும் குடியேறிய தமிழர்கள், தங்களுடன் தமிழையும், தமிழரின் அறிவியலையும், கணக்கியலையும், வானவியலையும் கூடத் எடுத்துச் சென்றனர். தாம் குடியேறிய நாடுகளில் தம் மொழியையும், அறிவியலையும், வானவியலையும் வளர்த்தனர். புதுப்புதுக் கண்டுபிடிப்புகளையும் கொடுத்தனர். குறிப்பாக, பாபிலோன் நாட்டில் அறியப்படும் வானியல் தொடர்பான செய்திகள், தற்கால ஆய்வாளர்களால் பெரிதும் பாராட்டப்பெறுகின்றன.

அக்காலத்திய பாபிலோனியரின் நாள்காட்டி, 365 நாளைக் கொண்டு, பன்னிரு மாதங்களாக வகுக்கப்பட்

டிருந்தது. பகல் 30 நாழி, இரவு 30 நாழியென, நாளொன்றுக்கு 60 நாழிகளாகக் பிரிக்கப்பட்ட பொழுது,பிறகு ஏழு நாள் ஒரு வார மெனவும், 30 நாள் ஒரு மாதமெனவும், 12 மாதங்கள் ஓராண்டெனவும் தமிழர்களால் கணிக்கப்பட்ட நாள்காட்டியை, தமிழர்களே உருவாக்கினர். சுமேரிய இலக்கியமும், விவிலியமும், ஊழிப் பெருவெள்ளக் காலத்துக்கு முன்னதாக, பத்துத் தலைமுறைத் தலைவர் என்றும், பத்து மன்னர் மரபுகள் என்றும் கூறும் ஆட்சியாளர்களின் மரபு தமிழ் மரபே. இம்மரபில் தோன்றிய ஏழாம் தலைவனை, யா நோக்கு (Enoch) என்று இவ்விரு இலக்கியங்களும் கூறுகின்றன. இவன் மிகச் சிறந்த வானவியல் அறிஞன் என்றும், கணக்கியல் மேதை யென்றும் சொல்லப்பட்டிருக்கின்றான். வானத்து மீன்களைத் துல்லியமாகக் கண்டு தெளிந்தவன் என்றும், வானத்தின் நிகழ்வுகள் அனைத்தும் அவனுக்கு அத்துப்படியென்றும் குர்ஆன் கூறுகிறது.[5] இவனுடைய வாழ்நாள், 365 ஆண்டுகள் என, மேலை இலக்கியங்கள் கூறுகின்றன. கதை வடிவில் கூறப்படும் யா நோக்கு பற்றிய செய்திகள், உண்மையில் வானவியல் பற்றிய உருவகங்களாகவே உள்ளன. வெள்ளக் காலத்துக்கு முன்பே, ஆண்டுக்கு 365 நாள் என்ற கணக்கு தமிழர்களால் கணிக்கப் பட்டிருந்தது.

உலகின் வரைபடத்தை மாற்றிப் போட்ட பெருவெள்ளம், கி.மு.18000 -12000ஆண்டுகளில் நிகழ்வுற்றதாகவும், அது பன்முறை நிகழ்ந்ததாகவும், புவியியலார் கருதுகின்றனர். பெருவெள்ளம் நிகழ்வுறுமுன்பே, கி.மு. 20000ஆண்டு களில், மக்களின் வாழ்க்கைமுறைமைகள் பற்றிய செய்திகளை மேற்கித்திய இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. அந்நிகழ்வுகள் யாவும், குமரிக்கண்டம் என்ற தமிழரின் தாயகத்தில் நிகழ்ந்தவைகளே என்பதை அறிய, அவ்விலக்கியங்களிலேயே சான்றுகள் உள்ளன.

நோயற்ற வாழ்வுக்கான பச்சை இலைகள் மருத்துவம் யாயுள் (ஆயுள்) மருத்துவமாகத் தமிழ்நாட்டில் அறியப்பட்டிருந்தது. அதுவே ஆயுள் வேதம் -ஆயுர் வேதம் என்று தற்காலத்தில் சொல்லப்படுகின்றது. வலிமையான உடலையும், அமைதியான உள்ளத்தையும் அளிக்க வல்ல உடலோம்பும் ஓக முறையைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். இந்த ஓக முறையை யோகா என்று அழைக்கின்றனர். சிந்துவெளியில் கண்டெ

டுக்கப்பட்ட பதினாறு மண் பொம்மைகள், இந்த ஓக இருக்கைகள் பற்றிய நுணுக்கங்களை வெளிப்படுத்துகின்றன.[6]

அணுவைப் பற்றியும், அதன் கூடிப் பிரிதல் என்ற நிகழ்வுகள் பற்றியும் தமிழர்கள் அறிந்திருந்தனர். இவ்வுலகை ஆட்டிப் படைக்கும் நால்வகை அணுக் களைப் பற்றி, மணி மேகலை விளக்கமாகக் கூறுகின்றது.[7] வானுயர்ந்த கட்டிடங் களைக் கட்டவும்,[8] ஆறுகளின் குறுக்கே அணைகளையும் கட்டி நிறுத்தவும், பொறியியல் நுணுக்கத்தோடு கால்வாய் களை வெட்டிப் பயன்படுத்தவும் தமிழர்கள் அறிந்திருந்தனர். விண்மீன்களின் இயக்கங்களையும், கோள்களின் நகர்வுகளை யும் கணித்து அவைகளுக்கான பெயர்களையும் சூட்டியிருந் தனர்.[9]

ஊழிப்பெருவெள்ள நிகழ்வுக்குப் பிறகு மேலைநாட்டில் குடியேறிய தமிழ்மக்கள், தங்களுடைய தாய்நாட்டின் நடை முறைகளை அங்கும் தொடர்ந்தனர். கோள்களும் மீன்களும் திங்களும் கதிரவனும் அவர்களது வழிபாடுகளுக்கு உரியவை ஆயின. ஊர் நகரின் நிலாக் கோட்டமும், இலார்சா நகரின் உச்சிக்கிழான் கோட்டமும், ஆஸ்திரோ என்ற விண்மீன் கடவுளும் பாபிலோன் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன.

தமிழரின் வானியலே ஒரு காலத்தில் உலகை ஆண்டது, இன்றும் ஆண்டு கொண்டிருக்கின்றது என்பதை மொழிச் சான்றுகளுடன் நிறுவ இயலும். 27 விண்மீன் கூட்டங்களுக் கான பெயர்களில், 13 கூட்டங்களுக்கான பெயர்கள், கிரேக் கர்களின் வானியல் நூலான அல்மாகஸ்டில் காணப்பட வில்லை. எடுத்துக்காட்டாக, ஐவிரல் (அஸ்தம்),முறம் (விசாகம்) போன்ற விண்மீன் கூட்டங்களைப் பெயரிட்டு அழைக் காமல், முறையே அயோட்டா, கோர்வி, பீட்டா, லிப்ரா என்றும், அதன் ஒளிரும் தன்மையைக் குறித்தும் அழைக்கின்றனர்.[10] விளக்கமாகச் சொல்வதெனில், அம்மீன்களின் ஒளியை வரிசைப்படுத்தி, அவற்றிற்கு ஆல்ஃபா, பீட்டா என்றவாறு பெயரிட்டுள்ளனர். ஒருகுறிப்பிட்ட மீன் கூட்டத்திலுள்ள இரண்டாவது, மூன்றாவது மீன் என்பதே அதற்குப் பொரு ளாகும்.

கிரேக்கர்களின் பட்டியலில் பல விண்மீன்களுக்குப் பெயரி டப்படவில்லை என்பது, அம்மீன்களைப் பற்றி அவர்கள்

அறிந்திருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. துருவமீன் எனப்படும் வடமீனைப் பற்றித் தொடக்கத்தில் கிரேக்கர்கள் அறியாதிருந்தனர். இத்துருவ மீனை ஃபோனீசியர்களே கண்டறிந்து அதற்கு விளக்கமும் அளித்தனர் என,கிரேக்க அறிஞர் எரடோடஸ் கூறுகிறார். அதனால், ஃபோனீசியர்கள் கண்டு பிடித்த அம்மீனை, ஃபோனீசு என்றே கிரேக்கர்கள் அழைத்தனர்.[11]

அண்டம்-பேரண்டம் : பரந்துகிடக்கும் வான்வெளியின் எல்லைகளைக் கண்டவர் எவருமிலர். இன்றைய வானியல் அறிஞர்கள் வான்வெளி பற்றிய ஒருசில விளக்கங்களை அளிக்க முன்வந்துள்ளனரேயன்றி, பேரண்டத்தின் எல்லைகளை அவர்களால் தொட இயலவில்லை. பேரண்டத்தின் ஒரு பகுதி அண்டம் எனப்படும். (அகிலாண்டம் என்ற சமற்கிருதச் சொல் அகலும் அண்டம் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே.) அண்டம் என்பது முட்டை வடிவமாக (Oval) உள்ள தென அறிவியலார் கூறுகின்றனர். இக் கருத்தைக் தொல் தமிழர்,

"அண்டமெனும் பெயர் முட்டையும் விசும்புமாம்"

விளக்கியுள்ளனர். அண்டம் என்றசொல், சமற்கிருதச் சொல்லெனவும் சிலர் மயங்கினர். அண்டவியலாத பெருவெளியே அண்டம் எனப்பட்டது.

அண் -அண்ணுதல் - அணுகுதல். அண் + தம் =அண்டம்.

அண் -அணா = அணுகவியலாத. மென்மேலும் உயர்ந்த என்ற பொருளைத் தரும்.

அண்ணம் =வாயின் மேல் பகுதி.

அண்ணன்= உயர்ந்தவன், மூத்தவன்.

அண்ணல் - உயர்ந்தவர், பெரியவர்.

அண்டவெளி =வான்வெளி.

தீயுமிழ் திறனொரு முடிமிசை அணவர - பரிபாடல்.[12]

பாபிலோனியத் தொன்மம், ஞாலம் ஒரு கயிற்றால் கட்டப்பட்டுத் தொங்கவிடப்பட்டுள்ளது என்று கற்பனை செய்கிறது. அக்கயிற்றின் நுனி, துருவ மீனில் கட்டப் பட்டுள்ளதாகவும் கருதியது. பாபிலோன் நாட்டில், துருவ மீன் தலைக்கு மேலே தெரியும் என்பதால், இவ்வாறான கற்பனை

அங்கு உணரப்பட்டது. பழக் கடைக்காரர் நூலால் கட்டி வைத்துத் தொங்கவிடப்பட்டுள்ள ஆப்பிள் பழத்தை நினைவில் கொள்க. ஞாலத்தின் நடுப்பகுதி பாபிலோன் நாடென்பது அவர்களின் எண்ணம். உண்மையில் ஞாலத்தின் எப்புள்ளியையும் நடுப்புள்ளியாகக் கருதலாம். தமிழர்கள் கூட, சிதம்பரம் என்ற ஊரே ஞாலத்தின் மையம் என்றும்,அதுவே இறைவன் தங்கியுள்ள அம்பலம் என்றும் கருதினர். அம்பலம் என்பது, நடுமேடை என்று அறியப்படும். அந்நடுப்பகுதியை, ஓம்பலோஸ் (Omphalos) என்ற கிரேக்கச் சொல்லால் அழைத்தனர். இதன்வழியில் உம்பிலிகுஸ் (Umbilicus) என்று இலத்தீனிலும், உம்பிலிக்கல் (Umbilical) என்று ஆங்கிலத்திலும் அழைத்தனர்.[13]

செமிட்டிக் மக்களில் ஒரு பிரிவினராகிய செல்தியர்கள் (Celts) இந்நடுப் பகுதியை, தொங்கும் இடம் (கயிறு பிணைக்கப்பட்டுள்ள இடம்) என்றனர். இவ்வுலகம் தொங்கிக் கொண்டிருக்கின்றது என்ற பாபிலோனியரின் கருத்து. அக்கால அறிவியலில் சிறந்ததோர் கண்டுபிடிப்பாகும். பிற்கால ஐரோப்பியர்கள் இவ்வுலகம் தட்டையானதென்றே நம்பினர். தொங்கு என்ற தமிழ்ச் சொல், திங்கு (Thing) என்றே திரிபுபட்டது. பிற்காலத்தில் துருவ மீனில் கட்டப்பட்டுள்ள கயிறு தங்கள் தங்கள் நாட்டில்தான் தொங்கியது என்று கூறிக் கொண்டனர். இங்கிலாந்தில் பல ஊர்களில் இவ்வாறான நம்பிக்கை இருந்தது.[14] (Thingley near Leads, Thingrith in Bedfordshire, Thingwall in Liverpool) தொடக்கக்கால பாபிலோனியரின் வானியல் பற்றிய செய்திகளிலேயே, தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன.

கி.பி.14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த கலிலியோ என்ற இத்தாலியரே, உலகம் உருண்டையானது என்றும், அது கதிரவனைச் சுற்றிவருகின்றது என்றும் முதன்முதலாக அறிவித்தார். இக்கண்டுபிடிப்பை ஐரோப்பியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னரே ஐரோப்பியரும் உலகம் உருண்டை வடிவமானது என்பதை ஏற்றுக்கொண்டனர். உலகம் உருண்டை வடிவமானது என்பதைத் தொல்தமிழர் அறிந்திருந்தனர். அதனாலேயே இந்த உருண்டைக்கு உலகம் என்று பெயரிட்டனர்.

கதிரவனை மையப்படுத்திய எல் என்ற சொல்லினின்றே, உல் என்ற சொல் விரிந்தது, கதிரவனிடமிருந்தே இவ்வுலகம் பிரிந்து பிறந்தது என்ற அறிவியல் உண்மையை, எல்-உல் என்ற தமிழ்ச் சொற்களின் அமைப்பு உறுதி செய்கின்றது. உல் என்ற சொல், உல-உலகு எனவிரிந்தது. உல்-உல-உலா வென்றது, சுற்றிவருதல் என்ற பொருளைத் தருவதாகும்.

ஓரிடத்தில் நிலையாக நில்லாமல் சுழன்று கொண்டிருக்கும் உருண்டையை, உலகு என்ற செரியான சொல்லால் தமிழர்கள் அழைத்தனர். உலகம் என்ற தமிழ்ச்சொல், ஓலம் (Olam) என்று செமிட்டிக் மொழிகளில் காணப்படுகின்றது. படைக்கப்பட்ட இவ்வுலகை, ஓலம் என்ற சொல்லால் விவிலியத்தின் எபிறேய மொழி விளக்குகின்றது.[15]

பாபிலோனியர் கூறிய தொங்கும் உலகம், தமிழரின் வானியல் கொள்கையின் விரிவே. இவ்வுலகை, ஞாலம் என்ற சொல்லாலும் தமிழர்கள் அழைத்தனர். நா என்ற தமிழ் வேர்ச் சொல், நாக்கையும் (Tongue) குறித்தது. தொங்கிக் கொண்டிருக்கும் நா, நாலம் என்றும் சொல்லப்பட்டு, தொங்கும் அனைத்திற்கும் அது சொல்லாயிற்று.

நா-நால்-நாலம்: தொங்கிக் கொண்டிருக்கின்ற உலகம்.

நா-நால்-நாலம்-ஞாலம்: இவ்வுலகம்.

நா-நான்-நான் -நான்று : தொங்கி. நான்றுகொண்டான் என்ற வழக்கை நோக்குக.

எனவே,ஞாலம் என்ற தமிழ்ச்சொல், எந்தப் பிடிப்பும் இல்லாமல் இந்த உலகம் உள்ளது என்ற அறிவியல் கருத்தை விளக்குவதாக உள்ளது.

உல்-உல்டு-உரல்டு என்றவாறு திரிந்ததே World என்ற ஆங்கிலச் சொல்லாகும்.

இரு -இருத்தல் என்றவாறு நிலைகொண்டுள்ள உலகம் Earth என்ற சொல்லால் அறியப்பட்டுள்ளது.

உலகம், ஓலம் (Olam) என்று செமிட்டிக் மொழிகளில் திரிந்ததைப்போலவே, லோக் (Lok) என சமற்கிருதத்தில் திரிந்தது. பரலேகம், பூலோகம், திரிலோகம் போன்ற சமற்கிருதச் சொற்களும் உலகம் என்ற தமிழ்ச் சொல்லின் நீட்சிகளே.

கணியர்கள்: செமிட்டிக் இலக்கியங்களில் வானியலின் தந்தையென அறியப்படும் யாநோக்கு பற்றிப் பல செய்திகள்

விளக்கப்பட்டுள்ளன. யா-நோக்கு என்ற செமிட்டிக் சொல், கடவுளை நோக்கியவன் என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளது. கடவுள் வானத்தில் இருக்கின்றார் என்ற நம்பிக்கையில், யாநோக்கியவன் வானத்தை நோக்கியவனே என்ற பொருள் புதைந்து கிடப்பதால், வானத்தைப் பார்த்துப் பல ப [illegible] ளை அறிவித்தவன் என, யா நோக்கு என்பானைக் கருதலாம்.

தமிழகத்தில் வானியல் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் வெளியிட்டவர்கள் கணியர்கள் என்ற அறிவியல் மேதைகளே. கணியர்களின் பார்வையில், இரவு நேரத்து வானம் ஒரு திறந்த புத்தகமாகக் காட்சியளித்தது. தொடர்ந்து பார்த்துவந்த போது, வானத்து மீன்கள் இடம்பெறுவதைக் கண்டனர். இப்பெயர்ச்சி ஓர் ஒழுங்குமுறையுடன் நடைபெறுவதையும் கண்டனர். இவ்வாறான பெயர்ச்சிகளே விண்மீன்களைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலைத் தூண்டின. ஒளிமிகுந்தும் ஒளி குறைந்தும் காணப்பட்ட விண்மீன்கள் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை அமைத்துக் கொண்டது போல் நகர்ந்து சென்றன. இக்காலங்களே மாந்தவினம் வானியலை அறிந்துகொள்ள ஆர்வம் கொண்டதும், வானியலின் தொடக்கமாய் அமைந்த கால மெனக் கூறலாம்.

பகலில் தோன்றும் கதிரவனும், இரவில் தேய்ந்து மறைந்து பின் வளரும் நிலவும் மாந்தனின் முழுக் கவனத்தையும் ஈர்த்தன. கதிரவனின் சுற்றுப் பாதையிலிருந்த ஒரொழுங்கும் தென்வட பகுதிகளுக்கு நகர்ந்து செல்லும் சீரான கால அமைவுகளும் பட்டறிவின் வாயிலாகக் கிட்டின. மாந்தவினம் வானத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த காலங்களில், ஒரு சிலரே வானத்தின் விண்மீன்களைக் கூர்ந்து நோக்கினர். பல காலம் தொடர்ந்து கண்காணித்து, வானத்தின் கமுக்க முடிச்சுகளை அவிழ்க்கத் தொடங்கினர். தாங்கள் கண்டறிந்த உண்மைகளை மக்களுக்கும் விளக்கிக் கூறினர். அவர்களது கணிப்பு சரியாக அமைந்திருந்ததைக் கண்ட மக்கள், அவ்வறிஞர்களைக் கணியர்கள் என்றே அழைத்தனர். வானியலை ஆராய்ந்தோர் அனைவரும் கணியர் எனப்பட்டனர்.

ஞாலத்தின் அனைத்துச் சமயங்களும் கூறும் மெய்யியல் கொள்கை யான "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வாழ்வியல் நெறியை இவ்வையகத்துக்குத் தந்த பூங்குன்றன்

என்ற புலவனும் ஒரு கணியனே.[16] நற்றிணையின் பூங்குன்றனும் ஒரு கணியனே.[17]

ஒரு வீட்டில் மணப்பறை மகிழ்வுடன் முழங்க, மற்றொரு வீட்டில் பிணப்பறை முழங்கித் துன்பம் தர, மக்களின் வாழ்வில் இருவேறு எதிர் நிலைகளைத் தோற்று விக்கக் காரணமாயிருந்த கடவுள் என்னும் படைத்தோன் பண்பில்லாதவனே என இறைவனைச் சாடிய புறநானூற்றுப் புலவன் பக்குடுக்கையார் ஒரு கணியனே.[18]

ஞாலத்தின் அறிவுக் கூட்டமாய் வலம் வந்து வ.ானியல் கொள்கைகளை வரையறுத்துக் கொடுத்தவர்களும் கணியர்களே.

பண்பாட்டுநாகரிகத்தின் பழம்பெரும் பெருமைகளை இவ்வுலகிற்கு அளித்தவர்கள் கணியர்களே.

எல்லையற்று விரிந்துகிடந்த வானத்து மீன்களைக் கண்டறிந்து, அவைகளை வகைப்படுத்தி, பெயருமிட்டு, வகுத்துப் பகுத்து வடிவம் காட்டியவர்களும் கணியர்களே.

கருத்துக் கெட்டா விண்மீன்களின் பெயர்ச்சிகளைக் கணக்கெடுத்துச் சொன்னவர்களும் கணியர்களே.

மக்களின் ஆழ்மனங்களில் கொண்டிருந்த இரவுநேரத்து அச்சவுணர்வுகளை அகற்ற முற்பட்டவர்களும் கணியர்களே.

இரவு கால வானத்தில் நிகழ்வுற்ற விந்தைகளுக்கெல்லாம் விளக்கம் தந்தவர்களும் கணியர்களே.

இயற்கையே இறைவன் என்றும், இறைவடிவமே சேயோன் என்றும் இறை யியல்கொள்கையை வகுத்துக் கொடுத்தவர்களும் கணியர்களே.

ஞாலத்தின் முதல் இறையுணர்வு கொள்கைக்கு அடித்தளமிட்டவர்களும் கணியர்களே.

ஞாலத்தின் படைப்புகள் இறைவழி வந்தன வல்லவென்றும், அவை தற்செயல் கொள்கைவழி உருவானவைகளே என்று, இறையுணர்வுக் கொள்கைகள் மறுத்தவர்களும் கணியர்களே.

மாந்தனைக் கடவுள் படைத்தான் என்ற கொள்கையை மறுத்து, மாந்தனே கடவுளைப் படைத்துக் கொண்டான் என்று கூறியவர்களும் கணியர்களே.

தமிழ்மக்களிடையே கருத்துப் போரையும், சிந்தனை வளங்களையும் செழுமைப் படுத்திக் கொடுத்த கணியர்களை, கணக்கன் என்றும், அறிவன் என்றும், மேதை என்றும் புலவன் என்றும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பொதுவாக, தமிழகத்தில் அறியப்பட்ட அறிஞர் பெருமக்களை கணியர்கள் எனக் கூறினர். கணியர்களில் மறையோதியவன் அந்தணன் என்றும், காலங்கனித்துச் சொன்னவன் பார்ப்பான் என்றும், நாள் கோள் பார்த்து எதிர்காலமுரைத்தவன் வள்ளுவன் என்றும், பாக்களை யாத்தவன் புலவன் என்றும் போற்றப்பட்டனர்.

வள்ளுவனும் பார்ப்பானும் ஏறக்குறைய ஒரு தொழிலைச் செய்தவர்களே எனக் கூறுவாரும் உளர். பார் என்ற வினைச் சொல், காலம் பார்த்துச் சொன்னவனை விளக்க, பார்ப்பான் என்றாயிற்று. பார்ப்பவன் பார்ப்பான் ஆனான். பார்ப்பான் தமிழ்ச் சொல்லே என்க. பார்ப்பானுக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கையுணர்ந்த ஆரியப் பிராமணர், தம்மையும் பார்ப்பான் என அழைத்துக் கொண்டனர். காலப்போக்கில் தமிழ்ப் பார்ப்பானும் வள்ளுவனும் தீண்டத்தகாத சாதி என்று பிராமணரால் ஒதுக்கப்பட்டு, அவர்கள் செய்த பணிகளையும் தாமே மேற்கொண்டனர்.

பார் என்ற தமிழ்மூலச்சொல், பாரு (Baru)[19] என செமிட்டிக் மொழியில் திரிந்து, தமிழ்ப் பார்ப்பான் செய்த பணிகளையே செமிட்டிக்பாருவும் செய்தான். எதிர்காலத்தையுரைக்கும் சுடரியக் கலை (Astrology) மென்மேலும் கற்பனை வளங்களுடன் பாபிலோனில் மெருகேற்றப்பட்டது. சில சமயத் தலைவர்கள் "சாமி யாடி" எதிர்காலத்தை மக்களுக்குக் கூறினர். இந்த "தெய்வநிலை" தமக்கும் அடிக்கடி வருவதாக "பாருக்கள்" கூறிக் கொண்டனர். இவர்கள் மக்களுக்கு மட்டுமின்றி, மன்னர்களுக்கும் சுடரியம் பார்த்தனர். பாருக்கள் வருக்காலத்தைக் கூறிய முறைகளாவன.[20]

மக்களுக்கும் மன்னருக்கும் தோன்றும் கனவுகளைக் கேட்டறிந்து, அக்கனவுகள் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றனவென்பதை விளக்கினர். தானியேல் என்பார், பாபிலோனிய மன்னன் கண்ட கனவுகளுக்கு விளக்கமளித்து அவனது எதிர்கால நிகழ்வுகளைக் கூறியதாக விவிலியம் தெரிவிக்கின்றது.

தமிழ்நாட்டிலும் இவ்வாறான கனவுகளுக்கான விளக்கங் கள் அளிக்கப்பட்டன.

கனவின் அரியன காணா, நனவில்

செருச்செய் முன்ப நின்வரு திறன் நோக்கி -புறநானூறு,[21]

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கனவி லும் மெய்ம்மையிலும் பொறுத்தற்கரிய தீ நிமித்தங்களைக் கண்டும் போர் செய்யும் வலிமை யுடையவன்.

விலங்கினங்கள் எதிரே வருதல், கத்துதல், ஊளையிடுதல், பூனை குறுக்கே செல்லுதல் போன்ற நிகழ்வுகள் நன்மை தீமை களை விளைவிப்பன என்ற நம்பிக்கை இன்றும் காணப்படு கின்றது.

பறவைகளின் ஒலி,அவை இடம் பெயர்தல் ஆகியவற் றிற்கும் எதிர்காலம் கூறப்பட்டது.

"வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம்போனால்

கால்நடையாய்ப் போனவர்கள் கதை தண்டி ஏறுவரே."

இது ஒரு பழமொழி. கால்நடையாய்ப் பயணம் போகும் போது கரியநிறம் கொண்ட வால் நீண்ட குருவி வலப்பக்க மிருந்து இடப்பக்கம் போனால், அவர்கள் திரும்பிவரும் போது, பொற்றேரில் வருவர் என்பதாகும்.

காக்கை வீட்டின் மேலமர்ந்து கரைதல், விருந்தினர் வருகையை அறிவிக்கும் எனவும் நம்பப்பட்டது.

விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே -குறுந் தொகை,[22]

வட்டமான தட்டில் நீரையூற்றி, அந்நீரின் மேல் நெய்யை ஊற்றும்போது, அந்நெய் ஏற்படுத்தும் உருவத்தைக் கொண்டும் எதிர்காலம் சொல்லப் பட்டது.

இப்படியொரு வழக்கு தமிழ்நாட்டில் இருந்ததாகத் தெரியவில்லை.

மேற்கண்ட எதிர்காலம் உரைக்கும் பாபிலோனியரின் கலையை, இத்தியர் (Hittites), எத்துருக்கர்கள் (Etrucans) வழியே உரோமானியரும் கடைப்பிடித்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

தமிழ்நாட்டில் விண்மீன் பெயர்ச்சிகள், தன்னிலைவிட்டு நீளும் போதும், தனது இயல்பான ஒளியிலிருந்து மாறுபடும் போதும், எரி கொள்ளிகள் வீழும் போதும்,அதற்கான நன்மை தீமைகளைப் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

தமிழர்-பாபிலோனியர் நாள் காட்டிகள்: தமிழர்கள் கடைப்பிடித்து வந்த நாள், வாரம், மாதம் என்ற அடிப்படையிலேயே பாபிலோனியரும் தங்கள் நாள் காட்டியை அமைத்துக் கொண்டனர். தொடக்கத்தில் தமிழர் நிலவையே அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணித்தனர். அதே நடைமுறை செமிட்டிக் மக்களிடமும் காணப்பட்டது. காருவா நாளிலிருந்து திங்கள் தொடங்கியது. மறு காருவா நாள் வரையிலான 29 ½ நாள் கொண்டது ஒரு மாதமாயிற்று. இவ்வாண்டில் 354 நாள் கணக் கிடப்பட்டது. மீதமுள்ள 11 ¼ நாள், 13ஆவது தொடர் மாதமாகக் கணக்கிடப்பட்டது. இது அடர் (Ader) எனப்பட்டது.[23] இது ஒரு தமிழ்ச் சொல்லே. அடர் என்பதற்கு அகன்ற அல்லது நீண்ட என்பதே பொருளாகும்.

கண்ணொளிர் திகழ் அடர் இடுசுடர் -பரிபாடல்.[24]

நிலவும் மாதமும் தமிழில் திங்கள் என்ற ஒரு சொல்லால் அழைக்கப்படுவது போன்றே, ஈரா (Yerah) என்ற சொல், செமிட்டிக் மொழியில் திங்களையும், நிலவையும் குறித்த ஒரு சொல்லாகும்.[25] ஒரு மாதத்தை இரண்டு பகுதிகளாகப் (வளர் பிறை, தேய்பிறை) பிரித்து, அதனை ஈர் என்றனர். ஈர் என்ற மூலச்சொல்லினின்றே, இரண்டு (ஈரண்டு -இரண்டு) என்ற சொல் தோன்றியது. காருவா நாளை (New moon) "ஓடு" (Hode) என்ற சொல்லால் குறித்தனர்.[26] சிறிது பெரிதாகத் தென்பட்ட நிலவு, அந்த ஒரு நாளில் எங்கோ ஓடிப் போனதை, ஓடு என்ற சொல் விளக்குகிறது. ஓடு என்ற சொல்லுக்கு மறைதல் என்றும் ஒரு பொருள் உண்டு.

ஒள் -ஒடு -ஓடி= ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தல்.

ஒடு -ஒது-ஒதுக்கு =அப்புறப்படுத்து.

ஒடு-ஓடு - ஓடம் =நீரில் விலகிப் போகும் மரக்கலம்.

ஒடு -ஓடு -ஓடை= பாய்ந்து செல்லும் நீர்வழி.

ஒடு -ஒடு -ஒட்டு-ஒட்டை=விலகிச் செல்வதற்கான வழி.

காருவா நாளில், செமிட்டிக் மக்கள் ஓய்வெடுத்தனர். அந்நாளில் எப்பணிகளிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. அவ்

வழக்கு தமிழரும் கடைப்பிடித்து வந்த ஒன்றே. இன்றும் கூடத் தமிழ் நாட்டில், கைவினைஞர்கள், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளிகள் போன்றோர், காருவா நாளில் ஓய்ந்திருப் பதைக் காணலாம். மாதத்தின் தொடக்க நாளான காருவா நாளை, மலையுச்சியில் தீப்பந்தம் ஏற்றியும், பறையறைந்தும் மக்களுக்குத் தெரிவிப்பர். காருவா நாளுக்கு அடுத்த நாளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும், நற்பணிகள் அல்லது தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

பாபிலோனிய நாள்காட்டியில் 12 திங்களுக்கான பெயர்கள் அறியப்பட் டுள்ளன. அவைகளில் அய்யர், சிவன், தமிழ், அப்பா, எழில்,மாரிவானம், கச்சளம்,தைபே, சுடர் போன்ற தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றன. மற்றவை தமிழ் மூலத்தைக் கொண்டுள்ளன.[27]

ஆண்டுத் தொடக்கம் தைபே (தை) நிசான் (சித்திரை), தமிழ் (ஆவணி), மாரிவான் (கார்த்திகை) ஆகிய மாதங்களில் தொடங்கப் பெற்றன. இவை மெசபத் தோமியா, கனான் நாடு, பாபிலோனிய போன்ற பகுதிகளில் மாறுபட்டிருந்தன.மோசே என்பான் நிசான் (சித்திரையில்) திங்களில் ஆண்டுத் தொடக் கத்தை ஏற்படுத்தினான். அதற்கு முந்திய கலங்களில் (கி.மு. 2000) தமிழ் (ஆவணி) மாதத்தில் ஆண்டுத் தொடக்கம் இருந்தது.[28]

தமிழ்நாட்டிலும் தை, சித்திரை, ஆவணி, கார்த்திகை திங்களில்தான் ஆண்டுதொடக்கம் இருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. இவை ஒவ்வொன்றும், கதிரவனின் பயணத்தில் (உண்மையில் கதிரவன் பயணிப்பதில்லை) கதிரவன் தனது எல்லைகளை மாற்றும் காலங்களை ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டாடினர். குமரிமுனைப் பகுதியில் (நாஞ்சில் நாடு) கார்த்திகைத் திங்களையே ஆண்டுத் தொடக்கமாகக் கொண் டிருந்தனர்.[29] சோழ நாட்டில் தை மாதமும், தொண்டை நாட்டில் சித்திரையும் சேர நாட்டில் ஆவணியும் ஆண்டுத் தொடக்க மாதங்களாக அறியப் பட்டிருந்தன. பிற்காலத்தில் ஆரியர் தமிழகம் வந்தபோது, சித்திரையை ஆண்டுத் தொடக் கமாக அறிவித்து அதனை நடைமுறைப்படுத்திவிட்டனர்.

வருடை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, வரும் அடை (மழை) என்பதே பொருளாகும். வருடை என்ற சொல், வருஷ என்று சமற்கிருதத்தில் திரிந்து, அது ஆண்டையும் மழையையும்

குறித்தது. மழைக்காலத்தில் ஆண்டுத் தொடக்கம் இருந்ததை யே வருடை -வருஷ என்ற சொல் குறிக்கின்றது. தை என்ற தமிழ்ச்சொல், தைபே என்று செமிட்டிக் மற்றும் உரோமானிய மொழிகளில் காணப்படுகின்றது. இக்காலம், கதிரவன், மகரத் திலிருந்து வடக்கே திரும்பும் காலமாகும். உரோமானியர் தைத்திங்களில் ஆண்டுத் தொடக்கத்தைக் கொண்டிருந்தனர். அதன்வழியில் இன்றைய ஆங்கிலப் புத்தாண்டு சனவரியில் தொடங்குவதை நோக்குக.

கதிரவனை (Sun) பொதுவாக தன்னொளியைக் கொண்டவைகளான உடுக்கள் என அழைப்பது தமிழ் வழக்காகும். கதிரவன், விண்மீன்கள் ஆகியவை உடுக்கள் என்றே சொல் லப்பட்டன. கதிரவனும் ஓர் உடுவே. உடு என்ற தமிழ்ச் சொல், எந்த மாற்றமும் இன்றி, உடு என்றே மெபசத்தோமியா மொழி யில் காணப்படுகின்றது. மெசபத்தோமியாவில் ஒவ்வொரு நகரத்துக்கும் ஒரு காவல் தெய்வம் இருந்தது. இலார்சா (Larsa) என்ற நகரின் காவல் தெய்வமாக உடு (Udu) விளங்கிற்று. உடு என்பது கதிரவனே.[30]

செம்மை என்ற தமிழ்ச்சொல்லுக்கு நிறைவும் என்றும், சிவப்பு (Red) என்றும் பொருள் விரியும். சிவந்த ஒளியைத் தருவதால் செங்கதிரோன் என்று சொல்லப்பட்டது. செம்மை என்ற சொல், செம் (Sem) எனச் சுருங்கி, பெயர்ச்சொல்லாய் (நோவாவின் மகன்) அறியப்பட்டது. அச்சொல், செமஸ் (Shemes) என்றும் பிற்காலத்தில் நீண்டது. இச்சொல் செமஸ் (எபிறேயம்)-சம்ஸ் (அரபு) - சம்சு (அமோரியம்)- சமாசு (அசீரியம்).

கதிரவனையே முழுமுதற்கடவுளாகக் கொண்டு, அதன் பிற்கால வளர்ச்சியில் சிவன் என்ற சொல் அறியப்பட்டது. சிவன் என்பதைப் பிற்காலத்துத் தமிழ் இலக்கியங்களே குறிப்பிட்டாலும், அது வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தமிழ்ச்சொல் என்பதையும், தமிழர்கள் சிவன் என்ற சொல் லைப் பயன்படுத்தி வந்தனர் என்பதையும், சிவன் (Sivan) என்ற செமிட்டிக் சொல்லால் அறியலாம். எகிப்துக்கு மேற்கே, சிவந்த மணலைக் கொண்டிருந்த பெரும் பாலைவனப் பகுதியை சிவன் (Siwan) என்றே அக்காலத்தில் அழைத்துள்ளனர்.[32]

நிலவு (Moon): எபிறேய மொழியில் ஈரா என்ற சொல் திங்களைக் குறித்தது. ஊர் நகரத்தின் காவல் தெய்வமாகத்

திங்கள் விளங்கியது. நிலவை, சின்(ன) என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். பொதுவாக, கதிரவனைப் பெரிய தீ என்றும், திங்களை சின்ன தீ என்றும் குறிப்பிடுவர். பெரிய கடவுளாகக் கதிரவனும்,சின்னக் கடவுளாகத் திங்களும் அறியப்பட்டனர். சின்ன என்ற சொல்லே,சின் (Sin) என்று திரிபுபட்டுள்ளது எனலாம்.[33]

கோள்கள் - செவ்வாய், புதன், வியாழன்,வெள்ளி,சனி ஆகிய கோள்களும் அறியப்பட்டிருந்தன. இவைகளும் தெய்வத்தன்மை பெற்று, ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு தெய்வங்களாக அறியப்பட்டிருந்தன.[34]

விண்மீன்கள் (Stars): தார் என்ற தமிழ்ச்சொல், கூட்டம் என்ற பொருளைக் குறித்தாலும், கூட்டமாக விருந்த விண்மீன்களையும் குறித்தது. தார்-தாரகை என்றும் சொல்லப்பட்டு, தாரா என்று சமற்கிருதத்தில் திரிந்தது. அசுத் தார் என்று செமிட்டிக் மொழியில் சொல்லப்பட்டுள்ளது.

17. தமிழ் செமிட்டிக் - எண்ணியல் கண்ணோட்டம்

தமிழ் எண்கள்

மாந்தவினம் தோன்றிய காலை, உள்ளக் கிடக்கைகளை உணர்த்த மொழி தேவைப்பட்டது. மொழியின் வளர்ச்சி மாந்த வினத்தை ஒருங்கிணைந்தது. ஒருங்கிணைந்த மாந்தவினம், குழுகாய வாழ்வைத் தொடங்கிய பொழுது, பொருளியல் பயன் கருதி, தொழில்களைத் தொடங்கினர். ஞாலத்தின் முதல் தொழில் முல்லை நிலத்திலேயே தோன்றியது. கால்நடை வளர்ப்பே அம் முதல் தொழிலாகும். ஆயர் குலத்தார், தங்கள் கால்நடைகளில் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ள சிறு சிறு கூழாங்கற்களை ஒரு பையில் வைத்திருப்பர். எத்தனை கால் நடைகள் இருந்தனவோ அதற்கேற்ற கூழாங்கற்களில் எண்ணிக்கையுமிருந்தன. அவர்களுக்கு அக்கற்களை எண்ணத் தெரிந்திருக்கவில்லை. பட்டியிலிருந்து கால்நடைகள் வெளி யேறும் போதும், உள்ளே அடைக்கப்படும் போதும், ஒவ்வொன் றுக்கும் ஒரு கல் என கல்லை மாற்றி மறு பைக்குள் போட்டுக் கொள்வர். கற்கள் கூடினால், வேற்றுப் பட்டியினின்றும் கால் நடை புதுவரவாக வந்துவிட்டதென்றும், கற்கள் குறைந்தால், கால் நடைகள் வழி தவறிவிட்டன என்றும் கணக்கிட்டுக் கொண்டனர். இவ்வாறான கற்பைகளே கணக்கியலின் முதல் தோற்றமாகும்.

மொழியை அடுத்து எண்களும் கண்டுபிடிக்கப்பட்டன. எண்ணும் எழுத்தும் (கணக்கும், இலக்கியமும்) கண்ணெனப் பட்டன. தனித்தனியான அறிவு முழுமை பெற்றதாகக் கொள் ளப்படவில்லை. எண்களே கணக்கியலுக்கு அடிப்படைகள் ஆனவை. இவ்வெண்களைக் கண்டுபிடித்தோர் கணியர்கள் என்று சொல்லப்பட்டனர். அவர்கள் கணக்கர் என்றும், அறி வர் என்றும் கூடச் சொல்லப்பட்டனர். கணி என்ற வினைச்

சொல்லுக்குக் கணக்கிடு என்றே பொருளாகும். கணியர்களே கணக்கியலை இஞ்ஞாலத்துக்குத் தந்தவர்களாவர். இந்தக் கணியர்களை, ஆரிய வேதங்கள், கணங்கள், கணாதர்கள் என்று கூறுகின்றன. இவர்கள் ஆரியர்கள் என்றே கூறப்படுகின்றனர்.

தமிழ்க் கணியம் கண்டுபிடித்த கணக்கியல் முறைகளும், எண்களுக்கு அவர்கள் இட்ட பெயர்களும், இன்று முற்றிலுமாக அழிந்துபோய்விட்டன. வானியலைப் பற்றியும், கணக்கைப்பற்றியும் கூறும் கடைக்கழக நூல்களான மணிமேகலை, பரிபாடல், சிலப்பதிகாரம் போன்றவை. அக்கணக்கியலின் மூலநூல்களைப் பற்றிய செய்திகளைக் கூறவில்லை. சாத்தனும் இளங்கோவடிகளும், யாரிடமிருந்து இச்செய்திகளைக் கற்றனர் என்ற விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

தமிழர்களின் நாகரிக வாழ்வியல் முறை கி.மு. 50000 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்று கூறப்பட்டாலும், அத்தொன்மையை விளக்குகின்ற சான்றுகள் இதுவரையில் கிடைக்கவில்லை. அண்மையில் கடலகழ்வாய்வு செய்யப்பட்ட பூம்புகார் நகரம் பற்றிய புதிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.[582] இவ்வாய்வில், பூம்புகார் நகரம் ஞாலத்தின் முதல் நாகரிக நகரம் என்று சொல்லப்பட்டது. இங்கு கிடைத்த பொருட்களும், காணப்பட்ட நகர அமைப்புகளும், சிந்துவெளி நகரமைப்பு முறைகளிலும் மேம்பட்டதாகக் கூறப்படுகின்றன. இடிபாடுகளுக்கு அடியில் காணப்படும் கட்டிடங்களின் அடித்தளங்கள், பல அடுக்கு மாளிகைகள் ஆங்கே இருந்திருக்க வேண்டும் என்ற செய்தியைத் தெரிவிக்கின்றன. அவ்வாறான கட்டிடங்கள். கணிதவியல் அறிவின்றிக் கட்டப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

மிக உயர்ந்த கட்டிடத் தொழில் நுணுக்கக் கூறுகள், கணித இயலின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். பூம்புகார் நகரம் ஒரு கற்பனை நகரமென்று கூறப்பட்ட செய்தியும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளது. கி.மு. 10,000 ஆண்டுகள் பழமை கொண்ட நகராக இது அறிவிக்கப்பட்டுள்ளது. பூம்புகார் நகரம், கவாடபுரம் என்ற இரண்டாம் கழகம் அமைந்திருந்த நகரம் ஆகியவை, ஒரே காலங்களில் பொலிவு பெற்றிருந்தன. கடற்கோளால் அழிவும் பட்டன. இன்றுள்ள பூம்புகார், எந்த வரலாற்றுச் சிறப்பும்

பெற்றிராத ஒரு சிற்றூரே ஆகும். தொன்மைக் காலப் பூம்புகார் நகரம், இன்று கடற்கரையிலினின்றும் 5 கல் தொலைவில் கிழக்கே, கண்டறியப்பட்டுள்ளது.

மிகச் சிறந்த கணித அறிவைப் பெற்றிருந்த தமிழர்கள், அச்செய்திகளை முறையாகப் பதிவு செய்தும் வைத்திருந்தனர் எனலாம். ஆனால் இயற்கையின் சீற்றங்களால் அழிந்துபட்ட அவ்வறிவுச் செல்வங்களில், சில செய்திகள் மட்டுமே, செவி வழிச் செய்திகளாக தமிழர்களிடையே நிலைத்தன. இன்றுள்ள தமிழகம், தொன்மைக் காலத் தமிழகமாக இருந்திருக்க வாய்ப்பில்லை. தற்காலத் தமிழகத்தில் மாந்தவினம் கி.மு. 10,000 ஆண்டுகட்கு பிறகே குடியேறியிருக்க வேண்டும். இதன் கரணியங்கள் பற்றியே, தொன்மைக்கால கல்வெட்டுகளும், நகரங்களும், தமிழகத்தில் காணப்பெறவில்லை. கடல்கோள்களுக்குப் பிறகு குடியேறிய தமிழர்கள், தமிழகத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ளவே. சில ஆயிரம் ஆண்டுகள் செலவாகியிருக்கும் எனலாம்.

குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகளில் வாழ்ந்திருந்த தமிழர்கள். அப்பகுதிகளையும் கடல் கொண்டபோது (பூம்புகார் நகரம் போன்று), இன்றைய தமிழகத்தின் உட்பகுதிகளில் குடி யேறினர் எனலாம். பூம்புகாரில் செய்யப்பட்ட கடல் அகழ்வாய்வு, மேலும் தொடரப்பட்டால், இதுவரையில் சான்றளிக்க இயலாத பல செய்திகளுக்கும், புதிர்களுக்கும் விடை கிடைக்கும் எனலாம். இச்செய்திகளில் தமிழர்களின் கணக்கியல் பற்றிய செய்திகளும் கொணரப்படலாம்.

தமிழ் எண்களைப் பற்றி செய்திகள், கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே தெளிவாகக் கிடைக்கின்றன. அதற்கு முற்பட்ட காலத்திய செய்திகள் எவையும் முழுமையாகக் கிடைக்கவில்லை. அதற்கு முந்திய காலங்களில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகள் எண்களை எழுத்துவடிவிலேயே குறிப்பிடுகின்றன. பூலாங்குறிச்சியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு 2000 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்றது. அக்கல்வெட்டில், ‘நூற்றுத் தொண்ணூற்றிரண்டு’ என்ற வரிகள், இலக்கத்தில் அல்லாமல் எழுத்தால் காணப்படுகின்றது. தொண்ணூறு (90) என்று ஒன்பது பத்துகளைக் குறித்த வழக்கும் தொல்காப்பியர் (கி.மு. 700) காலத்துக்குப் பிறகு ஏற்பட்ட வழக்கே என்று பாவாணர் கூறுகிறார். ஒன்பதைத் தொண்டு என்றே இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

கடைக் கழக இலக்கியங்கள், இலக்கங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அவை எழுத்து வடிவத்திலேயே உள்ளன. (விளக்கம் படத்தில் காண்க)[583] எண்களின் குறு இலக்கங்களான பின்னங்களை, மாகாணி, அரைக்கால், கால், அரை, முக்கால் என்றவாறு குறிப்பிடும் கல்வெட்டுகள், பிற்காலத்தைச் சார்ந் தவைகளே. நில அளவுகள் பற்றிய சோழர்களின் கல்வெட்டு களும் கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவைகளே. இராச இராசனின் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு, நில அளவுகள் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. ஓர் ஊரைச் சார்ந்த நிலத்தின் அளவையும், அதில் நத்தம் பறைச்சேரி, பார்ப்பனச்சேரி, சுடு காடு, மன்று, கோயில் ஆகியவை தவிர்த்து எவ்வளவு நிலங்கள் உள்ளன என்பதையும், அவற்றில் திரு நாமத்துக்காணி, திருவிடையாட்டம், பள்ளி, பிரமதாயம் அகியவை எவ்வளவு என்பதையும், இவையெல்லாம் நீங்க மீதம் உள்ள நிலப்பகுதியில் இறை செலுத்த வேண்டிய நிலம் எவ்வளவு என்பதையும், அந்நிலங்களில் விளையும் நெல் எவ்வளவு என்பதையும், அந்நெல்லிலிருந்து இறையாகத் தரப் பட வேண்டிய நெல் எவ்வளவு கலம் என்பதையும் சிறப்பாகப் புலப்படுத்துகின்றன என்று தொல்லியல் ஆய்வறிஞர் நடன காசிநாதன் தெரிவிக்கின்றார்.[591]

“சைபர்” எனப்படும் வெற்றெண் பற்றியும், அதற்கான வரிவடிவம் யாதென்பது பற்றியும் தமிழில் தெளிவாகச் சொல் லப்படவில்லை. பாழ் என்று வெற்றெண்ணை, பரிபாடல் கூறுகிறது. பாழ் என்ற வெற்றெண்ணைப் பற்றிய அறிவு, தமிழர்களிடையே இருந்திருத்தல் வேண்டும் என்பதை, தொன்மைக் கால தமிழரின் கட்டிடவியல் கலை கூறாமல் கூறுகிறது. சிந்து வெளி மக்களின் எண்களை ஆய்வு செய்தோர், ஒன்று முதல் பத்துவரையிலான எண்களின் வரி வடிவங்களைக் கண்டு பிடித்துள்ளனர். அவைகளில், பாழ் எனப்படும் வெற்றெண்ணைப் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. பத்து என்ற இலக்கத்தை, இரு அரைவட்டங்களாகக் காட்டியுள்ள சிந்துவெளி மக்கள் அவற்றை மேல் கீழாகப் பொருத்தும் போது ட என்ற வரிவடிவம் கிடைத்ததைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.[584] சிந்துவெளி எண்ணின் வரிவடிவமே, ட என்ற பாழ் எண்ணுக்கு மூலமானதாக இருந்திருக்க வேண்டும். சிந்துவெளி மக்களின் 1 முதல் 10 வரையிலான எண்களை, தமிழ் எண்களாகவே கொள்ளலாம்.

கி.மு. 10000 ஆண்டுகளில் வாழ்ந்திருந்த சிந்துவெளி மக்களின், இலக்கங்களே தொல் தமிழ் இலக்கங்கள் எனக் கொள்வதில் தவறில்லை. இன்னும் சொல்லப்போனால், தமிழின் தொன்மையை, சிந்துவெளி எழுத்துக்கள் வழியாகவே இன்று நிறுவ இயலும் நிலையும் உள்ளது. சிந்துவெளியில் எழுதப்பட்ட இலக்கங்களைக் குறிக்கும் ஒலியும் தமிழ் எண்களைக் குறிக்கும் ஒலியும், ஒரே வகையில் உள்ளன.

எண் ஒன்று:

உல் - உல்கு - ஒல்கு - ஒன்று எனத் திரிந்ததாய் பாவாணர் கூறுகிறார். க என்ற உயிர்மெய் எழுத்தை, ஒன்று என்ற இலக்கமாகக் கூறினர். க எனும் எழுத்து, தொன்மைக் காலத்தில் ஒரு சிறிய நேர்க்கோடாகவே இருந்தது. அதன் வளர்ச்சியில், ஒரு குறுக்குக் கோடு பிற்காலத்தில் இடப்பட்டது, பிற்காலத்தில் க எனப்பட்டது. + என்ற வரிவடிவம் கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு க என்ற தற்கால எழுத்தாக உருமாறிற்று.[585]

+ (கி.பி. 3) - + (கி.பி. 7) - + (கி.பி. 9) - + (கி.பி. 11) - க (கி.பி. 16) - க (கி.பி. 20)

க என்ற எழுத்தையே ஒன்றெனக் கூறினர். வரி வடிவமாக எழுதப்பட்டதேயன்றி, ஒலிக்கவும் சொல்லவும், ஒன்று என்றே கூறப்பட்டது. ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களைக் குறிக்க, ஒவ்வொரு தமிழ் எழுத்துக்கள் பயன்படுத் தப்பட்டன. அவை ஏதோ ஒரு செய்தியின் உருவகமாகவே எழுதப்பட்டன. க என்ற எழுத்து, க் + அ என்ற உயிர் மெய்யின் கலப்பாகும் க் = மெய் அ = உயிர் = க உடலும் உயிரும் கலந்த மாந்தன் என்க. ஒன்றைவிட்டு ஒன்று இருக்க இயலாது. இரண்டும் ஒன்றாகின்ற உருவகத்தையே க என்ற எழுத்தால், தமிழர்கள் உணர்த்தினர். ஞாலத்தின் மொழிகளில், மாந்தனின் உடலையும், உயிரையும், மொழியின் எழுத்துக்களாக உருவகம் செய்தது தமிழினம் மட்டுமே. இவ்வுருவகத்தை மெய்யியலார் கடவுளுக்கும் ஏற்றிச் சொல்லுவர். கடவுள் என்ற சொல்லின் முதல் எழுத்தான க முழுமுதற்கடவுளான சிவனைக் குறித்தது என்பர். கடவுள் என்ற சொல் பெரும்பாலான இலக்கியங்களில் காணப் படவில்லை. இருப்பினும் இக்கூற்றைச் சரியென்று சொல்லும் வகையில், சமற்கிருத மொழியிலும் கூறப்பட்டுள்ளது. க் + அ = இக்க என்று ஒலிப்பதை, ஏக்க - ஏக - ஏக் என்று சமற்கிருத

மொழியில் திரித்துக் கொண்டனர். க என்பதே, ஏக என்று வடமொழியில் திரிந்தது. க, சிவன் எனக் கூறப்பட்டது போல், ஏக என்பது, பிரசாபதி (முழுமுதற்கடவுள்) என்று வேதங்களில் கூறப்பட்டது. தமிழ் எழுத்தில் கூறப்பட்ட எண்களை, அப்படியே சமற்கிருதம் ஏற்றுக் கொண்டது என்பதற்கு, க என்ற எண் ஒன்றே எடுத்துக்காட்டாகும். சமற்கிருதத்தில், ஏக் எனப்படும் சொல்லுக்கான வேர்ச் சொல் இல்லை என்பதே, ஏக் - தமிழ் எழுத்து க என்பதின் திரிபே, என உணர்த்தும்.

ஒல் - ஒல்கு = இரண்டு ஒன்றாதல்.

துண்கண் சிவந்தாங்கு ஒல்குகொடி போன்று

– மணிமேகலை [586]

ஒல்கு - ஒன்று எனப்பட்டது. ஒன்று என்பதைப் பேசவும், க என்பதை வரி வடிவத்திலும் தமிழர் பயன்படுத்தினர். தமிழில் எழுதப்பட்டது போன்ற ஒரு நேர்க் கோடே, சிந்துவெளி மக்களும் நேர்க்கோடாக எழுதி, அதனைக் க எனவும், ஒன்று எனவும் பயன்படுத்தினர் என்பது ஆய்வுகளால் தெரிய வந்துள்ளது. எனவே க என்ற எழுத்து, தமிழிலும், சமற்கிருதத்திலும், சிந்து வெளியிலும், ஒன்று என்ற இலக்கத்தைச் சுட்டுவதற்கே எழுதப்பட்டன, ஒலிக்கப்பட்டன.

க என்ற எழுத்து, எபிரேய மொழியில் கத் (kat) என்று சொல்லப்பட்டு, அது ஒன்றையே (One) குறித்தது.[587] க - கத் எனத் திரிந்தது. பிற்காலத்தில் அகத் (akat) என்றும் சொல்லப் பட்டது. ஒன்று என்ற தமிழ்ச் சொல், ஒல்கு என்ற சொல்லின் மூலத்தில் பிறந்தது. ஒல்கு என்பதே - ஒல்பா - அல்பா - ஆல்பா என்று கிரேக்க மொழியில் சொல்லப்பட்டது. alpha = எண் ஒன்று, முதல் எழுத்துமாகும். ஒல்கு - ஆல்பா எனப்பட்டது போல், ஒன்று, என் (En) என்றும் சொல்லப்பட்டது.

Onru *(தமிழ்)* - En *(கிரேக்கம்)* - Eine *(செர்மானியம்)* - Unur *(இலத்தீன்)* - One *(ஆங்கிலம்)*

Ka *(தமிழ்)* Ka *(சிந்துவெளித் தமிழ்)* - Kat *(எபிரேயம்)* க என்ற தமிழ் எழுத்தையும் ஒலிப்பையும், ஏக என்ற வடமொழி ஒலிப்பையும், கிரேக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஒன்று- ஒல்கு என்ற தமிழ்ச் சொற்களின் திரிபுகளையே கிரேக்கம் ஏற்றுக் கொண்டுள்ளதை நோக்குக. இவ்வாறு,

வடமொழிச் சொற்களையே கிரேக்கம் ஏற்றுக் கொண்டுள்ளது என்ற கொள்கை, க என்ற எழுத்து வழியில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையும் நோக்குக. ஒன்று என்ற சொல்லையும் எண்ணையும் ஞாலத்திற்குத் தந்தது தமிழே எனும்போது, மற்ற எண்களும் தமிழ் மூலத்தினின்றே திரிபுபட்டிருக்க வேண்டும் என்பது உறுதி.

ஆரியர்கள் தங்களை நிலைப்படுத்திக் கொண்டு, இந்தியாவில் வாழத் தொடங்கியதே, கி.மு. 1000 ஆண்டுகளில் எனும்போது, அவர்களுக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்த சிந்து வெளித் தமிழ் மக்கள், எண்களைப்பற்றி அறிவு பெறாதிருந்தது போலவும், அவர்களுக்கும் ஆரியர்களே எண்களைப் பற்றிய அறிவைக் கொடுத்தவர்கள் என்றும், மேலைநாட்டு வரலாற்றில் கூறப்படுவதும், தவறான கண்ணோட்டமாகும். எண்களைக் கண்டுபிடித்தவர் ஆரியர் என்றும், அதனை மேலை நாடுகளுக்குப் பரப்பியவர் அராபியர் என்றும் சொல்லப்படும் செய்தியும் தவறான சிந்தனையைக் கொண்டதாகும்.[588] 0 முதல் 9 வரையிலான இலக்கங்களைத் தந்தவர் ஆரியர் என்றும், கிரேக்கரும் உரோமரும், இலக்கங்களுக்குப் பதிலாக, எழுத்துக்களையே இலக்கங்களாகப் பயன்படுத்தினர் என்பதும் உண்மைச் செய்திகளுமன்று.[589]

தமிழர்களே, இலக்கங்களுக்குப் பதிலாக எழுத்துக்களை எண்களாக அறிமுகம் செய்தவர்களாவர். இந்த எழுத்துக்களே, பிற்காலத்தில் இப்போதுள்ள எண் உருக்களைப் பெற்றன என்பதை விடுத்து, தொடக்கத்திலிருந்தே 0 முதல் 9 வரையிலான எண்களை ஆரியர்கள் கண்டுபிடித்தனர் என்பது உண்மைச் செய்தியுமன்று. இந்தக் கண்டுபிடிப்பு பற்றிய சான்றுகள், ஆரியர்களின் வேதத்திலோ, புராணங்களிலோ விளக்கப்படவில்லை. மேலும் இந்த எண்களை ஒலிக்கும் முறைக்கான வேர்ச்சொற்களும் சமற்கிருத மொழியில் இல்லை என்பதையும் நோக்க வேண்டும்.

கி.மு. 10,000 ஆண்டுகளிலேயே தமிழரும் சிந்துவெளித் தமிழர் எண்களைப் பற்றி அறிந்திருந்தனர். அதற்கான குறியீடுகளையும் கொடுத்திருந்தனர். அவர்களின் வழிவந்தவர்களும், அவர்களோடு தொடர்பு கொண்டவர்களுமான பாபிலோனியரும் யூதரும் எண்களைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்ததோடு, அவ் வெண்களுக்கு தெய்வீக ஆற்றல்களும் இருந்ததாக

நம்பினர் என்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கி.மு. 3000 ஆண்டுகளில், வானுயர்ந்த பெருமிடுகளைக் கட்டிய எகிப்தி யரும், எண்களின் அறிவைப் பெற்றிருந்தனர். இவர்களுக்கெல் லாம் காலத்தால், மிகமிகப் பிந்திய ஆரியர், எண்களைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்தனர் என்று கூறிக் கொள்வது, உண்மைகளை முழுவதும் மறைக்கும் செயலே ஆகும். உருசிய வரலாற்றாசிரியர் செர்கி தாக்கரேவ் என்பார், பாபிலோனி யர்களின் எண்களையும், அவர்களது எண்முறைகளையுமே ஐரோப்பியர்கள் முற்றிலுமாகப் பின்பற்றினர் என்ற கூற்று உண்மையானதாகும். சீனர்களும் கூட ஆரியர்களுக்கு முன்பே, எண்களைப் பற்றிய அறிவைக் கொண்டிருந்தனர். சீனர்கள் கொண்டிருந்த எண் அறிவும், பாபிலோனியர்களைப் போன்றே, ஒற்றைப்படை எண்கள் தெய்வீக ஆற்றல் கொண்டவை என்பதை அடிப்படையாகக் கொண்டது. மற்றவை ஞாலத்துடன் தொடர்புடையவை என்றும் (Celestial - Terrstrial) - நம்பினர். Yin - இன் என்ற எண்களைப் பற்றிய சீனச் சொல், எண் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே ஆகும். இச்சொல்லே தமிழரின் எண்கள் பற்றிய செய்திகளை, சீனம் பின்பற்றியது எனக் கூறச் சரியான சான்றாகும். கிரேக்க வரலாற்றாசிரியர் எரடோட்டஸ் என்பார்[592] எகிப்திய சமயத் தலைவர்களும் பிறரும், வானவி யலிலும், ‘அறிவியலிலும், கணிதத்திலும், எவ்வாறு சிறந்து விளங்கினர் என்பதை விரிவாக விளக்குகிறார். இக்காலம் கி.மு. 3000 ஆண்டுகளில் நிகழ்வுற்றவை களாகும். இவர்களுக்கும் ஆரியர்களே எண்களை அறிமுகம் செய்தனர் என்பது, எவ்வளவு நகைப்பிற்குரிய செய்தி என்பதை உணர வேண்டும். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகே வாழ்ந்திருந்த ஆரிய பட்டரும், வராகமிதிகிரும், பாஸ்கராச்சாரியரும், ஏற்கனவே தமிழர்களால் கண்டறியப்பட்ட எண்களுக்கும் எண்கணிதத் திற்கும் விளக்கம் கொடுத்தவர்களே. இவர்களை, விளக்கவுரை யாளர்கள் என்பதைச் சரியென்றும், கண்டுபிடிப்பாளர்கள் என்பதைத் தவறென்றும் கூற வேண்டும். (Inter pretators not inventors).

எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ள விவிலியத்தின் முதல் அதிகாரத்திலேயே ஒரு வாரத்துக்கு ஏழுநாட்கள் என்ற தமிழ் வழக்குச் செய்தி கூறப்பட்டுள்ளது. விவிலியத்தின் நான் காம் அதிகாரம், எண்கள் (Numbers) என்ற தலைப்பிலேயே கொடுக்கப்பட்டுள்ளது.[593] திங்களை அடிப்படையாகக் கொண்ட

யூதர்களின் மாதக் கணக்கும், நாட்காட்டியும், அவர்களது வானியல் அறிவைப் புலப்படுத்துவன. ஏழு, எழுபது போன்ற எண்கள் விவிலியத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. Number என்ற ஆங்கிலச் சொல், Numer என்ற இலத்தீன் சொல்லி னின்றும் பிறந்ததாகும். Numer என்பதற்கு நுண்ணிய சிறிய என்று பொருள் கூறப்பட்டுள்ளது. Numer என்ற சொல், நொய்ம்மை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே, நொய்ம்மை = சிறிய அலகு

மென்மை சீர்மை நொய்ம்மை வடிவம் - மணிமேகலை.[594]

எண் இரண்டு

ஈர் ஈர்தல் என்ற சொல்லினின்றும் இரண்டு தோன்றியது. ஈர்தல் = இரண்டாகப் பிரித்தல்.

கோடு ஈர்இலங்குவளை ஞெகிழ நாடொறும் - குறுந்தொகை[595]

கோடு ஈர் இலங்குவளை நெகிழ்த்த - குறுந்தொகை[596]

இரண்டு என்ற இலக்கத்துக்கு, உ என்ற தமிழ் உயிரெழுத்து, காட்டப்படுகின்றது. உ என்பது உடல், உயிர் என இரண்டாக இருப்பதும், அதுவே மாந்தனின் செயல்பாட்டுக்கு மூலங்களாக இருப்பதும் பற்றியே, உ என்ற எழுத்து, எண் இரண்டைக் குறித்தது. உ என்ற எழுத்தின் படுக்கைக் கோடு சற்றுக் குறைந்து, இன்று 2 என்ற இலக்கத்தையும் குறிப்பது. எண் இரண்டுக்கான மூலம் தமிழில் உள்ளதை அறியலாம். இரண்டைக் குறித்த இந்த உ என்ற தமிழ் எழுத்தும் பிற்கால வளர்ச்சியில் தோன்றியதே ஆகும். கி.மு. 3ஆம் நூற்றாண்டில், உ என்ற தமிழ் எழுத்து, ட என்றவாறு எழுதப்பட்டது. சிந்து வெளியில், உ என்ற எழுத்து ஆங்கில லு போன்று எழுதப் பட்டுள்ளது. லு இது ட என்பதை விட மூப்புடையது. டுடு என்ற பிற்காலத் தமிழ் எழுத்தில் இரண்டு கோடுகளும், லு என்ற தொன்மைத் தமிழ் எழுத்தில் இரண்டு கோடுகளும் உள்ளதை நோக்குக. பீட்டா என்ற கிரேக்க இரண்டில், ஒரு நேர்க்கோட்டில் இரண்டு வட்டங்கள் (ம) காட்டப்பட் டுள்ளன. பீட்டா என்பது இரண்டைக் குறித்த கிரேக்கக் குறியீடாகும். பிடு - பிட்டு என்ற தமிழ்ச் சொல்லே, பீட்டா எனத் திரிந்துள்ளது. பிடு = ஒன்றை இரண்டாக்குக.

உ என்ற தமிழ் எழுத்தும், உடுக்கள் என்ற சொல்லிற்கு தொடக்க எழுத்தாக உள்ளது. உடுக்கள் என்பது பொதுவாக விண்மீன்களைக் குறிப்பது. பேரு டுக்கள் என்பது, கதிரவனையும் நிலவையும் குறித்துச் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கலாம். பேருடு என்பதே, பீட்டா என்றும் திரிபுபட்டிருக்கலாம். சிந்துவெளி எழுத்து, ஆங்கில லு போன்று காட்டப்பட்டுள்ளது.[597] இது ஆட்டுக் கொம்பையும் நினைவூட்டுகிறது. ஆட்டுக்கும் உடு என்ற பெயர் இருந்தது. உடுக்கொம்பான லு ஆட்டுக் கொம்பு என்றும் உணரப்படும். இரண்டு கொம்பு களையுடைய உடு அல்லது ஆடு என்றும் பொருள் கொள்ள லாம். உ தமிழ்ச் சொல், உலகத்தையும் குறித்து, நீரும் நிலமும் என்ற இருபெரும் பரப்பளவுகளை உருவகப்படுத்தியும் சொல் லப்பட்டிருக்கலாம். இன்னும் பல சிந்தனைகளைத் தோற்று விக்கும் வகையில் உ என்ற எழுத்து உள்ளது. கிரேக்கத்தில் வரிசையாகச் சொல்லப்பட்ட 24 எழுத்துக்களும், 1-24 வரையி லான எண்களைக் குறித்தன. ஆனால் தமிழில் அவ்வாறு கூறப்படவில்லை. அ என்ற முதல் எழுத்து தமிழின் எண் எட்டைக் குறிப்பது. ஆகவே கிரேக்கத்தில் சொல்லப்பட்டது போல், அகர வரிசையில் தமிழ் எண்கள் குறிக்கப்படவில்லை என அறியலாம். 24 எண்களுக்கு மேற்பட்ட எண்களைக் குறிக்க, கிரேக்கத்தில் வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

உரோமன் முறையில் இரு கோடுகளே, இரண்டைக் குறித்தன. I, II, III என்று வரிசைப்படுத்திக் கோடுகளை இட்ட உரோமானியர், நான்கு என்பதை எழுத IIII என்று எழுத வில்லை. ஒரு நேர்க்கோட்டை மூன்று முறைகளுக்கு மேல் அவர்கள் பயன்படுத்தவில்லை. IV என்ற நான்கு, 5இல் ஒன்றைக் கழிக்க வருவது எனப் பொருள் கொள்ளப்பட்டது. எனவே II என்று இருகோடுகளையே உரோமானியரும் இரண்டு என்று எழுதினர்.

எபிரேய மொழியில், இரண்டு என்பது, துமா (Tuma) என்ற சொல்லால் விளக்கப்பட்டுள்ளது. துமா என்ற சொல் கிரேக்க மொழியில் திமுஸ் (Dymus) எனப்பட்டது.[598] இவ்விரு சொற்களும் இரட்டை என்ற பொருளைக் கொண்டன. இரண்டு என்ற சொல்லுக்கு, துயோ (Duo) என்றும் கிரேக்கத் தில் சொல் உண்டு. சமற்கிருதத்தில் துவி (Dwi) என்று கூறப்

பட்டுள்ளது. இவையாவும் துமி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபுகளே. துமி = இரண்டாக்கு. இதற்கான மேற்கோளும் விளக்கமும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன.

Thumi *(தமிழ்)* - Dwi *(வடமொழி)* - Tuma *(எபிரேயம்)* - Duo *(கிரேக்கம் மற்றும் இலத்தீன்)* - Two *(ஆங்கிலம்)*

துமி எனும் தமிழ்ச் வேர்ச் சொல்லே, Two என்றும் Twin என்றும் திரிபுப்பட்டுள்ளன. Duo எனும் கிரேக்கச் சொல்லைக் கொண்டு, Duet, Duel போன்ற ஆங்கிலச் சொற்களும் பிறந்தன. த்வி என்ற சமற்கிருதச் சொல்லும் - துமி என்ற தமிழ்ச் சொல்லி னின்றும் திரிபு பட்டதே. இதனை, இன்றைய இந்தி மொழி தோ (Dho) என்று வழங்குகிறது. Two என்ற ஆங்கிலச் சொல், Dho என்ற இந்தி (சமற்கிருத)ச் சொல்லினின்றும் தோன்றிய தாகக் கூறுவதும் தவறானதே.

Thumi *(தமிழ்)* - Tuma *(எபிரேயம்)* - Thoma *(இலத்தீன்)* - Thomas *(ஆங்கிலம்)* தாமஸ் என்ற பெயருக்கு இரட்டையர் (Twin) என்று பொருள் சொல்லப்பட்டுள்ளதை நோக்குக.

இரண்டு என்பதற்கான தமிழ் வேர்ச் சொல்லான ஈர் என்பது, ஈரா என்று எபிரேய மொழியில் சொல்லப்பட்டுள்ளது. இது ஒரு மாதத்தில், திங்களின் இரண்டு நிலைகளை (வளர் - தேய்ப்பிறைகள்) விளக்கும் சொல்லாகும். திங்களின் சுழற்சி, ஒரு மாதத்தை ஈர்கிறது (இரண்டாக்குகிறது) என்ற பொருளில், மாதத்துக்கே, ஈர் - ஈரா என்று பெயரை எபிரேயர் இட்டனர். திங்களால் வரும் மாதமும், திங்களும் (நிலவும்) ஈரா (Yerah) என்றே சொல்லப்பட்டன. இன்று ஆங்கிலத்தில் கூறப்படும் Year (ஆண்டு) என்ற சொல், எபிரேயச் சொல்லான ஈரா என்பதி னின்றும் தோன்றியதே. ஈராவுக்கு ஈர் என்பதே மூலச்சொல்லாகும். பன் மொழிகளிலும் சொல்லப்படும் இரண்டு என்ற எண்ணுக்கு, தமிழ் மொழியின் மூலமும் வேர்ச் சொல்லுமே பொருந்துமாறு உள்ளதை நோக்குகையில், இரண்டு என்பதும், தமிழர்கள் கண்டுபிடித்த எண்ணே என்க.

எண் மூன்று

தமிழ் எழுத்தின் ங என்ற உயிர்மெய், எண் மூன்றுக்கான எழுத்தாகக் கொள்ளப்பட்டுள்ளது. ங என்ற எழுத்தில் சொற்கள் தொடங்கப்படுவது தமிழில் மரபாக இல்லை. தமிழில் ங என்ற

உயிர்மெய்யைத் தொடர்ந்து வரும் ஙா, ஙி, ஙீ போன்ற எழுத்துக்கள் சொற்களில் பயன்படுத்தப்படுவதில்லை. ங என்ற எழுத்தை முன்னிட்டே, மற்ற 11 எழுத்துக்களும் பட்டியலில் இடம் பிடித்துள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே "ங போல் வளை" என்ற பழமொழியும் சொல்லப்பட்டது.

மூன்று என்ற எண், மூக்கை உருவகமாகக் கொண்டது என்று பாவாணர் கூறுகிறார். மூக்கில் முப்பக்கங்களும், மூன்று எனப்பட்டதாகக் கூறுகிறார். முன் - முன்னி = முதலில் வருவது. முன்னுதல் - வெளிப்படுதல். முன்னு = மூக்கு என்று நீண்டதாகவும் பாவாணர் குறிப்பிடுகிறார். தமிழ் எழுத்துக்களில் மூக்கால் ஒலிக்கப்படும் ஒரே எழுத்து ங மட்டுமே. ஞ என்ற எழுத்து கூட, அரை மூக்கொலியை மட்டுமே கொண்டது. ங மூக்கொலியால் பிறப்பதாலும், மூக்கே மூன்றென சொல்லப் பட்டதாலும், ங என்ற எழுத்து மூன்றைக் குறித்தது. இக்குறி யீடும் பிற்காலத்தில் உருவானதே. சிந்துவெளி மக்கள் ற போன்றதொரு குறியீட்டை மூன்றுக்குக் கொடுத்துள்ளனர். இதன் பொருள் என்னவென்று இன்னும் விளக்கப்படவில்லை. பாவாணர் கூறிய மூக்கின் வரைபடமாகக் கூட இது இருக்க லாம்.

மூன்று என்ற தமிழ்ச் சொல்லும் கூட பிற்காலத்தில் தோன்றிய சொல்லாகவே இருக்க வேண்டும். இதற்கு முன்பு, வேறொரு சொல் வழக்கில் இருந்திருக்க வேண்டும். மூன்(று) என்பது. தீன் என இந்தி மொழியில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சமற்கிருத மொழியில் த்ரு என்ற சொல்லே மூன்றைக் குறித்தது. தீன் என்ற சொல், த்ர என்ற சொல்லினின்று பிறந்தது என்பதைவிட மூன்(று) என்ற சொல்லினின்று திரிந்ததாகக் கொள்வது, ஒலிப்பு அளவில் சரியான சிந்தனையாகும்.

மூன்று என்ற சொல், முற்காலத்தில் வேறு சொல்லால் தமிழில் கூறப்பட்டிருக்க வேண்டும் என்பதை Thru (வடமொழி) - Tries (கிரேக்கம்) - Tres (இலத்தீன்) - Drei (செர்மானியம்) - Three (ஆங்கிலம்) என்ற சொல்வளர்ச்சிப் பட்டியல் காட்டும். வட மொழியில் த்ர என்ற சொல், தென்னிந்தியாவை, தமிழ கத்தைக் குறித்துச் சொல்லப்பட்டது என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம். அது தரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. தமிழகத்தை முத்தரை என்றும் அழைத்தனர். மூன்று பக்கங் களில் உள்ள கடல்களைக் கரையாகக் கொண்ட நாடு என்று

பொருள்படும். முத்தரையர் என்ற வேளிர் இனத்தைக் கூட, மூன்று கடல்களை எல்லையாகக் கொண்டு ஆண்டவர் என்றும் விளக்குவர். தமிழகத்தை உருவகப்படுத்தும் தரை என்ற சொல்லே, மூன்று என்ற சொல்லுக்கு முன்னதாகக் கூறப் பட்டிருக்கலாம். சிந்து வெளி எண் மூன்று போன்றதொரு குறியீட்டைக் கொண்டுள்ளது. இது தமிழகத்தின் மூன்று தரைகளை உருவகப்படுத்துவதாகவும் இருந்திருக்கலாம். த்ர - த்ரு என்ற வடமொழிச் சொற்கள் முத்தரை என்ற தமிழ்ச் சொல்லினின்றும் பிறந்திருக்க வேண்டும். தரை என்ற சொல் அக்காலத்தில் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டிருக்க வேண் டும். அல்லது, ஆரியர்கள் தரை என்ற சொல்லை, மூன்று என்ற சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும். மூன்றைப் பொறுத்தவரை, தெளிவான விளக்கங்கள் கிடைக்க வில்லை. எதிர்கால ஆய்வுகள் இப்புதிரை விடுவிக்கலாம்.

எண் நான்கு

நான்கு நிலங்களை உருவகம் செய்வதே. நான்கு என்ற எண் தோன்றியதாகப் பாவாணர் கூறுகிறார். நான்கு நிலங் களைக் கொண்டதே நாலம் என்றும், ஞாலம் என்றும் நீண்ட தாகவும் கூறுகிறார். தமிழில், நாலம் - நாலு - நாலுகு - நான்கு என்று விரிந்தது. நன்னிலம் நான்கென்பதே தமிழர் மரபு. பாலை நிலம் பின்னாட்களில் ஐந்தாக இணைக்கப்பட்டது. ச என்ற எழுத்து நான்கைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. ச என்று தொடங்கும் ஏதேனும் ஒரு சொல், இந்நான்கோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். சிந்து சமவெளி எண் நான்கு, ஒரு வட்டத்தில் இணையும் அல்லது பிரியும் நான்கு கோடுகளைக் கொள்வது. வட்டம் என்பது ஞாலத்தையும், நான்கு கோடு நான்கு நிலங்களையும் குறித்திருக்கலாம். ஊரின் பொதுவிடத்துக்கு வந்து, சென்ற சாலைகளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கலாம், என்பது நான்கைக் குறித்த வரிவடி வமாகும்.

சமற்கிருதத்தில் சது கா (Chatushka) என்ற சொல், நான்கு என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளது. இது சதுக்கம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே யாகும். அக்கம் - அக்ஷமானது போல், பக்கம் - பக்ஷமானதுபோல், தெக்கம் - தெக்ஷ மானதுபோல், சதுக்கம் - சதுகமானது.

சேர் - சேரி = மக்கள் கூட்டமாகக் குடியிருக்கும் இடம். சேர் - சேர்ப்பு - செறிவு = மிகுதி.

சேர்ப்பு - செறிப்பு - கூடுதலால் உண்டாகும் மிகுதி.

சேர்ப்பு - சொதப்பு = சொத சொதப்பு - நீரில் மிகுந்து நனைந்து போன, நீரால் மிகுந்து நனைக்கப்பட்ட.

சேர்ப்பு - சொதப்பு - சதுப்பு = நீர் மிகுந்துள்ள நிலம், மிகுதியைக் காட்டுவது.

சதுப்பு - சதுக்கம் = மக்கள் மிகுந்துள்ள இடம், நாற்சாலைகள் கூடுமிடம்.

சதை = உடலில் மிகுந்துள்ள தசை. தசை = இயல்பானது. சதை = மிகுந்துள்ளது.

சதம் = எண்கள் மிகுந்துள்ள ஒரு தொகுப்பு. நூறு.

சதம் என்பது தமிழ்ச் சொல்லே. சதுக்கம் - சதுரம் = நான்கு எல்லைகளும் ஒரேயளவாகக் கொண்ட இடம்.

சதுரம் + அரங்கம் = சதுரங்கம் - சதுரங்கம் = நான்கு பக்கங்கள் கொண்ட சூதாடும் கருவி.

சதுப்பு, சதுக்கம், சதுரம் ஆகியவை, சேர் எனும் மூலச் சொல்லினின்றும் பிறந்த தமிழ்ச் சொற்களே. இவைகளை வட மொழி தனது சொற்களாகக் கூறிக் கொண்டது. சது கா (Chatushka) என்ற வடசொல்லுக்கான வேர்ச்சொல், அம்மொழியில் தெளிவுபடுத்தப்படவில்லை. சத என்ற முன்னொட்டுச் சொல்லில் தொடங்கும் பல பெயர்கள் தமிழில் உள்ளன.

எ.காட்டுகளாக. சதகுப்பை = பூண்டு வகையைச் சார்ந்தது.

மிகுந்து, அடர்ந்து, வளரும் தன்மையுடையது. சதம் + கை = சதங்கை கை என்பது மணியைக் குறித்தது. சதங்கைப் பூரான் = பலகால்களைக் கொண்ட பூரான். சத சதப்பு = நீர் மிகுதலால் உண்டாகும் தன்மை, என்றவாறு கூறலாம்.

> பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும் – சிலப்பதிகாரம்[599]
>
> அந்தியுஞ் சதுக்கமும் ஆவண வீதியும் –[600]
>
> சதுக்கமும் சந்தியும் – திருமுருகாற்றுப்படை[601]
>
> பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக – மணிமேகலை[602]
>
> பூத சதுக்கமும் பூமலர்ச் சோலையும் – மணிமேகலை[603]

சதுக்கம் என்பது மிகுதியை முதற்பொருளாகவும், நான்கை மறு பொருளாகவும் கொண்ட தமிழ்ச் சொல்லேயாகும். சதுக்கம் - சது கம் என்று வடமொழியில் திரிந்து, பின்னர் சதுர் என்று நான்கைக் குறித்துச் சொல்லப்பட்டது. இன்று இந்தி மொழியில், சார் (Char) *என்று சொல்லப்படுகின்றது.*

தமிழ் எண் நான்கை, ச என்ற தமிழ் எழுத்தால் குறிப்ப தாலும், சிந்து வெளியிலும் 4 என்றே குறிப்பிடப்பட்டிருப்ப தாலும், சதுக்கம் என்ற தமிழ்ச் சொல்லின் உருவகமாகவே ச என்ற தமிழ் எழுத்து நான்கைக் குறித்தது எனலாம். சதுக்கம் என்ற சொல்லின், ஒலிமாற்றம் நீட்சிகளே வடமொழி கிரேக் கம் இலத்தீன் மொழிகளிலும் சொல்லப்பட்டுள்ளன என்க.

Chathuk *(தமிழ்)* - Chatushk *(சமற்கிருதம்)* - Char *(இந்தி)* - Tetteres *(கிரேக்கம்)* - Quartors *(இலத்தீன்)* - Four *(ஆங்கிலம்)*

கால் என்ற நான்கிலொரு பங்கைக் குறித்த தமிழ்ச் சொல் கால் - கொல் - கொத்ரோஸ் என்ற இலத்தீன் மொழியில் சொல்லப்பட்டுள்ளதை நோக்குக.

எண் ஐந்து

ஒரு கையின் ஐந்து விரல்களைக் குறித்தே, ஐந்து என்று எண்ணப்பட்ட தென்று, பாவாணர் கூறுகிறார். ஐந்து, தொடக்கத்தில் கை - கைந்து என்றே சொல்லப்பட்டு, கை - கைந்து - ஐந்து என்று நீண்டதாகவும் பாவாணர் கூறுகிறார். பாவாணருடைய கூற்றை உறுதி செய்யும் வகையில், சிந்து வெளியில் காட்டப் பட்டுள்ள ஐந்து என்ற எண்ணுக்கான வரிவடிவம், விரித்த கையில் ஐந்து விரல்கள் தெரியுமாறு காட்டப்பட்டுள்ளது. என்றவாறு தோன்றும் சிந்துவெளியின் வரிவடிவம் ஐந்தைக் குறித்ததே. தமிழில் ஐந்தை, ரு என்ற எழுத்தால் சுட்டியுள்ளனர். சிந்து வெளியில் மேற்கண்ட வரி வடிவத்தை, ரா என்று ஒலிக்க வேண்டும் என்கிறார் டாக்டர் இரா. மதிவாணன். தமிழில் ரு என்ற எழுத்தும், சிந்துவெளித் தமிழில் ரா என்ற எழுத்தும் ஐந்தையே சுட்டின என்று அறிய முடிகின்றது. ரு.ரா. என்ற எழுத்துக்கள், எச் செய்தியின் உருவ கங்கள் என அறிய இயலவில்லை. மூன்றைக் குறித்த ங என்ற எழுத்தைப் போலவே, ரு.ரா. ஆகியவை தமிழ்ச் சொற்களுக்கு முதலில் வருவதில்லை.

கைந்து - ஐந்து என நீண்ட இச்சொல், அஞ்சு என்றும் வழக்கில் உள்ளது. அஞ்சு - அஞ்சு வண்ணத்தார் என்ற வணிகத் தொடர்பு நிறுவனம், இடைக்காலத்தில் தமிழகத்தில் சிறப்புற் றிருந்தது. இதன்மூலம் அஞ்சு என்ற சொல்லும், முற்காலத் திலிருந்து வழங்கப்பட்டிருக்க வேண்டும். அஞ்சலை (ஐந்து இலைகள்) எனும் சொல் ஆடுதின்னாப்பாளை என்ற மூலிகைச் செடியைக் குறித்தது. ஐந்து நிறங்கள் உள்ள கிளி, அஞ்சுகம் எனப்பட்டது.

அஞ்சு - பஞ்ச என வடமொழியில் திரிந்து, பஞ்ச வர்ணக் கிளி எனப்பட்டது. இன்றும் நாட்டுப்புறங்களில், ஐந்து என்பதை அஞ்சு என்றே மக்கள் வழங்கி வருகின்றனர்.

அஞ்சு - பஞ்ச - பஞ்சம என்றவாறு வடமொழியில் திரிந்தது.

இந்தி மொழி இதனை பாஞ்ச் என்று வழங்குகிறது.

அஞ்சு - பஞ்சு என்ற சொல், கிரேக்கத்தில் பெந்த எனப் பட்டது.

இதுவும் அஞ்சு என்ற சொல்லின் நீட்சியே.

ஐந்து - பைந்து - பெந்த என்றவாறும் திரிபு பட்டிருக்கலாம்.

பெந்த தியூக் (Penta - Deuk) என்ற கிரேக்கச் சொல் விவிலி யத்தின் முதல் 5 அதிகாரங்களைக் குறிக்கிறது.[604] ஒவ்வொரு அதிகாரமும் ஒரு கட்டு (Bundle) அல்லது தூக்கு என்று சொல் லப்பட்டது. தூக்கக்கூடிய அளவில் உள்ள பொருட்கள், தூக்கு எனப்பட்டன. தூக்குத் தூக்கி என்ற சொல்லை நோக்குக. தூக்கு என்பது ஒரு கட்டு, அல்லது பாப்பிரஸ் கட்டாகச் சொல்லப்பட்ட, ஒரு தூக்கு என்றவாறும் சொல்லப்படும். தூக்கு என்ற தமிழ்ச் சொல்லே, தியூக் (Deuk) என்று கிரேக்க மொழியில் திரிந்துள்ளது. பெந்த தியூக் என்ற கிரேக்கச் சொல் ஐந்து தூக்கு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே ஆகும்.

தமிழ் எண்களில், கொத்து என்ற சொல்லும் பயன்பாட் டில் இருந்தது. கொத்து என்பது கிளை என்ற பொருளிலும் சொல்லப்படும். 10-19 வரையிலான எண்கள் முதல் கொத்து என்றும், 20-29 இரண்டாம் கொத்து எனவும், சொல்லப் பட்டன. கொத்து எனப்படும் இச் சொல்லை, கிரேக்க மொழி கொத்தே அல்லது கொஸ்தே என்கிறது. பெந்தே - கொத்தே என்ற சொல்லுக்கு, ஐந்தாங்கொத்து என்றே பொருள் கொள் ளலாம். 5ஆம் கொத்து 50களைக் குறிக்கும். பெந்தே கொஸ்தே என்ற சொல்லும் 50 ஆவது நாளைக் குறித்த சொல்லாகும். பெந்தே கொஸ்தே என்ற சொல்லையே ஒரு பிரிவினர் பெய

ராகக் கொண்டு, கிறித்துவ சமயத்தில் செயல்பட்டு வருகின்றனர். இச்சொல் ஆங்கிலத்தில் Pentecost என்று சொல்லப்படுகின்றது.

ஐந்தாம் கொத்து (தமிழ்) - Pentekoste (கிரேக்கம்) - Pentecost[605] (ஆங்கிலம்) ஐந்து என்ற தமிழ் மூலத்தைக் கொண்டே, Pentacle, Pentagon, Pentagram, Pentathlon போன்ற ஆங்கிலச் சொற்கள் பிறந்தன. இச்சொற்களின் நீட்சியாக Five என்ற ஆங்கிலச் சொல் பிறந்தது. Five என்ற ஆங்கிலச் சொல்லில் உள்ள, தமிழ் மூலத்தின் ஒலியை ஒப்பு நோக்குக.

பத்துப்பத்தை, கொத்துக் கொத்தாக எண்ணும் முறை, தொடக்கத்தில் ஆயர் பெருங்குடி மக்களால், கூழாங்கற்களைக் கொண்டு எண்ணப்பட்டது. பத்துக் கற்களைக் கொண்டது ஒரு சிறு கொத்து (பை) எனப்பட்டது. ஒவ்வொரு பையும், ஒரு கொத்து எனக் கணக்கிடப்பட்டது. பத்துப் பத்தாகப் பாடல் இயற்றி, அதனைப் பதிற்றுப்பத்து என அழைத்ததை ஒப்பு நோக்குக. ஐந்து என்ற எண், தமிழ் மூலத்தினின்றே, மற்ற மொழிகளில் திரிந்தது என்பது தெளிவு.

எண் ஆறு

ஆறு (River), ஆறு (Six), ஆறு (Relaxe) என்றவாறு, ஆறு என்ற சொல்லுக்குப் பொருள் விரியும். ஆற்றங்கரைகளிலேயே நாகரிகம் தோன்றியது என்பது வரலாறு. வரல் + ஆறு = வரலாறு. ஆறு = தொடர்பு. தொடர்ந்த நிகழ்வுகள் எனப்படும். ஆறு எனும் எண், தொன்மைத் தமிழ் மெய்யியல்கள் ஆறு என்ற பொருளில் சொல்லப்பட்டதாகப் பாவாணர் கூறுகிறார். ஆறு என்ற இலக்கத்தை, சா என்றவாறு தமிழ் மரபுகள் சுட்டும். சு என்பதில், ஒரு கோடுள்ளது. சா என்னும் எழுத்தில் இரு கோடுகள் உள்ளன. இவ்வாறான எழுத்து தற்போது வழக்கில் இல்லை. இதனை எவ்வாறு ஒலிப்பது என்பதில் குழப்பங்களும் உள்ளன. சு என்றும், சூ என்றும், சா என்றும் கூறுவர். ஆனால் சிந்துவெளியில் காணப்பட்ட எண் இலக்கக் குறியீடுகளில், ஆறு என்ற எண்ணைக் குறிக்க, சே என்ற எழுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே சா என்பது, சே என்றே ஒலிக்கப்பட வேண்டும் என்றே கொள்ளலாம்.

சிந்து வெளியில் காட்டப்படும் 6 என்ற இலக்கம் என்றவாறு, குறிக்கப்பட்டுள்ளது.[606] இதனைச் சே என்றும், சேல்

என்றும் ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். சேல் என்பது மீனைக் குறித்த தமிழ்ச் சொல்லே. ஆறு - மீன் என்பது இயற்கையிலேயே தொடர்புள்ள பெயர்களாகும். மாந்தன் செய்த முதல் தொழிலே மீன்பிடித்தல்தான் என்பது தெளிவு. ஆறு மீனோடு தொடர்புடையதால், ஆறு என்ற இலக்கத்தை மீனைக் கொண்டே உருகப்படுத்தினர் தமிழர். அதுபற்றியே மீன் பாண்டியர்களின் சின்னமாகியது. ஞால வரலாற்றில் மீன் மிகவும் சிறப்புடையது. நாகரிகத்தின் சின்னமாகவும் மீன் கருதப்படுகிறது. மீன் வளர்ச்சியின் உருவகமுமாகும். இதனால், ஞாலத்தின் பலருடைய பெயர்கள் மீன் என்ற சொல்லோடு தொடர்புடையன. மனு என்ற சொல் விளக்கத்தில், மீனைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

மீன்கள் மீது தமிழன் கொண்டிருந்த பற்றுதல் கரணிய மாகவே வானத்துக் கதிர்களையும் விண்மீன்கள் என்றே அழைத் தனர். சேல் என்ற மீனே சே என்று சிந்துவெளித் தமிழ் எழுத்துக் குறியீட்டிலும், தமிழ்க் குறியீட்டிலும் உருவகப் படுத்தப்பட் டுள்ளன. சேல், ஆற்றுடன் தொடர்பு கொண்ட தால், ஆறு (River) ஆறு என்று எண் இலக்கமாகவும் சொல்லப் பட்டது. தமிழில் சொல்லப்பட்ட சே என்ற எழுத்து, ஆறு என்ற பொருளைக் குறித்து, வடமொழியில் சே (Che) என்றும், எபிரேய மொழியில் சே (Sesh) என்றும் திரிபுபட்டுள்ளன.

Se (தமிழ்) - Che (சமற்கிருதம்) - Sesh (எபிரேயம்) - Seks (கிரேக்கம்) - Sex (இலத்தீன்) - Sechs (செர்மானியம்) - Six (ஆங்கிலம்) சே என்ற தமிழ்ச் சொல்லினின்றும் சங்கிலித் தொடர் போல், நீளும். பன்மொழிகளின் பெயர்களை நோக் கும் போது, ஆறு என்ற இலக்கத்தைக் குறித்த சே எனும் குறியீ டே, முதன்மையானது என விளங்கும். சிட்ட (Sitta) என்பது அரபு மொழியில் ஆறைக்குறித்த சொல்லாகும்.

எண் ஏழு

எ என்ற உயிரெழுத்தால், ஏழு என்ற எண் குறிக்கப் பட்டுள்ளது. ஏழு என்ற சொல், ஏழு - ஏழ் - ஏழு என்றவாறு, எழுதலைக்குறித்துச் சொல்லப்பட்டதாகப் பாவாணர் கூறு கிறார். இசையில் எழுகின்ற ஏழுவகையான ஒலிகளை வைத்தே ஏழ் - ஏழு என்று சொல்லப்பட்டதாகவும் பாவாணர் கருது கிறார். சிந்துவெளித்தமிழ், இது போன்ற குறியீட்டை, எண்

7க்குக் கொடுத்துள்ளது.[607] இதற்கு என்ன பொருள் என்று சரியாக விளக்கப்படவில்லை. இதனை ஏ - ஏணி என்றவாறு சொல்வதற்குப் பொருள் பொருந்தி வரவில்லை. தமிழில் எ என்று சொல்லப்பட்டதற்கான கரணியமும் தெரிய வில்லை. எழும் இசையொலிகள் (சுரங்கள்) ஏழு என்று கூறப்பட்டாலும், சிந்துவெளியின் குறியீடு, இசையொலிகளை உணர்த்துவதாகத் தெரியவில்லை. கதவு போன்ற தோற்றத்தையே இக்குறியீடு உணர்த்துகின்றது எனக் கூறலாம். கதவு என்ற பொருளில் ஏழு என்ற எண், தமிழில் சொல்லப்படவில்லை.

ஆனால் எபிரேய மொழியில் இதற்கான விளக்கம் உள்ளதை அறிய முடிகிறது. ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள் என்ற கணக்கை விவிலியம் சொல்கிறது. ஏழாம் நாளான காரிக் கிழமையை (சனி) சாத்துநாள் என்று எபிரேய மொழி சொல்கிறது. சாத்து என்ற தமிழ்ச் சொல் சப்து (Sabt) என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கான பொருள் சாத்து என்றே அறியப்படுகின்றது. சப்து என்ற சொல்லுக்கு, to cease, to shut, to close என்று எபிரேய மொழியில் பொருள் சொல்லப்பட்டுள்ளது.[608] ஒரு வாரத்தின் 6 நாட்களையும் சாத்தும் அல்லது மூடும் என்ற பொருளில், ஏழாம் நாள் சாத்தும் (அடைக்கும்) நாள் என்றே தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதன்வழியே ஏழு என்ற எண்ணும் சப்து என்றே சொல்லப்பட்டுள்ளது.

சப்து என்ற சொல்லினின்றே சாபாத் (Sabbath) என்ற சொல்லும் பிறந்துள்ளது. சாபாத் என்பதற்கு ஓய்வு நாளாகிய ஏழாம் நாள் (சனி) என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. ஆறு நாட்கள் வேலை செய்யும், மாந்தன் ஏழாம் நாளில் ஓய்வெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. சப்து என்று கூறப்படும் எபிரேயச் சொல், சாத்து என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே, சாத்து என்ற தமிழ்ச் சொல், சிந்துவெளி கொடுத்துள்ள கதவு போன்ற குறியீட்டுடன் தொடர்பு கொள்கிறது. சாத்தப்படும் கதவை, சாத்தி என்றும் கூறலாம். எனவே, சாத்து அல்லது சாத்தி என்ற பெயரில் ஏழாம் நாள் சிந்துவெளி மக்களால் அழைக்கப் பட்டிருக்க வேண்டும். ஏழைச் சாத்து எனக் குறித்த தொன்மைக் கால வழக்கு அழிந்து போயிருக்க வேண்டும். ஏழு என்ற சொல் பிற்காலத்தில் தோன்றியதாகவே இருந்திருக்க வேண்டும். ஏழு என்ற எண்ணின் சொல்லோடு, மற்ற மொழிச் சொற்களைத் தொடர்புபடுத்துகையில், தொடர்

பற்றதாகவேயுள்ளன. சாத்து என்பதை ஏழெனக் கொள்ளு தற்கு, எபிரேய மொழியிலும் சாத்து என்ற சொல்லை எடுத்துக் கொள்வதில் தவறில்லை. தமிழ்நாட்டு வழக்கில் இல்லாத பல சொற்கள் சிந்துவெளித் தமிழில் உள்ளன.

மண்ணையன், உண்ணன், அந்தன் அவ்வன், உட்டன், அய்யட்டன் போன்ற பல பெயர்ச் சொற்களை, ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.[609] இன்னும் கிடைக்காத சொற்களும் பல உள்ளன. அதனைப் போன்றே, தமிழ் வழக்கில் இல்லாத பல தமிழ்ச் சொற்கள் எபிரேய மொழியில் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஆரலோத்து என்ற தமிழ்ச்சொல், ஆண்குறியின் முன் தசையைக் குறிக்க சொல்லப்பட்டுள்ளது. ஆரல் + ஊத்தை என்ற தமிழ்ச் சொல்லே, ஆரலோத்து என்று திரிந்துள்ளது. இச் சொல் தமிழகத்தில் வழக்கில் இருந்ததாகவே தெரியவில்லை. தமிழ் மூலத்தில் தமிழின் வேர்ச்சொல்லில் பிறந்துள்ள, எபிரேயச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக எடுத்துக் கொள்வதில் தவறில்லை என்ற அளவில், ஏழைக் குறித்த சாத்து என்ற சொல் லையும் எடுத்துக் கொள்ளலாம். சாத்து (தமிழ்) - சப்து (எபிரேயம்) - சப்த (வடமொழி) - செப்த (கிரேக்கம்) - செப்தம் (இலத்தீன்) - செவன் (ஆங்கிலம்) சாத்து என்ற ஏழாம் நாளைக் குறித்த சொல்லே, ஏழாம் திங்களான செப்தம்பர் என்பதற்கும் மூலச் சொல்லாகும். செப்தம்பர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களும் சப்த, நவ, தச என்ற சமற்கிருதச் சொற்களினின்றும் பிறந்ததாகச் சொல்லப்படுவதும் தவறான மொழியியல் கருத்தாகும்.

எண் எட்டு

எட்டு என்ற இலக்கத்தை அ என்ற தமிழின் முதல் உயிரெழுத்தால் குறிப்பிட்டுள்ளனர். இதற்கான பொருள் யாதென விளக்கப்படவில்லை. சிந்துவெளித் தமிழும் அ என்ற எழுத்தையே எண் எட்டுக்கும் பயன்படுத்தியுள்ளது. எண் + து எனப் பிரிக்கப்படும் எட்டு என்ற சொல், எண் வகை தவசங்களை (தானியங்களை)க் குறிப்பது என்று பாவாணர் கூறுகிறார். நெல், துவரை, பயறு, அவரை, கடலை, எள், உழுந்து. கொள் என்பனவாம். ஆரியர்கள் கோதுமையையும் இணைத்துக் கொண்டு நவதானியம் என்றனர்.

எட்டு எனும் எண்ணை அட்டு என்றே தொடக்கத்தில் ஒலித்திருக்க வேண்டும். அதுபற்றியே அ என்ற எழுத்து,

எட்டுக் குரியதாக்கப்பட்டது எனலாம். அட்டு எனும் சொல், அடு எனும் சொல்லினின்றும் பிறந்தது. அடு = வினைச் சொல். உணவு சமைத்தல். அடு எனும் சொல்லினின்றே, சமைத்த லுக்குப் பயன் படும் அடுப்பு நீண்டது. அடு - அடுக்களை. சமையல் செய்யும் அறை அல்லது இடம்.

அடு - அடுவல் = நெல்லும் வரவும் கலந்த சோறு.
அடு - அடை = பணியாரம்.

எண் வகை தவசங்களும் சமைக்கப்படும் இடமாக அடுக் களை இருப்பதால், அடு என்ற சொல்லின் முதல் எழுத்தாக, அ - எண் எட்டுக்கு இடப்பட் டிருக்கலாம். அடு - அட்டு என நீண்டது. அட்டு என்பதே தொடக்கத்தில் எட்டைக் குறித்தது. அட்டு என்பது அ ட என்று வடமொழியில் திரிந்தது.

அட்டு அல்லது எட்டு (தமிழ்) - அ ட (சமற்கிருதம்) - அக்டோ (கிரேக்கம்) அக்டோ (இலத்தீன்) - அக்ட் (செர் மானியம்) - எயிட் (ஆங்கிலம்)

Attu *(த)* - Ashta *(ச)* - Okto *(இ)* - Octo *(இல)* - Acht *(செ)* - Eight *(ஆ)* அட்டு அல்லது எட்டு.

சங்கிலித் தொடர் போல, பிற மொழிகளில் வருவதைக் காண்க. எட்டைக் குறித்தப் பன்மொழிகளுக்கான மூலச் சொல்லும் தமிழே எனலாம். எட்டாம் திங்களான அக்டோர், எட்டு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க.

எண் ஒன்பது

ஒன்பது என்பது தொல்காப்பியர் அறிமுகம் செய்த சொல்லாகும். அவருக்கு முன்னும் பின்னும் தொண்டு என்ற தமிழ்ச் சொல்லே, ஒன்பதைக் குறித்துச் சொல்லப்பட்டது. தொண்டு என்ற சொல்லை, ஒன்பது என மாற்றிய தொல்காப் பியர், 9-90-900-9000 ஆகியவைகளுக்கும் விளக்கங்களைக் கொடுத்துள்ளார்.

ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர் - தொல்காப்பியம்[610]

ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்

முந்தை ஒற்றே ணகரம் இரட்டும்

பஃதென் கிளவி ஆய்த பகரம் கெட

நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி

ஒற்றிய தகரம் றகர மாகும் - தொல்காப்பியம்.[611]

ஒன்பது + பஃது = தொண்ணூறு எனச் சொல்வதே சரியான தென்றும், அதற்கான விதிகளையும் தொல்காப்பியர் கூறுகிறார். ஒகரத்துடன் தகரம் இணைந்தால், தொ பிறக்கும். ன் என்பது ண் ஆகி, அதுவும் இரண்டாகும். தொண்ண, ஆய்த எழுத்தும் பகரமும் மாற, ஊ வரும். தொண்ணூ, து என்பது று என மாறும். எனவே, ஒன்பது + பத்து = தொண்ணூறு என்று கூறுவதே சரி என்கிறார்.

இன்றும் கூட, பள்ளியில் படிக்கும் மாணவர்கள், பத்துக்கு முன்பே ஒன் + பது வருகிறதே, நூறுக்கு முன்பே தொண் + நூறு வருகிறதே, அதே போன்று தொள் + ஆயிரம் = ஒன்பதாயிரம் என்ற சொற்கள், அதை அடுத்த எண்ணுக்கு முன்னதாகச் சொல்லப்படுகின்றனவே என்ற கேள்விகளைக் கேட்கின்றனர். இதற்குப் பல ஆசிரியர்களால், குறிப்பாகக் கணித ஆசிரியர்களால் பதில் சொல்ல இயலவில்லை.

இதற்கான பதிலைப் பாவாணர் தெளிவாகக் கொடுத்துள்ளார். தொல்காப்பியர் சொன்னது மிகப் பெரிய தவறான வழிகாட்டுதல் என்றும், தமிழ் மரபுகளையெல்லாம், எண்களைப் பற்றிய தனது விளக்கத்தில், குழிதோண்டிப் புதைத்துவிட்டார் என்றும் சாடுகிறார். தொல்காப்பியர் மாபெரும் இலக்கண ஆசிரியர், அவரது கருத்துக்கு மறுப்பு சொல்லக் கூடாது என்று சிலரும், மறுப்பு சொல்லத் தெரியாமல் பலரும் இருந்தனர். பாவாணர் ஒருவரே தொல்காப்பியர் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டினார். எண்கள் பற்றிய செய்திகள் மட்டுமின்றி, இலக்கணவிதிகள் சிலவற்றையும் தொல்காப்பியர் தவறாகக் கூறிவிட்டார் என்றும் பாவாணர், தகுந்த சான்றுகளுடன் நிறுவுகிறார்.

பாவாணரின் கருத்துப்படி 9 - தொண்டு என்றும், 90 - தொண்பது என்றும் 900 = தொண்ணூறு என்றும், 9000 - தொள்ளாயிரம் என்றும் கூறப்படவேண்டும் என்றும், இதுவே குழப்பமில்லாத முறை என்றும் விளக்கியுள்ளார்.

தொல்காப்பியத்துக்குப் பின் இயற்றப்பட்ட பரிபாடலில், ஒன்பது என்ற எண், தொண்டு என்றே சொல்லப்பட்டுள்

ளதைக் காணும்போது, கடுவன் இளவெயினனார், தொல்காப் பிருடைய கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றே தெரி கிறது. மேலும் சுன்னம் எனப்படும் ட, இந்திய இலக்கியங் களில் பரிபாடலில் தான் முதன் முதல் கூறப்படுகிறது. பரிபாடல் இயற்றப்பட்ட காலம், கிறித்து பிறப்பு ஆண்டு களில் என்பர்.

> பாழெனக் காலெனப் பாகென வொன்றென
> இரண்டென மூன்றென நான்கென வைந்தென
> ஆறென வேழென வெட்டனத் தொண்டென – பரிபாடல்[612]

பாழ் - சுன்னம் (Zero), பாகு = அரை.

தொண்டு என்ற இலக்கத்தை என்ற எழுத்தால் சுட்டுகின் றனர். சிந்து வெளியின் எழுத்துக்களை ஆய்வு செய்தோர், கோ என்ற எழுத்தால் ஒன்பதைச் சுட்டி யுள்ளதைக் கண்டுள்ளனர். கோ என்ற எழுத்துக்கும், ஒன்பது என்ற சொல்லுக்கும் உள்ள தொடர்பு விளக்கப்படவில்லை. கொள் = பெற்றிருத்தல், கொண்டிருத்தல், கொள் கலம் என்றவாறு கொள்க.

கொள் - கொடு = வைத்திருந்ததைக் கொடுத்தல், ஈதல்.

கொள் - கொடு - கோடு = வளைவான வாயையுடைய கலம் (பாத்திரம்) மரக் கலம். கோடு எனும் சொல் மரக்கலத்தையும் குறிப்பதாகும். கோடு என்பது மூன்றாம் பிறையையும் குறிக்கும். அப்பிறை மரக்கலம் போன்று அமைந்திருத்தலையும் ஒப்பு நோக்குக. வளைவான அமைப் பைக் கொண்ட மரக்கலம். தொன்னம் என்ற தமிழ்ச் சொல். மரக்கலத்தையும் குறித்தது துளை - துளைத்தல் என்றவாறு, தொள் - தொள்ளம் எனப்பட்டது. தொள் - தொண் - தொண்டு, தொண்டு என்பதும் மரக்கலத்தைக் குறித்த சொல்லே. தொண்டுகள் அதிகம் வந்து போன துறைமுகம், தொண்டி எனப்பட்டது.

சிந்துவெளித் தமிழில் சொல்லப்பட்ட கோ ஒன்பதைக குறித்த சொல், மரக்கலத்தோடு பெயர்ப் பொருள் கொண்டது. தொண்டு என்ற ஒன்பதும் மரக்கலப் பெயரைக் கொண்டதே. நாவி என்ற மரக்கலத்தோடு தொடர்பு கொண்ட நவ என்ற சொல், சமற்கிருதத்தில் ஒன்பதைக் குறித்தது. எனவே, தமிழி லும், சிந்து வெளித் தமிழிலும், சமற்கிருதத்திலும் சொல்லப் பட்ட ஒன்பது என்ற எண் மரக்கலத்தோடு தொடர்புபடு

கின்றன. இதன் வழியில் வரும் மேலைச் சொற்களாவன: Nea (கிரேக்கம்) - Novem (இலத்தீன்) - Neun (செர்மானியம்) - Nine (ஆங்கிலம்). இச் சொற்களும், நாவ (Nava) என்ற சமற்கிருதச் சொல்லும், நாவி என்ற தமிழ்ச் சொல்லினின்றே நீளுகின்றன. மேற்கண்ட செய்திகளின்படி, ஒன்பது என்ற எண் மரக்கலத் தோடு தொடர்புடைய சொல் என்பது உறுதியாகின்றது. மற்ற விளக்கங்கள் நாவாய் என்ற தலைப்பில் ஏற்கனவே சொல்லப் பட்டுள்ளன. கோடு - நாவி - தொண்டு ஆகிய சொற்கள் மரக்கலத்தைச் சுட்டுவனவே. கோடு, சிந்து வெளியிலும் நாவி, பிற மேற்கத்திய மொழிகளிலும் தொண்டு, தமிழிலும் எண் ஒன்பதைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளன.

ஒன்பது என்ற எண், ஒன்பதாம் திங்களான நவம்பர் என்ற சொல்லோடு தொடர்பு கொண்டது. நவம்பர்த் திங்கள் என்பது ஒவ்வொரு நாட்டினரின் நாட்காட்டிகள் வழியில், அதற்குரிய காலம் மாறுபடுகின்றது. உரோமானியர் பத்து திங்களையே தங்கள் நாட்காட்டியில் கொண்டிருந்தனர். பாபி லோனியர், எபிரேயர், எகிப்தியர், தமிழர்களைப் போன்றே 12 திங்கள் வழக்கைக் கொண்டிருந்தனர். ஆரியரும் 12 திங்கள் முறையையே கொண்டிருந்தனர். தமிழரின் நாட்காட்டியும் 12 திங்களைக் கொண்டிருந்தாலும், ஆண்டின் முதல் திங்கள் எதுவென்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆண்டின் தொடக்கம் தைத் திங்களே என்று சிலரும் சிற்றரையே (சித்திரையே) என்று சிலரும் கூறுகின்றனர். சித்திரையின் கால அளவிலேயே பாபிலோனியரும் யூதரும் ஆண்டைத் தொடங் கினர். ஆண்டின் தொடக்கம் என்பது கதிரவனின் சுற்றுப் பாதையை அடிப்படையாகக் கொண்டே தொடங்கப்பட் டது. திசம்பர் 21ஆம் நாளில், கதிரவன் தென் திசையினின்றும் (மகரம்) வடக்கே திரும்புவான். மார்ச் 21ஆம் நாளில், நில நடுக் கோட்டைத் தொடுவான். சூன் 21ஆம் நாளில் வடதிசையில் (கடகத்தில்) கதிரவன் இருப்பான், இதனை யடுத்து செப்தம்பர் 21ஆம் நாளில் நில நடுக்கோட்டையடைந்து தென் பயணத் தைத் தொடங்குவான். இந்த நான்கு நாட்களும் கதிரவனின் பாதையில் சிறப்பான நாட்களாகும். இந்த நான்கு நாட்களை உள்ளடக்கிய திங்கள்களில் ஆண்டின் தொடக்கங்கள் இருந்துள்ளன. தமிழகத்தின் சேர நாட்டில் ஒரு தொடக்க மும், சோழநாட்டில் வேறுவகையிலும் இருந்துள்ள ஆண்டுத் தொடக்கம் பற்றிய செய்திகள் உள்ளன. மாரிக்காலத்திலும் ஆண்டுத் தொடக்கம் இருந்துள்ளது.

இவையன்றி வியாழன் சுற்றைக் கொண்டு கணக்கிடப் பட்ட ஆண்டும் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்துள்ளது. இவை களையெல்லாம் கணக்கில் கொண்டு பார்க்கையில், தைத்திங் களில் தமிழாண்டுத் தொடக்கம் எனக் கொண்டால், ஒன்பதாம் திங்கள் புரட்டாசி என்று கணக்கிடலாம். புரட் டாசி, ஐப்பசி, கார்த்திகை, மூன்றும் தமிழ்நாட்டின் மழைக் காலங்களாகும். வங்கக்கடலும், அரபிக்கடலும் பல புயல் காற்றுகளை உருவாக்கும் காலங்களாகும். ஆகவே இக்காலங் களில், தமிழரும் பிற வணிகரும், தங்கள் மரக்கலங்களை முடக்கிவைத்தனர். ஒன்பதாம் திங்களில், மரக் கலங்கள் நிலை நிறுத்தப்பட்டன. மரக்கலங்களை இயக்காத திங்கள் என, ஒன்பதாம் திங்கள் உரைப்பட்டிருக்க வேண்டும். ஓய்வுத் தொடக்கமான மாதம், நாவி மாதம் என்றே அழைக்கப்பட் டிருக்க வேண்டும். இவ்வாறே ஒன்பதாம் திங்கள் மரக்கலத் தோடு தொடர்புற்றிருக்க வேண்டும். உரோமர் கணக்குப் படியம், நாவிகள் மீண்டும் பயணத்தைத் தொடங்கியதும் ஒன்ப தாம் மாதமாகும். மார்கழி முதல் ஆவணி வரையி லான ஒன்பது மாதங்கள் மட்டுமே, மரக்கலங்கள் கடலில் ஓடின. எனவே இந்த ஒன்பது மாதங்களை, மரக்கலங்களோடு தொடர்புபடுத்தியிருக்கலாம். எவ்வாறெனினும், ஒன்பது என்ற எண், மரக்கலங்களோடு தொடர்பு கொண்டிருந்தன என்பது தெளிவு.

எண் பத்து

பத்து என்ற இலக்கத்தை, ய என்று தமிழில் காண்கி றோம். சிந்துவெளித் தமிழும் ய என்ற எழுத்தையே பத்தாகக் கொண்டுள்ளது. ஒருகை விரல் ஐந்து, மறுகை விரல் ஐந்து, இரண்டும் சேர்ந்தவை பத்து என்ற கணக்கில் இரண்டு கை களும், அதன் விரல்களும் பத்து என்ற இலக்கத்தைச் சுட்டு கின்றன. இருகைகளும் விரல்களும் முன் நீட்டப்பட்ட பார் வையில் குறிக்கப் பட்டுள்ளன. கால நீட்சியில், இவ்விரண்டு எண்களிலுமுள்ள நடுக்கோடுகள் மூன்றும் மறைந்து, விலி இரு அரைவட்டங்களாயின. இவ்விரு அரை வட்டங்களும் இணைந்த எழுத்தாக ய என்ற எழுத்து, பத்துக்கு உருவகம் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் ய என்ற எழுத்து இரு அரைவட்டங்களாகிய (கைகளின்) வரிவடிவத்தின் உருவகமே. ய என்ற எழுத்து முதலில் இருந்த தன்னுருவை இழந்து,

பத்தைக் குறித்த புதிய வடிவமாக மாறி யிருக்க வேண்டும். இது வரிவடிவத்தின் வளர்ச்சியில் ஏற்பட்டதேயன்றி, யகரத்தில் தொடங்கும் எச்சொல்லையும் குறிக்கவில்லை என்பது தெளிவு.

பற்று என்ற தமிழ்ச் சொல்லே. பத்து எனப் பிற்காலத்தில் மாறியது எனலாம். பற்றுதல் = ஒட்டியிருத்தல், பொருந்தி யிருத்தல், மூடியிருத்தல் என்றவாறு இதன் பொருள் விரியும். இவ்வாறு பற்றியிருக்கும் பொருளைப் பத்து என அழைக்கும் வழக்கும் தோன்றியது. உணவுக் கலத்தில் ஒட்டியிருக்கும் சோற்றுத் தசையைப் பத்து என அழைப்பது, இன்றும் வழக்கில் உள்ளது. பத்து = ஒட்டியிருப்பது. பிடித்துக் கொண்டிருப்பது என்று பொருள்படும். ஒன்று முதல் ஒன்பது வரையிலுமுள்ள எண்களை ஒரு சொத்தாகப் பிடித்திருப்பது, பத்து என்ற எண்ணே. இதுவொரு கொத்தாக எண்ணப்படும். இதே முறையில்தான், ஞாயிறு முதல் வெள்ளி வரையிலான ஆறு நாட்களைப் பிடித்துக் கொண்டிருந்த ஏழாம் நாளை, சாத்துநாள் என்று எபிரேய மொழி சொல்கிறது. ஒவ்வொரு கொத்துக்கும் முடிவான எண்கள் இவ்வாறு கூறப்பட்டுள்ளன. ஒன்று முதல் ஒன்பது வரை யிலான எண்களைப் பற்றி யிருக்கும் எண் பத்து எனப்படும்.

பத்து என்பது தசையைக் குறித்தும் சொல்லப்பட்டது. பத்து என்பது தசையைக் குறிப்பது. அது உடலில் பற்றி யிருப்பது பற்றியே. எனவே, பத்தைத் தசை என்றும் கூறலாம். தசை என்பது தமிழ்ச் சொல்லே என்பதும், அது வடமொழியில் தசா என்று திரிந்துள்ளதையும் காணலாம். தசை என்ற சொல்லுக்கான வேர்ச் சொல்லாக, தை என்பதைக் கூறலாம். தை - தைசை - தசை = உடலில் தைக்கப்பட்டிருக்கும் பத்து. தை - தைச்சு - தைச்சன்- தச்சன் மரங்களை வெட்டி தைப்பவன், தைத்தல் = இணைத்தல், ஒன்றாக்குதல், பற்றுமாறு வைத்தல், தசை, பத்தைக் குறித்ததால், தசை பத்து (10) என்றும் சொல்லப்பட்டது. தசை, பத்து இரண்டும் ஒரு பொருளைத் தருவதே. தசை என்று பத்தைக் குறித்த தமிழ்ச்சொல், சமற் கிருதத்தில் தசா என்று சொல்லப்பட்டது. தமிழ் பத்து என்றதும், வடமொழி தசா என்றதும், இரண்டும் ஒரு பொருளையே குறித்தன.

தசப் பொருத்தம் என்ற சொல், ஒரு பொருளையே கொண்ட இரு சொற்களாகும். தசை = பொருத்துதல் என்றே பொருள்படும். இதனைப் பிற்காலத்தில் 10 பொருத்தங்கள் எனக் கூறி, அதற்கான பெயர்களையும் வடமொழியில் கூறி வைத்தனர். சோதிடம் என்ற ஆரியக் கொள்கையில் இப்பொருத்தங்கள் இணைக்கப்பட்டன. தமிழகத்தில்,தொன்மைக் காலத்தில், இவ்வாறான பொருத்தங்கள் பார்த்துத் திருமணங்கள் நடைபெறவில்லை. தசா என்ற வடசொல்லுக்குத் தமிழில் மட்டுமே வேர்ச்சொல் உண்டு என்பதும், சமற்கிருதத்தில் அதற்கான வேர்ச்சொல் இல்லை என்பதும், தசா என்று சொல்லப்பட்ட சமற்கிருதச் சொல், தமிழ்ச் சொல்லே என்பதைக் காட்டும். இதன் வழியில் தசமி (பத்தாம் நாள்) தசமுகன் (இராவணன்) தசரதன் (இராமனின் தந்தை) தசாவதாரம் (பத்துப்பிறப்புகள்) போன்ற சமற்கிருதச் சொற்கள் பிறந்தன.

பத்து எனப்படும் தசை என்ற சொல்லே, அனைத்து மொழிகளுக்கான பத்தைக் குறித்த சொற்களுக்கும் வேர்ச் சொல்லாய் அமைந்துள்ளது. எபிரேய மொழியிலும் பத்தை, திசா என்றே குறிப்பிடுகின்றனர்.

தசை (தமிழ்) - Tesha (எபிரேயம்) - Dasa (சமற்கிருதம்) - Deca (கிரேக்கம்) - Decem (இலத்தீன்) - Ten (ஆங்கிலம்) இதன் வழியில் 10வது திங்களை (உரோமர் முறைப்படி) திசம்பர் என அழைத்தனர். திசம்பர் - தசை என்ற தமிழ் மூலத்தைக் கொண்டதே.

மேற்கொண்ட செய்திகளின் வழியில், ஒன்று முதல் பத்து வரையிலான எண்களுக்கான மூலச் சொற்கள் தமிழிலே இருந்தும், அவைகளைக் கண்டுபிடித்தவர்கள் ஆரியர்கள் என்றே சொல்லப்பட்டது. வரலாற்றில் தவறான கண்ணோட்டத்தின் செய்தியாகும். இதனைப் பரப்பியவர்கள் அராபியர்கள் என்ற கருத்தும் தவறானது. ஏனெனில், ஆரியர்களுக்கு முன்பே, தமிழ் எண்களை அராபியர் அறிந்திருந்தனர். அராபியரும், பாபிலோனியரும், யூதரும் தமிழ் முறையிலான கணக்கு வழிகளைப் பின்பற்றிய தமிழ் இனத்தின் வழிவந்தோரே என்ற கொள்கை. அன்று மேலை நாட்டவரால் அறியப்படாததால், இதுபோன்ற முரண்பட்ட செய்திகளைக் கூறினர். அராபியர் எண்களைப் பற்றி அறிந்திருந்தனர் என்பதை மேலை நாட்டார்

அறிந்திருந்தனர். அராபியர்களுக்கு எண்களைப் பற்றிய அறிவு எவ்வாறு ஏற்பட்டது என்ற வரலாற்றுப் பின்னணியை, மேலை நாட்டார் அறிந்திருக்கவில்லை. எனவே, மாக்சு முல்லர் போன்ற செர்மானிய ஆரியர், இந்திய ஆரியமே ஞாலத்துக்கு அனைத்துக் கல்வியையும் அறிவையும் அளித்தது என்று, தன் இனத்தை உயர்த்திப் பிடிக்கச் சொன்ன செய்தியை, மேலை நாட்டவரும் நம்பிவிட்டனர். மாக்சு முல்லர், வடமொழியைக் கற்றார் என்ற தகுதியை மட்டும் வைத்துக் கொண்டு இந்திய வரலாற்றை எழுதத் துணிந்தது, மறுப்பார் இல்லாத காலத்தில் மட்டுமே நிகழ்ந்தது எனலாம். மாக்சு முல்லரின் கூற்றுகள் பலவும், சான்றுகள் இல்லாத செய்திகளின் அடிப்படைகளில் சொல்லப்பட்டவைகளாகும். இடைக்கால வரலாற்றில் ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்த ஒரு முரட்டுக்கூட்டமே அராபிய இனம் என்று மேலை நாட்டார் தவறாகக் கருதி விட்டனர். அவர்களின் முன்னோர் தமிழ் மரபில் வந்த அறிவர் களின் கூட்டம் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அராபியர்களின் கணித அறிவும், கடலோடிச் சென்ற வணிகத் திறமையும், தமிழ் முன்னோர்களின் மரபு வழிப் பயிற்சியே என்பதையும் மேலை நாட்டார் அறிந்திருக்கவில்லை.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ஆரியப்பட்ட ரும் வராகமிதிரரும், தொன்மைத் தமிழ்க் கணிதத்திற்கு விளக்கங்கள் கண்டவர்களே. எண்களையுங் கூட அவர்கள் சில மாற்றங்களுக்குட்படுத்தினர். வரி வடிவத்தில் தற்போ துள்ள முறையை அவர்கள் அறிமுகம் செய்தனர் என்றாலும் அவையும் தமிழ் எண், எழுத்துக்களை மூலமாகக் கொண்ட வைகளே. தொன்மைக் காலத்தில் க என்ற எழுத்து, 1 என்றே எழுதப்பட்டது. அதை என்றே இன்றும் எழுதுகிறோம். உ என்பது தனது நீளக் கோட்டைச் சுருக்கிக் கொண்டு 2 ஆனது. இவ்வாறே ஒவ்வொரு தமிழ் எழுத்தும் இன்றுள்ள எண்களாக உருமாறின என்பதே உண்மையாகும்.

பாழ் எண்

சீரோ (Zero) என்றும், சைஃபர் (Cipher) என்றும் சொல்லப் படும் வெற்றெண்ணைப் பாழ் எண் என்று பரிபாடல் கூறுகிறது. பாழ் என்பது, ஒன்றுமில்லாததைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகும். ‘பாழாய்ப் போக என்ற வஞ்சினச் சொல் இன்றும் வழக்கில் உள்ளது. பாழாய்ப் போ = ஒன்று

மில்லாமல் போ. கடைக்கழக இலக்கியங்களில் பரிபாடல், பாழ் எண்ணைப் பற்றிக் கூறினாலும், அதன் வரிவடிவம் என்னவென்பது தெளிவாக்கப்படவில்லை. சிந்துவெளி மக்களும் பாபிலோனியரும், யூதரும், அராபியரும் பாழ் எண்ணெப் பற்றி அறிந்திருந்தனர் என்பதற்கு அவர்களின் கட்டிடக்கலை அறிவும், வணிக முயற்சிகளும் சான்றுகளாக உள்ளன. பாழ் எண்ணின் மதிப்பை அறியாது, வானுயர்ந்த கட்டிடங்களை அவர்கள் கட்டியிருக்க இயலாது. வணிகத்தில் ஈடுபட்டிருக்கவும் முடியாது. ஆனால், பாழ் எண்ணைப் பிற்காலத்தில் வந்தவர்கள் தான் கண்டறிந்தனர் என்பது தவறான சிந்தனையாகும்.

சுன்னம் என்றவொரு சொல், பாழ் எண்ணைக் குறித்துச் சொல்லப்படுகின்றது. சுன்னம் என்பது வளைவு என்ற பொருளையே கொண்டது. சுனை = வளைந்தோடுகின்ற காட்டருவிசுன் - சுனுப்பு = வளைவான வரப்புகளைக் கொண்டுள்ள நிலம் அல்லது இடம். சுனுப்பு என்ற சொல், இன்றும் வழக்கில் உள்ளது. சுனுக்கு சுந்தரி - உடலை வளைத்து நெளித்து நடக்கும் பெண். சுன்னை = வளைந்து தொங்கும் ஆண்குறியின் முன்தசை. சுன் - சுனி = வளைந்த வளையங்களைக் கொண்டேகாரி (சனி), சுனி என்ற தமிழ்ச் சொல்லே. வடமொழியில் சனி என்று திரிந்தது. சுன் - சுன்மை = வளைவு, பாழ் = ஒன்றுமில்லாதது. சுனி = வளைவு. வளைவுக்குள் உள்ள வெற்றிடம் என்ற முழுப்பொருளையும் தருவது சுனிப்பாழ் என்ற சொல்லாகும். இச்சொல் ட என்ற எண்ணைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகும். சுனிப்பாழ் என்ற சொல், சுப்பாழ் - சுப்பார் என்று திரிந்து சிப்பர் என்று அரபு மொழியில் சொல்லப்பட்டது. சிப்பர் என்ற அரபுச் சொல்லை, சைபர் (Cipher) என்று மேலை நாட்டார் ஒலித்தனர். தற்கால அரபுச் சொல் கூட ணகைச (சிப்பர்) என்றே இவ்வெண்ணைக் குறிக்கிறது.[613] Cipher என்ற அரபுச் சொல் வழியே, Zero என்ற எண் பிறந்ததாக, ஆங்கில அகரமுதலிகள் கூறுகின்றன. Cipher[614] என்ற சொல் வளைவு என்ற ஒரு பொருளையே குறித்தது. பாழ் என்ற சொல்லினின்றும் பூஜ் - பூஜ்ய என்ற சொல் பிறந்தது. ழகரத்தை ஆரியர்கள் ஒலிக்க இயலாமல் தடுமாறினர் என்பதற்கு, ழ் - ஜ் ஆக மாறியதைக் கூறலாம். எனவே, ஆரியர்கள் கூறும் சூன்ய, பூஜ்ய ஆகிய இரண்டு சொற்களும், சுனி - பாழ் என்ற இருதமிழ்ச் சொற்களின் திரிபுகளே.

Zero, Cipher, பூஜ்ய போன்ற சொற்களின் மூலச்சொற்கள் தமிழில் இருக்க, O ஐக் கண்டுபிடித்தது ஆரியர்களே என்று மேலைநாட்டார் கூற்று மறுக்கப்படக் கூடியதே. தமிழர்களுக்கு வரலாற்று அறிவு என்பது குறைவாகவே இருந்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவர்கள் கண்டறிந்தவற்றைப் பதிவு செய்யாமல் போய் விட்டனர். நல்ல வேளையாக, ஏராள மான தமிழ்ச் சொற்களை இலக்கியங்களில் பதிவு செய்து வைத்துள்ளனர். தமிழில் உள்ள சொற்களை யாராலும் எண்ண வியலாது. அக்காலத்துப் புலவர்கள், இலக்கியங்களில் பதிவு செய்த சொற்களினும், பதிவுறா சொற்களே அதிக முள்ளன. அப்பதிவுறாச் சொற்கள் பலவும் இன்றும் தென் தமிழ் நாட்டில் வழக்கில் உள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத் தில் அதிகம் உள்ளன வென்று பாவாணர் கூறுகிறார். தற்காலத் தில் தமிழறிஞர் சிலர், ஒரு சொல்லைத் தமிழ்ச் சொல் என்று அடையாளம் காட்ட, இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டச் சொல்கின்றனர். அவ்வாறு காட்டப்பெறாத சொற் களைத் தமிழ்ச் சொற்கள் என அவர் ஏற்க மறுக்கின்றனர். எடுத்துக்காட்டாகப் பயணம் என்ற சொல்லைத் தமிழ்ச் சொல் அல்லவென்றும், அது இலக்கியங்களில் சொல்லப்பட வில்லை என்றும் கூறுகின்றனர்.

பாவாணரின் கருத்துப்படி, ஒரு சொல் இலக்கியத்தில் இருந்தாலும், பேச்சுவழக்கில் இருந்தாலும், வேற்று மொழி களில் இருந்தாலும், அச் சொல்லுக்கான வேர் தமிழில் இருந் தால், அது தமிழ்ச் சொல்லே என ஏற்கப்படல் வேண்டும். இலக்கியங்கள் சொல்லாமல் விட்ட ஏராளமான தமிழ்ச் சொற்கள், தமிழில் உண்டு என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழில் ஊடுருவிவிட்ட வடமொழிச் சொற்களின் துணை இல்லாமல் தமிழ் தனித் தியங்க முடியாது என்றும், வடமொழியினின்றும் தமிழ் பிறந்ததே இதற்குக் கரணியம் என்றும் பலர் கருதி வந்தனர். சமற்கிருத மொழியின் துணையின்றி தெலுங்கு மொழி தனித் தியங்க இயலாது. அவ்வாறே கன்னடமும் மலையாளமும் வடமொழியின் பிடியில் சிக்கிவிட்டன. ஆனால் தமிழால் தனித்தியங்க முடியும். அதற்கான சொல்வளம் தமிழில் உண்டு என மெய்ப்பிக்கவே, மறை மலையடிகள் தனித்தமிழில் எழுதி னார்கள்.

ஈராயிரம் ஆண்டுகளாக விடுவிக்கப்படாதிருந்த மொழிப் புதிர்களை, மிக எளிமையான முறையில், தனது கூர்ந்த ஆய்வு களினால், விடுவித்தவர், மொழி ஞாயிறு, ஞா. தேவநேயப் பாவாணர் ஆவார்கள். பாவாணருடைய ஆய்வுகள் மட்டும் வெளிவராமல் இருந்திருப்பின், இன்றும் கூட நம்மால், வட சொல் எது, தமிழ்ச்சொல் எது என அடையாளங் காணவிய லாமல் திண்டாடும் நிலை ஏற்பட் டிருக்கும். தமிழ் மொழி யைப் பற்றிய தெளிவான கொள்கையை வகுத்துக் கொடுத் துள்ள பாவாணரின் அரிய முயற்சி கடந்த ஈராயிரம் ஆண்டு களாக எவராலும் மேற்கொள்ளப்படாதது. வள்ளுவனுக்கும் வாய்த்திராத வரலாற்று அறிவும், தொல்காப் பியனுக்கும் கைவராத இலக்கண அறிவும், பாவாணரிடம் குடி கொண் டிருந்ததாகக் கூறுவர். இந்நூல் எழுதப்பட முழு முதல் உந்து தல், பாவாணருடைய சிந்தனை வழிகளில் பிறந்ததாகும். தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளவரை, தேவநேயப் பாவாணரின் புகழ் விரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பாவாணருடைய அடி யொற்றி, எதிர்காலத் தமிழகம் எண்ணற்ற மொழியியல் ஆய்வா ளர்களை அளிக்கும் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

தமிழ் வேரினின்றும் விரிந்த எபிறேயச் சொற்கள்

(ஆங்கில அகர வரிசைப் படி)

1. **ஆரோன்**:(Aaron,Hb, Es. 4:14;7:1) பொருள்: அறியப் படவில்லை (N.K.) ஆர் எனும் வேர்ச் சொல்லினின்றும் விரிந்து, ன் விகுதியில் முடியும் தமிழ்ப்பெயர். ஆர் = உயர்வு, மேன்மை (புற.338:6-9); அழகு (பரி. 18:30). ஆர் - ஆரோன் - ஆரியன் என்றவாறு விரிந்தன.

2. **அப்பா**: (Abba, Hb, and Ara; Mk. 14:36) பொருள்: தந்தை. அப்பா என்ற தமிழ் ஒலிப்பின் அழுத்தம் குறைத்துச் சொல்லப்பட்டது. சுருக்கமாக அப் (Ab) என்றும் அபி (Abi) என்றும் சொல்லப்பட்டன. போத்து என்ற தமிழ்ச் சொல், ஆணைக் குறித்தது. அதன் விரிவே, பிதா (சம) - பாத்தர் (கிரே) - ஃபாதர்(ஆங்). பிள்ளையைத் தந்தவன் தந்தை எனப் பட்டான். உடலை உருவாக்கக் கரணியமாயிருந்தவன், அவ் வுடலைத் தந்தவன் தாதை எனப்பட்டான். தை = இணைத் தல், சேர்த்தல், உருவாக்குதல். உலக மொழிகளில் தந்தைக் குரிய அனைத்துச் சொற்களின் வேரும் மூலமும் தமிழில் உள்ளன.

3. **அப்-எல்** (Ab-el, Hb, Gen. 4:2)பொருள்: ஒன்றுமின்மை (எபி); தந்தை தந்த மகன் (அக்) இச்சொல் அக்காடிய மொழியினின்றும் எடுக்கப்பட்டது (D.O.B, P.2). உண் மையில் இதன் பொருள் எல் எனப்படும் இறைவனாகிய தந்தை என்பதே. இறைவனே மகனை அளித்தான் என் பதே பொருளாகும். அப், அப்பா என்பதின் சுருக்கம். எல் = யூதரின் கடவுள் எல் என்பது தமிழ்ச் சொல்லே. அது, பகல் எனவும், ஒளி எனவும், கதிரவன் எனவும் விரியும். அப் - எல் = இறைவனாகிய தந்தை. எல் = கதிரவன் (குறு. 234:1-3).

4. **அப்றகம்** (Abraham, Hb, Gen. 17:1-19) *பொருள்: நாடுகளின் தந்தை என போற்றப்படுகின்றார். அறம்* (Aram) *என்ற தமிழ்ச் சொல்லைத் தாங்கிய பகுதி யூப்ரடீசு - தைகிரீசு ஆறுகளுக்கிடைப்பட்ட வளமையான நிலப் பகுதியாகும். இப்பகுதியில் தோன்றியவன் யூதர்களின் தந்தை எனப்பட்டான். அவனை பன்னாட்டின் தந்தையாக இறைவன் உயர்த்தினார். அப்பா + அறம் + அகம் என்ற மூன்று தமிழ்ச் சொற்களே, அப் + அற + அகம் என்றவாறு, அப்றகம் எனப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் அப்றகாம் என பிற்காலத்தில் ஒலித்தனர்*

5. **ஆடா** (Adah, Hb, Gen. 4:19) *பொருள்: அணியக் கூடியது. ஒரு பெண்ணின் பெயர். ஆடை என்ற தமிழ்ச் சொல்லே, ஆடா எனத் திரிந்துள்ளது துகில் = ஆடை (புற.275:1).*

6. **ஆதாம்** (Adaam, Hb, Gen. 4:25) *பொருள்: மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன். அந்தத் தாம மண் அல்லது அந்தச் சிவப்பு மண் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபே ஆதாம் என்ற பெயராகும். ஏற்கனவே விளக்கப்பட் டுள்ளது.*

7. **அடர்** (Adar, Hb,) *பொருள்: யூத நாள்காட்டியில் 13ஆம் திங்கள். திங்கள் வழியிலான நாள்காட்டியில் 353 நாள் கணக்கிடப்பட்டது. 365 நாளில் எஞ்சியுள்ள 12 நாளை, 12ஆம் திங்களின் தொடர் அல்லது அடர் திங்களாக யூதர்கள் கணக்கிட்டனர். அடர் = அகன்றது அல்லது விரிந்தது (ம.க.4) 12 ஆம் திங்களின் அகன்ற நாள், அடர் எனப்பட்டது.*

8. **அகப்** (Ahab, Hb, I.K. 16:29) *பொருள்: நாட்டின் தந்தையாகிய மன்னன். அக என்ற முன்னொட்டுச் சொல், அகம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். அப் என்பது அப்பா. நாட்டின் தந்தை மன்னன் எனப்பட்டான். இவன் காலம் 869-850.* B.C. *கிறித்தவுக்கு முன்)*

9. **அகசுரஸ்** (Ahasuerus, Hb, also Ahashwerosh, Ezu. 4:6) *இவன் கி.மு. 485-465 ஆண்டுகளில் பாரசீகத்தை ஆண்ட மன்னனாவான். அக + அசுரன் என்ற சொற்களே, அகசுரஸ் எனத்திரிந்துள்ளது. அசுரன் என்ற சொல், அரசன் என்ற*

தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும். பாவாணர் கரிய நிற முடையவன் என்று பொருள் கூறுகிறார். அர் எனும் வேர்ச் சொல், அரி என விரிந்து, அர - அரச என்றானது. அரச (தமி), ராச(சம), ரே(எகி), ரெக்ஸ்(கிரே), ராயல்(ஆங்). அக + அசுரன் = அககசுரன், அககசுரஸ் எனத்திரிந்தது

10. **அக்கல்தாமா** (Akeldama Hb, Mt. 27:7) பொருள்: செங் குருதி நிலம் (DOB p.19) இயேசுவைக் காட்டிக் கொடுத் ததற்காக அளிக்கப்பட்ட கையூட்டுத் தொகையில் வாங்கப் பட்ட செம்மண் நிலம், இயற்கையிலேயே கல்லும் மேடு மாய்க் காட்சியளித்தது. தாமம் = சிவப்பு. அக்கல் தாமம் = கல்லும் முள்ளும் நிறைந்த செம்மண் நிலம். தாமம் = சிவப்பு (குறு. 376:5; மணி1:49)

11. **அக்காட்** (Akkad, Hb, Gn 10:10) பொருள்: சொல்லப்பட வில்லை. காடு என்ற தமிழ் மூலச் சொல்லினின்றும் விரிந் ததே. அந்தக் காடு என்றோ, ஆர்க்காடு என்றோ சொல் லப்பட்டிருக்க வேண்டும். இரண்டும் தமிழ்ச் சொற்களே. இச்சொல், சுமேரிய மன்னர்களோடு தொடர்புடையது.

12. **ஆப்பிள்** (Apple, Eng; Tappuag Hb; Proverbs in the Bible 25:11) தொடக்க காலப் பாலத்தீனத்தில் இப்பழம் விளைய வில்லை. இது 'பரலோகத்தின் பழம்' என்று கருதப்படு கிறது. தெப்புவா என்ற சொல்(எபி) தொப்பை வாய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே ஆகும். தொப்பைவாய் = இப் பழத்தின் காம்பு உள்ள இடத்தை தொப்புளுடன் ஒப்பு நோக்குக. தொப்பை வாய்(தமி), தெப்புவா (எபி), ஆப்பிள் (ஆங்). தொல் தமிழகத்தில் ஆப்பிள் விளைந்திருந்தது என் பது உண்மையாகின்றது.

13. **அறம்** (Aram, Hb, Dt. 26:5):பொருள் நோவா என்பானின் பெயரனின் பெயர். முனை முறியாத தமிழ்ச் சொல் இத னைப் பிற்காலத்தவர் அறாம் என்றவாறு தவறாக ஒலித் தனர். இவனது மரபு, யூப்ரதீசு - தைகிரீசு ஆறுகளுக்கிடைப் பட்ட வளமான பகுதி. வயல் வெளிப்பகுதிகளில் வாழ்ந் திருந்த இம்மக்கள், அறமியர்கள் (Arameans)என்று அழைக் கப்பட்டனர். இவர்கள் பேசியமொழி, அறம் + வாய் =

அறம் வாய் எனப்பட்டு, அறமாய் எனத் திரிந்தது. வாய், பேச்சுக்கும் உரிய தமிழ்ச் சொல்லாகும். வாயாடி என்ற தமிழ்ச் சொல்லுக்கு, பேசிக் கொண்டேயிருத்தல் (talkative) என்பதே பொருளாகும். அறம் வாய் (தமி), அறமாய் (தமிழின் கிளை மொழி), அறமாயிக் என அறியப்பட்டது.

14. **அரி–எல்** (Ari-el, Hb., Ezk, 43:15) *அரிய* (Ariyeh, Hb, II Sam. 23:21) *பொருள்: அரிமா* (lion) *எல் என்பது இறைவனைக் குறித்தது. அரி - எல் = அரிமா போன்று ஆற்றலுள்ள இறைவன். அரியா (எபி) = அரிமா. இவ்விரு சொற்களும், அரி என்ற தமிழ் மூலச் சொல்லினின்றும் விரிந்த அரிமா என்ற சொல்லின் திரிபுகளே. அரிமா.(தமி.) அரியாமா(சம.), அரியா(எபி), அரிமா. (நற்.12; கலி.103:18-21; பட். 298).*

15. **ஆசேப்** (Asep, Gen. 30:24) *பொருள்: இறைவன் சேர்க்கட்டும். சேப் என்ற சொல், சேர்த்தல் என்ற பொருளைத் தந்தது. சேப் என்ற சொல் (எபி) சேர்ப்பு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. விவிலியத்தின் மற்றொரு இடத்தில் யாசேப்* ya - sep or yo - sep) *அல்லது யோசேப் என்ற சொல் காணப்படுகின்றது* (ICH. *2:2) இதற்கும் இறைவன் சேர்க்கட்டும் (யா - கடவுள்) என்ற பொருளே சொல்லப்பட்டுள்ளது. சேர்ப்பு - சேப்பு - சேப் எனத் திரிந்தது, யாசேப்பு, ஜோசப்* (Joseph) *என்று ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது. சேர்ப்பு என்ற சொல்லுக்கு வரவு என்ற பொருள் கருதி, ஜோசப் என்ற சொல்லை, வீரமாமுனிவர் 'வளன்' என்று பெயர்த்தார் (தேம்பாவணி).*

16. **அசூர் அல்லது அசுர்** (Assur, Hb., Gen.10:22) *பொருள்: பெயர்ச்சொல். நோவா என்பவனின் மற்றொரு பெயரன். அசுரன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. அசுரன் என்பது தொல்தமிழ்ச் சொல்லே என்பதும், ஆரியர்களே இச் சொல்லைப் பயன்படுத்தினர் என்பதும் தவறான சிந்தனையாகும். அசுர் என்ற மாந்தனின் வழிவந்த மக்கள் அசுரர்கள்* (Assyrians) *எனப்பட்டனர். சூர் - இதன் தமிழ் மூலச் சொல்லாகும்.*

17. **ஆடாரத்** (Atarot, Hb, Nm.32:3) பொருள்: ஆட்டு மந்தை ஆடுகள் மேய்ந்த பல நிலப்பகுதிகளுக்கு ஆடாரத் (எபி.) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேஷ (Mesha) என்ற சொல்லும் (எபி.) இப்பகுதியுடன் தொடர்புபடுத்தப் படுகின்றது. மேழம் என்ற தமிழ்ச் சொல்லே, மேஷ(எபி.) என்று திரிந் துள்ளது. ஆடு + அரத்து = செந்நிற ஆடுகள் அல்லது செம்மறி ஆடுகள் என்ற பொருளையே ஆடாரத் (எபி.) என்ற சொல் தருகின்றது. மேழம் (தமி.), மேஷ (சம.), மேஷ (எபி.).

18. **பால்** (Baal, Hb, nm, 25:1) பொருள்: இறைவன். பால் என்ற எபிரேயச் சொல்லுக்குத் தலைவன், இறைவன் என்பது பொருளாகும். பால் கடவுள் வணக்கம் பல நாடு களில் அறியப்பட்டுள்ளது. வல் என்ற வேர்சொல் நீண்டு வால் என்று தமிழில் சொல்லப்பட்டது. வால் = ஆற்ற லுள்ள இறைவன். வால் அறிவன் என்ற குறளின் சொற் களை நோக்குக. வால்(தமி.) - பால் (எபி.)

19. **பாபெல்** (Babel, Hb, Gen 11:1-9) பொருள்: ஒரு கோபுரம். எல் என்ற கடவுளின் கோயிலுக்கான வாயில். பாப் என்ற சொல், வாய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. எல், கடவுளைக் குறித்தது. வாய் - எல் என்பதை, வாய் - இல் எனவும் கொள்ளலாம். வாய் - எல் (தமி), பாபெல் (எபி).

20. **பார்** (Bar, Hb, Lk. 23:18) பொருள்: மகன் (son). வர் என்ற தமிழ் வேர்ச் சொல் லினின்று வரி, வாரி, வரிசை, வாரிசை, வாரிசு போன்ற சொற்கள் விரிந்தன. வரி - வாரி போன் றவை தொடர்ச்சியைக் குறித்தன. தந்தைக்குப் பின் மகன் என்ற பொருளில், வாரி - சேய் என்ற சொல் பிறந்தது. அதுவே வாரிசு எனப்பட்டது. வார் என்ற தமிழ்ச் சொல்லே, பார் (எபி) எனத் திரிந்தது. வார் = உருவாக்கம். பார் அப் பாஸ் (Bar Abbas, hb) = தந்தையின் மகன். தந்தையால் உரு வான மகன்.

21. **பீர்** (Beer), பீரோத் (Beerot/ hb/ jos 9:17) பொருள் : கிணறு அல்லது ஊற்று. பீர் என்ற சொல் நீரைக் குறித்தது. அந்த நீர் ஊற்றாக (Spring) உருவெடுத்ததை இச்சொல்

குறிக்கின்றது. பீறிடும் ஊற்று பீறூற்று - பீரோத் எனத் திரிந்தது. பீரோத் - பெய்ரூட் (தற்காலத்திய இலெபனான் நாட்டின் தலைநகர்) என்றானது. பெய்ரூட் என்ற சொல்லுக்கு நீரூற்றுகளின் நகரம் என்றே பொருள் சொல்லப் பட்டுள்ளது.

22. **பீர் சிபா** (Beer Seba, Hb Gen 21:14) *பொருள்:* தெளிவாக்கப்படவில்லை. செபா அல்லது சிபா என்ற சொல்லுக்கு, ஏழு (Seven) என்று சிலரும், ஆடுகளை வெட்டிப் பலியிடுவதால் சிந்தப்படும் குருதி என்று சிலரும் கருத்துரைக்கின்றனர். ஏழு கிணறு (தற்போது சென்னையிலும் அறியப்படும் பகுதி) என்ற பாலத்தீனப் பகுதியே பீர் சிபா என்பதும் குறிப்பிடத்தக்கது. செபா என்ற பொருளில் சிவந்த குருதியின் நிறம் காணப்படுகின்றது. செந்நீர்க்கிணறு என்ற பொருளும் சொல்லப்படுகின்றது. செபா என்பது சிவந்த என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க. செபா (Sheba) என்ற எத்தியோப்பிய நாட்டு அரசி, கருப்பினத்தைச் சார்ந்தவளாயிருந்தாலும், சிவந்து காணப்பட்டதாலேயே அப்பெயர் வழங்கப்பட்டது என்ற கருத்தும் உண்டு.

23. **பின் யாமின்** (Bin - yaamin, Hb, Gen 35:16) *பொருள்:* தெற்கின் மகன். பார் (Bar) என்ற எபிரேயச் சொல் மகனைக் குறித்தது போலவே, பின் (Bin) என்ற சொல்லும் மகனைக் குறித்தது. தந்தைக்குப் பின் (after his father) என்ற பொருளில் கூறப்பட்டது. யாமின் என்பது யாமன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

24. **பெட் அல்லது பெத்** (Pet or Beth, Hb, Gen 12:8) *பொருள்:* இடம். எபிரேய மூலச் சொல்லான பெட் - பெட்டா (Pet - Peta) என்பதே, பெத் (எபி) என நீண்டது. தமிழில் சிற்றூரைக் குறித்த பட்டி என்ற சொல்லும் ஆடுகளை அடைக்கும் சிறிய இடத்தை பட்டி என்பதும், இன்றும் வழக்கிலுள்ள சொற்களாகும். எபிரேய மொழியில் சிற்றிடமான வீட்டையும், பெரும் பகுதியான ஊரையும் குறித்து சொல்லப்பட் டுள்ளன. பட்டி என்ற சொல்லே, பெட் எனத் திரிந்தது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

25. **காயன்**(Cain, Hb. Gen 4:1)பொருள்: காய்த்தல் (yield). காயன் (Cain, Hb Gen 4:22) பொருள்: காய்ச்சுதல் (heat) காய் என்ற தமிழ் மூலச் சொல் தரும் இருவேறு பொருளையும் எபிரேயச் சொல்லான காயன் என்ற சொல் விளக்குகின்றது. முதல் காயன், ஆதாம் - ஏவாளின் முதல் மகன். இச்சொல் பெற்றெடுத்தல் என்ற பொருளிலும், இரண்டாம் காயன், கருமான் (Smith) என்ற பொருளிலும் சொல்லப்பட்டுள்ளனர். இரண்டும் தமிழ்ப் பொருளைத் தருவனவே.

26. **கெபா** (Kepa, Hb, Jn 1:2) பொருள்: மலை அல்லது குன்று. குவி - குவை என்ற சொற்கள் மேட்டுப் பகுதிகளைக் குறிப்பனவாகும். குவி - குவிப்பை - குப்பை என்றானது. குப்பை = கொட்டி வைக்கப்பட்டுள்ள குன்று போலத் தோன்றும் தேவையற்ற அழுக்குப் பொருட்களாகும். குப்பு - குப்பை என்பதே, தெலுங்கில் கெப்பி - கெபி எனப்பட்டது. கெபி . கெபா எனத் திரிந்துள்ளதை நோக்குக. குப்பு(தமி), கெபி (தெலுங்கு), கெபா (எபி).

27. **தான்** (Dan, Hb, Gen. 49:16) பொருள்: சொல்லப்படவில்லை. தான் என்ற தமிழ்ச் சொல்லுக்கு, உயர்ந்தவன் பெரியவன் என்ற பொருளுண்டு. தான் என்ற சொல் சிந்து வெளியில் அறியப்பட்டதாகும். தானப்பன் = பெரியப்பன். தான் என்ற சொல்லே தானை என்றும் நீண்டது. தானைத் தலைவன் = முதல் தலைவன். தானை என்ற சொல், படை என்ற பொருளில் அறியப்பட்டது சரியன்று. தான் என்ற எபிறேயச் சொல், கடவுள் பெரியவர் என்ற பொருளில், தான் - எல் (Dan-el) என்று சொல்லப்பட்டு, ஆங்கிலத்தில் தானியெல் (Daniel) எனத் திரிந்தது (Ezk. 14:14).

28. **ஈடன்** (Eden, Hb, Gen 2:8) பொருள் : இடம் அல்லது அகன்றபகுதி. இடம் என்ற தமிழிச் சொல், கடையெழுத்துப் போலியாகி இடன் எனப்பட்டது. நடம் - நடன்,கடம் - கடன், படம் - படன் என்பதுபோல், இடம் - இடன் என்றானது. இதன் தமிழிப் பொருளை அறியாத மேற்கத்திய ஆய்வாளர்கள், இச்சொல்லை ஈடன் என ஒலித்தனர். இடன்

என்ற தமிழ்ச் சொல், எபிரேய மொழியிலும் இடன் என்றே சொல்லப்பட்டுள்ளது.

29. **ஈதாம்** (Edom, Hb, Gen 25:30) பொருள்: செம்மண் நிலம். எபிறேய மொழியில் மூன்று சொற்கள் சிவப்பைக் குறிக் கின்றன. ஆ - தாம், ஈதாம், தாமர் (Gem. 38) என்றறியப் படும். தாமம் என்ற தமிழ்ச் சொல், தாள் என்ற மூலச் சொல் லினின்றும் நீண்டது. கருமை நிறம் கொண்டவருக்கும் தாள் (பாதம்) சிவந்தே காணப்படுவதால், தாள்-தாள்மம் - தாமம் என அறியப்பட்டது. தாமர் (எபி) ஓர் எபிறேயப் பெண்ணைக் குறித்தது. தாமர் என்ற சொல்லுக்கு உள் ளங்கை அல்லது உள்ளங்கால் என்ற பொருள் தரப்பட் டுள்ளது (D.O.B-P. 867)

30. **ஈழம்** (Elam, Hb) பொருள்: ஒருநாடு. பாபிலோனிற்குக் கிழக்கே அமைந்திருந்த நாடு. தொல்தமிழரின் குடியேற்ற நாடு. ஈழம் என்று சொல்லப் பட்டதை, பிற்காலத்தவர் ஈலம், இலாம், எலாம் என்றவாறு தவறாக ஒலித்தனர் ஈழம் - ஈலம் எனத் திரிந்துள்ளது.

31. **எல்** (El, Hb. Gen. 3:5) பொருள்: கடவுள். பாபிலோனியர், சுமேரியர், போனீசியர், கனானியர், யூதர், அசீரியர் ஆகி யோருக்கு எல் கடவுளாவார். அக்காடிய மொழியில் இலு (Ilu) என்றும், அரபு மொழியில் இலா (Ila) என்றும், எல் கடவுள் சொல்லப்பட்டார். தமிழ்ச் சொல்லான எல் பற் றிய விளக்கம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத் தில், எல் என்பது உண்மைப் பொருளாகவும், அல் என்பது இன்மைப் பொருளாகவும் அறியப்பட்டது. அதன் தொடர்ச் சியே மேற்கண்ட நாடுகளில் காணப்பட்ட வழிபாட்டு முறைகளாகும்.

32. **இங்கெடி** (Engedi, Hb. Jos 15.62) பொருள்: இளங் கன்று. கெடி என்பது, குட்டி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. சிறிய சோலைகளை இளங்கன்று (இங்கெடி) என்ற பெயராலும் அழைத்தனர். சிறிய சோலைகளைக் குட்டிக் சோலைகள் என்றும் அழைப்பது தமிழர் வழக்காகும். குட்டித்தூக்கம், குட்டிச் சாமியார், குட்டிக் கதை போன்ற

சொற்களை நினைவில்கொள்க. இங்கெடி அவ்வகையைக் சார்ந்த சொல்லே. கெடி (எபி) சிறிய என்ற பொருளில் கூறப்பட்டது.

இளங்குட்டி (தமி) இங்கெடி (எபி) அய்ன்சிடி (அர)

33. **கில்கால்** (Gilgal, Hb. Jos. 4:19) பொருள்: கல்லாலான கால்கள் (Stone Pillars) யூதர்கள் கனான் நாட்டில் நுழைந்தவுடன் தங்களது பன்னிரு மரபுகளை நினைவூட்ட பன்னிரு கற்கால்களை நட்டனர். கல் கால் என்ற சொல்லே, கில் கால் எனத் திரிந்துள்ளது.

34. **ஆகார்** (Hagar, Hb, Gen. 16:1-4) பொருள்: கருப்பினப் பெண்ணின் பெயர். ஆ என்பது பெண்ணைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். கார் என்பது கருமை நிறத்தைக் குறிக்கும். ஆவுடையார் = தலைவியாகிய பெண்ணுக்குரிய சிவன். ஆகார் = கருப்பினப் பெண். ஆப்பிரிக்க இனத்தைச் சார்ந்தவள்.

35. **இட்டிக்கல்** (Hiddikel, Hb, Gen 2:14) பொருள்: ஓராறு (தைகிரீசு). கலுழி என்பது ஆற்றைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். விரைந்து ஓடிவரும் ஆற்றை, இடித்துக் கொண்டு வரும் ஆறு எனவும் கூறலாம். இடி + கலுழி = இடிக்கலுழி, இட்டிக்கல் எனத்திரிந்தது. அக்காடிய மொழியில் இடி கலட் (Idikalat) எனப்பட்டது.

36. **ஒடு அல்லது ஒட்டு** (Hoddu, Hb. Eir. 1:1) பொருள்: இந்தியா. இந்திய நாட்டை யூதர்கள் ஒட்டு அல்லது ஒடு என்ற சொல்லால் அழைத்தனர். இன்றும் எபிறேய மொழியில் அச்சொல்லே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒடு என்ற தமிழ்ச் சொல் ஆற்றைக் குறித்தது. எபிறேய மொழியில் நகர், ஆறு, வடி, போன்ற தமிழ்ச் சொற்கள் ஆற்றைக் குறித்தது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. ஐயாறுகள் பாய்கின்ற சிந்து வெளியை ஒடு நாடு என்றே யூதர்கள் அழைத்தனர். ஒடு - ஒடை: பரி.

37. **இசுராயேல்** (Isra - el, Hb, Gen 32:28) பொருள்: கடவுள் ஆளட்டும். இசுரா - எல் என்ற சொல்லுக்குச் சரியான

பொருள் ஆய்வாளர்களால் தர இயலவில்லையென்றா லும், எல்கடவுள் ஆளட்டும் (Let El rule) என்றாவது சிலர் பொருள் கூறுகின்றனர். இசுரா என்ற சொல், அரசு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே யாகும். ரே (Re) என்ற எகிப்தி யச் சொல், மன்னனைக் குறித்தது பற்றி ஏற்கனவே விளக் கப்பட்டுள்ளது. இசுரா - எல் = எல் கடவுளின் அரசு அல் லது எல் ஆளும் நாடு எனப்பொருள் விரியும்.

38. **யா, எ, ஏ** (Ja, Je, Jo Eng) எபிறேயமொழியில், தமிழில் உள்ளதைப் போன்று சொல்லிற்கு முதலெழுத்தாக யா, எ, ஏ போன்ற எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டன. ஜா, ஜெ, ஜே, ஜோ, போன்ற எழுத்துக்களும் இல்லை; ஒலிப்பு களும் இல்லை. ஆனால் பிற்காலத்தில் இலத்தீன், ஆங் கிலம் போன்ற மொழிகளில், மொழி பெயர்க்கப்பட்ட யா, எ, ஏ, போன்ற எழுத்துக்களில் தொடங்கும் பெயர்கள், ஜா, ஜே, போன்ற ஒலிப்புகளில் மாற்றம் செய்யப்பட்டன. எடுத் துக் காட்டுகளாவன, யாக்கப் - ஜேக்கப் (Gen 25:26); யா பெத் -ஜாபெத் (Gen. 9:27); எரேமியா ஜெரேமியா (Je1:2); எரிக்கோ - ஜெரிக்கோ (ஜெரேமியா (Jos.2) எனவிரியும்.

39. **ஆக்கெப்** (Akeb He, Jacob Eng, Gen 25:26) பொருள்: கணுக்கால். ஆக்கெப் என்ற மூலச் சொல்லினின்று, யாக் கோப் என்ற சொல் பிறந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின் றனர். (D.O.B-P.408) ஆக்கெப் என்ற சொல்லுக்குக் கணுக் கால் (Heel) என்பது நேரிடை யான பொருளன்று. (Tie) என்பதே உட்பொருளாகும். ஈசா (Esau) என்பவனும், யாக்கோப் என்பவனும் இரட்டைக் குழவிகளாவர். ஈசா முதலில் பிறந்தான். அவன் கணுக்காலைக் கையில் பற்றிய வாறே யாக்கோப் பிறந்தான். இருவரும் பிணைப்புற்றுப் பிறந்ததினால், பின்னால் பிறந்தவன் ஆக்கெப் எனப்பட் டான். இதற்குப் பிணைப்பு என்பது பொருளாகும். ஆக்கை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, இணைப்பு அல்லது இணைக் கும் கயிறு என்பதே பொருளாகும். கீற்றைக் கட்டுவதற் கும் பயன்படுத்தப்படும் பாளை (கயிறு) ஆக்கையென்றே இன்றும் சொல்லப்படுவதை நோக்குக. ஆக்கை என்ற தமிழ்ச் சொல்லே, ஆக்கெப் எனத் திரிந்தது

40. **யாபெட்** (Yapet, Hb, Gen 5:32) பொருள்: தெற்கில் உள்ள ஊர். பெட் என்பது, பட்டி என்ற தமிழ்ச் சொல் லின் திரிபே. பட்டி = ஊர் அல்லது சிற்றூர். யா (எபி) = தெற்கு யா - பெட் = தெற்கிலுள்ள ஊர். தெற்கே இருந்த ஊரில் பிறந்திருந்ததால், அவன் தெற்கித்தியான் என அழைக்கப்பட்டான். இவன் நோவா என்பானின் மூன்றா வது மகனாவான் யா - பெட் என்பானின் மகனே யாவன் எனப்பட்டான். இவன் மரபுவழியினரே யாவனர் என்ற கிரேக்கர்களாவர். யாபெட், யாவன் ஆகியவை தமிழ் மூலச் சொற்களே.

41. **எரிக்கோ** (Yerho, Hb, Jos.2) பொருள்: நிலவு அல்லது திங்கள்? ஈரா என்பது திங்களைக் குறித்த எபிறேயச் சொல்லாகும். பழம் பெரும் நகரான இவ்வூரில் திங்களுக் கான கோயில் இருந்ததுபற்றி, எரிக்கோ என்ற பெயர் வழங்கப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஒரு மாதத்தை இரு கூறுகளாகப் பிரித்தனர். அவை வளர் பிறை, தேய்பிறை எனப்பட்டன. இவ்வாறு பிரித்தல் என்ற பொருளில், ஈர் - ஈர்தல் என்ற தமிழ்ச் சொல், ஈரா என்று எபிறேய மொழியில் திரிந்து திங்களையே குறித்தது. தமிழில் திங்கள் என்பது, மாதத்தையும் நிலவையும் குறித்த தைப் போன்றே, எபிறேய மொழியில் ஈரா என்ற சொல், மாதத்தையும் திங்களையுமே குறித்தது. எனவே, ஈர் என்ற தமிழ்ச் சொல்லே, ஈரிகோ (எபி) என்றும், எரிகோ என் றும் திரிந்தது என்க. ஈர் = பரி. 3:51.

42. **இயேசு** (Yesua, Hb. and Aramaic, Jesus, Eng, Mt 1:21) பொருள்: கடவுளே மீட்பர். ஈசுவா (எபி) என்ற பெயர்ச் சொல், பாலத்தீனத்தில் பலருக்கும் உரியதாயிருந்தது. இச்சொல், யோசுவா என்றும் சொல்லப்பட்டது. கடவுள் கொடையாளி, மீட்பர் என்றவாறு பொருள் விரியும். ஈ என்ற தமிழ்ச் சொல்லுக்குக் கொடு என்பதே பொருளா கும். ஈ - ஈந்தவன் = கொடுத்தவன் ஈகை = கொடை ஈ - ஈசன் = கொடுப்பவன். ஈசன் தமிழ்ச் சொல்லே. இது ஈசுவ என்று சமற்கிருதத்தில் திரிந்தது. ஈசுவா என்று எபிறேய மொழி யில் அறியப்பட்டது. இவைகள் யாவும் ஈ என்ற தமிழ்

மூலத்தினின்றும் விரிந்து திரிந்தவைகளே. ஈசன் (தமி), ஈஸ்வ (சம),ஈசுவா (எபி), ஈசுஸ் (கிரே),ஜேசுஸ்(இல), ஜீசஸ் (ஆஸ்) ஈ = சி. பா, 113.

43. **லெபன்** (Laban, Hb, Gen 24:29) பொருள்: வெண்மை. லெபன் என்ற எபிறேயச் சொல்லுக்கு, வெள்ளையன் எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. இவன் இனத்தால் கருப்பனா யினும், வெள்ளை நிறமாக இருந்தான் (D.O.B - P.490). தமிழில், எல் என்பது பகலையும், அல் என்பது இரவை யும் குறித்தது போலவே, எல் - வெண்மை எனவும், அல் - கருமை எனவும் அறியப்பட்டது. எல்லவன் வெண்மை நிறத்தான். எல்லவன் பிற்காலத்தில் எலவன் - இலவன் எனப்பட்டது. இலவன் = வெண்மை நிறமான பஞ்சைத் தரும் மரம். (பெரு. 83.85) இலவன் லெபன் என்று எபிறே யத்தில் திரிந்தது. பனிபடர்ந்து வெண்மையாகக் காட்சி யளிக்கும் நாடு என்ற பொருளில், லெபனான் (Lebanon) என்ற சொல், அறியப்படுகின்றது

44. **மக்பெளா** (Machpela hb, Gen 23,25:9)பொருள்: அறியப் படவில்லை. அபிறகாம் என்பான், தனது இல்லத்தாரைப் புதைப்பதற்கென வாங்கிய நிலம். இவனும் இவனது மக்க ளும் இங்கேயே புதைக்கப்பட்டனர். மண்ணில் புதைக்கப் பட்ட உடல் மட்கி (மண் + கி), மண்ணோடு மண்ணாகக் கலப்பது இயற்கை. மட்கு, மக்கு என்றும் சொல்லப்படும். மட்கிப் போகும் இடம் அல்லது பள்ளம் என்ற சொல்லே, மக்குப்பள்ளம் ஆகும். மக்குப்பள்ளம், மக்பெளா எனத் திரிந்துள்ளது.

45. **மாகாணி** (Mahani, Hb, II Sam. 17:24) பொருள்: பெரும் நிலப்பரப்பு. கண்ணுக்கெட்டிய தொலைவு உள்ள இடம் காணி எனப்பட்டது. கண் - காண் - காணி என்க. இது கண் என்ற சொல்லினின்றும் விரிந்தது. மாகாணி - பெரும் நிலப்பரப்பு. ஒரு காணி, தற்கால அளவுப்படி 60 X 40 ச. அடி என்ற கணக்கில், 24 மனைகள் (Grounds) கொண்ட 57600 ச. அடிகளாகும். மாகாணி தமிழ்ச் சொல்லே.

46. **மண்ணா** (Manna, Hb, Ex .16:12 - 35) *பொருள்: மண்ணிலிருந்து எடுக்கப்பட்டது. எகிப்திலிருந்து திரும்பிய யூதர்களை, பாலைவனத்தில் மண்ணா என்ற உணவுப் பொருளைத் தந்து இறைவன் காத்ததாக விவிலியம் கூறுகிறது. கொத்துமல்லி அளவில் உருண்டையாகவும், வெண்மையாகவும் இருந்த அந்த உணவுப் பொருள், வானத்திலிருந்து மணற் பரப்பில் நாளும் விழுந்தது. மக்கள் அதனை மண்ணிலிருந்தும் பொறுக்கி யுண்டனர். அதனால் அது மண் - மண்ணா எனப்பட்டது. அது மன்னா எனத் திரிபு பட்டது.*

47. **மிறி** (Miri, Hb, Mt. 1:18 - 25) *பொருள்: பெண்பாற் பெயர் மிறி, மிறியம் என்றவாறு சொல்லப்பட்ட இச்சொல், ஆட்டுக்குட்டியைக் குறித்தது. இச்சொல், அக்காலத்தில் பாலத்தீனத்தில் வாழ்ந்த பெண்களில் பலருக்குச் சூட்டப் பெற்றது. இறைவனின் ஏற்புதலுக்குரிய ஆட்டுக்குட்டி* (Lamb), *கள்ளங் கபடற்ற தன்மையை* (Innocense) *விளக்குவதாகும். இது மறி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே ஆகும். மறி, மிறி எனப்பட்டது.*

மறி (தமி), மிறி(எபி), மறியம் (கிரே), மறியா (இல), மேறி (ஆங்) Mary *எனப்பட்ட ஆங்கிலச் சொல்லை, மரி என்றவாறு தமிழில் தவறாக மொழி பெயர்த்துவிட்டனர். மரி என்பதற்கு இறத்தல் என்பதே பொருளாதலால், தமிழ்ப் பொருளோடு அறிய, மறி என்றே எழுதப்படல் வேண்டும். தமிழ் நாட்டுக் கிறித்துவர்கள் கவனிப்பார்களாக. மறி: குறு. 243:1*

48. **மெடிபா** (Medeba, Hb Nm, 21:30) *பொருள்: அறியப்படவில்லை. இரண்டு மலைகளுக்கிடையே காணப்பட்ட பகுதி. இங்கிருந்து தான் மோசே என்பான், இறுதியாகக் கனான் நாட்டைக் கண்டதாக விவிலியம் கூறுகிறது. மடுவாய் என்ற தமிழ்ச் சொல்லுக்கு, பள்ளமான அல்லது உயர்ந்த இரு இடங்களுக்கு இடைப்பட்ட தாழ்வான பகுதி எனப் பொருள் விரியும். மடுவாய், மெடிபா எனத் திரிந்தது மடுத்தவாய் = திருக்குறள், 624:1.*

49. **மிடியன்** (Midian, Hb, Gen 25:2-4): *பொருள்: அறியப்பட வில்லை. மிடியன் என்பது ஒரு பழங்குடி மக்களைக் குறித்து விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் ஆடுமாடு களை மேய்த்துவந்தனர். சினை* (Mt. Sinai) *மலையின் தெற் குப் பகுதியில் வாழ்ந்திருந்த இம்மக்கள், மிடியன் என்ற மர பைச் சார்ந்தவர்களாவர். ன் விகுதியில் முடியும் இச்சொல், தமிழ்ச் சொல்லே. இடையன் என்ற சொல்லே, மிடையன் - மிடியன் எனத் திரிந்தது என்க. துடியன் என்ற மரபு தமிழ் நாட்டிலிருந்ததை ஒப்பு நோக்குக.*

50. **மோசே** (Moseh, Hb, Ex 2:10) *பொருள்: அறியப்பட வில்லை. யூத சமயத்தைத் தோற்றுவித்தவன். தொடக்கத் தில் பிறந்த சின்னாட்களில், அவனது தாயினால், நீலாற் றில் விடப்பட்டவன். உயிரோடிருந்த அக்குழந்தையை எகிப்திய அரசி எடுத்து வளர்த்தாள். மோசே என்ற சொல் லிற்கான பொருளை அறிவதில் மேற்கித்திய ஆய்வாளர் களில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சே என்ற சொல்லுக்கு, குழந்தை என்று எகிப்திய மொழியில் பொருள் தெளிவாக உள்ளது.* (Se = Son, New born Child, D.O. 13,P - 586) *இது சேய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. மோ என்ற முன்னொட்டுக் சொல்லுக்கான பொருளை எவரும் அறிய இயலவில்லை. இது மெய் (உடல்) என்ற பொருளில், அல்லது மெய் (உண்மை) என்ற பொருளில் அறியப்பட் டது என்க. உண்மையில் இது குழந்தைதான் என்றோ, உடலோடும் உயிரோடும் உள்ள குழந்தைதான் என்றோ சொல்லப்பட்டது. எப்படியிருப்பினும் மோ என்பது, மெய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க மெய் சேய் என்ற தமிழ்ச் சொற்களே, மோசே எனத்திரிந்தன சேய்:ம.க. 64.*

51. **மோர்** (Mor, Hb Gen 37:26) *பொருள்: நறுமணப் பொருள். மோர் என்ற எபிறேயச் சொல், பாளம் அல்லது போளம் என்ற நறுமணப் பொருளைக் குறித்தது. போளம் அல்லது பாளம் என்பது தமிழகத்தில் அறியப்பட்டது. பாளம் பாள மாக (கட்டிகளாக) விற்பனைக்கு அனுப்பப்பட்டன. தமிழ்ச் சொல்லினிலும் நல்ல சொல்லை எபிறேய மொழி கூறு கிறது. முகர் - முகர்தல் = மூக்கால் மணத்தையுணர்தல்.*

முகர் என்ற சொல், மோர் (எபி) எனத் திரிந்தது. முகர் (தமி), மோர்(எபி), மிர்ரா (கிரே), மிர் (ஆங்), (G.O.B, P.595).

52. **நபி** (Nabi,Hb, Nm 11.25) பொருள்: முற்றிலும் தெளிவாக்கப் படவில்லை. நபி என்ற எபிறேயச் சொல்லுக்கு, Prophet என்று கிரேக்கத்தில் பொருள் சொல்லப்பட்டுள்ளது. (Prophet = One who speaks for Others). மற்றவர்களுக்காக பேசுபவர் என்பது கிரேக்க விளக்கம். அக்காடிய மொழியில், அழைப்பு என்ற மூலச் சொல்லினின்றும், உரத்துப் பேசுதல் (Speak Aloud) என்று பொருள் கூறப்பட்டுள்ளது. W.F. ஆல்பிரைட் என்பார், கடவுளுக்காகப் பேசுபவர் (By God to Speak for him) என்று பொருள் கூறுகிறார். மேற் கண்ட விளக்கங்களில், பேசுதல் என்பது முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளது. நா என்ற தமிழ்ச் சொல், பேசுதல் என்ற பொருளிலும் சொல்லப்படும். (மணி.22:94); (நார் - 312:1) அப் - அபி என்ற சொற்கள் தந்தையைக் குறித்தன. பெருமைக்குரிய ஒருவரைக் குறித்தன. நா - அப்பா அல்லது நா - அபி என்ற சொற்களே, நபி எனத் திரிந்தது. நபி = தந்தை போன்ற உயர்ந்த ஒருவர், கடவுளுக்காகப் பேசுகிறார். என்பதே இதன் விரிந்த பொருளாகும். நபி தமிழ் மூலத்தைக் கொண்ட சொல்லே.

53. **நாகாஸ்** (Nahash, Hb, Is11) பொருள்: பாம்பு அல்லது அரவம். நகர் என்ற தலைப்பில் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

54. **நகோர்** (Nahor, Hb, Gen 11:22-25) பொருள் : ஓரிடத்தில் மற்றும் மாந்தன் ஒருவனின் பெயர் நகர் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

55. **நாயின்** (Nain, Hb, Lk. 7:11) பொருள்: அன்பு அல்லது அன்பான நேயம் என்ற தமிழ்ச் சொல்லே, நாயிம் (எபி) எனத் திரிந்துள்ளது. கிரேக்கமொழியில் நாயின் என்றும், சில இலத்தீன் கையெழுத்துப்படிகளில் நாயிம் என்றும் சொல்லப்பட்டுள்ளன. தற்காலத்தில் நேயின் (Nein) என்ற ஒரு சிற்றூராக அறியப்படுகின்றது. நேயம் - நாயிம் எனத் திரிந்தது.

56. **நெர்ட்** (Nerd,Hb, Mk 14:3) பொருள்: மணம். இந்திய நறு மணப் பொருள் என விவிலிய அகராதி கூறுகிறது (D.O.B. P. 606) நாற்றம் என்ற தமிழ்ச் சொல் அடியிற்கண்ட மொழி களில் திரிபுபட்டுள்ளவை வருமாறு. நாற்றம் (தமி), நெர்ட் (nerd - எபி) நெர்டோ Nerdos - (கிரே), நார்டி (Nardi - இல), நார்ட் (Nard - ஆங்)

57. **நோவா** (Noah,Hb,Gen 5:29) பொருள்: பெயர்ச்சொல், மாந்தன் ஒருவனின் பெயர் நோவா என்ற எபிறேயச் சொல், நாவாய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

58. **நோட்** (Nod, Hb, Gen. 4:16) பொருள்: ஒரு பகுதி. கடவு ளால் ஒதுக்கப்பட்ட காயன் (Cain) என்பவன், நாடு கடத் தப்படுகின்றான். அவன் அலைந்து திரிந்த புதிய இடத்தை நோட் என்ற சொல் குறிப்பிடுகின்றது. நோட் என்ற சொல் லுக்கு அலைதல் (Wandering) என்று பொருள் கூறப்பட் டுள்ளது. நட என்ற தமிழ் மூலச் சொல்லினின்றே நாடல், நாடு என்ற சொற்கள் விரிந்தன. நோட் (எபி) என்ற சொல் லுக்கான மூலச்சொல், நட என்ற தமிழ்ச்சொல்லே.

59. **ஒளிவ்** (Olive,Hb, II k. 18:32) பொருள்: நெய்தரும் மரம். அக்காலத்தில் நடுத்தரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளில், விளக்கேற்றவும் ஒளி பெறவும் ஒளிவ் என்ற நெய்யையே பயன்படுத்தினர். ஒளிதரும் நெய்யைத் தந்ததால் அது ஒளிவம் எனப்பட்டது. இதன் தமிழ்ப் பொருளை அறி யாத பிற்காலத்தவர், ஆலிவ் என்று ஒலித்தனர். ஒளிவம் (தமி), ஒளிவ் (எபி), ஆலிவ் (ஆங்).

60. **ஓபிர்** (Ophir, Hb, Gen.10:29) பொருள்: ஒரு துறைமுக நகரம். ஓபிர் என்ற நகரம் எங்கிருந்தது என்பதில் ஆய்வா ளர்களிடையே குழப்பம் நிலவுகின்றது. சிலர் அகாபா வளைகுடாப் பகுதியையும், சிலர் அரேபியப் பகுதியை யும், மேலும் சிலர் செங்கடற் பகுதியையும் சுட்டுகின்றனர். எப்படியிருப்பினும் ஓபிர் (எபி) என்ற சொல், உவரி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. உவர் - உவர்மண் = கடற்கரை மணல் அல்லது உப்பு மண். உவரி = கடற்கரையிலுள்ள

ஊர். தமிழகத்தின் உவரி துறை முகம் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டதாகும்.

61. **படன்** (Padan, Hb, Gen 25:20) பொருள்: விளக்கப்படவில்லை நேரிடையாகப் பொருள் கூறப்படவில்லையாயினும், இது ஒரு புவியியல் தொடர்பானச் சொல் எனவும், இச்சொல் எபிறேய மூலத்தில் காணப்படவில்லையெனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அறம் என்ற பகுதி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. அச்சொல்லுக்கு அடைமொழி போன்று, 'படன் அறம்' என்ற சொல் காணப்படுகிறது. படன் என்பது, படர்ந்த அகன்ற விரிந்த என்ற பொருளைக் கொண்ட தமிழ்ச் சொல்லே. படர், படம் என்ற சொற்களை நோக்குக. இடம் - இடன் எனப்பட்டது போல், படம் - படன் என்றானது. படன் அறம் அழகான தமிழ்ச் சொல்லே.

62. **ராமா** (Raamah, Hb, Gen 10:7) பொருள்: விளக்கப்படவில்லை. ராமா என்ற சொல்லுக்குச் சில ஆய்வாளர்கள், ஆப்பிரிக்கக் கருப்புப் பழங்குடியினத்துப் பெயர் என்று கருத்துரைக்கின்றனர். (D.O.B.P. 717) ராமா என்ற சொல்லுக்குக் கருமை என்பதே தமிழ்ப் பொருளாகும். இர் என்ற வேர்ச் சொல்லினின்றும் நீண்ட இர - இரவு - இரா - இராகு போன்ற சொற்கள் கருமையைக் குறித்தன. இர - இரா - இராமன் என்ற சொல்லும் கருப்பு மாந்தனைக் குறித்த தமிழ்ச் சொல்லே. அது ராமா என்று சமற்கிருதத்தில் திரிந்து கருமை நிறத்தையே குறித்தது.

இராமன் (தமி) - ராமா (சம) - ராமா (எபி) - ராம் (எகி)

63. **ராக் – எல்** (Rah - el, Hb, Gen 6 - 31)பொருள்: தெளிவாக்கப்படவில்லை. வெள்ளையன் எனப்பட்ட இலவன் (Leban) என்பானின் மகள். இயற்கையிலேயே இவ்வினத்தார் கருப்பராயிருந்தும், எலவனுக்குப் பிறந்தும் கருப்பியாயிருந்ததால், ராக் (எபி) எனப்பட்டாள். எல் என்பது இலவனின் குடும்பக் கடவுளாகும். ராக் என்பது, தமிழகத்தில் இன்றும் அறியப்படும் ராக்கம்மா, ராக்காயி, ராக்கப்பன் போன்ற பெயரே; ராக் - இராக் - இராக்கம்மா =

கருமை நிறப்பெண். ஆங்கிலத்தில் Rach - el எனப்பட்டது இதனை ராச்செல் என்றும் தவறாக ஒலித்தனர்.

64. **ரிப்பிடிம்** (Ripidnin, Hb, Ex.19:2) *பொருள்: தங்குமிடம்.* நீரும் உணவும் அளிக்கப்பட்டு, பாலைவனத்தில் சில காலம் யூதர்கள் தங்கிய இடம் ரிப்பிடம் எனப்பட்டது. இது இருப்பிடம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. இவ்விடத்தில் மலாக்கியர் (Malecks) என்ற பழங்குடியினருடன் யூதர்கள் போரிட்டனர். மலாக்கு என்பதும், மலை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க இருக்கை = இருப்பிடம் (மது.342).

65. **சாபாத்** (Sabath, Hb, II k. 4:23) *பொருள்: ஏழாம் நாள்* அல்லது ஓய்வு நாள். ஒரு வாரத்தின் ஆறு நாட்களையும் மூடும் அல்லது சாத்தும் ஏழாம் நாள் எனப் பொருள் கூறுகின்றனர். ஏழாம் நாளை சாத்தும் நாள் (Closing day) அல்லது மூடும் நாள் என்றனர். அந்த ஏழாம் நாள் ஓய்வு நாளாயிருந்தது. அதனால் ஓய்வு நாளைச் சாபாத் நாள் என அழைத்தனர் சப்த் (Sabt) என்ற எபிறேய மூலச் சொல்லினின்றும், சாபாத் என்ற சொல் விரிந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சப்த் (எபி) என்ற சொல் லுக்கு, மூடு என்பதே (to close, to shut, to seize) என்பதே பொருளாக்கப்பட்டுள்ளது. சப்த் என்ற சொல், சாத்து என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க.

66. **சலோம்** (shalom,Hb II s. 12:25) *பொருள்: அமைதி* (Peace). தமிழில் **சால்**- சால்பு - சாலம் என்ற சொல், அமைதியைக் குறித்ததே. **சாலம்** என்ற தமிழ்ச் சொல், சலோம் எனத் திரிந்தது. இம்மூலச் சொல்லினின்றே சலோமோன் (Salomon) என்ற சொல் பிறந்தது. சலோமோன் (எபி) ஆங்கிலத்தில் சாலமன் (Solomon) எனப்பட்டது. சலோமோ, அரபு மொழில் சுலைமான் எனத் திரிந்தது. இவையாவும் சால் என்ற தமிழ் மூலச் சொல்லினின்றும் திரிந்தவைகளே.

67. **செலா** (Sela, Hb, Is. 16:1) *பொருள்: மலை, ஓரிடம். 3700* அடி உயரத்திலுள்ள மலை முகடு. மலைக்குச் சிலை என்ற பொருளும் தமிழில் உண்டு. இளமையிற்கல்வி சிலை மேல்

எழுத்து என்ற பழமொழியை நோக்குக. சிலை, செலா என்று திரிந்துள்ளது.

68 **சாரப்** (Sarap, Hb, Gen 3:4) *பொருள்: பாம்பு. சாரை என்று இன்றும் வழக்கிலுள்ள தமிழ்ச் சொல், வழுக்குதல் என்ற பொருளில் சொல்லப்பட்டதாகும். சருக்குதல் என்றும் அறியப்படும். சாரைப் பாம்பு என்ற தமிழ்ச் சொல், சார்ப்ப அல்லது சர்ப்ப என சமற்கிருதத்தில் திரிந்தது. சாரப் (எபி) என விவிலியம் கூறும். செர்ப்போ என இலத்தீனில் திரிந்து, செர்ப்பன்ட் என ஆங்கிலத்தில் சொல் லப்பட்டது. சாரைப்பா (ம்பு) (தமி), சர்ப்ப (சம), சாரப் (எபி), செர்ப்போ (இல), செர்ப்பன்ட்(ஆ)*

69. **சாரோன்** (Saaron, Hb, I chr. 27:29) *பொருள்: மலையை அடுத்த நிலம் அல்லது வெளி. கார்மலை* (Mt.Carmel)*யை அடுத்துச் சார்ந்துள்ள நிலப்பகுதியை சாரோன் (எபி) என அழைத்தனர்.* (D.O.B.P - 796) *இது சாரல் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும் (குறு. 375:2) மலையைச் சார்ந் துள்ள வெளி, சாரல் எனப்பட்டது. (ஏரியல் சாரோன், தானியல் சாரோன்* (Ariel Sharon, Daniel Sharon) *போன்ற பெயர்கள் யூதர்களின் பெயர்களில் சிலவாகும்)*

70. **செக்கல்** (Shekel, Hb Ezr. 8:27) *பொருள்: கல் செம்பினா லான எடைக்கல்லுக்கு செக்கல் என்பது பெயராகும். இந்த எடை பலகாலங்களில் பல்வேறு அளவுகளைக் குறித்தது பற்றி விவிலிய ஆய்வு விளக்குகின்றது. தாலந்து, மினா போன்ற எடைக் கற்களுமிருந்தன. செம்புக்கல் என்பதே செக்கல் என்று சொல்லப்பட்டது. செக்கல் சரியான தமிழ்ச் சொல்லாகும்.*

71. **செம்** (Shem, Hb., Gen 5:32) *பொருள்: விளக்கப்பட வில்லை. நோவா என்பாரின் முதல் மகன் செம் எனப் பட்டான். இது தமிழில் பயன்படுத்தப்படும் முன்னொட் டுச் சொல்லாகும். செம்மலர், செம்மொழி, செம்மகன் என்றவாறு அறியப்படும் தமிழ்ச் சொற்களில், பின்னொட் டுச் சொல் மறைந்து, செம் என்ற முன்னொட்டுச் சொல் நிலைத்தது. நோவா தமிழன் என்ற கருத்தின் அடிப்படை*

யில் செம் என்பது தமிழ்ச் சொல்லே என அறியலாம். இவனது மரபார் பேசிய மொழியே, செம்மொழி என்ற பொருளில், செமிட்டிக் (Semitic) என ஆங்கில முறையில் பிற்காலத்தில் சொல்லப்பட்டது.

72. **செப்பெளா** (Sepelah, Hb, Pt. 1:7) பொருள்: பள்ளமான நிலம். மக்குப்பள்ளம் அல்லது மட்டுப் பள்ளம் (Pelah), மக்கபெளா என அழைக்கப்பட்டதுபோல், சாய்ந்த அல்லது சாய்வான பள்ளப்பகுதி சாய்ப்பள்ளம் என அறியப்படும். சாய்ப்பள்ளம் என்ற தமிழ்ச் சொல், செப்பெளா (எபி) எனத் திரிந்தது. இச் சொல்லுக்குத் தாழ்வான நிலம் (low land) என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

73. **சினார்** (Sinar, Hb, Dt, 10:10) பொருள்: சரியாக விளக்கப்படவில்லை. தைகிரீசு ஆற்றை, சினார் என்று எபிறேய மொழி கூறுகிறது. அதற்கான விளக்கம் தெளிவாக்கப்படவில்லை. சில ஆய்வாளர்கள் இச்சொல், சுமேரிய மொழிச் சொல்லே என்கின்றனர். யூப்ரடீசு, தைகிரீசு ஆகியவை மெசபத்தோமியாவில் பாயும் இரட்டை ஆறுகளாகும். முன்னது பெரிய ஆறு. பேராறு (Perat, Hb,) என்றும் பின்னது சின்னாறு அல்லது சிறிய ஆறு என்றும் சொல்லப்பட்டுள்ளன. சின்னாறு என்ற தமிழ்ச் சொல்லே, சினார் என்று எபிரேயத்தில் திரிந்தது என்க.

74. **சிப்பறா** (Siprah, Hb, Ex .1:15) பொருள்: விளக்கப்படவில்லை. பெண்களுக்குப் பேறு காலத்தில் உதவி செய்யும் மருத்துவச்சியாக, சிப்பறா என்ற பெண் அறியப்படுகின்றார். இச் சொல்லுக்கான பொருள் தெரியவில்லையென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உண்மையில், சேய் + பொறை என்ற இருதமிழ்ச் சொற்களே, இச்சொல்லுக்கு மூலச் சொற்களாக உள்ளன. பேறுகாலத்தில் பொறுமையுடன் மருத்துவம் பார்க்கும் பெண் என்ற தமிழ்ப் பொருளே இச்சொல்லில் காணப்படுகின்றது. பொறையுடன் சேயை வெளிக்கொணரும் பணியாற்றியதால், இவள் சேய்ப் பொறை என அழைக்கப்பட்டாள். இதுவே சிப்பறா எனத் திரிந்தது என்க.

75. **சுர் அல்லது சூர்** (Sur,Hb, Gen 16:7):பொருள்: எல்லைச் சுவர். எகிப்தியர்கள் தங்கள் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் எல்லைச் சுவராகக் கட்டிய கோட்டைச் சுவர், சுர் என்ற எபிறேயச் சொல்லால் விளக்கப்பட்டுள்ளது. தமிழில் சுர் என்ற வேர்ச்சொல் நீண்டு சுரை, சூர், சூரி போன்ற சொற்களைத் தந்தன. சுரை: நீண்டகாய்; சூர் = நீண்ட கரங்களைக் கொண்ட கதிரவனின் ஒளி; சூரி = நீண்ட கத்தி, என விரியும் . நீண்ட மதில்களைச் சூர் என்ற சொல்லால் யூதர்கள் அழைத்தனர். சுர் என்ற தமிழ்ச் சொல்லே, சுவர் என்றும் நீண்டது. சுவர் = நீண்ட கட்டு மான எல்லை. எபிறேயம் கூறும் சுர் அல்லது சூர் (wall) என்ற சொல், தமிழ்ச் சொல்லே என்க. சூர் = நீண்டது என்ற பொருளைத் தரும்.

76. **சிபகை** (Sibbakai, Hb, 2 Sam. 21:18) பொருள்: விளக்கப் படவில்லை. தாவீது மன்னனின் போர் வீரர்களில் ஒருவன். பிலித்தியர்களைக் கொன்று குவித்தவன். சிபகை என்பது எபிறேயச் சொல் அல்லவென்றும் அது பிற மொழிச் சொல்லேயென்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அச்சொல்லுக்கான பொருள் தெரியவில்லையென வும் முடிவு செய்தனர். கொடையாளியைச் சிவந்தகையன் என்று கூறுவது தமிழ் மரபாகும். அது போன்றே வாளும் கையுமாய் உள்ள வீரனையும் சிவந்த கையன் எனக் கொள் வதில் தவறில்லை. சிவந்த கையன் அல்லது சிவக்கை என்ற தமிழ்ச் சொல்லே, சிபக்கை என எபிறேய மொழியில் திரிபுபட்டுள்ளது என்க.

77. **சின்** (Sin, Hb, Ezk 30:15) பொருள்: சிறிய. சின் (எபி) என்ற சொல், சிறிய என்ற பொருளையே தந்தது என்பதை சின்னார் (Sinar) என்ற சொல்லில் கண்டோம். சின் (sin) என்ற பெயரில் ஒரு சிறிய நகரமும், சிறிய பாலை வனமும் (Ex 16:1) அறியப்பட்டுள்ளன. அக்காடிய மொழியில் சின்(ன) என்ற சொல் காணப்படுகின்றது. நிலவைச் சின் (ன)க் கடவுள் என்றும் (Sin God) கதிரவனைப் பெரியக் கடவுள் என்றும் அழைத்தனர். சின், சின்ன என்ற தமிழ்ச் சொல்லின் சுருக்கமே என்க.

78. **சினை மலை** (Mt Sinai (Eng), Sinai, Hb, Ex 19:1) பொருள்: ஓரிடம். எகிப்துக்கும் இசுரேல் நாட்டிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை சினாய் மலைப்பகுதியென அழைத்தனர். சினாய் என்று எபிறேய மொழியில் சொல் லப்படவில்லை. அறம் என்ற சொல்லை, அறாம் என்றது போல், சினை என்ற சொல்லை, சினாய் என்று பிற்காலத் தவர் ஒலித்தனர். சினை மலைப் பகுதி ஒரு தீவுக்குறை நிலப்பகுதியாகும் (Peninsula) ஏறக்குறைய தென்னிந்திய நிலப்பகுதி போன்றே காணப்படும். சினை என்பது கருவு ருதலுடன் தொடர்புடைய சொல்லாகும். சினைப்பட்ட பெண்ணின் வயிறு போன்று, வளைந்து நீண்டிருப்பதால், அப்பகுதி சினை என்றே அழைக்கப்பட்டது. தமிழ்ப் பொருளை அறிந்து, தமிழில் அழைக்கப்பட்ட பெயரே சினை என்பதாகும். இதனைக் கரு என்ற தமிழ்ச் சொல் லால், கர்ப்ப என்று சமற்கிருதம் கூறுகிறது. தீபகர்ப்பம் என்ற சொல்லை நோக்குக. தீவக்கருப்பம் என்பதே தமிழ்ச் சொல்லாகும். தீவு என்ற சொல்லும், நீரினின்றும் தீர்வ தால் (பிரிவதால்), தீர்வு - தீவு எனப்பட்டு, த்வீப என்று சமற்கிருதத்தில் திரிந்தது. Pen - sul (பெண் - சூல்) என்ற தமிழ்ச் சொற்களே, Peninsula எனவும் திரிந்தது என்க. எனவே பிறமொழிச் சொற்கள் கூறும் தீவக்குறை என்ற நிலப் பகுதி, கரு - சினை - கருப்பம் ஆகிய தமிழ்ச் சொற் களைத் தாங்கியே உள்ளன. சினாய் மலை யென்பது, சினை மலை என்ற தமிழ்ச்சொல்லே என அறிக.

79. **சிவன்** (Siwan, Hb,) பொருள்: யூத நாள்காட்டியில் மூன் றாம் திங்கள்.

சிவன் என்ற சொல்லுக்கானப் பொருள் யாதென அறியப் படவில்லை. இது எபிறேயச் சொல் அல்லவென்று ஆய்வா ளர்கள் கருதுகின்றனர். பாபிலோன் நாள்காட்டியில் கூறப் பட்டுள்ள மூன்றாம் திங்கள் (May June), அப்படியே யூத நாள் காட்டியிலும் காணப்படுகின்றது. சிவந்த என்ற பொரு ளில் இச்சொல் அறியப்பட்டு, தமிழ்க் கடவுளான சிவனையே இச்சொல் குறிக்கின்றது எனலாம். சிவவழிபாடு பாபிலோ னிலும் பாலத்தீனத்திலும் அறியப்பட்டிருந்ததை வரலாறு

கள் மெய்ப்பிக்கின்றன. மேலும், எகிப்திற்கும் இலிபியா (Lybia) நாட்டிற்கும் இடைப்பட்ட பாலைவனத்தையும் அக்காலத்தில் சிவன் (Siwan) என்ற சொல்லால் அழைத் துள்ளனர். செம்மணற் பரப்பையொட்டி அச்சொல் அறி யப்பட்டது எனலாம். (புவியியல் படத்தைக் காண்க).

80. **சோதோம் அல்லது சேதோம்** (Sodom, Hb., Gen.13: 10 - 13) பொருள்: ஒரு நகரம். கடவுளின் சினத்திற்காட் பட்டு, தீக்கிரையாக்கப்பட்ட நகரம். அந் நகரில் ஆண்களி டையே ஓரினச் சேர்க்கையிருந்ததாகவும், அதுவே அந்நக ரின் அழிவுக்குக் கரணியமென்றும் விவிலியச் செய்திகள் கூறுகின்றன. எருவாய் வழியே புணரும் இச்செயல், சோதோம் என்ற ஊரின் பெயரால் அறியப்படும். சுள் என்ற தமிழ் வேர்ச் சொல், சூர் என விரிந்தது. சுள் - சுரு என்றும் நீண் டது. சுரு = சுருக்கம். சூர் - சூர்த்தம் = சுருங்கி விரியும் தன்மை. எருவாயைச் சூர்த்தம் - சூர்த்து என்ற தமிழ்ச்சொல் குறிப் பிடுகின்றது. சூர்த்தம் என்ற தமிழ்ச் சொல்லே, சோதோம் எனத் திரிந்தது. சோதோம் என்ற சொல், ஓரினச் சேர்க் கையைக் குறித்த சொல்லானதால், இலத்தீன் மொழியில் அச்சொல் ஏற்கப்பட்டு, ஆங்கிலத்திலும் நிலைத்தது. சூர்த் தம் (தமி.)→சோதோம் (எபி)→சோதாம் (இல.)→சோதோமி - sodamy (ஆங்கி). ஓரினச் சேர்க்கையைக் குறிக்க இன்று Sodomy என்ற சொல்லே ஆங்கிலத்தில் பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

81. **சாலோ மோன்** (Selomon, Hb., I.K. 1:2) பொருள்: அமைதியின் மன்னன்

சாலமன் மன்னனின் இயற்பெயர் எதிதா (yedidha) என்ப தாகும். இச்சொல்லுக் கான பொருள் விவிலியத்தில் காணப் படவில்லை. இவன், தாவீது மன்னனுக்கும் பெத்செபா என்ற பெண்ணுக்கும் பிறந்த உரிமையற்ற மகனாவான் (il-legal son). ஊரியா (Uriah) என்பவனின் மனைவியான பெத்செபாவை வஞ்சகமாகக் கொன்றுவிட்டு, தாவீது இவளை மனைவியாக்கிக் கொண்டான். ஊரியா என்ற சொல், ஊர் நகரத்தினன் என்ற கரணியப் பெயராகும்.

இவன் பாபிலோனினின்றும் வந்தவனாவான். சால் - சால்பு - சாலம் போன்ற தமிழ்ச் சொற்கள் அமைதியைக் குறித்தன வென்பது ஏற்கனவே விளக்கபபட்டுள்ளது. சாலமன் மன்னனின் ஆட்சி அமைதியின் காலம் என்பதால், இவன் அமைதியின் மன்னன் என்ற பொருளில் சாலமன் என அழைக்கப்பட்டான்.

82. **சுகோத்** (Sukkot, Hb., Gen.37:17) பொருள்: தற்செயலாகத் தங்குமிடம்

கூடாரத்தை, சுகோத் என யூதர்கள் அழைத்தனர். வழிப் பயணத்தில் பயன்படும் கொட்டகை எனப் பொருள் கொள்ளலாம். சேர்க்கை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, இதே பொருள் கூறப்பட்டுள்ளது (குறு. 216: 4). சேர்க்கை - சுகோத் எனத் திரிந்தது.

83. **தபேரா** (Taberah, Hb., Nm. 11:3) பொருள்: தீ எதிரில்

யூதர்களின் கடவுள் தீயைப் போன்றவர். மோசே என்பவனுக்கு பச்சைமரத்தில் கொழுந்துவிட்டு எரியும் தீயாகக் காட்சி அளித்தவர். நெருப்பு எரிதல் என்ற பொருளில் தபேரா என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (D.O.B,. P - 862). தீ எரிதல் என்ற தமிழ்ச் சொல்லே, தபேரா எனத் திரிந்துள்ளது. தீ எரிதல் என்ற பொருளில், தீயின் நாக்கு என்ற சொல், Trebernaculam என்று இலத்தீன் மொழியில் சொல்லப்பட்டுள்ளது.

84. **தல்மை** (Talmai, Hb., II Sam. 3:3) **பொருள்: தெளிவுபடுத்தப்படவில்லை**

கெசூரின் மன்னனுக்குரிய பட்டப்பெயர் (I chr. 3:2) தலைமை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே, தல்மை (எபி) எனப்பட்டது.

85. **தல்மோன்** (Talmon, hb, I chr. 9:17) சமயத்தலைமை. இலேவியர் என்ற சமயக்குழுவின் தலைவரை, தல்மோன் என்ற சொல் குறிப்பிடுகின்றது. தலைவன் என்ற தமிழ்ச் சொல், தல்மோன் எனத் திரிந்துள்ளது.

86. **தல்மட்** (Talmud, D.O.B, P. 866) பொருள்: கற்பித்தல் (Teachings). யூத சமயத்தின் சட்டத் தொகுப்புகள் பற்றி விளக்கமளிக்கும் நூல்கள், யூத சமயத் தலைமையிடத்தி லிருந்து வெளியிடப்படும் ஆணைகள் ஆகியவை தல்மட் (எபி) என்று அழைக்கப்பட்டன. தலைமையிடத்து மடல் (மட்) என்று பொருள் விரியும். மட் என்பது மடல் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

தல் என்ற எபிறேயச் சொல், தலை என்ற தமிழ்ச் சொல் லின் திரிபே என்க.

87. **தாமர்** (Tamar,Hb Gen. 48; Mt 1:3) பொருள்: பேரீச்சை. பேரீச்சை அல்லது ஈச்சம் பழத்தை, தாமர் என்ற எபிறேயச் சொல் விளக்குகிறது. இப்பழங்கள் செந்நிறமுடையவை களாகும். தாமம் என்ற தமிழ்ச் சொல், தாமர் எனத் திரிந் துள்ளது. இது ஒரு பெண்ணின் பெயராகும். ஆதாம் என்ற தலைப்பில் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

Tamar (Hb) கிரேக்க மொழியில் Tamarix எனப்பட்டது.

Tamarix manna ferra: ஈச்ச மரத்தின் கிரேக்கப் பெயர்.

Tamarix = தாமம்

manna = மண் அல்லது மண்ணில் விளையும்,

ferra = புறவிலைகள் அல்லது மட்டைகள்.

இம்மூன்று சொற்களும் தமிழ் மூலத்தைக் கொண்ட சொற்களே.

88. **தமுழ்** (Tammuz, Hb, ANET, 265): ஒரு மன்னனின் பெயர். தமிழ் என்ற சொல்லின் திரிபே. இவன் ஒரு கடவுளுமா வான். தமுழ் என்ற சொல்லை, தெய்வீகமான பெயர் (A divine name) என்று எசக்கியேல் கூறுகிறார். (Ez.8:14) இச் சொல் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. இது சுமேரி யச் சொல்லே என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சுமே ரிய மொழியில் தமுழி (Tamuzi) என்றவாறு சொல்லப் பட்டுள்ளது. தமிழின் பெருமைகளை மேலை மொழி களில் விளக்கும் சொல்லாகும்.

89. **தொப்புவா அல்லது தப்புவா** (Toppuvah) பொருள்: ஆப்பிள். ஆப்பிள் தமிழ்நாட்டுப் பழமல்லவென்றும், மேலைநாடுகளின்றும் கொண்டுவரப்பட்டு இங்கு பயிரிடப்பட்டது என்றும் கூறப்படும் செய்திகள் உண்மையன்று. குமரிக்கண்டத்தில் ஆப்பிள் பழங்கள் விளைந்தனவென்பதை, விவிலியத்தின் வாயிலாகவும், எபிறேய மொழியின் வாயிலாகவும் அறியலாம். எபிறேய மொழியில் சொல்லப்படும் தொப்புவா என்ற சொல், தொப்பைவாய் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. தொப்புள் அல்லது கொப்பூழ் எனப்படும் உறுப்பை, தொப்பை வாய் என்றே தொல்தமிழர் அழைத்தனர். இச்சொல், தமிழகத்தில் வழக்கிழந்து போன நிலையில், எபிறேய மொழியில் திரிபுச் சொல்லாக அறியப்படுகின்றது. ஆப்பிள் பழத்தின் காம்பும், காம்புப் பற்றி நிற்கும் வாய்ப்பகுதியும், தொப்பையின் தொப்புளை நினைவுபடுத்துவனவாகும். தொப்பை வாய்ப் பழம் என்ற பழம் பெரும் சொல்லே, தொப்புவா எனத் திரிந்தது. விவிலியத்தில் ஆதாம் ஏவாள் கதையில் சொல்லப் படும் பழம், தொப்பை வாய்ப் பழமே. தொப்பைவாய் - தொப்புவா எனத்திரிந்து ஆப்பிள் என்றானது. ஆப்பிள் என்ற ஆங்கிலச் சொல்லுக்கான மூலச் சொல்லாக, எபிறேய மொழிச் சொல்லான தொப்புவா காட்டப்படுகின்றது (D.O.B.P. 868). தொப்பைவாய் (தமி), தொப்புவா (எபி), ஆப்பிள் (ஆங்).

90. **தெல் அபிப்** (Tel Abib, Ezk.) பொருள்: குன்றின் தலை (summit). தெல் அபிப் என்பது அக்காடிய மொழிச் சொல்லாகும். தில் அபுபி (Til Abubi) என்று சொல்லப் பட்டுள்ளது. தில் என்ற சொல்லும் தெல் என்பதும், குன்றைக் குறித்தனவென்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அபிப் - அபுபி என்ற சொற்களில் முன்னது விரிந்த காது அல்லது அகன்ற காது (ear) என்றும், பின்னது வெள்ளப் பாழைப் குறித்த சொல் என்றும் மாறுபட்டுக் கருதுகின்றனர்.

அபிப் என்பது அவிழ் என்ற சொல்லின் திரிபே என எபிறேயச் சொல் காட்டுகிறது. அபுபி என்பது அப்சு என்ற

பாபிலோனியச் சொல்லின் பொருளான நீரைச் சுட்டு கிறது. அப்சு (பாபிலோனியம்) =நீர், கடல் எனவிரிந்து, கடல் தெய்வத்தைக் குறித்தது. வெள்ளத்திற்குப் பிறகு, நிலை பெற்ற மரக்கலம், தில் அபுபி என்ற இடத்தில் இருந்ததாக அக்காடியச் இலக்கியங்கள் கூறுகின்றன. தில் என்ற அக்கா டிய சொல், தெல் என்று (பாபிலோனிய அடிமைக் காலத் துக்குப் பிறகு. கி.மு. 500) சொல்லப்பட்டது எனக் கருத லாம். ஏற்கனவே தல் என்ற எபிறேயச் சொல், தலை அல்லது உச்சி என்று வெள்ளக் கதையில் விளக்கப்பட்டுள்ளதைக் காண்க.

அக்காடிய வெள்ளக் கதையும் குமரிக்கண்ட அழிவையே சுட்டுகிறது. தெல் - அவிவ் = தற்காலத்திய இசுரேல் நாட் டின் தலைநகரம்.

தலை (தமி),→ தெல் (எபி), →தில் (அக்) → தெல் (அர).

91. **தெமண்** (Teman, Hb, Gen 25:15) *பொருள்: தெற்கு?*

தெமண் என்ற எபிறேயச் சொல்லுக்கான பொருள் தெற்கு என்பதை, ஐயப்பாட்டுடன் ஆய்வாளர்கள் தெரிவிக்கின் றனர். தெமண் என்பது தெற்கைக் குறித்தானச் சொல் என அறிய வேறு சொற்கள் அவர்களுக்குக் கிடைக்க வில்லை. தெமண் என்பது, தென்மண் அல்லது தென்னாடு என்ற பொருள் கொண்ட தமிழ்த்திரிபுச் சொல்லே.

பாபிலோனிய மொழியில் தில் மண் (Dilman) என்ற சொல் காணப்படுகின்றது. இது பாரசீக வளைகுடாவில், மூக்கு போல் நீண்டிருக்கும் நிலப்பகுதியாகும். இது தொன்மைக் காலத் துறைமுக நகராகும். இந்நகர், தலைமண் என்ற தமிழ்ப் பெயரால் அழைக்கப்பட்டு, தில்மண் எனத் திரிந் தது. இன்று Dil - mun என்ற சொல்லப்பட்டு வருகின்றது. தெமண் என்பது தென்மண் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும்

92. **தெரா** (Terah, Hb, Gen. 24:32) *பொருள்: பெயர்ச் சொல்.* யூதர்களின் தந்தையான அபிறகாமின் தந்தையே தெரா எனப்படுபவனாவான். இவன் ஊர் நகரில் குடியிருந்தவன்.

பெரும் நிலத்துக்கு உரிமையாளன். அவைகளையெல்லாம் விட்டுவிட்டு அல்லது விற்றுவிட்டு, அரண் (Haran) என்ற நகரத்தில் குடியேறினான். தெரா என்பது இவனது இயற் பெயராகத் தெரியவில்லை. பரந்த நிலப்பரப்புக்கு உரிமை யாளன் என்ற பொருளில் (சமீன்தார் போல) தெரா என அழைக்கப்பட்டான். தெரா என்ற சொல் தரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க. உலக மொழிகளில் தரை என்ற சொல் பரவலாக அறியப்படுகின்றது.

தரை (தமி) ,த்ர (சம), தெரா (எபி), தைர் (போனீ),டெரா (கிரே.), டெரி (ஆங்)

தை (Tyre) நகரத்துப் போனீசிய வணிகர்கள், ஆப்பிரிக்க - ஐரோப்பியப் பகுதிக் கடலைத் தம் கட்டுப்பாட்டில் வைத் திருந்ததால் அக்கடலுக்குத் டெரேனியக் கடல் என, கிரேக் கர்கள் பெயர் சூட்டினர் (Medi - Terannean - sea). Terrecota, Terrifory, Terrorist போன்ற ஆங்கிலச் சொற்களுக் கான மூலச்சொல், தரை என்ற தமிழ்ச் சொல்லே.

93. **தெரபிம்** (Teraphim, Hb, Gen 31:19 - 21) பொருள்: மண் பொம்மை. தரை என்ற சொல் மண்ணையும் குறித்ததால், மண்ணால் செய்த சட்டிப் பானைகள் தெரகோட்டா என வழங்கப்பட்டன. தெரபிம் என்ற சொல்லில், பிம் (எபி) என்ற சொல், பொம்மை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

பொம்மை என்பது பிற்காலச் சொல்லேயென்றும், பொய் யான ஒன்று மெய் போலத் தோன்றுவதால், பொய் + மெய் = பொய்மெய் - பொம்மையாயிற்று என்றும் மு. வரத ராசனார் கூறுகிறார். தனது பார்வையில் அவரது சிந்தனை யைச் செலுத்தியுள்ளார். மாந்த உருவம் எப்படியிருந் தாலும் பொம்மை செய்யும் போது தசைப்பிடிப்புடன் காட்டுவது சிற்பியின் விருப்பமாயிருக்கும்.

கும் என்ற வேர்ச்சொல்லினின்றும் குமரி என்ற சொல் விரிந் ததை அறியலாம். அதுபோல், பொதிமை என்ற மூலச் சொல்லினின்றும், பொம்மை என்ற சொல் வழக்கிற்கு வந்தது. பொதி = பெரிய, தடித்த, உப்பிய என்றவாறு

பொருள் விரியும். பொதி - பொதிமை - பொம்மை. தரைப் பொம்மை அல்லது மண்பொம்மை என்ற சொல்லே, தெரபிம் (எபி) எனத்திரிந்தது.

94. **தியோமா** (Teoma, Hb, and Ara, Mk. 3:18) பொருள்: இரட்டை (Twin). இயேசுவின் பன்னிரு தொண்டர்களில் ஒருவர் தியோமா எனப்படுவராவர். தியோமா என்ற சொல்லுக்கு இரட்டை என்பது பொருளாகும். அவர் இரட்டைக் குழந்தைகளில் ஒருவரா என்பது பற்றி விளக்கம் விவிலியத்தில் காணப்படவில்லை. துண் எனும் வேர்ச் சொல்லினின்றும் துணி என்ற சொல் பிறந்தது. துணி = இரண்டாக்குதல் துண் - துணி - துமி எனவும் விரிந்தது. துமித்தல் = இரண்டாக்குதல். துமி என்ற சொல் நீரைக் குறித்தும், நீர்த்துளியைக் குறித்தும் சொல்லப்பட்டாலும், பிளவுபட்ட அல்லது சிதறிய நீர் துமி எனப்பட்டது. (குறு. 189 :4; 227 :2).

துமி - துமியம் = பிளவுபட்ட அல்லது இரண்டாக்கப்பட்ட நீர். துமியம் என்பது தமிழ்ச் சொல்லாயினும் இன்று வழக்கிழந்துள்ளது. துமியர் என்ற சொல்லே, தியோமா என்று திரிபுபட்டு, இரண்டாதலைக் குறித்தது.

துமியம் (தமி) → துவம் (சம) → தியோமா (எபி) → தியோமா (அரமா) → தோமா (கிரே) தாமஸ் → (ஆங்கி).

தாமஸ் என்ற சொல்லிற்கான மூலச் சொல் தமிழில் உண்டென அறிக.

95. **துபள் காயன்** (Tubal Cain, Hb, Gen 4:22) பொருள்: கருமான். ஏற்கனவே, காய் - காய்த்தல், வளர்ச்சி, இனப்பெருக்கம் என்ற பொருளில் காயன் என்ற பெயர் விளக்கப்பட்டது. இங்கே குறிப்பிடப்படும் துபள் காயன் என்பான், கருமான் (Smith) என அறியப்படுகின்றான். காய் - காய்ச்சுதல் - வெப்பப்படுத்துதல் என்ற பொருளில், காயன் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. துபள் (எபி) என்ற சொல், துவள் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும். துவள் - துவளுதல் - துவட்டுதல் என விரியும். இன்றும் கூட நாட்டுப் புறங்களில், அரிவாள், கத்தி போன்ற கருவிகள்

கூர் மழுங்கிய நிலையில் அதனைக் கூர்மைப்படுத்த ‘துவைச்சல் போடுதல்’ (துவட்டல் போடுதல்) என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர்.

துவள் என்ற சொல்லினின்றே, துவட்டன் என்ற சொல் நீண்டது. துவட்டன் = கருமான். துவட்டன் என்ற தமிழ்ச் சொல், துவஷ்டா (Twashta) என்று சமற்கிருதத்தில் திரிந்து, அது கருமானையே குறித்தது. விசுவகர்மா (பெருங்கரத்தான் அல்லது நுணுக்கமான கை வேலை தெரிந்தவன்) என்பான், இந்திரனுக்கு வேல்வடித்துக் கொடுத்ததாக இரிக்கு வேதம் கூறுகிறது. விசுவகர்மாவை துவஷ்டன் என்றே வேதம் சொல்கிறது.

துவள் என்ற தமிழ்ச் சொல், துபள் என்று எபிறேயத்தில் திரிந்துள்ளதை நோக்குக. துவள் காயன் (தமி), துபள் காயன் (எபி).

96. **உபழ்(ஸ்)** (Uphaz, Hb, Je. 10:9) பொருள்: ஒளிர்தல். ஒளிர்தல் என்ற பொருளைப் பலரும் ஏற்க, சிலர் ஓபிர் (Ophir - தமிழில் உவர்) என்ற சொல்லே, உபஸ் எனப்பட்டதாகக் கூறுகின்றனர். முன்னர் கூறப்பட்டதே சரியெனத் தோன்றுகிறது. தமிழில் உவை - உவா போன்ற சொற்கள் தொன்மைக் காலத்தில் வழக்கிலிருந்தன. அவற்றில் உவா என்ற சொல்மட்டும் இன்று வழக்கிலுள்ளது. உவத்தல் என்பதற்கு மகிழ்தல் என்பது பொதுப் பொருளாயினும், நகைத்தல் என்ற பொருள் கலந்த சிரிப்பு என்ற பொருளும் இழையோடுகிறது. நகை என்பதே ஒளிர்தல் என்ற பொருளைத் தருவதாகும். பொதுவாக, திங்களை அதன் தண்மையான ஒளியைக் கருதி உவா என்றழைத்தனர். வெள் உவா = முழுமதிநாள்; கார் உவா: மதிமறைநாள். உவ - உவழ் என்ற தமிழ்ச் சொல்லே உபஸ் எனத் திரிந்துள்ளது. Z என்ற எழுத்து, ழ் என்ற தமிழ் ஒலிப்பைத் தருவதாகும். எ.க. தமுழ் - தமுஸ் (Tammuz)

97. **ஊர்** (Ur, Hb, Gen, 11:28) பாபிலோனில் தமிழர் உருவாக்கிய நகரம். சுமேரிய மொழியில் ஊர் (Ur) என்றும், அக்காடிய மொழியில் ஊரி (Uri) என்றும், எபிறேய மொழியில் ஊர் (Ur) என்று சொல்லப்பட்டுள்ளன. ஊரி என்ப

